# விந்தன் கதைகள்





# விந்தன் கதைகள்

# 1

கலைஞன் பதிப்பகம்
10, கண்ணதாசன் சாலை
தியாகராயநகர்
சென்னை - 600 017.

Rs. 100

**VINDHAN KATHAIGAL - I**

*First Edition 2000*

*Published by*

**KALAIGNAAN PATHIPAGAM**
10 Kannadhasan Salai
T.Nagar, Chennai - 600 017.

*Type Setted by*

**Sri Sathya Sai Graphics,**
Chennai - 17

*Printed at*

**Sakthi Printers**
Chennai - 21

*Cover Design by*

**Trotsky Marudu**

# பதிப்புரை

விந்தன் கதைகள் தமிழ் வாசகர்களின் மனங்களில் நிரந்தரம் கொண்டவை.

சென்ற ஆண்டு கோலாலம்பூரில் எங்கள் மலேசிய-இந்திய-தமிழ்ப் புத்தகக் காட்சியை அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமிவேல் அவர்கள் திறந்துவைத்து அரிய சொற்பொழிவாற்றி மகிழ்வித்தார். அவருடைய தமிழ் ஆர்வமும், புத்தகங்களின் பால் கொண்டுள்ள ஈடுபாடும் உலகறியும். அவருடைய அன்பான ஆதரவாலேயே புத்தகக் காட்சி சிறப்புற்றது.

அடுத்த சந்திப்பின்போது விந்தன் கதை படிக்க விரும்பினார். கிடைத்த சில புத்தகங்களை மட்டுமே தர முடிந்தது.

இந்த நேரத்தில் திரு.மு. பரமசிவம் அவர்கள் விந்தன் மகன் திரு. சூர்யமூர்த்தியை அழைத்து வந்து விந்தன் கதைகளை வெளியிடக் கொடுத்தார். டத்தோ ஸ்ரீ சாமிவேல் அவர்களின் விருப்பம் நிறைவேறுவது போல் 'விந்தன் கதைகள்' புத்தகம் அமைந்துள்ளது.

விந்தன் கதைகளின் சிறப்புகளை கல்கி.ரா. கிருஷ்ணமூர்த்தி, கி.சந்திரசேகரன், மு.வரதராசன் எழுதிய முன்னர் வெளிவந்த புத்தகத்துக்கு எழுதிய முன்னுரைகள் விந்தன் கதைகளுக்குச் சூட்டியுள்ள புகழுரைகள். அடுத்த பக்கங்களில் மறுபிரசுரம் செய்துள்ளோம். இந்தத் தலைமுறையினருக்கு இவை சரியான அறிமுகமாகத் திகழ்கிறது.

விந்தன் கதைகளை ஒரு சேரப் படிக்க இந்தப் புத்தகத் தொகுதி வாசகர்களுக்குப் பெருவிருந்தாகும்.

இந்த நூல் வெளிவர உதவிய திரு. மு.பரமசிவம் அவர்களுக்கும் விந்தன் மகன் திரு. சூரியமூர்த்தி அவர்களுக்கும் நன்றி பாராட்டுகிறோம்.

**மா. நந்தன்**

# முன்னுரை

## 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி

இந்தப் புத்தகத்திலடங்கிய சிறு கதைகளை ஏற்கெனவே அவை பத்திரிகையில் வெளியான காலத்தில் அவ்வப்போது நான் படித்திருக்கிறேன்.

முன்னுரை எழுதும் அவசியத்தை முன்னிட்டு இப்போது இன்னும் பல தடவை படிக்கலாமென்று எண்ணினேன். ஆனால், அதற்கு யோசனைகளும் புனராலோசனைகளும் செய்து பெரிதும் தயங்கினேன்.

''விந்தன்'' கதைகளைப் படிப்பதென்றால் எனக்கு எப்போதும் மனதிலே பயம் உண்டாகும். படித்தால், மனதிலே என்னென்ன விதமான சங்கடங்கள் உண்டாகுமோ, எப்படிப்பட்ட வேதனைகளுக்கு ஆளாக நேருமோ என்றுதான் பயம்!

ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் சிறிய கதைகளும் பெரிய கதைகளும் பெரும்பாலும் ஒரு ஜாதியரைப் பற்றியே வந்து கொண்டிருந்தன. எழுதுகிறவர்களும் படிக்கிறவர்களும் பெரும்பாலும் பிராமணர்களாயிருந்தபடியால் அந்தச் சாதியாரைப் பற்றியே கதைகள் எழுதப்பட்டன. அந்தக் கதைகளில் கையாளப்பட்ட தமிழ்நடை பிராமணக் குடும்பங்களில் வழங்கும் தமிழாகவே இருந்தது.

மற்ற சாதிக்காரர்களில் அதிகமானபோது பிராமணக் கதை, பிராமணத் தமிழ் ஆகியவற்றைக் குறித்து வாசகர்களிடையே புகார்கள் எழுந்தன.

இதன்பேரில், மற்ற சாதியாரைப் பற்றிய கதைகள் பல வரத் தொடங்கின. பிராமண எழுத்தாளர் கஷ்டப்பட்டு வேறு சாதியாரைப் பற்றிக் கதைகள் எழுதும்போது அவர்கள் வர்ணிக்கும் நடை உடை பாவனைகள் அவ்வளவு சரியாயிருப்பதில்லை. மிகச் சிரமம் எடுத்துக் கவனித்து எழுதினாலும் சில சமயம் 'ராபணா' என்று குட்டை உடைக்கும்படியான தவறுகள் நேர்ந்துவிடும்.

இன்னொரு அபாயமும் அதில் ஏற்படுவதாயிற்று.

கதை என்றால், அதில் நல்ல பாத்திரங்களும் வருவார்கள்; துஷ்ட பாத்திரங்களும் வருவார்கள்.

பிராமணர்களைப் பற்றி யார் என்ன எழுதினாலும் அதைப் பற்றிச் சாதாரணமாக ஆட்சேபம் ஏற்படுவதில்லை. அவர்களை என்னபாடு படுத்தி எப்படி வதைத்து எடுத்தாலும் கேள்வி முறையிராது. ஒரு பிராமண கதாபாத்திரத்தைத் தலை மொட்டை யடித்துக் கழுதை மேலேற்றி வைத்து ஊர்வலம் விட்டால், கதை படிப்பவர்களில் சிலர் அருவருப்படைவார்கள்; சிலர் சிரிப்பார்கள்; ஆனால் யாரும் சண்டைக்கு வரமாட்டார்கள்.

ஆனால், ஒரு செங்குந்தரையோ, ஒரு வன்னிய குலத்தாரையோ, ஒரு கவுண்டரையோ, ஒரு விசுவ குலத்தாரையோ, ஒரு ஹரிஜன சகோதரரையோ கதையில் பொல்லாதவனாகச் செய்திருந்தாலும், பரிகாசம் செய்திருந்தாலும் வந்தது மோசம்; அந்தக் குலத்தைச் சேர்ந்தவர்கள் கதையைப் படிக்க நேர்ந்து விட்டால் ஆசிரியரோடு துவந்த யுத்தம் செய்ய வந்து விடுவார்கள்.

இதன் காரணமாக மற்ற சாதிகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள்கூடத் தத்தம் சமூகக் குடும்ப வாழ்க்கைகளைப் பற்றிக் கதை எழுதத் தயங்கிப் பிராமண தமிழில் பிராமணக் குடும்பங்களைப் பற்றிய கதைகளை எழுதினார்கள்.

அதெல்லாம் ஒரு காலம். அந்தக் காலம் போய் தமிழ் நாட்டு இலக்கிய உலகத்தில் சாதிப் பிரச்சனை ஒருவாறு தொலைந்தது. எந்தச் சாதியாரையும் பற்றிப் பயமில்லாமல் கதை எழுதலாம் என்ற நிலைமை ஏற்பட்டது. இந்தச் சமயத்தில் நவயுக மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் தோன்றினார்கள். ருஷியக் கதைகளையும், மற்ற மேனாட்டுக் கதைகளையும் படித்தார்கள். அந்தக் கதைகளைப் போல் இந்த நாட்டு ஏழை எளியவர்களையும் உழைப்பாளி மக்களையும் பற்றிக் கதை எழுதத் தொடங்கினார்கள்.

மிராசுதார்களையும், தாசில்தார்களையும், ஐ.சி.எஸ் காரர்களையும், வக்கீல்மார்களையும் கைவிட்டுவிட்டு, ஏழைக் குடியானவனையும், ஆலைத் தொழிலாளியையும், ரிக்ஷா வண்டிக்காரனையும், சுமைகூலிக்காரனையும் பற்றிக் கதை எழுதத் தொடங்கினார்கள். ஆனால், எவ்வளவுதான் அநுதாபத்துடனும் இலக்கியப் பண்புடனும் எழுதினாலும் அந்தக் கதைகள் கதை என்ற முறையில் நன்றாயிருக்குமே தவிர, அவற்றின் உண்மை ஒளி தோன்றுவதில்லை.

பாடுபட்டு அறியாதவன் பாட்டாளியின் துயரத்தைப் பற்றியும், சேற்றில் இறங்கி அறியாதவன் குடியானவனுடைய கஷ்டத்தைப் பற்றியும் என்னதான் கண்ணீரில் பேனாவைத் தோய்த்துக்கொண்டு

எழுதினாலும், அந்தக் கதைகளில் மற்ற எல்லாச் சிறுகதை இலட்சணங்களும் இருக்கலாம்; உள்ளத்தை ஊடுருவித் தைக்கும்படியான இதயம் ஒன்றிய ஈடுபாடு இருப்பதில்லை.

அப்படிப்பட்ட உண்மை ஒளிவீசும் சிறுகதைகளை எழுதுவதற்கு ஏழை எளியவர்களிடையேயிருந்தும், உழைப்பாளி மக்களிடையே யிருந்தும் ஆசிரியர்கள் தோன்ற வேண்டும்; அவர்களுடைய எழுத்தில் இலக்கியப் பண்பும் பொருந்தியிருக்க வேண்டும்.

மேற்கூறிய இலட்சணங்கள் பொருந்திய கதை ஆசிரியர்களில் ஒருவர் ஸ்ரீ.வி.கோவிந்தன்; உழைப்பாளி மக்களிடையே பிறந்து வளர்ந்து உழைத்துப் பண்பட்டவர். ஏழை எளியவர்கள், தொழிலாளிகள், பாட்டாளிகளின் சுகதுக்கங்களை இதயம் ஒன்றி அநுபவித்து உணரும் ஆற்றல் பெற்றவர்.

அந்த உணர்ச்சிகளை உயிருள்ள தமிழ்நடையில் சித்திரித்து இலக்கியப் பண்பு வாய்ந்த சிறுகதைகள் பலவற்றை அவர் திறம்பட எழுதியிருக்கிறார்.

ஏழை எளியவர்களின் வாழ்க்கையிலுள்ள சுகசந்தோஷங்களைப் பற்றியும் அவர் எழுதுகிறார்; அவர்களுடைய துன்பவேதனைகளைப் பற்றியும் எழுதுகிறார்.

ஆனால், படிப்பவர்களின் உள்ளத்தில் துன்பமும். வேதனையும்தான் அதிகமாக நிலைபெற்று உறுத்திக் கொண்டிருக்கும்.

அவருடைய கதா பாத்திரங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கெல்லாம் நாம்தான் காரணமோ என்று எண்ணி எண்ணித் தூக்கமில்லாமல் தவிக்க நேரும்.

அவ்விதம் வாசகர்களின் மன அமைதியைக் குலைக்கக் கூடிய இயல்பு வாய்ந்த கதைகள்தான் உண்மையான இலக்கியம் என்று தற்காலத்து இலட்சிய புருஷர்களும் இலக்கிய மேதாவிகளும் சொல்கிறார்கள்.

இது உண்மையானால் ''விந்த''னுடைய சிறுகதைகள் உண்மையான இலக்கியம் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

''விந்தன்'' கையாளும் தமிழ்நடை மிகவும் எளிமையான நடை; ஆனால் பெரிதும் சக்தி வாய்ந்த நடை.

பொருள் விளங்காத பழைய சங்கத் தமிழ்ச் சொற்களையோ பொருள் இல்லாத புதிய மறுமலர்ச்சிச் சொற்களையோ உபயோகித்து

அவர் வாசகர்களைத் துன்புறுத்துவதில்லை. வரிக்கு வரி, வாக்கியத்துக்கு வாக்கியம் எதுகை மோனைகளைப் போட்டு நம்மைத் திணற அடிப்பதில்லை. 'பேச்சுத் தமிழ்' என்ற பெயரால் படிக்க முடியாத கொச்சைத் தமிழைக் கையாண்டு நம்மைக் கொல்லுவதுமில்லை.

தாம் எழுதுவது படிப்பவர்களுக்கு விளங்கவேண்டுமென்னும் நோக்கத்தையே பிரதானமாகக் கொண்டு நடுநிலைமையான பேச்சுத் தமிழ் நடையைக் கையாளுகிறார்.

மனிதனுக்கு மனிதன் செய்யும் அநீதியையும் கொடுமையையும் எடுத்துக் காட்டும்போது, ''விந்த''னுடைய தமிழ் நடையின் சக்தி உச்ச நிலையை அடைகிறது.

உதாரணமாக இதைப் பாருங்கள்:-

செட்டியார் கடைக்கு வந்து இறங்கும் அரிசி மூட்டை, சர்க்கரை மூட்டை முதலியவைகளை யெல்லாம் சின்னசாமி கடை வாசலிலிருந்து தன் முதுகில் சுமந்து கொண்டு போய்க் கடைக்குள் அடுக்குவான். மூட்டைக்குக் காலணா வீதம், எந்தக் காலமாயிருந்தாலும் சரிதான்; சமாதான காலமாயிருந்தாலும் சரிதான் - எண்ணிக் கொடுத்துவிடுவார் செட்டியார். ஆனால், என்றைக்காவது ஒருநாள் சின்னசாமி அறுபத்து நாலு மூட்டைகளுக்குமேல் தூக்கி அடுக்கிவிட்டு, ஒரு ரூபாய்க்கு மேல் கூலி வாங்க வந்துவிட்டால் செட்டியாரின் கண்களிலிருந்து ஏனோ இரண்டு சொட்டு கண்ணீர் கீழே விழும்.

இந்தத் துக்க நிவர்த்திக்காக, அவன் கூலியிலிருந்து திருப்பதி தேவஸ்தானத்தின் தர்ம உண்டிக்கென்று செட்டியார் இரண்டணாவைப் பலவந்தமாக எடுத்துக் கொள்வார். ''இகலோகத்தில், தான் அவன் தன்னுடன் சமத்துவமாக வாழாவிட்டாலும், பரலோகத்திலாவது வாழட்டுமே!'' என்பது செட்டியாரின் பரந்த நோக்கம்!

செட்டியாருக்குக் கண்ணீர் வருகிறது; நமக்கோ கோபம் கோபமாய் வருகிறது; ஆத்திரம் பொங்கி வருகிறது.

''விந்தன்'' கதைகளைத் தமிழ் மக்கள் ஆர்வத்துடன் வரவேற்றுப் படித்து மேலும் மேலும் கோபமும் ஆத்திரமும் அடைவார்களென்றும், அதன் பலனாகச் சமூகத்திலுள்ள அநீதிகளையும் கொடுமைகளையும் ஒழிக்க ஊக்கங் கொள்வார்கள் என்றும் நம்புகிறேன்.

# முன்னுரை

## மு. வரதராசன்

'பொழுது' என்ற ஒன்று இருப்பதை என்றைக்கு மனிதன் தெரிந்து கொண்டானோ, அன்றைக்கே பொழுது போக்கும் வழிகளையும் தெரிந்து கொண்டான். கலை என்று சொல்லப் படுகின்றவையெல்லாம் முதலில் பொழுது போக்குக்காகத் தோன்றியவைகளே. கலைகளில் சிறந்த கதையும் இப்படித் தோன்றியதே. கதை சொல்லிக் குழந்தையைத் தூங்கவைக்கும் தாயார், கதை சொல்லிக் குழந்தையின் மனத்தைத் திருத்தி வாழ்க்கையைப் பண்படுத்தவும் முயல்வதுபோல், பொழுது போக்குக்காகத் தோன்றிய கலைகளையே வாழ்க்கைப் பண்பாட்டுக்காகவும் சான்றோர் கையாளத் தொடங்கினார்கள். அது முதற்கொண்டே, புற்றீசல் போல் பொழுது போக்குக்காகத் தோன்றிய கலைகள், விண்மீன்கள் போல் அழியாத வாழ்வு பெறலாயின. கல்லிலும் சொல்லிலும் பிறவற்றிலும் நிலைத்து நின்று தலைமுறை தலைமுறையாக நூற்றாண்டு நூற்றாண்டாக வாழ்வு பெற்றன.

சொல் வடிவாக வாழும் கலைகளுக்குத் தனிப்பட்ட பெரிய ஆற்றல் உண்டு. வாழ்வுக்காகக் கொண்ட வில்லையும், வாழ்க்கைப் பண்பாட்டுக்காகக் கொண்ட சொல்லையும் ஒப்பிட்டுத் திருவள்ளுவர் ஒரு சிறந்த உண்மையை உணர்த்துகிறார். வில்லைக் கருவியாகக் கொண்டவர்கள் பகையானாலும் கவலை இல்லை; சொல்லைக் கருவியாகக் கொண்டவர்களின் பகை பொல்லாதது என்கிறார்.

''வில்லே ருழவர் பகைகொளினும், கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.''

என்று அறிவுரை கூறுகிறார். இந்த அறிவுரை அரசனுக்குக் கூறப்பட்டது என்று விட்டுவிடக் கூடாது. அரசன் என்று ஒருவன் இல்லாத குடியரசு முறைக்கும் இந்த அறிவுரை பொருந்தும். சமூகம் என்ற அமைப்புக்கும் இந்த அறிவுரை பொருத்தமுடையதே. கவிதையாலும் கதையாலும் கலைத்தொண்டு செய்யும் சொல் லாளரின் -- எழுத்தாளரின் - பகையைக் கொண்ட அரசன் அழிவது போலவே, அவர்களின் பகையைத் தேடிக் கொண்ட சமூக அமைப்பும் அழியும். இன்றுள்ள சமூக அமைப்பு நீடிக்காது, விரைவில் மாறிவிடும் என்பதற்குச் சோதிடம் கேட்க வேண்டியதில்லை;

சொல்லேருழவராகிய இன்றைய தமிழ் எழுத்தாளரின் கவிதை களையும் கதைகளையும் படித்தால் போதும். ''திருவள்ளுவரின் அறிவுரையைக் கேட்டுத் திருந்தாத சமூக அமைப்பே! நீ நிலைகுலைந்து அழியப் போகிறாயே!'' என்று இரக்கம் பிறக்கிறது.

''விந்தன்'' எய்யும் சொல்லம்புகள் குறி தவறாமல் பாய்கின்றன. சமூகத்தை அவர் சிற்சில இடங்களில் தான் நேராகத் தாக்குகிறார். பல இடங்களில் அவர் அம்பு தொடுப்பதே இல்லை. இன்றிருக்கும் நிலைமையை எடுத்துக் காட்டி, பேசாமல் கதை சொல்கிறார். அவர் படைக்கும் பாத்திரங்களும் பெரும்பாலும் 'அப்பாவி'களே. அவர்களுக்குச் சமூகத்தின்மேல் வயிற்றெரிச்சல் தோன்றுவதே இல்லை. ஆனால் நமக்கு மட்டும் வயிற்றெரிச்சல் தோன்றுகிறது; ஆத்திரம் பொங்குகிறது; நாயோடு போட்டி போட்டுப் பிழைக்கும் சோலையப்பன், மாம்பழம் விற்று வயிறு வளர்க்கும் அம்மாயி, விளக்கெண்ணெய் வியாபாரம் செய்யாத நாடார் கடை மாணிக்கம் பிள்ளை - இவர்களுடைய மனங்கள் எல்லாம் அமைதியான நல்ல மனங்கள். ஆனால் அவர்களைப் பற்றிப் படிக்கும் மனங்கள் புரட்சி மனங்களாக மாறுகின்றன.

சில இடங்களில் ஆசிரியர் கையாளும் உவமைகளும் சமூகக் கேட்டுக்குக் காரணமானவர்களை வம்புக்கு இழுப்பதைப் பாருங்கள்.

தோதலில் வெற்றி பெற்று அதிகாரத்துக்கு வந்து விட்டவர் களைப்போல் ''போடா, போ!'' என்று எரிச்சலுடன் அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டான் சங்கர்.

அவளைக் கண்டதும் அவன் முகம் மலர்ந்தது - சூரியனைக் கண்ட தாமரையைப்போல் அல்ல. சோற்றைக் கண்ட ஏழையைப் போல.

அவர் தம்முடைய காரியங்களை யெல்லாம் முடித்துக் கொண்டு நைவேத்தியத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கும் கல்லுப் பிள்ளையாரைப் போல் உட்கார்ந்திருப்பார்.

ஆசிரியரின் கதைகளில் கறவைமாடு குடும்பத்துக்குக் 'கார்டியன்' ஆகிறது; கிளி 'கைது' செய்யப்படுகிறது; குப்பைத் தொட்டிக்கும் வேலைக்காரியின் வயிற்றுக்கும் உள்ள வேற்றுமை மறைந்து போகிறது; சந்தர்ப்பங்களைத் தானே ஏற்படுத்திக் கொள்வதில் தமிழ் நாட்டு 'மாமியார்' நெப்போலியனுக்கு நிகர் ஆகிறாள்; வாழ்வதற்காகப் பிரார்த்தனை செய்வதை விடச் சாவதற்குப்

பிரார்த்தனை செய்வது கட்டாயமாகிறது; கூடைக்காரியாக வியாபாரம் செய்கிறவள் அரிச்சந்திரனைப் பின்பற்ற விரும்பித் தோல்வி அடைந்த பின் புதிய வழி காண்கிறாள்.

பொருளாதார ஏற்றத் தாழ்வு என்ன என்ன தீமை செய்கிறது என்பதை ஆசிரியர் பல இடங்களில் படம் பிடித்துக் காட்டுகிறார். குழந்தைகளின் வாழ்க்கை முதல் காதலர்களின் வாழ்க்கை வரையில் எல்லோருடைய வாழ்க்கையையும் பொருளாதார நிலைமை எப்படி எப்படி ஆட்டிவைக்கிறது என்பதை அவருடைய கதைகள் தெளிவாக்குகின்றன. காதல் எதன்மேல், எதுவரையில் என்றெல்லாம் கதைகள் விளக்குகின்றன. கவிதையிலே காவியத்திலே கதைகளிலே சாகாத காதல் வாழ்க்கையிலே பணப் போரில் சாவதை ஆசிரியர் எடுத்துக் காட்டுவது போற்றத்தக்கது. வாழ்க்கையில் உள்ள இத்தகைய உண்மைகளை மறைப்பது குற்றம் என்று ஆசிரியர் உணர்ந்து எழுதுவதற்காக, உலகம் அவருக்கு நன்றி கூற வேண்டும்.

இப்படிப்பட்ட சிறந்த கதைகளைத் தெளிவான எளிய தமிழில் உணர்ச்சி வேகத்துடன் எழுதிக் கலைத்தொண்டு புரியும் ''விந்தன்'' முயற்சி மேன்மேலும் வளரவேண்டும். அவர் ஓயாமல் படித்துவரும் இந்த 'உலகம்' என்னும் புத்தகம் நாள்தோறும் புதிய புதிய உண்மைகளை அவருக்கு உணர்த்திக்கொண்டே இருக்க வேண்டும்.

**சென்னை**

2-1-50

# விந்தன் கதைகளைப் பற்றி.....

**கி. சந்திரசேகரன்**

சிறுகதை யுகம் இது. எழுத்தாளன் என்ற பெயருக்குத் தகுதியைத் தேடித் தருவது சிறுகதை சிருஷ்டி ஒன்றே என்பது சிலரின் கருத்து.

கவனித்தோமானால், கலை அம்சங்கள் பெற்றிருப்பது எதுவாயினும் அது இலக்கியமேதான் என்பது தெளிவுபடும். நாவல் மட்டும் குறைந்ததா? அல்லது கட்டுரை, நாடகம் முதலியவைதாம் தாழ்ந்தவையா? இல்லை. ஒரு சிறு கடிதமானாலும் வாழ்க்கைத் தத்துவம் அதில் ததும்பினால் அதைவிட ரசிக்கக்கூடிய இலக்கியமுண்டா?

தமிழகத்தில் இன்று மலிந்து கிடப்பவை சிறுகதைக் கோவைகள்தாம். இருப்பினும், ஒன்றுபோல் எல்லாமே நம்மைக் கவராது போகா என்ற எண்ணமும் தோன்றுவதாலேயே, புதிய புத்தகங்கள் வெளிவருவதை நாம் ஆசையுடன் வரவேற்கின்றோம்.

முகத்தைச் சுளிக்காது எதிர்கொண்டழைக்கத் தகுந்தவைகளில் ''விந்தன்'' தரும் புத்தகமும் சேர்க்கப்பட வேண்டியதே. ஆழ்ந்த மனச் சுழல்களில் நம்மைச் செருகும் தன்மை பெற்றவை இங்குள்ள கதைகளில் சில. ஒரு முறைக்கு இரு முறையாக அவற்றின் கருத்து நம்மைத் துழாவ வைப்பதற்குக் காரணம் அதுவே. அபிப்ராயத்தின் தொனி விசேஷம் (Suggestion) சில சமயம் நம் உள்ளங்களைத் தொட்டுவிடுகின்றது; சில வேளைகளில் உலுக்கியும் விடுகின்றது! - இதற்குச் சான்று ''வருந்துவார் யார்?'' போன்ற சின்னஞ் சிறு கதைகளே.

கதைக்கென்ற தனி பாஷையோ, அல்லது திடுக்கிடும் சம்பவமோ நண்பருடைய கற்பனைத்திறனை வீணாக்கவில்லை; மனித இனத்தை இழிவாக்கும் நிகழ்ச்சியோ, அல்லது இந்திய நாகரிகத்தின் சீர்குலைவுக்கு வழி செய்யும் உணர்ச்சி மாறாட்டமோ இங்கு இல்லை; புதுமைக்கென வெறி பிடித்தலையும் கற்பனைக் கோளாறுகளும் காணவில்லை.

எல்லாவற்றையும் விட மற்றவர்களிடம் சகஜமாய்க் காணப்படும் நிரந்தமின்மையின் சின்னங்கள் எதையும் நண்பர் இதுவரை பெறாது இருத்தலே அவருக்கு மேன்மை அளிக்குமென நான் நம்புகின்றேன். இலக்கிய சேவையை அவர் தொடர்ந்து செய்ய வேண்டு மென்றும் விரும்புகின்றேன்.

7-2-53, **ஆசிரமம், மயிலை**

# விந்தன் எழுத்துகள் பற்றி...

தமிழ் எழுத்தாளர்களில் விந்தன் **வித்தி**யாசமானவர்; பாதிப்பு களைக் கண்டு அஞ்சாத படைப்பாளி; எதிலும் எவரிடத்திலும் சமரசம் செய்து கொள்ளாத சுயமரியாதைக்காரர்; சுதந்திரமான சிந்தனையாளர்.

1942 முதல் 1975 வரையில் வணிக நோக்குடைய பல பத்திரிகை களில் இலக்கிய நோக்குடன் ஏராளமான கதைகளை எழுதியுள்ளார் விந்தன்.

அக்கதைகளில் சிகரமாகவும் சிறப்புடையதுமான கதைகளைத் தேர்வு செய்து தரப்பட்டுள்ளது.

1946 இல் தமிழ் வளர்ச்சிக் கழகம் முதன் முதலாக வழங்க முன் வந்த பரிசை, விந்தனின் 'முல்லைக் கொடியாள்' என்னும் சிறுகதைத் தொகுப்பிற்கு வழங்கி பாராட்டியுள்ளது. நாற்பதாண்டு இலக்கிய வாழ்க்கையில் விந்தன், பெற்ற முதல் பரிசும் கடைசிப் பரிசும் அதுதான்.

தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் விந்தன் கதைகள் பரவிய காலத்தில், இந்திய மொழிகளில் சிலவற்றிலும் ருஷ்யா, செக்கோஸ் லேவியா ஆகிய மொழிகளிலும் விந்தன் கதைகள் பிரசுரம் ஆகின.

விந்தன் கதைகளில் உள்ள தனிச் சிறப்பு, அவர் ஏழை எளியவர்களைப் பற்றியும், அவர்கள் அனுபவிக்கும் இன்ப துன்பங்களைப் பற்றியும் எழுதியதோடு நடுத்தர மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளைப் பற்றியும், அவர்களுக்குப் பொருளாதார நெருக்கடியால் உண்டாகும் சிக்கல்களை, குடும்பச் சிதைவுகளை, காதல் தோல்விகளை, தாம்பத்திய முறிவுகளை அனைத்துக்கும் மேலாக நசிந்து வரும் மனித நேயத்தை யதார்த்தமாகவும் எள்ளல்தன்மையுடனும் எளிய தமிழிலும் எழுதியிருப்பது தான்.

விந்தன் கதைகள் முழுவதும் ஒரே நூலாக வரவேண்டும் என்பது வாசகர்களின் - ஆய்வாளர்களின் நீண்ட நாளைய கனவு. அந்த இலக்கியக் கனவை நல்ல நூல்கள் வெளியீட்டாளரான கலைஞன் பதிப்பகத்தின் எழுச்சி மிக்க இளைஞர் எம்.நந்தா அவர்கள் நனவாக்கி விட்டார்கள். அவர்களின் இலக்கிய உள்ளத்துக்கு என் சார்பிலும், விந்தன் குடும்பத்தாரின் சார்பிலும் மனப்பூர்வமான நன்றியையும் வணக்கத் தையும் தெரிவித்துக் கொள்ளும் இந்நேரத்தில், ஏற்கெனவே விந்தனின் புகழ் பரப்பும் வகையில் 'மனிதன்' இதழ் தொகுப்பை வெளியிட்டுள்ள கலைஞன் பதிப்பகத்தார் மேலும் மேலும் விந்தன் படைப்புகளை வெளியிடுவதில் அக்கறையும் ஆர்வமும் காட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

தோழமையுடன்
**மு.பரமசிவம்**
*(தொகுப்பாசிரியர்)*

# விந்தன் வாழ்க்கைக் குறிப்புகள்

*1916-செப்டம்பர் திங்கள் 22ஆம் நாள் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள நாவலூர் என்னும் சிற்றூரில் வேதாசலம் - ஜானகியம்மாள் தம் பதிகளுக்குத் தலைமகனாகப் பிறந்தார். இயற்பெயர் கோவிந்தன். உடன் பிறந்தவர் சாமிநாதன் என்கிற இளவல் ஒருவர் மட்டுமே ஆகும்.*

*1921-சென்னை சூளை பட்டாளம் பகுதியில் உள்ள பி.அண்ட்சி பஞ்சாலையின் புகழ் எவ்வளவு பெரியதோ அதைவிடப் பன்டமங்கு பெரியது அநதப் பகுதியில் வாழும் தொழிலாளர்களின் போராட்ட உணர்வுகள்! வர்க்கப் போராட்டங்கள் நிகழ்வதற்குக் களமாக அமைந்த அம் மண்ணையே தமது வாழும் இடமாகவும் கொண்டு இளமைக் கல்வியைத் துவக்கினார் கோவிந்தன்.*

*1931-வசதியும் வருவாயும் ஓரளவிற்கு இருந்த போதிலும், கல்வி அறிவு இல்லாமையும் மூடப்பழக்க வழக்கங்களும் கொண்ட பெற்றோர்கள் அவர் படிப்பில் கவனம் செலுத்தத் தவறினார்கள். எனினும் விழிப்பும், வெளிச்சமும் எதிர் கால வாழ்க்கைக்குத் தேவையென்பதை உணர்ந்த கோவிந்தன் இரவுப் பள்ளிகளில் படித்துத் தம் கல்வி அறிவை வளர்த்துக் கொண்டார். அதனூடே ஓவியம் கற்க விரும்பி ஓவியப் பள்ளியில் சேர்ந்தார்.*

*1936 - 'கருவிலே திரு'வுடைய கோவிந்தன் ஜெமினி ஸ்டூடியோ விளம்பரப் பகுதியில் ஓவியராகப் பணியாற்றிய போது, அவர் பாட்டனார் 'படைக்கும் தொழில் தரித்திரத்தின் ஊற்று' என்று கோவிந்தனின் படைப்பாற்றலை முடக்கினார். அதன் பிறகே நண்பன் இராஜபாதர் உதவியால் டாக்டர் மாசிலாமணி முதலியார் நடத்தி வந்த 'தமிழரசு' என்னும் திங்கள் இதழில் அச்சுக் கோக்கும் பணியில் சேர்ந்தார்.*

*1939-'தமிழரசு' இதழில் பாவேந்தர் பாரதிதாசன் போன்ற தமிழ்ப் புலவர்களும், அறிஞர்களும் தொடர்பு கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் தமிழ் மேல் பற்றும் எழுத்தார்வமும் கொண்டிருந்த கோவிந்தன் அவர்களோடு பழகும் வாய்ப்பினைப் பெறாத போதிலும் அவர்கள் எழுத்தினை அச்சுக்கோர்க்கும் வாய்ப்பினைப் பெற்றார். சான்றாக பாவேந்தர் பாரதிதாசன் எழுதியுள்ள 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்னும் கவிதை வரிகளை முதன் முதலில் அச்சுக் கோர்த்தவர் கோவிந்தன் அவர்களே! 'தமிழரசு' இதழை விட்டு விலகி ஆனந்தப் போதினி, தாருல் இஸ்லாம், போன்ற இதழ்களில் பணியாற்றி தேர்ச்சி மிக்க அச்சுக் கோப்பாளராக ஆனந்த விகடனில் சேர்ந்தார்.*

*1939-ஏப்ரல் மாதம் 30ஆம் நாள் லீலாவதி என்னும் பெண்மணியை மணந்தார். 1940-தலைமகன் வரதராசன் பிறப்பு.*

*1941-சென்னை சூளை பட்டாளத்தில் 'ராயல் ஓட்டல்' என்னும் பெயரில் மிலிட்டரி ஓட்டல் ஒன்றை நடத்தினார்.*

*1942-இராஜாபாதர் உதவியால் 'கல்கி' அச்சகத்தில் அச்சுக் கோப்பவராக சேர்ந்தார். ஏற்கெனவே சுதேசமித்திரன் ஆனந்தவிகடன் ஆகிய இதழ்களில்*

வி.ஜி.என்னும் பெயரில் கல்கி இதழில் பாப்பா மலர் பகுதியில் கதைகள் எழுத ஆரம் பித்தார்.

1943-பேராசிரியர் கல்கி அவர்களால் 'விந்தன்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, 'கல்கி' இதழின் ஆசிரியர் குழுவில் உதவி ஆசிரியராக சேர்ந்தார்.

1944-பாட்டனாரும் , தந்தையும் இருதாரங்களை மணந்தது போலவே விந்தனும் சரஸ்வதி அம் மையாரை 13-7-44 அன்று மணந்தார்.

1946-விந்தன் எழுதிய 'முல்லைக் கொடியாள்' என்னும் சிறுகதை தொகுப்பிற்கு தமிழ் வளர்ச்சிக் கழகம் முதற்பரிசு வழங்கிப் பாராட்டியது.

1948-முற்போக்காளர் முருகு சுப்பிரமணியம் நடத்திய 'பொன்னி' இதழில் கண்திறக்குமா? என்ற தொடர்கதையை - முதல் நாவலை எழுதினார்

1950-கண் திறக்குமா? என்ற தொடர்கதையை எழுதி பலரின் பாராட்டுக்கும் - பாதிப்புக்கும் ஆளான விந்தன் பேராசிரியர் கல்கியின் விருப்பத்துக்கு ஏற்ப கல்கி இதழில் 'பாலும் பாவையும்' என்ற தொடர்கதையை எழுதினார்.

1951-கல்கி இதழை விட்டு விலகி ஏ.வி.எம் கதை இலாகாவில் சேர்ந்தார். 'ஒரே உரிமை' என்னும் சிறுகதை தொகுப்பு டாக்டர் மு.வ. முன்னுரையுடன் வெளிவந்தது.

1953-'சமுதாய விரோதி' என்னும் சிறுகதைத் தொகுப்பு கி. சந்திரசேகரன் முன்னுரையுடன் வெளிவந்தது. அதே ஆண்டில் விந்தன் வசனம் எழுதிய 'வாழப் பிறந்தவள்' என்ற திரைப்படமும் வெளிவந்தது.

1954-ஆகஸ்டு திங்கள் 15ஆம் நாள் 'மனிதன்' என்னும் மாத இதழை வெளியிட்டார். விலை நாலணா. இவ்விதழ் பத்து இதழ்களே வெளி வந்தன

1957-'அமுதசுரபி' மாத இதழில் 'அன்பு அலறுகிறது' என்னும் பெயரில் தொடர்கதை எழுதினார் அக்கதை தன்னுடைய 'சிநேகிதி' நாவலலைத் தழுவியிருப்பதாக - விமர்சனம் செய்வதாக எழுத்தாளர் அகிலன் விந்தன் பேரில் வழக்குத் தொடுத்தார்.

1959-புத்தகப் பூங்கா என்ற பெயரில் பதிப்பகத்தை ஆரம் பித்து தோழர் ஜெயகாந்தனின் 'ஒரு பிடி சோறு' என்னும் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டார். அந்த தொகுப்புதான் ஜெயகாந்தனை ஆனந்த விகடனுக்கு அடையாளம் காட்டியது

1960-'அமுதசுரபி' இதழில் 'மனிதன் மாறவில்லை' என்னும் தொடர்கதையை எழுதினார் இதே ஆண்டில் சொந்தமாகத் திரைப்படம் தயாரிக்க எண்ணி மல்லிகா புரொடக்ஷன் என்னும் பெயரில் திரைப்படக் கம் பெனியைத் துவக்கினார்

1961-'கனவிலே வந்த கன்னி' என்னும் தலைப்பில் ராணி வார இதழில் தொடர்கதை எழுதினார் இக்கதையே பின்னால் 'காதலும் கல்யாணமும்' என்ற பெயரில் நூலாக வெளிவந்தபோது க.நா சுப்பிரமணியம் முன்னுரை எழுதினார்.

1962-'முன்னணி' மாத இதழில் ஏமாந்துதான் கொடுப்பீர்களா? என்று ஒரு சிறுகதையை விந்தன் எழுதிய போது இக்கதையைக் கவிஞர்

கண்ணதாசன் நாடகமாக்க விரும்பினார். பின்னால் இக்கதை இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

1964-ஜுலை திங்கள் 15ஆம் நாள் 'பாலும் பாவையும்' நாவல் மு. பரமசிவம் அவர்களால் நாடகமாக்கப்பட்டு சென்னை இராஜ அண்ணாமலை மன்றத்தில் அரங்கேற்றப்பட்டது.

1967-டிசம்பர் திங்கள் 17ஆம் நாள் சென்னை வானொலியிலும், அனைத்து இந்திய மொழிகளிலும் 'பாலும் பாவையும்' நாவல் நாடகமாக ஒலி பரப்பப்பட்டது. அதே ஆண்டில் விந்தன் 'தினமணி'கதிர் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் உதவி ஆசிரியராக சேர்ந்தார்.

1974-'கதிர்' பத்திரிகையில் சில சோதனைகளுக்கிடையே இலக்கியப் பணியாற்றி வந்தவர் ஒருநாள் எதிர்பாராமல் ஓய்வு பெற்றார்.

1975-'வாழ்ந்தாலும் லோ சர்க்கிளோடு வாழ்வேன்; செத்தாலும் லோ சர்க்கிளோடு சாவேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தவர் தமது குடும்பத்துக்கு தம் படைப்புகளையே சொத்தாக்கி விட்டு ஜுன் திங்கள் 30ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 11மணிக்கு மார்புவலி ஏற்பட்டு மரணம் அடைந்தார்

விந்தன் வாழ்ந்த ஆண்டுகள் ஐம்பத்தொன்பதற்கு எண்பத்திரெண்டு நாள்கள் குறைவாகும்.

**விந்தன் படைப்புகள்:** சிறுகதைகள் முல்லைக்கொடியாள் (தமிழ் வளர்ச்சி கழகத்தின் முதல் பரிசு பெற்ற நூல்), ஒரே உரிமை, சமுதாய விரோதி, விந்தன் கதைகள், இரண்டு ரூபாய், ஏமாந்துதான் கொடுப்பீர்களா?, நாளை நம்முடையது, இதோ ஒரு மக்கள் பிரதிநிதி, நவீன விக்கிரமாதித்தன்

**நாவல்கள்:** கண்திறக்குமா?, பாலும் பாவையும், அன்பு அலறுகிறது, மனிதன் மாறவில்லை, காதலும் கல்யாணமும், சுயம்வரம், தெருவிளக்கு (நிறைவு பெறவில்லை),

**வரலாறுகள்:** எம்.கே.டி.பாகதர் கதை சிறைச்சாலை சிந்தனைகள் (நடிகவேள் எம்.ஆர்.ராதா வாழ்க்கை வரலாறு),

**கவிதை:** பாட்டினில் பாரதம்

**புடைநூல்:** டசிகோவிந்தம்

**குட்டிக் கதைகள்:** மூன்று தொகுதிகள் வெளிவந்துள்ளன இன்னும் சில கதைகள் விரைவில் வெளிவரும்

**புதிய சிந்தனை:** ஓ. மனிதா, புதிய ஆத்திச்சூடி - பெரியார் அடிச்சுவட்டில்

**கட்டுரைகள்:** வேலை நிறுத்தம் ஏன்?, விந்தன் கட்டுரைகள் (விரைவில் பல கட்டுரைகள் நூலாக வெளிவர உள்ளன.)

**திரைப்படங்கள்:** வாழப்பிறந்தவள் - வசனம், அன்பு - கதை - வசனம் - சில பாடல்கள், கூண்டுக்கிளி - கதை - வசனம் - சில பாடல்கள், கல்கியின் பார்த்திபன் கனவு - வசனம், குழந்தைகள் கண்ட குடியரசு - வசனம், சொல்லு தம்பி சொல்லு - வசனம், மணமாலை - வசனம், குலேபகாவலி சில பாடல்கள்.

# பொருளடக்கம்


முல்லைக் கொடியாள் /17
பொன்னையா /23
வாழப் பிறந்தவன் /27
கடவுள் என் எதிரி /38
ஏழையின் குற்றம் /43
இன்ப துன்பம் /48
சுயநலம் /53
கவலை இல்லை /59
தங்க வளையல் /62
மனித யந்திரம் /68
ரிக்ஷாவாலா /71
சித்தப்பா /74
பத்தினித் தெய்வம் /79
தங்கமே தங்கம் /84
செந்தமிழ் நாட்டிலே /88
விதி வென்றதா ? /93
நாத்தனார் /101
உறவினர் எதற்கு? /106
ஒரே உரிமை /115
அவள் என்னவானாள்? /122
கதவு திறந்தது! /128
மாட்டுத் தொழுவம் /133
குழந்தையின் குதூகலம் /143
மனக் குறை /153
தேற்றுவார் யார்? /161
கைமேல் பலன் /168
கருவேப்பிலைக்காரி /176
யாருக்குப் பிரதிநிதி? /185
காரியவாதி /192
நடக்காத கதை /198
என்ன பாவம் செய்தேன்? /203
வேலைக்காரி விசாலம் /209
கிளி பேசுகிறது! /216
சமுதாய விரோதி /222
சுற்றமும் நட்பும் /239
முதல் தேதி /243
எங்கள் ஏகாம்பரம் /253
வாழ வழியில்லை! /258
எத்தனை பேரோ! /266
சோறும் சுதந்திரமும் /275
அவன் கேள்வி /281
புரியாத புதிர் /292
மவராசர்கள் /299
மாறுதல் இல்லை /310
"அவன் யாரோ!" /318

# விந்தன் கதைகள் - 1

## முல்லைக் கொடியாள்

'சோ' வென்று பெய்துகொண்டிருந்த சித்திரை மாதத்துச் செல்வ மழை அப்பொழுது தான் விட்டது. மேகத்தின் பின்னால் அதுவரை மறைந்திருந்த ஆதவன் வானவில்லின் வர்ண விசித்திரத்தைக் கண்டு அதிசயித்த தென்றல் காற்று, 'ஜம்'மென்று மலர்ந்த மலர்களின் 'கம்'மென்ற மணத்துடன் கலந்து வந்தது. மழைக்குப் பதுங்கியிருந்த பட்சி ஜாலங்கள் 'படபட'வென்று தங்கள் சிறகுகளை அடித்துக் கொண்டு வான வீதியை நோக்கி மேலே கிளம்பியபோது, அவற்றிலிருந்து வைரத்தைப் பழிக்கும் நீர்த் துளிகள் 'சொடசொட'வென்று கீழே உதிர்ந்தன. கார் அரசன் தந்த இந்தக் காட்சியைக் கண்டு பொறாமை கொண்ட காற்றரசன், பொங்கியெழுந்து பூங்கொடிகளைக் குலுக்கிக் கொட்டி, பூமா தேவியையே 'பூ' தேவி யாக்கிவிட்டான். அந்த அழகில் ஈடுபட்ட ஆனந்தத்தாலோ என்னமோ, தாவர இனங்கள் தலைவிரித்தாடின. அந்த ஆனந்த நடனத்திலிருந்து கிளம்பிய அற்புத கீதம். என்னை அறையை விட்டு வெளியே வரச் செய்தது.

திண்ணைக்கு வந்தேன். அந்தக் கிராமத்திற்கே ஒரு தனி அழகைக் கொடுத்துக் கொண்டிருந்த வெளுத்த வானம் கண் கொள்ளாக் காட்சியா யிருந்தது. நான் இருந்த வீட்டுக்கு எதிர் வீட்டில் தான் அவள் இருந்தாள். அந்த வீட்டுக்கு முன் பக்கத்தில் கட்டியிருந்த வேலி மீது முல்லைக் கொடி படர்ந்திருந்தது. சந்திரன் தலை காட்டியிருந்த சமயம்; அவள் வெளியே வந்தாள். வேறெதற்கு? பூப் பறிக்கத்தான்.

என்னைப் போல் முல்லைக் கொடிக்கும் அவளுடன் ஓடியாடி விளையாட வேண்டுமென்று வெகு நாட்களாக ஆசை போலிருக்கிறது. அதற்கேற்றாற் போல் அவளுக்கு எட்டாத உயரத்திலிருந்து ஒரு கொடியில் முல்லை மலர்கள் அரும்பியிருந்தன. மந்த மாருதத்தில் மெல்ல அசைந்தாடிக் கொண்டிருந்த அந்த முல்லைக் கொடி தன்னை நெருங்கி வரும்போது, அவள் துள்ளிக் குதித்து அதை எட்டிப் பிடிக்க முயன்றாள். அவளைச் சிரிக்க வைத்து அழகு பார்ப்பதை விட அழ வைத்து அழகு பார்ப்பதில் அந்தக்

கொடிக்கு ஆனந்தம் அதிகம் போலிருக்கிறது; இல்லாவிட்டால் அது ஏன் அவளை அப்படி ஏமாற்றிவிட்டு அத்தனை உயரத்தில் போகவேண்டும்? - அவளும் அதை விடவில்லை; அதுவும் அவளை விடவில்லை! - இந்த வேடிக்கையைப் பார்த்துத் தானோ என்னவோ அவளுடைய கைவளையல்கள் 'கலகல'வென்று நகைத்தன.

அதென்னமோ, இந்த ஆண்களுக்குப் பெண்களைக் கண்டாலே ஒருவிதமான பச்சாதாபம் உண்டாகிவிடுகிறது! அதற்கு நான் மட்டும் விதி விலக்கா, என்ன? எனக்கும் அவள் மீது பச்சாதாபம் உண்டாகத்தான் செய்தது. திண்ணையை விட்டு எழுந்து சென்றேன்; அந்தக் கொடியைப் பிடித்து இழுத்து அதிலிருந்து முல்லை மொட்டுக்களை யெல்லாம் பறித்து அவளிடம் கொடுத்து விட்டுத் திரும்பி வந்தேன்.

அப்பொழுது அவள் என்னைப் பார்த்த பார்வை நன்றியுடன் பார்த்ததா யில்லை; அதென்னமோ மாதிரியாயிருந்தது! - அவள் ஏன் என்னை அவ்வாறு பார்த்தாள்?

* * *

கோடை விடுமுறை மணிக் கொருதரம் வராவிட்டாலும் மாதத்திற் கொருதரமாவது வரக்கூடாதா? அது தான் இல்லை. வழக்கம் போல் அது வருடத்திற்கொரு முறைதான் வந்தது; நானும் வழக்கம் போல் என் தங்கையின் கிராமத்திற்குச் சென்றேன் - சொல்ல மறந்து விட்டானே! அந்த முல்லைக் கொடியாளும் அக் கிராமத்தில் தான் இருந்தாள்.

நான் போன சமயம் என் தங்கை வீட்டில் இல்லை. கதவு மூடியிருந்தது. சுற்று முற்றும் பார்த்துத் திருதிரு வென்று முழித்துக் கொண்டிருந்தேன். அவள் வந்தாள். யார்? என் தங்கையல்ல; அன்று பார்த்த அதே முல்லைக் கொடியாள் தான்!

யார் முதலில் பேசுவது?

சிறிது நேரம் இருவரும் மௌனமாயிருந்தோம்.

இப்படியே எவ்வளவு நேரம் சும்மா இருக்க முடியும்? நான்தான், 'இவர்கள் எங்கே?' என்று முதலில் அவளை விசாரித்தேன்.

'என்னைக் கேட்டால்?' என்று கேட்டுவிட்டு அவள் உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள்.

''பின் எதற்காகத்தான் இங்கு வந்தாய்?''

''அதைச் சொல்லத்தான்!''

''சொல்லேன்!'' என்றேன் நான்.

''ஊஹூம்!'' என்று மயிலின் சாயலோடு அவள் தன் தலையை அசைத்தாள். அதே சமயத்தில் முல்லை பந்தலின்மேல் உட்கார்ந்திருந்த ஒரு மைனா, 'கூஹூம்' என்று அவளை நையாண்டி செய்துகொண்டே பறந்து சென்றது.

அழகும், ஆசையும்கூட ஒருவிதமான 'லாகிரி'தானே? அவற்றை அனுபவிக்க எனக்கு ஒருவிதமான போதை எழுந்தது. இருந்தாலும் அதை ஒருவாறு அடக்கிக் கொண்டு பேசாமலிருந்தேன்.

அவளே சிறிது நேரத்திற்குப் பிறகு ''இது தெரியாதா, உங்களுக்கு? அவர்கள் திருநாளுக்குப் போயிருக்கிறார்கள்!'' என்றாள்.

''எப்பொழுது வருவார்கள்?'' என்று கேட்டேன்.

'நாளைக்கு!'

''அட, ராமா! கதவைத் திறந்து வைத்துவிட்டாவது போயிருக்கக் கூடாதா? - இப்போது நான் எங்கே போவது?'' என்றபடி, ஒன்றும் தோன்றாமல் நான் வந்த வழியே திரும்பினேன்.

அவள், ''எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''தெரியவில்லை!'' என்றேன்.

''பைத்தியம்தான்; எங்கள் வீட்டுக்கு வாருங்கள்!'' என்றாள்.

அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளாமலிருக்க அவள் சொல்வது போல் எனக்கென்ன பைத்தியமா? சென்றேன். எனக்கு முன்னால் அவள் 'திடுதிடு' வென்று ஓடி உள்ளேயிருந்து ஒரு சொம்பு தண்ணீர் கொண்டு வந்து ''காலை அலம்பிக் கொள்ளுங்கள்'' என்றாள்.

அதை வாங்கிக் கொண்டு நான் வாசலுக்கு வந்தேன். ''அது யார், அம்மா?'' என்று உள்ளே இருந்தபடி யாரோ கேட்டது என் காதில் விழுந்தது.

''எதிர்த்த வீட்டு அண்ணியின் அண்ணா; ஊரிலிருந்து வந்திருக்கிறார்!'' என்று சொன்னாள் அவள்.

''ஐயோ, பாவம்! அவர்கள் திருநாளுக்குப் போயிருப்பது தம்பிக்குத் தெரியாது போலிருக்கிறது. முதலில் அவனுக்குச் சாப்பாடு போடு அம்மா! எப்பொழுது சாப்பிட்டு வந்ததோ, என்னமோ?''

காலைக் கழுவிக் கொண்டு உள்ளே சென்றேன். அங்கே இருந்த ஒரு கிழவி, ''வா அப்பா வா!'' என்று என்னை வரவேற்றாள்.

அந்தக் கிழவியைத் தவிர அவளுடைய வீட்டிலும் வேறு யாருமில்லை. நான் அதிசயத்துடன் ''உங்கள் வீட்டில்கூட ஒருவரும் இல்லையா?'' என்று அவளைப் பார்த்துக் கேட்டேன்.

''இல்லை, அவர்களுடன் தான் இவர்களும் திருநாளுக்குப் போயிருக்கிறார்கள். இந்தப் பாட்டியை மட்டும் எனக்குக் காவலாக விட்டுவிட்டுப் போனார்கள்!'' என்று சொல்லிவிட்டு அவள் சிரித்தாள்.

'அவளுக்குக் காவல்!'

இதைக் கேட்டதும் எனக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது - மனமிருந்தால் மார்க்கந்தானா இல்லை?

இவ்வாறு எண்ணி நான் வியந்து கொண்டிருந்த போது, ''இலை போட்டாச்சு; சாப்பிட வாருங்கள்!'' என்று என்னைப் பரிவுடன் அழைத்தாள் அந்தப் பாவை. சிறிது நேரத்துக்கெல்லாம் என்னுடன் கிழவியையும் உட்கார வைத்து அவள் சாதம் பரிமாறினாள். பசி தீர்ந்த பிறகு, நான் படுத்துக் கொள்வதற்காகத் திண்ணை வந்துவிட்டேன்.

அவள் பாயைக் கொண்டு வந்து திண்ணையில் விரித்த போது, ''உன்னுடைய பெயர்...?'' என்று ஏதோ ஒரு விதமான உணர்ச்சி வசப்பட்டு இழுத்தேன் நான்.

''பெயரில் என்ன இருக்கிறது? பேசாமல் படுத்துக் கொள்ளுங்கள்!'' என்று சொல்லிவிட்டு, அவள் உள்ளே சென்றாள்.

* * *

மூன்றாவது சந்திப்புக்கு முந்நூற்று அறுபத்தைந்து நாட்கள் காத்துக்கிடந்த பிறகு, அந்த முல்லைக் கொடியாளின் கிராமத்திற்குப் போவதற்காக ரயிலில் ஏறி உட்கார்ந்தேன். 'கூகுக்' கென்று கூவி, ரயில் தான் கிளம்பப் போவதை அறிவித்தபோது, ''முல்லை மொக்! முல்லை மொக்!'' என்று ஒரு பூக்காரன் கூவிக்கொண்டே வந்தான்.

''இந்த முல்லையில் ஒரு படி மொட்டை வாங்கிக் கொண்டுபோய், அவள் தலையில் கொட்டி அபிஷேகம் செய்தால் என்ன?'' என்று நினைத்தேன். உடனே அவனைக் கூப்பிட்டு ஒரு படி மொட்டையும் வாங்கி வைத்துக் கொண்டேன்.

அதற்குப் பிறகு ''ஆமாம், இதை எப்படி அவள் தலையில் கொட்டுவது?'' என்று பிரச்சனை தோன்றி என்னை வதைத்தது. போகும்போது அவள் வீட்டுக் கொல்லைப் பக்கமாகப் போவது; வழியில் சந்தித்தால் அவள் தலையில் கொட்டுவது; இல்லாவிட்டால் தங்கை இருக்கவே இருக்கிறாள்!'' என்று கடைசியில் தீர்மானித்துக் கொண்டேன்.

* * *

அவள் வீட்டை நான் நெருங்கிய போது மணி ஆறுக்கு மேலிருக்கும். நான் எதிர்பார்த்தபடி அவள் கொல்லைப் பக்கத்தில் தான் இருந்தாள். அவளுக்கு எதிரே ஓர் எருமைக் கன்று துள்ளி ஓடிக் கொண்டிருந்தது. அதைப் பிடித்துக் கட்ட எத்தனித்துக் கொண்டிருந்த அவள் என்னைக் கண்டதும் ''அன்றைக்கு முல்லை கொடியைப் பிடித்துக் கொடுத்தீர்களே, இன்றைக்கு எருமைக் கன்றைப் பிடித்துக் கொடுங்களேன், பார்க்கலாம்?' என்றாள்.

அவள் ஏமாந்தால், தன் தாயின் மடியில் இருக்கும் பாலையெல்லாம் குடித்து விடலாமென்று எண்ணங் கொண்டிருந்த அந்த எருமைக் கன்று, சிறிது நேரம் என்னையும் ஆட்டிப் படைத்த பிறகு சிக்கிக் கொண்டது. அவள் அதைப் பிடித்துக் கட்டிக்கொண்டே 'நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தீர்கள்!' என்றாள்.

''நல்ல சமயமா! என்னத்திற்கு?'' என்று கேட்டேன் நான்.

''நீங்கள் பட்டணத்துப் பணக்கார ராஜா; நானோ பட்டிக்காட்டு ஏழைப் பெண். என்னுடைய கல்யாணத்தின்போது நீங்கள் வருகிறதாயிருந்தால், அது நல்ல சமயந்தானே?'' என்றாள் அவள்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''உனக்கா கல்யாணம்? எப்பொழுது? எங்கே?'' என்று பரபரப்புடன் கேட்டேன்.

''நாளைக்கு! நம்ம ஊர்க் காத்தவராயன் சத்திரத்திலேதான்!'' என்று அவள் சாவதானமாகப் பதில் சொன்னாள்.

என் தலையில் இடி விழுந்தது போலிருந்தது. இதற்குத்தானா அவள் என்மீது அன்று அத்தனை அன்பு காட்டினாள்? அந்த அன்பின் அர்த்தந்தான் என்ன? அதெல்லாம் வெறும் விளையாட்டுத்தானா?

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ''அப்படியானால் நீ...நீ....'' என்று தடுமாறினேன் நான். ''என்ன?'' என்று கேட்டாள் அவள்.

''.....காதலிக்கவில்லையா?''

''ஊஹூம்; எங்க ஊரிலே அதெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறந்தான்!'' என்று சொல்லிவிட்டு, அவள் வெட்கத்தால் தலையைக் கீழே கவிழ்த்து கொண்டாள்.

எனக்கு எப்படி யிருக்கும்?.....என் மனம் அமைதியை அடியோடு இழந்து விட்டது. அவசர அவசரமாக அவளுக்காக வாங்கி வைத்திருந்த முல்லை மொட்டுக்களையெல்லாம் அருகேயிருந்த ஆலமரத்தடிப் பிள்ளையாரின் தலையில் கொட்டிவிட்டு, தங்கையின் வீட்டைக்கூட மறந்து 'விடுவிடு'வென்று வந்த வழியே திரும்பினேன். அவள், ''எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

நான் அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை. பட்டணத்தைப் பற்றியும், பட்டணத்துப் பயல்களைப் பற்றியும் கொஞ்சங்கூடத் தெரியாத அந்தப் பட்டிக்காட்டுப் பெண்ணை நான் ஏன் திரும்பிப் பார்க்க வேண்டும்?

# பொன்னையா

''என்னா சின்னி! வயிற்றைக் கிள்ளுகிறது; சோத்தையாச்சும் வடிச்சயா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான் பசியால் வாடிய பொன்னையா.

''நீயும் கேட்கிறயே! வெட்ட வெளியிலே அடுப்பைப் பற்ற வச்சிட்டு நான் அவதிப்படறேன். குழந்தை வேறே பனியிலே படுத்துக் காலையிலேருந்து காயலாக் கிடக்குது. எனக்கு வேலையே ஒண்ணும் ஓடலே. அடிக்கிற காத்துலே இந்த அடுப்பு கொஞ்சமாச்சும் எரியுதா?'' என்று எரிந்து விழுந்தாள் சின்னி.

''என்னை என்ன பண்ணச் சொல்றே. சின்னி? என் அப்பன் எனக்கு ஆஸ்தியா வச்சுட்டுப்போன அந்த ஒரே ஒரு பொத்தல் குடிசையையும் பாழாய்ப் போன வெள்ளம் வந்து அடிச்சுட்டுப் போயிடிச்சு. இப்ப அந்த வீட்டைக் கட்டறதுன்னா கையிலே காசில்லே...''

''எதுக்குத்தான் ஒங்கிட்டெ காசு இருந்தது? நீயும் வந்து வெடிஞ்சயே, என் தலையிலே! உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன்? நகை உண்டா? நட்டு உண்டா? இல்லை நல்ல புடவையாச்சும் ஒண்ணு உண்டா? நான் வந்த வழி! ...ஊ....உம்.....ஊ.......உம்'' என்று தன் புடவையின் மேலாக்கை எடுத்துக் கண்களைக் கசக்கிக் கொண்டு அழ ஆரம்பித்து விட்டாள் சின்னி.

''அழு, அழு! நல்லா அழு! நான் அந்தத் தெருப்பக்கமாகப் போயிட்டு வாரேன்!'' என்று கீழே வைக்கப்போன அடைப்பத்தை மீண்டும் தூக்கி அக்கத்தில் வைத்துக் கொண்டு நடந்தான் பொன்னையா.

* * *

வீட்டுக்கு வீடு 'ஸேப்டி ரேஸர்' வைத்துக் கொண்டிருக்கும் இந்த நாளிலே பொன்னையாவின் பிழைப்பு க்ஷீணதசையை அடைந்திருந்தது. கிடைத்ததைக் கொண்டு வயிற்றைத் திருப்தி செய்து கொள்ளவே அவனால் முடியவில்லை. இந்த லட்சணத்தில் அவன் இழந்த வீட்டை மீண்டும் கட்டிக் கொள்வதென்றால் குறைந்தது ஐம்பது ரூபாயாவது வேண்டுமே! அடே அப்பா! இந்த ஜன்மத்தில் அத்தனை ரூபாயை அவன் கண்ணாலாவது பார்க்க முடியுமா?

உலகம் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டதுதான்; அது எல்லோருக்கும் சொந்தம் தான். ஆனால், பணக்காரர்கள் சிலர் அதை ஆளுக்குக் கொஞ்சமாகப் பங்கு போட்டுக் கொண்டு, ''இது என்னுடையது; அது உன்னுடையது!'' என்று உரிமை கொண்டாடுகிறார்களே.. அவர்களுக்கு மத்தியில் ஏழை பொன்னையாவுக்கு வாழ இடமுண்டா?

'எல்லோரும் ஓர் குலம்' என்பதெல்லாம் எழுத்திலே. வெறும் பேச்சிலே! நடைமுறையிலோ?

நாடு நகரங்களில் எத்தனையோ மாட மாளிகைகள், கூட கோபுரங்கள்! மேல் ஜாதியைச் சேர்ந்த எத்தனையோ பேர் அவற்றில் ஒண்டுக் குடித்தனம் செய்கின்றனர். அவர்களுடன் நாய்கூடச் சரிசமானமாக வாழ்ந்து வருகிறது! ஆனால் பொன்னையா? அவன்தான் கீழ் ஜாதியாச்சே! மரணமடைந்த பின் மயானத்தில் கூட அவனுக்குத் தனி இடந்தானே?

* * *

''சின்னி! எனக்கொரு யோசனை தோணுது; எங்கேயாச்சும் ஒண்டுக் குடித்தனம் இருக்கலாம்னு பார்க்கிறேன்!'' என்றான் ஒரு நாள் பொன்னையா.

''நல்ல யோசனைதான்; நமக்கு யார் வீடு விடுவாங்க?'' என்று கேட்டுச் சிரித்தாள் சின்னி.

''நம்ம ஜில்லா போர்டுக்குத் தலைவராயிருக்காரே தர்மலிங்கம். அவர் எப்பப் பார்த்தாலும் 'எல்லோரும் ஓர் குலம்'னு பேசிக்கிட்டிருக்காரு; நம்ம ஜாதியும் அவரு ஜாதியும் ஒண்ணுன்னு சொல்றாரு. அதாலே அவரைக் கேட்டா நமக்குக் கொஞ்சம் இடம் விடுவாரு, இல்லையா?''

''என்னமோ கேட்டுத்தான் பாரேன்?''

''இரு, கேட்டுக்கிட்டு வாரேன்!'' என்று சொல்லி விட்டு, அவருடைய வீட்டை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றான் பொன்னையா.

* * *

''அம்மா! ஐயா இருக்காரா?''

''யாரடா அது? பொன்னையா?'' என்று கேட்டுக் கொண்டே வாசலுக்கு வந்தார் தர்மலிங்கம்.

''ஆமாங்க!''

''எங்கே வந்தே?''

''வெள்ளம் வந்து என் வீட்டை அடிச்சுக்கிட்டுப் போயிட்டுதுங்க; அதைத் திருப்பிக் கட்டலாம்னா கையிலே காசில்லிங்க! பனியிலே படுத்துப் படுத்துக் குழந்தை வேறே காயலாக் கிடக்குது. அதாலே உங்க வீட்டுத் திண்ணையிலாச்சும் கொஞ்சம் இடம் கொடுத்தீங்கன்னா, என்னமோ நாங்க பொழைச்சுப் போவோம்!'

இதைக் கேட்டதும் தர்மலிங்கத்துக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. பொன்னையாவுக்கு என்ன பதில் சொல்வதென்றே அவருக்குத் தெரியவில்லை. எதற்கும் தமது மனைவியுடன் கலந்து யோசித்துப் பார்க்கலாம் என்று எண்ணியவராய், ''சரி நாளைக்கு வாடா!'' என்று சொல்லி அவனிடமிருந்து அந்த நிமிஷம் தப்பிவிட்டார்!

* * *

''பத்மா! பொன்னையாவின் வீடு வெள்ளத்திலே போயிடுத்தாம்; நம்ம வீட்டுத் திண்ணையிலே கொஞ்சம் இடம் வேணும்னு கேட்கிறான்!'' என்று எண்சாண் உடம்பையும் ஒரு சாணாக ஒடுக்கிக்கொண்டு, தன் மனைவியிடம் தாழ்மையோடு விண்ணப்பம் செய்து கொண்டார் தர்மலிங்கம்.

''ரொம்ப அழகாகத்தான் இருக்கு! போயும் போயும் அந்தக் கீழ் ஜாதி நாயைக் கொண்டு வந்து...'' என்று ஆவேசத்துடன் இரைய ஆரம்பித்து விட்டாள் அவள்.

''உஸ்! யாராவது கேட்டுக்கொண்டே உள்ளே வந்து விடப் போகிறார்கள்!'' என்று அவள் வாயைப் பொத்தினார் தர்மலிங்கம்.

அவள், வாசல் வரை சென்று எட்டிப் பார்த்துவிட்டு வந்து, ''யாரையும் காணோம்! - ஆமாம், அதற்கு நீங்கள் என்ன சொல்லித் தொலைத்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''என்னத்தைச் சொல்வது? 'எல்லோரும் ஓர் குலம்'னு எடுத்ததுக்கெல்லாம் தொண்டை கிழியக் கத்தும் நான் என் வீட்டுத் திண்ணையில் அவனுக்குக் கொஞ்சம் இடமில்லையென்றால்...?''

''அதற்கு நான் ஒரு வழி, சொல்கிறேன்?'' என்று சொல்லிக் கொண்டே பத்மா ஓடோடியும் வந்து, அவர் காதோடு காதாக ஏதோ சொல்லி வைத்தாள்.

அதைக் கேட்டதும் தர்மலிங்கத்தின் முகம் ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்தது. 'அடியே! பெண் புத்தி பின் புத்தி' என்று சொல்கிறார்களே, அவர்களைக் கொண்டு போய் உடைப்பில்தான்

போட வேண்டும்!'' என்று அகங்கனிந்து சொல்லி அவளை அன்புடன் தழுவச் சென்றார், அவள் விலகிக் கொண்டாள்!

* * *

மறுநாள் பொன்னையா வந்தான். அவன் கொஞ்சமும் எதிர்பாராத விதமாக ''ஏண்டா, பொன்னையா! எத்தனை நாளைக்குத் தான் நீ என் வீட்டுத் திண்ணையில் பொங்கித் தின்று கொண்டிருக்க முடியும்? இந்தா இந்த ஐம்பது ரூபாயைக் கொண்டு போய் உனக்கென்று ஒரு வீட்டைக் கட்டிக் கொள்'' என்று அவனிடம் ஐம்பது ரூபாய் எடுத்துக் கொடுத்தார் தர்மலிங்கம்.

நல்ல வேளையாகப் பொன்னையா மூர்ச்சையடைந்து கீழே விழுந்து விடவில்லை. இரு கைகளையும் ஏந்தி அந்தப் பணத்தைப் பக்தி சிரத்தையுடன் பெற்றுக் கொண்டான். ''நீங்க நல்லா யிருக்கணும் சாமி!'' என்று நெடு மரம் போல் அவர் காலில் விழுந்து கரைபுரண்டு வந்த கண்ணீரால் அவருடைய பாதங்களை நனைத்தான்.

''ஆமாம், இவனுக்குப் பணம் கொடுக்காவிட்டால் நான் கெட்டுப் போய்விடுவேனாக்கும்!'' என்று தம்முள் முணுமுணுத்துக் கொண்டார் தர்மலிங்கம்.

* * *

ஆனந்தக் கடலில் நீந்திக்கொண்டு வந்த பொன்னையா, அடுத்த நிமிஷத்தில் தன் இருப்பிடம் வந்து சேர்ந்தான். ஆவலே உருவாய்த் தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சின்னியிடம் ஐம்பது ரூபாயைக் கொடுத்தான்.

'ஐயோ சாமி, இத்தனை பணம் உனக்கு எது?'' என்று திடுக்கிட்டுக் கேட்டாள் சின்னி.

''ஐயாதான் கொடுத்தாரு!'' என்றான் பொன்னையா.

''மவராஜா! இந்த ஏழைகளுக்கு இவ்வளவு பணம் கொடுத்தாரே! அவரு மனுசர் இல்லை; தெய்வம்!''

''தெய்வந்தான்! இல்லேன்னா என்னை உன் வாயிலேயிருந்து காப்பாத்தியிருக்க முடியுமா?'' என்றான் பொன்னையா சிரித்துக் கொண்டே.

அந்தப் பணம் மனமுவந்து கொடுத்த பணமல்ல; மனைவி சொன்ன யோசனையின் பேரில் தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் கொடுத்த பணம்; தன்னை எப்பொழுதுமே தாழ்த்தப்பட்டவனாக வாழச் செய்யும் பணம் அது என்பது ஏழை பொன்னையாவுக்கு எப்படித் தெரியும்?

# வாழப் பிறந்தவன்

''ஏ, குழந்தே!'' என்று இரைந்தான் இருளப்பன்.

''என்னப்பா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள் கேதாரி.

''ரொம்ப நாளா உன்னை ஒண்ணு கேக்கணும் கேக்கணும்னு எனக்கு எண்ணம்...''

''கேளேன்!''

''உன்னைப் பத்தி ஊரிலே நாலு பேரு நாலு விதமாப் பேசிக்கிட்டு இருக்காங்களே அதெல்லாம் நெசந்தானா?''

''என்ன பேசிக்கிட்டு இருக்காங்க?''

''ஊரிலே இருக்கிற பயல்களை யெல்லாம் நீ பார்க்கிறயாம், பார்த்துச் சிரிக்கிறயாம், கூடிப் பேசறியாம் - இப்படியெல்லாம் பேசிக்கிட்டு இருக்காங்களேம்மா, இதெல்லாம் நெசமான்னு கேக்கறேன்?''

கேதாரி 'களுக்'கென்று சிரித்தாள்.

''என்னாம்மா! நான் கேக்கறேன்? ஏன் சிரிக்கிறே? பொகையிலை பிரிச்சாப் போச்சு, பொம்பிளை சிரிச்சாப் போச்சு'ன்னு பெரியவங்க சொல்லுவாங்க. இப்படியெல்லாம் சிரிக்கக் கூடாது, அம்மா! இதெல்லாம் நமக்கு அடுக்காது. காலம் இப்படியே போய்க்கிட்டு இருக்கும்னா நீ நினைக்கிறே?....உம்...நமக்கும் நல்ல காலம் வரும். அப்போ நமக்கும் நாலு காசு கிடைக்கும். கடவுளும் கண்ணைத் திறந்து பாப்பாரு...''

''அப்படின்னா, இப்போ கடவுள் கண்ணை மூடிக்கிட்டு இருக்காரா, அப்பா?''

''ஐயோ! அப்படியெல்லாம் கடவுளைக் கேலி செய்யாதே, அம்மா! கன்னத்திலே போட்டுக்கோ!....கடவுள் கண் திறந்து பார்த்தா நமக்குக் கட்டாயம் நல்ல காலம் வரும். அப்போ கண்ணுக்கழகா நான் ஒரு பையனைப் பார்த்து உனக்குக் கண்ணாலம் பண்ணி வைக்கிறேன்...''

''அந்தப் பையனை நான் பார்க்க வேண்டாமா, அப்பா? அவன் என் கண்ணுக்கு அழகா யிருக்க வேண்டாமா, அப்பா?''

''ஐயோ! உன்னை யாரு பார்க்கவேணாம்னு சொன்னா? நல்லாப் பாரு! பார்த்து உன் மனசுக்குப் பிடிச்சா நீ அவனைக் கண்ணாலம்

பண்ணிக்கோ! அது வரைக்கும் இந்த மாதிரிப் பேச்செல்லாம் என் காதிலே விழாம நீ பார்த்துக் கிட்டா நல்லது. உனக்கு இந்தக் கிழவன் வேணும்னா அப்படிச் செய், இல்லேன்னா உன் இஷ்டம்''

''இன்னொரு தடவை அப்படிச் சொல்லாதே அப்பா! என் மனசு மட்டும் சரியாயிருந்தா, யாரு என்னா சொன்னா என்னாப்பா? ஆடு மாடு மாதிரி அல்ப ஆசைக்காக நான் உன்னை விட்டுவிடுவேனா, அப்பா?'' என்று சொல்லிக் கொண்டு கிழவனைக் கட்டி அணைத்துக் கொண்டாள் கேதாரி.

* * *

இருளப்பனின் ஏக புத்திரி கேதாரி. இருந்தாலும் அவள் செல்லப் பெண்ணாய் வளர முடியவில்லை. அது மட்டுமா? தாயற்ற அவளால் வயதுவந்த பிறகும்கூடப் படுதாமுறையைக் கைக்கொள்ள முடியவில்லை. எப்படி முடியும்? இருளப்பனுடைய உழைப்பின் மதிப்பு மாதம் பதினைந்து ரூபாய்க்கு மேல் ஏறவேயில்லை. என்னதான் சிக்கனத்தைக் கடைப்பிடித்தாலும் இரண்டு ஜீவன்களுக்கு அந்த வருமானம் போதுமா? எனவே, கேதாரியும் அறுவடை காலத்தின்போது வயல் வேலைகளில் கலந்து கொள்வாள். அப்படி வயிற்றுப் பிழைப்புக்குப் போகும்போது வரும் வம்புதான் மேற்சொன்ன ஊராரின் பேச்சு!

அந்த ஊரில் தோட்ட வேலை செய்வதில் இருளப்பன் பேர் போனவன். அவனுடைய வேலைத் திறமையைப் பற்றி மெச்சிப் பேசாதவர்களே அங்கு கிடையாது. ஆனாலும் அந்தத் திறமை அவனை வாழவைக்கவில்லை; வேறொருவனைத் தான் வாழ வைத்தது. காரணம், வறுமைதான். இல்லை யென்றால் அவன் ஏன் தன்னுடைய வேலைத் திறமையை இன்னொருவனிடம் மாதம் பதினைந்து ரூபாய் வாடகைக்கு விட்டிருக்கப் போகிறான்?

அப்படித்தான் வாடகைக்கு விட்டிருந்தானே, அதற்குரிய அந்தஸ்தாவது அவனுக்குக் கிடைத்தா? அதுவும் இல்லை, வெறும் வேலைக்காரனாகவும் கூலிக்காரனாகவும் இருந்ததைவிட அவனுக்கு வேறொரு அந்தஸ்தும் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் எல்லோருக்கும் தெரிந்தது தான். ஆனாலும் அதை இங்கே சொல்லிவிடத்தான் வேண்டும். அதாவது இருளப்பனிடம் பணம் இல்லை. இருந்திருந்தால் அவனிடம் வேலைத் திறமைகூட இருந்திருக்க வேண்டாம். அது இல்லாமலே அவன் எஜமானாக

ஆகியிருக்கலாம். அப்படித் தானே இந்தப் பாழாய்ப் போன உலகம் இன்று வரை இயங்கிக் கொண்டிருக்கிறது?

* * *

எல்லோரையும்விட அந்த ஊரில் முத்தண்ண முதலியார்தான் பெரிய பணக்காரர். அது மட்டுமல்ல. பெரிய பண்ணைக்காரரும் கூட. ஏராளமான நிலபுலன்கள், தோட்டம் துரவுகள் எல்லாம் அவருக்குச் சொந்தமாகயிருந்தன. அவருடைய தென்னந்தோப்பு ஒன்றில்தான் இருளப்பன் வேலை செய்து வந்தான்.

வேனிற் காலத்தில் தோப்புக்கு நீர் பாய்ச்ச நேரும். அந்தக் காலத்தில் ஏற்றம் இறைப்பதற்காகத் தினசரி மூன்று ஆட்களைக் கூலிக்குப் பிடித்துக் கொண்டு வருவான் இருளப்பன். அங்கே கூலிக்கு ஆள் பிடிப்பது அவ்வளவு சிரமமான காரியம் அல்ல. எட்டணாக் காசை வீசி யெறிந்தால் எத்தனையோ ஏழைகள். பட்டாணிக் கடலையைக் கண்ட குரங்குக் கூட்டம் போல் பாய்ந்து வருவார்கள். பாதரட்சை மாதிரி அவர்களை அவசியம் இருக்கும்போது உபயோகித்துக் கொண்டு அவசியமில்லாத போது தள்ளிவிடலாம். அவர்கள் ஏன் எப்பொழுதும் அந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது மிகவும் ஆச்சரியமான விஷயம். ஆசையை அடக்கும் விஷயத்தில் அவர்கள் வேதாந்திகளைக்கூடத் தோற்கடித்து விடுவார்கள். அவர்களுக்கு வேண்டியதெல்லாம் குறுக்கும் நெடுக்குமாக எட்டடி இடம் வாழ்வதற்கு - எண்சாண் உடம்புக்கு எட்டடி இடமே போதுமென்பது அவர்கள் சித்தாந்தமோ, என்னமோ! - அப்புறம் ஒரு பெண்டாட்டி. வருஷத்துக்கு ஒரு பிள்ளை வீதம் அவள் பெற்றுப் போட வேண்டியது. உயிர் பிழைப்பது அந்தக் குழந்தைகளின் ஆயுள் காலத்தைப் பொறுத்தது. அவற்றைப் பற்றிப் பெற்றோருக்குக் கவலையில்லை. அவர்களுடைய கவலை யெல்லாம் அன்றைய உணவுக்கு வழி என்னவென்பதே. அதற்கேதான் பொழுது சரியாயிருக்கிறதே!

இத்தனை துன்பத்தோடுதான் வாழ்கிறார்களே, இவர்களுக்குச் செத்துப் போகவாவது ஆசை இருக்கிறதா என்றால் அதுவும் கிடையாது. வேறு எந்த ஆசைக்கும் அவர்களை ஆளாக்காத ஆண்டவன் இந்த ஓர் ஆசைக்காவது அவர்களை ஆளாக்கியிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? அவர்களுடைய உழைப்பைக் கொண்டு தனி மனிதன் ஏகபோகத்துடன் வாழ முடியாமற் போகலாமல்லவா?

மாரிக்காலம் வந்தால் இவர்கள் படும் பாடு திண்டாட்டம். ஆனால் இருளப்பனின் பாடு கொண்டாட்டம். ஏனெனில் அந்தக் காலத்தில் தன்னுடைய தள்ளாத வயதில் மண் வெட்டியை எடுத்துக் கொண்டு மரத்துக்கு மரம் குனிந்து தண்ணீர் மாற்றும் வேலை அவனுக்கு இருக்காது. தோட்டத்தைக் காவல் காப்பது, வேலியை ஆடு மாடு மேயாமல் பார்த்துக் கொள்வது, உதிர்ந்த ஓலைகளை முடைந்து போடுவது - இவற்றோடு அவனுடைய தினசரி வேலைகள் முடிந்து விடும். எல்லாவற்றுக்கும் சம்பளம் மாதம் பதினைந்து ரூபாய்தான். எப்பொழுதுதாவது வேலைகளில் மட்டும் மாறுதல் ஏற்பட்டாலும் ஏற்படுமே தவிர, சம்பளத்தில் மட்டும் மாறுதல் என்ற பேச்சுக்கே இடம் இருப்பதில்லை!

இந்த நிலைமையில் கேதாரியின் கல்யாண விஷயமாக இருளப்பன் கடவுளைத்தான் நம்பியிருந்தான். இன்று நேற்று அல்ல; எத்தனையோ நாட்களாக. அந்த நம்பிக்கை இப்போது தளர்ந்து விட்டது. காரணம் ஊராரின் பேச்சுத்தான்.

கடைசியில் கடவுளை நம்பின மாதிரி எஜமானையும் கொஞ்சம் நம்பித்தான் பார்ப்போமே என்று அவனுக்குத் தோன்றிற்று.

ஒருநாள் தோப்பைப் பார்வையிட வந்த எஜமானை நெருங்கினான்.

''சாமி! ஒரு சேதிங்க!''

''என்னடா சேதி?''

''நம்ம கேதாரி யில்லே...?''

''ஆமாம், இருக்கா!''

''அவளுக்கு வயசாயிடுச்சு....!''

''ஆமாம்; ஆயிடுச்சு!''

''கண்ணாலம் பண்ணணுமில்லே...!''

''ஆமாம்; பண்ணனும்!''

''ஐயாமாரு மனம் வச்சி ஏதாச்சும் கொஞ்சம் பணம் கொடுத்தா....''

''பணம் என்னத்துக்கு?''

''கண்ணாலம் பண்ணத்தான்!''

இதைக் கேட்டதும் எஜமான் என்ன எண்ணினாரோ என்னமோ, அவருக்குச் சிரிப்பு வந்து விட்டது.

''கேதாரிக்குக் கல்யாணம் செய்யப் பணம் எதற்குடா?'' என்று கேட்டார்.

''என்ன சாமி! அப்படிச் சொல்றீங்க? கண்ணாலம்னா பணம் இல்லாம ஆயிடுங்களா? பாக்கு வெற்றிலை வழங்க வேண்டாமா? பழம் பலகாரம் வாங்க வேண்டாமா? பந்தி போஜனம் போட வேண்டாமா....?''

''நிறுத்துடா, போதும்! இதெல்லாம் ஒன்றும் உனக்கு வேண்டாம். பேசாமல் நான் சொல்வதைக் கேள். கேதாரியின் கல்யாண விஷயத்தைப் பற்றி உனக்குக் கவலையே வேண்டாம்...''

இப்படிச் சொன்னதும் இருளப்பனுக்கு உச்சி குளிர்ந்து விட்டது. ''அப்படிச் சொல்லுங்கோ, எசமான் அந்தக் கவலையை நீங்களே ஏத்துக்கிறதுன்னா இந்த ஏழைக்கு என்ன குறையுங்க?'' என்று சொல்லிவிட்டு அவன் பல்லை இளித்தான்.

முதலியார் மேலும் சொன்னார்:-

''அந்தக் கவலை உனக்கு வேண்டாம்; எனக்கும் வேண்டாம். கேதாரிக்கே இருந்துவிட்டுப் போகட்டும். ஊரிலே இருக்கிற பயல்களையெல்லாம் காக்காயா வந்து தூக்கிக் கொண்டு போய்விட்டது? அவள் இஷ்டப்பட்ட எவனையாவது ஒருத்தனைத் தேடிப் பிடித்துக் கொள்கிறாள்!''

ஏமாற்றமடைந்த இருளப்பனுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஆனால் தனிப்பட்ட முறையில் ஏழையின் கோபம் அவனுடைய வாழ்வைத்தானே கெடுக்கும்? ஆகவே, 'தம் மகளாயிருந்தா எசமான் அப்படிச் சொல்லுவாரா?' என்று தனக்குள் எண்ணிக் கொண்டு, பேசாமலிருந்து விட்டான்.

இனி என்ன?

இதுவே அவனுடைய இடைவிடாத வேதனையாகிவிட்டது.

* * *

இந்த வேலையின் காரணமாக, நாளடைவில் இருளப்பனின் மனம் அடியோடு மாறிவிட்டது. எஜமான் மீது அவன் வைத்திருந்த விசுவாசம் இருந்த இடம் தெரியாமல் பறந்துவிட்டது. அதுவரை இருளப்பனுக்குத் தன்னுடைய சொந்த தோப்பாகவே தோன்றி வந்த அந்தத் தென்னந் தோப்பு, இப்போது யாரோ ஒருவருடையதாகத் தோன்றிற்று. இத்தனை நாளும் தோப்பின் முழுப் பலனையும் எஜமானே அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையுடன் உழைத்து வந்த

அவன், இப்போது நாம் ஏன் அப்படி உழைக்க வேண்டும்? என்று எண்ணத் தலைப்பட்டு விட்டான் - எப்படியோ நாளைக் கடத்த வேண்டியது; மாதம் பிறந்தால் சம்பளத்தை வாங்கிக் கொள்ள வேண்டியது...அவ்வளவுதானே?

இந்தத் தீர்மானத்துக்கு வந்த அவன், இன்னொரு தீர்மானத்துக்கும் வந்து விட்டான். அதாவது எந்த விஷயத்துக்கும் பிறரை நம்பக்கூடாது; தன்னைத் தானே நம்ப வேண்டும் என்பதாக!

அவ்வளவுதான், நாளடைவில் அவனுடைய தீர்மானங்கள் நடைமுறைக்கு வர ஆரம்பித்துவிட்டன.

இடைவேளையில் இருளப்பன் தென்னங்கீற்றில் படுத்துச் சற்று இளைப்பாறுவது வழக்கம். அப்பொழுது யாராவது வழிப்போக்கர்கள் வேலியை ஆடோ, மாடோ மேய்வதாக எச்சரித்து விட்டால் உடனே எழுந்து அவற்றை விரட்ட விழுந்தடித்துக் கொண்டு ஓடுவான். அப்பொழுதெல்லாம் தூக்கத்தைவிடக் கடமைதான் அவனுக்குப் பெரிதாய்த் தோன்றும். இப்பொழுது அப்படியில்லை கடமையைவிடத் தூக்கம்தான் பெரிதாய்த் தோன்றிற்று.

'தென்னை மரத்தில் எவனோ ஏறித் தேங்காயைத் திருடுகிறான்!' என்று யார்தான் எவ்வளவு உச்சஸ்தாயியில் இப்பொழுது கூச்சல் போடட்டுமே! ஊஹூம், இருளப்பன் அதை காதில் போட்டுக் கொள்வதே கிடையாது. என்ன முழுகிப் போச்சு? எவனோ இரண்டு தேங்காயைத் திருடிக்கொண்டு போனால் தான் என்ன?' என்று பெருந்தன்மையோடு பேசாமல் இருந்து விடுவான்.

* * *

ஒரு நாள் வழக்கம் போல் உதிர்ந்த ஓலைகளை முடைந்து கொண்டிருந்த போது இருளப்பனுக்கு ஒரு விசித்திரமான ஞானோதயம் உண்டாயிற்று - அடடா! இந்த ஓலைகளை யெல்லாம் முடைந்து நம்முடைய வீட்டில் கொண்டு வந்து சேர்க்கும்படி எஜமான் முதலில் நமக்குக் கட்டளை யிட்டாரா? இல்லையே! நாமேதானே இந்த வேலையைத் தலைமேல் போட்டுக் கொண்டு ஓலை நூற்றுக்கு நாலைந்து ரூபாய் என்று விற்றுக் கொடுத்தோம்? உலர்ந்த மட்டை, பாளை, பன்னாடை இவற்றையெல்லாம் கூடச் சேகரித்து எடுத்துக் கொண்டு போய் அவர் வீட்டு அடுப்பை எரிக்க உதவினோம். அவற்றைக் கொண்டு நம் வீட்டு அடுப்பையாவது எரித்தோமா? அப்படி எரிப்பது துரோகம் என்று கருதினோமே.

அதற்கெல்லாம் பலன் இதுதானா? என்னுடைய ஒரே ஒரு பெண்ணை எவனோடாவது ஓடிப்போகச் சொல்வது தானா? அட கடவுளே!

போனதெல்லாம் போகட்டும். இனிமேல் அப்படியெல்லாம் செய்யக் கூடாது. உலர்ந்த மட்டை மண்ணாங்கட்டியை எல்லாம் எஜமானுக்குத் தெரியாமல் எடுத்துக் கொண்டு போய் நம் வீட்டு அடுப்பை எரிக்க உபயோகித்துக் கொள்ள வேண்டும் - கட்டை வாங்கும் காசாவது மிச்சமாகாதா? அப்புறம் இந்த உதிர்ந்த ஓலைகளை யெல்லாம் சேர்த்துக் கட்டி சுருட்டி வைத்திருந்து வேலியின் எந்த மூலையிலாவது ஓர் இரகசிய வழியைச் செய்து அந்த வழியண்டை தினசரி பொழுது சாய்ந்ததும் கேதாரியை வந்து ஓலைக் கட்டைத் தூக்கி வைத்து நம் வீட்டுக்குக் கொண்டு போகச் சொல்ல வேண்டும்.

இப்படியாகக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கொண்டு போய்ச் சேர்த்தால் தான் மாதத்தில் நூறு ஓலையாவது சேர்ந்து விடாதா? சமயம் நேரும்போதெல்லாம் அவற்றை முடைந்து போட்டு வைத்தால் யாராவது வந்து வாங்கிக் கொண்டு போகிறார்கள்!

அந்தப் பணத்தைக் கொண்டே அடுத்த தை மாதத்துக்குள் கேதாரிக்குக் கல்யாணம் செய்து வைத்து விடலாம் போலிருக்கிறதே! நல்ல யோசனை தான்; ஆனால் எஜமானுக்குத் தெரிந்தால்?

எப்படித் தெரிந்து விடும்? நான்தானே காவற்காரன்? வேலைக்காரன் நினைத்தால் எஜமானை ஏமாற்ற முடியாதா என்ன? பேருக்கு ஒன்றிரண்டு ஓலைகளைக் கொண்டு போய் அவருடைய வீட்டில் சேர்ப்பது! ''இவ்வளவு தானா?'' என்று கேட்டால், ''ஆமாம் சாமி!'' என்கிறது. அதற்கு மேலும் கேட்டால் சாக்குத்தானா சொல்ல முடியாது? ''காற்றடிச்சாத்தானே?'' என்கிறது ஒருநாள்; ''சாப்பிடப் போயிருந்தேன்; யாரோ எடுத்துக்கிட்டுப் போயிட்டாங்க! என்கிறது இன்னொரு நாள். இப்படியே எஜமானை ஏமாற்றி வந்தால் போகிறது!

* * *

இம்மாதிரி முடிவுக்கு இருளப்பன் வந்த மறு மாதம் மண்ணையும் பொன்னையும் மணியையும் மறந்து, முத்தண்ண முதலியார் மறு உலகத்திற்குப் பிரயாணமாகி விட்டார். அப்பாவின் ஸ்தானத்தை அவருடைய ஏகபுத்திரன் தீனதயாளன் அலங்கரித்தான்.

சுபாவத்தில் பெயருக்கு நேர் விரோதமாயிருப்பது தான் உலக இயல்பு. அந்த இயல்புக்குத் தீனதயாளன் மாறுபட்டிருந்தது ஆச்சரியமான விஷயமே!

இதற்குக் காரணம் அவனுடைய அப்பாவைப் போல் அவன் தன்னைப் பற்றி மட்டும் சிந்திக்காமல் பிறரைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தான்!

பிறந்த வேளை, தலையெழுத்து, கர்ம பலன், விதி என்றெல்லாம் ஏழைகளை ஏய்க்கும் பணக்காரர்களைக் கண்டால் தீனதயாளனுக்குப் பிடிக்காது. எடுத்ததற்கெல்லாம் 'காரணம் கடவுள் தான்' என்று கூறுபவர்களைக் கண்டாலும் அப்படித்தான்!

பணம் படைத்த மகானுபாவர்கள் கடவுளையும் கர்ம பலனையும் கொஞ்சம் மறந்துவிட்டு, தங்கள் சொந்த முயற்சியினாலேயே ஏழை மக்களின் துயரத்தை ஒருவாறு நீக்கலாம் என்பது அவனுடைய திடமான நம்பிக்கை.

இத்தகைய லட்சிய புருஷனின் கண்ணில் தான் ஒரு நாள் கேதாரி பட்டு விட்டாள். அதுவும் எந்த நிலையிலே? அவனுடைய தோப்பின் ஓலையைத் திருடிக் கொண்டு போகையிலே!

''ஓஹோ! - இப்படி எத்தனை நாளா?''

கேதாரி திடுக்கிட்டு நின்றாள். ஒரு நிமிஷம் அவளுடைய உடம்பு நடுங்கி ஓய்ந்தது. மறு நிமிஷம் ஏதோ எண்ணித் துணிந்தவளாய், தலைமீதிருந்த ஓலைக் கட்டை இறக்கிக் கீழே வைத்தாள். இடுப்பின் மீது ஒரு கையை ஊன்றிக் கொண்டு எஜமானை நோக்கி, 'உங்க அப்பா என்னை எவனையாச்சும் இழுத்துக்கிட்டுப் போகச் சொல்லி எத்தனை நாளோச்சோ, அத்தனை நாளா!'' என்றாள்.

தீனதயாளனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவன் ஒருவாறு சமாளித்துக் கொண்டு ''அதற்கு.....'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

''......நான் இந்த ஓலையை இழுத்துக்கிட்டுப் போறேன்!'' என்றாள் கேதாரி.

தீனதயாளனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்றாலும் ''இது நியாயமா?'' என்று கேட்டு வைத்தான்.

''நியாயமில்லைதான்! ஆனா ஊரிலே உழைக்கிறவங்களுக்கு ஒரு நியாயமாயும், அவங்க உழைப்பிலே வயிறு வளர்க்கிறவர்களுக்கு இன்னொரு நியாயமாயுமிருக்குதே, அதுக்கு நாங்க என்ன பண்ணுவது? அவங்களைப் போல நாங்களும் கொஞ்சம் வாழணுமில்லே;''

''அதற்குத்தான் நாங்கள் மாதா மாதம் சம்பளம் கொடுக்கிறோமே?''

''நல்லாச் சொன்னீங்க; சம்பளம் நாங்கள் வாழறதுக்கா....ஹூம்...!'' என்று சொல்லி, அவள் கடகடவென்று நகைத்தாள்.

அந்தச் சிரிப்பு தீனதயாளனின் உடம்பை என்னவோ செய்தது. அவன் விழித்தான்.

கேதாரி மேலும் சொன்னாள்:-

''என்னமோ, உங்களுக்கு உழைக்க எங்களுக்கு உசிரு இருக்க வேணுமில்லே? அதுக்காக சம்பளம் கொடுக்கிறீங்க! நாங்க வாழவா சம்பளம் கொடுக்கிறீங்க? அப்படிக் கொடுக்கிறதுன்னா நாங்கள் ஏன் இப்படித் திருடறோம்?''

''திருடி யாராவது மானத்தோடு வாழ முடியுமா?''

''எவனையாச்சும் இழுத்துக்கிட்டுப் போய் யாராச்சும் மானத்தோடு காலந்தள்ள முடியுமா?''

''சரியாப் போச்சு! நாளையிலிருந்து அந்தத் தோப்புக்கு வேறு ஆளைத்தான் காவலாகப் போட வேண்டும் போலிருக்கிறதே!''

''வேறே ஆளைக் காவலாப் போட்டா மட்டும் போதுமா, சாமி! அவங்க மேலே உங்களுக்குக் கொஞ்சம் அன்பும் இருக்கட்டும். அப்போது தான் அவங்க உங்களுக்கு நாய் மாதிரி உழைச்சிக்கிட்டு இருப்பாங்க! நாங்ககூட முன்னெல்லாம் அப்படித்தானே உழைச்சிக்கிட்டு இருந்தோம்? இப்போ உங்க அப்பாவாலேதானே இந்த வழிக்கு வந்தோம்?''

இதைக் கேட்ட தீனதயாளனுக்கு என்ன தோன்றிற்றோ என்னமோ, 'பலே! நீ கெட்டிக்காரிதான் போ!' என்று ஓலைக் கட்டைத் தூக்கி மீண்டும் அவள் தலைமேல் வைத்தான்.

''எங்கே போவது?'' என்று கேட்டாள்.

''உன்னுடைய அப்பாவிடம். நான் அன்பு வைத்தால் நீ இந்த ஓலைக் கட்டுடன் எங்கே போவாயோ அங்கே போ!'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே போய் விட்டான் தீனதயாளன்.

கேதாரியும் குறிப்பறிந்து ஓலைக்கட்டைக் கொண்டு போய் எஜமான் வீட்டில் சேர்த்துவிட்டு வந்தாள்.

* * *

அன்றிரவு தீனதயாளனுக்கு தூக்கமே பிடிக்கவில்லை. அவனுடைய சிந்தனை யெல்லாம் அன்று மாலை தனக்கும் கேதாரிக்குமிடையே நடந்த சம்பாஷணையைப் பற்றியதாகவே இருந்தது. இருளப்பனின் மனமாற்றத்துக்குக் காரணம் என்னவென்பதை அவன் ஒருவாறு ஊகித்து உணர்ந்து கொண்டான். அதை மாற்றுவதற்குத் தான் என்ன செய்ய வேண்டும்? அதற்கு ஏதாவது வழி உண்டா?

சிறிது நேரம் சிந்தித்துப் பார்த்தான். கடைசியில் ஒரு முடிவுக்கும் வந்து விட்டான்.

''ஆமாம் அப்படித் தான் செய்யவேண்டும். அதற்குக் குறுக்கே கடவுளும் நிற்கமாட்டார்; கர்மபலனும் நிற்காது!'' என்று தனக்குத் தானே அவன் சொல்லிக் கொண்டான்.

அதே மாதிரி, கேதாரியின் பேச்சைக் கேட்ட இருளப்பனுக்கும் அன்றிரவு தூக்கமே பிடிக்கவில்லை. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி அவன் இப்படியும் அப்படியுமாகப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான்.

இவர்களுக்காக இரவு காத்திருக்குமா என்ன? அது போயே போய்விட்டது. பொழுதும் புலர்ந்துவிட்டது. இருளப்பன் விடிந்ததும் விடியாததுமாக விழுந்தடித்துக் கொண்டு எஜமான் வீட்டுக்கு ஓடி வந்தான்.

''சாமி, தெண்டங்க!'' என்று எஜமானுக்கு முன்னால் நெடுமரம் போல் விழுந்து எழுந்து நின்றான். ''ஏழையை மன்னிச்சுடுங்கோ!'' என்று கண்ணீரும் கம்பலையுடன் வேண்டிக் கொண்டே மடியை அவிழ்த்தான். அதிலிருந்து இருபத்தைந்து ரூபாயை எடுத்து எஜமான் வீட்டுத் திண்ணையின் மேல் வைத்து, ''என் மவ கண்ணாலத்துக்காக உங்க ஓலையைத் திருடி நான் இதுவரை சேர்த்து வச்சிருந்த தொகை இவ்வளவு தானுங்க!'' என்றான்.

யார், யாரை மன்னிப்பது? திருடியவன் இருளப்பன் தான். ஆனால் அவனைத் திருடத் தூண்டியவர் யார்? - சந்தேகமென்ன? நம்முடைய அப்பாதான்! - இப்படி எண்ணிக் கொண்டே தீனதயாளன் அந்த ரூபாயை எடுத்து மீண்டும் இருளப்பன் மடியில் போட்டான். உள்ளே சென்று இன்னும் இருபத்தைந்து ரூபாயை எடுத்து வந்து அவன் மடியில் வைத்தான்.

''என்ன இருளா! கேதாரியின் கல்யாணத்துக்கு இவ்வளவு ரூபாய் போதுமா?''

''என்ன எசமான், கேலி பண்றீங்க...?''

''இல்லை இருளா! நிஜமாகத்தான் கேட்கிறேன்!''

இப்பொழுதும் இருளப்பனால் நம்ப முடியவில்லை. ''போதும் எஜமான்...!'' என்று இழுத்துக் கொண்டே சொல்லி வைத்தான்.

''சரி போ!'' இனிமேல் நீயும் உன்னைச் சேர்ந்தவர்களும் திருடாமலிருப்பதற்கும் என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும் எந்த விதத்திலும் வஞ்சிக்காமலிருப்பதற்கும் நான் ஒரு திட்டம் போட்டிருக்கிறேன். அதையும் இப்போதே கேட்டுக் கொண்டு போ! நீ வேலை பார்க்கும் அந்தத் தென்னந் தோப்பு இனி எனக்கு மட்டும் சொந்தமல்ல; உனக்கும் சொந்தம். அதில் வரும் வரும்படியில் எனக்குள்ள பங்கு உனக்கும் உண்டு. இந்தத் திட்டம் உனக்கு மட்டுமல்ல; உன்னுடன் சேர்ந்த மற்ற தோட்டந் துரவுகளில் வேலை பார்க்கும் எல்லோருக்கும்!''

இப்படிச் சொல்லும் போது தீனதயாளனின் உள்ளத்தில் அன்பு வெள்ளம் கரை புரண்டது. அதைக் கேட்ட இருளப்பனின் உள்ளத்தில் ஆனந்த வெள்ளம் பெருக்கெடுத்தது.

''எசமான்!....எசமான்!'' என்று நாத்தழுதழுக்கக் கூறிக்கொண்டே இரு கரங்களையும் நீட்டிய வண்ணம் எஜமானை நெருங்கினான்.

அடுத்த நிமிஷம் அவனுடைய நீட்டிய கரங்களின் நடுவிலே தீனதயாளன் விழுந்துவிட்டான்!

அன்பின் ஆனந்தத்தில் தங்களை மறந்த அவர்களின் முன்னால், தீண்டாமை அரக்கன் கூடத் தலைகாட்டவில்லை.

''...எசமான்! இத்தனை நாளும் நான் சாகப் பிறந்தவன்னு நெனைச்சிருந்தேன் எசமான்....!'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்த இருளப்பன், மேலே சொல்ல முடியாமல் திணறினான்.

''ஆமாம், இருளா! இனி நீ சாகப் பிறந்தவன் அல்ல, வாழப் பிறந்தவன்!'' என்று அவன் சொல்ல வந்ததைப் பூர்த்தி செய்தான் தீனதயாளன்.

# கடவுள் என் எதிரி

அன்றொரு நாள் மாடி அறையில் தன்னந் தனியாக உட்கார்ந்து, நான் மௌனம் சாதித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது முன்பின் தெரியாத பெண் எனக்கு முன்னால் தோன்றி விம்மி விம்மி அழுதாள்.

நான் ஒன்றும் புரியாமல் விழித்தேன்.

அவள் அழுகையை நடுவே அடக்கிக் கொண்டு, ''சிவபாதம் பிள்ளையின் புதல்வர் நீங்கள்தானே?'' என்று கேட்டாள்.

''ஆமாம்.''

''உங்கள் பெயர்?''

''சஞ்சீவி.''

''தயவு செய்து எனக்கொரு உதவி செய்ய வேணும்...''

''என்ன உதவி?''

''என் அண்ணாவை உங்களுக்குத் தெரியுமோ?''

''தெரியாதே!''

''சமீபத்தில் வங்காளப் பஞ்ச நிவாரணத்துக்காக இந்தப் பக்கம் நிதி திரட்டிக் கொண்டிருந்தாரே, அவரை உங்களுக்குத் தெரியாதா?''

''யார் அது கிருபாநிதியா?''

''ஆமாம், அவர்தான் என் அண்ணா!''

''ஓஹோ! அவரைப் பற்றி இப்பொழுது என்ன?''

''அவர் ஒரு தவறான காரியம் செய்துவிட்டார்....''

''என்ன காரியம்''

''ஒரு நாள் உங்கள் அப்பாவிடம் வந்து அவர் வங்கநிதிக்காக உதவி கோரினார்...''

''ஆமாம் அதில் என்ன தவறு?''

''அதில் ஒன்றும் தவறில்லை. அதற்குப் பிறகுதான் என் அண்ணா தவறு பண்ணிவிட்டார்!''

''என்ன தவறு?''

''உதவி கோரியதற்கு உங்கள் அப்பா ஒரே வாத்தையில் 'இல்லை' என்று சொல்லியிருக்கலாம். ஆனால் என் அண்ணாவின் கஷ்ட காலம் அவர் அப்படிச் சொல்லவில்லை. 'முதலில் உமது பஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளும்; அப்புறம் வங்கப் பஞ்சத்தைத் தீர்க்கப் பாரும்!'' என்று என் அண்ணாவின் ஏழ்மை நிலையைப் பற்றி என்னவெல்லாமோ குறை கூறினாராம். அந்த ஆத்திரத்தில் அதி தீவிரவாதியான என் அண்ணா, தன் சகாக்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு அன்றிரவே உங்கள் வீட்டுக் கஜானாவில் கையை வைத்துவிட்டார். களவாடிய பணத்தை மேற்படி நிதிக்கும் அனுப்பி வைத்துவிட்டார். இப்பொழுது உங்கள் அப்பா கொடுத்த தகவலின் பேரில் போலீசார் என் அண்ணாவைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். எந்த நிமிஷத்திலும் அவர்கள் அண்ணாவைக் கைது செய்யலாம். எனக்கோ அவரைப் பிரிந்தால் வேறு நாதி கிடையாது. இதற்கு நீங்கள் நான் ஏதாவது உதவி செய்ய வேணும்.''

ஒரு நிமிஷம் நான் யோசித்துப் பார்த்தேன். அவளுடைய அண்ணா வங்க நிதிக்கு உதவி கோரிய அன்று நானும் அதற்காக என் அப்பாவிடம் உதவி கோரி, வேண்டிய வசவு வாங்கியிருந்தேன். இந்தச் சம்பவம் என் கவனத்துக்கு வந்ததும், அதைக் காரணமாக வைத்துக் கொண்டு நான் அவளுக்கு உதவி செய்வதென்று தீர்மானித்தேன். ஆகவே நான் அவளைப் பார்த்து, ''இப்படியே உன் அண்ணாவைத் தலைமறைவாக இன்னும் இரண்டு நாட்கள் இருக்கச் சொல்லு; நான் எப்படியாவது அவரை அந்த ஆபத்திலிருந்து தப்புவிக்கிறேன்'' என்றேன்.

''உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு?'' என்று அவள் எனக்குத் தலை வணங்கிவிட்டுத் திரும்பினாள்.

''உன் பெயர்?'' என்றேன்.

''கோதை!'' என்றாள்.

* * *

**கோதை!**.....கண்டதும் என் உள்ளத்தில் கோயில் கொண்டு விட்டாள். நானும் அந்த நிமிஷமே கற்பனை உலகில் அவளுடன் சஞ்சரிக்க ஆரம்பித்து விட்டேன்.

அவள் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே 'ஓடு ஓடு' என்று ஓடுகிறாள். ''கோதை, கோதை!'' என்று கூவிக்கொண்டே நானும் அவளுக்குப் பின்னால் ஓடுகிறேன்.

கடைசியில் அவள் கரமும் என் கரமும் இணைகின்றன.

அங்கே ஒரு பூந்தோட்டம், எத்தனை விதமான கொடிகள்; எத்தனை விதமான செடிகள்! - மலர்களுக்கு மட்டுமா இயற்கை அழகை அளித்திருக்கிறது? இலைகளுக்குக்கூட அல்லவா அழகை அளித்திருக்கிறது!

ஆஹா! அழகைக் கண்டு மயங்காத உயிர் எது? அதிலும் காதலுக்கே புருஷன் சௌந்தரிய தேவன் தானே? எனவே அழகுத் தெய்வத்தின் ஆலயம் போல் விளங்கும் அந்தத் தோட்டத்திற்குள் நாங்கள் நுழைகிறோம். பச்சைப் பசேரென்று இருக்கும் புற்றரை எங்களை 'வா வா!' என்று வருந்தி அழைக்கிறது. நாங்கள் 'கலகல' வென்று சிரித்துக் கொண்டே அதில் உட்காருகிறோம்.

உடனே - கொஞ்சல் - குலாவல் - பிணக்கு எல்லாம்!

''இந்த உலகிலேயே நீதான் அழகி!'' என்று நான் அவளைப் பார்த்துச் சொல்கிறேன். ''இந்த உலகிலேயே நீதான் அழகன்!'' என்று அவள் என்னைப் பார்த்துச் சொல்கிறாள்.

மறுநாள் நினைத்துப் பார்த்தால் சிரிப்புச் சிரிப்பாய் வருமே என்று கூட எண்ணாமல் நாங்கள் அப்பொழுது என்னவெல்லாமோ பிதற்றிக் கொள்கிறோம்.

அதற்குள் பொழுது சாய்ந்துவிடுகிறது. அத்தனை அவசரமாக மேற்குத் திசையில் மறைந்துவிட்ட ஆதவனைச் சபித்துக் கொண்டே நாங்கள் வீடு திரும்புகிறோம். திரும்பும் போது இன்னதென்று சொல்ல முடியாத ஓர் இன்பம்; எதெற்கென்று தெரியாத ஒரு சிரிப்பு. மனதில் தன்னை மறந்த ஒரு மகிழ்ச்சி; அச்சத்திலும் ஓர் ஆனந்தம்! - ''மது மறைந்துண்டவன் மகிழ்ச்சிபோல்!'' என்று உவமை சொல்லிய கவி, கள்ளக் காதலை எவ்வளவு தூரம் அனுபவித்திருக்க வேண்டும்?

அப்புறம் கல்யாணப் பேச்சு ஆரம்பமாகிறது; ஜாதகம் பார்க்கிறார்கள்; முகூர்த்தம் குறிக்கிறார்கள்; பத்திரிக்கை போடுகிறார்கள்; பந்து மித்திரர்களுக்கு அனுப்புகிறார்கள்; பந்தலும் போடுகிறார்கள்.

மேளக்காரன் வெளுத்து வாங்குகிறான்; நாதஸ்வரக்காரன் ஜமாய்க்கிறான்; சாப்பாட்டுச் சண்டைக்கு முன்னால் நடக்கும் சம்பந்திச் சண்டைக்கு இடையே நான் அவளுக்கு மாலையிடுகிறேன்.

''இனிமேல் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து போகும் அதிகாரம் நமக்குக் கிடையாது. அந்த அதிகாரம் எமனுக்குத்தான்!'' என்று சட்டத்தை நாங்களே சிருஷ்டித்துக் கொண்டு அதை வாழ்க்கையில் பின்பற்றுவது என்றும் தீர்மானித்து விடுகிறோம்.

இத்தனையும் இரண்டே நிமிஷங்களில் என் கற்பனை உலகில் நடந்தேறி விடுகின்றன! அப்புறம் நான் அவளை எப்படி மறப்பது? - அவளுக்காக எதையும் செய்யத் தயாராகி விடுகிறேன்.

அவளுக்காக அவள் அண்ணா செய்த குற்றத்தை நாமே செய்ததாக ஒப்புக் கொள்ள வேண்டும். அப்பா கண்டிப்புக்காரர் தான் என்றாலும் போலீஸ் லாக்-அப்பில் நம்மைப் பார்த்ததும் அவர் மனம் இரங்கி விடும். மன்னித்து விடுவார். அப்புறம் கோதையைப் பற்றி அவரிடம் சொல்ல வேண்டியது. அவளை எப்படியாவது கல்யாணம் செய்து கொண்டு ஜம்மென்று வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டியது.

சரி, தீர்மானித்தாகிவிட்டது. இன்றே செய்துவிட வேண்டியது தான்!

அன்றே செய்தும் விட்டேன். ஆனால் என்ன ஏமாற்றம்?

என் அப்பாவைப் பற்றி நான் என்ன நினைத்தேன்? கடைசியில் நீதிமன்றத்தில் நான் நிறுத்தி வைக்கப்பட்ட போது அவர் என்ன சொன்னார்?

''என் பிள்ளையாயிருந்தால் மட்டும் என்ன? அயோக்கியனுக்கு நான் ஒரு போதும் அநுதாபம் காட்டமாட்டேன்!''

என்ன ஈரமில்லாத நெஞ்சம்?

முடிவு என்ன? சிறைவாசம் ஏற்றுக்கொண்டேன்; அநுபவித்தேன்.

ஆனால், அப்படி அநுபவித்ததிலும் நான் துன்பத்தைக் காணவில்லை; இன்பத்தைத் தான் கண்டேன்.

அதற்குக் காரணம் கோதை தான் என்று சொல்லவும் வேண்டுமா?

* * *

அவள் அண்ணா கிருபாநிதி எனக்கு அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டிருந்தான். அவை யெல்லாம் வெறும் கடிதங்கள் தானா?

கிடையவே கிடையாது. அவனுடைய உணர்ச்சி மிகுந்த உள்ளத்தின் படங்கள்!

அவன் எழுதிய கடிதங்களில் ஒரே ஒரு கடிதத்தை மட்டுந்தான் நான் படித்தேன். பாக்கியைப் படிக்கவில்லை.... ஏன் தெரியுமா?

அவற்றைப் படித்தால் என் ஆசைத் தீ அளவில்லாமல் மூண்டுவிடும்; அதை அடக்கச் சக்தியற்று நான் சிறையிலிருந்து தப்பி ஓட முயல்வேன்; அதிகாரிகள் என்னைச் சுட்டுக் கொன்றுவிடுவார்கள்; அப்புறம் நான் இந்த ஜன்மத்தில் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள முடியுமா?

அப்பாவைப் பற்றி எவ்வளவோ சொல்லலாம்; ஆனால்...அவரைப் பற்றி எனக்கென்னமோ ஒன்றும் சொல்ல மனமில்லாமலிருக்கிறது.

கடைசியில் விடுதலை; விழுந்தடித்துக் கொண்டு என் உயிர் இருக்கும் இடத்தைத் தேடி ஓடி வந்தேன்.

கோதை இன்னதென்று தெரியாத ஒதோ ஒரு வியாதியால் இறந்து விட்டாள் என்று சேதி!

''இதைப்பற்றி எனக்கு ஏன் முன்னமேயே தெரிவிக்கவில்லை?'' என்று நான் கிருபாநிதியைக் கேட்டேன்.

''அதனால் உமக்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்று பயந்தேன்'' என்றான் அவன்.

அட, பாவி!

* * *

அதென்ன வியாதி? அன்பே அவளைக் கொன்று விட்டதா?

அப்படியானால் ஆண்டவன் என்ன செய்வான்?

ஆமாம், எனக்காக அவளைக் காப்பாற்றி வைக்காத அவன் என் எதிரிதான்!

அன்று மட்டும் அல்ல; இன்றும்; என்றும்!

# ஏழையின் குற்றம்

சித்திரம் சிற்பம், நடனம், நாட்டியம் முதலிய கலைகளைச் சிலர் தங்கள் குல வித்தையாகக் கொண்டிருக்கிறார்களல்லவா? அதுபோலக் கூலிப் பிழைப்பைத் தன் குல வித்தையாகக் கொண்டிருந்தான் சின்னசாமி. அவன் அப்பன், பாட்டன், அந்தப் பாட்டனுக்குப் பாட்டன் எல்லாம் சீதாராமச் செட்டியாரின் முன்னோர்களிடம் பரம்பரை பரம்பரையாகவே கூலி வேலை பார்த்தவர்கள்.

செட்டியார் கடைக்கு வந்து இறங்கியதும் அரிசி மூட்டை, சர்க்கரை மூட்டை முதலியவைகளை யெல்லாம் சின்னசாமி கடை வாசலிலிருந்து தன் முதுகில் சுமந்து கொண்டு போய்க் கடை உள்ளில் அடுக்குவான். மூட்டைக்குக் காலணா வீதம், எந்தக் காலமா யிருந்தாலும் சரி - அதாவது, யுத்தக் காலமா இருந்தாலும் சரிதான்; சமாதானகாலமாயிருந்தாலும் சரிதான் - எண்ணிக் கொடுத்து விடுவார் செட்டியார். ஆனால், என்றைக்காவது ஒரு நாள் சின்னசாமி அறுபத்து நாலு மூட்டைகளுக்குமேல் தூக்கி அடுக்கிவிட்டு, ஒரு ரூபாய்க்கு மேல் கூலி வாங்க வந்துவிட்டால் செட்டியாரின் கண்களிலிருந்து ஏனோ இரண்டு சொட்டுக் கண்ணீர் கீழே விழும்.

இந்தத் துக்க நிவர்த்திக்காக, அந்தக் கூலியிலிருந்து திருப்பதி தேவஸ்தானத்தின் தர்ம உண்டிக்கென்று செட்டியார் இரண்டணாவைப் பலவந்தமாக எடுத்துக் கொள்வார். ''இகலோகத்திலுள்ள தன்னுடன் சமத்துவமாக வாழாவிட்டாலும் பரலோகத்திலாவது வாழட்டுமே!'' என்பது செட்டியாரின் பரந்த நோக்கம்.

* * *

வழக்கம் போல் அன்றும் இரவு பத்து மணிக்குப் பிறகு, ''நான் போயிட்டு வரேனுங்க!'' என்றான் சின்னசாமி.

''என்னடா, இத்தனை சீக்கிரம்?'' என்று கேட்டார் செட்டியார்.

''இனிமேத்தான் என் கூலியை எடுத்துக்கிட்டு போய் ஏதாச்சும் வாங்கிக் கஞ்சி காய்ச்சிக் குடிக்கணும். அவவேறே காத்துக்கிட்டுக் கிடப்பா. குழந்தைங்க வேறெ அழுதுக்கிட்டு இருக்கும்!''

''அதற்கு நீ வேலை பார்க்கக் கூடாது; வீட்டிலேயே அடைந்து கிடக்கணும்!''

''கோவிச்சுக்காதீங்க, சாமி! இன்னும் ஏதாச்சும் வேலையிருந்தாச் சொல்லுங்க; செஞ்சிட்டுப் போறேன்!''

''சரிதான்; இந்த அரிசி மூட்டையை எடுத்துக்கிட்டுப் போய் நம்ம வீட்டிலே போட்டுவிட்டுப் போடா!'' என்று சொல்லி, அன்றைய கூலி ஆறணாவை எடுத்து அவனிடம் கொடுத்தார் செட்டியார்.

இப்படிக் கூலி கொடுக்கும்போதெல்லாம் செட்டியார் தினசரி தம் வீட்டு வேலை ஏதாவதொன்றைச் சின்னசாமிக்கு இடுவது வழக்கம். இந்த வேலைக்குக் கூலி கிடையாது; கூலி கொடுக்கும் வேலைக்கு இவையெல்லாம் 'கொசுறு' வேலைகள்.

* * *

செட்டியார் ஜன்மம் எடுத்துத் தாம் விரும்பிய எத்தனையோ காரியங்களை இதுவரை சாதித்துக் கொண்டிருக்கிறார். ஆனால், ஒரே ஒரு காரியம் மட்டும் இன்னும் கைகூடவில்லை. அதாவது, தம்முடைய பெயர் வெறும் 'சீதாராமச் செட்டியார்' என்றிருப்பதைவிட, 'ராவ்பகதூர் சீதாராமச் செட்டியார்' என்று இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று அவர் அல்லும் பகலும் அனவரதமும் கனவு கண்டுகொண்டு வந்தார். ஆனால், அதற்கு வேண்டிய முயற்சிகள் செய்வதற்குக் கையில் போதிய பணம் இல்லாமலிருந்தது.

இந்தக் குறையையும் நிவர்த்தி செய்து கொள்வதற்கு யுத்தம் என்று ஒன்று வந்து சேர்ந்தது. தான் மட்டும் வந்தால் போதாதென்று அது 'கட்டுப்பாடு' என்றொரு தோழனையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு வந்தது. அதைக் காரணமாக வைத்துக்கொண்டு செட்டியார், தம்முடைய கடையை 'கறுப்பு கடை'யாக மாற்றி விட்டார்.

அவ்வளவுதான்; அவருடைய பணப் பஞ்சம் இருந்த இடம் தெரியாமல் பறந்தது. முகத்திலும் அலாதிக் களை வீசிற்று. தன்னைப் போன்ற பெரிய மனிதர்களின் சிநேகத்தால் சுண்டெலியாயிருந்த அவர் பெருச்சாளியானார். அப்புறம் சந்தர்ப்பத்தைத் தானே சிருஷ்டித்துக் கொண்டு கண்ட இடங்களிலெல்லாம் கூட்டத்தைக்

கூட்டி, ''ஐயோ, ஏழைகள்! ஐயோ, ஏழைகள்!'' என்று அலற ஆரம்பித்தார். அவருடைய 'கூச்ச'லைக் கேட்டுக் கோஷம் செய்ய ஒரு சிறு கும்பலும் சேர்ந்தது. அப்புறம் கேட்க வேண்டுமா? தாலுகா போர்டு மெம்பரானார்; பாங்கின் டைரக்டரானார்; பல கம்பெனிகளின் கூட்டு முதலாளியானார்; யுத்தக் கமிட்டியின் தலைவரானார்; கவர்னர் துரையை அடிக்கடி நெருங்கினார். இதனாலெல்லாம் அவருடைய 'கறுப்பு மார்க்கெட்' விஷயம் அதிகாரிகளின் காதில் விழாமல் போயிற்று. தப்பித் தவறி விழுந்தாலும் அந்த விஷயம் அவர்கள் காதுக்கு எட்டாமல் போயிற்று!

* * *

செட்டியாரின் நிலை இப்படி யென்றால் சின்னசாமியின் நிலை வேறாயிருந்தது. அவனுக்கு அஞ்சலை என்றொரு தங்கை. பிரசவத்துக்காக அவள் தன்னுடைய அண்ணன் வீட்டுக்கு வந்திருந்தாள். குழந்தை பிறந்து ஆறு மாதங்களாகி விட்டது. அவள் கணவன் தன் மனைவியை அனுப்பி வைக்கும்படி அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டிருந்தான். தாயும் பிள்ளையுமாக வெறுமனே எப்படி அனுப்பி வைப்பது? அந்தக் குழந்தையின் கால்களுக்கு ஒரு ஜதை வெள்ளிக் காப்புக்களாவது வாங்கிப் போட வேண்டும்; அஞ்சலைக்கு ஐந்து ரூபாயிலாவது ஒரு புடவை எடுத்துக் கொடுக்க வேண்டும்; இவை கூட இல்லாமல் சென்றால் அஞ்சலையின் மாமியார் சும்மா இருப்பாளா?

ஆனால், அவற்றிற்கெல்லாம் குறைந்தது பத்து ரூபாயாவது வேண்டுமே? - இதுதான் சின்னசாமியின் தற்சமயக் கவலை, லட்சியம், மனோரதம், எண்ணம், ஆசை எல்லாம்!

இந்தக் குறையை நிவர்த்தி செய்து கொள்வதற்காக அவன் என்னவெல்லாமோ யோசனை செய்து, கடைசியில் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டான். அந்தத் தீர்மானத்தின்படி, தான் மாலை வேளையில் வழக்கமாகத் தேநீர் அருந்தும் கடைக்குச் சென்று, ''என்ன, நாயர்! சர்க்கரை ஏதாச்சும் வேணுமா?'' என்று கேட்டான்.

''இருந்தா இப்பவே கொடு, அப்பேன்! வீசை ஒரு ரூபாய்க்கு வாங்கிக்கிறேன்!'' என்றான் நாயர்.

''தினசரி ஒரு வீசை சர்க்கரை; விலை ஒரு ரூபாய். பத்து நாட்களுக்குக் கொண்டு வந்து கொடுத்தால் பத்து ரூபாய். அடே, அப்பா! போதுமே நமக்கு!

* * *

சின்னசாமி, தன் தங்கை அஞ்சலையின் வாழ்க்கை நலனுக்காகத் திருட்டுத் தொழிலில் பிரவேசித்து அன்று பத்தாவது நாள். பொழுது விடிந்ததும் பல்லை துலக்கிக் கொண்டு நெற்றியில் ''சிவனே!'' என்று உச்சரித்தவண்ணம் விபூதி அணிந்து கொண்டான். கிழக்குத் திக்கை நோக்கி ஒரு முறை கைகூப்பிவிட்டு, அடுப்பங்கரைக்குச் சென்று உட்கார்ந்தான். பழைய சாதம் இருந்த பானையை எடுத்துக் கொண்டு, அவனுக்கு எதிரே வந்து உட்கார்ந்தாள் அவன் மனைவி. அவள் கையிலிருந்த இரண்டு பச்சை மிளகாய்களைத் தன் இடது கையில் பெற்றுக் கொண்டான் சின்னசாமி. அந்த மிளகாய் தான் ஏழைச் சின்னசாமிக்குப் பருப்பு, நெய், பொறியல், அவியல், கூட்டு எல்லாம். கையில் பழைய சாதத்தைப் பிழிந்து வைத்துக் கொண்டே, ''மறந்துட்டேன், நேத்து ஒரு கடிதாசு வந்திச்சு, அதிலே பொங்கலுக்கு இன்னும் நாலு நாள் தான் இருக்குது; அனுப்பினா அதுக்குள்ளே அஞ்சலையை அனுப்புங்க, இல்லாட்டி அந்தப் பெண்ணே எனக்கு வேணாம்'னு எழுதியிருக்காங்களாம்!'' என்றாள் அவன் மனைவி.

அதற்காக ஏற்கனவே தான் திருட்டுச் சர்க்கரை வியாபாரத்தில் இறங்கியிருப்பதைப் பற்றி அவன் தன் மனைவியிடம் ஒன்றுமே சொல்லவில்லை. அவளிடம் அதைச் சொல்ல அவனுக்கே வெட்கமாயிருந்தது. இப்பொழுதும் அதை மனதில் வைத்துக் கொண்டே, ''அதற்கென்ன, நாளைக்கே எப்படியாச்சும் அனுப்பி வச்சுடலாம்!'' என்றான்.

அவன் நினைத்தது இப்படி; ஆனால் தெய்வம் நினைத்ததோ? - அதற்குத்தான் நாம் நினைப்பது போல் நடக்கத் தெரியாதே!

* * *

செட்டியாரின் திருட்டு வியாபாரத்தை எத்தனையோ நாட்களாகக் காத்து வந்தவரும், சின்னசாமியின் திருட்டுத் தொழிலுக்கு ஒன்பது நாட்கள் துணையாயிருந்தவருமான கடவுள் பத்தாவது நாள் மட்டும் கறுப்பு மார்க்கெட்டின் மூலம் பணக்காரரான செட்டியாரை விட்டு விட்டு, ஏழைச் சின்னசாமியை மட்டும் ஏனோ காட்டிக் கொடுத்து விட்டது.

கடைசியில் என்ன? மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் நீதிநெறியைக் கஞ்சிக்கில்லாத நிலையிலும் காப்பாற்றி வரும் போலீசாரிடம் அவன் ஒப்படைக்கப்பட்டான்.

அவன் மனைவி மக்களும், தங்கையும் இந்தச் செய்தியை முதலில் நம்பவே இல்லை. என்றைக்கும் திருடாதவன், இன்று திருடினான் என்றால்? - அவர்கள் நம்பினாலென்ன, நம்பாவிட்டாலென்ன? சின்னசாமியை நம்பியிருந்த அவர்கள் நடுத்தெருவில் நிற்க நேர்ந்து விட்டது.

* * *

இந்தச் சம்பவம் நடந்த ஒரு வாரத்திற்குப் பிறகு ஒரு நாள், செட்டியார் தினசரியைப் பிரித்து, அதில் வெளியாகியிருந்த புது வருஷப் பட்டங்களை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய ஆசை நிராசையாய்ப் போய்விடவில்லை. அவருக்கும் 'ராவ்பகதூர்' பட்டம் கிடைத்திருந்தது.

அந்தச் செய்திக்குப் பின்னாலிருந்த இன்னொரு செய்தியும் அவருடைய கவனத்தைக் கவர்ந்தது. அது சின்னசாமிக்கு ஆறு மாதம் சிறைவாசம் கிடைத்த செய்தி தான்!

பணம் படைத்த செட்டியார் செய்ததும் குற்றந்தான்; ஏழை சின்னசாமி செய்ததும் குற்றந்தான்! ஆனால் பலன்?

# இன்ப துன்பம்

**திருச்சி 4-5-43**

*அன்புள்ள ஹம்ஸா!*

*நீ என்னுடன் இரண்டு நாட்கள் தங்கி யிருந்த போதே உன் முகத்தில் ஒருவிதமான ஆச்சரிய பாவம் குடி கொண்டிருந்ததை நான் பார்த்தேன். ஆனால் அந்த ஆச்சரியத்திற்குக் காரணம் என்னவென்று எனக்கு அப்பொழுது தெரியவில்லை. இப்பொழுது உன் கடிதத்தைப் பார்த்தபோது தான் அந்தக் காரணம் எனக்குத் தெரிந்தது.*

*''எந்நேரம் பார்த்தாலும் ஈஸிச் சேரில் சாய்ந்து கொண்டு, எப்போதும் வாய் ஓயாமல் இருமிக் கொண்டிருக்கும் உன் கணவரை இரண்டு நாட்கள் என்னால் பார்த்துச் சகிக்க முடியவில்லையே. அவரை இரண்டு வருஷங்களாக நீ எப்படிப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்? 'கை நிறைந்த பொன்னைவிட கண் நிறைந்த கணவனே மேல்' என்பார்கள். அப்படியிருக்க நீ எப்படி அந்த மனிதரைக் கல்யாணம் செய்துகொண்டாய்? அவருக்குச் செய்யும் சிச்ருஷை போதாதென்று அவருடைய நாலு குழந்தைகளையும் வேறு கட்டி அழுதுகொண்டிருக் கிறாயே. நிஜமாகவே நீ அவருக்கு மனைவியா யிருக்கிறாயா? அல்லது அவர் வீட்டு வேலைக்காரியா யிருக்கிறாயா? - இத்தனை கஷ்டத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் நீ எப்பொழுது பார்த்தாலும் எப்படி மலர்ந்த முகத்துடன் இருக்கிறாய்? அந்த ரகசியத்தை எனக்குச் சொல்லித் தான் தீரவேண்டும்'' என்றெல்லாம் நீ உன் கடிதத்தில் எழுதியிருக்கிறாய். இதோ, அந்த ரகசியம் என் கதையில் இருக்கிறது.*

* * *

*சென்னையில் நான் படித்துக் கொண்டிருந்தபோது எனக்கு ஒரு சிநேகிதர் கிடைத்தார். அவர் எனக்கு எப்படிச் சிநேகிதமானார். அப்புறம் எப்படிக் காதலரானார் என்பதைப் பற்றியெல்லாம் இப்பொழுது நான் சொல்லத் தயாராயில்லை; அப்படிச் சொல்வதும் அவசியமில்லை.*

*வைத்தியப் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த அவர், ஹாஸ்டல் வாசத்தை விரும்பாமல் ஒரு தனி அறை எடுத்துக் கொண்டு*

வாசஞ் செய்து வந்தார். எல்லாக் காதலர்களையும் போல நாங்களும் கடைசியில் கல்யாணம் செய்து கொள்வதென்றும், இல்லாவிட்டால் பிராணனை விடுவதென்றும் தீர்மானம் செய்து கொண்டிருந்தோம். இந்தத் தீர்மானத்தை நாங்கள் கை விடும்படியான ஒரு சந்தர்ப்பம் என் வாழ்க்கையில் நேர்ந்தது.

என்னுடைய தங்கை தவமணியை உனக்குத் தெரியும். அவள் குரூபி என்பதையும் நான் உனக்குச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. அவளுடைய கல்யாண விஷயத்தில் ஒரு தகராறு இருந்து வந்தது. அழகில்லை என்பதற்காக அவளைப் பார்க்க வந்த வரன் வீட்டுக்காரர்களெல்லாம் கண்ணை மூடிக் கொண்டு வரதட்சணை கேட்டனர். அப்படிக் கொடுத்தால் அவளுக்கு அழகு தானே வந்துவிடுமென்பது அவர்களுடைய எண்ணம் போலும்!

கடைசியில் ஒரு சம்பந்தம் வந்தது. நாலுபிள்ளைகளுக்குத் தகப்பனாரான பின் தன் மனைவியைப் பிரிந்த ஒருவர், என்னை இளையாளாக அடைய இஷ்டப்பட்டார். அதற்குச் சம்மதித்தால் அவர் தம்முடைய தம்பிக்கு என் தங்கையை வரதட்சணை யில்லாமல் கல்யாணம் செய்து வைப்பதாக வாக்களித்தார். அப்பொழுது என் தந்தை திருவாங்கூர் பாங்கியில் பணம் போட்டு மோசம் போயிருந்த சமயம். மேற்சொன்ன சம்பந்தத்தை நிராகரிப்பதா யிருந்தால் பணம் நிறையத் தேவை. அதற்கு வழியில்லாத அவர் எந்த விதமான முடிவுக்கும் வர முடியாமல் திணறி, எனக்குக் கடிதம் எழுதி என்னை அபிப்பிராயம் கேட்டிருந்தார்.

அந்தக் கடிதத்தைப் படித்ததும் நான் எந்த விதமான நிலையை அடைந்தேன் என்பது இங்கே விவரிக்க முடியாத விஷயம். ஒன்றும் தோன்றாமல் அந்தக் கடிதத்தை கொண்டு போய் அவரிடம் கொடுத்தேன். அதைப் படித்த பிறகு அவர் நடந்து கொண்ட விதம் எனக்கு அளவில்லாத வியப்பையும் திகைப்பையும் அளித்தது.

என் கண்களில் கசிந்து வரும் கண்ணீரைக் கண்டதும், ''இதென்ன பைத்தியமா உனக்கு? ஏன் அழுகிறாய்? கல்யாணமென்றால் யாராவது கவலைப் படுவார்களோ?'' என்று அவர் கேட்டார்.

இதற்கு நான் என்ன பதில் சொல்வது? பேசாமல் இருந்தேன். அவரே மேலும் தொடர்ந்து சொன்னார்:

''நான் சொல்வதைக் கேள்; என்னைக் கல்யாணம் செய்து கொண்டால் எவ்வளவு தூரம் இன்பம் அனுபவிக்க முடியும் என்று

கற்பனை செய்து கொள்வதற்குப் பதிலாக, எவ்வளவு தூரம் துன்பம் அனுபவிக்க முடியும் என்று கற்பனை செய்து பார். டாக்டரான பின் எனக்கு நிறையக் கேசுகள் கிடைத்தால் தான் ஆச்சு. இல்லாவிட்டால் துன்பத்துக்குக் கேட்க வேண்டுமா? அப்படியே கேசுகள் தான் நிறையக் கிடைக்கட்டுமே; அதனாலென்ன? துன்பந் தீர்ந்துவிடுமா? ஒரு போதும் தீராது. உன்னிடம் ஒரு நிமிஷமாவது என்னை ஒரு நோயாளியும் பேச விடமாட்டான். தூங்கும் போதுகூட, ''டாக்டர் ஸார், டாக்டர் ஸார்! ஆபத்து, ஆபத்து!'' என்று எவனாவது வந்து கதவை இடிப்பான். இரும்பு மனம் படைத்தவன்கூட அவன் இடிக்கு அசையாமலிருக்க முடியாது. எழுந்து போக வேண்டித்தான் வரும்.

''இதோ ஒரு நிமிஷத்தில் வந்துவிட்டேன்'' என்று நான் உன்னிடம் சொல்லிவிட்டுப் போவேன். ஆனால், ஒன்பது மணி நேரத்திற்குப் பிறகு தான் திரும்பி வருவேன். இம்மாதிரி சமயங்களில் உனக்கு என்மீது எவ்வளவு காதல் இருந்தாலும் அது காற்றாய்ப் பறந்துவிடும்.

''இப்பொழுது உன்னை இளையவளாக அடைய விரும்புபவர் வேலையிலிருந்து விலகிய சர்க்கார் உத்தியோகஸ்தர் என்று இந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறது. என்னை மறந்து நீ அவரைக் கல்யாணம் செய்து கொண்டால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கலாம், தெரியுமா? நாள் பூராவும் அவர் உன் பார்வையிலேயே இருந்து கொண்டிருப்பார், அதனாலென்ன, அலுப்பு ஏற்பட்டுவிடுமா? அப்படி ஏற்பட்டால் நாலு குழந்தைகள் இருக்கவே இருக்கின்றன. அவற்றின் கள்ளங் கபடற்ற சேஷ்டைகள் உனக்கு எவ்வளவோ குதூகலத்தைக் கொடுக்கும். என்னைக் கல்யாணம் செய்து கொண்டால் என் அம்மாவும் அக்காவும் செய்யும் கொடுமைகள் உனக்கு என்ன குதூகலத்தைக் கொடுக்கும்?

''இன்னொரு விஷயம்; கிழவனைக் கல்யாணம் செய்து கொண்டால் சீக்கிரம் விதவையாகி விடுவோம் என்று சிலர் நினைப்பதுண்டு; நீயே சொல்லு; வாலிபனைக் கல்யாணம் செய்து கொள்கிறவள் மட்டும் விதவையாவதில்லையா?

''எல்லாவற்றையும் விட இந்தக் கல்யாணத்தில் இன்னொரு விசேஷம் இருக்கிறது. வாழ்க்கையில் தியாகத்தைப் போல் சிறந்தது வேறொன்றும் கிடையாது. செத்த பிறகும் வாழ வைக்கும் சிறப்பான குணம் தியாகத்தினிடந்தான் இருக்கிறது. அதுவும் உன் தங்கைக்காக நீ இந்த அற்ப தியாகத்தைக் கூட செய்யவில்லையென்றால் மனித ஜன்மம் எடுத்துத் தான் என்ன பிரயோஜனம்?

''பார்க்கப்போனால் 'இந்த உலகமே என்னத்திற்கு?' என்று எனக்குத் தோன்றுகிறது. அது இருக்கத்தானே நாம் வாழ்க்கை என்று ஒன்றை ஆரம்பித்து விடுகிறோம்? அந்த வாழ்க்கையில் காதலென்றும் சாதலென்றும் கதைத்துக் கொண்டு கண்ணீர் விடுகிறோம்? இன்பமென்றும் துன்பமென்றும் எண்ணி இன்னலுறுகிறோம்? நீயே நினைத்துப் பார்! எல்லாவற்றுக்கும் காரணம் நம்முடைய கற்பனை தான். இந்தத் தொல்லை தொலைவதற்கு ஒரே ஒரு வழி தான் உண்டு. அந்த வழி துன்பத்தையும் இன்பமாகக் கருதுவதே. என்ன நான் சொன்னதெல்லாம் புரிந்ததா?'' என்று கேட்டுக் கொண்டே அவர் தம் ஆசனத்தை விட்டு எழுந்தார்.

நான் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டேன். ''எல்லாம் புரிந்தது. ஆனால் நீங்கள்....?'' என்று இழுத்தேன்.

''நான் தற்கொலை செய்து கொள்ளமாட்டேன். பைத்தியக்காரனாகவும் ஆகமாட்டேன். சந்நியாசியாகவும் போகமாட்டேன். வேறொரு பெண்ணை ஜம்மென்று கல்யாணம் செய்து கொள்வேன். உன்னைக் கல்யாணம் செய்து கொண்டிருந்தால் என்னென்ன இன்பங்கள் அநுபவிப்பேன் என்பதற்குப் பதிலாக என்னென்ன துன்பங்கள் அநுபவிப்பேன் என்று கற்பனை செய்து கொள்வேன். 'நல்ல வேளையாக அந்தத் துன்பங்களெல்லாம் இப்பொழுது நமக்கு இல்லையல்லவா?' என்று எண்ணிச் சந்தோஷப்படுவேன். புதுமணப் பெண்ணிடம் நான் அநுபவிக்கும் துன்பங்களைக்கூட இன்பமாகவே பாவித்துக் கொள்வேன். அதை எண்ணி யெண்ணி எனக்குள்ளேயே நான் இன்பம் அநுபவித்துக் கொள்வேன். உன்னைத் தற்செயலாக எங்கேயாவது சந்தித்தால் என் சகோதரிக்குச் சமமாகப் பாவிப்பேன்.''

இதற்கு மேல் நான் அவரிடம் என்ன பேசுவது, ஹம்ஸா?

* * *

**எ**னக்கும் அந்த சர்க்கார் உத்தியோகஸ்தருக்கும் கல்யாணமாயிற்று. அவருடைய தம்பியும் என் தங்கையைக் கல்யாணம் செய்து கொண்டு தனிக் குடித்தனம் சென்று விட்டார்.

அவர் சொன்ன முறைப்படி என் வாழ்க்கையின் இன்ப துன்பங்களைக் கற்பனை செய்து கொள்ள ஆரம்பித்தேன். என் கணவருக்கு என்னைப் பற்றியோ, என் அழகைப் பற்றியோ கவலை ஒன்றும் கிடையாது. அவருடைய கவலையெல்லாம் தம்முடைய

குழந்தைகளை நான் சரிவரக் கவனிக்கிறேனா, இல்லையா என்பதில் தான் இருக்கிறது. எவ்வளவு மேலான குணம்! என்ன பெருந் தன்மை!

''பரிமளா!'' என்று என் கணவர் என்னை அன்புடன் அழைக்கும்போது, அவருடைய அன்பில் நான் பேரின்பத்தைக் காண்கிறேன். ''அந்தப் பாழாய்ப்போன பேரின்பம் 'ராஜாத்தி மாதிரி' இருக்கும் உனக்கு எதற்கு?'' என்று நீ என்னைக் கேட்கலாம். ஆனால், ஹம்ஸா! நான் அந்த இன்பத்தைக் கூடக் காணாமல் வேறு எந்த இன்பத்தைத்தான் காண்பேனடி?

என் கணவர் என்னை எதிர்பாராமலே படுக்கையறைக்குச் சென்று விடுவார். பின்னால் நான் பால் கொண்டு போய்க் கொடுப்பதற்குள் அவர் தூங்கி விடுவார். நானும் அவரைப் போல நிம்மதியாகத் தூங்கவேண்டு மென்பதில் தான் அவருக்கு எவ்வளவு ஆசை!

என் முகத்தை என் கணவர் எப்போதும் மூக்கு முழியற்ற சந்திர பிம்பத்துக்கு ஒப்பிட்டுப் பழித்ததில்லை; கண்களைக் கருவண்டுகளென்றும், கன்னங்களைக் கோவைக் கனியென்றும் சொல்லி அவர் என்னை நகைத்ததில்லை. நீயே சொல்லு; நான் அந்த வாலிபரான டாக்டரைக் கல்யாணம் செய்து கொண்டிருந்தால், அவர் என்னை அப்படியெல்லாம் சொல்லிப் பழிக்காமலிருப்பாரா?

சமய சந்தர்ப்பமின்றிச் சதா தம்பதிகளைக் கவனிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக யிருக்கும் மாமியார், நாத்தனார் முதலியவர்களுடன் குடித்தனம் செய்வதை விட, இந்த நாலு குழந்தைகளுடன் கூடிக் குடித்தனம் செய்வது எவ்வளவோ மேலாயிருக்கிறது. அவை, ''அம்மா! அம்மா!'' என்று தங்கள் அமுத கானத்தால் என்னை அழைக்கும் போதெல்லாம் நான் என்னையே மறந்து இன்ப சாகரத்தில் ஆழ்ந்து விடுகிறேன்.

ஆகக்கூடி அவர் சொன்ன முறையில் நான் வெற்றியைத்தான் காண்கிறேன். இது தான் என் வாழ்க்கையில் நான் மலர்ந்த முகத்துடன் இருப்பதன் ரகசியம், ஹம்ஸா!

இது உனக்குப் பிடிக்கவில்லை யென்றால், அதற்கு நான் என்ன செய்வது?

இப்படிக்கு,

உன்னை என்றும் மறவாத,

**பரிமளா**

# சுயநலம்

வேலப்பனின் வேலையே அலாதியானது. மனைவி, மக்களை மறந்து நாள்தோறும் உயிரற்ற இயந்திரங்களிடமோ, உணர்ச்சியற்ற அதிகாரிகளிடமோ உயிரை விட்டுக் கொண்டிருப்பது அவனுடைய வேலையல்ல; அவன் தொழிலுக்கு அவனே வேலைக்காரன்; அவனே சொந்தக்காரன்!

காலையில் எழுந்ததும் வேலப்பன் கடை வீதிக்குச் சென்று சில தேக்குமரத் துண்டுகளையும், பிரம்புக் கத்தைகளையும் வாங்கி வருவான். தேக்குமரத் துண்டுகளை அறுத்து, இழைத்து 'கூர்' வாங்கி கட்டில்களாகச் செப்பனிடுவது வேலப்பனின் வேலை. பிரம்புகளை யெல்லாம் பிளந்து கட்டில்களுக்குப் 'படுக்கை' பின்னி விடுவது வேலப்பனின் மனைவியான முருகாயியின் வேலை. நடுநடுவே 'எடுபிடி' வேலைகளுக்கெல்லாம் அவர்களுடைய குழந்தைகள்!

வேலை செய்யும் இடமோ அவர்கள் வீட்டை அடுத்த மாந்தோப்பு. 'குக்கூ' குயில்களும், 'கிக்கீ' கிளிகளும் கொஞ்சி விளையாடும் இடம். அந்தத் தோட்டத்தின் சொந்தக்காரர், வேலப்பன் அங்கு வேலை செய்வதைப்பற்றி ஒன்றுமே சொல்வதில்லை. ஏனென்றால், சம்பளம் இல்லாமல் அவன் தன் வேலையுடன், நம் தோட்டத்தையும் காவல் காத்துக் கொண்டிருக்கட்டுமே என்றுதான்!

வேலைக்கு நடுவே ஊர்ப் பேச்சு, உறவினர் பேச்சு, காதல் பேச்சு, ஊடல் பேச்சு எல்லாம் நடக்கும். ஆனால், கைகள் மட்டும் வேலையிலேயே முனைந்திருக்கும்.

**''பிரம்பைப் பிளப்பாள் முருகாயி!**
**பின்னி விடுவாள் முருகாயி!**
**கன்னத்தைக் கிள்ளப் போனால்**
**கையைத் தள்ளுவாள் முருகாயி!''**

என்று நடுவில் பாட்டு வேறு பாட ஆரம்பித்து விடுவான் வேலப்பன்.

''ஐயே! மூஞ்சைப் பாரு மூஞ்சை!'' என்று உள்ளத்தில் விருப்புடனும் உதட்டில் வெறுப்புடனும் அவனைப் பழிப்பாள் முருகாயி.

இதைக் கேட்டு வேலப்பனுக்குக் கொஞ்சமாவது கோபம் வரவேண்டுமே! ஊஹூம்; சிரிப்புத்தான் வரும்!

மாலை நேரத்துக்குள் அவர்கள் எப்படியாவது நான்கு கட்டில்கள் செய்து விடுவார்கள். வேலப்பன் இரண்டைத் தூக்கித் தன் தோள்களின் மேல் வைத்துக் கொள்வான்; முருகாயி இரண்டைத் தூக்கித் தன் தோள்களின் மேல் வைத்துக் கொள்வாள். வீட்டைப் பார்த்துக் கொள்ளும்படி குழந்தைகளுக்கு உத்தர விட்டுவிடுவார்கள். ''கட்லு, கட்லு!'' என்று கூவிக்கொண்டே தெருத் தெருவாய்ச் செல்வார்கள்.

இருட்டுவதற்குள் நான்கு கட்டில்களும் விற்றுவிடும். லாபத்தைப் பற்றித் திட்டமாகச் சொல்ல முடியாது; ஒரு நாளைக்கு இரண்டு மூன்று கிடைக்கும்; இன்னொரு நாளைக்கு நான்கு ஐந்துகூடக் கிடைக்கும்; இந்த லாபத்தைக் கொண்டு, பங்களா, கார், காவற்காரனோடு வாழாவிட்டாலும் அவர்கள் பசியாமல் வாழ்ந்தார்கள்.

மாந்தோப்புக்குச் சொந்தக்காரரான மாதவராயர் வெகு நாட்களாக வேலப்பனின் வேலையைக் கவனித்து வந்தார். ஒருநாள் அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று! அந்த யோசனையுடன் அவர் வேலப்பனை நெருங்கி, ''என்ன வேலப்பா! தினசரி வெய்யிலில் இப்படி வியர்க்க விறுவிறுக்க வேலை செய்கிறாயே, உனக்குச் சிரமமாயில்லையா?'' என்று கேட்டார்.

''சிரமத்தைப் பார்த்தா ஆகுதுங்களா? வயிறுன்னு ஒண்ணு இருக்கே!'' என்றான் வேலப்பன்.

''மவராசாவின் மாந்தோப்பு இருக்கும்போது எங்களை வெய்யில் என்ன செய்யும்?'' என்றாள் முருகாயி.

''என்ன இருந்தாலும் மாட்டை மேய்த்தோமா? கோலைப் போட்டோமா? என்று எங்கேயாவது வேலைக்குச் சென்று நாளைக் கழித்துவிட்டு, மாதம் பிறந்தால் ஐம்பது, அறுபது என்று சம்பளம் வாங்கிக்கொண்டு 'ஹாய்'யாகக் குடித்தனம் பண்ணும் சௌகரியம் வருமா? உன்னுடன் உன் மனைவியும் கஷ்டப்பட்டு, உங்களுடன் உங்கள் குழந்தைகளும் கஷ்டப்பட்டு, மாலை முழுவதும் தெருத் தெருவாய்ச் சுற்றி நீங்கள் அடையும் சுகந்தான் என்ன? வேணுமானால் முருகாயியை ஒரு மாதம் நிழலில் இருக்கச் சொல்லிப் பாரு; அப்புறம் நீ அவளை விட்டு அந்தண்டை இந்தண்டை போகவே முடியாது!'' என்று சொல்லி விஷமத்துடன் சிரித்தார் மாதவராயர்.

முருகாயியை வெட்கம் பிடுங்கித் தின்றது. அவள், ''போங்க, சாமி!'' என்று சொல்லிக் கொண்டே சிரிக்காமல் சிரித்தாள்.

''என்ன பண்றது, சாமி! எனக்கு வேறே வேலை ஒண்ணுந் தெரியாது; இந்தக் கட்டிலைக் கட்டிக் கொண்டு அழத்தான் தெரியும்!'' என்றான் வேலப்பன்.

இப்பொழுது தான் மாதவராயருக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. ''அப்படியானால் நான் ஒன்று சொல்கிறேன்; கேட்கிறாயா?'' என்று ஆரம்பித்தார்.

''உங்கள் சொல்லைக் கூட நான் தட்டுவேனுங்களா?''

''சரி; நீயும் கொஞ்சம் பணம் போடு; நானும் கொஞ்சம் பணம் போடுகிறேன். இரண்டு பேருமாகச் சேர்ந்து இதே இடத்தில் இந்த மாந்தோப்பை அழித்து விட்டு ஓர் அழகான கட்டிடம் கட்டலாம். சம்பளத்துக்கு வேண்டிய ஆட்களை வைத்துக் கொள்ளலாம். கட்டில்களை வேண்டிய அளவு உற்பத்தி செய்யலாம். அவைகளுக்கு அழகான வர்ணப் பூச்சு, கண்ணைக் கவரும் 'வார்னிஷ்' வேலையெல்லாம் செய்து, காட்சி அறையில் வரிசைக் கிரமமாக நிறுத்தி வைக்கலாம். விலையை எவ்வளவு கூட்ட முடியுமோ, அவ்வளவு கூட்டிக் கொள்ளலாம். போட்டிக்கு யாரும் வந்து விடாமல் 'நம்மைப்போல் யாரும் கட்டில்கள் செய்யக்கூடாது' என்று சர்க்கார் மூலம் உத்தரவாதம் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிக்கைகளிலும், ரயில் - டிராம்களிலும் விளம்பரம் செய்யலாம். இந்தியா முழுவதும் ஏஜண்டுகளை நியமித்துக் கட்டில்களை அனுப்பி வைக்கலாம். வேண்டியவர்கள் அங்கங்கே வந்து வாங்கிக் கொள்ளட்டும். கிடைக்கும் லாபத்தை இருவரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளலாம். 'கொள்ளைக்குப் போனாலும் கூட்டு உதவாது' என்று நீ சொல்வதாயிருந்தால் இந்த மாந்தோப்பை நீயே வாங்கிக் கொள்; கம்பெனியையும் நீயே வைத்துக் கொள்; லாபத்தையும் நீயே அடைந்து கொள். எப்படியாவது நீ சௌகரியமாயிருந்தால் அதுவே எனக்குப் போதும்!'' என்று சொல்லி, மாதவராயர் தமக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். காரணம்: 'அவனா நம்முடன் பணம் போடப் போகிறான்?' என்ற நினைப்புத் தான்.

வேலப்பனும் அவர் எதிர்பார்த்த பதிலையே சொன்னான். ''என்ன சாமி, கேலி பண்றீங்க? எனக்கு ஏது சாமி அதுக்கெல்லாம் பணம்?'' என்றான்.

''அப்படியானால் நானே பணம் போடுகிறேன். நானே கம்பெனி வைக்கிறேன். உனக்கு ஒரு தொல்லையும் வேண்டாம். பேசாமல் வேலை பார்த்துவிட்டு மாதம் பிறந்தால் முழுசா ஐம்பது ரூபாய்

சம்பளம் வாங்கிக் கொள். ராஜா மாதிரி இருந்து கொண்டு முருகாயியையும் ராஜாத்தி மாதிரி வைத்துக் கொள். என்ன சொல்கிறாய்?'' என்று தாம் வந்த காரியத்தை முடித்தார் அவர்.

அவன் ஒன்றும் யோசனை செய்யவில்லை; யோசனை செய்வதற்கு வேண்டிய அறிவுதான் இந்த அரசாங்கத்தில் அவனைப் போன்ற ஏழைகளுக்கு ஏது?

''அப்படியே ஆகட்டும் சாமி!'' என்று 'ஆமாம்' போட்டு விட்டான்.

* * *

தேவைக்கு அதிகமான பணத்தை வைத்துக் கொண்டு செய்வது இன்னதென்று தெரியாமல் திகைப்பவர்கள் ஒரு பக்கமும், கஞ்சிக்குக் காசில்லாமல் கண் கலங்குவோர் இன்னொரு பக்கமும் வாழும் இந்தப் படுமோசமான நாட்டிலே பணக்காரன் நினைத்தால் நடக்காதது எது?

மறுநாளே மாந்தோப்பு அழிக்கப்பட்டது; அதே இடத்தில் சில நாட்களுக்கெல்லாம் ஓர் அழகான கட்டிடம் எழுந்தது. 'வேலைக்கு ஆள் தேவை' என்று சொன்னது தான் தாமதம்; 'ஒருவேளை உணவுக்கு வழி கிடைத்தால் போதும்' என்று எத்தனையோ நாட்களாக ஏங்கிக் கிடந்த ஏழைக் கூட்டம் - தனிப்பட்ட ஒரே ஒரு மனிதனின் ஏகபோக வாழ்விற்காகத் தங்கள் உடலையும் உயிரையும் தத்தம் செய்வதற்கென்றே அந்தக் கருணை மிகுந்த கடவுளால் கோடிக்கணக்கில் சிருஷ்டி செய்யப்பட்டிருக்கும் கூட்டம் - 'திமுதிமு' வென்று வந்து சேர்ந்தது.

வேண்டிய ஆட்களை எடுத்துக் கொண்டார்கள்; வேலையும் தொடங்கி விட்டார்கள்; கட்டில்கள் கட்டிவிட்டார்கள்; நாடெங்கும் அனுப்பிவிட்டார்கள். சர்க்கார் அதிகாரிகளும் மாதவராயரின் வேண்டுகோளுக்கிணங்கி, ''இந்தியாவிலேயே நீங்கள் மட்டும் தான் இம்மாதிரிக் கட்டில்கள் செய்து ஊரைக் கொள்ளையடிக்கலாம்; அந்தக் கொள்ளையில் வரியின் மூலம் எங்களுக்கும் கொஞ்சம் பங்கு கொடுங்கள். போட்டிக்கு யாராவது வந்தால் எங்களிடம் சட்டம் இருக்கவே இருக்கிறது!'' என்று உத்திரவாதம் அளிந்துவிட்டார்கள்.

ஆமாம்; அந்தக் கட்டில்களுக்கு ஆதி கர்த்தாவான வேலப்பன் கூட இனிமேல் மாதவராயரின் அனுமதியின்றி அம்மாதிரிக் கட்டில்கள் செய்ய முடியாது!

அதற்குப் பிறகு கேட்க வேண்டுமா? பலன் கிடைத்தது; பணம் குவிந்தது.

நாடெங்கும் கட்டில்களுக்கு ஏகக் கிராக்கி. யுத்த காலத்தில் துருப்புக்களுக்கு ஆயிரக்கணக்கில் கட்டில்கள் தேவையாயிருந்தன. 'ஆர்டர்'கள் வந்து குவிந்தன.

''இனிமேல் வெறும் ஆட்களை வைத்துக் கொண்டு 'ஆர்டர்'களைக் கவனிக்க முடியாது'' என்று நினைத்த மாதவராயர். அமெரிக்காவிலிருந்து பல அதிசயமான யந்திரங்களைத் தருவித்தார். இருநூறு ஆட்கள் செய்யக் கூடிய வேலையை ஒரு யந்திரம் செய்தது. அது மரத்தை அறுத்தது; இழைத்தது; 'கூர்' வாங்கியது. எல்லாம் செய்தது. பிரம்பைப் பிளப்பதற்கும், பின்னிவிடுவதற்கும்கூட யந்திரம்! அவற்றை இயக்குவதற்குப் பழைய ஆட்கள் பிரயோஜனப்படவில்லை; புது ஆட்கள் வெளியூர்களிலிருந்து வரவழைக்கப்பட்டார்கள். இதனாலெல்லாம் நாளடைவில் வேலப்பன் இருந்த இடமே தெரியவில்லை - எப்படித் தெரியும்?

* * *

ஒரு நாள் வேலப்பன் வேலைக்குக் கிளம்பியபோது விளையாடிக் கொண்டிருந்த அவன் குழந்தை திடீரென்று மயக்கம் வந்து மூர்ச்சையாகி விழுந்துவிட்டது. முருகாயி 'கோ'வென்று கதற ஆரம்பித்து விட்டாள். வேலப்பன் பதறிப்போய்க் குழந்தையைத் தூக்கித் தோளின்மேல் போட்டுக் கொண்டு டாக்டர் வீட்டுக்கு ஓடினான். சிறிது நேரம் சிகிச்சை செய்த பிறகு குழந்தை மூர்ச்சை தெளிந்து கண்ணை விழித்துப் பார்த்து, அப்பொழுது தான் வேலப்பனுக்கும் முருகாயியிக்கும் போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது.

இந்தக் களேபரத்தினால் வேலப்பன் அன்று வேலைக்குச் செல்லவில்லை.

இதன் காரணமாக மறுநாள் வேலைக்குச் சென்ற வேலப்பன் முன்னறிவிப்பு இல்லாமல் முதல் நாள் வேலைக்கு வராமற் போனதற்காக மேலதிகாரியால் வீட்டுக்கு அனுப்பப்பட்டான்.

ஆனால், தனிப்பட்ட முறையில் மேலதிகாரி அவனை வேலையிலிருந்து நீக்கவில்லை; முதலாளியின் உத்தரவின் பேரில் தான் நீக்கினார்! - அப்படி நீக்கியதற்குக் காரணம் அன்று வேலப்பன் வேலைக்கு வராதது மட்டும் அல்ல; வேறொரு காரணமும் இருந்தது.

அது இது தான்:

பெருமைக்கு ஆசைப்படாத மனிதன் யார்? ஒருவனும் கிடையாது. அதற்கு வேலப்பன் மட்டும் விதி விலக்கா, என்ன? அவன், "முதலாளி, இவ்வளவு பெரிய மனிதரானதற்கு நான்தான் காரணம்" என்று தன்னுடன் வேலை செய்பவர்களிடம் அடிக்கடி சொல்லிக் கொள்வது வழக்கம். இது மாதவராயரின் காதுக்கு அடிக்கடி எட்டிக் கொண்டிருந்தது. அவன் அப்படிச் சொல்லிக் கொள்வது அவருடைய சுயமரியாதைக்குப் பங்கம் விளைப்பதாயிருந்தது. ஆனாலும் என்ன செய்வது என்று தெரியாமல் சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்.

இதெல்லாம் தெரியாத அப்பாவி வேலப்பன் தன்னை மேலதிகாரி வேலையிலிருந்து நீக்கியதைப் பற்றிப் புகார் செய்ய முதலாளியை நெருங்கினான்.

"என்னடா?" என்றார் அவர் கம்பீரமாக. வேலப்பன் விஷயத்தைச் சொன்னான் தாழ்மையாக.

'மேலதிகாரி சொன்னால் சொன்னது தான்!' என்றார் மாதவராயன்.

வேலப்பன் தலையில் இடி விழுந்தது போலிருந்தது. "இதற்குத்தானா நான் செய்துகிட்டிருந்த வேலையைக் கூடக் கெடுத்தீங்க!" என்றான் மனம் நொந்து.

அவ்வளவுதான்; மேஜை மேலிருந்த மணி 'டங்' என்று ஒலித்தது.

வாயிலில் உட்கார்ந்து கொண்டிருந்த 'கூர்க்கா' ஓடோடியும் வந்தான்.

அடுத்த நிமிஷத்தில் வேலப்பன் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளப்பட்டான்!

அதே சமயத்தில் அருகிலிருந்த ஓடக் கரையிலிருந்து அமரகவி பாரதியாரின் அருட் கவிதை காற்றில் மிதந்து வந்து அவன் காதில் 'கணீ'ரென்று ஒலித்தது.

**"விழலுக்கு நீர் பாய்ச்சி**
**மாய மாட்டோம் - வெறும்**
**வீணருக் குழைத் துடலும்**
**ஓய மாட்டோம்!"**

# கவலை இல்லை

அந்த ஊரில் அரியநாயகத்தின் செருப்புக் கடைதான் பேர்போன கடை. சொற்ப முதலுடன் ஆரம்பித்துச் சீக்கிரத்திலேயே பெரிய செருப்பு வியாபாரியானவன் அரியநாயகம். அவனிடம்தான் காத்தான் தினசரி செருப்புத் தைத்து லாபத்துக்கு விற்று வயிறு வளர்த்து வந்தான். காத்தானிடமிருந்து முக்கால் ரூபாய்க்கு வாங்கிய செருப்பை மூன்றரை ரூபாய்க்கு விற்றுச் சம்பாதித்த லாபத்தைக் கொண்டு தான் அரியநாயகம் தன்னுடைய டாம்பீகமான வாழ்க்கையை நடத்திவந்தான்.

காத்தானுக்கு ஒரே ஒரு பெண். அவளை அவன் கானாற்றில் கட்டிக் கொடுத்திருக்கிறான். அவள் ஒரு சமயம் பிரசவத்திற்காகப் பிறந்தகத்துக்கு வந்திருந்தாள். அப்பொழுது மழைக்காலம். செருப்பு வியாபாரம் க்ஷீண தசையை அடைந்திருந்தது. ஆகவே காத்தான் தன்னுடைய மகள் வந்திருந்த சமயம் மிகவும் கஷ்டமான நிலைமையில் காலங் கழித்துக் கொண்டிருந்தான்.

பெண் பிரசவ வேதனைப் படும்போது காத்தானின் கையில் ஒரு காசும் இல்லை. கடன் கேட்டுப் பார்த்தான்; கிடைக்கவில்லை.

அவன் மனம் சோர்ந்தது. மதி மயங்கியது. மனைவி முகத்தைப் பார்த்தான். 'செல்லாத்தா....!' என்றான். மேலே அவனால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

அவளும் அவன் முகத்தைப் பார்த்தாள். ''என்னா!'' என்றாள். அவளாலும் அதற்குமேல் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

தன் பெண்ணின் வேதனைக் குரலைக் கேட்டதும் காத்தானின் மனம் பதைபதைத்தது. திண்ணையைவிட்டு எழுந்தான். 'விர்'ரென்று நடந்தான். எங்கே போகிறான்? போகும்போது கூப்பிடலாமா? சகுனத் தடையல்லவா? செல்லாத்தா சிறிது நேரம் யோசனை செய்து பார்த்தாள். அவளுக்கு விஷயம் புரிந்து விட்டது. வேறு எங்கே போகப் போகிறார்? எஜமான் கடைக்குத்தான் போவார்!

பகவானே! அவர் மனம் இரங்குவாரா?

* * *

காத்தான் கடைக்கு வந்தான். கடையின் வாயிலைப் பார்த்தான். மோட்டார் சைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. சந்தேகமில்லை. தன்னுடைய எஜமானனுடையதுதான். எஜமான் உள்ளே இருக்கிறார் என்று தெரிந்து கொண்டான். அவன் முகம் மலர்ந்தது. எஜமானை நோக்கினான். அவன், தான் குடித்துக் கொண்டிருந்த சிகரெட்டின்

புகை சுருள் சுருளாக மேலே போவதைக் கண்டு களித்துக் கொண்டிருந்தான். காத்தான் அதைக் கவனிக்கவில்லை. விஷயத்தைச் சொன்னான்; விம்மினான். பல்லைக் காட்டினான்; பரிதவித்தான்; கதறினான்; காலில் விழுந்தான், இவ்வளவும் ஒரு பத்து ரூபாய் பணத்திற்கு!

''இந்தச் சமயம் மனசு வச்சி, எனக்கு ஒரு பத்து ரூபா உதவுங்க, சாமி! நாளையிலேயிருந்து செருப்புப் போடற பணத்திலிருந்து அந்தக் கடனுக்காகத் தினம் ஒரு ரூபாய் பிடிச்சிக்கிங்க சாமி!'' என்று காத்தான் 'கெஞ்சு, கெஞ்சு' என்று கெஞ்சினான்.

''ஒரு காலணா கடன் கிடையாது!'' என்று கண்டிப்பாய்ச் சொன்னான் கடை முதலாளி.

''குழந்தை ரொம்பவும் கஷ்டப்படுதுங்க. உங்க குழந்தை மாதிரி நெனைச்சுக்கிங்க! மருத்துவச்சி வச்சுப் பார்க்கனுங்க!''

''சீ! குழந்தையாவது, மண்ணாங்கட்டியாவது? ஊரிலே தர்ம ஆஸ்பத்திரி இல்லையா? நீ கெட்ட கேட்டுக்கு வீட்டுக்கு மருத்துவச்சி வைத்துப் பார்க்க வேணுமா?'' என்று சீறினான் அரியநாயகம்.

''சும்மா தர்ம ஆஸ்பத்திரின்னு பேருங்க; அங்கேயும் பணம் கொடுத்தால் தானுங்க!'' என்றான் காத்தான்.

''எக்கேடாவது கெட்டுப் போ! இதென்ன லேவா தேவிக் கடையா, உனக்குக் கடன் கொடுப்பதற்கு?'' என்று சொல்லிவிட்டு, அரியநாயகம் மோட்டார் சைக்கிளில் ஏறிக் கொண்டு எங்கேயோ போய்விட்டான்.

காத்தான் கடைக் குமாஸ்தாவைப் பார்த்தான்; குமாஸ்தா காத்தானைப் பார்த்தார்; 'என்னைப் பார்த்தால் என்ன செய்வது?' என்று குமாஸ்தா அனுதாபத்துடன் சொல்லி விட்டு 'இந்தா என்னிடம் இருப்பது இதுதான்!' என்று தன் இடையிலிருந்து ஒரு ரூபாயை எடுத்துக் காத்தான் கையில் கொடுத்தார்.

காத்தான் அதைப் பெற்றுக் கொண்டு மனச் சோர்வுடன் வீடு திரும்பினான். ''இனத்தை இனம் காக்கும் என்கிறார்களே, அது சரிதான்!'' என்று எண்ணிக் கொண்டே அவன் வழி நடந்தான்.

* * *

**அ**ன்றிரவு அரியநாயகம் படுக்கப் போகும்போது அவனுக்கு ஏனோ மன நிம்மதியே இல்லை. அவன் மனமே அவனை நிந்தனை செய்தது: ''உன்னுடைய ஆடம்பர வாழ்க்கைக்கு யார் காரணம்? காத்தான்தானே? கண்ணுக்குத் தெரியாத கடவுள் என்று நீ சொல்லலாம். இல்லை; கண்ணுக்குத் தெரிந்த கடவுள் யார் என்று

நினைத்துப் பார்! பத்துப் பதினைந்து ரூபாய்க்கு வெய்யிலில் அலைந்து மதப் பிரசாரம் செய்து வந்த நீ இன்று நிழலில் உட்கார்ந்து நகத்தில் மண் படாமல் மாதம் நூற்றுக்கணக்கில் பணம் சம்பாதிப்பதற்கு யார் காரணம்? விழிக்காதே; காத்தான் தான்! - யோசித்துப் பார்! அப்படிப் பட்டவனுக்கு ஆபத்துச் சமயத்தில் நெஞ்சில் ஈரமில்லாமல் ஒரு பத்து ரூபாய் - அதுவும் கடனாக - இல்லை என்றாயே!''

அரியநாயகத்திற்குத் தூக்கம் பிடிக்கவில்லை.

அவன் செய்துவிட்ட தவறு அப்பொழுது தான் அவனுக்குத் தெரிந்தது - காலையில் எழுந்ததும் காத்தான் வீட்டுக்கு ஓட வேண்டும்; தான் செய்த பாவத்துக்குப் பிராயச்சித்தமாக இருபது ரூபாயாவது அவனிடம் கொடுத்து விட்டு வரவேண்டும்; தன்னுடைய நடத்தைக்காகத் தன்னை மன்னித்துவிடும்படி காத்தானைக் கேட்க வேண்டும் - இப்படியெல்லாம் எண்ணிப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் அரியநாயகம்.

* * *

**ம**றுநாள் பொழுது விடிந்தது. அரியநாயகம் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு காத்தான் வீட்டுக்குப் போனான். அவனுடைய குடிசைக்குள் பயங்கரமான நிசப்தம் குடி கொண்டிருந்தது.

''காத்தான், காத்தான்!'' என்று உரக்கக் கூப்பிட்டான் அரியநாயகம்.

காத்தான் நடைப் பிணம் மாதிரி வெளியே வந்தான். அவன் உடம்பில் உணர்ச்சி யில்லை; கண்களில் ஒளியில்லை; கால்களில் பலம் இல்லை.

''காத்தான்! இதோ பார்; கவலைப்படாதே! இந்தா, ரூபாய் இருபது!'' என்று சொல்லி அரியநாயகம் தன் பணப் பையை எடுத்தான். அதிலிருந்த ஒரு ரூபாய் நோட்டுப் புத்தகத்தை எடுத்து இருபது ரூபாயைப் பிய்த்துக் காத்தான் கையில் கொடுத்தான்.

காத்தான் அந்த நோட்டுக் கத்தையை வாங்கிக் காற்றிலே பறக்க விட்டு விட்டு ''உங்க பணம் ஒண்ணும் இல்லாமலே என் கவலையெல்லாம் தீர்ந்து போச்சுங்க; குழந்தை போனத்துக்கப்புறம் எனக்குப் பணம் எதுக்கு?'' என்றான்.

அவனுடைய உதடுகள் துடித்தன; கண்ணீர் தாரை தாரையாகப் பெருக்கெடுத்தது. அதைப் பார்த்த அரியநாயகத்தின் கண்களிலும் நீர் துளித்தது. அவன் வாய் அடைத்து நின்றான்.

# தங்க வளையல்

சிறுவனா யிருந்தபோதே நான் சிங்கப்பூருக்குப் போய் விட்டேன். காரணம் தாய் தந்தையற்ற அனாதையாயிருந்ததுதான். என்றைக்காவது ஒரு நாள் போயே போய் விடப் போகும் இந்த உயிரின்மீது எனக்கிருந்த ஆசையால்தான் யுத்தத்திற்குப் பயந்து திரும்பவேண்டி வந்தது. சென்னைத் துறைமுகத்தை வந்தடைந்தபோது எனக்கு எங்கு செல்வதென்றே புரியவில்லை. நகரை நான்கைந்து முறை வலம் வந்து பார்த்தேன்; வழி ஒன்றும் தோன்ற வில்லை.

இரவு எட்டு மணி இருக்கும். மழை 'சோ' என்று பெய்து கொண்டிருந்தது. அப்பொழுது தான் எனக்குப் பிறப்பிடமான வேலூரில் இருக்கும் போது எனது நண்பன் அப்துல் காதரின் ஞாபகம் வந்தது. நான் அவனைப் பார்த்துச் சுமார் பத்து வருடங்களுக்கு மேலிருக்கும். ஆகவே இப்பொழுது அவன் அதே ஊரிலேயே இருக்கிறானோ என்னமோ என்ற சந்தேகம் வேறு என்னைப் பேதலிக்கச் செய்தது. இருந்தாலும் இரவு எங்காவது தங்கிவிட்டு மறுநாள் அவனைப் போய்ப் பார்ப்பதென்ற முடிவுக்கு வந்தேன். ஆனால், அஜ்ஜா என்னும் அழகுத் தெய்வம் அன்றிரவே எனது முடிவை மாற்றிக் கொள்ளச் செய்துவிடும் என்று நான் அப்பொழுது எதிர்பார்க்கவில்லை. எப்படி எதிர் பார்த்திருக்க முடியும்?

அந்தப் பெரு மழையில் நனைந்துகொண்டே அப்பொழுது நான் சைனா பஜார் ரோட்டில் நடந்து கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் ஒரு காலி ஜட்கா போய்க் கொண்டிருந்தது. ''ஏய், ஜட்கா! ஏய், ஜட்கா!'' என்றேன் நான். அவன் என்னைச் சட்டை செய்யாமல் தன் பாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தான். 'திடுதிடு' வென்று ஓடி நான் வண்டிக்கு முன்னால் போய் நின்றேன். அவன் வண்டியை நிறுத்தி விட்டு ''எங்கே போவணும், மகாராஜ்!'' என்று கேட்டான். அப்படிக் கேட்கும்போது அவனது கண்கள் சுழன்றன; பெரிய கஞ்சாக் குடியன் போலும்!

வண்டியில் ஏறிக் கொண்டேன். சிங்கப்பூரிலிருந்து திரும்பிய கதையை அவனிடம் சொல்லி, இரவு எங்கேயாவது தங்குவதற்கு இடம் கிடைக்குமா என்று அவனையே கேட்டேன். எனக்குப் பிடித்தமானால் தன் வீட்டிலேயே தங்கலாமென்று அவன் சொன்னான். நானும் சரி என்று ஒப்புக் கொண்டேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் நான் ஜட்காவாலாவின் வீட்டை அடைந்தேன். அவனுடைய வீடு மீர்சாஹிப் பேட்டையில் ஓர் ஒதுக்குப் புறத்தில் இருந்தது. உதிர்ந்து போன ஓலைக் கூரையும், கதவுகளுக்குப் பதிலாகத் தொங்கவிடப் பட்டிருந்த கோணிக் கந்தைகளும் அவனுடைய தரித்திர நிலையை எடுத்துக் காட்டுவனவாயிருந்தன. பெருமழையின் காரணமாகத் தாழ்வாரத்தில் கட்டிப்போட்டு வைத்திருந்த வெள்ளாடு ஒன்று, அவனைக் கண்டதும் குட்டிகளுடன் சேர்ந்து, 'அம்மே, அம்மே!' என்று பரிதாபத்துடன் கத்திற்று. அந்தக் கத்தலைக் கேட்டுத் தன்னுடைய அப்பா வந்திருந்ததை அறிந்து கொண்டவள் போல் ஒரு பெண் உள்ளேயிருந்து ஓடோடியும் வந்தாள். அவளுடைய முகத்தில் இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு வேதனை குடி கொண்டிருந்தது.

இந்தச் சமயத்தில் யாரோ ஒருவன் வீட்டு வாயிலில் நின்று கொண்டு, ''அலிகான்!'' என்று இரைந்தான். அவனைப் பார்த்தால் ஈட்டிக்காரன் போல் தோன்றிற்று. உடனே ஜட்காவாலா விரைந்து சென்று அவனிடம் ஏதோ சில்லறையைக் கொடுத்து அனுப்பினான். அவன் சென்றதும் ''அஜ்ஜா!'' என்றான் அலிகான். ''இருக்கிறேன்!'' என்றாள் அவள் வெறுப்புடன்.

அவளுடைய வெறுப்பைப் பொருட்படுத்தாமல் ''இரண்டு நாட்களாக என்னைக் காணாமல் என்ன செய்தாய், அஜ்ஜா? ஏதாவது சாப்பிட்டாயா?'' என்று கேட்டான் அவன்.

''எப்படிச் சாப்பிடுவது? எங்கிருந்து சாப்பிடுவது?'' என்று திருப்பிக் கேட்டாள் அவள்.

அலிகான் நான் இருந்த பக்கம் திரும்பி, ''குழந்தைக்கு என் மேல் ரொம்பக் கோபம்!'' என்று அசட்டுச் சிரிப்புடன் சொல்லிவிட்டு ''உம்...அது இருக்கட்டும், அஜ்ஜா! இவர் சிங்கப்பூர் ஆசாமி. இரவு இங்கே தங்கச் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது இவருக்கும் சேர்த்து ஏதாவது தயார் பண்ணு!'' என்று எட்டணாவை எடுத்து அஜ்ஜாவின் கையில் கொடுத்தான். அவள் அதை வாங்கிக்கொண்டு என்னை ஏற இறங்கப் பார்த்தாள். நான் ஒரு ரூபாயை எடுத்து அலிகானிடம் கொடுத்து அவளிடம் கொடுக்கச் சொன்னேன். அவன் அதை வாங்கித் தன் பையில் போட்டுக் கொண்டான்!

சிறிது நேரத்துக்கெல்லாம் கூடையை எடுத்துக் கொண்டு அஜ்ஜா கடைக்குப் புறப்பட்டபோது ''எனக்கென்னமோ இன்று உடம்பு

சரியில்லை அம்மா! கொஞ்சம் படுக்கையைப் போட்டுவிட்டுப் போ!'' என்றான் அலிகான். அவளும் அப்படியே அவனுக்குப் படுக்கையைப் போட்டுவிட்டுச் சென்றாள். இதையெல்லாம் பார்த்த போது, தன்னுடைய சொந்த சௌகரியத்துக்காகத்தான் அலிகான் படுதா முறையைக் கூடக் கைவிட்டு விட்டானோ என்று எனக்குத் தோன்றிற்று.

கடையிலிருந்து திரும்பி வந்ததும் அஜ்ஜா அவசர அவசரமாகச் சமைத்தாள். அப்பாவைச் சாப்பிடுவதற்கு எழுப்பினாள். அவன் எழுந்திருக்கவில்லை - ஏன் எழுந்திருக்கவில்லை? - அதுவும் கொஞ்ச நேரத்தில் தெரிந்து போய்விட்டது. அவன் முடிவில்லாத நித்திரையில் ஆழ்ந்து விட்டான்! - அஜ்ஜா அலறினாள்; நான் திடுக்கிட்டு அவளருகில் சென்றேன். அவள் கண்ணீர் தோய்ந்த கண்களால் என்னை ஏறிட்டுப் பார்த்தாள். ''அல்லாவின் கிருபை அவ்வளவுதான்!'' என்றேன் நான்.

என்ன நிலையற்ற வாழ்வு!

* * *

என்னுடைய சொந்தச் செலவில்தான் அலிகாவின் பிரேதத்தை எடுத்து அடக்கம் செய்ய வேண்டி நேர்ந்தது. பார்க்கப் போனால் அவன் இறந்ததற்காக அஜ்ஜா வருந்துவதற்கு அவசியமே இல்லாமலிருந்தது. ஏனெனில் காலையில் வண்டியைக் கட்டிக் கொண்டு சென்றால் ''இன்றுடன் என்று திரும்புவாய், பாவா?'' என்று கேட்கக்கூடிய நிலையில்தான் அவள் என்றும் இருந்திருக்கிறாள். காரணம், அலிகானுக்கு அஜ்ஜாவைக் காட்டிலும் சாராயத்தின் மீதும் கஞ்சாவின் மீதும் அதிக அன்பு இருந்து வந்திருக்கிறது. கிடைத்ததைக் கொண்டு கீழே விழும்வரை சாராயத்தைக் குடித்துவிட்டு, அதற்கு மேல் கஞ்சாவை அடித்துவிட்டு, வண்டியை வண்டி மேட்டில் நிறுத்திவிட்டு, வேறு கவலையொன்றும் இல்லாமல் வண்டிக்குள் படுத்துக் கொண்டு தூங்கியே அவன் தன் வாழ்நாட்களில் பாதியைக் கழித்திருக்கிறான். மற்றப் பாதி நாட்கள் அஜ்ஜாவுக்குச் சஞ்சலத்தைக் கொடுப்பதில் கழித்திருக்கிறான்.

இந்த விஷயங்களெல்லாம் தெரிந்த பிறகு, அஜ்ஜாவின் மீதிருந்த அனுதாபம் எனக்கு அதிகமாயிற்று. ஆனால் அந்த அனுதாபத்தை நான் அவளிடம் காட்டிக் கொள்ளவில்லை. அப்படிக் காட்டிக் கொள்வது அவள் ஏதாவது தப்பர்த்தம் செய்து கொள்வதற்கு ஏதுவாகுமென்று நான் நினைத்ததுதான் அதற்குக் காரணம். இதனாலேயே அலிகான் இறந்தபிறகு, அந்த ஈட்டிக்காரன் வந்து

தனக்குச் சேரவேண்டிய பாக்கிக்காகக் குதிரை வண்டியையும் ஆடுகளையும் பறிமுதல் செய்தபோது நான் ஒன்றும் பணம் கொடுத்து உதவவில்லை. ஆனால் அதற்காக அவள் மனம் நோவதைப் பார்த்து என்னால் மௌனம் சாதிக்கவும் முடியவில்லை. சிறிது அச்சத்துடனே அவளை நெருங்கி, ''அஜ்ஜா! தற்சமயம் அவற்றை மீட்டுக் கொடுக்கக்கூடிய நிலைமையில் தான் அல்லா என்னை வைத்திருக்கிறார். ஆனாலும் அவற்றால் உனக்கு ஒன்றும் பயனில்லை. வேண்டுமானால் என்னிடமிருந்து அந்தப் பணத்தை நீ ரொக்கமாகப் பெற்றுக் கொண்டு, உனது ஜீவியத்திற்கு ஏதாவது வழி தேடிக் கொள். இப்படி என் வலுவில் உனக்கு உதவி செய்ய முன் வருவதைப் பற்றி நீ ஒன்றும் தப்பர்த்தம் செய்து கொள்ளாதே! உனது சகோதரன் மாதிரி என்னை...'' என்று நான் இழுத்தேன்.

இதைக் கேட்டதும் அஜ்ஜாவின் முகத்தில் ஏனோ ஒருவிதான பயங்கரப் பீதி குடிகொண்டது. அவளுடைய உதடுகள், ''உனது சகோதரன் மாதிரி என்னை...உனது சகோதரன் மாதிரி என்னை....'' என்று திருப்பித் திருப்பி முணுமுணுத்தன.

அதற்குமேல் என்னால் சும்மா இருக்க முடியவில்லை. நான் மெல்ல அவள் மெல்லிய கரத்தைப் பற்றினேன். ஆனால் ''உன்னை நிக்கா செய்து கொள்கிறேன்'' என்று சொல்ல எனக்கு அப்பொழுது தைரியம் வரவில்லை. அதற்குப் பதிலாக, ''உன்னை என்றும் நான் கைவிடமாட்டேன்!'' என்று மட்டும் உறுதி கூறினேன். அதைக் கேட்டு அவளது முகம் மலர்ந்தது; அந்த முகத்தைப் பார்த்து எனது முகமும் மலர்ந்தது.

* * *

அடுத்த நாளே நாங்கள் இருவரும் வேலூருக்குப் பிரயாண மானோம். அங்கு போய்ச் சேர்ந்த சில நாட்களுக்கெல்லாம் எனது நண்பன் அப்துல்காதரைக் கண்டு பிடித்துவிட்டேன். அவனைக் கண்டுபிடிப்பதில் எனக்கு அப்படி ஒன்றும் சிரமம் ஏற்படவில்லை. ஏனெனில் அவன் அப்பொழுது வேலூர் லாங் பஜாரில் பெரிய அரிசி மண்டி வியாபாரியா யிருந்தான். அவனுடைய உதவியைக் கொண்டு அஜ்ஜாவை எங்கள் மதச்சம்பிரதாயப்படி விவாகம் செய்து கொண்டேன். அதற்குப் பிறகு அவனுடைய மண்டியிலேயே மாதம் முப்பது ரூபாய் சம்பளத்தில் எனக்குக் குமாஸ்தா வேலையும் கிடைத்தது.

நாலைந்து வருடங்கள் நாங்கள் 'பஹுத் குஷீ'யாகக் காலத்தைக் கழித்தோம். இருந்தாலும் வாழ்க்கையின் வரவுக்கும் வயிற்றுப்

பாட்டுக்கும் சரிக் கட்டுவதே சிரமமாயிருந்தது. இந்த நிலையில் அஜ்ஜாவின் கை நிறையத் தங்க வளையல்கள் வாங்கிப் போட வேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டாயிற்று. அந்த ஆசை தான் கடைசியில் என்னை அஜ்ஜா நிராகரிப்பதற்குக் காரணமாகிவிட்டது!

கதையைக் கேளுங்கள்: ஒரு நாள் எனது எஜமானன் என்னிடம் ஐந்நூறு ரூபாயைக் கொடுத்து, பாங்கில் போட்டுவிட்டு வரும்படி சொன்னான். அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு நான் நேரே நகைக் கடைக்குச் சென்றேன். அரை டஜன் தங்க வளையல்களை வாங்கி அஜ்ஜாவுக்குத் தெரியாமல் வீட்டில் வைத்து விட்டு எஜமானிடம் சென்று பணம் பறி போய் விட்டதாகச் சொன்னேன். அப்பொழுது எனக்கு அந்தத் தைரியம் எப்படி வந்ததோ, அது எனக்கே தெரியாது. அதை இப்பொழுது நினைத்துக் கொண்டாலும் எனக்கு வியப்பாயிருக்கிறது. எனது போலி நடிப்பைக் கண்டு என்னுடைய நண்பன் ஏமாந்து விட்டான். ''என்ன செய்வது, எதற்கும் நீ போலீஸில் எழுதி வை!'' என்றான்.

அன்றிரவு வீட்டுக்குச் சென்றதும் அஜ்ஜாவை அன்புடன் அழைத்து அவளது கரங்களில் வளையல்களை இட்டேன். அவள், ''இந்த வளையல்களை வாங்க உங்களுக்குப் பணம் ஏது?'' என்று வியப்புடன் கேட்டாள்.

''உனக்குத் தெரியாமல் இத்தனை நாட்களாகச் சேர்த்து வைத்திருந்தேன்!'' என்று நான் அப்பொழுது பொய் சொன்னேன். கடைசி வரையில் நான் அந்தப் பொய்யை வெளிப்படுத்தாமலே இருந்திருக்கக் கூடாதா?

அன்று இரவு அவள் தலை குனிந்தபடி என் அருகில் உட்கார்ந்திருந்தாள். நான் மனங்கனிந்து மெல்ல அவளது முகவாய்க் கட்டையைத் தொட்டு, அவளுடைய தலையை நிமிர்த்த முயன்றேன். அப்போது தன் மிருதுவான கரங்களால் அவள் எனது கையைத் தட்டிவிட்டு முல்லைச் சிரிப்புச் சிரித்தாள். அந்தச் சிரிப்பின் களிப்பிலே என்னை மறந்து நான் வளையல் வாங்க எனக்குப் பணம் கிடைத்த உண்மையை சொல்லி விட்டேன். அதே மூச்சில் 'விர்'ரென்று மண்டிக்கு கிளம்பாமல் சிறிது நேரம் வீட்டிலேயே இருந்திருந்தால், நான் சொன்னதைக் கேட்டு அவளது முகம் திடீரென்று மாறுதல் அடைந்ததைப் பார்த்திருப்பேன் என்பது எனக்குப் பிறகுதான் தெரிந்தது?

* * *

மண்டிக்குப் போய்விட்டு அன்று மாலை வீட்டுக்கு வந்ததும் அஜ்ஜாவைக் காணவில்லை. அவளுக்குப் பதிலாக கட்டிலின்மீது ஒரு கடிதம் கிடந்தது. அந்தக் கடிதத்தை எடுத்துப் பார்த்தேன்:

''எனது அன்பருக்கு

என் மனத்தை எவ்வளவோ சிரமத்துடன் திடப்படுத்திக் கொண்டு உமக்கு நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். வெகு சீக்கிரத்தில் மறைந்துவிடப் போகும் எனது அழகு உமது அறிவைப் பாழாக்கிவிட்டது. அதற்காக என்னை மன்னிக்கவும். நீர் முதலில் தெரிவித்தமாதிரி உம்மை நான் சகோதரனாகவே பாவித்திருந்தால்?.....வளையல்கள் பீரோவில் இருக்கின்றன. என்னைத் தேட வேண்டாம்! தேடுவதில் பயனில்லை.

அஜ்ஜா!''

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது. அதை ஒருவாறு சமாளித்துக் கொண்டு அந்தத் தங்க வளையல்களை விற்றுப் பணத்தைக் கொண்டுபோய் அப்துல் காதரிடம் சேர்த்தேன். அவனிடம் நடந்த கதையைச் சொல்லி, ''என்னை மன்னிக்கவேணும்!'' என்று கேட்டுக் கொண்டேன்.

அவன் எனது வேண்டுகோளை லட்சியம் செய்யால், ''அஜ்ஜா!'' என்றான் சிரித்துக் கொண்டே.

என்ன ஆச்சரியம்! அடுத்த நிமிடம் அஜ்ஜா எனக்கு எதிரே வந்து நின்று புன்னகை புரிந்தாள். அப்துல் காதர் ''நீ நினைத்தபடி நடந்துவிட்டது. ஆனாலும் என்னிடம் வேலை செய்யவோ, எனது முகத்தில் மீண்டும் விழிக்கவோ உன் கணவனுக்கு மனமிராது. ஆகவே இந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்னைக்குப் போய் ஏதாவது வியாபாரத்துறையில் ஈடுபட்டு மனம்போல் உங்களது வாழ்நாட்களைக் கழியுங்கள்!'' என்று அவளிடம் சொல்லி நான் கொண்டு வந்து கொடுத்த பணத்தை திருப்பி என்னிடமே கொடுத்துவிட்டான்.

மறுநாள் அவளை வாயார வாழ்த்திக் கொண்டே நாங்கள் சென்னைக்குப் பயணமானோம் - அப்புறம் என்ன? முக அழகோடு அக அழகும் பெற்றிருந்த அஜ்ஜாவின் அரவணைப்பிலே நான் எல்லாவற்றையும் மறந்தேன்!

# மனித யந்திரம்

அன்றொரு நாள் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்த போது, ''காலணா இருந்தால் கொடுங்க, ஐயா!'' என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். சின்னஞ் சிறு சிறுமி ஒருத்தி எனக்குப் பின்னால் நின்று கொண்டிருந்தாள்! அவளைப் பார்த்ததும் எனக்கு தூக்கி வாரிப் போட்டது. ஏனெனில் அவள் என் நண்பன் சிவராமனின் செல்வக் குழந்தை! - இந்தக் கதி அவளுக்கு எப்படி நேர்ந்தது?

''கஸ்தூரி! என்னைத் தெரிகிறதா, உனக்கு?''

''தெரிகிறது மாமா!''

''அம்மா, அப்பா எல்லாம் எங்கே இருக்கிறார்கள்?''

''அம்மா வீட்டில் இருக்கிறாள்; அப்பா ஆஸ்பத்திரியிலே இருக்கிறார்!''

''அப்பா ஏன் ஆஸ்பத்திரிக்குப் போனார்?''

''அவருக்குக் கால் என்னத்துக்கோ நடக்க வராமற் போச்சு; அதாலே அவர் ரெண்டு மாசமா ஆஸ்பத்திரியிலே தான் இருக்கிறார்''

''சரி வா! வீட்டுக்குப் போகலாம்'' என்று நான் அந்தச் சிறுமியை கூட்டிக் கொண்டு சென்றேன்.

* * *

சிவராமன் 'பரஞ்சோதி மில்ஸ்'லில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான்; மாதம் முப்பது ரூபாய் சம்பளம். அந்தச் சம்பளத்தைக் கொண்டு அவன் வாழ்க்கையில் என்னவெல்லாம் செய்ய வேண்டியிருந்தது!

வாரத்தில் ஆறு நாட்கள் தண்ணீர்ச் சாதம் சாப்பிட்டாலும் ஒரு நாளாவது அவன் வத்தக் குழம்புச் சாதம் சாப்பிட வேண்டும். நடு நடுவே உடம்புக்கு ஏதாவது வந்தால் அதையும் பார்த்துக் கொள்ள வேண்டும். மாமாங்கத்துக்கு ஒரு முறையாவது புதுப்புடவை எடுத்துக் கொடுப்பதின் மூலம் தன் மனைவியின் மனதை அவன் திருப்தி செய்ய வேண்டும். தங்க வளையல்களுக்குப் பதிலாக கண்ணாடி வளையல்களாவது வாங்கிப் போட வேண்டும். சினிமா, நாடகம், சர்க்கஸ் போன்ற தமாஷாக்களை அவளும் அவள் குழந்தைகளும் அவர்களுடைய ஜன்மத்தில் ஒரு தடவையாவது பார்க்கச் செய்ய வேண்டும். தன் பெண் விளையாடுவதற்காக அவன்

'ஸலூலாய்ட்' பொம்மை மூன்று சக்கர சைக்கிள் முதலியவை வாங்கித் தராவிட்டாலும் மரப்பாச்சி, ஓலைக் கிலுகிலுப்பையாவது வாங்கித் தரவேண்டும். வீடு தேடி வரும் விருந்தாளிகளை மனங் கோணாமல் உபசரிக்க வேண்டும். பந்து மித்திரர்கள் அவ்வப்போது நடத்தும் கல்யாணம், கர்ண வேதனம், சீமந்தம் முதலிய விசேஷங்களில், மூக்கால் அழுது கொண்டாவது அவன் சன்மானம் செய்ய வேண்டும் - அப்பப்பா! இத்தனை கஷ்டங்களுக்கு ஓர் ஏழைத் தொழிலாளி ஈடு கொடுப்பது எப்படி? இந்தக் கஷ்டங்களையெல்லாம் அளவுகோலாக வைத்துக் கொண்டா முதலாளிகள் அவனுக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள்?

இந்த லட்சணத்தில் அப்பா இரண்டு மாத காலம் ஆஸ்பத்திரியில் இருந்தால் பெண் ஏன் பிச்சை எடுக்க வரமாட்டாள்?

* * *

இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டே சென்ற நான, சிறிது நேரத்திற்கெல்லாம் சிறுமியின் வீட்டை அடைந்தேன். அவளுடைய அம்மா என்னைக் கண்டதும் ''வாங்க, அண்ணா! மன்னி சௌக்கியமா?'' என்று கேட்டபடி என்னை வரவேற்றாள்.

''சௌக்கியந்தான்!'' என்று சொல்லிவிட்டு ''கஸ்தூரியின் கதி ஏன் இப்படியாச்சு?'' என்று நான் அவளை விசாரித்தேன்.

''கால வித்தியாசம், அண்ணா! அவர் சம்பாதிக்கும் போதே கையில் ஒரு காலணா மிச்சமிருக்காது. இப்பொழுது கேட்க வேண்டுமா? அவர் பாயும் படுக்கையுமாகி விட்டார். வேறு வழியில்லாமல் நான் இரண்டு பெரிய மனிதர்கள் வீடுகளில் வேலை செய்து வருகிறேன். நான் வேண்டாமென்றாலும் சொன்னாலும் கேட்காமல் கஸ்தூரியும் என்னுடைய கஷ்டத்தில் பங்கெடுத்துக் கொள்கிறாள். இது தான் அவளுடைய கதி!''

''ஏன், இந்தச் சங்கடமான சமயத்தில் முதலாளி உபகாரச் சம்பளம் ஒன்றும் கொடுத்து உதவி செய்யவில்லையா?''

''ஐயா! உபகாரச் சம்பளம் கொடுக்காமலிருப்பதோடு நின்றால் போதுமே! 'அவருக்காக வேலை காத்திருக்காது' என்று வேறே சொல்லுகிறார்களாமே!'' என்றாள் அவள்.

இதைக் கேட்டதும் என் சிந்தனை சுழன்றது - என்ன அநியாயம்! கேவலம் ஒரு 'மெஷின்' வேலை செய்வதற்கு லாயக்கில்லாமற் போனால் அதைப் பழுது பார்க்க ரூபாய் ஆயிரம் வேண்டுமானாலும்

எந்த முதலாளியும் செலவழிக்கத் தயாராயிருக்கிறான். ஆனால் வாழ்நாட்கள் முழுதும் தன்னிடம் நாயாயுழைத்த ஓர் ஏழைத் தொழிலாளி வேலை செய்வதற்கு லாயக்கில்லாமற் போனால், அவனுக்காக ஒரே ஒரு ரூபாய் செலவழிக்கக்கூட மனம் வருவதில்லை! - மனிதன் என்ன யந்திரத்தைவிட அவ்வளவு மட்டமானவனா? இரும்பு யந்திரத்தை வேண்டுமானால் மனிதன் நினைத்தால் சிருஷ்டித்துவிடலாம்; மனித யந்திரத்தை மனிதன் நினைத்தால் சிருஷ்டித்துவிட முடியுமா? - இவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டே நான் உட்கார்ந்திருந்த போது, நொண்டி நொண்டி நடந்த வண்ணம் உள்ளே நுழைந்தான் என் நண்பன். ''என்னப்பா இது?'' என்றேன் நான்.

''வேறொன்றுமில்லை; கடவுளின் கருணை! - அவன் அருளால், என் கைகளும் கால்களும் இனிமேல் சரிப்பட்டு வராதென்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள்!'' - என்றான் அவன் விரக்தியுடன்.

''ஆ!'' என்று அலறினாள் அவன் மனைவி.

''அப்படின்னா இனிமே அப்பாவாலே வேலைக்குப் போகமுடியாது!'' என்று முத்தாய்ப்பு வைத்தாள் குழந்தை கஸ்தூரி.

''ஆமாம் அம்மா! இனிமேல் உன்னோடு நானும் சேர்ந்து பிச்சை எடுக்க வேண்டியது தான்!'' என்றான் அவன்.

என் கண்களில் நீர் துளிர்த்தது. அதற்குமேல் என்னால் ஒரு கணம்கூட அங்கே உட்கார்ந்து கொண்டிருக்க முடியவில்லை; எழுந்து நடையைக் கட்டினேன்.

# ரிக்ஷாவாலா

சென்ற வருடம் கைலாசநாதர் கோயிலுக்குச் சென்ற நேயர்கள், அந்தத் தோட்டக்காரக் கிழவனைப் பார்த்திருக்கலாம். அந்த வயோதிகனின் பெயர் காளிமுத்து; வயது அறுபதுக்கு மேலிருக்கும். தளர்ந்து மெலிந்த அவன் சடலத்தில் ஏதோ சஞ்சலம் ஊறிக் கிடந்தது. அந்தச் சஞ்சலத்தின் சாயை, அவனது வாடி வதங்கிய வதனத்தில் எப்பொழுதும் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

அந்தக் கோயிலில் காசிலிங்கப் பண்டாரம் என்று ஒருவன் இருந்தான். சுவாமிக்கு நிவேதனம் செய்வதற்காகச் சாதம் சமைத்து வைப்பது, பூசை நேரத்தில் மணி அடிப்பது, கோயிலைக் கூட்டிச் சுத்தமாக வைப்பது முதலியன அவனுடைய வேலைகள்.

ஒரு நாள் காசிலிங்கம், ''என்ன சுவாமி! இந்த ஏகாந்த வாழ்வில் ஒரு கவலைக்கும் இடமில்லையே? அப்படி இருக்கும்போது, தங்களுடைய மனம் ஏன் சதா சஞ்சலத்தில் உழன்று கொண்டிருக்கிறது?'' என்று காளிமுத்துவைக் கேட்டான்.

ஒரு நீண்ட பெருமூச்சுக்குப் பிறகு ''சஞ்சலம் என்ன சுவாமி...!'' என்று ஆரம்பித்தான் காளிமுத்து. துக்கம் அவனது தொண்டையை அடைத்தது. அவன் ஏதோ கதை சொல்லப் போகிறான் என்பதை ஊகித்துக் கொண்ட காசிலிங்கம், கிழவனின் முகத்தையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை; கிழவன் இரண்டு துளி கண்ணீர் விட்டபிறகு, தன்னுடைய கதையைச் சொல்ல ஆரம்பித்தான்.

*  *  *

''ரிக்ஷா இழுத்துப் பிழைக்கும்படிதான் என்னை என் பெற்றோர் வளர்த்திருந்தார்கள். வாலிபம் இருக்கும் வரையில் அந்தத் தொழில் எனக்கு வழி காட்டிக் கொண்டு வந்தது. அதற்குப் பிறகு என் வண்டியில் ஏறி என்னை ஆதரிப்பதற்குப் பதிலாக சிலர் என்னைக் கண்டதும் இரக்கப்பட்டார்கள். வேறு சிலர் ''இவன் அவசரத்துக்கு உதவாத ஆசாமி!'' என்று தங்கள் வழியைப் பார்த்துக் கொண்டு போய்விட்டார்கள். ஆனாலும் அந்தத் தொழிலை விட்டால் எனக்கு அப்போது வேறு கதி ஒன்றும் இல்லாமலிருந்தது.

ஒரு சமயம் தொடர்ந்து மூன்று நாட்கள் வரையில் எனக்குப் போதிய சவாரி கிடைக்கவில்லை! வண்டிக்காரனுக்கு வாடகை கொடுப்பதற்கே வழியில்லாமல் போய்விட்டது. நான்காவது நாள் நாலணாவுக்குக்கூட வழியில்லாமல் தெருவெல்லாம் சுற்றி யலைந்த

பிறகு, ஒரு சாலையின் ஓரமாக வண்டியை நிறுத்தி விட்டுச் சற்று உட்கார்ந்தேன்.

அப்பொழுது, ''அடே, யாரடா அவன்! அங்கே ஏன் வண்டியை நிறுத்தினாய்? 'ரிக்ஷா ஸ்டாண்ட்' என்னத்திற்காக இருக்கிறது? என்று அதட்டிக்கொண்டே ஒரு போலீஸ்காரன் வந்தான்.

நான் பேசாமல் எழுந்து நின்றேன். 'என்னடா முழிக்கிறே? வா ஸ்டேஷனுக்கு!' என்றான் அவன்.

அப்பொழுது என் கையில் ஏதாவது காசு இருந்தாலும் ஒரு நாலணாவை எடுத்து அவனிடம் கொடுத்துத் தப்பித்துக் கொண்டிருப்பேன். அதுவும் இல்லை. எனவே பேசாமல் வண்டியை இழுத்துக் கொண்டு அவனுக்குப் பின்னால் நடந்தேன்.

* * *

மறுநாள் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குப் போவதற்காகக் கிளம்பினேன். அப்பொழுது என் மனைவி மாங்காளி பூரண கர்ப்பிணி. அவள் ''கையிலே காசு இல்லாமல் கோர்ட்டுக்குப் போய் என்னா பண்ணாப் போறே? அவன் அபராதம் போடமாட்டானா?'' என்று கேட்டாள்.

''என்ன பண்றது? ஜெயில்லே இருந்துட்டுத்தான் வரணும்!''

''ஐயோ! நான் இருக்கிற இந்த நிலையிலே என்னை ஒண்டியா விட்டுப்பிட்டா நீ ஜெயிலுக்குப் போகப் போறே!''

''நான் உசிரோடு இருக்கத்தானே இப்படிச் சொல்றே? இல்லாவிட்டா என்ன பண்ணுவே? அதுமாதிரி நினைச்சுக்கோ! எல்லாம் கடவுள் இருப்பார்!''

''இருக்காரே, இந்த நாலு நாளா கையிலே ஒரு காசும் இல்லாமெ ஜெயில்லே போடறதுக்கு!'' என்றாள் அவள்.

நான் அவளைப் பிரிய மனமின்றிப் பிரிந்து சென்றேன்.

இரண்டு வாரங்கள்தான் எனக்குச் சிறைவாசம் கிடைத்தது. அதற்குள் என் வாழ்க்கையில் எவ்வளவு பெரிய மாறுதல் ஏற்பட்டுவிட்டது!

சிறைவாசம் முடிந்து வீட்டிற்கு வந்தேன்; ஒரே ஏமாற்றம். வீட்டில் பூரண கர்ப்பிணியாயிருந்த எனது மனைவியைக் காணவில்லை. அக்கம் பக்கத்தில் இருந்தவர்களை விசாரித்தபோது, அவர்கள் சொன்ன சேதிதான் என்னை இந்த ஆண்டிகள் கூட்டத்தில் சேர்த்துவிட்டது.

நான் சிறை சென்ற மறுநாளே அவள் பிரசவ வேதனைக்கு உள்ளானாளாம். யாரோ கொடுத்த தகவலின் பேரில் 'ஆம்புலன்ஸ்'

கார் வந்து அவளை ஆஸ்பத்திரிக்கு ஏற்றிக் கொண்டு போயிற்றாம். அன்றிரவு ஆஸ்பத்திரி சேவகன் வந்து அவள் இறந்துவிட்ட சேதியைத் தெரிவித்தானாம். அவனிடம் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் ''நமக்கு ஏன் வீண் வம்பு?'' என்று நினைத்தோ என்னமோ 'அவளுக்கு இங்கே யாரும் இல்லை' என்று சொல்லி விட்டார்களாம்.

இதைக் கேட்டதும் என் மனம் எப்படி இருந்திருக்கும்? என்னை யாரோ அந்தரத்தில் தூக்கிச் செல்வது போல இருந்தது; மெய்மறந்து நின்ற இடத்திலேயே நின்றேன். இப்படி எவ்வளவு நேரம் நின்று கொண்டிருந்தேனோ எனக்குத் தெரியாது. 'அடேய், நாலுநாள் வண்டி வாடகை எங்கே?' என்று யாரோ என்னைக் கேட்பது கேட்டுத் திரும்பினேன். வண்டிக்குச் சொந்தக்காரன் எனக்கு எதிரே நின்று கொண்டிருந்தான். அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டு 'எங்கே போகிறோம்?' என்று தெரியாமல் ஓடினேன்.

அதற்குப் பிறகு சுமார் இருபத்தைந்து வருடங்கள் எப்படியோ கழிந்தன. கடைசியில் இந்தக் கைலாசநாதரின் கிருபையால் எனக்கு இங்கே ஒரு வேலை கிடைத்தது. என்னமோ காலத்தைக் கழித்துக் கொண்டு வருகிறேன். என்றாலும் அந்தக் கவலை மட்டும் என்னை விட்டுத் தொலையவில்லை. என்ன செய்வது?'' என்று கிழவன் தன் கதையைச் சொல்லி முடித்தான்.

இந்தச் சமயத்தில் கைலாசநாதர் கோயிலின் தர்மகர்த்தாவான தர்மதீர நாயக்கர் காரில் வந்து இறங்கிக் கோயிலுக்குள்ளே நுழைந்தார். அவரைப் பார்த்ததும் ''அதோ தர்மகர்த்தா வந்து விட்டார்; நான் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு எழுந்தான் கிழவன்.

அதுவரை அவன் சொன்ன கதையைக் கேட்டுக் கொண்டிருந்த காசிலிங்கம் ஒரே வியப்புடன் ''தர்ம கர்த்தா வேறு யாருமில்லை, சுவாமி! உம்முடைய பிள்ளை தான். இவரை ஈன்ற பிறகுதான் உம்முடைய மனைவி இறந்து போனாள். அந்த ஆஸ்பத்திரியில் வேலை பார்த்து வந்த ஒரு 'நர்ஸ்'ஸால் இவர் எடுத்து வளர்க்கப்பட்டார். வேண்டுமானால் அந்தக் கதையை அவரையே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். இப்பொழுது கேட்ட கதையிலிருந்து நீங்கள்தான் அவருடைய தந்தை என்று எனக்கு இன்று தான் தெரிந்தது!'' என்றான்.

''ஆ!'' என்று அலறினான் கிழவன். ஆச்சரியத்தால் அவனுடைய விழிகள் பிதுங்கின; ஒரு நிமிஷம் அவனுடைய இதயம் 'படபட'வென்று அடித்துக் கொண்டது. மறுநிமிஷம் அது 'டக்'கென்று நின்றுவிடவே, கிழவன் 'பொத்'தென்று கீழே விழுந்து விட்டான்.

சஞ்சலம் சாவில் முடிந்துவிட்டது!

# சித்தப்பா

அன்று மாலை நான் வீட்டிற்குள் நுழையும்போது அவளைத் தவிர வேறு யாரும் அந்த வீட்டில் இல்லை. அப்போது தான் அவள் கூடத்திலிருந்து கண்ணாடியின் முன்னால் நின்று முகத்தில் பௌடரைப் பூசிக் கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் அவளைப் பார்க்கும்போது சமையலறைக்குத் திருடச்சென்ற கறுப்புப் பூனை, சாம்பலைப் பட்டதும் படாததுமாகப் பூசிக்கொண்டு எதிரே வருவது போலிருந்தது. அதைப் பார்த்ததும் என்னையும் அறியாமல் நான் சிரித்துவிட்டேன். எனது சிரிப்பின் ஒலியைக் கேட்டதும் அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அப்பொழுது அவள் முகத்தில் தோன்றிய நாணத்தின் சாயல் எனக்கு ஒருவிதமான இதத்தைக் கொடுத்தது.

அடுத்த கணமே அவள் முகத்தை இரு கைகளாலும் பொத்திய வண்ணம் தன் அறைக்குள் ஓடி ஒளிந்து கொண்டாள்.

* * *

அவள் வேறு யாருமில்லை; அத்தையின் மகள்தான். பெயர் நீலா; நான் எப்படி தாய் தந்தையற்ற அனாதையோ, அதே மாதிரி அவளும் தாய் தந்தையற்ற அனாதை. இருவரும் எனது சித்தப்பாவின் பாதுகாப்பில் தான் இருந்தோம். அவர் எனது அப்பாவுடன் பிறந்தவர்தான்; ஆனாலும் என்னைக் கண்டால் அவருக்கு ஏனோ பிடிப்பதில்லை. சித்தி மட்டும் எங்களிடம் கூடியவரையில் விசுவாசத்துடனே நடந்து கொண்டாள்.

என்றைக்காவது ஒருநாள் இரவு வெகு நேரங் கழித்து நான் வருவேன். அம்மாதிரி சமயங்களில் எனக்காக என் சித்தி காத்திருக்க முடியாது. அவளை முதலில் சோற்றில் தண்ணீரைக் கொட்டிவிட்டு வந்து படுத்துக் கொள்ளச் சொல்வார் சித்தப்பா. அத்துடன் நின்றாலாவது எவ்வளவோ நன்றாயிருக்குமே; அதுவும் கிடையாது. தெருக்கதவை வேறு சாத்தித் தாளிட்டு விடுவார். நான் வந்தால் படுத்துக் கொள்வதற்கு வேறு எந்த வீட்டுத் திண்ணையாவது தேடிக் கொள்ள வேண்டியது தான். இந்த லட்சணத்தில் நீலா என்னைக் காதலித்தாள் என்றால் அது என்னுடைய கஷ்ட காலந்தானே?

அப்பொழுது நான் மேற்கொண்டிருந்த தொழிலோ பத்திரிக்கையில் வெளியாகும் கதைகளுக்குப் படம் போடுவது. நான் ஒன்றும் அப்படிப் பிரமாதமான ஓவியக்காரனல்ல; இளம் ஓவியக்காரன். ஓரிரண்டு பத்திரிகைகளில் இடம் கிடைப்பதே

கஷ்டமாயிருந்தது. அதற்குக் கூட வழி காட்டியவன் எனது பள்ளிக்கூடத்து நண்பனான 'சுந்தர்'தான். அவன் டெல்லியில் பிரசித்தி பெற்ற ஓர் ஆங்கில வாரப் பத்திரிக்கையில் மாதம் இருநூறு ரூபாய் சம்பளமாகப் பெறும் பேர் போன ஓவியக்காரன்; அவனும் தன்னால் ஆன மட்டும் எனக்கு எங்கேயாவது மாதச் சம்பளத்தில் வேலை தேடிக் கொடுக்க வேண்டும் என்று முயன்று வந்தான்; முடியவில்லை.

அதிகமாய்ப் போனால் மாதம் பத்துப் பதினைந்து ரூபாய்க்கு மேல் எனக்கு வரும்படி கிட்டாது. இது அப்படியே எனது சித்தாப்பாவுக்கு அர்ப்பணமானாலும் அவருக்குக் கொஞ்சம் திருப்தியா யிருக்கும். அதற்கும் குறுக்கே இருந்தது எனது ஒரே ஒரு தம்பியின் படிப்பு. ''இப்படியிருந்தால் எந்தச் சித்தப்பாவுக்குத்தான் அதிருப்தி இல்லாமலிருக்கும்!'' என்று என்னை நானே தேற்றிக் கொள்வேன்.

* * *

ஒரு நாள் என்னவோ அவளும் நானும் மணக் கோலத்தில் இருப்பது போல் படம் போட்டுப் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஆசை உண்டாயிற்று. போட்டுப் பார்த்தேன்; வெகு நன்றாக அமைந்து விட்டது. எனது அறையில் உட்கார்ந்துகொண்டே அந்தப் படத்தை இப்படியும் அப்படியுமாக வைத்துப் பைத்தியக்காரன் மாதிரி பார்த்துக் கொண்டிருந்தேன். இந்தச் சமயத்தில் அடுப்பங்கரையில் இருந்தபடி சித்தி என்னைக் கூப்பிடவே, அதை அப்படியே மேஜைமீது வைத்துவிட்டு நான் எழுந்து சென்றேன். திரும்பி வருவதற்குள் அந்தப் படத்தை நீலா எடுத்துக் கொண்டு போய்விட்டாள். எனக்கு அவளிடமிருந்து எப்படியாவது அதைப் பிடுங்கிக் கொள்ள வேண்டுமென்று தோன்றிற்று. எப்படிப் பிடுங்கிக் கொள்வது? சித்தி வீட்டில் இருக்கிறாளே!

நல்ல வேளையாகப் பக்கத்து வீட்டில் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகும் பெண்ணுக்கு நலங்கு வைக்கிறார்கள் என்பதற்காகச் சிறிது நேரத்திற்கெல்லாம் சித்தி சென்றுவிட்டாள். அதுதான் சமயம் என்று நான் மெல்ல அவளது அறையின் பக்கம் சென்று எட்டிப் பார்த்தேன். அப்பொழுது அந்தப் படத்தை வைத்துக் கொண்டு அவள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நீலா!'' என்றேன்.

திரும்பிப் பார்த்தாள். ''இந்தப் படத்தில் இருப்பவர்கள் யாரோ?'' என்று ஏதும் அறியாதவள் போல் என்னைக் கேட்டாள்.

''ஏன், தெரியவில்லையா? நீயும் நானும்தான்!''

''இப்படி நடக்குமென்றா நினைக்கிறீர்கள்?''

''நடக்காது!''

''ஏன் நடக்காது?''

''சித்தப்பா சொல்வதை நீ கேட்டதில்லையா?''

''என்ன சொல்கிறார்!''

''என்னுடைய லட்சணத்துக்கு உன்னைக் கல்யாணம் செய்து வைக்க வேண்டியது தான் பாக்கி என்கிறார்!''

''ஆமாம், உங்களைக் கண்டால் ஏன் அவருக்கு வெறுப்பாயிருக்கிறது?''

''இது தெரியாதா? நான் அவருடைய அண்ணாவின் பிள்ளை; அதிலும் வரும்படி கட்டை!''

''நான் துர்ப்பாக்கியசாலி! உங்கள் அப்பாவாயிருந்தால் அப்படிச் சொல்வாரா?'' என்றாள் அவள் சோகக் குரலில்.

''நானும் துர்ப்பாக்கியசாலிதான்!'' என்று சொல்லிக் கொண்டே அவளுடைய கையிலிருந்த படத்தை நான் பிடுங்கப் போனேன்.

''வேண்டாம், என்னிடமே இருக்கட்டும்'' என்று சொல்லிக் கொண்டே அவள் அந்தப் படத்துடன் ஓட எத்தனித்தாள். நான் விடவில்லை; அவள் ஓட, நான் ஓட ஓடிக் கொண்டே இருந்தோம். கடைசியில் வேறுவழியின்றி அவளுடைய பின்னலைப் பிடித்துக் கொண்டேன்.

இந்தச் சமயத்தில் யாரோ தெரு வாயிலில் வருவது போலிருந்தது. திடுக்கிட்டுத் திடீரென்று பிடித்துக் கொண்டிருந்த பின்னலை விட்டுவிட்டு, 'இந்தப் பூனையும் அந்தப் பாலை குடிக்குமா?' என்பது போல் மெல்ல எனது அறைக்கு வந்து விட்டேன். நான் பின்னலை விட்ட வேகத்தில் அவள் கீழே விழுந்து விட்டாள். அப்பொழுது அங்கே சித்தி, ''ஐயோ பெண்ணே!'' என்று சொல்லி அவளை எடுத்து அணைத்துக் கொண்டாள்.

''புடவை தடுக்கி விழுந்து விட்டேன், மாமி!'' என்று சொல்லிக் கொண்டே அவள் என்னைக் கடைக்கண்ணால் பார்த்துக் குறுநகை பூத்தாள். அப்பொழுது நான் திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தேன்.

* * *

இந்தச் சம்பவம் நடந்த சில நாட்களுக்குப் பிறகு சித்தப்பா நான் வெகு நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு சேதியைக் கொண்டு வந்தார். அன்று அவர் வேலையிலிருந்து வரும்போதே என்றுமில்லாத உற்சாகத்துடன் சித்தியைக் கூப்பிட்டு ''அடியே! நீலா அதிர்ஷ்டசாலி தான். அவளுக்கு நல்ல இடத்தில் வரன் கிடைத்து விட்டது. பிள்ளையாண்டானின் பெயர் சுந்தரராகவனாம். மாதம் இருநூறு ரூபாய் சம்பாதிக்கிறானாம். வரதட்சணை ஒரு தம்படிகூட வாங்கக்கூடாது என்கிறானாம். ஆனால் பெண்ணை நேரில் கண்டு 'உனக்கு என்னைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டந்தானா?' என்று ஒரு வார்த்தை கேட்டு விட்டுத் தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதிப்பானாம். நாளைக்கு அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் நம் வீட்டுக்குப் பெண்ணைப் பார்க்க வருகிறார்கள்!'' என்றார்.

''நல்ல வரனைத் தேடிக்கொண்டு வந்து விட்டீர்கள்! ஏன், வீட்டிலேயே இருக்கும் வரனுக்கு என்ன?'' என்று எரிந்து விழுந்தாள் சித்தி.

''அதெல்லாம் எனக்குத் தெரியும்; நீ பேசாமல் வேலையைப் போய்ப் பார்!'' என்றார் சித்தப்பா.

மறுநாள் பிள்ளை வீட்டார் வந்தார்கள். மாப்பிள்ளையைக் கண்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவன் வேறு யாருமில்லை; எனது பள்ளிக்கூடத்து நண்பன், 'சுந்தர்' என்னும் புனைபெயர் பூண்ட சுந்தர ராகவன்!

''சௌக்கியமா?'' என்று சம்பிரதாயப்படி நான் அவனை விசாரித்தேன்!

''சௌக்கியந்தான்; இனிமேல் நீயும் சௌக்கியமாயிருக்கலாம்'' என்று ஒரு போடு போட்டான் அவன்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. ''ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' என்று கேட்டேன்.

''அதைப்பற்றி நான் உனக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன்; இன்று வரும்'' என்றான் அவன்.

இந்தச் சமயத்தில் சித்தப்பா அவனைக் கூப்பிட்டனுப்பினார் - பெண்ணைப் பார்ப்பதற்காக. அவனும் ''இதோ வந்துவிடுகிறேன்!'' என்று என்னிடம் சொல்லி விட்டுச் சென்றான். அவன் சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் நானும் அவனைப் பின் தொடர்ந்து சென்றேன்.

வீட்டு கூடத்தின் ஒரு மூலையில் சோகமே உருவாய் நின்று கொண்டிருந்தாள் நீலா. அந்த நிலையில் அவளைப் பார்க்க எனக்குப் பரிதாபமாயிருந்தது. அவள் குறிப்பை ஒருவாறு அறிந்து கொண்டவன் போல் ''என்னைக் கல்யாணம் செய்துகொள்ள உனக்கு இஷ்டமில்லையல்லவா?'' என்று கேட்டான் சுந்தர்.

''ஆ....மா....!'' என்று மென்று விழுங்கிக் கொண்டே சொன்னாள். இதைக் கேட்டதும் சித்தப்பாவின் கண்களில் தீப்பொறி பறந்தது. ''பின் யாரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய்?'' என்று அவர் கர்ஜித்தார்.

''அத்தா....னைத்....தான்!'' என்று இழுத்தாள் நீலா.

''இந்தச் சாப்பாட்டு ராமனையா?''

''ஆமாம், மாமா!''

அதற்குள் ''அட! உன்னை வீட்டில் வைத்துக் கொண்டா வரனாகத் தேடிப் பிடித்தார்கள்?'' என்றான் 'சுந்தர்' ஆச்சரியத்துடன்.

''ஆமாம், நான் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேனோ, இல்லையோ? அதனால் அவளும் எனக்கு வாழ்க்கைப்பட்டு ஏன் கஷ்டப்பட வேண்டும் என்று சித்தப்பா நினைத்தார்!'' என்று நான் அவனுக்குச் சமாதானம் கூறினேன்.

''இதெல்லாம் வாழ்க்கையில் சகஜந்தானே! எனக்கு மட்டும் என்றைக்கும் வேலை யிருக்குமென்பது என்ன நிச்சயம்? ஆனால், இனிமேல் உனக்கும் ஒன்றும் கஷ்டமில்லை. எங்கள் பத்திரிக்கை இம்மாதத்திலிருந்து வாரம் இருமுறையாக வருகிறது. இன்னொரு 'ஆர்ட்டிஸ்ட்' தேவை என்றார்கள். உன்னைப் பற்றிச் சொன்னேன். 'சரி' என்று ஒப்புக் கொண்டார்கள். எடுத்ததும் சம்பளம் நூறு ரூபாய். கடிதம் இன்று வரும் என்றேனே, அந்தக் கடிதத்தில் இதைத்தான் எழுதியிருக்கிறேன். ஆகவே எனக்குக் கல்யாணம் ஆவதற்குள் நீயும் இந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு என்னுடன் டெல்லிக்குக் கிளம்பத் தயாராயிரு!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தான் சுந்தர்.

அவனுடைய சிரிப்பில் எனது சித்தப்பாவும் எதிர்பாராத விதமாக கலந்து கொண்டார்.

நான் நீலாவைப் பார்த்தேன்; நீலா தரையைப் பார்த்தாள்!

# பத்தினித் தெய்வம்

துணியை துவைத்துப் பிழிந்து தோளில் போட்டுக் கொண்டாள்; குளித்து முழுகிக் கூந்தலை விரித்து விட்டுக் கொண்டாள்; குடத்தில் நீரை நிரப்பி இடுப்பில் வைத்துக் கொண்டாள்; குனிந்த தலை நிமிராமல் குளத்தங் கரையிலிருந்து வந்து கொண்டிருந்தாள்.

குடும்பப் பெண்; குறுகுறுப்பான பார்வை; கண்ணிமைகள் கொட்டும்போது யாரையோ 'வா,வா' என்றழைப்பது போலிருந்தது. நகை முகம்; குழி விழுந்த கன்னங்கள்; நடக்கும் கைவீச்சில் ஒரு கவர்ச்சி; நடையிலே ஒரு சிருங்காரம்; நடுநடுவே தண்ணீர் 'தொளக், தொளக்' என்று தளும்பும் சத்தம்.

அவள் பெயர் முத்தம்மா. ஆண்டியப்பனுக்கும் அவளுக்கும் கல்யாணம் ஆகிப் பத்து மாதங்கள்தான் ஆகியிருந்தன.

''முத்தம்மா!'' - இப்படி அவளுக்குப் பின்னாலிருந்து ஒரு குரல்.

திரும்பிப் பார்த்தாள். ஒரு காலத்தில் அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருந்த சாத்தப்பன் அங்கே நின்று கொண்டிருந்தான்.

''இவன் எப்படி இங்கே வந்தான்?'' - இவ்வாறு யோசித்துக் கொண்டே முத்தம்மா பேசாமல் நின்றாள். சாத்தப்பன் ஆசாபாசத்தோடு அவளை நெருங்கினான்.

''என்னா, முத்து! நல்லா யிருக்குதில்லே, நியாயம்?''

''நான் என்ன செய்வேன்?''

''என்ன செய்வேனா? கட்டிக்கிட்டா உன்னைத்தான் கட்டிக்குவேன். இல்லாட்டா கிணத்திலாச்சும் குட்டையிலாச்சும் விழுந்து சாவேன்'னு சொன்னியே. மறந்துட்டியா!''

''என்னமோ, எல்லாரும் சொல்லிக்கிட்டாப்போல நாமும் சொல்லிக்கிட்டோம்...''

''ஓஹோ! நீ என்மேலே வச்சிருந்த ஆசையெல்லாம் அம்மட்டுந்தானா?''

''ஆசை யிருந்தாப் போதுமா? தமயந்திக்காக சுயம்வரம் வச்சாங்க; அவ தனக்குப் பிடிச்ச நளமகாராசனுக்கே மாலையிட்டா! என் கல்யாணத்துக்கு அப்படியா வச்சாங்க, நான் உனக்கே மாலையிட?''

''சுயம்வரம் வச்சாத்தானா? பொம்மியம்மா மதுரைவீரன் சாமியோடே ஓடிவந்த மாதிரி நீ என்னோடே ஓடி வந்துட்டா, என்னா?''

''ஐயோ! அப்படிச் சேஞ்சா நாலு பேரு என்னா சொல்லுவாங்க? அதாலே உனக்கும் கெட்ட பேரு; எனக்கும் கெட்ட பேருதானே?''

''நல்லாச் சொன்னே! இப்போ பொம்மியம்மாவுக்கும் மதுரைவீரன் சாமிக்கும் ஊரிலே கெட்ட பேரு வந்துடுத்தா?''

''சாமியும் நாமும் ஒண்ணா? ஊரிலே பார்த்தா ஒருத்தர் மேலே ஒருத்தர் ஆசை வச்சுக் கல்யாணம் பண்ணக்கிட்டவங்களும், தாய் தகப்பன் பார்த்துக் கல்யாணம் பண்ணி வச்சவங்களும் ஒரே மாதிரியாய்த் தான் இருக்காங்க! இப்போ கல்யாணம் பண்ணிக் கிட்டேனே, அந்த மனுசரும் என்னை ஒண்ணும் சிம்மாசனத்திலே உட்காரவச்சிச் சோறு போடலே; இல்லே, உன்னையே கல்யாணம் செஞ்சிக்கிட்டிருந்தாலும் நீயும் என்னை ஒண்ணும் சிம்மாசனத்திலே உட்கார வச்சிச் சோறு போடப் போகிறதில்லே அன்னிக்கே ஆணுக்கு இப்படி பெண்ணுக்கு இப்படின்னு தலையிலே எழுதி வச்சானே, அந்தப் பிரம்மன் எழுத்துப்படிதான் எல்லாம் நடக்கும். அதாலே, நடந்து போச்சு; இனிமே என்னை நீ மறந்துடு...''

அதற்குள் பொறுமையை இழந்துவிட்ட சாத்தப்பன், ''நானா மறந்துடுவேன்?'' என்று சொல்லிக்கொண்டே முத்தம்மாவின் கரத்தைப் பற்றினான்.

''சீ! விடு, விடு!'' என்று அவனிடமிருந்து தன் கையை விடுவித்துக் கொண்டு 'விர்'ரென்று வீட்டை நோக்கி நடந்தாள் முத்தம்மா.

* * *

என்னதான் சாத்தப்பன் தன்னைக் காதலித்திருந்தாலும் நான் இன்னொருவனுக்குச் சொந்தமான பிறகு அவன் தன் கரத்தைப் பலவந்தமாகப் பற்ற வந்ததை முத்தம்மா வெறுத்தாள். ''இப்படியுமா அவனுக்குப் புத்தி கெட்டுப் போய்விடும்?'' என்று எண்ணிக்கொண்டே அவள் தன் வீட்டை நெருங்கியபோது, வாசலில் ஒரு கட்டை வண்டி வந்து நின்று கொண்டிருந்தது. அந்த வண்டி தன் பிறந்தகத்தின் வண்டி என்று தெரிந்ததும் அவள் அவசர அவசரமாக உள்ளே நுழைந்தாள்.

யாரையும் அங்கே காணவில்லை; வண்டிக்காரன் தான் நின்று கொண்டிருந்தான்.

''என்னடா சங்கதி?''

''அம்மா ரொம்பக் காயலாக் கிடக்கிறாங்க; உங்களை உடனே அழைச்சுக்கிட்டு வரச் சொன்னாங்க!''

''ஐயய்யோ! அவருகூட வீட்டிலே இல்லையே! மாடு பிடிக்கப் போயிருக்காரு. அவருக்கிட்டே ஒரு பேச்சுச் சொல்லாமெ வரலாமா?''

''ஆபத்துக்குப் பாவமில்லே, அம்மா! அண்டை அசல்லே சொல்லிவிட்டு வந்தா, அவர் வந்ததும் சொல்லுவாங்க இல்லே?''

''அப்படியா ரொம்பக் காயலாக் கிடக்கிறாங்க!''

''ஆமாம், அம்மா! இப்பவே நீங்க வந்தாத்தான் அந்த அம்மாவை உசிரோடு பார்க்கலாம்?''

''அட, பாவமே! இந்தச் சேதியையா இவ்வளவு தாமசமா சொன்னே? ஓடு, ஓடு! போ, உடனே வண்டியைக் கட்டு! இதோ எதிர்வீட்டுச் சின்னம்மாகிட்ட இந்தச் சேதியைச் சொல்லிவிட்டு நான் வர்றேன்!'' என்று வெலவெலக்க ஓடினாள் முத்தம்மா.

* * *

'லொடுக்கிட்டி, லொடுக்கிட்டி' என்று தனக்குத் தானே பாஷையில் ஏதோ பாடிக் கொண்டே வண்டி நெடு நேரம் போய்க் கொண்டிருந்தது. எனினும் வழி மாளவில்லை; அந்திவேளை மட்டும் மாய்ந்துவிட்டது; ஒரே அந்தகாரம்; வண்டிக்காரன் மாட்டை அதட்டி ஓட்டும் ஓசை சத்தத்தைத் தவிர வேறு சத்தமேயில்லை.

''டேய், நிறுத்து வண்டியை!'' இப்படித் திடீரென்று ஓர் உத்தரவு.

வண்டிக்காரன் வண்டியை நிறுத்தி விட்டான். அதே கணத்தில் முத்தம்மாவின் கரத்தைப் பிடித்து யாரோ ஒருவன் கரகரவென்று இழுத்தான்.

''ஐயய்யோ!'' என்று அலறினாள் முத்தம்மா.

''அஹ்ஹஹ்ஹா!'' என்று சிரித்தான் சாத்தப்பன்.

அவனுக்குப் பின்னால் யாரோ அவனைப் போலவே சிரிக்கும் சத்தம் கேட்கிறதே, யார் அது? - கவனித்துப் பார்த்தாள் முத்தம்மா. வண்டிக்காரன் சிரித்துக் கொண்டிருந்தான்!

''அட மோசக்காரப் பாவி!''

* * *

ஊருக்கு அப்பாலிருந்த ஓர் ஒண்டிக் குடிசைக்குள் முத்தம்மாவைக் கொண்டு போய்த் தள்ளினான் சாத்தப்பன். அப்பொழுது, தன் படுமோசமான பலாத்காரச் செய்கையில் அவன் வெற்றியைக் கண்டுவிட்டவன்போல் விளங்கினான். வலிமை மிகுந்த அவன் வலக்கரம் மீசையைக் 'கறுக்'காக முறுக்கிவிடுவதில் ஈடுபட்டது.

கண்ணீர் தேங்கிய முத்தம்மாவின் கண்களும், இரத்தக் கறை படிந்த சாத்தப்பனின் கண்களும் ஒரு நிமிடம் சந்தித்தன. அடுத்த நிமிடம் ''நாளைக் காலை நாலு மணிக்கெல்லாம் அடுத்த ஊர் ஸ்டேஷனிலிருந்து அரக்கோணத்துக்கு வண்டி போகுது. அந்த வண்டியில் நாம் இருவரும் போக வேண்டும்; தயாராயிரு!'' என்று அதிகாரக் கட்டளை! - உடனே கதவை அடைக்கும் சத்தம்; 'கலகல'வென்று சிரிக்கும் சத்தம்.

பெண்ணுடன் பிறக்காத பேய்! அற்ப வெற்றியின் அளவில்லாத ஆனந்தம் கொண்டு இரைந்து சிரித்தது.

இருட்டறையில் தனியே விடப்பட்ட முத்தம்மாவின் உள்ளத்தில் எதற்கென்று தெரியாத ஓர் அமைதி. அந்த அமைதியில் பாரத நாட்டுப் பெண்மணிகளுக்கென்றே பிரத்தியேகமாக அமைந்த கற்பைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே என்ற கவலை. உடனே அவள் மனக்கண் முன் ஒரு பெண் உருவம் காட்சி அளித்தது.

''தாயே! தாங்கள் யாரோ?''

''நான்தான் பத்தினித் தெய்வம். குழந்தாய்! உன் கற்பைக் காப்பாற்றிக் கொள்''

''அப்படியா? அந்தப் பாவியின் பலாத்காரத்துக்கு முன்னால் என் கற்பு காப்பாற்றப்படுமா? எப்படிக் காப்பாற்றுவாய், தாயே?''

''உன்னைப் பலி கொண்டு!''

''என்னைப் பலி கொண்டா?''

''ஆம், என்றைக்காவது ஒரு நாள் நீ அழிவது நிச்சயம். ஆனால் உன்னைச் சேரும் பழி மட்டும் என்றென்றைக்கும் அழியாது. ஆகவே நீ பழிக்குப் பயப்படுகிறாயா, பலிக்குப் பயப்படுகிறாயா?''

''பழிக்குத்தான், தாயே!''

''அப்படியானால் எனக்குப் பலியாகிவிடு!''

''தங்கள் சித்தம்''

* * *

விடியற்காலை மூன்று மணி இருக்கும். சாத்தப்பன் வந்து கதவைத் திறந்தான்; பலாத்காரம் படுதோல்வி அடைந்திருப்பதைக் கண்டான்; ஏனெனில் முத்தம்மா அவனை வரவேற்கவில்லை. அவளுடைய உயிரற்ற உடல் தான் அவனை வரவேற்றது. அதைக் கண்டதும் அவனுடைய உள்ளம் பதைபதைத்தது. ''முத்தம்மா!'' என்று அழைக்க வாயெடுத்தான்; வார்த்தை வெளிவரவில்லை.

தூக்குக் கயிற்றைப்போல் துக்கம் அவனுடைய துணிந்த நெஞ்சை இறுக்கிவிட்டது போலும்!

அடுத்த நிமிடம் 'அக்கா!' என்று ஆந்தையின் அழுகுரல். அங்கே நிலவியிருந்த பயங்கரமான நிசப்தத்தைக் கலைத்தது.

# தங்கமே தங்கம்

"தங்கத்தாலே காப்புப் போட்டுத்
தங்கமே தங்கம் - உனக்குத்
தாலிகட்டப் போறேனே நான்
தங்கமே தங்கம்!"

இந்தப் பாட்டு நந்தபாலனுக்கு நினைவு வந்ததும் அவன் முகத்தில் ஓர் அலாதிக் களை தோன்றி அவனை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்தியது. அடுத்த கணம் எங்கேயோ பிறந்து வளர்ந்து கடைசியில் கழைக் கூத்தாடியான தன் கதையை நினைத்தபோது அவனுடைய ஆனந்தம் இருந்த இடம் தெரியாமல் பறந்தது.

ஒரு சமயம் கம்பத்தின் உச்சியில் நின்று கரணம் போட்டுக் கொண்டிருந்த நந்தபாலன் தவறிக் கீழே விழுந்து விட்டான். அவன் காலில் பலமான அடி பட்டு விட்டது. உடனே அவன் சிகிச்சை பெறுவதற்காக அந்த ஊரிலிருந்த ஒரு பாதிரிமார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான். சிறிது குணமாயிருக்கவே அவன் ஆஸ்பத்திரியின் பின்புறத் தோட்டத்தின் டாக்டரின் உத்தரவுப்படி நடைவண்டியைத் தள்ளிய வண்ணம் உலாவிக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் தான் மேலே குறிப்பிட்ட பாட்டு நந்தபாலனின் நினைவுக்கு வந்தது. உடனே அவன் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான்.

எத்தனையோ கதைகளில் எத்தனையோ கதாநாயகர்களுக்கு நேர்ந்த கதி தான் நந்தபாலனுக்கும் நேர்ந்திருந்தது. சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்துவிட்ட அவன் தனக்குத் தூரபந்துவும் மாமன் உறவினனுமான கோவிந்தக் கோனான் வீட்டில் வளர்ந்து வந்தான். தங்கம் அவனுடைய மாமாவின் பெண். தினசரி இருவரும் சேர்ந்து ஆடுமாடுகளை மேய்க்கச் செல்வார்கள். மலைப்புறத்தில் அவற்றை மேய விட்டுவிட்டுத் தங்களுக்குப் பிடித்தமான ஓர் ஆலமரத்தடிக்கு அவர்கள் வருவார்கள். அருகருகே தொங்கிக் கொண்டிருக்கும் இரண்டு ஆலம் விழுதுகளுக்கு மத்தியில் ஒரு கனத்த கம்பைக் கட்டி நந்தபாலன் ஊஞ்சல் ஜோடிப்பான். அதில் தங்கத்தை உட்கார வைத்துத் தள்ளிவிடும்போது தான் அவன் முதன் முதலில் குறிப்பிட்ட பாட்டைப் பாடுவது வழக்கம். தங்கம் அந்தப் பாட்டை விரும்பாதவள் போலத் தன் முகத்தைக் கோணிக் கொண்டு "ஊம், நான் அழுவேன்!" என்று நந்தபாலனைப் பயமுறுத்துவாள்.

''நீ அழணும். அப்போது உன் அழகைப் பார்க்கணும்னு தானே அந்தப் பாட்டைப் பாடறேன்!'' என்பான் நந்தபாலன்.

தங்கம் 'களுக்'கென்று சிரித்துவிடுவாள்.

''பார்த்தாயா தங்கம், என்னை ஏமாத்திப்பிட்டயே!'' என்பான் நந்தபாலன்.

திடுக்கிட்டுவிடுவாள் தங்கம். ''நான் என்ன ஏமாற்றி விட்டேன்?'' என்று அவளுக்கு ஒன்றும் புரியாது. முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு ''நான் உன்னை என்னா ஏமாத்திப்பிட்டேன்? சொன்னத்தான் ஆச்சு!'' என்று ஊஞ்சலை விட்டு கீழே குதித்துவிடுவாள்.

நந்தபாலன் சிரித்துக்கொண்டே ''அது தான் அழாம ஏமாத்திப்பிட்டியே!'' என்று அவள் கன்னத்தை லேசாகத் தட்டப் போவான். தங்கம் அதற்கு இடங்கொடாமல் அவனைப் பாடாய்ப் படுத்தி மனம் களிப்பாள்!

அந்தி வேளை வந்ததும் அவர்கள் அங்கங்கே மேய்ந்து கொண்டிருக்கும் ஆடு மாடுகளை ஒன்று சேர்த்து ஓட்டிக் கொண்டு வருவதற்காக மலைப்புறத்திற்குச் செல்வார்கள். அப்பொழுதும் தங்கம் ஒரு குன்றிலிருந்து இன்னொரு குன்றுக்குச் செல்லும்போதும் குன்றைவிட்டுக் கீழே குதிக்கும் போதும் அநாயாசமாகத் தாவுவாள். நந்தபாலனுக்குச் சில இடங்களில் பிரமிப்புத் தட்டிவிடும். அவன் அவளைப் பின்பற்ற முடியாமல் விழிப்பான்; அம்மாதிரி சமயங்களில் தங்கம் அவனுக்குக் கைகொடுத்து உதவும் போது அவனைச் சிரிப்பாய்ச் சிரிக்க வைத்துவிடுவாள். நந்தபாலன் அவளுக்குச் சளைக்காமல் ''தங்கம்! நான் என்னாத்துக்கு அந்தக் குன்றிலிருந்து குதிக்க அப்படி முழிச்சேன், தெரியுமா? எல்லாம் உன் கையைப் பிடிக்கணுமேங்கிற ஆசையாலே தான்!'' என்று சொல்லிச் சமாளித்துக் கொள்ளப் பார்ப்பான்.

* * *

கடைசியில் நந்தபாலனுடைய ஆசையில் ஒரு நாள் மண்ணைப் போட்டு விட்டான் கோவிந்தக் கோனான். அதற்கேற்றாற்போல் அன்று ஓர் ஆட்டுக்குட்டி ஓநாய்க்கு இரையாகிவிட்டது. அதைப்பற்றி அவன் நந்தபாலனைத் திட்டிக் கொண்டிருக்கும்போது அங்கே வந்த எதிர் வீட்டுக் கோபாலக் கோனான், ''அவன் அங்கே மாட்டையா மேய்க்கிறான்? உன் மகளையல்லவா மேய்ச்சுக்கிட்டு இருக்கிறான்''

என்று கோள் சொல்லிவிட்டான். அதைக் கேட்டதும் கோவிந்தக் கோனானுக்கு ஆத்திரம் அளவுக்கு மீறி வந்து விட்டது. ஏனெனில் அவன் கோபாலக் கோனானிடம் வேண்டிய மட்டும் கடன் வாங்கி யிருந்தான். அந்தக் கடனை ஈடு செய்வதற்காக அவன் தன்னுடைய பெண்ணைக் கோபாலக் கோனானின் பிள்ளைக்குக் கல்யாணம் செய்து கொடுக்க எண்ணியிருந்தான்.

ஆகவே "இனிமேல் நீ என் வீட்டுப் பக்கம் தலையைக் காட்டினா, தலையை வெட்டிப்பிடுவேன்!" என்று சொல்லி அவன் நந்தபாலனை விரட்டி விட்டான்.

எதிர்பாராத இந்தச் சம்பவத்தைக் கண்டு தாரை தாரையாகக் கண்ணீர் வடிப்பதைத் தவிர, தங்கத்தால் வேறொன்றும் செய்ய முடியவில்லை.

தனக்கு ஆறுதல் அளிக்க 'தலைவிதி'யைத் தவிர வேறு ஒன்றையும் காணாத நந்தபாலன், அந்த ஊருக்கு அப்பொழுது வந்திருந்த கழைக் கூத்தாடிகளின் கோஷ்டியில் சேர்ந்துவிட்டான். ஏன், தங்கத்தை மறக்க அது தான் சிறந்த வழி என்றும் அவன் அப்பொழுது நினைத்தான்.

* * *

இந்தக் கடைசிக் கட்டத்துக்கு வந்ததும் நந்தபாலன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டுத் தன்னுடைய மனோரதத்தை மிக்க பிரயாசையுடன் நிறுத்தினான். அப்பொழுது அந்த ஆஸ்பத்திரியின் தோட்டத்துக்கு வெளியே,

**"தங்கத்தாலே காப்புப் போட்டுத்**
**தங்கமே தங்கம்....!"**

என்று யாரோ பாடிக்கொண்டு சென்றது அவன் காதில் விழுந்தது. குரலோசையிலிருந்து இந்தப் பாட்டைப் பாடுவது தங்கமாய்த்தான் இருக்க வேண்டுமென்று ஊகித்துக் கொண்ட நந்தபாலன், வியப்பும் திகைப்பும் ஒருங்கே அடைந்தவனாய் ஆஸ்பத்திரியின் மதிற்சுவருக்கு மேல் தலையை நீட்டி எட்டிப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! - சந்தேகமேயில்லை. தங்கம், தங்கமேதான்!

"தங்கம்! தங்கம்!"

நந்தபாலனைப் பார்த்ததும் தங்கமும் தன்னுடைய ஆடல் பாடலை நிறுத்து விட்டு அசைவற்று நின்றாள்.

''இரு, இரு! இதோ வந்துட்டேன்!'' என்று சொல்லிவிட்டு, நந்தபாலன் ஆஸ்பத்திரியின் அதிகாரிகளிடமிருந்து உத்தரவு பெற்றுக்கொண்டு அந்த நிமிடமே அங்கிருந்து வெளியேறினான்.

வழியில், ''தங்கம்! நீ எப்படி இங்கே வந்தே?'' என்று கேட்டான்.

''நிஜமாகவே உனக்கு ஒரு சங்கதியும் தெரியாதா? என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள இருந்த கோபாலக் கோனார் மகன் செத்துப்பூட்டான். என் பொல்லாத ஜாதகத்தாலேதான் அவன் செத்துப்புட்டான்னு ஊரிலே எல்லாம் ஒரே பேச்சு. அதாலே வேறே ஒருத்தனும் என்னைக் கல்யாணம் பண்ணிக்க வரலே. அவன் அப்பன் எப்படியாச்சும் நம்ம கடன் வந்தாப் போதும்னு கோர்ட்டிலே வழக்கைப்போட்டு, எங்க அப்பாவுக்கு இருந்த நிலபுலம், ஆடுமாடு எல்லாத்தையும் ஜப்தி சேஞ்சுப்போட்டான். இந்தக் கஷ்டத்தையெல்லாம் தாங்க முடியாம எங்க அப்பாவும் செத்துப்பூட்டாரு. இப்போ எங்க அம்மாவும் நானும் ஊரிலே இருந்தா ஒண்ணும் சரிப்பட்டு வராதுன்னு இந்த ஊருக்கு வந்து கூலிவேலை சேஞ்சி பிழைச்சுக்கிட்டு வாரோம்'' என்று சொல்லிச் சோகமே உருவாய் நின்றாள் தங்கம்.

''அப்படியா சங்கதி? அத்தனை கஷ்டத்திலும் என் பாட்டை மட்டும் நீ மறக்கலையே!'' என்று வியந்தான் நந்தபாலன்.

''எப்படி மறப்பேன்?'' என்றாள் தங்கம்.

இப்படிப் பேசிக்கொண்டே தங்கம் அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். வழியில் நந்தபாலனின் கதையைக் கேட்ட தங்கம், தணலைக் கண்ட தங்கம் போல் உருகினாள்.

வீட்டுக்குள் நுழைந்ததும் நந்தபாலனைக் கண்ட தங்கத்தின் தாயார் தன்னை மறந்து நின்றாள். தங்கம் மூச்சு விடாமல் அவனுடைய கதையைத் தன் தாயிடம் சொன்னாள். அதைக் கேட்ட அவள் ''அப்பாடா! எப்படியோ நீ என் வீட்டைத் தேடி வந்துட்டே! இனிமேல் என் கஷ்டம் தொலைஞ்சுது!'' என்றாள்.

''என்ன கஷ்டம் தொலைஞ்சுது?'' என்று கேட்டாள் தங்கம்.

''எல்லாம் உன் கல்யாணக் கஷ்டந்தான்!'' என்றாள் அவள்.

அப்பொழுது நந்தபாலனைப் பார்த்த தங்கத்தின் அகன்ற விழிகள், ''உஷார்! இங்கே என் அம்மா இருக்கிறாள்!'' என்று அவனை எச்சரிப்பது போலிருந்தன.

# செந்தமிழ் நாட்டிலே

''எழுத்தாளன் பிழைக்க வேண்டுமானால் அவன் எண்ணமும் எழுத்தும் ஒன்றாயிருக்கக் கூடாது; எண்ணம் வேறு, எழுத்து வேறாய்த்தானிருக்க வேண்டும். இல்லையானால் அவன் வாழப் பிறந்தவனல்ல; சாகப் பிறந்தவன்!''

இந்த அபிப்ராயத்தைத் திருவாளர் சதானந்தம் ஒப்புக் கொள்ளவேயில்லை. 'கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காக எண்ணத்தையும் எழுத்தையும் - மாற்றிக் கொள்ள மாட்டேன். தம்பி! இது செத்தவர் வாழும் தமிழ்நாடு; நானும் செத்தபின் வாழ்வேன்!' என்பார் அவர்.

''வயிற்றுப் பிழைப்பைக் கேவலமாக நினைக்கும் இவர் வாழ்ந்த மாதிரிதான்!'' என்று நான் எண்ணிக் கொள்வேன்.

ஏனெனினல் ''உலகத்திலேயே வயிற்றுப் பிழைப்பைப் போன்ற ஓர் உயர்ந்த லட்சியம் வேறொன்றும் கிடையாது!'' என்பது தான் என் திடமான அபிப்பிராயம்.

உண்மையில், இன்று எத்தனையோ எழுத்தாளர்களுடைய அபிப்ராயமும் அது தான். ஆனால், அதைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்வதற்குச் சிலர் வெட்கப்படுகிறார்கள் - அவ்வளவு தான் விஷயம்!

முதலில் அந்த லட்சியம் நிறைவேறினால் தானே, அப்புறம் மற்ற லட்சியங்களைப் பற்றிச் சிந்திக்கவாவது முடியும்?

*　　*　　*

வாழ்க்கையில் சதா துக்கமாக இருந்த திரு. சதானந்தம் அவர்களை, அவருடைய வாழ்நாளில் யாருமே கவனிக்கவில்லை.

''அஸ்வினி, பரணி, கார்த்திகை என்று இருபத்தேழு நட்சத்திரங்களின் பெயர்களையும் நான் ஒருவனே புனைப் பெயர்களாக வைத்துக் கொண்டு, என் பத்திரிக்கை பூராவும் நானே கதை, கட்டுரை எழுதிக்கொண்டாலும் எழுதிக் கொள்வேனே தவிர, உம்முடைய கதை, கட்டுரையை மட்டும் ஒரு பக்கம் கூட பார்க்க மாட்டேன்; அப்படியே பார்த்தாலும் பிரசுரித்தாலும் ஒரு பைசாக் கூடக் கொடுக்கமாட்டேன்!'' என்று எத்தனையோ பத்திரிகாசிரியர்கள் அவருடைய கதை, கட்டுரைகளை நிராகரித்துவிட்டார்கள்.

'ஒரே புத்தகத்தை ஒன்பது பதிப்புகள் போட்டு லாபம் சம்பாதித்தாலும், அந்தப் புத்தகத்தை எழுதியவருக்கு ஒரே ஒரு தடவைதான் சன்மானம் கொடுப்போம்!'' என்னும் சட்டத்தைத் தங்கள் பிறப்புரிமையாகக் கருதும் பிரசுரகர்த்தர்கள் கூட, திரு. சதானந்தத்தை அவருடைய வாழ்நாளில் ஆதரிக்கவில்லை.

பாமர மக்கள் அவருடைய எழுத்தைப் பாராட்டுவதோடு நின்றுவிட்டனர். பணக்காரர்கள் அதுகூடச் செய்யவில்லை; பட்டம் பதவிக்காகவும், பெருமை, புகழுக்காகவும் அவர்கள் பணத்தை வாரியிறைத்தனர். படித்தவர்கள் அவருடைய எழுத்தைப் பார்ப்பதுகூட இல்லை. அவர்களுடைய பார்வையெல்லாம் மேல் நாட்டு இலக்கியகர்த்தாக்களின் மேல் இருந்தது.

பொறாமையே உருவான எழுத்தாளர் உலகமோ அவர் தொண்டுக்கு மாசு கற்பிப்பதையே தன் பொழுது போக்காகக் கொண்டிருந்தது.

இதனாலெல்லாம் திரு. சதானந்தம் தம்முடைய வாழ்நாளில் பட்ட துன்பமும் துயரமும் கொஞ்சமன்று. எழுத்தையே மூலதனமாகக் கொண்ட அவர், வேறு தொழில் ஏதாவது செய்து வாழ்வதற்கும் தகுதியற்றவராயிருந்தார்.

வருடத்தில் ஒரு மாதமாவது திரு.சதானந்தம் தம் மனைவியுடன் சேர்ந்து வாழ்க்கை நடத்தியதில்லை. ''அவள் நம்மை விட்டுப் பிறந்தகம் போனால் போதும்!'' என்று அவர் இருப்பார். ''அவர் நம்மைப் பிறந்தகம் போகச் சொன்னால் போதும்!'' என்று அவள் இருப்பாள்.

இந்த லட்சணத்தில் அவருக்கு ஆணும் பெண்ணுமாக இரண்டு குழந்தைகள்.

இத்தனைக்கும் சதானந்தத்தின் மனைவி, சந்திரமதியின் கதையைப் படித்துத்தான் இருந்தாள். ஆனாலும் அவளால் எப்பொழுதும் அந்தக் கதையின் கருத்தைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்க முடியவில்லை. சில சமயம் அவளுக்குத் தாங்க முடியாத ஆத்திரம் வந்துவிடும். தன் கணவனைக் கோபித்துக் கொள்வாள். இம்மாதிரி சமயங்களில் ''காதல் கீதல் எல்லாம் வெறும் கதைகளில் மட்டும் இருக்கட்டும்'' என்று எண்ணியவராய், திரு. சதானந்தம் தம் நெற்றிக்கண்ணைக் காட்டுவதன் மூலம் நிலைமையைச் சமாளித்துக் கொள்வார்.

அதற்கேற்றாற்போல் வறுமைப் பேய் அவரை வதைத்தது. குழி விழுந்த கண்களையும் கூன் வளைந்த முதுகையும் பார்த்துக் கூட அந்தப் பாழும் பேய்க்கு மனம் இரங்கவில்லை.

சந்திர சூரியனும் வாயு வருணனும் மட்டும் வழக்கம் போல் திரு. சதானந்தத்தை வஞ்சிக்கவில்லை; ஆனால் மனித வர்க்கம் அவரை வஞ்சித்தது; வதைத்தது.

தூக்கி விடுவாரின்றித் துன்பக்கேணியில் நெடுநாட்கள் நீந்திக் கொண்டிருந்த அவருடைய மனைவி கடைசியில் ஒரு நாள் களைத்துப் போனாள். முடிவு என்ன? முழுகிப்போனாள்!

அவள் தன் ஞாபகார்த்தமாக விட்டுச் சென்ற இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு சதானந்தம் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல.

அப்பொழுதெல்லாம் அவரைக் கவனிக்காத தமிழுலகம், இப்பொழுதோ?

ஏன், இப்படி மாரடிக்கிறது?

*    *    *

அந்த அதிசயத்தைக் கேளுங்கள்:

''நேற்று சூரிய கிரகணத்தின் போது நீராடச் சென்ற திரு. சதானந்தம் கடலில் மூழ்கிவிட்டார்!'' என்ற செய்தியைக் கேட்டதும், தமிழ் நாட்டில் அவருக்காகக் கண்ணீர் வடிக்காதவர்களே கிடையாது.

அந்தக் கண்ணீரைக் கண்டு கடலே வெட்கியது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

நாடெங்குமிருந்து அநுதாபச் செய்திகளும், தந்திகளும் அவர் வீட்டுக்கு வந்து குவிந்தன.

அன்று அவரைப் பற்றி எழுதிய பத்திரிகாசிரியர்களெல்லாம் தங்கள் பேனாவை மசியில் தோய்த்து எழுத வில்லை; கண்ணீரில் தோய்த்து எழுதினார்கள்.

ரஸிகர்கள், கூட்டம் கூட்டமாய்க் கூட்டினார்கள்; பேச்சுப் பேச்சென்று பேசினார்கள்; தீர்மானம் தீர்மானமென்று நிறைவேற்றினார்கள்.

''சதானந்தம் சகாய நிதி'' என்று நிதி திரட்டி அதை நல்ல வேளையாகச் செத்துப்போன அவருக்கும் அவர் மனைவிக்கும் அனுப்பி வைக்காமல், அவருடைய மக்களுக்கு அனுப்பி வைத்தார்கள்.

இன்னும் அவரைப் பார்க்காதவர்களெல்லாம் பார்த்ததாகச் சொல்லிக் கொண்டனர். பழகாதவர்களெல்லாம் பழகியதாகச்

சொல்லிக் கொண்டனர்; அவர் வீட்டில் தங்காதவர்களெல்லாம் தங்கியதாகச் சொல்லிக் கொண்டனர்.

அவர் 'களுக்'கென்று சிரித்ததும், 'கணீ'ரென்று இருமியதுங் கூடக் கட்டுரைகளாயின!

மனம் நொந்து அவர் தம் மனைவிக்கும், மற்றவர்களுக்கும் எழுதிய கடிதங்களெல்லாம், மக்களின் வாழ்க்கை முறையையே மாற்றி அமைக்கக் கூடிய மாபெரும் வேத வசனங்களாகப் போற்றப்பட்டன!

எப்பொழுதோ ஒரு சமயம் நாயைத் தட்டிக் கொடுத்ததற்காக அவரை 'நான்முகன்' என்று புகழ்ந்தனர்; பூனையைத் தடவிக் கொடுத்ததற்காகப் 'புத்தர்' என்று போற்றினர்.

பத்திரிகாசிரியர்களும், பிரசுரகர்த்தர்களும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு அவர் எழுதி வைத்துவிட்டுச் சென்ற கட்டுரைகளையும், கதைகளையும் ஆயிரம் ஆயிரமாகக் கொடுத்து வாங்கினர்.

நவயுக எழுத்தாளர்கள் தம்முடைய கதை, கட்டுரைகளில் அவரைப் பிதற்றி வைத்திருந்த தனித் தமிழ்ச் சொற்களையெல்லாம் பொறுக்கி யெடுத்து, அவற்றுக்கெல்லாம் தனித் தமிழ் அர்த்தம் கண்டு பிடித்துத் தனித் தமிழ் அகராதி ஒன்று வெளியிட்டனர்.

''உங்கள் அப்பாவைப் பற்றி தெரிந்ததை எழுதிக் கொடுங்கள்'' என்று எத்தனையோ பிரசுரகர்த்தர்கள் அவருடைய பிள்ளையின் மென்னியைப் பிடித்தனர். அவனும் அதற்குப் பின் வாங்காமல் ''என் தந்தையின் ஞாபகங்கள்'' என்று தலைப்புப் போட்டுக் கொண்டு தன் ஞாபகத்தில் இல்லாதவற்றையெல்லாம் எழுதித் தள்ளினான்!

என்னையும் ஒரு பத்திரிகாசிரியர், அவரைப் பற்றி ஏதாவது எழுதும்படி ரொம்பவும் கேட்டுக் கொண்டார். நானும் சளைக்கவில்லை. ''சதானந்தத்தின் சாபம்'' - ''அவரும் நானும்'' என்றெல்லாம் தலைப்புப் போட்டுக் கொண்டு நடந்தது நடக்காதது எல்லாவற்றையும் சாங்கோபாங்கமாக எழுதி வெளுத்துக் கட்டினேன்.

அன்று அவர் பெயரைச் சொல்லி அவரே பிழைக்க முடியவில்லை; இன்றோ அந்த மனிதனின் பெயரைச் சொல்லி எத்தனை பேர் பிழைக்கின்றனர்!

* * *

ஒரு நாள் ''உடனே வரவும்'' என்று திரு. சதானந்தத்தின் பிள்ளையிடமிருந்து எனக்கு ஒரு தந்தி வந்தது; சென்றேன்.

அங்கே கண்ட காட்சி என்னைத் திடுக்கிடச் செய்தது. ஏனெனில் சாட்சாத் திரு. சதானந்தமே அங்கே வீற்றிருந்தார்! என்னைக் கண்டதும் அவர் சாவதானமாக, 'இத்தனை நாளும் வடக்கே யாத்திரை போயிருந்தேன். இன்னும் இரண்டு நாளைக்கெல்லாம் இலங்கை செல்வதென்று தீர்மானித்திருக்கிறேன். அதற்குள் உன்னை ஒருமுறை பார்த்து விட வேண்டுமென்று ஆசை. அதனால் தந்தி கொடுக்கச் சொன்னேன்!'' என்று தம் நீண்ட தாடியைத் தடவிக் கொடுத்துக் கொண்டே சொன்னார்.

''என்ன! உம்மைச் சூரிய கிரகணத்தன்று கடல் கொண்டு போகவில்லையா?''

''இல்லை; வடநாடு தான் கொண்டு போயிருந்தது!''

''இத்தனை நாளும் அங்கே என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?''

''உனக்குத்தான் தெரியுமே. தமிழ் நாட்டில் என்னுடைய எழுத்துக்கு மதிப்பில்லையென்று. ஆகவே வடநாட்டுக்குச் சென்று 'வக்ரநாத்ஜி' என்று பெயரை மாற்றி வைத்துக் கொண்டேன். ஹிந்தியிலே பல நவீனங்களை எழுதித் தள்ளினேன். அவையெல்லாம் இப்பொழுது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுப் பிரமாதமான ஜோடனைகளுடன் வெளி வந்திருப்பதை நீ பார்த்திருக்கலாமே?''

''ஆமாம், ஆமாம்; பார்த்தேன். அந்த 'வக்ரநாத்ஜி' நீங்கள் தானா?''

''ஆமாம் தம்பி, ஆமாம்!''

''இது என்ன வேடிக்கை! அப்படியானால் அமரகவி பாரதியார் கூட ஒருவேளை உங்களைப் போல் தான் எங்கேயாவது இன்னும் யாத்திரை செய்து கொண்டிருப்பாரோ?''

''அவர் அப்படிச் செய்திருந்தால் தான் இன்னும் ஜீவிய வந்தராயிருக்கலாமே!'' என்றார் அவர்.

அதைக் கேட்ட எனக்கு, ''நாமும் கடலில் மூழ்கிவிட்டால் என்ன?'' என்று தோன்றிற்று.

# விதி வென்றதா?

இன்று நேற்றல்ல; என்றுமே தன் முதுகில் ஏதாவது சுமந்து கொண்டு வந்தால் தான் சுப்பன் எஜமான் வீட்டுக்குள் நுழைய முடியும். உதய சூரியன் உச்சி வானத்துக்கு வரும் வரை அவன் உள்ளமும் உடலும் சோர வயலில் உழைத்துவிட்டுப் பசிக்குக் கூழ் குடிக்க வந்தால்கூட, அவனுக்கு 'வரவேற்பு' வாசலோடு தான்!

இந்தச் சம்பிரதாயத்தை யொட்டி, அன்றும் வாசலில் நின்றபடியே, ''அம்மா!'' என்று இரைந்தான் அவன்.

''யாரடா, அது?'' என்று 'டா' போட்டுக் கேட்டாள் உள்ளே இருந்த எஜமானியம்மாள்.

வயதில் சுப்பனைவிட அவள் எவ்வளவோ சிறியவன் தான்; ஆனால் ஜாதியில் பெரியவனல்லவா? - அதனால் தான் அந்த 'டா'!

அவன், 'நான்தான் அம்மா, சுப்பன்!' என்று தன்னைப் பற்றித் தெரிவித்துக் கொள்வதற்குள், வாசலில் நின்று கொண்டிருந்த ரவி, ''சுப்பன் வந்திருக்கிறான், அம்மா!'' என்றான்.

''உழைச்சு ரொம்பக் களைச்சுப் போச்சோ?'' என்று எரிந்து விழுந்து கொண்டே, எஜமானி சுப்பனுக்கென்றே பிரத்தியேகமாகத் தயாரித்து வைத்திருந்த கூழை ஒரு ஏனத்தில் கரைத்து எடுத்துக் கொண்டு வந்தாள்.

சுப்பன் அடக்க ஒடுக்கத்துடன் அவளுக்கு நேரே இரு கையையும் ஏந்தினான் - அவன் பிச்சைக்காரன் அல்ல; உழைப்பாளி. ஆனாலும் ஏனோ அவனுக்கு அத்தனை அடக்க ஒடுக்கம்!

கூழைக் குடித்துவிட்டு வெளியே போகும்வரை சுப்பனையே கவனித்துக் கொண்டிருந்த ரவிக்கு என்ன தோன்றிற்றோ என்னமோ, அவன் உள்ளே ஓடோடியும் சென்று தன் அம்மாவிடம் ''ஏன், அம்மா! சுப்பனுக்கு வீடு, வாசல் ஒன்றுமே யில்லையா?'' என்று கேட்டான்.

''ஏண்டா, அப்படிக் கேட்கிறே?''

''இல்லை அம்மா! அவன் எப்போது பார்த்தாலும் நம்ம வீட்டு வேலையே செஞ்சுண்டு, நம்ம வீட்டுக் கூழையே குடிச்சுண்டு, நம்ம வீட்டு வாசலில் நாய் மாதிரி காத்துண்டு கிடக்கிறானே, அதனாலே கேட்டேன்?''

''அவனுக்கு வீடு, வாசல் இல்லாமல் என்னடா? அதோ இருக்கே ஒரு குடிசை. அது தான் அவன் வீடு?''

''ஐயோ! அந்தக் குடிசையில் தீப் பிடித்துக் கொண்டால்....?''

''அவன் எழவுக்கு நாம்தான் வேறே கட்டிக் கொடுக்கணும்!''

''அதற்கில்லை அம்மா! அவன் உள்ளேயிருந்தால்?''

''வெளியே வந்துவிடுகிறான்?''

''தூங்கிக் கொண்டிருந்தால்?''

''செத்துத் தொலைகிறான்?''

''அவன் செத்தால் நமக்குக் கஷ்டமில்லையோ?''

''நமக்கென்ன கஷ்டம்?''

''நம்ம வீட்டு வேலையை யார் செய்வா?''

''அதற்கென்ன, எத்தனையோ கழுதைகள் இருக்கு!''

''ஊஹூம்! கழுதைகள் கூட நம்ம வீட்டு வேலையைச் செய்யுமா, அம்மா?''

அவள் சிரிக்கிறாள்.

''ஏம்மா சிரிக்கிறே?''

''இல்லை, கண்ணே! நான் கழுதை என்று நிஜக் கழுதையைச் சொல்ல வில்லை; சுப்பனைப் போன்றவர்களைச் சொன்னேன்!''

''இதென்ன அம்மா! சுப்பனைப் போன்றவர்களெல்லாம் கழுதைகளா?''

''இல்லையா? அவர்களெல்லாம் உருவத்தில் மட்டும் தான் மனிதர்களாயிருக்கிறார்களே தவிர, காரியம் செய்வதில் கழுதைகள் தான். இட்ட வேலையைச் செய்வது; வைத்த தீனியைத் தின்பது! இவற்றைத் தவிர அந்தக் கழுதைகளுக்கும் வேறு வேலையில்லை; இவர்களுக்கும் வேறு வேலை கிடையாது!''

''அவர்கள் ஏன் அம்மா அப்படி இருக்கிறார்கள்?''

''அது அவர்களுடைய விதி!''

''விதி என்றால் என்ன அம்மா?''

''முன் ஜன்மத்தில் அவர்கள் செய்த பாவ புண்ணியத்துக்குத் தக்கபடி பகவான் விதிக்கும் தண்டனை!''

''அப்பாவுக்கு அந்த விதி இல்லையோ?''

''இல்லை அவர் அதிர்ஷ்டசாலி!''

''இந்த அதிர்ஷ்டம் சுப்பனுக்கு இல்லையோ?''

''இல்லை.''

''ஏன் இல்லேம்மா?''

''அவன் பாவத்தைப் பண்ணியவண்டா!''

''பாவம் என்றால் என்னம்மா?''

''கெட்டதைச் செய்வது!''

''அப்பா என்னத்தைப் பண்ணினார்?''

''புண்ணியத்தைப் பண்ணினார்!''

''புண்ணியம் என்றால் என்னம்மா!''

''நல்லதைச் செய்வது!''

''அப்பா என்ன புண்ணியம் பண்ணினார்?''

''அதென்னமோ எனக்குத் தெரியாது. போய் அப்பாவைக் கேளு!''

* * *

''அப்பா, அப்பா!''

''என்னடா?''

''முன் ஜன்மத்தில் நீ என்னமோ புண்ணியம் பண்ணினாயாமே, அப்பா?''

''உனக்கு யார் அதைச் சொன்னா?''

''அம்மா சொன்னா!''

''அவளுக்கு எப்படித் தெரியுமாம்?''

''அது எப்படியோ!''

''நீ ஏன் அதைப் பற்றிக் கேட்கிறே?''

''சுப்பனையும், கொஞ்சம் புண்ணியம் பண்ணச் சொல்லலாம்'னுதான் அப்பா!''

''முன் ஜன்மத்தில் நான் எண்ண புண்ணியம் பண்ணினேனோ. இந்த ஜன்மத்தில் எனக்கு அது எப்படித் தெரியும்?''

''இதென்ன அப்பா! வேடிக்கையாயிருக்கே? நீ செய்த புண்ணியம் அம்மாவுக்குத் தெரிகிறது; உனக்குத் தெரியவில்லையே?''

''ஊஹூம்; அம்மாவுக்கும் தெரியாது; எனக்கும் தெரியாது....!''

''பின் யாருக்குத்தான் தெரியும், அப்பா?''

''கடவுளுக்குத்தான் தெரியும்!''

''கடவுளுக்கு மட்டும் தெரிந்து என்ன பிரயோஜனம் அப்பா? பாவ புண்ணியம் பண்ணினவனுக்குத் தெரிந்தால் தானே. அவன் இந்த ஜன்மத்திலாவது தன்னை மாற்றிக் கொள்ள முடியும்?''

''போடா, போக்கிரி! அந்தக் கேள்வியெல்லாம் உனக்கு எதற்கு?''

''இன்னும் ஒரே ஒரு கேள்வி, அப்பா! புண்ணியம் எப்படிப் பண்ணனும்னாவது உங்களுக்குத் தெரியுமோ?''

''கோயில் கட்டுவது, குளம் வெட்டுவது, அன்னதானம் செய்வது...''

''அடேயப்பா! இதெல்லாம் சுப்பனால் செய்ய முடியுமோ? இரண்டு கை கூழுக்கு அவன் நம்மிடம் நாளெல்லாம் வேலை செய்யவேண்டியிருக்கிறதே அவன் எங்கே அன்ன தானம் செய்வது? அவனுக்குக் குடிக்கத் தண்ணீரைக் காணோம், அவன் எங்கே குளம் வெட்டுவது? அவனுக்கு இருக்க வீட்டைக் காணோம், அவன் எங்கே கோயில் கட்டுவது? இந்த லட்சணத்தில் கடவுள் அவனை வைத்து விட்டு 'நீ புண்ணியம் செய்யவில்லை; அதனால் அடுத்த ஜன்மத்தில் நீ கஷ்டப்பட வேண்டுமென்பது உன்னுடைய விதி!' என்றால், அக்கிரமமான்னா இருக்கு!''

''இது ஏதடா, வம்பாய்ப் போச்சு!'' என்று அப்பா எங்கோ நடையைக் கட்ட ஆரம்பித்தார்.

''எங்கேப்பா, போறே? கடவுளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவா?'' என்று கேட்டான் ரவி.

''ஆமாம், போடா!'' என்று அலுப்புடன் சொல்லி விட்டு அவர் மேலே நடந்தார்.

''அனுப்பிவிட்டு வாப்பா, அப்பத்தான் அவருக்குப் புத்தி வரும்!'' என்று சொல்லிவிட்டுத் திரும்பினான் ரவி.

இந்தச் சமயத்தில் அங்கே வந்த சுப்பனின் மனைவியான குப்பி, ''அம்மா! ரெண்டு வைத்திலைச் சருகு இருந்தாக் கொடுங்களேன்?'' என்றாள்.

இந்த 'விண்ணப்பம்' காதில் விழுந்ததும் ''ஏண்டி'' உனக்கு வெற்றிலைச் சருகு இல்லாமல் பல்லெல்லாம் கொட்டிண்டு போறதோ? மாட்டுக் கொட்டாயைக் கூட்டி அலம்புன்னு சொன்னேனே, அலம்பினாயோ?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளேயிருந்த எஜமானியம்மாள் வெளியே வந்தாள் - வாழ்க்கையில் எந்த சுகத்தையுமே ஏழை விரும்பக் கூடாது என்பது அவளுடைய எண்ணம்!

''இப்பத்தான் அலம்பிட்டு வரேன், அம்மா!'' என்றாள் குப்பி.

''ஓஹோ!'' என்று அவள் மீண்டும் உள்ளே சென்றாள். அதற்குள் கை நிறைய வெற்றிலையை எடுத்துக் கொண்டு அவளுக்கு எதிரே வந்தான் ரவி.

''உனக்கு ஏண்டா, இந்த வேலையெல்லாம்?'' என்று அவன் கையிலிருந்த வெற்றிலையை வெடுக்கென்று பிடுங்க ரொம்ப ரொம்ப சிரமப்பட்டு அழுகல், பழுத்தது, உலர்ந்தது - இந்த மாதிரி வெற்றிலைகளாகப் பார்த்துப் பொறுக்கி நாலு எடுத்து அவள் குப்பியிடம் கொடுத்தாள்.

அதைப் பெற்றுக்கொண்ட குப்பி, ''மகராஜியாயிருப்பீங்க!'' என்று அவளை மனமார வாழ்த்தினாள்.

''அட, கடவுளே! குப்பையில் போடும் வெற்றிலையைத் தான் குப்பி போட வேண்டுமென்பது கூடவா உன்னுடைய விதி!'' என்று தனக்குள் நினைத்துக் கொண்டான் ரவி.

அவன் குழந்தை உள்ளம் விதியின் கொடுமைகளை எண்ணிக் குழம்பியது.

* * *

சுப்பனும் குப்பியும் மட்டும் ரவியின் வீட்டில் வேலை பார்க்கவில்லை; அவர்களுடைய ஏக புத்திரனான தொப்பையும் அங்கே வேலை பார்த்து வந்தான். தினசரி எஜமான் வீட்டு மாடுகளை மேய்த்துக் கொண்டு வருவது அவனுடைய வேலை. இவர்கள் மூவரும் ஒருவரைப் பற்றி ஒருவர் கவலைப்படுவதே கிடையாது. ஏன் கவலைப்பட வேண்டும்? அவர்கள் விதிதான் அப்படி யிருக்கிறதே! 'அன்று எழுதியவன் அழித்து எழுதப் போகிறானா!' என்று அபத்தமான நம்பிக்கையிலே, அவர்களுடைய அறிவு அவ்வளவு தூரம் மங்கிக் கிடந்தது.

அன்று மாலை வழக்கம் போல் மாடுகளை ஓட்டிக் கொண்டு எஜமான் வீட்டுக்கு வந்தான் தொப்பை. அதற்கு முன் எத்தனையோ முறை ரவி அவனைப் பார்த்திருக்கிறான். அப்பொழுதெல்லாம் அவன் கண்ணுக்குத் தொப்பை வெறும் 'மாட்டுக்காரப் பைய'னாகவே தோன்றி வந்தான். அன்று என்னமோ தெரியவில்லை. அவனும் 'மனித'னாகத் தோன்ற ஆரம்பித்து விட்டான் ரவிக்கு!

தொப்பையப்பனின் சாம்பல் பூத்த கருத்த மேனியும், அழுக்குப் படிந்த பரட்டைத் தலையும், அரையில் அணிந்திருந்த கௌபீனமும் அத்தனை நாட்களாக ரவியின் அகக் கண்களுக்குத் தெரியவில்லை; அன்று தெரிந்தது!

அவன் உண்பதுண்டா? உடுப்பதுண்டா? படிப்பதுண்டா? - இந்தக் கேள்விகளெல்லாம் ரவியின் உள்ளத்தில் அத்தனை நாட்களாக எழவில்லை; அன்று எழுந்தது!

அவன் ஏன் அந்த நிலையில் இருக்கிறான்? அதற்கும் காரணம் விதியா?

விதி! விதி! விதி! இவர்களுடைய விதியை மாற்றவே முடியாதா?

சிறிது நேரம் உதட்டின் மேல் விரலை வைத்த வண்ணம் வீட்டுக் கூரையை நோக்கி யோசித்தான் ரவி.

அவ்வளவுதான்; ஓ, மாற்றலாம் போலிருக்கிறதே! - இல்லாதவனுக்கு விதி; இருப்பவனுக்கு அதிர்ஷ்டம்! - இவ்வளவுதானே?

ஒரு கணம் ஒன்று, இரண்டு, மூன்று என்று விரல் விட்டு எண்ணிக் கொண்டே போனான் ரவி. எத்தனைவரை எண்ணினானோ என்னமோ கடைசியில் "ஆமாம்; அப்படித்தான் செய்யவேண்டும்" என்று தனக்குத் தானே அவன் தீர்மானித்துக் கொண்டான்"

நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. வளர் பிறைபோல ரவி வளர்ந்து வந்தான். உயரத்தில் மட்டுமல்ல; அறிவிலும்தான்!

மேற்படிப்பை முன்னிட்டுச் சென்னைக்கு வந்தான் ரவி. தட்டிக் கேட்க ஆளில்லாத 'ஹாஸ்டல்' வாழ்க்கை கூட அவன் மனத்தை மாற்றவில்லை; எப்பொழுதும்போல் அப்பொழுதும் அவன் உள்ளத்தில் ஏழைச் சுப்பனின் குடும்பம் இடம் பெற்றிருந்தது. அவர்களுடைய விதி அவனை வதைத்துக் கொண்டிருந்தது.

கடைசியில் என்ன?

அவன் போட்ட புள்ளியும் மாறவில்லை; வைத்த எண்ணமும் அவனை மாற்றவில்லை. காரியம் எப்படியோ கைகூடி விட்டது.

* * *

ஈஸ்டர் விடுமுறையின்போது கிராமத்துக்கு வந்திருந்தான் ரவி. அவன் வந்ததும் வராததுமாக ''ரவி! சுப்பன் சமாசாரம் தெரியுமோ? அவன் விதியை வென்று விட்டான்! இப்பொழுது அவன் நிலமும், நீரும், வீடும் வாசலுமாகச் சௌக்கியமா யிருக்கான். தொப்பைகூடக் கையிலிருந்த கோலை தூக்கித் தூர எறிந்துவிட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டான், படிப்பதற்கு!'' என்றார் தகப்பனார்.

''விதியையாவது, அவன் வென்று விட்டதாவது? கடவுள் கண்ணைத் திறந்தார் என்று சொல்லுங்கோ!'' என்றாள் தாயார்.

ரவிக்குச் சிரிப்பு வந்தது.

''கண்ணைத் திறந்தது அந்தக் கடவுள் இல்லை, அம்மா! இந்தக் கடவுள்!'' என்று தன்னைத்தானே அவன் சுட்டிக் காட்டிக் கொண்டான்.

''என்ன!'' என்று இருவரும் அவனை ஏக காலத்தில் பாதாதிகேசம் வரை பார்த்து விழித்தனர்.

''ஆமாம், அம்மா! நான்தான் இத்தனை வருஷ காலமாக நீங்கள் என் செலவுக்காகக் கொடுத்த பணத்திலிருந்து கொஞ்சம் பிடித்துச் சேர்த்து வைத்துச் சென்ற வருஷம் தான் அவனுக்கு ஒரு காணி நிலத்தையும் ஒரு ஜோடி மாட்டையும் வாங்கிக் கொடுத்தேன். அதைக் கொண்டு தான் அவன் விதியை வென்று விட்டான்! உண்மை இது தான்; வேண்டுமானால் யாருக்கும் புரியாத அந்தரார்த்தம் தத்துவார்த்தமெல்லாம் செய்து பொறுப்பை ஆண்டவன் தலையில்

போடப் பார்க்கலாம்; அவ்வளவுதான்! இப்பொழுது சொல்லுங்கள்; விதி வென்றதா?''

இந்தச் சமயத்தில் ''இல்லை, சாமி! வென்றது உங்க முயற்சி தானே?'' என்று எங்கிருந்தோ ஒரு குரல் கேட்டது.

எல்லோரும் சத்தம் வந்த திக்கை நோக்கித் திரும்பினர்.

பட்டணத்திலிருந்து ரவி வந்திருப்பதாகக் கேள்விப்பட்டு ஓடோடியும் வந்த சுப்பன், ஆனந்தப் பரவசத்தோடு அவர்களுடைய காலடியில் வீழ்ந்து வணங்கினான்.

# நாத்தனார்

''அன்னம்மா! இந்த அதிசயத்தைக் கேட்டியா? என்னமோ எங்க வீட்டுக்காரி ரெண்டு மாசமா முழுகாம இருக்காளாம். அதுக்கு அவ பண்ணுற அட்டகாசத்தைப் பார்த்தா எனக்கு என்னமாத்தான் இருக்குது, தெரியுமா? தலையைச் சுத்தறதாம், மயக்கம் வரதாம், வாந்தி வரதாம் இன்னும் என்னவெல்லாமோ சொல்றா; ஏன்னா, வீட்டு வேலையைச் செய்வதற்கு நான் ஒருத்தி இருக்கிறேனோ இல்லையோ?'' என்றாள் கங்கம்மா.

''என்னம்மோ அறியாதது! உன்னுடைய குழந்தை மாதிரி நினைச்சுக்கிட்டுப் போயேன்!'' என்றாள் அன்னம்மா.

''போயும் போயும் நான் உங்கிட்டெ நியாயம் கேட்க வந்தேனே!'' என்று அவள் மேல் எரிந்து விழுந்துவிட்டு அடுத்த வீட்டு ஆண்டாளிடம் மேற்சொன்ன அநியாயத்தைத் தெரிவித்தாள் கங்கம்மா.

அவள் அதை கேட்டுவிட்டு ''வீட்டு வேலைக்கு வேறே ஆளு இருந்தா, அவள் அப்படியா இருப்பா, இதுக்கு மேலேயும் இருப்பா! எல்லாம் அவனுங்க கொடுக்கிற செல்லம்!'' என்று கங்கம்மாவுடன் ஒத்து ஊதினாள்.

கங்கம்மாவுக்குப் பொழுது விடிந்தால் இதே வேலை தான். அவளுக்குத் தன் தம்பி கந்தசாமியைப் பற்றியும், அவன் மனைவி வஞ்சியைப் பற்றியும் எவரிடமாவது ஏதாவது குறை சொல்லவில்லை என்றால் பொழுது போகாது. பட்டணத்தில் வாழ்ந்து வந்த அவள், தன்னுடைய கணவன் சண்டைக்குப் போய்விட்டதால் தம்பியின் வீட்டுக்கு வந்திருந்தாள்.

முதன் முதலில் அக்காளின் வருகையை அறிந்தபோது கந்தசாமி எவ்வளவோ சந்தோஷப்பட்டான். அக்கா வந்தால் வஞ்சிக்குத் துணையாக இருப்பாள் என்று அவன் நினைத்தான். தான் இருக்கும் நிலையில் அவள் வருவதைப் பற்றி வஞ்சிக்கும் முதலில் எவ்வளவோ சந்தோஷமாய்த் தானிருந்தது. அதெல்லாம் இப்பொழுது பகற் கனவாகி விட்டது. அவள் வந்ததன் பயனாகத் தங்கள் வாழ்க்கையில் அவர்கள் அனுபவித்து வந்த தித்திப்பு, கசப்பாக மாறியது தான் மிச்சம்!

*  *  *

கங்கம்மாவுக்குக் கபாலி என்றொரு பிள்ளை. பிள்ளை என்றாலும் பிள்ளை, மணியான பிள்ளை. வாய் ஒரு நிமிஷங் கூட அசையாமல் இராது.

அன்று வஞ்சி கூழுக்காகக் கம்பு மா அரைத்துக் கொண்டிருந்தாள். யந்திரத்திலிருந்த மா கொஞ்சங் கொஞ்சமாக விழுந்து கொண்டிருக்கும் போதே கபாலி அவற்றை யெல்லாம் கபளீகரம் செய்து கொண்டிருந்தான். தன் வேதனையை எவ்வளவோ தூரம் சகித்துக் கொண்டு, அந்த வேலையைச் செய்து கொண்டிருந்தாள் வஞ்சி. மனித இதயம் மண்ணாங்கட்டியா, மாறுதல் இல்லாமலிருப்பதற்கு? அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

''பச்சை மாவை இப்படித் தின்னா வயித்துக்கு என்ன ஆகும்?'' என்று கேட்டபடி, அந்தப் பிள்ளையின் கையைப் பிடித்துத் தள்ளினாள்.

உடனே அது அழுதுகொண்டே அம்மாவிடம் சென்று முறையிட்டது. இந்த மாதிரி ஒரு நல்ல சந்தர்ப்பத்தைக் கங்கம்மா நழுவ விடுவாளா? திடுதிடுவென்று ஓடிவந்து, 'ஏண்டி! உங்க அப்பன் வீட்டுச் சொத்து என்னடி கெட்டுப் போச்சு? அந்தக் குழந்தை தன் மாமன் வீட்டிலே அத்தனை மா எடுத்துத் தின்னச் சொந்தமில்லையா?' என்று அவள் வஞ்சியின் தாடையில் ஓர் இடி இடித்தாள். அந்த இடியில் வஞ்சி கீழே சாய்ந்து விட்டாள்.

அடுத்த கணத்தில் அங்கே வந்த கந்தசாமி, ''அக்கா! அந்தப் பெண்ணு என்னத்துக்கு அப்படிப் படுத்துக் கிடக்குது!'' என்று கங்கம்மாவை விசாரித்தான்.

''அது என்னத்துக்கோ?'' என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டுச் சென்றாள் அவள்.

இந்தச் சமயத்தில் தன் கணவனின் குரலைக் கேட்டு முக்கி முனகிக் கொண்டே எழுந்தாள் வஞ்சி.

''என்னா உடம்புக்கு?'' என்று வஞ்சியை விசாரித்தான் கந்தசாமி.

''உடம்புக்கு ஒண்ணுமில்லே; கூழுக்கு இந்த மாவை அரைச்சிக்கிட்டு இருந்தேன். என்னமோ தலையைச் சுத்தறாப்போல இருந்தது; கொஞ்ச நேரம் படுத்துக்கிட்டேன்!'' என்றாள் வஞ்சி.

வஞ்சி எப்பொழுதுமே இப்படித்தான். அவள் வீட்டில் நடக்கும் சண்டை சச்சரவுகளைப் பற்றித் தன் கணவனிடம் ஒன்றுமே சொல்ல மாட்டாள்.

''அக்கா! நீதான் அந்த மாவைக் கொஞ்சம் அரைச்சுக் கொடுக்கக் கூடாதா?'' என்றான் கந்தசாமி.

''அரைப்பேண்டா, அரைப்பேன்! ஏன் அவளைக் கூடக் கொஞ்சம் தூக்கி உன் பக்கத்திலே உட்கார வைக்கட்டுமா?'' என்றாள் கங்கம்மா.

கந்தசாமி முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டான். அவன் மனத்தை மாற்றுவதற்காக ''வெய்யில்லே அலைஞ்சிட்டு வந்தாயே, கொஞ்சம் தயிரைப் போட்டுக் கூழைக் கரைச்சுக்கிட்டு வரட்டுமா?'' என்று கேட்டாள் வஞ்சி.

''எடுத்துக்கிட்டு வா!'' என்றான் கந்தசாமி..

உள்ளே போய்ப் பார்த்தால் தயிரைக் காணோம். அதைக் கபாலி காலி செய்துவிட்டிருந்தான். 'கேட்டால் பூனையின் மேல் பழியைப் போடுவார்கள். கேட்காமல் இருப்பதே நல்லது' என்று தீர்மானித்து, வெறும் கூழைக் கரைத்துக் கொண்டு வந்தாள் வஞ்சி.

''என்னா வஞ்சி! தயிரு இல்லையா?''

''இருந்தது; இப்போது பார்த்தாக் காணோம். பூனை குடிச்சிட்டாப் போல இருக்குது!'' என்று தன் நாத்தனார் சொல்லப் போவதைத் தானே சொல்லி வைத்தாள் வஞ்சி.

அப்பொழுது ''இல்லை, மாமா! நான்தான் குடிச்சுட்டேன்!'' என்று சமர்த்தாகச் சொல்லிக் கொண்டே வந்தான் கபாலி.

''அட, என் கண்ணு! குடிச்சிட்டியா? - போ!'' என்று தன் வயிற்றெரிச்சலை வெகு லாவகமாக வெளியிட்டான் கந்தசாமி.

* * *

''சேர்ந்து வாழ்வது தான் சிறந்தது'' என்கிறோம். ஆனால், வாழ்க்கையில் பார்க்கப்போனால் அதைப் போன்ற தொல்லை வேறு ஒன்றும் கிடையாது என்று தோன்றுகிறது. நமது சுற்றத்தாருடன் நாம் பிரிந்து வாழும்போதோ, அல்லது பிரிந்து செல்லும்போதோ இருக்கிற ஆசையும் அன்பும் சேர்ந்து வாழும்போதோ, அல்லது சேர வரும் போதோ எங்கே இருக்கிறது?

அன்று வஞ்சியைப் பிரசவத்துக்காக அழைத்துச் செல்ல அவளுடைய அம்மா வந்திருந்தாள். அப்பொழுது ''நீங்க என்னாத்துக்கு அழைச்சுக்கிட்டுப் போறீங்க? இங்கேயேதான் இருக்கட்டுமே; எல்லாம் நான் பார்த்துக்கிறேன்!'' என்றாள் கங்கம்மா. அவள் போய்விட்டால் வீட்டு வேலைக்கும் சண்டைக்கும் ஆள் கிடைக்காதே என்ற கவலை அவளுக்கு!

இது தெரியாத வஞ்சி, ''ஆமாம், அம்மா! எனக்குக் கூட அவரை விட்டுவிட்டு வரத்துக்கு என்னமோ மாதிரியாயிருக்குது! இங்கேயேதான் இருக்கிறேனே, எல்லாம் இந்த அம்மா பார்த்துக்கிறாங்க!'' என்றாள்.

''என்ன இருந்தாலும் நாலுபேர் நாலு சொல்லுவாங்க!'' என்று சொல்லி வஞ்சியைத் தன்னுடன் அழைத்துச் சென்று விட்டாள் அவளுடைய அம்மா.

அவள் வாழ்க!

* * *

**வ**ஞ்சி பிரசவித்து மூன்றாவது மாதம் நடந்து கொண்டிருந்தது. கந்தசாமி தன் மனைவியை அழைத்துப்போக வந்தான். அவனுடன் செல்ல வஞ்சிக்கு எவ்வளவோ ஆசை. ஆனால் கங்கம்மாவை நினைத்தபோது, அங்கே சென்று அவளுடைய வம்புக்கு ஆளாவதைக் காட்டிலும் இங்கேயே இன்னும் இரண்டு மாதங்களாவது தொல்லையில்லாமல் இருக்கலாமே என்று அவளுக்குத் தோன்றிற்று. இதைக் குறிப்பாகக் கந்தசாமியின் காதிலும் போட்டு வைத்தாள். அவனுக்கும் அவள் சொல்வது ஒரு விதத்தில் நல்லதென்றே பட்டது.

மறுநாள் கந்தசாமி தான் மட்டும் ஊருக்குச் செல்வதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்த போது அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. அந்த கடிதத்தில் எழுதியிருந்தது இதுதான்;

சிரஞ்சீவி கந்தசாமிக்கு, ஆசீர்வாதம்.

சண்டைக்குப் போனவர் திரும்பி வந்துவிட்டார். நேரே பட்டணத்திற்கு வந்த அவர், அங்கே தனக்கு வேலை பார்த்துக் கொண்டு, இங்கே என்னை அழைத்துப்போக வந்திருக்கிறார். இந்தக் கடிதம் கண்டவுடன் நீங்கள் உடனே வந்து எங்களை அனுப்பி வைக்கவும்.

கங்கம்மா.

இதைப் படித்ததும், ''வஞ்சி! இப்பவே நீயும் என்னுடன் புறப்பட வேண்டியதுதான்!'' என்று துள்ளிக் குதித்தான் கந்தசாமி. அவனுடைய தோள்களை ஆசையுடன் பிடித்துத் தொங்கிக் கொண்டு, ''ஏன், அந்தக் கடிதாசியிலே அப்படி என்ன எழுதியிருக்கு?'' என்று கேட்டாள் வஞ்சி.

விஷயத்தைச் சொன்னான் கந்தசாமி. அதைக் கேட்ட வஞ்சியின் வதனம், காலதேவனைக் கண்ட கமலம் போல் பூத்தது!

இந்தக் காட்சி எந்த நாத்தனாருக்கும் பிடிக்காத காட்சிதான்; ஆனால் ஏன் பிடிக்கவில்லை என்றுதான் தெரியவில்லை!

# உறவினர் எதற்கு?

''அவனன்றி ஓரணுவும் அசையாது!'' என்கிறார்கள். அப்படியானால், இந்த அகண்டாகார உலகத்தில் அவ்வப்போது நடக்கும் அநீதி, அக்கிரமங்களுக்கெல்லாம் அவனே ஜவாப்தாரியாகிறான் அல்லவா? ஆனால், தண்டனை மட்டும் அவனுக்கு இல்லையாம்; அவனால் ஏவப்பட்ட மனிதர்களுக்குத் தானாம்! - இதென்ன வேடிக்கை! - இப்படி அதிசயத்துக்கு ஆளாகி, ஆண்டவனைப் பற்றி ஒன்றுமே அறிந்து கொள்ள முடியாமல் தவிப்பவர்களுக்குக் கிடைக்கும் பதில் இதுதான்:

''அவனுடைய லீலா விநோதங்கள் அற்பர்களாகிய நமக்குப் புரியாதவை!''

அது எப்படியாவது போகட்டும்; ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அந்த ஆபத்பாந்தவனின் அறிய முடியாத தத்துவம் எனக்கு புரிகிறது. அதாவது பணக்காரனுக்கு மேலும் மேலும் பணம்; பணமில்லாதவனுக்கு மேலும் மேலும் பிள்ளை!

இரண்டாவது விஷயத்தில்தான் பகவானுடைய அருள் எனக்குப் பரிபூரணமாக கிடைத்திருக்கிறது. அதாவது பெண்ணாய்ப் பிறந்த நாலு ஜீவன்கள் என்றும் அல்லும் பகலும் 'அப்பா! அப்பா!' என்று ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன. அந்த நாளில் நான் மணக்கோலம் பூண்டிருந்த போது எனக்குச் சகல செளபாக்கியங்களும் வாய்க்கட்டும் என்று ஆசீர்வசித்த பெரியோர்களின் வாக்கு இந்த முறையில்தானா பலிக்க வேண்டும்?

என்னமோ, இந்த ஒரு பாக்கியமாவது எனக்குக் கிடைத்ததே என்று என்னை ஆசீர்வதித்த பெரியோர்கள் வேண்டுமானால் சந்தோஷமடையலாம். நான் சந்தோஷமடைய முடியுமா?

எல்லோருடைய வீட்டிலும் பிறக்கும் குழந்தைகள் அத்தனையும் உயிருடன் இருந்து விடுவதில்லை; ஓரிரண்டு செத்துப் போவதுண்டு. எனக்கு வேறு என்ன பாக்கியம் வைக்காமற் போனாலும், ஆண்டவன் அந்தத் துர்ப்பாக்கியத்தை மட்டும் வைக்கவில்லை.

இந்த உலகத்தில் எனக்காக இரங்கிய ஜீவன் ஏதாவது உண்டா என்றால், அது என் மனைவிதான். நாலு பெண்களைப் பெற்று

வைத்ததோடு அவள் நமன் உலகம் போய்விட்டாள்! - மகராஜி! அவள் எந்த உலகத்திலிருந்தாலும் அந்த உலகம் தொல்லையில்லாத உலகமா யிருக்கட்டும்.

என்னுடைய குழந்தைகளின் அழகைக் கண்டு என் அம்மா அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அவள், ஒரு நாளாவது அவர்களுக்குத் திருஷ்டி கழிக்காமலிருக்க மாட்டாள். அக்கம் பக்கத்தாரின் பார்வையினால் அந்தக் குழந்தைகளின் அழகுக்குப் பங்கம் வராமலிருக்க வேண்டுமே என்பது அவள் கவலை! - அழகு மட்டும் இருந்தால் போதுமா? அதற்காகப் பிள்ளையைப் பெற்றவர்கள் வந்து என்னுடைய பெண்களைக் கல்யாணம் செய்து கொண்டு போய்விடுவார்களா? காட்டில் மலர்ந்த மலர் போல அந்தக் குழந்தைகள் ஏழையாகிய என் வீட்டில் அல்லவா வந்து பிறந்திருக்கின்றன? அவற்றை அனுபவிப்பார் யார்? ஆக்கிய கடவுள் அழிக்கும் வரையில் அவை காலந் தள்ளுவது எப்படி?

முதல் பெண்ணை மூன்றாந் தாரமாக ஒரு முதியவருக்குக் கொடுத்து அவள் அமங்கலியாக இப்பொழுது என் அகத்துள் அஞ்ஞாத வாசம் செய்து கொண்டிருக்கிறாள். இரண்டாவது பெண்ணை ஓர் இருமல் வியாதிக்காரனுக்குக் கொடுத்தேன் - தெரியாமல் கொடுத்துவிட வில்லை - தெரிந்துதான் கொடுத்தேன் - அப்புறம் கேட்க வேண்டுமா? அவள் புகுந்ததும் அந்த வீடு ஆஸ்பத்திரியாக மாறி விட்டது. அந்த ஆஸ்பத்திரியில் அவள் 'நர்ஸ்'ஸாக இன்று வேலை பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

மூன்றாவது பெண்தான் ரங்கா, நாலாவது பெண்ணான நளினியைப் பற்றி இன்னும் நாலைந்து வருடங்களுக்குக் கவலையில்லை. அவளுக்கு வயது பத்துத் தான் ஆகிறது. ரங்காவுக்குத்தான் இப்பொழுது இருபத்திரண்டாவது வயது நடக்கிறது - ஆமாம்; அவளுக்கு வயது இப்பொழுது இருபத்திரண்டுதான்! - இன்னும் கல்யாணம் ஆகவில்லை. ஏன் ஆகவில்லை? அவளுக்கென்று இந்த உலகத்தில் எந்த ஆடவனும் இல்லவே இல்லையா? எத்தனையோ பேர் இருக்கத்தான் இருக்கிறார்கள். ஆனால், அவர்களில் யாரையாவது ஒருவரை 'வரதட்சணை' என்னும் பெயரால் நான் விலை கொடுத்து வாங்க வேண்டுமே! அப்படித் தானே சம்பிரதாயம் சொல்லுகிறது? அதற்கு என்னிடம் பணம் இல்லை; இல்லை யென்றால் ஏழை வாழ வேண்டாமா?

தற்சமயம் என்னுடைய கவலையெல்லாம் ரங்காவைப் பற்றியது தான். என்ன கவலையென்றால் இந்தப் பெண்ணையாவது நல்ல இடமாகப் பார்த்துக் கொடுக்க வேண்டுமே என்ற கவலைதான்.

பார்க்கப்போனால் இந்த எண்ணம் எனக்கே பைத்தியக்காரத் தனமாகத்தான் தோன்றுகிறது. முதல் இரண்டு பெண்களை மட்டும் ஏதாவது நல்ல இடமாகப் பார்க்காமலா கொடுத்துவிட்டேன்? - இல்லை. என்னுடைய நிலைமையில் அந்தக் குழந்தைகளுக்கு நான் எவ்வளவுதான் முயன்றும், அவ்வளவு அழகான சம்பந்தங்கள் தான் கிடைத்தன. ஆனாலும் அந்த மூன்றாவது பெண் விஷயத்தில் என்னமோ அப்படி மீண்டும் ஒரு சபலம்.

அன்னியர் யாரும் வந்து என்னுடன் சம்பந்தம் செய்து கொள்ள மாட்டார்கள் என்பது உறுதி. ஆகவே உறவினர்களிடையே வரன் வேட்டை யாட ஆரம்பித்தேன். என் தங்கையின் வீட்டில் ஒரு பிள்ளையாண்டான் இருந்தான். அதே மாதிரி என் மைத்துனருக்கும் ஒரு மகன் இருந்தான். இருவருக்கும் ரங்காவின் ஜாதகம் ஏற்ற முறையில் தானிருந்தது. என்னுடைய குறையெல்லாம் அந்த இரு வீட்டாருக்கும் தெரிந்ததுதான். அவர்கள் மனம் வைத்தால் தன் சகோதரிகளைவிட ரங்கா, கொஞ்ச நஞ்சம் சுகத்தையாவது காணமுடியும்; நானும் கல்யாண முகூர்த்தப் பத்திரிகைகளைப் பார்த்துப் பெருமூச்சு விடாமலிருக்க முடியும்; கொட்டு மேளத்தின் 'கும்கும்' என்ற முழக்கத்தையும், நாதசுரத்தின் 'பிப்பீ' என்ற கானத்தையும் கேட்டுக் கண்ணீர் சிந்தாமலிருக்க முடியும்; செந்தாமரைத் தண்டின் நிறத்தை நிகர்த்த கரத்தையே தலையணையாகக் கொண்டு என் மகள் தனிமையில் ஒடுங்கித் தூங்கும் போது, இறுக மூடிய அவள் கண்ணிமைகளின் ஓரத்திலே கண்ணீர்த் துளிகள் கசிவதைக் கண்டு என் நெஞ்சம் நெகிழ்ந்து உருகாமலிருக்க முடியும். இந்த ஆசையுடன் தான் பகவான் மேல் பழியைப் போட்டுவிட்டு நான் என்னால் ஆனவரை இம்முறை முயன்று பார்த்தேன்.

என் உறவினர்களில் யாரும் என்னை அழைக்காவிட்டாலும் நானே என்னுடைய வருகையை முகத்தில் அசடு வழியத் தெரிவித்துக் கொண்டு, அடிக்கடி அவர்கள் வீட்டிற்குள் நுழைந்தேன்; முதலில் அவர்கள் என்னுடன் முகம் கொடுத்துப் பேசாவிட்டாலும், நானே அவர்களிடம் முகம் கொடுத்துப் பேசினேன். கண்ணீரும்

கம்பலையுமுடன் அவர்களிடம் என் கருத்தைத் தெரிவித்தேன். ஆனால் நடந்தது என்ன?

என்னுடன் பிறந்து வளர்ந்த என் தங்கை, பிச்சைக்காரனைப் பார்ப்பது போல் என்னைப் பார்த்தாள். ரங்காவின் தாயுடன் பிறந்து வளர்ந்த என் மைத்துனன் நான் கல்யாணப் பேச்சை எடுக்கும்போதெல்லாம் ''இப்பொழுது அதற்கென்ன அவசரம்?'' என்று எரிந்து விழுந்து என் வாயை அடக்கினான். ஆனால் அதே சமயத்தில் அவன்தன் பிள்ளைக்கு வேறு இடத்தில் பெண் பார்த்துக் கொண்டிருந்தான்.

நான் அவர்கள் வாயைப் பார்ப்பதும், அவர்கள் வானத்தைப் பார்ப்பதுமாக எத்தனையோ நாட்கள் கழிந்து விட்டன. என்னுடைய எண்ணம் மட்டும் ஈடேறவில்லை.

* * *

ஒரு நாள் இரவு பத்துமணி இருக்கும். மழை 'சோ' வென்று பெய்து கொண்டிருந்தது. தூக்கம் பிடிக்காமல் நான் வீட்டு வாசலில் உலாவிக் கொண்டிருந்தேன். அப்போது அழுக்கடைந்த ஜிப்பாவும், பைஜாமாவும், அணிந்த ஒரு வாலிபன் மழைக்காக வராந்தாவில் ஒதுங்க வந்தான். அவன் முகத்தில் கருகருவென்று வளர்ந்திருந்த தாடியும் மீசையும் பார்ப்பதற்கு விகாரமாயிருந்தன. ஆனால் கண்களில் மட்டும் தெய்வீக அமைதி குடி கொண்டிருந்தது.

''நீ யார், தம்பி? எங்கே போக வேண்டும்?'' என்று நான் விசாரித்தேன்.

''நானா? கைதி! 'எங்கே போகவேண்டும்!' என்று எனக்கே தெரியாது!' என்றான் அவன்.

என் மனம் 'திக்'கென்றது. ''கைதியா!'' என்று பரபரப்புடன் கேட்டு விட்டுத் தெருவைப் பார்த்தேன் - யாராவது போலீஸ்காரர்கள் அவனைப் பின் தொடர்ந்து வருகிறார்களா என்றுதான்!

அதற்குள் என் குறிப்பை ஒருவாறு உணர்ந்து கொண்ட அந்த வாலிபன், ''ஐயா! நான் திருட்டுக் கைதியல்ல; கொலை செய்த கைதியல்ல; சிறையிலிருந்து தப்பி ஓடி வந்துவிட்ட கைதியல்ல!'' என்றான்.

அப்புறம் தான் எனக்கு விஷயம் புரிந்து விட்டது. ஆனானப்பட்ட ஹிட்லராலும், முஸோலினியாலும், டோஜாவாலும்

கவிழ்க்க முடியாத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் கவிழ்த்து விட முயன்றவர்களில் அவனும் ஒருவன் என்று தெரியவந்தது. ஆனால் அவன் பணமும் பலமும் இல்லாதவனாயிருக்க வேண்டும். அல்லது உலகம் இன்னதென்று தெரியாதவனாயும், இதற்குமுன் ஒரு கஷ்டமும் நஷ்டமும் அறியாதவனாயும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் விடுதலை அடைந்த அவன் ஒரு ரோஜாப் பூ மாலை யில்லாமல் ஓரிரண்டு பேர் 'ஜே' கோஷங்கூடப் போடாமல் என் வீட்டு வராந்தாவில் வந்து ஏன் ஒதுங்கிக் கொள்ளப்போகிறான்?

என்னையும் அறியாமல் அவனிடம் எனக்கு இரக்கம் உண்டாயிற்று. ''சாப்பாடெல்லாம் ஆச்சோ?'' என்று விசாரித்தேன்.

''ஆச்சு; சாப்பிட்டு இரண்டே இரண்டு நாட்கள் தான் ஆச்சு! நேற்றைக்கு முன்தினம் தான் விடுதலை அடைந்தேன்!'' என்றான் அவன் சோர்வுடன்.

நான் அவனை உள்ளே அழைத்துக் கொண்டு சென்று, அம்மாவைக் கூப்பிட்டுக் கொஞ்சம் சாதம் போடச் சொன்னேன். ''அவன் என்ன ஜாதியோ என்னமோ நேரே உள்ளுக்கு அழைத்துக் கொண்டு வந்துவிட்டான்!'' என்று முணுமுணுத்துக் கொண்டே அவனுக்குச் சாதம் பரிமாறினாள் அம்மா. அவன் சாப்பிட்டுவிட்டு எழுந்தான்.

அதற்குள் மழையும் கொஞ்சம் விட்டிருந்தது. அவன் வெளியே போவதற்குக் கிளம்பினான்.

''இந்நேரத்தில் எங்கே போகப் போகிறாய்?'' என்று கேட்டேன்.

''படுக்க எங்கேயாவது கொஞ்சம் இடம் பார்ப்பதற்குத்தான்!'' என்றான் அவன்.

''இந்த வராந்தாவில் படுத்திருந்துவிட்டுப் பொழுது விடிந்ததும் போகலாமே?''

''என்ன சொல்வீர்களோ என்று நினைத்தேன். உங்களுக்கு ரொம்பப் புண்ணியமுண்டு. அப்படியே படுத்துக் கொள்கிறேன்'' என்று ஜிப்பாவைக் கழற்றி வராந்தாவில் போட்டு அவன் படுத்துவிட்டான்.

நானும் தெருக்கதவைத் தாளிட்டுவிட்டு உள்ளே சென்று படுத்துக் கொண்டேன்.

பொழுது விடிந்தது. அந்த வாலிபன் என்னிடம் சொல்லிக் கொண்டு போக வந்தான்.

அப்போது, ''உங்கள் பெயரென்ன?'' என்று அவன் என்னைக் கேட்டான்.

'கோபாலசாமி' என்றேன்.

உடனே தன் பைஜாமாவின் 'பாக்கெட்'டிலிருந்து ஒரு பழைய 'டைரி'யை எடுத்தான். அதில் என் பெயரைக் குறித்துக் கொண்டான். கதவைப் பார்த்து இலக்கத்தையும் குறித்துக் கொண்டான். தெருவின் பெயர் அவனுக்கு ஏற்கனவே தெரியும் போலிருக்கிறது; அதையும் கீழே எழுதிக் கொண்டான். 'தாங்ஸ்' என்று சொல்லிவிட்டுத் தெருவை நோக்கி நடந்தான்.

* * *

அவன் வந்துபோன நாலைந்து மாதங்களுக்குப் பிறகு அவனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில், அன்றிரவு நான் அவனுக்குப் போட்ட 'தண்ணீர் விட்ட சாத'த்தைப் பற்றிப் பிரமாதமாக எழுதி யிருந்தான். நானும் என் வாழ்நாளிலே எத்தனையோ உறவினர்களுக்கு விருந்து வைத்திருக்கிறேன். கடன் வாங்கியாவது விதவிதமான கறி வகைகளுடன் பலகாரம் பட்சணங்களுடனும் பரிமாறியிருக்கிறேன். அவர்களில் ஒருவராவது இதுவரை என் விருந்தை மெச்சி ஒரு வார்த்தை பேசியது கிடையாது. ஆனால், இவனோ? கேவலம் தண்ணீர் விட்ட சாதத்தை இவ்வளவு பிரமாதப்படுத்தி எழுதியிருக்கிறானே? - ஆமாம்; வாழ்க்கையில் யாருமே தமக்கு மேற்பட்டவர்களை உபசரிப்பதற்கும், தமக்குக் கீழ்ப்பட்டவர்களை உபசரிப்பதற்கும் உள்ள வித்தியாசம் இது!

அத்துடன் அவன் 'ஜேம்ஸ் தாம்ஸன்' என்றும் தற்சமயம் இந்திய விமானப் படையில் வேலை பார்க்கிறானென்றும் மேற்படி கடிதத்திலிருந்து தெரிய வந்தது. இன்னும் வயிற்றுக் கவலையின் காரணமாகத் தன்னுடைய தேச பக்தியை விலைக்கு விற்ற விதத்தைப் பற்றியும் அவன் கடிதத்தில் விவரித்திருந்தான்.

பெண்ணைப் பெற்ற என் மனம் அவனைப் பற்றி எண்ணிப் பார்க்க ஆரம்பித்து விட்டது. அவன் மட்டும் கிறிஸ்துவனாக இல்லாமலிருந்தால்? ஒருவேளை ரங்கா அவனால் வாழ்ந்தாலும் வாழலாமல்லவா? தேச விடுதலையில் ஆர்வங் கொண்ட அவன், சமூக விடுதலையிலும் ஆர்வங் கொண்டவனாக இருப்பானல்லவா?

இப்போது மட்டும் என்ன? இந்த இந்து சமூகத்திலேயே இருந்து கொண்டு நாம் என்ன வாழ்ந்துவிடப் போகிறோம்? வேண்டுமானால் ரங்காவையும் இன்னொரு இருமல்காரனைப் பார்த்துக் கொடுக்கலாம்; அவ்வளவு தான்! - அப்பப்பா! யார் என்ன சொன்னாலும் சரி, முதல் இரண்டு பெண்களுக்கு நேர்ந்த கதி மட்டும் இந்தப் பெண்ணுக்கு நேரவே வேண்டாம், ஆண்டவனே!

ஆமாம், அவளுடைய செளகரியத்திற்காக நாம் இந்த இந்து சமூகத்திற்கே ஒரு முழுக்குப் போட்டு விட்டால் என்ன? அந்தப் பிள்ளையாண்டான் மட்டும் ஒப்புக் கொள்ளவதாயிருந்தால் நாமும் ரங்காவின் நலத்திற்காகக் கிறிஸ்துவ மதத்தையே வேண்டுமானால் தழுவி விடலாமே!

இந்தச் சங்கடமெல்லாம் என்னத்திற்கு? என்னமோ! 'கலப்புமணம்' என்கிறார்களே, அப்படிச் செய்துவிட்டால் என்ன? - ஊராரும் உறவினரும் ஏசுவார்கள் - ஆனால் என்ன? அவர்களா என்னுடைய துன்பத்தை அனுபவிக்கிறார்கள்?

இப்படி யெல்லாம் எண்ணி என் மனம் அலை பாய்ந்து கொண்டிருந்தது. அதற்கேற்றாற்போல் அடிக்கடி அவன் எனக்கு எழுதும் கடிதங்களின் மூலம் அன்பை வளர்த்து வந்தான். பத்துப் பதினைந்து நாட்கள் லீவில் வரும்போதெல்லாம் அவன் என் ஊருக்கு வருவான். எந்த ஹோட்டலில் தங்கினாலும் என்னையும் என் வீட்டையும் மறக்க மாட்டான். அடிக்கடி என்னுடன் அளவளாவி விட்டுப் போவான். என்னுடைய சுக துக்கங்களைப் பற்றி அக்கறையோடு விசாரிப்பான். நானும் என்னுடைய துன்பங்களையும் துயரங்களையும் பற்றி அவனிடம் சாங்கோபாங்கமாக விவரிப்பேன்.

* * *

இப்படியே இரண்டு மூன்று வருடங்கள் கழிந்து விட்டன. இதற்கு மத்தியில் என் உறவினரிடையே நான் எதிர்பார்த்திருந்த இரண்டு வரன்களுக்கும் வெவ்வேறு இடங்களில் பெண் பார்த்துக் கல்யாணமும் நடந்து விட்டது. என் அம்மாவும் கண்ணை மூடிவிட்டாள்.

எனக்கு அசாத்தியத் துணிச்சல் ஏற்பட்டு விட்டது. எத்தனையோ நாட்களாக என் உள்ளத்தில் அமுக்கி வைத்துக் கொண்டிருந்த ஆசையை அன்று ரங்காவிடம் தெரிவித்தேன். அவள் சிரித்தாள்.

''சொல்வதைக் கேள் அம்மா!'' என்று நான் வற்புறுத்தினேன்.

அவள் சொன்னாள்:

''அப்பா! நீங்கள் சொல்வது சரி. ஆனால் ஒன்று: பிரபலஸ்தர்களும் பிரமுகர்களும் 'கலப்பு மணம்' செய்தால், அவர்கள் சமூக முன்னேற்றத்திற்காகவும் சர்வ சமய சமரஸத்திற்காகவும் அப்படிச் செய்வதாக ஊரார் புகழ்வார்கள்; இது அவர்களுக்குச் சிறுமை யளிப்பதற்குப் பதிலாகப் பெருமையளிக்கும். ஆனால் நம்மைப் போன்ற ஏழைகள் செய்தாலோ? அப்படிப் புகழமாட்டார்கள். அப்பா! 'கையாலாகாதவன் வேலை' என்றும் 'கழுதை கெட்டால் குட்டிச் சுவர்' என்றும் இகழ்வார்கள் அப்பா!''

''அவர்கள் புகழ்ந்தாலும் புகழட்டும்; இகழ்ந்தாலும் இகழட்டும், அம்மா! அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. எப்படியாவது நீ சுகமாயிருந்தால் அதுவே போதும் எனக்கு. வேண்டுமானால் நீ 'கலப்பு மணம்' செய்து கொள்ள வேண்டாமே! அந்தப் பிள்ளையாண்டானும் பிறக்கும்போதே கிறிஸ்துவனாகப் பிறந்து விடவில்லையாம்; நடுவில்தான் மாறினானாம். அவனுடைய மதத்தை நாமும் தழுவி விடுவோமே? நீதான் நேரில் பார்த்திருக்கிறாயே, உனக்கு அவனைப் பிடிக்கிறதோ இல்லையோ?''

அதற்கு மேல் அவள் அங்கே நிற்கவில்லை. ''போங் கப்பா!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே ஓடிவிட்டாள்.

அவ்வளவுதான்; அன்றே அவனுடைய சம்மதத்தைத் தெரிந்து கொள்வதற்காகக் கடிதம் எழுதினேன். அவனும் சீர்திருத்த மனப்பான்மையோடு பதில் எழுதி யிருந்தான். அதாவது 'பெண்ணுக்குச் சம்மதமாயிருந்தால் தனக்குச் சம்மதமே' என்று தெரிவித்திருந்தான்.

அப்புறம் என்ன? ஜேம்ஸ் தாம்ஸன் ஒரு மாத லீவில் ஊருக்கு வந்தான். எல்லோருமாகக் கிளம்பி ஒருநாள் மாதா கோயிலுக்குச் சென்றோம். தன்னைச் சித்திரவதை செய்து சிலுவையில் அறைந்தவர்களுக்காக 'தந்தையே! அவர்களை மன்னித்துவிடு; தாங்கள் இன்னது செய்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியாது!' என்று இறைவனை வேண்டிக் கொண்ட ஏசுநாதரின் படம் எங்களை வரவேற்றது. பாதிரியார் எங்களை முறைப்படி மதம் மாற்றி வைத்தார்.

அதற்கு அடுத்த வாரத்திலேயே 'ஜேம்ஸ் தாம்ஸனுக்கும், ரங்கா என்ற மேரி ரோஸுக்கும்' கிறிஸ்துவ முறைப்படி விவாகம் சிறப்பாக நடந்தேறியது. என்னுடைய கவலையும் ஒருவாறு தீர்ந்தது.

இந்த வைபவத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட எங்கள் உறவினர் யாவரும் என்மீது வசை மாரி பொழிந்து கொண்டே நான் இறந்துவிட்டதாகப் பாவித்துப் புண்ணிய ஸ்நானம் செய்து விட்டார்களாம்!

ரொம்ப சரி; செத்தால் தலை முழுகத்தானே அவர்கள் இருக்கிறார்கள்? - பின் உறவினர் எதற்கு?

# ஒரே உரிமை

எங்கள் கிராமத்தில் எனக்குக் கொஞ்சம் நிலம் இருக்கிறது. சென்ற தை மாத அறுவடையின் போது நான் அங்கே போயிருந் தேன். வயலில் மும்முரமாக வேலை நடந்துகொண்டிருந்தது. களத்து மேட்டில் நின்றபடி நான் வேலையாட்களைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அவர்களில் ஒருவன் என் கவனத்தைக் கவர்ந்தான். அதற்கு முன்னால் அவனை எங்கேயோ பார்த்த மாதிரி யிருந்தது-எங்கே பார்த்திருப்போம்?

ஆம், அந்தச் சம்பவம் என் நினைவுக்கு வந்து விட்டது. அவன் பெயர் சோலையப்பன். சென்ற வருடம் சித்திரை மாதம் நான் கிராமத்துக்கு வந்திருந்தபோது, என் நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்தேன். அவருடைய மனைவியாருக்கு முன் யோசனையுடன் காரியம் செய்வதில் அலாதி ஆவல். புது இடம் என்பதற்காக நான் எங்கே கூச்சப்பட்டுக் கொண்டு கொஞ்சமாகச் சாப்பிட்டுவிடப் போகிறேனோ என்று அந்த அம்மையார் எனக்கு முன் கூட்டியே இரண்டு வேளைக்கு ஆகக் கூடிய சாதத்தை ஒரே வேளையில் படைத்துவிட்டார். நானும் என்னால் ஆனவரை 'ஒரு கை' பார்த்தேன்; என்ன பார்த்தும் என்னால் எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட முடியவில்லை. பாதிச் சாதம் அப்படியே மிஞ்சிப் போய் விட்டது. சொந்த வீடாயிருந்தால் கணவன் என்னதான் தீராத நோய்க்கு ஆளாகியிருந்தாலும் அவனுடைய எச்சில் சாதத்தைச் சாப்பிடுவது 'பதிவிரதா தர்ம'ங்களில் ஒன்று என நினைக்கும் அப்பாவி மனைவி ஒருத்தி இருப்பாள். விருந்துக்கு வந்த வீட்டில் அம்மாதிரி யார் இருக்கிறார்கள்? ஆகவே நான் அந்த இலையைத் தூக்கிக் கொண்டு, நாயைத் தேடிக் கொண்டு தெருவை நோக்கி நடையைக் கட்டினேன்.

எனக்கு எதிரே வந்த நண்பரின் மனைவி, ''என்ன காரியம் செய்து விட்டீர்கள்! உங்களை யார் இலையை எடுக்கச் சொன்னார்கள்?'' என்று பதட்டத்துடன் கேட்டாள்.

அன்னதானம் செய்வதிலுள்ள புண்ணியமனைத்தும் எச்சில் இலையை எடுத்துப் போடுவதில்தான் அடங்கியிருக்கிறது என்பது அந்த அம்மாளின் நம்பிக்கை. என்னுடைய செய்கையால் அந்த மகத்தான புண்ணியம் தனக்குக் கிடைக்காமல் போய் விட்டதே என்பதில்தான் அந்த அம்மாளுக்கு எவ்வளவு வருத்தம்!

உண்டுண்டுறங்குவதேயல்லாது வேறொன்றும் கண்டிலாத அடியார்'கள், தங்களுக்கு இயற்கையாயுள்ள சோம் பேறித்தனத்தால் புண்ணியத்தைச் சாக்காக வைத்துக் கொண்டு, எச்சில் இலையை எடுத்துப் போடும் வேலையைக் கூட அன்னதானம் செய்பவர்கள் தலையிலேயே கட்டிவிட்ட தந்திரத்தை அந்த அம்மாள் இந்த 'அணுகுண்டு, சகாப்'தத்தில் கூட அறியாமலிருந்தது எனக்கு ஆச்சரியமாய்த் தானிருந்தது.

என்னுடைய வியப்பை வெளியே காட்டி அந்த அம்மாளின் மனதைப் புண்படுத்த விரும்பாத நான், ''பரவாயில்லை: இருக்கட்டும் அம்மா!'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே தெருவுக்கு வந்தேன். என் கையிலிருந்து இலையைக் கண்டதும் சாலையோரத்தில் நின்று கொண்டிருந்த இரண்டு ஜீவன்கள் என்னை நோக்கி ஓட்டமாய் ஓடி வந்தன. அவற்றில் ஒன்று நாய்; இன்னொன்று பெயருக்கு 'மனித'னாகப் பிறந்திருந்த சோலையப்பன்.

''சாமி, சாமி! அந்த இலையை இப்படிக் கொடுங்க, சாமி! கீழே போட்டுடாதீங்க, சாமி! என்று கெஞ்சினான் அவன்.

அவனுக்குப் பக்கத்திலே நாய் வாயைப் பிளந்து கொண்டு, நாக்கை நீட்டிக் கொண்டு, வாலை ஆட்டிக் கொண்டு, என்னை நன்றியுடன் பார்த்துக்கொண்டு நின்றது.

அந்த நாயைப்போலவே அவனும் என்னை நன்றியுடன் பார்த்தான்; வாயைத் திறந்தான்; நாக்கை நீட்டினான். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம்; நாய் வாலை ஆட்டிற்று; அவன் ஆட்டவில்லை! - அதுகூட அவன் குற்றமில்லை; காணாமற்போன 'கருணை' அந்தக் 'கருணைக் கட'லைச் சேர்ந்ததுதானே!

மனிதர்களுக்கு ஒரு விசித்திரமான மனோபாவம். என்னைப் போன்ற-அதாவது பணத்தைக் கொண்டு எந்த விதத்திலும் சாப்பாட்டுக்கு வசதி செய்து கொள்ளக் கூடியவர்களைக் கண்டால் அவர்கள் வருந்தி வருந்தி விருந்துக்கு அழைக்கிறார்கள்; மறுத்தால் அவர்களுக்குக் கோபம் கூட வந்துவிடுகிறது. ஆனால் இந்தச் 'சோலையப்பன்கள்'- அதாவது பணத்தைக்கொண்டு எந்த விதத்திலும் சாப்பாட்டுக்கு வசதி செய்து கொள்ள முடியாதவர்கள்-வலுவில் வாசலுக்கு வந்து ஒரு கை சோறு கேட்டால் கூட எரிந்து விழுகிறார்கள்! - ஏன் இப்படி?

அவனைக் கண்ட மாத்திரத்தில் இப்படியெல்லாம் அலை மோதிய என் உள்ளத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு, ''மனிதனாகப் பிறந்த உனக்குக் கேவலம் இந்த எச்சில் இலைக்காக நாயுடன் போட்டியிடுவதற்கு வெட்கமாயில்லையா?'' என்று கேட்டேன்.

இந்தக் கேள்விக்கு நியாயமாகப் பதில் சொல்லியிருக்க வேண்டுமானால், ''எனக்கு என்ன சாமி வெட்கம்? இதுக்காக வெட்கப்பட வேண்டியவங்க. ராசாங்கத்தாருதானே?'' என்று அவன் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அவன் அவ்வாறு சொல்லவில்லை; ''வெட்கப்பட்டா முடியுமா, சாமி! வயிறுன்னு ஒண்ணு இருக்குதே!'' என்றான்.

''அதற்கு எங்கேயாவது போய் ஏதாவது வேலை செய்வது........!''

''கெடைச்சாத்தானே?''

''ஏன் கிடைக்காது?''

''அறுவடை காலமாயிருந்தா எங்கேயாச்சும் வேலை கிடைக்கும், சாமி! இப்பத்தான் வெய்யில் பட்டையை உரிக்குதுங்களே!''

''உனக்காக வருஷம் முந்நூற்று அறுபது நாளும் அறுவடை காலமாயிருக்குமா, என்ன? அறுவடை வேலை கிடைக்கும்போது அறுவடை வேலை செய்ய வேண்டும்; மற்ற சமயங்களில் கூலி வேலை, கீலி வேலை......''

''கூலி வேலை தினம் தினமா கெடைக்குதுங்க? எப்பவோ ஒரு சமயம் கெடைக்கும். அப்போ செய்யறது தானுங்க! எந்த வேலையும் கெடைக்காத போதுதான் இப்படி நாய்க்குப் போட்டியா வந்து நிக்கிறது!'' என்றான் அவன்.

அத்துடன் என் வாய் அன்று அடைத்துப் போயிற்று. பேசாமல் அவன் ஏந்திய கையில் எட்டணாவை எடுத்துப் போட்டு ஏதாவது வாங்கித் தின்று பசியாறும்படி சொன்னேன். அதைப் பெற்றுக் கொண்டு அவன் போய்விட்டான். நான் கையிலிருந்த இலையை அந்த நாயின் முன்னால் எறிந்து விட்டு உள்ளே வந்தேன்.

* * *

இந்தச் சம்பவம் நினைவுக்கு வந்ததும், நான் சோலையைப்பனின் பிற்கால வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கலானேன்.

''இந்த அறுவடை வேலை முடிந்ததும் அவன் வழக்கம் போல எச்சில் இலைக்கு நாயுடன் போட்டி போட வேண்டியதுதானா?'' என்ற கேள்வி என் உள்ளத்தில் எழுந்தது.

''ஏன் இல்லை? அப்படிச் செய்தால் என்ன?'' என்று மறுகணம் என் வாய் முணுமுணுத்தது.

உடனே சோலையப்பனைக் கைதட்டிக் கூப்பிட்டு, ''உனக்கு என்னைத் தெரிகிறதா?'' என்று கேட்டேன்.

அவன் ஒரு முறை என்னை உற்றுப் பார்த்து விட்டு' ''தெரிகிறதுங்க!'' என்றான்.

''சாயந்திரம் வேலை முடிந்ததும் என்னை வந்து பார்க்கிறாயா?''

''பார்க்கிறேனுங்க!''

''சரி, போ!'' என்று சொல்லிவிட்டு நான் என்னுடைய நண்பரின் வீட்டுக்குத் திரும்பினேன்.

அன்று மாலை அவன் வந்தான்.

''என்ன, சோலையப்பா! உனக்குப் படிக்கத்தெரியுமா?'' என்று கேட்டேன்.

''ஏதோ கொஞ்சந் தெரியுங்க; மதுரைவீரன் கதை, தேசிங்குராஜன் கதை-இதெல்லாம் படிப்பேனுங்க!''

''தேவலையே, அவ்வளவு தூரம் நீ படித்திருக்கிறாயா?''

''எல்லாம் அந்தக் காந்தி வாத்தியாரு புண்ணியமுங்க!''

''அது யார், காந்தி வாத்தியார்?''

''அவர் இப்போ செத்துப் பூட்டாரு! நல்லவரு, பாவம்! அவரு, காந்தி எங்க எனத்தவரை யெல்லாம் முன்னுக்குக் கொண்டாரச் சொல்றாருன்று சேரிக்கு வந்து, எங்களுக்கெல்லாம் படிப்புச் சொல்லிக் கொடுப்பாருங்க! நாங்க அவரை 'காந்தி வாத்தியாரு, காந்தி வாத்தியாரு'ன்னுதான் கூப்பிடுவோமுங்க!''

''ஓஹோ!-சரி, நான் ஒன்று சொல்கிறேன். கேட்கிறாயா?''

''கேட்காம என்னங்க?''

''இந்த அறுவடை வேலை முடிந்ததும் நீ வேலை வெட்டி கிடைக்கவில்லையே என்று பழையபடி எச்சில் இலைக்கு நாயுடன் வந்து நிற்காதே! நான் உனக்கு ஒரு கடை வைத்துத் தருகிறேன்''.

''என்ன கடைங்க?''

''ரொட்டி, மிட்டாய் எல்லாம் லாபத்துக்கு வாங்கி விற்கிறது....''

''ஐயய்யோ! இதென்ன கூத்துங்க! எங்கேயாச்சும் பறப் பயல்......''

''என்னடா, அப்படிச் சொல்கிறாயே! அதெல்லாம் அந்தக் காலம். இப்போது பார்த்தாயா, உங்களுக்குக் கோயிலைத் திறந்து விடுகிறார்கள்!''

''ஆமாம், ஆமாம். அன்னிக்குக் கூட அங்கே எங்கேயோ கோயிலைத் திறந்து விடறாங்கன்னு 'தர்மகர்த்தா ஐயா' வந்து என்னைக் கூப்பிட்டாரு. எப்பவோ ஒரு நாளைக்கு அபூர்வமாக் கெடச்ச வேலையை விட்டுட்டு நான் எங்கே கோயிலுக்குப் போறது, சாமி? அந்த வேலையே எனக்கு அப்போ 'சாமி' மாதிரி இருந்தது; தினந்தினம் அதன் 'தரிசனம்' கெடைச்சாத்தானே எங்க வயிற்றுக்குக் கஞ்சி? அதாலே இன்னொரு நாளைக்குக் கோயிலைப் பார்த்துக்கலாம்னு நான் போகலே!-அது சரி, சாமி! அதற்குத்தான் காந்தி என்னமோ சொன்னாராமே.......!''

''என்ன சொன்னாராம்?''

''ஹரிஜனங்களுக்குக் கோயிலைத் திறந்து விட்டா மட்டும் போதாது; இத்தனை நாளா அவங்களை ஒதுக்கி வச்ச ஒசந்த சாதியாரு இன்னும் அவங்களுக்கு எவ்வளவோ செய்யணும்னு!''

''அதற்காகத்தான் நான் உனக்கு இந்த உபகாரம் செய்கிறேன் என்கிறேன்.......''

''என்னமோ செய்யுங்க, சாமி!''

''சரி, நான் பட்டணத்துக்குப் போகுமுன் உனக்கு அந்தக் கடையை வைத்துக் கொடுத்துவிட்டுப் போகிறேன், போ!'' என்றேன்.

அவன் போய்விட்டான்.

* * *

சோலையப்பனுக்கு நான் அளித்த வாக்குறுதியை மறக்கவில்லை. எங்கள் கிராமத்துக்கு அடுத்தாற் போலிருந்த ஒரு சிற்றூர்க் கடை வீதியிலே ஒரு நல்ல இடத்தைத் தேடிப் பிடித்தேன். கண்ணாடி பீரோக்கள், குப்பிகள் முதலியவற்றை வாங்கிக் கடையை அழகாக அலங்கரித்தேன். ஒரு நூறு ரூபாய்க்குப் பட்டணத்திலிருந்து ரொட்டிகள், மிட்டாய்கள் எல்லாம் வாங்கி அவற்றில் அடுக்கினேன். 'சோலையப்பன் ரொட்டிக் கடை' என்று ஒரு பலகையில் எழுதி, கடையின் வாசலில் தொங்க விட்டேன். பிறந்ததிலிருந்து சட்டையையே காணாத சோலையப்பனின் உடம்பையும் சட்டை தைத்துப் போட்டு மூடினேன். 'நாம் வாங்கிய சரக்குகளின் விலை இவ்வளவு. விற்க வேண்டிய விலை இவ்வளவு' என்று சொல்லிக் கொடுத்தேன். 'அப்பாடா! எப்படியோ அவன் விதியை மாற்றி யமைத்து விட்டோம்' என்ற திருப்தியுடன் சென்னைக்குத் திரும்பினேன்.

என்னுடைய திருப்தி நெடுநாள் நீடித்திருக்கவில்லை. நான் ஊருக்குத் திரும்பிய இரண்டு வாரங்களுகெல்லாம் சோலையப்பனிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில், அவன் என்னை உடனே புறப்பட்டு வரும்படி எழுதியிருந்தான். அவனுடைய அவசர அழைப்பை ஏற்றுக் கொண்டு, நானும் அவசர அவசரமாகக் கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தேன்.

முதலில் சோலையப்பனின் ரொட்டிக் கடைக்குத்தான் சென்றேன் என்று சொல்ல வேண்டியதில்லை. அந்தக் கடையைப் பார்த்ததும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. நான் வாங்கி வைத்துவிட்டுச் சென்ற ரொட்டிகள், மிட்டாய்கள் எல்லாம் அப்படி அப்படியே இருந்தன.

''என்ன, இத்தனை நாளாக ஒன்றுமே விற்க வில்லையா?'' என்று கேட்டேன்.

''அது எப்படிங்க விற்கும்?''

''ஏன், இந்தக் கிராமத்தில் ரொட்டி, மிட்டாய் தின்பவர்கள் யாருமே இல்லையா?''

''இல்லாம என்னங்க? அதோ, அந்த முதலியாரு ரொட்டிக் கடை இருக்குதுங்களே, அதிலே தினம் தினம் எம்மா வியாபாரம் ஆவுது!''

''பின்னே என்ன? உன்னுடைய கடையிலே மட்டும் ஏன் வியாபாரம் ஆகவில்லை?''

''என்ன இருந்தாலும் நான் பறையன் பறையன் தானுங்களே? என் கடையிலே யாராச்சும் ரொட்டி, வாங்கணும்னா அவங்களும் பறையர்களாத்தானே இருக்கணும்? அவங்களுக்குத்தான் கூழுக்கே பஞ்சமாச்சுதுங்களே, அவங்க எங்கே ரொட்டி, கிட்டி வாங்கப் போறாங்க? வந்தா ஒசந்த சாதிக்காரருதான் வரணும். அவங்க எங்கிட்ட எங்கேயாச்சும் வருவாங்களா?-ஆனா, ஒண்ணு மட்டும் சொல்லணுங்க; அந்த மட்டும் அவங்க என் கடைக்கு வராம இருந்ததோடு நின்னாங்களே! 'பறப் பயலுக்கு இங்கே என்னடா ரொட்டிக் கடை?'ன்னு என்னையும் அடியா அடிச்சுப் போட்டு, இந்தக் கடையையும் காலி பண்ணாமே இருந்தாங்களே, அதைச் சொல்லுங்க!''

''என்னடா, திருப்பித் திருப்பிப் பறையன், பறையன் என்கிறாயே?'' என்று நான் அலுத்துக் கொண்டேன்.

''நானாங்க சொல்றேன்? ஊர் சொல்லுது, உலகம் சொல்லுதுங்க! இந்தப் பதினஞ்சு நாளா என் கடையை யாரும் எட்டிப் பார்க்காமலிருப்பதிலிருந்தே இது தெரியலைங்களா?''

''சரி, அப்படியென்றால் நீ இப்பொழுது என்னதான் சொல்கிறாய்?''

''இது உங்க கடை; இதிலே போட்டிருக்கிற பணம் உங்க பணம். நீங்களே இந்தக் கடையை எடுத்துக்குங்கோன்னு சொல்றேன்!''

''இதென்னடா வேடிக்கையாய் யிருக்கிறதே! உனக்குத் தினசரி வேலை கிடைப்பதற்குத் தான் வழியில்லை; யாருடைய உதவியையாவது கொண்டு சொற்ப முதலில் ஒரு ரொட்டிக் கடை, மிட்டாய்க் கடை இப்படி ஏதாவது ஒன்றை வைத்துப் பிழைத்துக் கொள்வதற்குக் கூடவா உனக்கு உரிமை இல்லை?''

''ஏதுங்க, யோசித்துப் பார்க்கப்போனா எனக்கு இருப்பது ஒரே உரிமைதானுங்களே?''

''அது என்னடா, ஒரே உரிமை?''

''வேறே என்னங்க, தற்கொலை செய்துகொள்ளும் உரிமை தானுங்க அது!'' என்றான் அவன்.

அவன் கண்களில் நீர் சுரந்தது.

பாவம், அதற்குக்கூட உரிமை இல்லை என்னும் விஷயம் அவனைப் போன்ற அப்பாவிகளுக்கு எப்படித் தெரியும்?

# அவள் என்னவானாள்?

ஏனோ தெரியவில்லை; கடந்த மூன்று மாத காலமாகக் கணத்துக்குக் கணம், ''அவள் என்னவானாள், அவள் என்னவா னாள்?'' என்ற கேள்வி என் உள்ளத்தில் எழுந்த வண்ணம் இருக்கிறது.

என்ன காரணத்தினாலோ அவளிடம் என் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்ட நான், உண்ணாமல் உண்ணும் போதும், உறங்காமல் உறங்கும் போதும், தொழில் செய்யாமல் செய்யும்போதும் கூட அந்தக் கேள்வியையே மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்-பதில்தான் இல்லை.

இத்தனைக்கும் அவள் தன் கடைசிக் கடிதத்தில்-வெறும் கடிதத்தில் அல்ல; காதல் கடிதத்தில்தான்-அழுத்தந் திருத்தமாக எழுதியிருந்தாள்:

''......நான் கடிதம் எழுதக்கூடிய ஒரு நிலையிலிருந்து, மனமுமிருந்து, சந்தர்ப்பமும் வாய்த்தால் எழுதுவேன். அதுவரை என்னையோ, என் கடிதத்தையோ எதிர்பார்த்து நீங்கள் ஏமாற்றமடைய வேண்டாம். நானும் தங்கள் கடிதத்தை எதிர்பார்க்க வில்லை...!''

ஆம், மலரையொத்த மனம் படைத்த ஒரு மாதரசி, தன் மலர்க் கரத்தால், காதல் நிறைந்த உள்ளத்தில் கருணை சுரக்க அடியேனுக்கு எழுதிய வரிகள்தான் அவை!

அத்துடன் அவள் நிற்கவில்லை; போனாற் போகிறதென்று பின்வருமாறும் எழுதியிருந்தாள்:

''நீங்கள் தைரியமாக இருக்க வேண்டும்; தினசரி வேலைகளில் உற்சாகத்துடன் ஈடுபட வேண்டும்!''

எப்படியிருக்கிறது கதை? முதல் வரியைப் படித்ததுமே நான் இறக்காமல் இறந்து விட்டேன். அதற்குப் பிறகு தான் அந்தக் காதலி தன் காதலனுக்குச் சொல்லுகிறாள்; அவன் தைரியமாக இருக்க வேண்டுமாம்; உற்சாகத்துடன் தன்னுடைய வேலைகளில் ஈடுபட வேண்டுமாம்!

அட, ஈஸ்வரா!

* * *

'**பா**லைவனம் போன்ற என் வாழ்க்கையில் தங்கள் கடிதங்கள் பசும் புற்றரைகளாகக் காட்சியளிக்கின்றன!'' என்று அன்று எழுதியவளா இன்று இப்படி எழுதினாள்?

''தங்கள் கடிதத்தைக் கொண்டு வரும் தபாற்காரன் ஒரு நாளாவது என்னைத் தேடி வருவதில்லை; நானேதான் அவனைத் தேடிக் கொண்டு போகிறேன்!'' என்று அன்று எழுதியவளா இன்று இப்படி எழுதினாள்?

''எதையும் காலத்தோடு செய்வதுதான் நல்லது; காலங் கடந்து செய்வது நல்லதல்ல. முடிந்தால் உடனே கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்; இல்லையேல் நாம் இருவரும் எங்கேயாவது ஓடிப் போவோம்!'' என்று அன்று எழுதியவளா இன்று இப்படி எழுதினாள்?

''உணர்விழந்தேன்; உற்சாகமிழந்தேன்; உங்கள் நினைவால் உணவு செல்லாமலும் உறக்கம் கொள்ளாமலும் தவியாய்த் தவிக்கிறேன்!'' என்று அன்று எழுதியவளா இன்று இப்படி எழுதினாள்?

''ஒன்று, நீங்கள் வேண்டும்; நீங்கள்தான் வேண்டும். இல்லை, காலன் வேண்டும்; காலன்தான் வேண்டும்!'' என்று அன்று எழுதியவளா இன்று இப்படி எழுதினாள்?

என்னால் நம்பவே முடியவில்லையே!

* * *

''**நா**ன் கடிதம் எழுதக் கூடிய ஒரு நிலையிலிருந்து, மனமுமிருந்து, சந்தர்ப்பமும் வாய்த்தால் எழுதுவேன்.....'' என்றால் என்ன அர்த்தம்?

''இல்லையென்றால் எழுதமாட்டேன்!'' என்று தானே அர்த்தம்?

''நான் கடிதம் எழுதக்கூடிய ஒரு நிலையிலிருந்து.......''

இதென்ன வார்த்தை? கடிதம் எழுதக் கூடிய நிலையில் இல்லாமல் வேறு எந்த நிலையில் அவள் இருக்கிறாளாம்?

ஒரு வேளை வேறு யாரையாவது கல்யாணம் செய்து கொள்ளும் நிலையில் இருக்கிறாளோ?

அப்படி நினைப்பதற்கும் அவள் இடம் கொடுத்திருக்க வில்லையே!

ஒரு சமயம் அவள் ஒருவார காலமோ இரண்டு வார காலமோ, ஏதோ ஓர் ஊருக்குப் போய்த் தங்கியிருக்க வேண்டிய அவசியம் நேர்ந்தது. அப்போது எனக்கு அவள் என்ன எழுதியிருந்தாள், தெரியுமா? ''உங்களை விட்டுவிட்டு வேறு யாரையாவது கல்யாணம் செய்து கொண்டுவிட ஓடுகிறேனோ என்று நீங்கள் தயவு செய்து நினைத்துவிட வேண்டாம். அம்மாதிரி ஒருநாளும் நடக்கவே நடக்காது!'' என்றல்லவா எழுதியிருந்தாள்?

அதுதான் போகட்டும்; அவள் மனத்துக்கு என்ன வந்தது? அந்தப் பாழும் மனம் எப்பொழுதும் என்னிடமே இருக்கிறதென்று அவளே எழுதியிருந்தாளே!-ஒரு வேளை அதனாலேயே தன் மனம் இன்னும் தன்னை வந்து அடைய வில்லை என்று அவள் அவ்வாறு எழுதியிருப்பாளோ?

கடைசியில், சந்தர்ப்பம் வாய்க்க வேண்டுமாம் சந்தர்ப்பம்! எந்தக் காதல்களாவது எந்தச் சந்தர்ப் பத்தையாவது எதிர்பார்த்துக் கொண்டு எங்கேயாவது காத்திருப்பதுண்டோ?-அழகுதான்!

* * *

முதலிலேயே நான் அவள் மீது சந்தேகம் கொண்ட துண்டு. ஏன் தெரியுமா? அவளை நான் காதலிப்பதற்கு எத்தனையோ காரணங்கள் இருந்தன. முக்கியமாக, அவள் பெரும்பாலான பெண்களைப் போல என் உடலை மட்டும் வளர்க்கக் கூடியவளாயில்லை; உணர்ச்சியையும் வளர்க்கக் கூடியவளாயிருந்தாள்.

ஆனால் என்னை அவள் காதலிப்பதற்கு எந்த விதமான காரணமும் இருக்கவில்லை.

என்னிடம் அழகும் இல்லை; ஐசுவரியமும் இல்லை; பேரும் இல்லை; புகழும் இல்லை.

''இவையெல்லாம் இல்லாத காதல் என்ன காதல்?'' என்று ஒருநாள் அவளைக் கேட்டேன்.

அவள் சொன்னாள், ''அதுதான் நிஜக் காதல்!'' என்று.

எனக்கு ஆச்சரியமாயிருந்தது. ''இது நிஜமா?'' என்று கேட்டேன்.

''நிஜம்தான்!'' என்றாள்.

பின் அந்த நிஜக் காதலுக்கு இன்று ஏன் இந்த கதி?

இந்த விஷயத்தில் அவள் உலக வழக்கத்தை யொட்டித் தன் பெற்றோரின் மீது பழியைச் சுமத்தி விட்டுத் தப்பித்துக் கொள்ளவும் முடியாது. ஏனெனில், அவளே தன் வீட்டுக்குச் சர்வாதிகாரி!

* * *

அடடா! கடந்த காலத்தைப் பற்றி இப்பொழுது கொஞ்சம் எண்ணிப் பார்த்தால் எல்லாம் ஒரே வேடிக்கையாயிருக்கிறது. ஏன், விநோதமாய்க் கூட இருக்கிறது!

இதெல்லாம் வெளியே சொல்லக் கூடாதவை, பரம ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டியவை யென்றாலும் இங்கே சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. ''மனைவி கிழித்த கோட்டைத் தாண்டாமலிருப்பது கணவனின் கடமை'' என்பது இப்போ தெல்லாம் எங்கும் வழக்கமாயிருந்து வருகிறதல்லவா? அந்த வழக்கம் எல்லோருடைய விஷயத்திலும் கல்யாணமான பிறகுதான் ஏற்படுகிறது. நான் என்னடாவென்றால் கல்யாணமாகு முன்பே அவள் கிழித்த கோட்டைத் தாண்டுவதில்லை!

இதைப் பார்க்கும்போது, ''காதல், பெண்களைப் பல சாலிகளாக்கி விடுகிறது; ஆண்களைப் பலவீனர்களாக்கி விடுகிறது!'' என்று யாரோ ஒரு புண்ணியவான் சொல்லியிருக்கிறானே, அது எவ்வளவு தூரம் உண்மையாயிருக்கிறது!

ஆனாலும் அவன் சொன்னதை உலகம் கேட்டதா? இல்லை; முக்கியமாக, ஆணுலகம் அதை லட்சியம் செய்யவேயில்லை. அது தன் பாட்டுக்குக் காதல் நாடகத்தில் ஈடுபட்டுத் தன்னை எவ்வளவுக் கெவ்வளவு பலவீனப் படுத்திக் கொள்ள முடியுமோ, அவ்வளவுக் கவ்வளவு பலவீனப்படுத்திக் கொண்டு பாழாய்ப் போகிறது!

அதற்கேற்றாற் போல்தான் இந்தக் கவிஞர்கள், காவிய கர்த்தர்கள், கதாசிரியர்கள் அத்தனை பேரும் இருக்கிறார்கள். அவர்கள் ஆண்களால் காதலிக்கப்பட்டுக் கைவிடப் பட்ட பெண்களுக் காகத்தான் கண்ணீர் வடிக்கிறார்களே தவிர, பெண்களால் காதலிக்கப்பட்டுக் கைவிடப்பட்ட ஆண்களுக்காகக் கண்ணீர் வடிப்பதேயில்லை!

ஏன் இந்தப் பாரபட்சமோ?

* * *

இப்பொழுது நான் என்ன புலம்பி என்ன பயன்? அவளோ என்னை அறவே மறந்து விட்டாள்; நான்தான் அவளை மறக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன். என்னை ஆதரித்து எழுத இந்தப் பரந்த உலகில் ஒரு கவிஞன் இல்லை; காவியகர்த்தா இல்லை; கதாசிரியனும் இல்லவேயில்லை!

இதோ, கதிரவனும் அவளைப்போல் மேல் வானத்தில் மறைந்து விட்டான். நான் கடற்கரையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். என்னுடைய கண்கள் வழக்கம்போல் பார்க்குமிட மெல்லாம் அவளைத் தேடிக் கொண்டிருக்கின்றன. மனமும், ''அவள் என்னவானாள், அவள் என்னவானாள்?'' என்று நிமிஷத்துக்கு நிமிஷம் எண்ணமிட்டுக் கொண்டேயிருக்கிறது.

வான முகட்டை எட்டிப் பிடிக்கக் கடல் அலைகள் ஓயாமல் ஒழியாமல் முயன்று கொண்டிருக்கின்றன வல்லவா? அவற்றைப் போல் நானும் அவளைத் தேடிப் பிடிக்க முயன்று கொண்டிருக்கிறேன்.

பாவம், அந்த அலைகளுக்கு என்றும் வெற்றிகிட்டப் போவதில்லை என்பது நிச்சயம். என்னுடைய முயற்சியும் அப்படித்தான் முடியுமோ?

பின் ஏன் இந்த விபரீத சந்தேகம் என்றுமில்லாதபடி என் உள்ளத்தில் எழுகிறது?

''ஒருவேளை அவள் செத்துத்தான் போயிருப்பாளோ?''

இப்படி எண்ணியதுதான் தாமதம்; ''இல்லை; அவள் சாகவில்லை.....?'' என்கிறது எங்கிருந்தோ வரும் ஒரு குரல்.

திரும்பிப் பார்க்கிறேன்; என்ன விந்தை இது! மூன்று மாதங்களுக்குப் பிறகு-இல்லை, மூன்று வருடங்களுக்குப் பிறகு-இல்லையில்லை, மூன்று யுகங்களுக்குப் பிறகு-அதோ, என் கண்ணில் படுகிறாளே, அவள் யார்?

அவள் அவளேதானா?-ஆம், சந்தேகமேயில்லை; அவள் அவளேதான்!

அவளுடன் செல்பவன்-அவள் சகோதரனாயிருப்பானோ? - இருக்கவேயிருக்காது! - அவ்வளவு லாவகமாக இடையில் கை கொடுத்து அவளை அணைத்துக் கொண்டு செல்லும் அவன், அவள் கணவனைத் தவிர வேறு யாராயிருக்க முடியும்?

அவ்வளவுதான்; என் தலை சுழல்கிறது; 'கலகல' வென்ற சிரிப்பொலி காற்றில் மிதந்து வந்து என் காதில் விழுகிறது; நான் வெறித்துப் பார்க்கிறேன்-அவர்கள் இருவரும் ஏதோ பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் செல்கிறார்கள்!

''சரி, இனி நம்மைப் பொறுத்தவரையில் அவள் செத்தவளாகத்தான் ஆகிவிட்டாள்!'' என்று ஏங்குகிறது என் அப்பாவி மனம்.

மீண்டும் அதே குரல்; ''இல்லை; அவள் சாகவேயில்லை!'' என்று சாதிக்கிறது.

எனக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வருகிறது. ''பின் யார் செத்தது? நானா செத்துவிட்டேன்?'' என்று கத்துகிறேன்.

''நீயும் சாகவில்லை!'' என்று அந்தக் குரல் முன்னைவிட உரத்த குரலில் கத்துகிறது.

நான் மிரண்டு போய், ''பின் யார்தான் செத்தது?'' என்று கேட்கிறேன்.

''காதல் செத்தது!''

''அதற்குச் சாவே யில்லை என்கிறார்களே!''

''உண்மை; கவிதையிலே, காவியத்திலே, கதையிலே அதற்குச் சாவே யில்லைதான்! ஆனால், வாழ்க்கையில் எதற்கும் பிறப்பும் இறப்பும் உள்ளதுபோல அதற்கும் உண்டு!'' என்கிறது அந்தக் குரல்!

நீங்கள் அதை மறுக்கிறீர்களா?

# கதவு திறந்தது!

டாக்டர் ரங்கராவ் அந்த ஆஸ்பத்திரியில் வேலைக்கு அமர்ந்ததிலிருந்து இதுவரை எத்தனையோ பிரேதங்களைப் பரிசோதித்திருக்கிறார். ஆனால் அன்றைய தினம் பரிசோதனைக்கு வந்த பிரேதத்தைப் பார்த்ததும் ஏற்பட்ட அதிர்ச்சியும் அனுதாபமும் என்றுமே அவருக்கு ஏற்பட்டதில்லை.

ஏன்?

அவருடைய உள்ள மறிந்த ஒரு ஜீவனின் பிரேதமாயிருந்தது அது!

அவன் எப்படி இறந்தான்?

'போலீஸ் ரிப்போர்ட்' அவருக்குப் பதில் சொல்லிற்று:

வழி நடைப் பாதையிலே, கொட்டும் மழையிலே, குளிரிலே அவன் விறைத்துக் கிடந்தான் என்று!

அவன் யார்?

* * *

அரசியல் கொந்தளிப்பில் குதித்து அதிகார வர்க்கத்துடன் போராடி அம்பலத்துக்கு வந்தவனல்ல; பேரும் புகழும் பெற்ற பிரமுகனல்ல; காரிருளில் ஒரு மின்னல்போல் கலைவானில் தோன்றி மறைந்த கலைஞனுமல்ல; சர்வ சாதாரணமான தொழிலாளி!- குழந்தைகள் மாம்பழத்தைச் சப்புக் கொட்டித் தின்றுவிட்டுக் கொட்டையை வீசி எறிந்து விடுவதுபோல, முதலாளிகள் அவனுடைய இரத்தத்தை உறிஞ்சிவிட்டுத் தள்ளி விட்டார்கள்!

பார்க்கப் போனால் அந்த முறையில் அறிமுகப்படுத்துவதற்குக் கூட அவன் அருகதையற்றவன். தொழிலாளிகளுக்காவது வேலை செய்வதற்கென்று ஓர் இடமுண்டு; அவர்களுடைய வேலைக்குக் கூலியும் இவ்வளவுதான் என்று நிச்சயமாக உண்டு; வசதியுடனோ, வசதியில்லாமலோ அவர்கள் வசிப்பதற்கென்று வாடகைக்காவது ஒரு சின்னஞ் சிறு அறை உண்டு; உயிர் போகாமலிருப்பதற்காவது ஓரளவு உண்டு. ஆனால் அவனுக்கோ?

இந்த உலகத்தில் எதுவுமே நிச்சயமில்லை!

ஆம்; இந்த உலகத்தில் யாருக்குமே எதுவுமே நிச்சய மில்லைதான்; அப்படித்தான் வேதாந்திகள் சொல்லுகிறார்கள்.

ஆனால், அந்த வேதாந்திகள் தங்குவதற்கு மட்டும் சகல செளகரியங்களும் பொருந்திய எத்தனையோ மடங்கள் சர்வ நிச்சயமாக இருக்கின்றன; சாப்பாட்டு விஷயத்திலோ சாம்ராஜ்யாதிபதிகள் கூட அவர்களிடம் பிச்சை எடுக்கவேண்டும்!

இத்தனைக்கும் அத்தனை செளகரியமான வாழ்க்கைக்கு அவர்களுடைய உடலும் ஊனும் அணுவளவாவது தேய்வதில்லை; உள்ளம் நொந்து உயிரும் ஓரளவாவது ஒடுங்குவதில்லை.

மோட்சசாம்ராஜ்யத்தில் தாங்கள் வகிக்கப் போகும் பதவிக்காக, முன் கூட்டியே அவர்களுக்குக் காணிக்கை என்ற பெயரால் லஞ்சம் கொடுத்துவைக்கும் மகானுபாவர்கள் எத்தனையோ பேர் இருக்கும்போது, அந்த வேதாந்திகளுக்கு இந்த அநித்தியமான உலகத்தில் எதைப் பற்றித்தான் என்ன கவலை?

ஆனால், மேற்கூறிய அந்தப் பரிதாப ஜீவனுக்கோ?-

எத்தனையோ கவலைகள்!

விடிந்தால் வேலை கிடைக்குமா என்று கவலை; வேலை கிடைத்தால் கூலி கிடைக்குமா என்று கவலை; கூலி கிடைத்தால் சோறு கிடைகுமா என்று கவலை; அதுவும் கிடைத்தால் 'அப்பாடி!' என்று சற்று நேரம் விழுந்து கிடக்க எங்கேயாவது கொஞ்சம் இடம் கிடைக்குமா என்று கவலை.

ஆம்; அவனுடைய வாழ்க்கை அந்த லட்சணத்தில் தான் இருந்தது. ''குடை ரிப்பேர், குடை ரிப்பேர்!'' என்று தெருத் தெருவாய்க் கூவிக்கொண்டு போவான்; கூப்பிட்ட வீட்டுக்குள் நுழைவான்; கொடுத்த வேலையைச் செய்வான்; ''கூலி என்னடா வேண்டும்?'' என்றால், ''கொடுக்கிறதைக் கொடுங்க, சாமி!'' என்பான்.

சிலரிடம் அவன் வேலை செய்த கூலிக்காக வம்புக்கு நிற்பதும் உண்டு; மல்லுக்கு நிற்பதும் உண்டு; எப்படித்தான் நின்றாலும் ஏமாந்து போவதும் உண்டு.

கிடைத்த காசுக்கு ஏற்றவாறு அவன் தானே சமைத்துச் சாப்பிடுவது வழக்கம். எங்கே?-வீதியோரங்களில் இருக்கும் நடைபாதையிலே!

ஆம்; தீயர்கள், திருடர்கள், தீராத நோயாளிகள், திக்கற்றவர்கள் இவர்களின் மத்தியிலே உழைப்பாளியான அவனும் உயிருக்கு மன்றாடிக் கொண்டு வாழ்ந்து வந்தான்.

வயிற்றுப் பிழைப்பையொட்டி அவன் வழக்கம் போல் வீதிகளில் பவனி வரும்போது, சில வீடுகளில் முன்சுவரில் பின் வருபவை போன்ற கல்வெட்டுக்கள் காட்சியளிக்கும்;

''1930 மேமீ 7உ மொட்டையம்மன் தேவஸ்தானத்துக்கு முல்லைவனம் ஜமீன்தார் ஸ்ரீ முருகேச முதலியார் பாரியாள் ஸ்ரீமதி முத்தம்மாள் எழுதிவைத்த வீடு.''

இந்தக் கல்வெட்டுக்களைப் படிக்கும்போது, 'ஆதியும் அந்தமும் இல்லாத ஆண்டவனுக்கு இந்த வீடு என்னத்துக்கு வாசல்தான் என்னத்துக்கு?'' என்று அவன் நினைத்துக் கொள்வானோ என்னமோ, தன்னையும் அறியாமல் சிரித்து விடுவான்!

* * *

ஒரு நாள் வழக்கம்போல் தான் தங்கியிருக்கும் வழிநடைப் பாதையிலே, படுப்பதற்காகப் பழைய கோணிக் கந்தையொன்றை உதறிப்போட்டுக் கொண்டிருந்தான் குப்புசாமி.

வானத்தில் சந்திரன் இல்லை; வீதிகளில் விளக்குகளும் இல்லை.

ஏற்கெனவே அவனுக்கு இரண்டு நாட்களாகக் காய்ச்சல். சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் 'மிக்சர்' என்று சொல்லி அனாயாசமாக ஊற்றிக் கொடுக்கும். 'வர்ணத் தண்ணீ'ரை வாங்கிக் குடித்துக் கொண்டிருந்தான். குணம்தான் அவன் உயிரோடு இருக்கும் வரை தெரியப் போவதில்லையே!

இந்த அழகில்தான் அன்று காற்றும் மழையும் கலந்தடித்தது. மனிதர்களைப் போல் தன்னை வஞ்சிக்காத காற்று, மழையின் கருணையை எண்ணி அவன் மகிழ முடியுமா? வேதனையுடன் விழுந்தடித்துக் கொண்டு ஓடினான். வீடு வீடாகச் சென்று எட்டிப் பார்த்தான். படியில், நடையில், வழியில், வராந்தாவில்-எந்த மூலையிலாவது கொஞ்சம் இடம் கிடைக்குமா என்று தான்!

''அம்மா!'', ''ஐயா!'' என்று வாசலில் நின்றபடி அவன் கத்தினான். அவனுடைய கதறலைக் கேட்டு ''ஐயோ!'' என்று இரங்குவாரில்லை; ''வா!'' என்று வழி விடுவாரில்லை.

எத்தனையோ ஒட்டுத் திண்ணைகள் அவனை ''வா வா!'' என்று அழைப்பது போலிருந்தன; ஆனால் வாசற் கதவுகள் வழி மறித்து நின்றன.

அங்கு மிங்குமாக அலைந்து அலுத்துப்போன பிறகு; அருகிலிருந்த ஒரு வீட்டின் கதவைப் பலமாகத் தட்டினான் அவன்.

அந்த வீட்டுக்காரர்தான் டாக்டர் ரங்கராவ். ''யாரப்பா, அது?'' என்று சாவதானமாகக் கேட்டார் அவர்.

''நான்தான் குப்புசாமிங்க!''

டாக்டருக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது. ''என்னடா, உன்னையும் ஆட்லி, ட்ரூமன் மாதிரி உலகமே அறிந்திருக்குமென்று நினைத்துக் கொண்டாயா?'' என்று கேட்டார் படுக்கையில் கிடந்தபடியே.

''நான் ஏன் சாமி, அப்படியெல்லாம் நினைச்சிக்கிறேன்? வெளியே காத்தும் மழையும் கலந்தடிக்குது; உங்க வீட்டுத் திண்ணையிலே கொஞ்சம் இடம் கொடுத்தீங்கன்னா, இராப்பொழுதைக் கழிச்சுடுவேன்!'' என்றான் குப்புசாமி.

இப்பொழுதுதான் டாக்டருக்கு விஷயம் விளங்கிற்று. உடனே அவர், ''என்னடா, இது சத்திரமா?'' என்று உறுமினார்.

''நிஜத்தைச் சொல்லப் போனா சத்திரந்தானே, சாமி! இருக்கிற வரைதானே இந்த வீடு வாசல் எல்லாம்....'' என்று தனக்குத் தெரிந்த வேதாந்தத்தை அவருக்குப் போதிக்க ஆரம்பித்தான் குப்புசாமி.

அவ்வளவுதான்; அடுத்த நிமிஷம் சாத்தியிருந்த கதவு 'தடா' ரென்று திறந்தது. வராந்தாவிலிருந்த மின்சார விளக்கு 'குப்' பென்று எரிந்தது. பசியால் வாடி, மழையால் நனைந்து, குளிரால் நடுங்கி நின்ற குப்புசாமியின் தோற்றம்கூட ஏனோ டாக்டர் ரங்கராவின் ஆத்திரத்தை அடக்கவில்லை. ''அவ்வளவு திமிரா, உனக்கு?'' என்று சீறிக்கொண்டே அவர் வாயு வேகத்தில் அவனுடைய கழுத்தில் கையை வைத்தார்; அடுத்த கணம் கொட்டும் மழையில் அவன் குப்புற விழுந்தான்.

அதற்குப் பின் கதவைப் 'படா' ரென்று சாத்திய சத்தமும், விளக்கை 'டக்' கென்று அணைத்த ஓசையும் கேட்கும் வரைதான் அவனுடைய உடம்பில் உயிர் இருந்தது.

* * *

இந்தச் சம்பவம் டாக்டர் ரங்கராவின் நினைவுக்கு வந்ததும் அவருடைய உள்ளம் பதைத்தது; நியாயத்துக்கு விரோதமாகத் தம்முடைய தீர்ப்பில் 'இயற்கை மரணம்' என்று எழுதும்போது அவருடைய மனச்சாட்சி அவரை வதைத்தது.

அந்த வேதனையுடன் அவர் யந்திரம்போல் தம்முடைய வேலைகளை அன்று எப்படியோ கவனித்து விட்டு வீடு திரும்பினார்.

அன்றிரவு அடாத மழை பெய்தது.

முன்னிரவு நடந்ததுபோல் அன்றிரவும் இரண்டொரு நடைபாதை வாசிகள் வந்து அவருடைய வீட்டுக் கதவை இடித்தனர்.

என்ன விந்தை இது! இன்று அவருக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வரவில்லை; அமைதியுடன் எழுந்து வந்தார்.

அடுத்த நிமிஷம்.........கதவு திறந்தது!

# மாட்டுத் தொழுவம்

*அதிகாரப் பூர்வமான சட்ட திட்டங்களால் மனித வர்க்கத்தை அடக்கி ஆண்டுவிட முடியும் என்று நம்புவது அறியாமை. மனிதன் நினைத்தால் அந்தச் சட்ட திட்டங்களை மீறிவிட முடியும். ஆனால் அன்பின் ஆக்கினைகளை மீறுவதற்கு மனிதன் சக்தியற்றவன். ஆகையால்தான் நமது நாட்டில் அவ்வப்பொழுது தோன்றி மறைந்த மகான்கள், 'அன்பே ஆண்டவன்' என்று கூறியிருக்கிறார்கள். வாழ்க்கையில் அன்புக்கு இடமில்லையென்றால் இன்பத்துக்கு இடம் ஏது?*

*அனைவரும் பொதுவாக அன்பில்தான் பிறக்கிறோம்; அன்பில்தான் வளர்கிறோம். ஆனால் எல்லோருமே அன்பில் வாழ ம்டிகிறதா? இல்லை. அப்படி வாழ முடியாத தரித்திர தேவதைகளில் நானும் ஒருத்தி.*

*பாவாடை கட்டி நான் எல்லோரும் பார்க்கக் கூடிய பாலகியா யிருந்தபோது அன்பைக் கண்டேன். அந்த அன்பின் காரணமாகப் பலவிதமான ஆடை அணிகளை அணிந்து பார்த்தேன்; விதவிதமான பட்சணம் பழ வகைளைத் தின்று பார்த்தேன்; அழகான பொம்மைகளுடன் ஆடிக் களித்தேன். அப்பாவின் அருமைப் பெண்ணாயிருந்தது, அம்மாவின் கொஞ்சும் கிளியாயிருந்தது எத்தனையோ ஆடல் பாடல்களைப் பார்த்தும் கேட்டும் அனுபவித்தேன். ஆனால் இன்றோ?*

*அந்தக் காலம் மலையேறி விட்டது, எத்தனையோ நாட்கள் என்னை யாரும் பார்க்கமுடியாத இருட்டறையில் இருந்த பிறகு, கடைசியில் ஒரு நாள் 'அவர்' வந்தார். அவருடன் சில 'தரகர்'களும் வந்திருந்தனர். 'தரகர்கள்' என்றால் இங்கே நிஜத் தரகர்கள் என்று அர்த்தமில்லை; எல்லாம் அவருடைய உற்றார், உறவினர்தான். ஏதாவது ஆடு, மாடு வாங்கும்போது பேரம் நடக்கும் பாருங்கள், அதே மாதிரிதான் ஏறக்குறைய என்னுடைய கல்யாணப் பேச்சும் நடந்தது. பேரமெல்லாம் ஒருவாறு பேசி முடித்தார்கள். ஒரு நாளையும் குறிப்பிட்டு வைத்தார்கள். அன்று இரு வீட்டாருமாகச் சேர்ந்து ஊரார், உறவினரைக் கூட்டினார்கள். நான் கழுத்தைக் குனிந்து கொடுத்தேன்; அவர் தாலியைக் கட்டி வைத்தார். அவ்வளவுதான்; அன்றைய தினத்திலிருந்து நான் அவருடைய ஏகபோக உரிமைப் பொருளாக ஆகிவிட்டேன்.*

அதாவது, அவர் இனி என்னை என்ன செய்தாலும் சரி; 'கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருஷன்!'

ஆனால் இந்த நியாயம் அவருக்கு மட்டும்தான்; எனக்குக் கிடையவே கிடையாது-சமுதாயத்தின் சட்ட திட்டப்படி!

* * *

தெரிந்த ஊரை விட்டு, பிறந்த வீட்டைவிட்டு, பெற்ற தாயைவிட்டு, வளர்த்த தந்தையை விட்டு, தெரியாத ஊருக்குள் நுழைந்தேன்; பிறக்காத வீட்டுக்குள் புகுந்தேன்; பெற்ற தாயின் பரிவுக்குப் பதில் வாய்த்த மாமியின் கொடுமையைக் கண்டேன்; என்னை வீட்டுக் காரியம் செய்ய விடாத தந்தைக்குப் பதில் எடுத்ததற்கெல்லாம் என்னையே காரியம் செய்யவிடும் மாமனாரைக் கண்டேன்.

இவர்கள் மட்டுமா? தினந்தோறும் காலை இரண்டு மணிக்கே எழுந்து நான் அடுப்பைக் கட்டிக் கொண்டு அழவேண்டுமென்பதற்காக, அடுத்த ஊரிலுள்ள கலாசாலையில் படிக்கும் இரண்டு மைத்துனன்மார் எனக்கு இருந்தனர். மாமியார் தினசரி என்னுடன் மல்லுக்கு நிற்பதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஒரு மைத்துனியும் இருந்தாள். அவள் பெயர் மாலினி; பெயரில் இருக்கும் இனிமை சுபாவத்தில் கிடையாது. மாடும் ஒன்று இருந்தது; தினசரி இரண்டு வேளையும் பால் மட்டும் கறந்து கொடுத்து விட்டுச் செல்வதற்காக ஒரு வேலைக்காரனும் இருந்தான். மற்ற வேலைகளுக்குத்தான் நான் ஒருத்தி இருக்கிறேனே!

ஆனால், அவர் மட்டும் என்னிடம் அன்பாயிருந்திருந்தால் இத்தனை துன்பங்களும் என்னை ஒன்றும் பாதித்திருக்காது; பாதித்திருக்கவும் முடியாது.

அதுதான் இல்லை; அவருடைய சுபாவமே அலாதியாயிருந்தது. அவரைப்போல் இந்த உலகத்தில் வேறு யாராவது இருப்பார்களோ, இருக்கமாட்டார்களோ - எனக்குத் தெரியாது. ஆனால் அவர் மட்டும் அப்படியிருந்தது உண்மை.

தனக்கு ஏதாவது காரியம் ஆகவேண்டியிருக்கும்போது தான் அவர் என்னுடன் பேசுவார். அப்படிப் பேசும் போதும் அவருடைய பேச்சில் அன்பைக் காண முடியாது; அதிகாரத்தைத்தான் காணமுடியும்.

என்னுடைய பேதை உள்ளம் அவருடன் எப்பொழுதும் பேசிக்கொண்டிருக்க வேண்டுமென்று துடியாய்த் துடிக்கும். என்னாலானவரை அந்த ஆசையை அடக்கிக்கொள்ள முயல்வேன். ஆனாலும் இரண்டு துளிக் கண்ணீராவது சிந்தாமற் போனால் அந்தப் பாழும் ஆசை அடங்குவதேயில்லை.

நினைத்த போதெல்லாம் அவர் வெளியே போவதற்குக் கிளம்புவார். அப்பொழுது எனக்கும் ஏனோ அவருடன் போக வேண்டுமென்ற ஆசை தோன்றும். அத்துடன் அவர் 'எங்கே போகிறார்?' என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் என் உள்ளத்தை அரிக்கும். என்னையும் அறியாமல் பொங்கி வரும் மகிழ்ச்சியுடன், ''வெகு தூரமோ?'' என்று கேட்டுவிடுவேன்.

அவ்வளவுதான்; அவர் முகம் அனலைக் கக்கும். ''உன்னிடம் சொல்லிக் கொண்டுதான் போக வேண்டுமோ?'' என்று சீறி விழுவார். அப்பொழுது என் முகம் எப்படி இருந்திருக்குமென்று இப்பொழுது உங்கள் கற்பனையில் தோன்றுகிறதல்லவா? பார்த்துக் கொள்ளுங்கள்.

எப்பொழுதாவது ஒரு சமயம் அவர் நேரம் போவதே தெரியாமல் காப்பி கேட்காமலே இருந்துவிடுவார். நானே எடுத்துக்கொண்டு போவேன். அப்பொழுது அவர் என்ன சொல்வார் தெரியுமா? ''ஏன், மாலினி இல்லையா? எதற்காக நீ எடுத்துக் கொண்டு வந்தாய்? இப்பொழுது நான் உன்னுடைய அழகை அவசியம் பார்க்க வேண்டுமாக்கும்!'' என்பார்.

இதை அவர் அலட்சியமாகத்தான் சொல்வார். ஆனால் அது என்னை எவ்வளவு தூரம் வேதனைக்கு உள்ளாக்கி விடுகிறதென்பதை அந்தப் புண்ணியவான் அறிவதேயில்லை.

இப்படித்தான் சொல்கிறாரே, நாமே எதற்காக எடுத்துக்கொண்டு போவது என்று பேசாமலிருந்து விட்டாலோ, ''தங்களைக் கேட்டால்தான் கொடுக்க வேண்டுமோ!'' என்பார் எகத்தாளமாக.

எப்படி வேடிக்கை?

கடைசியில் இன்னும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் இங்கே ஓரளவு வெட்கத்தை விட்டுச் சொல்லத்தான் வேண்டும். அது இதுதான்:-

இரவில் அவர் படுக்கையறைக்குள் நுழைந்ததும் நான் பாலை எடுத்துக் கொண்டு பின்னால் செல்வேன். பாலை மேஜையின் மேல்

வைத்துவிட்டு, வழக்கம்போல் அடுத்த அறையில் தனியே படுத்துக் கொள்வதற்காகத் திரும்புவேன். எப்பொழுதாவது ஒரு நாள், ''என்ன அவ்வளவு அவசரம்?'' என்பார் அவர்-அதுவும் அன்புடன் அல்ல; அதிகாரத்துடன் தான்!

இந்த அழகான கேள்வியின் அர்த்தம், நான் அவருடன் கொஞ்ச நேரம் இருக்கவேண்டும் என்பதுதான்.

குறிப்பறிந்து நானும் என்னையறியாத நடுக்கத்துடனும் பயத்துடனும் அவரை நெருங்குவேன்.....

இப்படிப்பட்ட வாழ்க்கையில்தான் நான் இன்று இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாராக விளங்குகிறேன்.

இவ்வளவு துன்பங்களையும் நான் எதற்காகச் சகித்துக் கொண்டிருக்கவேண்டும்?

வயிற்றுச் சோற்றுக்காகவா?

இல்லை; அதைப்பற்றி நாய்கூடக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. பின் எதற்காக? ''பெண்ணாய்ப் பிறந்ததற்காக!''

* * *

**வீ**ட்டில் அவர் வைத்ததுதான் சட்டம். ஆனால் அவருடைய சட்டதிட்டங்கள் என்னைத் தவிர வேறு யாரையும் கட்டுப்படுத்தாது. அவர் வீட்டில் இல்லாத வேளையில் அவருடைய சட்டதிட்டங்களை அமுல் நடத்தி வைக்கவும், அவசியமானால் அவசரச் சட்டங்கள் போடவும் என் மாமியார் இருந்தாள். நான் எந்த மாதிரிப் புடவை கட்டுவது, எந்தமாதிரி ரவிக்கை போடுவது என்பதுபோன்ற விஷயங்களில் கூட என் மாமியாரின் சட்டதிட்டங்கள்தான் செல்லும் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.

அவளுடைய குண விசேஷத்தைப் பற்றி ஒரே ஒரு வார்த்தையில் சொல்லிவிடலாம். அதாவது, அவர் என்னை எவ்வளவுக் கெவ்வளவு படுத்துகிறாரோ, அவ்வளவுக்கவ்வளவு அவளுக்குத் திருப்தி! - அவளுடைய மனோபாவம் அப்படியிருக்கும்படியாக நான் அவளுக்கு என்ன தீங்கு செய்தேனோ, தெரியவில்லை.

இத்தனைக்கும் என்னுடைய கல்யாணத்திற்கு முன்னால் நான் யாரோ, அவள் யாரோ? ஏற்கனவே சேர்ந்து வாழ்ந்திருந்தாலும் ஏதாவது பழைய மனத்தாங்கல் இருப்பதற்குக் காரணமிருக்கலாம்.

இப்போதுதானே அவளை எனக்கும் என்னை அவளுக்கும் தெரியும்? அதற்குள் என்னிடம் ஏன் அவளுக்கு அத்தனை வெறுப்பு?

பார்க்கப் போனால் பிறக்கும்போதே அவள் மாமியாராகப் பிறந்துவிடவில்லை. ஒரு காலத்தில் அவளும் இன்னொரு மாமியாரின் கீழ் மருமகளாய்த்தான் வாழ்ந்திருக்க வேண்டும். இப்பொழுது என் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்கள் எல்லாம் அப்பொழுது அவள் உள்ளத்திலும் தோன்றியிருக்க வேண்டும்; நான் இன்று அனுபவிக்கும் கஷ்டத்தை அவளும் அன்று அனுபவித்திருக்க வேண்டும்; நான் அடையும் வேதனையை அவளும் அடைந்திருக்க வேண்டும்; நான் காணும் கனவுகளையெல்லாம் அவளும் கண்டிருக்க வேண்டும்; என்னைப் போல் இளமையின் ஆசைக் கடலில் வீழ்ந்து அவளும் ஒரு காலத்தில் தத்தளித்திருக்க வேண்டும்; துன்பத்தைக் கண்டு துடித்து, இன்பத்தை நினைத்து ஏங்கியிருக்க வேண்டும். ஆனால் இன்று காலம் மாறிவிட்டது. அவள் கடவுளைத் தவிர வேறு எதைப் பற்றியும் சிந்திக்க முடியாத நிலையில் இப்பொழுது இருக்கிறாள். இருந்து விட்டுப் போகட்டும். அதற்காக நானும் அவளைப் போல் ஜபமாலை உருட்டி வெறும் வேஷதாரியாக வேண்டுமா. வீட்டுக் காரியங்களைத் தவிர இந்த ஜன்மத்தில் எனக்கு வேறொன்றும் வேண்டாமா? இதற்குத் தானா நான் இவளுடைய வீட்டுக்கு வந்தேன்? அப்படியானால் என்னுடைய பிறந்தகத்திலேயே எவ்வளவோ காரியங்கள் நான் செய்வதற்கு இருக்கின்றனவே!

தினசரி என்னுடன் சண்டையிடுவதற்கு அவள்தான் எத்தனை சந்தர்ப்பங்களைச் சிருஷ்டி செய்து கொள்கிறாள்!- ''சந்தர்ப்பங்களை நோக்கி நான் காத்திருக்க மாட்டேன்; நானே வேண்டும்போது அவற்றைச் சிருஷ்டி செய்து கொள்வேன்!'' என்று சொன்ன வீராதி வீரன் நெப்போலியன்கூட இவளிடம் 'ராஜதந்திர'த்துக்குப் பிச்சை எடுக்க வேண்டும் போலிருக்கிறதே!

* * *

இடைவேளையில் எப்பொழுதுதாவது ஒரு நாள் எதிர் வீட்டு அகிலா எங்கள் வீட்டுக்கு வருவாள். எனக்கும் அன்று அழுக்குத் துணிகளைத் துவைத்துப் போடும் வேலையில்லாமலிருந்தால், சிறிது நேரம் அவளுடன் ஏதாவது பேசிக் கொண்டிருப்பேன். அவள் தன் கணவருடன் சேர்ந்து நடத்திய ஊடல், காதல் இவைகளைப் பற்றியெல்லாம் என்னிடம் வெறி பிடித்தவள் போல் சொல்வாள். அப்புறம் அவளும் அவளுடைய கணவரும் சேர்ந்து கண்டு களித்த

ஆடல் பாடல்கள், கண் காட்சிகள் முதலியவற்றைப் பற்றியெல்லாம் என்னிடம் விவரிப்பாள். அவற்றையெல்லாம் கேட்கக் கேட்க எனக்கு என்னவோ மாதிரி இருக்கும். ''அதெல்லாமிருக்கட்டும், அகிலா! வேறு எதைப் பற்றியாவது பேசேன்!'' என்பேன் நான் மனம் நொந்து.

''ஏன், அதற்குள் உனக்கு உலக வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு விட்டதோ?'' என்று நகைப்பாள் அவள்.

''இல்லை; அதைப்பற்றி யெல்லாம் பேசிக் கொண்டிருந்தால் என் மாமிக்குக் கோபம் வந்தாலும் வரும்!'' என்று பழியை அவள் மீது போட்டு வைப்பேன், ரகசியமாக.

ஒரு நாள் அகிலா, என்னிடம் கோடி வீட்டுக் குமுதத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாள். அப்போது பேச்சு வாக்கில், ''அவளுக்கு நல்ல இடத்தில் வரன் கிடைத்தது. வீட்டில் அவளும் அவளுடைய அகத்துக்காரரும்தானாம். மாமியார், நாத்தனார் என்று ஒரு தொந்தரவும் கிடையாதாம்!'' என்றாள் அவள்.

நான் சும்மா இருந்திருக்கக் கூடாதா? ''என்னமோ, அவள் பாக்கியசாலி!'' என்று சொல்லி வைத்தேன்.

அவ்வளவுதான்; உடனே என் மாமியார், ''நீ பாக்கியசாலியில்லையாக்கும்?ஏன்னா, நான் ஒருத்தி இன்னும் உயிரோடு இருக்கேனோ இல்லையோ, அது உன் கண்ணை உறுத்துகிறதாக்கும்!'' என்று ஆரம்பித்து விட்டாள்.

நான் என்னத்தைச் சொல்வது? ''அதைத்தான் நாம் ஏன் சொன்னோம்?'' என்று எண்ணி வருந்தினேன்.

அன்று மாலை அவர் வேலையிலிருந்து வந்ததும் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்பொழுது என் மாமியாருக்கு உண்மையாகவே கண்ணீர் வந்ததோ இல்லையோ, அவள் தன் மேலாக்கினால் கண்களைத் துடைத்துக் கொண்டே, ''உன்னைப் பெற்று வளர்த்ததற்கு இத்தனை நாளும் நான் அடைந்த சுகம் போதும்டா அப்பா, போதும்! இனிமேல் ஒரு விநாடிகூட நான் இந்த வீட்டில் இருக்கவே மாட்டேன்!'' என்று வழக்கமாக ஆரம்பிக்கும் பீடிகையுடன் ஆரம்பித்து, ''எதிர் வீட்டில் அகிலா என்று ஒருத்தி இருக்கிறாளோ இல்லையோ, அவளை யாரும் கேட்பார், மேய்ப்பார் கிடையாது. தினசரி இங்கே வந்து இவளுடன் ஏதாவது அரட்டையடித்து விட்டுப் போவாள். இன்று மத்தியானமும்

வந்திருந்தாள். அவளிடம் இவள் என்னவெல்லாம் சொல்கிறாள், தெரியுமா? என்னைத் தொலைத்துத் தலை முழுகுவதற்கு இவள் பாக்கியம் செய்ய வில்லையாம். நான் ஒருத்தி இன்னும் உயிரோடிருப்பது இவளுக்குத் தொந்தரவாயிருக்கிறதாம். எந்நேரம் பார்த்தாலும் இவளைப் பிடுங்கித் தின்றபடி இருக்கிறேனாம். நான் இல்லாவிட்டால் இவள் இஷ்டப்படி எவளோடாவது, எவனோடாவது பேசிக் கொண்டிருக்கலாமோ, இல்லையோ?'' என்றெல்லாம் சொல்லி ஓலமிட்டு அழுதாள்.

அவருக்குத்தான் தம்முடைய தாயார் வாக்கு வேதவாக்காச்சே, உடனே கிளம்பிவிட்டார்!- ''ஓஹோ! அவ்வளவு தூரத்துக்கு வந்து விட்டாளா? ஆமாம், 'பேய்க்கு இடம் கொடுத்தாலும் கொடுக்கலாம்; பெண்ணுக்கு இடம் கொடுக்கக் கூடாது!' என்று பெரியோர்கள் தெரியாமலா சொன்னார்கள்? அந்த எதிர் வீட்டுக்காரி இங்கே வருவதற்கும், அவளுடன் இவள் அரட்டையடிப்பதற்கும் கொஞ்சம் இடம் கொடுத்ததால் வந்த வினை இது! நாளையிலிருந்து ஆகட்டும், அந்த அகிலாவின் அகமுடையானிடம் சொல்லி அவளை இங்கே வரவிடாமல் செய்து விடுகிறேன்!'' என்றார்.

இதைக் கேட்டதும் எனக்கு என்னவோ போலிருந்தது. அது என்ன காரணமோ, என்னைத்தான் அவர் வெளியே போக விடுவதில்லை. இந்த விஷயத்தில் நானும் எங்கள் வீட்டுப் பசுவும் ஒன்று. அதையும் நாங்கள் இருந்தது நகரமானதால் ஒரு நாளும் தனியாக அவிழ்த்து விடுவதில்லை. எப்பொழுதாவது ஒரு நாள் சற்று காலாறுவதற்காக அவர் அதை வெளியே ஓட்டிக் கொண்டு செல்வார். அதே மாதிரிதான் நானும். ஏதாவது கல்யாணம். கார்த்திகைக்கு அவருடன் செல்வேன். அதுவும் அவருடைய அதிகார அழைப்புக்குப் பயந்துதான்!-அன்பு, ஆசை, மண்ணாங்கட்டி, தெருப் புழுதி இதெல்லாம் தான் எங்கள் வாழ்க்கையில் மருந்துக்கும் கிடையாதே!-அப்படிப் போகும்போதுதான் நானும் சற்றுக் காலாற நடந்து செல்வேன். ஆனால் இந்த விஷயத்தில் எனக்கும் எங்கள் வீட்டுப் பசுவுக்கும் ஒரே வித்தியாசம் இருந்தது. திரும்பி வந்ததும் பசுவைக் கட்டிப் போட்டு விடுவார்கள்; என்னைக் கட்டிப் போட மாட்டார்கள்.

இந்த லட்சணத்தில் என் இருளடைந்த உள்ளத்தில் எப்பொழுதாவது ஒரு நாள் விளக்கேற்றி வைக்க வந்தவள் அகிலா ஒருத்திதான். அவளையும் இப்பொழுது தடுத்து விடுவதென்றால்....!

பேய்க்கு இடம் கொடுத்தாலும் கொடுக்கலாம்; பெண்ணுக்கு இடம் கொடுக்கக்கூடாதாம். உண்மையாகவே இருக்கட்டும். ஆனால் நான் மட்டும்தானா பெண்? அவருடைய தாயார்?.......அவள் ஆணாக்கும்!

*　　*　　*

என்னுடைய வாழ்க்கையைப் பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லலாம். ஆனால் அவ்வளவையும் சொல்லி உங்களுடைய அருமையான நேரத்தை வீணாக்குவதில் என்ன பயன்? துன்பம் நிறைந்த என்னுடைய வாழ்க்கையில் நீங்கள் அனுபவிப்பதற்கு என்ன இன்பம் இருக்கப் போகிறது?

கடைசியில் எனக்கும் அகிலாவுக்கும் இடையே தொங்கவிடப்பட்ட படுதாவை என்னால் கிழித்து எறிய முடியவில்லை. விட்டுப்போன அவளுடைய நேசம் என்னை மிகவும் பாதித்தது. நாளடைவில் நான் சூரிய வெப்பத்தைக் காணாத செடிபோல் சுருங்கிப் போனேன்.

இந்த நிலையில்தான் மூன்றாவது தடவையாக என் முழுக்கு நின்றது. ஏற்கெனவே, உள்ளமும் உடலும் சோர்ந்து போயிருந்த எனக்கு இதுவும் வாய்த்தால் கேட்க வேண்டுமா? என்னால் வீட்டுக் காரியங்களைச் செய்ய முடியவில்லை. அசதி அதிகமாயிருந்தது. சாப்பாடும் சரிவர ஏற்றுக் கொள்ளவில்லை. வேலை செய்வதில் தாமதம் ஏற்பட்டது. வசவுகளுக்கோ ஓர் அளவில்லை. வீட்டிலோ அடிக்கும் கையைத் தவிர, அணைக்கும் கை இல்லை.

ஒரு நாள் இரவு பாருங்கள் - வழக்கம்போல் எல்லோரும் சாப்பிட்டான பிறகு நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது மாடு 'அம்மா, அம்மா!' என்று ஓயாமல் கத்திக் கொண்டிருந்தது. வெளியே உட்கார்ந்திருந்த அவர், கொஞ்சம் வைக்கோலை எடுத்துக் கொண்டு போனார். அன்று எனக்குப் பதிலாக அவர் அந்த வேலையைச் செய்து விட்டது, அவருடைய தாயாருக்குப் பொறுக்கவில்லை. ''ஏண்டா, அப்பா! நீதான் காலையில் போய் சாயங்காலம் வரை அங்கே உழைத்துவிட்டு வருகிறாயே, வீட்டில் இருக்கும் அவளுக்கு என்ன கேடு? மாடுதான் அத்தனை நாழியாகக் கத்துகிறதே, கொஞ்சம் வைக்கோலைக் கொண்டுபோய்ப் போட வேண்டாமோ?'' என்று உருகினாள்.

''அவள் சாப்பிடுகிறாள், அம்மா!'' என்றார் அந்தப் புண்ணியவான்.

''எத்தனை நாழியாச் சாப்பிடுவது? சமைப்பதை அப்படியும் இப்படியுமாக ஆளுக்குக் கொஞ்சம் காட்டி விட்டு, கடைசியில் எல்லாவற்றையும் அவளே விழுங்கி வைக்க வேண்டுமென்றால் அத்தனை நாழிதான் ஆகும்!'' என்றாள் அவள்.

எப்படியிருக்கிறது, நியாயம்? நமது நாட்டில் சாதாரணமாக எல்லாப் பெண்களுமே கடைசியில் சாப்பிடுவதுதான் வழக்கம். நானும் அப்படித்தான். எல்லோருக்கும் போக ஏதாவது மிஞ்சினால் உண்டு; இல்லையென்றால் இல்லை. அதிலும், கணவனுக்கு வேண்டியவரை வைத்துப் பெருமையடைவதில் தமிழ்நாட்டுப் பெண்களுக்கே ஒரு தனி ஆனந்தம். இந்த அனுபவத்தை என் மாமியாரும் மருமகளாயிருந்தபோது அறிந்துதான் இருக்கவேண்டும். ஆனாலும் அவள் ஏன் இப்பொழுது இப்படிப் பேசுகிறாள்?-அவர் உழைத்துவிட்டு வருகிறாராம்; நான் உழைக்காமலிருக்கிறேனாமே?

* * *

இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள். என்னால் பொறுக்க முடியவில்லை. மாதம் ஆக, ஆக எனக்கு 'வேலை செய்யமுடியவில்லையே!' என்ற குறை; மாமியாருக்கோ 'வேலை செய்யவில்லையே!' என்ற குறை. இந்தக் குறைகளுக்கு இடையே எனக்கு ஏழாவது மாதம் நடந்து கொண்டிருந்தது. எல்லாப் பெண்களும் முதல் பிரசவத்துக்குத் தான் பிறந்தகம் செல்வது வழக்கம். இந்த விஷயத்தில் மட்டும் என் மாமியாருக்கு வேறு யாருக்கும் இல்லாத விசாலமான மனம். அவள் பிரசவத்துக்குப் பிரசவம் என்னைப் பிறந்தகத்துக்குத்தான் அனுப்பி வைப்பாள்.

அதே கதிதான் எங்கள் வீட்டு மாட்டுக்கும். பிரசவத்துக்குப் பிரசவம் அதையும் கிராமத்துக்கு ஓட்டி விடுவார்கள்-நியாயம்தானே? பால் மறத்துப்போன அந்த மாட்டுக்கு யாராவது தண்டத் தீனி போட்டுக் கொண்டிருப்பார்களா?

அதனுடைய நிலைதான் என்னுடைய நிலையும்-வீட்டுக் காரியங்களையோ என்னால் இப்பொழுது செய்ய முடிவதில்லை. பின் ஏன் எனக்கு வெட்டிச் சோறு?

ஆச்சு; மாடும் இப்பொழுது சினையாய்த்தான் இருக்கிறது; நாளைக்கு அதைக் கிராமத்துக்கு ஓட்டி வைக்கப் போகிறார்கள். பெற்றுப் பிழைத்தால் திரும்பி வரும். வந்தால் மீண்டும் பாலைக் கறந்து குடிப்பார்கள். வராமல் செத்தொழிந்தால் வேறு மாடு வாங்கிக்கொள்வார்கள்.

இதோ, அப்பாவுக்குக் கடிதம் எழுதி அவரும் என்னை அழைத்துக்கொண்டு போக வந்துவிட்டார். நானும் நாளைக்குப் போகிறேன். பெற்றுப் பிழைத்தால் திரும்பி வருவேன். பழையபடி வீட்டுக் காரியங்களையும் கவனித்துக் கொள்வேன். அவரும் என்னைக் கவனித்துக் கொள்ள வேண்டிய விதத்தில் கவனித்துக் கொள்வார். வராமல் செத்தொழிந்தால் என்ன பிரமாதம்? அவர் வேறு கல்யாணம் செய்து கொண்டு விடுவார்.

அவ்வளவுதான்; இப்பொழுது நீங்களே சொல்லுங்கள். நான் வாழ்வது, மனிதத் தொழுவமா? இல்லை, மாட்டுத் தொழுவமா?

# குழந்தையின் குதூகலம்

அன்றிரவு சங்கருக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. அவனுடைய நினைவெல்லாம் அன்று மாலை வாங்கிய 'ஆடும் குதிரை'யின் மீதே இருந்தது. அதன்மீது தான் ஏறிக்கொண்டு ஆனந்தச் சவாரி செல்வது போலவும், அது ஆகாய வீதியெல்லாம் தூள் பறக்கப் பறந்து செல்வது போலவும் அவன் கற்பனை செய்து கொண்டிருந்தான்.

பொழுது விடிந்ததும் ஒரு விநாடிகூட அவனால் தாமதிக்க முடியவில்லை. இட்லியை மறந்தான். சட்னியை மறந்தான். காப்பியைக்கூட மறந்து விட்டான். அந்த ஆடும் மரக்குதிரையை எடுத்துக்கொண்டு ஆட்டம் போடுவதற்காகத் தெருவுக்கு ஓடோடியும் வந்து விட்டான்.

தற்பெருமையடித்துக் கொள்வதில் பெரியவர்களுக்குத்தான் ஆசையென்பதில்லை; குழந்தைகளுக்கும் அது இருக்கத்தான் இருக்கிறது. இல்லையென்றால் அந்த ஆடும் குதிரையை வைத்துக்கொண்டு அவன் தன் வீட்டிலேயே ஆட்டம் போட்டிருக்கலாம். ஆனால் என்ன பிரயோசனம் அதனால்? அந்தக் குதிரை வாங்கிய வைபவத்தைப் பற்றி அவன் தன் நண்பர்களிடமெல்லாம் சொல்ல வேண்டியது எவ்வளவோ இருக்க, அதைத் தன் வீட்டுக் கூடத்திலேயே வைத்துக்கொண்டு ஆடினால் அவ்வளவு சுகப்படுமா? இல்லை, அதற்காக அவன் தன் நண்பர்களுடைய வீடுகளுக்கெல்லாம் சென்று அவர்களை வலுவில் அழைத்துக்கொண்டு வரத்தான் முடியுமா? தெருவுக்கு வந்துவிட்டால் அவர்கள் தாங்களாகவே கதறிக்கொண்டு வருகிறார்கள்.

சங்கர் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. அந்தக் குதிரையின் மீது ஏறி அவன் 'ஹை, ஹை' என்று ஓர் ஆட்டம் போட்டதுதான் தாமதம், அப்பொழுதுதான் படுக்கையை விட்டு எழுந்த எதிர் வீட்டு மணி பறந்தோடி வந்தான்.

''டேய், சங்கர்! ஏதுடா, உனக்கு இந்தக் குதிரை? யார் வாங்கிக் கொடுத்தது?'' என்று அவன் சங்கர் எதிர்பார்த்த படியே ஆவலுடன் கேட்டும் வைத்தான்.

''என் அப்பா வாங்கிக்கொடுத்தார்!'' என்று சங்கர் ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டுப் போயிருக்கலாம். ஆனால்

விஷயத்தை அவ்வளவு சீக்கிரத்தில் முடித்துவிட அவனுக்கு விருப்பமில்லை. கொஞ்சம் ஆதியோடந்தமாகவே ஆரம்பித்தான்.

''நேற்று ஞாயிற்றுக்கிழமையோ இல்லையோ, என் அப்பாவுக்கு ஆபீஸ் கிடையாது. நான், என் அம்மா, அப்பா எல்லோரும் மத்தியானம் சாப்பிட்டானதும் சினிமாவுக்குப் போனோம்.....''

''என்ன, சினிமாவா! அதென்னடா, சினிமா?''

சங்கருக்குச் சிரிப்பு வந்தது ''என்னடா சுத்தப் பட்டிக் காட்டு ஆசாமியாயிருக்கிறாயே? உனக்கு சினிமாவென்றாலே இன்னதென்று தெரியாதா?'' என்று கேட்டான்.

''தெரியாதுடா!'' என்றான் மணி, முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு.

''அட, நிஜமாவா!'' என்று மீண்டும் கேட்டான் சங்கர். அவனால் நம்பமுடியவில்லை.

''நிஜமாத்தாண்டா!'' என்றான் மணி.

''அப்படின்னா சொல்றேன் கேளு; சினிமான்னா, எல்லாம் ஒரே படமாயிருக்கும். ராஜா படம், ராணி படம், திருடன் படம் எல்லாம் வரும். அந்தப் படமெல்லாம் சும்மா அப்படியே இருக்கும்னு நினைக்கிறாயா? இல்லே; ஆடும், பாடும், பேசும், சிரிக்கும்-எல்லாம் செய்யும்!''

''அப்படியா சங்கர்! இன்னொரு சமயம் நீ போறப்போ என்னையும் கூட்டிக்கிட்டுப் போறயா?''

''உம்......சும்மாவா? காசு எடுத்துண்டு வரணும்: இல்லாட்டா உள்ளே விடமாட்டான்.''

''சரி, அது போகட்டும் சங்கர்! இந்தக் குதிரை உனக்கு ஏது?..... அதைச் சொல்லு!''

''ஆமாம், ஆமாம்! அதுக்குள்ளே மறந்துட்டேனே!-நாங்க எல்லோரும் சினிமாவுக்குப் போனோமா, அப்புறம் நேரே ஹோட்டலுக்கு வந்தோம்.....!''

''அது என்னடா, ஹோட்டல்.......?''

சங்கருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. இடிஇடியென்று சிரித்துவிட்டான். மணியை வெட்கம் பிடுங்கித் தின்றது. அந்த இடத்தைவிட்டு உடனே ஓடிவிடலாமா என்றுகூட நினைத்தான். ஆனால் ஹோட்டலைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை, அந்த உணர்ச்சியை மீறி நின்றது.

''ஏண்டா, மணி! நீ நிஜமாச் சொல்லுடா! என்னாலே நம்பவே முடியலையே, உனக்கு ஹோட்டலைக் கூடவா தெரியாது?''

''நான் பொய் சொல்வேனா? எனக்கு நிஜமாவே தெரியாதுடா!''

''ஹோட்டல்னா ஒரே பட்சண மயமாயிருக்கும். பாதாம் ஹல்வா, குலோப்ஜான், குஞ்சாலாடு, ரஸகுல்லா, ஜாங்கிரி, மைசூர்பாக்-இப்படி எத்தனை எத்தனையோ விதமான தித்திப்புப் பட்சணங்கள் எல்லாம் இருக்கும். அப்புறம் போண்டா, வடை, மிக்சர்-இப்படி எத்தனை எத்தனையோ விதமான காரப் பட்சணங்கள் எல்லாம் இருக்கும். கடைசியிலே காப்பி, டீ எல்லாம் வேறே. கீழே வரிசை வரிசையாக மேஜை, நாற்காலி எல்லாம் போட்டிருக்கும்; நாமெல்லாம் போனதும் 'ஜம்' மென்று அவற்றின் மேல் உட்கார்ந்து கொள்ள வேண்டியது. 'என்ன வேணும்?'னு கேட்டுண்டே ஒருத்தன் வருவான். அவன் நமக்கு வேண்டியதைக் கொண்டு வந்து வைப்பான். ஒரு கை பார்த்து விட்டு, வாசலிலே உட்கார்ந்திருக்கும் 'காஷிய'ரிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு வந்துட வேண்டியது!''

மணியின் நாக்கில் ஜலம் ஊறிற்று. அவன் அதைக் கூட்டி விழுங்கிக் கொண்டே, ''ஏண்டா, நீ என்னென்னவோ சொல்றயே! எனக்கு ஒண்ணுமே புரியலையேடா!'' என்றான் தலையைச் சொறிந்து கொண்டே.

''ஆமாண்டா, அதெல்லாம் தலையைச் சொறிந்தாப் புரியாதுடா! பணம் இருக்கணும், பணம்!'' என்றான் சங்கர் சிரித்துக் கொண்டே.

''மணியின் முகத்தில் அசடு வழிந்தது. ஆனாலும் அவன் அந்த இடத்தை விட்டு நகராமல், ''உம்.....அப்புறம்?'' என்று மேலே ஆரம்பிக்கச் சொல்வது போல் சங்கரின் முகத்தைப் பார்த்தான்.

அதற்கேற்றாற்போல், ''அப்பாலே நாங்கள் எல்லோரும் 'பீச்'சுக்குப் போனோம்!'' என்று சங்கரும் நீட்டி முழக்கிக் கொண்டு ஆரம்பித்தான்.

அவனை இடைமறிந்து, ''ஏன்?'' என்று கேட்டு வைத்தான் அப்பாவி மணி.

''போடா மண்டு! 'பீச்'சுக்கு எதற்காகப் போவார்கள்?'' என்று எரிந்து விழுந்தான் சங்கர்.

''எதற்காகப் போவார்கள்?'' என்று மணி அவனையே மீண்டும் திருப்பிக் கேட்டான்!

''காற்று வாங்குவதற்குத்தான்!''

''ஏன், இங்கெல்லாம் கூடத்தானே காற்று அடிக்கிறது?''

''அங்கே அடிக்கும் காற்றின் சுகமே வேறேடா! இதோ பார், மேலே நீலவானம் இருக்கோ, இல்லையோ? அதே மாதிரி அங்கே ஒரு நீலக் கடல் இருக்கு. அதிலேயிருந்து ஜலம் அலைமேல் அலையாக் கிளம்பி, முத்துக்கள் தெறித்தாற் போலக் கரையிலே வந்து மோதும், அது பார்ப்பதற்கு எவ்வளவு அழகாயிருக்கும், தெரியுமா?''

''அதைப் பார்க்கக் கூடக் காசு கொடுக்கவேணுமாடா?''

''இல்லையடா, இல்லை! யாரு வேணுமானாலும் போய்ப் பார்க்கலாம்!''

மணியின் முகம் மலர்ந்தது. ''அப்படியானால் நாளைக்கே தன்னை 'பீச்'சுக்குக் கூட்டிக்கொண்டு போகும் படி அப்பாவை ஏன் கேட்கக் கூடாது?'' என்று எண்ணிக் கொண்டான்.

ஆனால், அதற்கு அடுத்த கணமே அவனுடைய முகம் சுருங்கிவிட்டது. ஏனெனில் அந்தப் 'பாழும் அப்பா' யார் என்று அவனுக்கு இது நாளதுவரை தெரியவே தெரியாது. இத்தனைக்கும் அந்த மனிதன் இன்னும் செத்துப் போகவும் இல்லை!

அம்மாவைக் கேட்டாலோ, அவள் நாளுக்கு ஒரு விதமாகப் பதில் சொல்கிறாள். அவன் என்ன செய்வது?

''சரி, அம்மாவையே ஒரு நாளைக்குக் கூட்டிக் கொண்டு போகச் சொன்னால் போகிறது!'' என்று தனக்குள் எண்ணிக் கொண்டு, மேலே சங்கரின் பேச்சைக் கேட்பதற்குத் தயாரானான்.

''அப்பாலேதான் பஜாருக்கு வந்தோம்; அங்கேதான் இந்தக் குதிரையை வாங்கினோம்!'' என்று தன் கதையை முடிக்கும்போதும் நீட்டி முழக்கிக் கொண்டே முடித்தான் சங்கர்.

''சங்கர், சங்கர்! இந்தக் குதிரை மேலே நானும் கொஞ்ச நேரம் ஏறிச் சவாரி செய்யட்டுமா?'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டே அந்தக் குதிரையை நெருங்கினான் மணி.

தான் சொல்வதற்கோ, அவன் கேட்பதற்கோ அதற்கு மேல் ஒன்றும் இல்லாமற் போகவே, தேர்தலில் வெற்றி பெற்று அதிகாரத்துக்கு வந்து விட்டவர்களைப் போல, ''போடா, போ!'' என்று எரிச்சலுடன் அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டான் சங்கர்.

அதற்குப் பிறகு அவன் தன் 'குதிரைப் புராண'த்தைச் சொல்வதற்கு வேறு பையனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்!

* * *

கதிர்வேலு நாடார் எண்ணெய் மண்டியில் மணியின் தகப்பனாருக்கு வேலை. வரவு செலவுக் கணக்கைப் பார்த்துக் கொள்வதிலிருந்து, வாங்க வருவோருக்கு எண்ணெய் அளந்து ஊற்றும் வரை உள்ள எல்லா வேலைகளையும் அவரேதான் பார்த்துக் கொள்ள வேண்டும். மாதச் சம்பளம் முழுசாக அவருக்குப் பதினைந்து ரூபாய். இவ்வளவு தாராளமாக நாடார் அவருக்குச் சம்பளம் கொடுத்துக் கொண்டிருந்ததற்குக் காரணம், பூமிக்கும் வானத்துக்குமாக விரிந்து கிடந்த அவருடைய பரந்த மனம்தான் என்றாலும் இன்னொரு விசேஷ காரணமும் இருந்தது. ''கடலையெண்ணெயை நல்லெண்ணெயாக்குவது எப்படி?'' - ''ஒரு மணங்கு தேங்காயெண்ணெயில் எவ்வளவு கடலையெண்ணெய் சேர்க்கலாம்?''- ''எடையைக் கூடுதலாக்க என்னத்தைப் போட்டுக் கரைப்பது?'' என்பது போன்ற விஷயங்களில் மணியின் தகப்பனாருக்கு முப்பது வருட கால அனுபவம் உண்டு. அந்த முப்பது வருட கால அனுபவத்தையும் அவர் வேறு எங்கிருந்தும் அடைந்து விடவில்லை; கதிர்வேலு நாடார் கடையிலிருந்தே தான் அடைந்திருந்தார்.

நல்லவேளையாக, நாடார் எந்த விஷயத்திலுமே கண்டிப்பாக நடந்து கொள்பவராதலால், விளக்கெண்ணெய் வியாபாரத்தை மட்டும் வைத்துக் கொள்ளவில்லை.

மேற்கூறியபடியெல்லாம் செய்வது பாவம் என்பதைக் கதிர்வேலு நாடார் அறியாமலிருந்தார் என்று சொல்லி விடவும் முடியாது. ஆனால் ''அந்தப் பாவத்துக்குத் தண்டனை இந்த

ஜன்மத்திலா கிடைக்கப் போகிறது? அடுத்த ஜன்மத்தில் தானே!'' என்ற தைரியம் அவருக்கு.

இந்தத் தைரியம் ஒரு பக்கம் இருந்தாலும், இன்னொரு பக்கம் அவருக்குக் கொஞ்சம் அச்சமும் இருக்கத்தான் இருந்தது. அதற்காக, அவர் சர்க்கார் அதிகாரிகளுக்குக் கொடுக்கும் லஞ்சத்தோடு லஞ்சமாக, சுவாமிகளுக்கும் அவ்வப்போது கும்பாபிஷேகம் செய்து வைப்பது, லட்ச தீபம் ஏற்றி வைப்பது, திருவிழா நடத்துவது-இம்மாதிரி ஏதாவது, செய்து. 'அடியார்க்கு நல்லாராய், அன்புக்கும் ஆண்டவனுக்கும் அடிமையாய், எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றும் அறியாராய், சத்தியமே உருவாய்' பராபரத்தின் அருளால் வாழ்ந்து வந்தார்.

இதனால்தானோ என்னவோ, சர்க்கார் அதிகாரிகளைப் போலவே சுவாமிகளும் அவரைக் கண்டும் காணாமல் இருந்துவிட்டனர். அவருடைய திருத் தொந்தியைப் போலவே வியாபாரமும் நாளொரு மண்டியும் பொழுதொரு ஊருமாகப் பெருகி வந்தது. அதாவது, வெகு சீக்கிரத்திலேயே தமிழ்நாடு பூராவும் கிளைக் கடைகளை ஆரம்பித்து நடத்தினார். சொந்தத்திலேயே எண்ணெய் ஆலை ஒன்றும் வைத்தாகிவிட்டது. வருஷ வருமானம் ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் மதிப்பிடப்பட்டு வந்தது. ஸ்தாவர, ஜங்கம சொத்துக்காக வாங்கி வாங்கிச் சேர்த்துக் கொண்டிருந்தார். இத்தனைக்கும் பணம் 'சரியாயிருக்கிறதா?' என்று எண்ணிப் பார்த்துக் கொள்வதைத் தவிர அவர் வேறு ஒரு பாவமும் செய்து அறியார்!

மணியின் தகப்பனாருக்குத் தம் எஜமானரின் மேல் கொள்ளை ஆசை. ''எசமான், 'மாணிக்கம், மாணிக்கம்!''ன்னு என் மேலே உசிரையே வச்சிருக்காரு!'' என்று தம் மனைவியிடம் அவர் பெருமையுடன் சொல்லிக் கொள்வார். ''சம்பளத்திலே ஒண்ணையும் காணோமே!'' என்பாள் அவள், அலட்சியமாக.

''சீ, போடி பணமா பெரிது. மனிசன் அன்பு இல்லே பெரிசு'' என்பார் மாணிக்கம் பிள்ளை.

ஆமாம், அவருக்கு எப்போதுமே தம் உரிமையைவிடக் கடமை பெரிது. இல்லையென்றால் கேவலம் முப்பது வருடத்திற்குள் ஒண்ணே கால் டஜன் ரூபாய்களைச் சம்பளமாகப் பெறுவதென்பது அவ்வளவு லேசான காரியமா?

நல்ல வேளையாக, மாணிக்கம் பிள்ளையைப் பிடித்த 'பைத்தியம்' கதிர்வேலு நாடாரையும் பிடித்து விடவில்லை. அவருக்குத் தம் கடமையைவிட உரிமைதான் எப்போதும் பெரிது!

தமக்கு உலகம் இன்னதென்று தெரிந்த நாளிலிருந்து-அதாவது, நாடார் கடைசியில் வேலைக்கு அமர்ந்ததிலிருந்து சூரியோதயத்தையோ, அதன் அஸ்தமனத்தையோ திருவாளர் மாணிக்கம் பிள்ளை அவர்கள் தம் வீட்டிலிருந்தபடி பார்க்கும் பாவத்தை ஒரு நாளாவது செய்தவர் அல்ல; எண்ணெய் மண்டியில் இருந்தபடிதான் பார்ப்பார். கடைச் சிப்பந்திகள் சட்டமோ, அவர் இருந்த திக்கைக் கூடத் திரும்பிப் பார்க்கவில்லை.

இந்த 'அதிர்ஷ்டம்' என்று ஒன்று இருக்கிறதே, அது நம் மாணிக்கம் பிள்ளையை அடியோடு கைவிட்டு விட்டதென்றும் சொல்லிவிட முடியாது. ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்த அவருக்கு மணி ஒருவன் மட்டும்தான் உயிருடன் இருந்தான் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! அது மட்டுமா? தவறிப் போன தம் ஐந்து குழந்தைகளின் அடக்கத்தின் போதும் அவர் சூரியோதயத்தையும் அதன் அஸ்தமனத்தையும் தம்முடைய வீட்டிலிருந்தபடியே பார்க்கும் பாக்கியம் வேறு கிடைத்தது.

தன் தகப்பனார் வேலைக்குப் போகும்போதும், வீடு திரும்பும்போதும் மணி தூக்கத்தில் ஆழ்ந்திருப்பான். ஆகவே, அன்று வரை தந்தையும் மகனும் ஒருவரை யொருவர் சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் வாய்க்காமலே இருந்து வந்தது.

''அப்பா எங்கே, அம்மா?'' என்று அடிக்கடி அவன் தன் தாயாரைக் கேட்பதுண்டு. அவள், ''வேலைக்குப் போயிருக்கிறார்!'' என்பாள் ஒரு சமயம்; ''ஊருக்குப் போயிருக்கிறார்!'' என்பாள் இன்னொரு சமயம்; தொந்தரவ' தாங்காமல் சில சமயம், ''அப்பா இறந்து விட்டார்!'' என்று அவள் கொஞ்சங்கூடக் கூசாமல் சொல்லி விடுவதும் உண்டு.

இவற்றையெல்லாம் கேட்டுக் கேட்டு மணிக்கு அலுத்துப் போய் விட்டது. ''அப்பா எப்படியாவது தொலைந்து போகட்டும்; அவரைப் பற்றிய கவலையே நமக்கு வேண்டாம்!'' என்று எண்ணியவனாய், அன்று அவன் தன் தாயாரை நோக்கி, ''அம்மா! என்னை 'பீச்' சுக்காச்சும் ஒரு நாளைக்குக் கூட்டிக்கிட்டுப் போயேன்! என்றான்.

தாயாரின் கண்களில் நீர் சுரந்தது. ''அந்தப் பாழும் 'பீச்'சு எப்படியிருக்கும், என்னமாயிருக்கும் என்றுகூட எனக்குத் தெரியாதேடா, கண்ணு!'' என்றாள் அவள்.

மணிக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய்விட்டது. ''என்ன! உனக்குக் கூடவா தெரியாது!'' என்றான்.

தாயார் மௌனம் சாதித்தாள்.

''பொய் சொல்லாதே, அம்மா! நிஜமாச் சொல்லு!'' என்றான் மணி.

''நிஜமாத்தான் சொல்றேன்; அது எந்தப் பக்கம் இருக்கும் என்றுகூட இன்று வரை எனக்குத் தெரியாதேடா!''

மணிக்கு அழுகை வந்துவிட்டது. ''போ, அம்மா! நீ பொய் சொல்றே!'' என்று அவன் 'உண்மை'யைச் சொல்லி, அழ ஆரம்பித்து விட்டான்.

தாயார் எவ்வளவோ சமாதானம் சொல்லிப் பார்த்தாள், அவன் கேட்கவில்லை. அழுதபடியே சிறிது நேரத்திற்கெல்லாம் அயர்ந்து தூங்கி விட்டான்.

* * *

அன்றிரவு மாணிக்கம் பிள்ளை சாப்பிட்டானதும் தன்னை 'பீச்'சுக்காவது கூட்டிக் கொண்டு போகும்படி குழந்தை அழுத விஷயத்தை அவரிடம் தெரிவித்தாள் அவருடைய மனைவி.

''எல்லா விசயமும் தெரிந்த நீயே இப்படிச் சொன்னா நான் என்ன பண்றது? செலவுக்குக் காசு தேடற விசயம் ஒரு பக்கம் இருக்கட்டும்; முதல்லே நேரம் இருக்கா? அதைச் சொல்லு!'' என்றார் மாணிக்கம் பிள்ளை.

''எதற்குத்தான் உங்களுக்கு நேரம் இருக்கு?'' என்று வெறுப்புடன் சொல்லி விட்டுக் குப்புறப்படுத்துக் கொண்டாள் அவள். ஒரு நீண்ட பெருமூச்சு வரும்வரை அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, மாணிக்கம் பிள்ளை படுத்துக் கொள்வதற்காகத் திண்ணைக்குச் சென்று விட்டார்.

அதற்கு அடுத்த நாள்தான் அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. வழக்கம் போல் விடிந்ததும் விடியாததுமாகத் தன் கணவரை வேலைக்கு அனுப்பி வைத்து விட்டு, வீட்டு வேலைகளில் இறங்கியிருந்தாள் மணியின் தாயார். மணி வாசலில் விளையாடிக் கொண்டிருந்தான்.

''அம்மா! பூச்சாண்டி வந்து என்னைப் பிடிச்சுக் கிட்டானே!'' என்று திடீரென்று அவன் வாசலிலிருந்த படியே அலறியதைக் கேட்டதும். ''ஐயோ! என்னடா, கண்ணு!'' என்று கதறிக் கொண்டே தாயார் வாசலுக்கு ஓடோடியும் வந்தாள்.

முகத்தில் தாடியும் மீசையும் வளர்ந்து, பார்ப்பதற்கு விகாரமாயிருந்த ஒரு தரித்திர உருவம் மணியை ஆசையுடன் கட்டிப்பிடித்துத் தூக்கிக் கொண்டிருந்தது.

மணியைப்போல் அவன் தாயாரும் அந்த உருவத்தைக் கண்டு பயந்துவிடவில்லை; முக மலர்ச்சியுடன், ''அவர் தாண்டா, உன் அப்பா!'' என்றாள்.

''நிஜமாவா, அம்மா! என் அப்பாவா, அம்மா!'' என்றான் குழந்தை ஆச்சரியத்துடன்.

''ஆமாண்டா, ஆமாம்!'' என்றாள் அவள்.

''அப்படின்னா, இனிமே நான் அப்பாவோடே சினிமாவுக்குப் போவேன், ஹோட்டலுக்குப் போவேன், 'பீச்'க்குக் கூடப் போவேன்!'' என்று பொங்கி வந்த சந்தோஷத்தில் அடுக்கிக் கொண்டே போனான் மணி.

மாணிக்கம் பிள்ளை அவனுடைய சந்தோஷத்தில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. ''அந்தப் பாவிதான் எனக்கு வயசாயிடுச்சுன்னு என்னை வேலையிலிருந்து தள்ளிட்டானே!'' என்றார் இரண்டு சொட்டுக் கண்ணீரை உதிர்த்துக் கொண்டே.

''என்ன!'' என்று திடுக்கிட்டுக் கேட்டாள் அவருடைய மனைவி.

''ஆமாண்டி, ஆமாம்!'' என்றார் அவர் அலுப்புடன்.

''இதான் விசயமா, கொஞ்ச நஞ்சம் பணம் கூடக் கொடுக்கலையா?'' என்று கேட்டாள் அவள்.

''அதுகூடக் கேட்டுப் பார்த்தேன்! 'இத்தனை வருசமா உனக்கு நான் வேலை கொடுத்து ஆதரிச்சதற்கு நீதாண்டா எனக்கு ஏதாச்சும் கொடுத்துவிட்டுப் போவணும்' என்கிறானே!'' என்றார் அவர்.

குழந்தை மணிக்கு அப்பாவைப் பார்த்த பிறகு அங்கே நிற்கவே மனமில்லை. 'குதி, குதி' என்று குதித்துக் கொண்டே அவன் வாசலுக்கு ஓடி வந்தான். அவனுக்கு எதிரே அவன் எதிர்பார்த்தபடி சங்கரும் வந்து கொண்டிருந்தான். ''டேய் சங்கர்! என் அப்பா வந்துட்டாருடா! இனிமே நான் உன்னைப் போலவே சினிமாவுக்கு, ஹோட்டலுக்கு, 'பீச்'சுக்கு-எல்லாம் போவேன், தெரியுமா!'' என்று அவன் சங்கரிடம் பெருமையடித்துக் கொண்டான்.

# மனக் குறை

அன்று மாலையும் வழக்கம்போல் அழுது வடியும் முகத்துடன் நாராயணமூர்த்தி வீட்டிற்குள் நுழைந்தான். நாடக மேடை ராஜா மாதிரி அவன் தன் குமாஸ்தா வேஷத்தைக் கலைத்துக் கொண்டிருந்தபோது, ''இந்தாருங்கோ!'' என்று குரல் கொடுத்துக் கொண்டே அவன் மனைவி குமுதம் அங்கே வந்தாள்-கையில் காப்பியுடன் அல்ல; ஏதோ ஒரு கிரஹப் பிரவேசப் பத்திரிகையுடன்.

''வந்துவிட்டாயா, 'இந்......தா....ருங்கோ!'' என்று வஸந்த காலத்துக் குயில் மாதிரி குரல் கொடுத்துக் கொண்டே?-போ!-பெயரைப் பாரு, பெயரை! குமுதமாம்! உன்னைச் சுற்றிச் சுற்றி வண்டுகள் ரீங்காரம் செய்யாததுதான் ஒரு குறை!-உம்.... உன்னைச்சொல்லி என்ன பயன்? ஒன்பது வருடமாக நானும் உன் பரட்டைத் தலையையும் எண்ணெய் வடியும் முகரக் கட்டையையும் பார்த்துக் கொண்டு வந்தும் இன்று வரை சந்நியாசம் வாங்கிக் கொள்ளாமலிருக்கிறேனே, அதைச் சொல்லு!'' என்று தலையில் லேசாகத் தட்டிக் கொண்டே சாய்வு நாற்காலியில் சாய்ந்தான் நாராயணமூர்த்தி.

''பொழுது விடிந்ததும் வீட்டு வேலைகளை எல்லாம் செய்வதற்கு நீங்கள் வேலைக்காரர்களை வைத்திருக்கிறீர்களோ, இல்லையோ-நாளெல்லாம் நாவல் படித்துக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கும் நான் சாயந்திரமானால் சிங்காரித்துக் கொண்டு குயில் மாதிரி கொஞ்சிக்கொண்டும் மயில் மாதிரி நடை போட்டுக் கொண்டும் உங்கள் முன்னால் வந்து நிற்க வேண்டியதுதான்! - அப்படித்தான் நீங்கள் விதம்விதமான துணி மணிகள் வாங்கிக் கொடுத்து கெட்டுப் போச்சு? மாற்றிக் கட்டிக்கொள்ள மறு புடவைக்கு வழி கிடையாதே!'' என்று குமுதமும் பதிலுக்கு எரிந்து விழுந்து கொண்டே, கையிலிருந்த பத்திரிகையை அவன்மேல் வீசி எறிந்துவிட்டு, அடுப்பங் கரையை நோக்கி நடந்தாள்.

அங்கே, அவளுடைய எட்டு வயதுப் பெண்ணான பட்டு இராத்திரிச் சாப்பாட்டிற்காகப் பொரித்து வைத்திருந்த அப்பளங்களில் ஒன்றை எடுத்துச் சுவை பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தச் சாக்கில் அவளுடைய முதுகில் இரண்டு அறை வைத்துத் தன்னுடைய கோபத்தைத் தீர்த்துக் கொண்டாள் குமுதம்.

அதே சமயத்தில், வெளியே விளையாடிக் கொண்டிருந்த பட்டுவின் தம்பியான கிட்டு உள்ளே நுழைந்தான். அவன் சட்டையெல்லாம் ஒரே புழுதி மயமாக இருந்தது. அதைச் சாக்காக வைத்துக்கொண்டு அவனுடைய காதைத் திருகியதன் மூலம் தன்னுடைய ஆத்திரத்தைத் தீர்த்துக் கொண்டான் நாராயணமூர்த்தி.

பட்டுவும் கிட்டுவும் அழுதுகொண்டே வெளியே வந்து வீட்டு வாசற்படியில் உட்கார்ந்தனர்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, ''அக்கா, அம்மா உன்னை ஏன் அடிச்சா?'' என்று கேட்டான் கிட்டு.

''ஒரு அப்பளத்தை எடுத்துத் தின்று விட்டேனாம், அதற்காக!'' என்றாள் பட்டு.

''ஓஹோ..!''

''ஆமாம்; உன்னை ஏன் அப்பா அடிச்சார்?'' என்றாள் பட்டு.

''சட்டையை அழுக்காக்கிக் கொண்டு வந்து விட்டேனாம், அதற்காக!'' என்றான் கிட்டு.

பாவம், அந்தக் குழந்தைகளுக்குத் தெரிந்த உண்மை அவ்வளவுதான்!-ஆனால், அவர்கள் அறியாத-ஏன், அவர்களைப் பெற்றோரே அறியாத உண்மையொன்றும் இருக்கத் தான் இருந்தது.

அதுதான் இந்தப் பாரத புண்ணிய பூமி முழுவதும் 'பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும்' தரித்திரம்.

அதன் பயனாகத் தங்களுக்குள் ஒரு குற்றமும் இல்லாவிட்டாலும், இன்று எத்தனையோ தம்பதிகள் தங்கள் வாழ்க்கையில் இயற்கையாக நிலவக்கூடிய அமைதியைக் கூடக் குலைத்துக் கொள்ளவில்லையா?-அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் நாராயணமூர்த்தியும் குமுதமும்.

* * *

ஆத்திரமெல்லாம் ஒருவாறு அடங்கியபிறகு, தன் மேல் பரிதாபமாக விழுந்து கிடந்த பத்திரிகையை எடுத்துப் பார்த்தான் நாராயணமூர்த்தி. அது, அவனுடைய நண்பனான ஹரிகிருஷ்ணனிடமிருந்து வந்திருந்தது.

அவ்வளவுதான்; அவனுக்கு மீண்டும் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

நேற்றுவரை அவனும் தன்னைப்போல் வாடகை குடித்தனம் செய்துகொண்டு வந்தவன்தான், இன்று.....?

'ஜாம், ஜாம்' என்று தன்னுடைய சொந்த வீட்டில்- சகல சௌகரியங்களும் பொருந்திய புத்தம் புது வீட்டில்-அவன் குடித்தனம் செய்யப் போகிறான்!

பார்க்கப் போனால் இதற்காக அவன் செய்ததுதான் என்ன?-ஒன்றுமில்லை. தனக்கு வீடு தேவையாயிருப்பதால் உடனே காலி செய்து கொடுக்க வேண்டுமென்று வீட்டுக்காரன் அவனுக்கு மூன்று மாத 'நோட்டீஸ்' கொடுத்தானாம். இந்த விஷயத்தை அவனுடைய வேட்டகத்தார் கேள்விப்பட்டார்கள். அதன் பலன்?

மூன்று மாதத்திற்கெல்லாம் தன்னுடைய சொந்தச் செலவிலேயே ஒரு அழகான வீட்டைக் கட்டி முடித்து, அதை அவன் பேரிலேயே எழுதி வைத்து விட்டார் மாமனார்! -கொடுத்து வைத்தாலும் இப்படியல்லவா கொடுத்து வைத்திருக்க வேண்டும்?

உம்.....உலகத்தில் எத்தனையோ பேருக்கு இப்படியெல்லாம் நடக்கிறது. தனக்கோ.....?

தன்னைவிட 'தரித்திரம்'தான் ஒன்று வந்து வாய்த்திருக்கிறது!

மாற்றிக் கட்டிக் கொள்ள மறு புடவைக்கு வழி கிடையாதாம் - அவளும் வெட்கமில்லாமல் சொல்லிக் கொள்கிறாளே!

''எனக்கும் கல்யாணமாகி ஏழு வருஷமாகிறது. இதுவரை நான் என் மனைவிக்குப் புடவையோ, ஜாக்கெட்டோ-ஒன்றும் எடுத்துக் கொடுத்தது கிடையாது. இன்று வரை அவள் கட்டுவதெல்லாம் அவளுடைய அப்பா எடுத்துக் கொடுத்ததுதான்!'' என்று சொல்லி, அன்று ஹரி தன்னிடம் என்னமாய்ப் பெருமை யடித்துக் கொண்டான்!

இங்கே என்னடா என்றால் எல்லாவற்றுக்கும் தன்னுடைய கழுத்தை அறுப்பதற்காக வந்து தொலைந்திருக்கிறதே!-எல்லாம் என் தலையெழுத்து!

உம்.......தலையெழுத்தாவது! மண்ணாங் கட்டியாவது!-அவன் முன் யோசனையோடு 'நல்ல இட'மாகப் பார்த்துக் கல்யாணம் செய்து கொண்டான்; அதிர்ஷ்டமும் தானே கதறிக் கொண்டு அவனை வந்து சேர்ந்தது.

நானோ....?

காதலென்றும், கத்தரிக்கா யென்றும் சொல்லிக் கொண்டு சுவைக்குதவாத ஒருத்தியின் கழுத்தில் மாலையிட்டேன். அதன் பலன்?-இன்று நானும் அழுது வடிகிறேன்; அவளும் அழுது வடிகிறாள்!

அவனுடைய அர்த்தமில்லாத சிந்தனை அத்துடன் முடியவில்லை; இன்னும் மேலே மேலே சென்று கொண்டிருந்தது.

* * *

தன் கணவனின் மனக் குறையைக் குமுதமும் ஒருவாறு அறிந்துதான் இருந்தாள். ஆனாலும் அவள் அதற்காக என்ன செய்ய முடியும்?

பிறந்தகத்தின் நிலையை உத்தேசித்து, பின்னால் புக்ககத்தாரிடம் கேட்கப்போகும் வசவுகளையும் முன்னாலேயே ஒருவாறு உணர்ந்து, அவள் முதலில் தனக்குக் கல்யாணமே வேண்டாம் என்றுதான் தன் பெற்றோரிடம் முறையிட்டுக் கொண்டிருந்தாள். அவர்களும் தங்கள் நிலையை உணர்ந்து, கல்யாண விஷயத்தில் அவளை அவ்வளவாக வற்புறுத்தாமல் தான் விட்டிருந்தார்கள். ஆனால், இரண்டு குடும்பங்களும் நெருங்கிப் பழக நேர்ந்ததின் காரணமாக, நாராயண மூர்த்திக்கும் குமுதத்திற்கும் இடையே நேசம் வளர்ந்தது. காவியங்களில் காணும் காதல் எல்லாம் வெறும் கற்பனை என்பதை அந்த ஜீவன்கள் உணரவில்லை. வாழ்க்கையில் அவன் கல்யாணம் ஆகுமுன், 'கண்ணே, மணியே, கற்கண்டே!' என்றதெல்லாம் ஒரு குழந்தை பிறக்கும் வரைதான் இருக்கும் என்பதை அப்பாவி குமுதம் அப்போது அறிந்திருக்கவில்லை.

குமுதத்தின் பெற்றோரும், நல்ல வேளையாக நாராயண மூர்த்திக்குத் தாயார், தகப்பனார் இல்லாததைக் கண்டு ஒருவாறு திருப்தி அடைந்தனர். ஏனெனில், "பின்னால் ஏதாவது ஏசிக் காட்டுவதா யிருந்தாலும் அவர்கள் இருந்தால்தானே!" என்று அவர்கள் நினைத்தனர். அதற்கேற்றாற் போல் நாத்தனார் என்று சொல்லிக் கொள்வதற்கும் யாரும் இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, நாராயணமூர்த்தியின் சித்தப்பாவும், சித்தியும் கல்யாணமானதும் அவர்களைத் தனிக்குடித்தனம் வைத்து விடுவதாக வாக்குறுதி கொடுத்தனர். ஆகவே, இவ்வளவு சௌகரியமான இடம் போனால் வராது என்று எண்ணியவர்களாய் குமுதத்தின் பெற்றோர், கடனோடு கடனாகக் கல்யாணத்தைத் தங்கள் சக்திக்கு ஏற்றவாறு சீக்கிரத்திலேயே செய்து முடித்து விட்டனர்.

பாவம், ஸ்ரீமந் நாராயணமூர்த்தியைப் போலவே இந்த நாராயணமூர்த்தியும், நாத்தனாராகவும் மாமியாராகவும் மாமனாராகவும் பின்னால் அவதாரம் எடுப்பான் என்பதை அவர்கள் கண்டார்களா? இல்லை, குமுதம்தான் கண்டாளா?

அன்று இருபத்தைந்து ரூபாய் கடன் கேட்டு வாங்கி வரலாமென்று ஹரிகிருஷ்ணன் வீட்டிற்குப் போயிருந்தான் நாராயணமூர்த்தி, என்று மில்லாதபடி அன்று வீட்டிற்குள் நுழையும்போதே ரேடியோவின் அலறல் அவன் காதில் விழுந்தது. அவனும் இதற்கு முன்னால் எத்தனையோ முறை ஹரிகிருஷ்ணன் வீட்டிற்கு வந்திருக்கிறான்; ரேடியோவின் அலறலைக் கேட்டது கிடையாது!-இன்று......?

அவனுக்கு ஏது ரேடியோ?

''அடேயப்பா! தன்னைப் போல் மாதம் எழுபத்தைந்து ரூபாய் சம்பளம் வாங்கும் இவன் என்னவெல்லாம் செய்கிறான்!'' என்று எண்ணிக் கொண்டே உள்ளே நுழைந்த அவனை, ''என்ன, ஸ்ரீமந் நாராயணமூர்த்தி! ஒரு முறையாவது 'மகாலக்ஷ்மி'யுடன் நம் வீட்டிற்கு விஜயம் செய்யக் கூடாதோ? என்று கேட்டுக்கொண்டே வரவேற்றான் ஹரிகிருஷ்ணன்.

''மகாலக்ஷ்மி யில்லை; அவளுடைய அக்கா!'' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டே சுற்றுமுற்றும் பார்த்தான் நாராயணமூர்த்தி.

அங்கங்கே காணப்பட்ட வெள்ளிப் பாத்திரங்களும், விதம் விதமான மேஜை, நாற்காலி, 'ஸோபா'க்களும் அவனுடைய ஆத்திரத்தை மேலும் தூண்டிவிட்டன. அவற்றைப் பார்க்க அவனுக்குத் தன் வேட்டகத்தாரின் மீது கோபம் கோபமாய் வந்தது.

அடுத்த நிமிடம் 'கம்' மென்ற மல்லிகை மணம் அவன் கவனத்தைக் கவர்ந்தது. அத்துடன் புத்தம் புதுப் பட்டாடை கட்டி நடப்பதனால் உண்டாகும் 'சலக், சலக்' என்ற சத்தமும் அவன் காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தான்; சாட்டை போன்ற சடையை முகத்தின் முன்னால் எடுத்துப் போட்டுக் கொண்டு, முல்லையின் முறுவலுடன் லாவகமாக நடந்து வந்தாள் ஸ்ரீமதி ஹரி.

''இவளும் பெண்தானே, பார்ப்பதற்கு எவ்வளவு லட்சணமா யிருக்கிறாள்!'' என்று தனக்குள் எண்ணி ஏங்கினான் நாராயணமூர்த்தி.

அதற்குள் காப்பி வந்து சேர்ந்தது. அதை எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டே, ''என்ன, ஹரி! இந்த ரேடியோவை எப்போது வாங்கினாய்?'' என்று தன் ஆவலை அடக்க முடியாமல் கேட்டு விட்டான் நாராயணமூர்த்தி.

''உம்...நானாவது, வாங்கவாவது! சென்ற வாரம் இவளுடைய அப்பா இங்கே வந்திருந்தார். 'சாயந்திரமானால் பொழுது போவது சிரமமா யிருக்கிறது' என்று அவரிடம் ஒரு வார்த்தை சொன்னேன். அதற்காக இந்த ரேடியோவை வாங்கி வைத்திருக்கிறார்!'' என்றான் ஹரி பெருமையுடன்.

இதைக் கேட்டதும் எரிகிற தீயில் எண்ணெய் விட்டது போலிருந்தது நாராயணமூர்த்திக்கு. ஆனாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், வந்த காரியத்தை முடித்துக் கொண்டு தன் வீட்டுக்குப் புறப்பட்டு விட்டான்.

* * *

இந்தச் சம்பவம் நடந்த இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு, ஒரு நாள் காலையில் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தான் நாராயணமூர்த்தி. ''நகருங்க, நகருங்க!'' என்ற கண்டக்டர்களின் ஓயாத ஓலத்தைக் கேட்டுக் கேட்டு அலுத்துப்போன சமயத்தில், 'திடுதிப்' பென்று மோட்டார் சைக்கிளில் வந்து அவனுக்கு முன்னால் நின்ற ஹரிகிருஷ்ணன், ''என்ன, நாராயணமூர்த்தி! பஸ்ஸுக்காகவா காத்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று அனுதாபத்துடன் கேட்டான்.

''ஆமாம்'' என்று சொல்லக்கூட வாயடைத்துப்போய், அவனையும் அவன் ஏறி வந்த புத்தம்புது மோட்டார் சைக்கிளையும் ஏற இறங்கப் பார்த்தான் நாராயணமூர்த்தி.

''என்ன, பார்க்கிறாய்? உன்னைப் போல்தான் நானும் தினசரி இந்தப் பாழாய்ப்போன பஸ்ஸுக்காகக் காத்துக் காத்துப் பார்த்துப் போதும் போதும் என்று ஆகிவிட்டது. கடைசியில் என் மாமனார்தான் இந்த மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொடுத்து, என்னுடைய கஷ்டத்தைத் தீர்த்து வைத்தார்!'' என்றான் ஹரி.

''என்ன இருந்தாலும் நீ கொடுத்து வைத்தவன்தான்!'' என்றான் நாராயணமூர்த்தி தன்னையும் மீறி வந்த வயிற்றெரிச்சலுடன்.

அதைக் கவனிக்காத அப்பாவி ஹரி, 'எங்கே போகப் போகிறாய்? ஆபீஸுக்குத்தானே? பின்னால் ஏறிக் கொள்ளேன், கொண்டுபோய் விட்டு விடுகிறேன்!'' என்றான்.

நாராயணமூர்த்தியும் இயற்கையாகவே அழுதுவடியும் முகத்தை இன்னும் அதிகமாக அழுது வடிய வைத்துக் கொண்டு, பின்னால் ஏறிக்கொண்டான். மோட்டார் சைக்கிளும் காற்றாய் பறந்தது.

வழியெல்லாம் ஹரிகிருஷ்ணன் 'வளவள' என்று நாராயணமூர்த்தியிடம் என்னவெல்லாமோ பேசிக்கொண்டு வந்தான். அவையெல்லாம் அவனுடைய காதில் விழவேயில்லை. அவன் மனமெல்லாம் குமுதத்தையும் அவளுடைய அப்பாவையும் சபிப்பதிலேயே ஈடுபட்டிருந்தது. ஆபீஸில் தன்னைக் கொண்டு வந்து சேர்த்த ஹரிகிருஷ்ணனுக்கு 'தாங்ஸ்' என்று ஒரு வார்த்தை சொல்லக்கூட அவனுடைய ஆத்திரம் இடம் கொடுக்கவில்லை. வாடிய முகத்துடனும், வேதனை நிறைந்த உள்ளத்துடனும் அன்று எப்படியோ வேலையைக் கவனித்துவிட்டு, வீடு வந்து சேர்ந்தான்.

''இன்றைக்கு விறகு வாங்க வேண்டுமே, காசு கொடுக்காமல் போய் விட்டீர்களே!'' என்றாள் குமுதம்.

அவ்வளவுதான்; ''விறகுதானே வேண்டும்!'' என்று சொல்லி, ஏற்கெனவே ஒரு கால் ஒடிந்து கிடந்த ஈஸிசேரைத் தூக்கி அவளுக்கு முன்னால் விட்டெறிந்தான் நாராயணமூர்த்தி.

அது அக்கு வேறு, ஆணி வேறாக உடைந்து விழுந்தது. அத்துடன் குமுதத்தின் உள்ளமும் சுக்குநூறாக உடைந்தது.

''என்னை ஏன் இப்படியெல்லாம் வதைக்கிறீர்கள்? உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் சொல்லி விடுங்களேன், நாளைக்கே நான் இந்த வீட்டை விட்டுப் போய் விடுகிறேன்!'' என்றாள் அழுகையும் ஆத்திரமும் கலந்த குரலில்.

''அட, சனியனே! நீ மட்டுமா போகப் போகிறாய்? உன்னுடன் கொண்டுவந்த வெள்ளிப் பாத்திரங்கள், மரச்சாமான்கள், ரேடியோ, மோட்டார் சைக்கிள், வீடுவாசல் கையோடு எடுத்துக் கொண்டு போ!'' என்று ஸ்ரீமதி ஹரியை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு அவளைப் பரிகாசம் செய்தான் நாராயணமூர்த்தி.

''பிறத்தியார் சொத்துக்கு ஏன் இப்படி வாயைப் பிளக்கிறீர்களோ, தெரியவில்லையே! உங்களுடைய கையால் ஒன்றுமே ஆகாதா? என்னைப் போல் பிறந்தகத்திலிருந்து ஒன்றுமேயில்லாமல் வந்த எத்தனையோ பெண்கள் இன்று புக்ககத்தில் என்னைவிட மேலாக வாழவில்லையா? கைப்பிடித்த கணவனின்

மூலமாகவே எல்லா விதமான சுக போகங்களையும் அடையவில்லையா? ஹரிகிருஷ்ணனுக்கு அவருடைய வேட்டகத்தாரிடமிருந்து எல்லாம் கிடைக்கிற தென்று நீங்கள் ஆத்திரப் படுகிறீர்களே, அடுத்த வீட்டு அமிர்தத்துக்கு அவள் அகமுடையான் வீட்டிலிருந்தே எல்லாம் கிடைத்து வருகிறதே, அதற்காக நானும் வேண்டுமானால் உங்களைப்போல் ஆத்திரப்படக் கூடாதா? 'எனக்கு அது வேண்டும், இது வேண்டும்' என்று எந்த நேரமும் உங்களை நச்சரிக்கக் கூடாதா? வேட்டகத்தாரிடமிருந்து ஒன்றும் கிடைக்கவில்லையே என்று உங்களுக்கு இருக்கும் மனக் குறைபோல, புக்ககத்தாரிடமிருந்து ஒன்றும் கிடைக்க வில்லையே என்ற மனக் குறை எனக்கும் இருக்காதா?'' என்று அத்தனை நாளும் தன் அகத்தில் அடக்கி வைத்துக் கொண்டிருந்த ஆத்திரத்தையெல்லாம் அள்ளி அள்ளிக் கொட்டிக் கொண்டே போனாள் குமுதம்.

அவள் வாயைப் பார்த்தபடியே தன் வாயைப் பிளந்து கொண்டு நின்றான் நாராயணமூர்த்தி.

அத்தனை நாளும் அவனுடைய உள்ளத்தில் உதயமாகாத ஒரு உண்மை ஒன்று உதயமாயிற்று.

''மனக் குறை என்பது ஆணுக்கு மட்டும் அல்ல; பெண்ணுக்கும் உண்டு!'' என்பதை அவன் அன்றே உணர்ந்தான்.

அவ்வளவுதான்; அவனுடைய மனம் மாறி விட்டது. ''குமுதம்! நீ கொடுத்து வைக்காதவள்!'' என்றான் நாத் தழுதழுக்க.

''நீங்களும்தான்!'' என்றாள் குமுதம், கண்ணீரைத் துடைத்துக் கொண்டே.

# தேற்றுவார் யார்?

பணத்தை வீணாக்காதீர்கள்; ''நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்'டுகளை வாங்கி, பத்து ரூபாய்க்குப் பதினைந்து ரூபாயாகப் பத்து வருடங்களுக்குப் பிறகு பெற்றுக் கொள்ளுங்கள்!'' என்னும் சர்க்கார் விளம்பரத்தைப் படிக்கும் போதெல்லாம் எங்கள் ஊர் உத்தமநாத நாயுடுகாருக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வரும். ''ஆஹா! ஏமி தயாளச் சிந்த! எந்த பரோபகாரமும்!'' என்று அவர் தமக்குள் எண்ணிக் கொள்வார்.

பத்து ரூபாய்க்குப் பத்து வருடங்களில் அறுநூறு ரூபாய் வட்டி வாங்கும் அவருக்கு, சர்க்கார் கொடுக்கும் ஐந்து ரூபாய் வட்டியை நினைத்தால் சிரிக்காமலிருக்க முடியுமா?

உலகத்துக்கெல்லாம் ஒரு காலண்டர் என்றால், எங்கள் ஊர் உத்தமநாத நாயுடுகாருக்கு மட்டும் தனிக் காலண்டர்! அவருடைய காலண்டரில் வருஷம் பன்னிரண்டு மாதமும் முப்பத்திரண்டு நாட்கள்தான்; கூடுதலோ குறைச்சலோ ஒன்றும் கிடையவே கிடையாது!

பொழுது விடிந்தால் இந்த அங்காடிக் கூடைக்காரர்கள் இருக்கிறார்களே, அவர்கள் வந்து நாயுடுகாருவின் வீட்டை வெல்லத்தில் ஈ மொய்ப்பதுபோல் மொய்த்துக் கொள்ளுவார்கள். அன்றைக்குத் தாங்கள் செய்யப் போகும் வியாபாரத்துக்கு முதலாக அவரிடமிருந்து ஆளுக்கு ஐந்து, பத்து என்று வாங்கிக் கொண்டு போவார்கள். சாயந்திரமானால் ஐந்து ரூபாய் வாங்கிக் கொண்டு போனவர்கள். ரூபாய்க்குக் காலணா வீதம் ஒன்றே காலணா வட்டியும் அசலில் இரண்டரை அணாவுமாகச் சேர்த்தும் பத்து ரூபாய் வாங்கியவர்கள் வட்டி இரண்டரை அணாவும் அசலில் ஐந்தணாவுமாகச் சேர்த்தும் கொண்டு வந்து கொடுத்துவிட வேண்டும். முப்பத்திரண்டு நாட்கள் இவ்வாறு கொடுத்து வாங்கும் கடனை அடைத்த பிறகு மீண்டும் வந்து வழக்கம்போல் தங்களுக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டு போகலாம். தினசரி தங்கள் வியாபாரத்தில் அவர்களுக்கு லாபம் வந்தாலும் சரி, வராமல் போனாலும் சரி-மேற் கூறிய சட்ட திட்டங்களை ஒருவரும்-ஒரு நாளும் மீறவே கூடாது. தவறினால் தலை போனாலும் பரவாயில்லையே-'கவலை விட்டது!' என்று அந்த அங்காடிக்

கூடைக்காரர்கள் நினைத்துக் கொள்வதற்குக்கூட வழியில்லாமல் தரித்திரம் அவர்களைத் தொலைத்து விடும்- பிழைப்பே போய்விட்டால்....? பிச்சை எடுப்பதைத் தவிர வேறு வழி?

* * *

அன்று அம்மாயி வழக்கத்துக்கு விரோதமாகக் கொஞ்சம் நேரம் கழித்து வந்தாள். எப்பொழுது போனாலும் 'தர்மராஜா' இல்லை என்று சொல்லமாட்டார் என்ற நம்பிக்கை அவளுக்கு!-ஆமாம், நாயுடுகாருவிடம் கடன் வாங்கும் அங்காடிக் கூடைக்காரர்கள் அத்தனை பேரும் அவரை 'தர்மராஜா' என்றுதான் மனமார வாயார வாழ்த்தி வந்தனர்.

'தர்மராஜா' என்பதற்காக எவ்வளவு நேரம் கழித்து வந்தாலும் நாயுடுகாரு சும்மா இருக்க முடியுமா, என்ன? சரக்கு மோசமாயிருந்தாலும் செட்டியார் மிடுக்காக இருக்க வேண்டாமா? ஆகவே ''ஏன் இவ்வளவு நேரம்? நீ வரவில்லை என்பதற்காக நான் காத்துக் கொண்டிருக்க வேண்டுமோ?'' என்று அம்மாயியைக் கொஞ்சம் அதட்டிக் கேட்டார்.

''பக்கத்து வீட்டுக்காரம்மா எங்கேயோ போயிருந்தாங்க, சாமி! அவங்க வந்ததும் என் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டுவிட்டு வரலாம்னு காத்துக்கிட்டு இருந்தேன். அதனாலே கொஞ்சம் நேரமாயிடுச்சிங்க!'' என்றாள் அம்மாயி கையைப் பிசைந்து கொண்டே.

''உன் குழந்தைகளை யாராவது பார்த்துக் கொள்ளா விட்டால் அவர்களைப் பருந்து வந்து தூக்கிக் கொண்டு போய் விடுமாக்கும்! இவ்வளவு நேரம் கழித்து வந்திருக்கிறாயே, இனிமேல் என்னத்தை வாங்கி விற்று எப்பொழுது 'தண்டல்' கொண்டு வந்து கட்டுவது?-உங்கள் பேரில் குற்றம் சொல்லிப் பிரயோசனம் இல்லை; என்னைச் சொல்ல வேண்டும். நல்லதுக்குக் காலமா, இது? போனால் போகிற தென்று புண்ணியத்துக்கு என் வீட்டுப் பணத்தைக் கொடுத்தால், அதை நேரத்தோடு வந்து வாங்கிக் கொண்டு போகக் கூடாதோ?''

'அட, நீங்கள் பணம் கொடுப்பதில் புண்ணியம் வேறு இருக்கிறதா!' என்று அம்மாயி கொஞ்சமாவது ஆச்சரியப்பட வேண்டுமே? இல்லவே இல்லை. அதற்குப் பதிலாக, ''நான் எம்மா நேரம் கழிச்சு வந்தா உங்களுக்கு என்னா சாமி? எப்படியாச்சும் சாயந்திரம் உங்களுக்குத் 'தண்டல்' வந்து சேர்ந்துவிடும்!'' என்றாள் அவள்.

''என்ன, ஒரு சொல்லு சொன்னா ஒரேயடியா இப்படிக் கோவிச்சுக்கிறயே? யாருக்காக நீ சாயந்திரத்துக்குள்ளே 'தண்டல்' கட்டப் போறே? உன் அப்பனுக்கு அழுது கொண்டு கட்ட வேணாம்?''

அம்மாயிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ''என்னை இன்னொரு தரம் இப்படியெல்லாம் சொல்லாதீங்க, சாமி! உங்கக்கிட்ட நான் ஒரு அஞ்சு ரூவா கடன் வாங்கறதுக்காவ நீங்க வேறே எனக்கு அப்பாவா இருக்க வேண்டியதில்லை!'' என்றாள் அழுகையும் ஆத்திரமும் கலந்த குரலில்.

நாயுடுகாருக்குச் 'சுருக்'கென்றது. ஆனாலும் அதை அவர் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. இந்தச் சின்ன விஷயத்துக்காக அவர் ஒரு வாடிக்கைக்காரியை இழந்துவிட முடியுமா? ஆகவே மேலுக்குச் சிரித்துக் கொண்டே, ''அதற்குச் சொல்லவில்லை, அம்மாயி! சும்மா நீ எப்படி இருக்கிறேன்னு பார்த்தேன்! அடேயப்பா! நீ இவ்வளவு ரோசக்காரி என்று எனக்கு இப்போதுதான் தெரிந்தது!'' என்று சொல்லிக் கொண்டே ஐந்து ரூபாயை எடுத்து அவளிடம் கொடுத்தார்.

அதை அடக்க ஒடுக்கத்துடன் வாங்கி முந்தானையில் முடிந்து கொண்டு, ''நான் போய்ட்டு வரேன், சாமி!'' என்று அம்மாயி தலைகுனிந்த வண்ணம் போய்விட்டாள்.

* * *

**அ**ன்று கிடங்குத் தெருவிலிருந்த எல்லாக் கடைகளிலும் ஒரே மாம்பழக் குவியலா யிருந்தது. என்னதான் பழங்கள் வந்து குவிந்திருந்தாலும் விலை என்னமோ ஏகக் கிராக்கிதான். நல்ல பழங்கள் நூறு பத்து ரூபாய்க்குக் குறையவில்லை. கொஞ்சம் வெம்பியும் அழுகியும் இருந்த பழங்கள் நூறு ஐந்து ரூபாய்க்குக் கிடைத்தன.

''என்னத்தை வாங்கி விற்றால் எவ்வளவு லாபம் கிடைக்கும்?'' என்ற சிந்தனையில் அம்மாயி நெடு நேரமாக ஈடுபட்டிருந்தாள். கடைசியாக, நூறு ஐந்து ரூபாய்க்கு விற்கும் அந்த அழுகல் மாம்பழங்களின் மேல்தான் அவள் கவனம் சென்றது. கைவசம் அப்போது இருந்ததும் ஐந்து ரூபாய்தானே? ஆகவே அதற்குமேல் அவளுடைய யோசனை ஓடவில்லை.

அந்தப் பழத்தை வாங்கி ஒன்று ஓரணா என்று விற்றாலும் ஒன்றேகால் ரூபாய் லாபம் கிடைக்கும். ''அங்கே நிற்காதே; இங்கே

உட்காராதே!'' என்று அடிக்கடி வந்து மிரட்டும் போலீஸ்காரர்களுக்கு நாலணா 'தண்டக் காசு' அழுதாலும்கூட ஒரு ரூபாய் கட்டாயம் மிஞ்சும். ஊராரில் சிலர் தங்கள் குழந்தைகளுக்குப் பலூன் வாங்கிக் கொடுத்தாலும் கொடுத்துவிடுகிறார்கள், அதைப் பார்த்துவிட்டு நம் குழந்தைகளும் தங்களுக்குப் பலூன் வாங்கித் தர வேண்டும் என்று இரண்டு மூன்று நாட்களாய் ஒற்றைக் காலால் நின்று தொலைக்கின்றன. நம்முடைய நிலைமை அந்தக் குழந்தைகளுக்குத் தெரிகிறதா, என்ன? நாமும் எத்தனை நாளைக்குத் தான் அவற்றை ஏமாற்றிக்கொண்டு வருவது? இன்றைக்கு எப்படியாவது இரண்டணா கொடுத்து இரண்டு பலூன்களை வாங்கிக் கொண்டுபோய்க் குழந்தைகளிடம் கொடுத்துவிட வேண்டும். அப்புறம் பதினாலணா மீதி இருக்கும். அந்த 'தர்மராஜா' நாயுடுவுக்கு அசலில் இரண்டறையணாவும் வட்டி ஒன்றேகாலணாவும் கொடுத்துவிட்டால் பத்தே காலணாதான் கடைசியில் மிச்சமாகும். அதிலும் வெற்றிலை பாக்கு, புகையிலைக்கு ஓரணா போனால் பாக்கி ஒன்பதே காலணாதான்!-இவ்வளவு போதாதா, ராத்திரி சாப்பாட்டுக்கு?-இப்படியெல்லாம் என்னவெல்லாமோ எண்ணித் தனக்குள் சமாதானம் செய்துகொண்டே அருகிலிருந்த ஒரு கடைக்காரனிடம் ஐந்து ரூபாய் நோட்டை நீட்டி, ''ஐயா! இந்தப் பழத்தில் எனக்கு நூறு போடுங்க!'' என்று சொல்லிக்கொண்டே கையோடு கொண்டு வந்திருந்த கூடையைக் கீழே வைத்தாள்.

உடனே அவன் கைக்கு ஐந்து பழங்களாக எடுத்து, ''ஒண்ணு, ஒண்ணு, ஒண்ணு!......ரெண்டு, ரெண்டு, ரெண்டு!'' என்று ஏதோ ஒரு தினுசாக ராகம் இழுத்துப் பாடிய வண்ணம் எண்ணிப் போட்டான். பதினெட்டாவது 'கை' போடும்போதே, தினசரி எத்தனையோ பேரை ஏமாற்றி ஏமாற்றிப் பழகிப் போயிருந்த அவனுடைய வாய், ''இருபது, இருபது.....!'' என்று 'மங்களம்' பாடி முடித்து விட்டது!

பாவம், தான் போட்ட லாபக் கணக்கில் அந்தக் கடைக்காரனின் கைங்கரியத்தால் பத்தணா குறைந்து போனதை அவள் அறியவில்லை; துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்யும் பகவானும் பிரசன்னமாகி அவளுக்கு நீதி வழங்கவில்லை.

* * *

''மாம்பழம், மாம்பழம்!'' என்று கூவிக்கொண்டே தெருத் தெருவாக நடந்தாள் அம்மாயி. பஸ்ஸுக்காக வழிநடைப் பாதையில் காத்திருந்த ஒருத்தி, ''ஏ, மாம்பழம்!'' என்று அவளைக் கூப்பிட்டாள்.

''ஏம்மா!'' என்று பதிலுக்குக் குரல் கொடுத்துக் கொண்டே வந்து, தலைமேலிருந்த கூடையை இறக்கிக் கீழே வைத்தாள் அம்மாயி.

''டஜன் என்ன விலை?''

''ஒரே விலை சொல்லவா? இல்லே-இரண்டு விலை சொல்லவா?''

''ஒரே விலைதான் சொல்லு!''

''வேறே விலை கேட்கமாட்டீங்களே?''

''கேட்க மாட்டேன்''

''டஜன் பன்னிரண்டணா!'' என்று சொல்லி விட்டு, மனைவியை அடகு வைத்துக் காலகண்டய்யரின் கடனை அடைத்துவிட்ட அரிச்சந்திரனைப் போல ஏழை அம்மாயி சந்தோஷமடைந்தாள்.

இந்த உண்மை அந்த அம்மாளுக்குத் தெரியவில்லை. அவள் அலட்சியமாகத் தன் வாக்குறுதியை மீறி, ''டஜன் ஆறணாவுக்குக் கொடுக்கமாட்டாயா?'' என்று கேட்டாள்.

''என்ன, அம்மா! வேறே விலை கேட்க மாட்டேன்னு சொல்லிவிட்டு இப்படிக் கேட்கிறீங்களே?'' என்று சொல்லிக்கொண்டே, அம்மாயி கூடையைத் தூக்கி மீண்டும் தலையில் வைத்துக்கொண்டாள்.

''முதல் முதல்லே 'போனி' பண்ணுவாங்கன்னு பார்த்தா, அந்த அம்மா இப்படிக் கேட்டுவிட்டாங்களே! அதுக்காக நஷ்டத்துக்குப் போனி பண்ண முடியுமா?'' என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்டாள் அம்மாயி.

மீண்டும் இன்னொரு இடத்திலிருந்து அழைப்பு! - போனாள்.

''டஜன் என்ன விலை?''

இந்தத் தடவை அவள் அரிச்சந்திரனைப் பின்பற்ற விரும்பவில்லை. ''ஒண்ணரை ரூபாயுங்க!'' என்றாள்.

''முக்கால் ரூபாய் கொடுப்பாயா?'' என்று கொஞ்சங் கூட் கூசாமல் கேட்டார் அந்த ஆசாமி.

''சரி, எடுங்கோ! முதல் முதல்லே போனி பண்ணுங்கோ!'' என்றாள் அம்மாயி.

அந்த மனிதர் கால் டஜன் பழங்களை எடுத்துக்கொண்டு மூன்றணாவை எடுத்து அவளிடம் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்டு திரும்பியபோது அவளுக்கு எதிரே ஒரு பலூன்காரன் வந்தான். ''அப்புறம் மறந்து விட்டாலும் மறந்து

விடுவோம். குழந்தைகள் ஏமாந்து போகும்!'' என்று எண்ணி, அவனிடம் இரண்டணாவைக் கொடுத்து இரண்டு பலூன்களை வாங்கி வைத்துக்கொண்டாள்.

சிறிது தூரம் சென்றபிறகு, அவளுக்கு வயிற்றைக் கிள்ளியது. அதற்கு ஏற்ற மாற்று, வெற்றிலை போட்டுக் கொண்டு, வாயில் புகையிலையை அடக்கிக் கொள்வது என்பதுதான் அவள் வாழ்க்கையில் கண்டறிந்த அனுபவ உண்மையாயிற்றே! அருகிலிருந்த கடையில் ஓரணாவுக்கு வெற்றிலை, பாக்கு, புகையிலை வாங்கிக் கொஞ்சம் போட்டுக் கொண்டு, மீதியை மடியில் கட்டி வைத்துக் கொண்டாள்.

* * *

ஊரில் அப்பொழுது காலரா என்பதற்காக, சுகாதார அதிகாரிகள் வேறொன்றும் செய்யாவிட்டாலும் ஊரைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தனர். அன்று காலை கிடங்குத் தெருவில் அவர்களுடைய நடமாட்டம் அதிகமாயிருந்தது. ''எங்கே அழுகல் பழங்களோடு நல்ல பழங்களையும் சேர்த்து வாரி லாரியில் கொட்டிக்கொண்டு போய் விடுவார்களோ!'' என்று எல்லாக் கடைக்காரர்களும் அவர்களைப் பீதியுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர்களில் யாராவது ஒருவர் தன் கடைக்கு அருகே வந்துவிட்டால் போதும், உடனே அந்தக் கடைக்காரன் அவரைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டே, ''அடேய், பையா! 'ஐயா'வின் வீடு உனக்குத் தெரியுமோ, இல்லையோ? நல்ல பழங்களாக ஒரு டஜன் பொறுக்கி எடுத்துக் கொண்டுபோய் 'அம்மா'கிட்ட கொடுத்து விட்டு வாடா!'' என்பான். 'ஐயா'வும் அந்தக் கடையைக் கவனிக்காதவர்போல் அப்பால் போய்விடுவார்!

அந்த அற்புதமான காட்சி ஏனோ திடீரென்று அம்மாயியின் மனக் கண் முன்னால் தோன்றிற்று. ''ஐயோ! அந்தப் புண்ணியவான்கள் கண்ணில் நாம் படாமல் இருக்க வேண்டுமே!'' என்ற கவலை அவளைப் பீடித்தது. முன்னும் பின்னும் பார்த்துக்கொண்டே பரபரப்புடன் நடந்தாள்.

இவ்வாறு எண்ணி அவள் இரண்டடிகூட எடுத்து வைத்திருக்கமாட்டாள். 'ஏய்! கூடையில் என்னாம்மே?' என்று யாரோ அதிகார தோரணையில் கேட்பது போலிருந்தது. அம்மாயி திரும்பிப் பார்த்தாள். 'கிரீச்' சென்று நின்ற லாரியிலிருந்து யாரோ ஒருவர் இறங்கிக் கொண்டிருந்தார்.

அவர் சுகாதார அதிகாரி என்பதை அறிந்து கொண்ட அவள் கதி கலங்கிப் போய்விட்டாள். ''சாமி, சாமி! ஏழையை ஒண்ணும் செய்யாதிங்க, சாமி!'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டே கூடையை இறக்கிக் கீழே வைத்துவிட்டு, அந்த அதிகாரியின் காலைப் பிடித்துக் கொண்டாள்.

அதிகாரி ஓர் அலட்சியப் புன்னகை புரிந்துவிட்டு, ''உன்னைத்தானே ஒன்றும் செய்யவேண்டாம் என்கிறாய்? சரி, போ!-டேய்! யாரடா, அங்கே?-உம்....!'' என்று உறுமினார்.

அடுத்த நிமிஷம் அவர் அருகிலேயே நின்று கொண்டிருந்த ஒரு நகர சுத்தித் தொழிலாளி, அம்மாயியின் கூடையைப் பருந்துபோல் பாய்ந்து தூக்கிக்கொண்டு லாரியை நோக்கி ஓடினான்.

''ஐயையோ!'' என்று அலறினாள் அம்மாயி.

அதை அவன் லட்சியம் செய்யவில்லை. பழங்களை லாரியில் கொட்டிக் கொண்டு, கூடையை அவளுக்கு முன்னால் வீசி எறிந்து விட்டு வண்டியில் ஏறிக்கொண்டான். சுகாதார அதிகாரியும் அவனுடன் ஏறிக் கொண்டார். அவருடைய முகத்தில் அலாதிக் களை வீசிற்று. ''அம்மாயியின் கூடையைக் காலி செய்ததின் மூலம் காலராவை நகரத்திலிருந்து அடியோடு ஒழித்து விட்டோம்!'' என்ற திருப்தியோ, என்னமோ!

மறுகணம் அம்மாயியின் கண்களில் மண்ணை வாரிப் போட்டுக்கொண்டே லாரி 'விர்'ரென்று கிளம்பி விட்டது.

''அட, பாவிங்களா! சாயந்திரம் அந்த நாயுடுகாருக்கு நான் என்ன பதில் சொல்வேன்? குழந்தை குட்டிக்கு எப்படிக் கஞ்சி காய்ச்சி வார்ப்பேன்?'' என்று கண்ணீரும் கம்பலையுடன் கதறிக் கொண்டே, கீழே உட்கார்ந்து விட்டாள் அம்மாயி.

தன்னை மறந்த துக்கத்தில், தன் கையிலிருந்த இரண்டு பலூன்களும் விடுதலையடைந்து வானவீதியை நோக்கிப் பறந்ததைக்கூட அவள் கவனிக்கவில்லை; தானும் தன்னுடைய குழந்தைகளும் இரவு பட்டினி கிடக்க வேண்டுமே என்றுகூட அவள் அவ்வளவாகக் கவலையடையவில்லை; 'தர்ம ராஜா நாயுடுகாரு'வுக்கு என்ன பதில் சொல்லுவது என்று எண்ணி எண்ணித்தான் அவள் ஓயாமல் அழுது கொண்டேயிருந்தாள்.

பாவம், கதியற்ற அவளுக்கு விதியைத் தவிர வேறு ஏதாவது ஆறுதல் சொல்லித் தேற்றுவார் யார்?

# கைமேல் பலன்

''கொக்கரக்கோ' என்று கோழி கூவிற்று. சின்னப்பன் படுக்கையை விட்டு எழுந்தான். எழுந்தவன், தன் மனைவியை ஒரு முறை பரிதாபத்துடன் பார்த்தான். அவள் அசைவற்றுத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவனுடைய நெற்றியில் விழுந்து புரண்டு கொண்டிருந்த கூந்தலை ஒதுக்கிவிட்டு, அவன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

இன்னொரு முறை கோழி கூவிற்று.

அவன் மீண்டும் ஒரு முறை தன் மனைவியைப் பார்த்தான். பார்த்துவிட்டு, ''நாளெல்லாம் நாய் மாதிரி உழைச்சுப்பிட்டு வருகிறாள், பாவம்? உடம்பெல்லாம் ஒரே அசதியாயிருக்காதா? எப்படி இம்புட்டுச் சீக்கிரத்தில் எழுந்திருக்க முடியும்?'' என்று தனக்குத் தானே வாய்விட்டுச் சொல்லிக்கொண்டான்.

மீண்டும் கோழி கூவிற்று.

சின்னப்பன் தன் மனைவியை லேசாகத்தீண்டி, ''செல்லம், செல்லம்!'' என்றான்.

செல்லம் திடுக்கிட்டு எழுந்து, ''என்ன, பொழுதா விடிந்துவிட்டது?'' என்றாள்.

''இல்லை, இப்பத்தான் கோழி கூவிற்று!'' என்றான் சின்னப்பன்.

செல்லம் எழுந்து பல்லைத் துலக்கி முகத்தை அலம்பிக் கொண்டாள். குங்குமத்தை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டு, ''நீங்கள் வீட்டிலே தானே இருக்கப் போறீங்க?'' என்று கேட்டாள்.

''ரொம்ப நல்லாயிருக்கு! பொம்மனாட்டி வேலைக்குப் போறது; புருசன் வீட்டிலே குந்திக்கிட்டுக் கொட்டாவி விடறதா, என்ன? அந்தப் பாழாய்ப்போன 'மாட்ச் பாக்டரி'க்காரன் மனசு எப்போ இளகப் போகுதோ, நாங்க எப்போ வேலைக்குப் போகப் போறோமோ? அதுவரை எங்கேயாச்சம் கூலி வேலை, கீலி வேலை இருக்கான்னு பார்க்கவேணுமில்லே?''

''அப்படின்னா போறப்போ தட்டியை இழுத்துச் சாத்தி நல்லாக்கட்டிட்டுப் போறீங்களா?''

''போறேன்.''

''மத்தியானம் நான் அய்யர் வீட்டிலேருந்து சோறு எடுத்துக்கிட்டு வாரதுக்குள்ளே நீங்க இங்கே வந்து இருக்கிறீங்களா?''

''இருக்கிறேன்''.

''சரி, அப்போ நான் போயிட்டு வாரேன்!'' என்று சொல்லிவிட்டுச் செல்வம் நடையைக் கட்டினாள்.

சின்னப்பன் வாயில் பல் குச்சியை எடுத்து வைத்துக் கொண்டு கொல்லைப் பக்கம் சென்றான்.

* * *

அந்த ஊரில் 'எம். எம். மாட்ச் பாக்டரி' என்றால் 'மன்னார்குடி மாணிக்கம் தீக்குச்சித் தொழிற் சாலை' என்று எல்லோருக்கும் தெரியும். அந்தத் தொழிற்சாலையில் ஏறக் குறைய இருநூறு பேருக்கு மேல் வேலை செய்து வந்தனர். இந்த இரு நூற்றுச் சொச்சம் பேருடைய வயிறுகளையும் சென்ற மகாயுத்தத்தின் போது தோன்றிய பஞ்சம், சமதர்மவாதிகளாக மாற்றிவிட்டது. தங்களுக்குத் தெரியாமல் சமதர்மவாதிகளாக மாறிவிட்ட தங்கள் வயிறுகளைத் தேசியவாதிகளாக மாற்ற அந்த அப்பாவித் தொழிலாளிகள் பெருமுயற்சி செய்தனர். அந்த முயற்சியில் அவர்கள் ஒரு வருஷம் வெற்றியடைந்தனர்; இரண்டு வருஷங்கள் வெற்றியடைந்தனர்; மூன்று வருஷங்கள் வெற்றியடைந்தனர். அதற்குமேல் அவர்களுடைய முயற்சி பலிக்கவில்லை; அந்தப் பாழும் வயிறுகள் அத்தனையும் 'அசல் சமதர்மவாதி'களாகவே மாறி, நிலைத்து நீடித்து நின்றுவிட்டன!

இதன் பயனாகத் தங்களுக்குச் சம்பள உயர்வுவேண்டுமென்று கோரி, முதலில் அவர்கள் முதலாளிக்கு 'நோட்டீஸ்' விடுத்தனர். முதலாளிகளின் சம்பிரதாயத்தை யொட்டி அந்த 'நோட்டீஸ்' காற்றில் பறக்க விடப்பட்டு விடவே, தொழிலாளிகள் கடவுளுக்கு அடுத்தபடியாக இருந்த வேலை நிறுத்தத்தில் இறங்கினர்; கடவுளைப் போல் வேலை நிறுத்தம் தங்களைக் கைவிடாதென்றும் அவர்கள் நம்பினர். அப்படி நம்பியவர்களில் ஒருவன்தான் சின்னப்பன்.

வேலை நிறுத்தம் ஆரம்பித்து விளையாட்டுப் போல் இரண்டு மாதங்களாகிவிட்டன. சர்க்கார் வழக்கம்போல் அந்த வேலை நிறுத்தத்தைச் சட்டவிரோத மாக்கிவிட்டுப் பேசாமலிருந்தனர். தொழிலாளிகள் இந்த இரண்டுமாத காலமும் கூட்டம் கூட்டமென்று கூட்டினர்; பேச்சுப் பேச்சென்று பேசினர்; தீர்மானம் தீர்மானமென்று நிறைவேற்றினர்-எந்த விதமான பலனும் இல்லை.

இருந்தாலும் அவர்கள் சளைக்கவில்லை; "வெற்றி நமதே!" என்று கோஷித்துக் கொண்டு வீதியெல்லாம் சுற்றிச் சுற்றி வந்தனர். இதில் வேடிக்கை என்னவென்றால், இவ்வாறு கோஷமிடுவதற்கும் அவர்கள் ஏதாவது சாப்பிட வேண்டியிருந்தது; அதற்காகத் தங்கள் உடம்பையும் உயிரையும் பணயம் வைத்து உழைக்கவேண்டியிருந்தது. இதை நினைத்துத்தான் மன்னார்குடி மாணிக்கம் மௌனம் சாதித்து வந்தார். அத்துடன் அவர் நிற்கவில்லை; அவர்களுடைய 'சரணாகதி'யை எதிர்பார்த்துத் தமக்குள் சிரித்துக் கொண்டுமிருந்தார்!

இந்தச் சிரிப்பைச் சின்னப்பன் பொருட்படுத்தாமலிருப்பதற்குச் செல்லம் துணை புரிந்தாள். அதாவது, வேலை நிறுத்தம் ஆரம்பமானதும் அவள் அந்த ஊர்ப் பெரிய மனிதர் வீடு ஒன்றில் வேலைக்கு அமர்ந்தாள். காலையில் வீடு வாசலைப் பெருக்கிச் சாணம் தெளித்துக் கோலமிடுவது. பாத்திரம் தேய்ப்பது, துணி துவைப்பது, காலைச் சிற்றுண்டிக்கு மாவு அரைத்துக் கொடுப்பது முதலியவைதான் அவளுடைய வேலைகள். இந்தப் பிரமாத வேலைக்கு மாதம் பிறந்தால் சுளை சுளையாக ஐந்து ரூபாய் சம்பளம். அத்துடன் மத்தியான வேளையில் ஏதாவது சாதம், குழம்பு மீதமானால், அவை பிச்சைக்காரனுக்கு அல்ல; அவளுக்குத்தான்!

மத்தியானம் மட்டுமா இந்தச் சலுகை? இரவில் ஏதாவது கறி வகைகள் மிஞ்சி மறுநாள் காலை அவை கெட்டுப்போனால் செல்லத்துக்கு அடித்தது யோகம்! அந்தக் கறி வகைகள் அத்தனையும் குப்பைத் தொட்டிக்கா என்கிறீர்கள்?-இல்லை, இல்லை; செல்லத்தின் வயிற்றுக்குத்தான்!

செல்லத்துக்கு அடித்து வந்த இந்த யோகம், கடந்த இரண்டு மாத காலமாகச் சின்னப்பனுக்கும் அடித்து வந்தது. அதன் பயனாக அவளுடைய உயிர் மட்டும் அல்ல; அவனுடைய உயிரும் உடம்பில் ஊசலாடிக் கொண்டிருந்தது. இருவரும் உயிருள்ள பிணங்களைப் போல ஊரில் நடமாடிக் கொண்டிருந்தனர்.

அன்று மத்தியானம் 'அலைந்தது மிச்சம்' என்று அய்யர் வீட்டுச் சோற்றை எதிர்பார்த்தவனாய்ச் சின்னப்பன் சீக்கிரமாகவே வீட்டுக்கு வந்து விட்டான். வந்தவன் தட்டியை அவிழ்க்கவும் இல்லை; குடிசைக்குள் நுழையவுமில்லை. வாசலிலேயே நின்று அவளுடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றான்.

நின்றான். நின்றான், நின்றான்-நின்று கொண்டேயிருந்தான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அவள் சற்றுத் தூரத்தில் வருவது தெரிந்தது; அவளைக் கண்டதும் அவன் முகம் மலர்ந்தது-சூரியனைக் கண்ட தாமரையைப் போல அல்ல; சோற்றைக் கண்ட ஏழையைப் போல.

அவள் அருகில் வந்தாள்; அவன் முகம் குவிந்தது!

ஏன் தெரியுமா?-இத்தனை நாளும் அவளுடைய முகத்தில் ஒருவிதக் களை இருக்குமே, அந்தக் களையை இன்று காணவில்லை; இத்தனை நாளும் அவளுடைய கையில் சாதம் இருக்குமே, அந்தச் சாதத்தையும் இன்று காணவில்லை!

''இன்னிக்குத் திடீரென்று அய்யர் வீட்டுக்கு ரெண்டு விருந்தாளிங்க வந்துட்டாங்க, அதாலே ஒண்ணும் கிடைக்கலே!'' என்று சொல்லி வருத்தத்துடன் கையை விரித்தாள் செல்லம்.

''அதுக்குத்தான் என்ன பண்றது! தண்ணீர் இருக்கவே இருக்கு; யார் வீட்டுக்கு எத்தனை விருந்தாளிங்க வந்தாலும் நம்மை அது தாங்குமில்லே!'' என்று சொல்லி, ஒரு வறட்டு சிரிப்புச் சிரித்தான் சின்னப்பன்.

''அப்படின்னா நான் வாரேன்! ஏகப்பட்ட துணிங்க இருக்கு; தோய்ச்சுப் போடணும்!'' என்று சொல்லிவிட்டுத் திரும்பினாள் செல்லம்.

''சரி, போய் வா! நானும் 'மீட்டிங்'குக்குப் போறேன். இன்னிக்குப் பட்டணத்திலேயிருந்து யாரோ ஒரு பெரிய தலைவரு வந்து பேசப் போறாராம்!'' என்றான் சின்னப்பன்.

இருவரும் பிரிந்தனர்-நிரந்தரமாக அல்ல; தற்காலிகமாகத்தான்!

* * *

அன்று மாலை செல்லம் வீட்டில் விளக்கேற்றி வைத்து விட்டு வாசலுக்கு வந்து நின்றாள். சின்னப்பன் வந்தான்.

''வாங்க, பட்டணத்திலேயிருந்து வந்த தலைவரு என்ன சொன்னாரு?'' என்று ஆவலுடன் விசாரித்தாள் செல்லம்.

சின்னப்பன் தலையைச் சொறிந்து கொண்டே, ''அவர் நல்லதைத்தான் சொன்னாரு!'' என்றான்.

''என்ன, நல்லதைச் சொன்னாரு?''

''இப்போ எங்கே பார்த்தாலும் தீப்பெட்டிக்குப் பஞ்சமாயிருக்குதில்லே? இந்தச் சமயத்திலே நீங்க 'ஸ்ட்ரைக்' சேஞ்சி உற்பத்தியைக் குறைக்கலாமான்னு கேட்டாரு!''

''உற்பத்தியைக் குறைக்காம இருப்பதற்கு உழைக்கிறவனுங்க உடம்பிலே கொஞ்சமாச்சும் தெம்பு இருக்க வேணாமா?-அதுக்குக் கொஞ்சம் சம்பளத்தை ஒசத்திப் போட்டால் என்னவாம்?''

''எப்படி ஒசத்தறது? உற்பத்தியைப் பெருக்குனாத்தானே முதலாளிக்கு லாபம் அதிகமா வரும். அவரும் சந்தோசமா சம்பளத்தை ஒசத்திப் போடுவாரு!-இது தெரியாம இத்தனை நாளா நாங்களும் இந்த 'ஸ்ட்ரைக்'கைக் கட்டிகிட்டு அழுதோமே!'' என்று சொல்லித் தன் அடி வயிற்றில் லேசாக அடித்துக் கொண்டான் சின்னப்பன்.

''அப்படியா சங்கதி? அப்படின்னா நீங்க இப்போ என்ன தீர்மானம் பண்ணியிருக்கீங்க?'' என்று கேட்டாள் செல்லம்.

''தீர்மானம் என்ன? நாளையிலேருந்து எல்லோரும் பழையபடி வேலைக்குப் போகப் போறோம்!'' என்று சின்னப்பன் சொன்னான்.

''இதுக்குத்தானா இம்புட்டு நாளா ஊரைச் சுற்றிச் சுற்றி வந்தீங்க!'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே செல்லம் முகவாய்க் கட்டையில் கையை வைத்துக் கொண்டாள்.

''எல்லாம் பட்டாத்தானே தெரியும்!'' என்று அலுத்துக் கொண்டு கீழே உட்கார்ந்தான், கடமையை உணர்ந்து உரிமையை மறந்த சின்னப்பன்.

''நல்லகூத்து, போங்க!'' என்று சொல்லிக் கொண்டே, செல்லம் தன் மடியிலிருந்து ஒரு பிடி வேர்க்கடலையை எடுத்து அவனுக்கு எதிரே 'கலகல' வென்று போட்டாள்.

''ராத்திரிக்காச்சும் கஞ்சிகிஞ்சி காய்ச்சலையா'' என்று சின்னப்பன் ஒப்பாரி வைத்தான்.

''இந்தாங்க, காய்ச்சாத கஞ்சி!'' என்று சொல்லி, ஒரு குவளை நிறையக் குளிர்ந்த நீரை எடுத்து வந்து அவனுக்கு எதிரே வைத்து விட்டுச் சிரித்தாள் செல்லம்.

* * *

எழுபது நாட்களுக்குப் பிறகு, 'எம். எம். மாட்ச் பாக்டரி'யில் மீண்டும் வேலை தொடங்கிற்று. முன்னெல்லாம் மாலை ஐந்தரை மணி மட்டும் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளிகள், இப்பொழுது இரவு ஒன்பது மணி வரை செய்ய ஆரம்பித்தனர்.

இதனால் அவர்களுடைய ஊதியமும் கொஞ்சம் உயர்ந்தது; உற்பத்தியும் பெருகிற்று.

மொத்த வியாபாரிகள் திணறிப் போகும்படியாகத் தீப்பெட்டிகளைக் கட்டுக் கட்டாக அனுப்பி வைத்தார் மன்னார்குடி மாணிக்கம். அவர்கள், ''போதும், போதும்!'' என்று அலறும் வரை அவர் நிறுத்தவேயில்லை.

அந்த மாதம் சம்பளம் வாங்கியதும் ''செல்லம், நீ நாளையிலேருந்து அய்யர் வீட்டு வேலைக்குப் போக வேணாம்; என்னுடைய சம்பாத்தியமே போதும்!'' என்று சின்னப்பன் தன் மனைவியிடம் சொல்லி விட்டான். அதைக் கேட்டு அவளும் பூரித்துப் போனாள்.

இருந்தாலும் சின்னப்பனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் ஒரு குறை இருக்கத்தான் இருந்தது. அதாவது, ''இப்பொழுது நாம் இரவு ஒன்பதரை மணிவரை வேலை செய்வதால்தானே சம்பளம் கொஞ்சம் அதிகமாக் கிடைக்கிறது? அப்படிச் செய்யா விட்டால் பழைய சம்பளம்தானே கிடைக்கும்?'' என்று எண்ணி அவர்கள் அதிருப்தியடைந்தார்கள். ஆனால் அந்த அதிருப்தியிலும் அவர்களுக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கை, ''நாம் உற்பத்தியைப் பெருக்கினால் ஊதியம் தானாகவே உயரும்'' என்பது தான்.

இந்த நம்பிக்கையில் ஒரு வருஷம் எப்படியோ ஓடி விட்டது. அரையணாவுக்கு விற்ற தீப்பெட்டி முக்காலணாவாக உயர்ந்தது. இதனால்தானோ, அல்லது உற்பத்தியைப் பெருக்கியதினால்தானோ சுற்றுப்புறத்திலிருந்த தீப்பெட்டிப் பஞ்சம் தீர்ந்தது. மன்னார்குடி மாணிக்கம் இன்னும் கொஞ்சம் முன்னால் வந்த தம் தொந்தியை லேசாகத் தடவி விட்டுக் கொண்டார். ஆனால் சின்னப்பனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் இருந்த கவலை மட்டும் இன்னும் தீரவில்லை. அதாவது, அவர்கள் நினைத்தபடி சம்பளம் உயரவில்லை.

அதற்குப் பதிலாக, ''நம்மிடம் தீப்பெட்டி 'ஸ்டாக்' அதிகரித்து விட்டது. மொத்த வியாபாரிகளிடமிருந்து 'ஆர்டர்'ரும் வரவில்லை. அவர்களெல்லாம் விலையைக் குறைப்பதற்கு ஏதாவது முயற்சி செய்தால் தேவலை என்று வேறு எழுதி வருகிறார்கள். எனவே, இனி உங்களுக்கு இரவில் வேலை கிடையாது; பகலில் மட்டுந்தான் வேலை!'' என்று மன்னார்குடி மாணிக்கம் அறிவித்து விட்டார்.

அவர்தான் என்ன செய்வார், பாவம்! நிலைமை லாபத்தில் நஷ்டம் வரும் அளவுக்கு வந்து விட்ட போது, அவர் பேசாமல் இருக்க முடியுமா?

இருந்தாலும், இதைப் பற்றிப் 'பட்டணத்துத் தலைவர்' வந்து ஏதாவது சொல்வார் என்று 'எம். எம். மாட்ச் பாக்டரி' தொழிலாளிகள் எதிர்பார்த்தனர். ஆனால், அவர் அந்தப் பக்கம் வரவும் இல்லை; ஒன்றும் சொல்லவும் இல்லை!

* * *

அன்று காலை வேலைக்குப் புறப்படும்போது, ''செல்வம், நாலுபேரைப் போல நாமும் நல்லாயிருக்கிறதுக்கு இருபத்து நாலு மணி நேரம் வேணுமானாலும் நான் வேலை செய்யலாம்னு எண்ணியிருந்தேன்; அதுக்கும் இனிமேல் வழியில்லாமல் போச்சு!'' என்றான் சின்னப்பன்.

''ஏன்?'' என்று கேட்டாள் செல்லம்.

''தீப்பெட்டி 'ஸ்டாக்' ஏராளமா இருக்குதாம். அதுக்காக இனிமேல் ராத்திரியிலே வேலை இல்லைன்னு எசமான் சொல்லிட்டாரு!''

''அப்பிடின்னா இனிமேல் பழைய சம்பளம்தான் கிடைக்கும்னு சொல்லுங்க!''

''ஆமாம்.''

''தொலையறது! ஏதோ கிடைச்சவரை திருப்தியடைய வேண்டியதுதானே?'' என்றாள் செல்லம்.

''வேறே என்ன செய்யறது? நாம் அம்புட்டுத்தான் கொடுத்து வச்சிருக்கோம்-நான் போய்வாரேன்!'' என்று சொல்லிவிட்டுப் போனான் சின்னப்பன்.

அவனை வாசல் வரை வந்து வழியனுப்பிவிட்டு, செல்லம் வீட்டுக் காரியங்களில் ஈடுபட்டாள்.

அடுப்பை மூட்டி உலை வைத்துவிட்டு அவள் அரிசியைக் கழுவிக் கொண்டிருந்த சமயத்தில், சின்னப்பன் எதிர்பாராத விதமாக தளர்நடை நடந்து வந்து அவளுக்கு எதிரே நின்றான்.

''என்னங்க, என்ன உடம்புக்கு? லீவு கீவு போட்டுட்டு வந்துட்டீங்களா?'' என்று கேட்டுக் கொண்டே, அவனைத் தலைநிமிர்ந்து பார்த்தாள் செல்லம்.

அவன் ஒன்றும் சொல்லாமல் விசித்து விசித்து அழுதான்.

செல்லம் திடுக்கிட்டு எழுந்து நின்று, ''என்னங்க, என்ன? விசயத்தைச் சொல்லுங்களேன்!'' என்று பரபரப்புடன் கேட்டாள்.

அதற்கும் அவன் ஒன்றும் பதில் சொல்லாமல் மீண்டும் விம்மி விம்மி அழுதான்.

''ஐயோ! இதென்ன, பொம்மனாட்டி மாதிரி இப்படித் தேம்பித் தேம்பி அழறீங்களே!-ஏதாச்சும் தப்புத் தண்டா செய்து விட்டுப் போலீசிலே கீலீசிலே மாட்டிக்கிட்டீங்களா, என்ன?'' என்று கவலையுடன் கேட்டாள் செல்லம்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை, செல்லம்! இனிமேல் நாம் எப்படிப் பிழைக்கப் போறோம்னுதான் எனக்குத் தெரியலே!'' என்று விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையே ஆரம்பித்தான் சின்னப்பன்.

''பிழைச்சாப் புழைக்கிறோம், செத்தாச் சாகிறோம்-முதல்லே விசயம் என்னான்னு சொல்லித் தொலையுங்க!'' என்று செல்லம் கத்தினாள்.

''ஆமாம், செல்லம்! நீ சொல்றது சரிதான்! நாம் செத்தால் சாகிறோம், பிழைச்சாப் பிழைக்கிறோம்னுதான் எங்க முதலாளியும் நினைச்சுப்பிட்டாரு! அவரு உற்பத்தியைக் குறைக்கணும்னு இன்னிக்கு ஐம்பது பேரை வீட்டுக்கு அனுப்பி வைச்சுட்டாரு! அவர்களிலே நானும் ஒருத்தன்!'' என்று சின்னப்பன் விஷயத்தை ஒருவாறு சொல்லி முடித்தான்.

அவ்வளவுதான்; செல்லம் ஏனோ 'குபீர்' என்று சிரித்தாள்!

சின்னப்பன் அழுகையை நிறுத்தி விட்டு அவளை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

''கவலை வேணாம், போங்க! பட்டணத்துத் தலைவர் சொன்னபடி உற்பத்தியைப் பெருக்கினீங்க; கைமேல் பலன் கிடைச்சது! அம்புட்டுத்தானே?'' என்று சொல்லி விட்டு, அவள் மீண்டும் மீண்டும் சிரித்துக் கொண்டே இருந்தாள்.

# கருவேப்பிலைக்காரி

வழக்கம்போல் இன்றும் விடியற்காலை ஐந்து மணிக்குப் படுக்கையைவிட்டு எழுந்தேன். மணி பத்தாகும் வரை 'அவ'ருக்கு வேலை செய்வதற்கே பொழுது சரியாயிருந்தது.

மாதம் பிறந்தால் அந்த இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்காரன் அவருக்குத் தொண்ணூற்றைந்து ரூபாய் 'பிச்சைக் காசு' கொடுத்தாலும் கொடுத்து விடுகிறான். அவர் மட்டுமா அவனுக்குப் பயப்பட வேண்டியிருக்கிறது? நானும்தான் அவர் மூலம் அவனுக்குப் பயப்பட வேண்டியிருக்கிறது!

மணி பத்துக்கு மேல் ஒரு நிமிஷம் ஆகிவிட்டால் போதும், அவர் தவியாய்த் தவித்துக் குதியாய்க் குதிப்பார்! -அவர் குதிப்பதைப் பார்த்துக்கொண்டு நான் சும்மா இருக்க முடிகிறதா?-கை பிடித்த தோஷம்! நானும் அவருடன் சேர்ந்து குதித்துத்தான் ஆகவேண்டும்.

இதனால் அவருக்கு ஒன்றும் கஷ்டமில்லை-நேரம் கழித்துச் சென்றால் மானேஜர் கோபித்துக் கொள்வாரே என்பதைத் தவிர! எனக்குத்தான் கஷ்டமெல்லாம்.

நான்தான் அவருக்குப் பயந்து தொலைகிறேன்; பாழாய்ப் போன அடுப்பு அவருக்குப் பயந்து தொலைகிறதா என்ன? அது தன்பாட்டுக்கு நிர்விசாரமாக எரிந்து தொலைகிறது!

அவசரத்தில் நான் அதைத் தூண்டிவிடும் போது, அது சில சமயம் என் கை விரல்களைத் தீண்டிவிடும்; 'அப்பப்பா!' என்று துடித்துப் போவேன். அதுதான் சமயமென்று கஞ்சித்தண்ணீர் வேறு என் காலில் கொட்டிக் கொண்டு விடும்; பச்சைத் தண்ணீரைக் கைமேலும் கால் மேலும் கொட்டியவண்ணம் பதை பதைத்துப் போவேன்.

இந்தச் சமயத்தில், "என்ன, லலிதா! ஏதாவது கொண்டு வருகிறாயா? இல்லை, நான் போகட்டுமா?" என்று அவர் வெட்டு ஒன்று துண்டு இரண்டுமாகக் கேட்பார்.

அவர் அவ்வாறு கேட்கப் பிறந்தவர்; கேட்கலாம். "இப்பொழுது ஒன்றும் கொண்டு வருவதற்கில்லை; நீங்கள் போகலாம்!" என்றுதான் பதிலுக்குச் சொல்ல முடியுமா? -அவ்வாறு சொல்ல நான் பிறந்தவளல்லவே?-நான் மட்டும் என்ன, எங்கள் வர்க்கமே அவ்வாறு சொல்வதற்குப் பிறந்ததல்லவே!

ஆகவே, ''இதோ வந்து விட்டேன்!'' என்று எல்லாவற்றையும் ஆவி பறக்கப் பறக்க எடுத்துக் கொண்டு கூடத்தை நோக்கி ஓட்டமாய் ஓடுவேன். அவர் தம்முடைய காரியங்களை யெல்லாம் முடித்துக் கொண்டு, நைவேத்தியத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கும் கல்லுப் பிள்ளையாரைப் போல் உட்கார்ந்திருப்பார். இலையைப் போட்டு எல்லாவற்றையும் பரிமாறிய பிறகு, நிமிர்ந்து நின்று எரியும் கையை வாயால் ஊதி ஊதித் தணிக்கப் பார்ப்பேன். அதற்காக அவர் ''ஐயோ, பாவம்!'' என்று பச்சாதாபப் படுவார் என்கிறீர்களா? அதுதான் கிடையாது. ''அவ்வளவு அஜாக்கிரதை!'' என்று கடிந்து கொள்வார்!

இன்று நான் விழித்த வேளை நல்ல வேளை போலிருக்கிறது. மேற்கூறிய விபத்து எதுவும் இன்று எனக்கு நேரவில்லை; குழந்தை ராதையும் மணி பத்துக்கு மேலாகியும் தொட்டிலை விட்டுக் கீழே இறங்கவில்லை. அவள் தன் பாட்டுக்குத் தொட்டிலுக்கு மேலே கட்டித் தொங்கும் பறக்கும் கிளிப் பாவையுடன் ஏதோ 'ங்கா' பாஷையில் பேசிக் கொண்டிருக்கிறாள்.

அப்பப்பா! சில சமயம் அவள் தன் 'ங்கா' பாஷையைக் கை விட்டுவிட்டு, 'குவா, குவா' என்ற பாஷையில் கத்த ஆரம்பித்து விட்டால் 'போதும், போதும்' என்று ஆகி விடுகிறது. இம்மாதிரி சமயங்களில் அடுப்புக் காரியமும் ஆகவேண்டியிருந்தால், 'குழந்தை வேண்டாம்!'' என்று தீர்த்த யாத்திரை போவதற்கு ஏதாவது கோயிலோ, குளமோ இருக்காதா என்று தோன்றி விடுகிறது!

நானும் குழந்தை பிறந்ததிலிருந்துதான் அவரிடம் சொல்லிக் கொண்டு வருகிறேன், ''வீட்டில் இருப்பது நான் ஒருத்தி; அழுகிற குழந்தையை வைத்துக் கொண்டு என்னால் உங்கள் அவசரத்துக்குச் சமைத்துப் போட முடியாது. அதைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்க யாராவது ஓர் ஆளைப் போடுங்கோ!'' என்று. அவர் எங்கே அதைக் காதில் வாங்கிக் கொள்கிறார்!

''எனக்குக் கிடைப்பதோ மாதம் தொண்ணூற்றைந்து ரூபாய். அதில் ஐந்தே ஐந்து ரூபாயை என் செலவுக்கு எடுத்துக் கொண்டு மீதி தொண்ணூறு ரூபாயை உன்னிடமே கொடுத்து விடுகிறேன். நீயோ அதுவே செலவுக்குப் போத வில்லையென்று எப்பொழுது பார்த்தாலும் அழுது வடிகிறாய் -முடியுமானால், நீ அதற்குள்ளேயே குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டிருப்பதற்காக ஒரு வேலைக்காரியைப் பார்த்து வைத்துக் கொள்ளேன்; நானா வேண்டாம் என்கிறேன்!'' என்று சொல்லி அவர் தம் பொறுப்பைத் தட்டிக் கழித்து விடுகிறார்.

அவர் சொல்வதிலும் நியாயம் இல்லாமற் போகவில்லை. அப்படியானால் நான் சொல்வதில்தான் நியாயம் இல்லையோ?

இவ்வாறு நான் எண்ணிக் கொண்டிருக்கும் போது தான் அம்புஜம் வந்தாள். அவள் என் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரி. அவளுடைய கணவரும் என்னுடைய கணவருடன்தான் வேலை பார்க்கிறார். இருவருக்கும் ஒரே சம்பளந்தான் என்று கேள்வி.

அப்போதுதான் நான் அலமாரியைத் திறந்து ஒரு கதைப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்தேன். அம்புஜம் வருவதற்கும், குழந்தை ராதை 'ங்கா' பாஷையைக் கைவிட்டுவிட்டு 'குவா' பாஷையில் கத்த ஆரம்பிப்பதற்கும் சரியா யிருந்தது.

''உன்னை வைத்துக் கொண்டுகூட யாராவது ஏதாவது படிக்க முடியுமோ?'' என்று அலுத்துக் கொண்டே நான் புத்தகத்தை மூடி வைத்துவிட்டுக் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொள்வதற்காக எழுந்தேன்.

''இருப்பது நீங்கள் இரண்டே பேர்-இந்தக் குழந்தையைத் தவிர! பகவான் கிருபையில் அவருக்கு மாதம் நூறு ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. மாதம் ஐந்து ரூபாய் கொடுத்தால் யாராவது ஒருத்தி வேலைக்கு வந்து குழந்தையை அழவிடாமல் பார்த்துக் கொள்ள மாட்டாளோ? அப்படிச் செய்வதை விட்டுவிட்டு இப்படி அலுத்துக் கொள்வானேன்?'' என்றாள் அம்புஜம்.

''அவருக்குச் சம்பளம் நூறு ரூபாயா? இல்லையே!-தொண்ணூற்றைந்து ரூபாய். அதிலும் ஐந்து ரூபாய் அவருடைய செலவுக்கு எடுத்துக் கொண்டு என்னிடம் தொண்ணூறு ரூபாய்தானே கொடுக்கிறார்!'' என்றேன் நான், குழந்தையைத் தூக்கித் தோளின் மேல் போட்டுக் கொண்டே.

''ஏன், பாக்கி ஐந்து ரூபாய் எங்கே போகிறதாம்? நேற்றுக்கூட ஏதோ பேச்சு வாக்கில் அவர் என்னிடம் சொன்னாரே, எனக்கும் நூறு ரூபாய்தான் சம்பளம் அடுத்த வீட்டுக்காரனுக்கும் நூறு ரூபாய்தான் சம்பளம் என்று!''

''பார்த்தாயா, அம்புஜம்! இப்படிப்பட்ட மனுஷனைக் கட்டிக்கொண்டு நான் என்ன செய்வது? அன்றைக்குக் கூடச் சொன்னேன். இந்த அழுகிற குழந்தையை வைத்துக் கொண்டு

என்னால் வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொள்ள முடியவில்லை என்று! 'நான்தான் ஐந்தே ஐந்து ரூபாய் எடுத்துக் கொண்டு பாக்கியை அப்படியே உன்னிடம் கொடுத்து விடுகிறேனே, இன்னும் என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?'' என்று அரிச்சந்திரனுக்கு அடுத்த வீட்டுக்காரன் மாதிரி அலுத்துக் கொண்டாரே, அவர்? சாயந்திரம் வரட்டும்; அவரை என்ன பாடு படுத்தி வைக்கிறேன் பார்!'' என்றேன் நான் ஆத்திரத்துடன்.

''நன்றாய்ப் படுத்து! இந்தப் புருஷர்களே இப்படித் தான்! சொல்வது ஒன்று; செய்வது ஒன்று. நிஜமாகவே இவர்கள் இருவருக்கும் நூறு ரூபாய்தான் சம்பளம் கிடைக்கிறதோ, இல்லை-அதற்கு மேல்தான் கிடைக்கிறதோ-யார் கண்டது?'' என்று மேலும் சந்தேகத்தைக் கிளப்பி விட்டாள் அவள்.

என்னையும் மீறிவந்த ஆத்திரத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு. ''என்னமோ, எல்லாம் அந்தக் கடவுளுக்குத் தான் தெரியும்!'' என்றேன் நான்.

சிறிது நேரத்துக்குப் பிறகு, ''போய் வருகிறேன்'' என்று சொல்லி விட்டு அவள் கிளம்பினாள்.

அதற்குள் குழந்தை ராதையும் நல்ல வேளையாகத் தூங்கி விட்டாள். அவளைத் தொட்டிலில் கிடத்திவிட்டு, நான் அம்புஜத்துடன் வாசல் வரை சென்றேன்.

கருவேப்பிலைக்காரி வந்தாள். அவளை அழைத்துத் திண்ணை யண்டை விட்டுவிட்டு, நான் உள்ளே சென்றேன் ஒரு பிடி அரிசி கொண்டு வருவதற்காக.

தனிக் குடித்தனம் செய்வதில் செளகரியம் இருந்தாலும், அசௌகரியமும் இல்லாமற் போகவில்லை. தினந்தோறும் கடைக்குப் போய்வர அவருக்குச் செளகரியப் படுகிறதா, என்ன? அவர் கடைக்குப் போய்வர முடியாத நாட்களில் எனக்குத் தெருவோடு போகும் அங்காடிக் கூடைக்காரர்களை விட்டால் வேறு வழியே கிடையாது.

* * *

''ஏ, அம்மா! நேரமாவுது, அம்மா; சீக்கிரம் வா. அம்மா!'' என்றாள் கருவேப்பிலைக்காரி.

''என்னடி, அப்படிப் பறக்கிறே? அரிசி எடுத்துக் கொண்டு வர வேண்டாமா?'' என்று சொல்லிக் கொண்டே நான் வெளியே வந்தேன்.

''ஐயோ! காத்தாலே பொறப்படறபோதே. அவரு 'சீக்கிரமா வா!'ன்னாரு. நேரம் கழிச்சுப் போனா அவரு என்னை அடிச்சுக் கொன்னுப் பிடுவாரு. அம்மா!''

''அது யாரடி, அவர்?''

''எம் புருஷன், அம்மா!''

''ஏன், அவன் எங்கேயாவது வேலை வெட்டிக்குப் போவதில்லையா?''

''சரித்தான்; அவரு எங்கேயாச்சும் வேலை வெட்டிக்குப் போவாம, வூட்டிலே சும்மாக் குந்திக்கிட்டு இருந்தாலும் பரவாயில்லையே! அடிக்கொரு தரம் எங்கேயாச்சும் திருடி விட்டு அவரு ஜெயிலுக்குப் போயிடுவாரு. 'மவராசனுங்க அவரை எப்பவும் அப்படியே ஜெயில்லே வச்சிருக்க மாட்டானுங்களா!'ன்னு எனக்குத் தோணும். ஏன்னா, அந்த மனுசன் வூட்டிலேயிருந்தா எனக்குக் கொஞ்சங்கூடச் சந்தோசமே கெடையாது. அவரு இல்லாதப் போதாவது இந்தக் கறிப்பிலை வித்துக் கெடைக்கும் அரிசியைக் கஞ்சி காய்ச்சி வயிறாரக் குடிப்பேன். அவரு இருந்தா எல்லா அரிசியையும் வித்துக் காசை அவருக்குச் சூதாடக் கொடுத்துடணும். இல்லாவிட்டால் அடிச்சுக் கொன்னுப்பிடுவாரு! அதுவும் சீக்கிரம் சீக்கிரமா! எல்லாத்தையும் அவருகிட்ட குடுத்துட்டு நானும் குழந்தையும் பட்டினி கெடக்க முடியுமா? அதாலே, அவருக்குத் தெரியாம இந்த முந்தானையிலே கொஞ்சம் அரிசி முடிஞ்சி வச்சுக்கிட்டுத்தான் நான் பாக்கியை விப்பேன். வித்த காசை அந்தக் கட்டையிலே போறவன் வருவான். கொடுத்துட்டு, 'கடவுளே!'ன்னு குடிசைக்கு வருவேன். முந்தாணையில் முடிஞ்ச அரிசியை அவிழ்த்து எடுத்துக் கஞ்சி காய்ச்சி. நான் கொஞ்சம் குடிச்சிப்பிட்டு-இந்தக் கொழந்தைக்கும் ரெண்டு பாலாடை ஊத்திப்பிட்டு-அந்த மனுசனுக்கும் கொஞ்சம் எடுத்து வச்சிருப்பேன்....''

''அப்படிப்பட்டவனுக்கு நீ ஏண்டி அந்தக் கஞ்சியிலே கொஞ்சம் மீத்தி வைக்கிறே? எல்லாவற்றையும் குடித்து விட்டு, வெறும் பானையை அவனுக்கு முன்னால் உருட்டி விடுகிறதுதானே?''

''நல்லாச் சொன்னே, அம்மா! அப்படிச் செஞ்சா அந்தப் பானை ஆயிரஞ் சுக்கலாப் போகும்; அத்தோட என் தலையும் ஆயிரஞ் சுக்கலாப் போகும். அதுவும் இல்லாம, 'ஏண்டி சோறு ஆக்கலே?'ன்னு என்னமோ கொண்டாந்து குடுத்தவன் மாதிரி ஏக அதிகாரமாகக் கேட்டு என்னை ஓதை ஓதைன்னு ஓதைச்சுத் தொலைச்சுப்பிடுவாரு!''

''நல்ல கதை தாண்டி, உன் கதை! அவன்தான் வீட்டிலே சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறானே, இந்தக் குழந்தையை நீ ஏன் முதுகிலே சுமந்து கொண்டு திரிய வேண்டும்? அவனிடம் இதை விட்டு விட்டு வரக் கூடாதோ?''

''அதுக்குக்கூட அவரு ஒப்ப மாட்டாரு, அம்மா! அந்தக் கொழந்தையைத் தூக்கி வைத்துக்கொள்ள முடியாம அப்படி என்னடி நீ வேலை செஞ்சு கிழிச்சுப் பிடுறே?'ன்னு எரிஞ்சு விழுவாரு, அம்மா!''

''அந்த 'அவரு' மட்டும் என்ன செய்து கிழித்து விடுகிறாராம்!'' என்று கேட்டேன் நான்.

''என்ன இருந்தாலும் அவரு என்னைத் தொட்டுத் தாலி கட்டின புருசன்! அப்படி யெல்லாம் நான் அவரை எதிர்ச்சிக் கேட்கலாமா, அம்மா?''

''அடி, பைத்தியக்காரி! உன்னைப் பற்றி அவன் நன்றாய்த் தெரிந்துகொண்டுதான் அப்படி மிரட்டு மிரட்டு என்று மிரட்டுகிறான்! எங்களவர் இருக்கிறாரே, அவர் என்னை அப்படிக் கேட்டால் நான் என்ன செய்வேன், தெரியுமா? பிய்த்துப் பிரி கட்டிவிட மாட்டேனா?''

''உங்களோடு என்னையும் சேர்த்துப் பேச முடியுமா, அம்மா?''

''சரி சரி, இந்தா அரிசி-நீ கருவேப்பிலை போடு!'' என்று அலுத்துக் கொண்டே நான் அரிசியை அவள் நீட்டிய மூங்கில் தட்டில் கொட்டினேன். அதைப் பெற்றுக் கொண்டு அவளும் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து விட்டுச் சென்றாள்.

அவள் தெருக்கோடி திரும்பும் வரை, ''கறிப்பிலை வாங்கலையோ! கறிப்பிலை வாங்கலையோ!'' என்ற குரல் என் காதில் எதிரொலி செய்து கொண்டே யிருந்தது.

* * *

அதென்னமோ தெரியவில்லை, அன்று முழுவதும் அந்தக் கருவேப்பிலைக்காரியை என்னால் மறக்கவே முடியவில்லை. ''உங்களோடு என்னையும் சேர்த்துப் பேச முடியுமா, அம்மா?'' என்ற அவளுடைய கேள்வி என் மனதை விட்டு அகலவே யில்லை.

ஆமாம், அவளோடு என்னையும் சேர்த்து ஏன் பேசக் கூடாது? ஜாதியில் வேண்டுமானால் உயர்வு தாழ்வு இருக்கலாம்; வாழ்வில் வேண்டுமானால் உயர்வு தாழ்வு இருக்கலாம். பிறப்பிலே.....? நானுந்தான் பெண்ணாய்ப் பிறந்தேன்; அவளுந்தான் பெண்ணாய்ப் பிறந்திருக்கிறாள்.

ஆயினும் மனோபாவத்தில் அவளுக்கும் எனக்கும் எவ்வளவு வித்தியாசம்!

அவனால் அவளுக்கு ஒரு காலணாவுக்கு வழி கிடையாது; திருடிவிட்டு ஜெயிலுக்குப் போவான்; வீட்டில் சும்மா இருக்கும் அவன் அந்தக் குழந்தையைக் கூடத் தூக்கி வைத்துக் கொண்டிருக்க மாட்டான்; அதையும் நாளெல்லாம் அவள் முதுகில் சுமந்துகொண்டு திரிய வேண்டும். இப்படியெல்லாம் கஷ்டப்பட்டு இவள் சம்பாதித்து எடுத்துக்கொண்டு போய் அவனுக்குச் சூதாடக் கொடுக்க வேண்டும்; அதுவும் அவசர அவசரமாக. இல்லையென்றால் அவன் அவளை அடித்துக் கொன்று விடுவான். இதை யெல்லாவற்றையும் விட, தான் சம்பாதித்த அரிசியில் தானே கொஞ்சம் திருடி எடுத்துக் கொண்டு போய்ச் சமைத்து, தானும் சாப்பிட்டு அவனுக்கும் கொஞ்சம் எடுத்து வைப்பது போன்ற கொடுமை வேறு ஏதாவது இருக்க முடியுமா?

இந்த அழகான வாழ்க்கையில் அவனிடம் இவளுக்கு என்ன பயபக்தி!

என்ன இருந்தாலும் அவன் இவளைத் தொட்டுத் தாலி கட்டிய புருஷனாம்! அவனை எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசக் கூடாதாமே!

பாவம், தீராத வியாதிக்கு ஆளாகியிருந்தும் வேசி வீட்டுக்குப் போக ஆசைப்பட்ட அயோக்கியனைக் கூடையில் வைத்துச் சுமந்து கொண்டு சென்ற பைத்தியக்காரி நளாயினியின் கட்டுக் கதையைக் கேட்டு ஏமாந்தவர்கள் இந்த உலகத்தில் எத்தனையோ பேர் இல்லையா? அவர்களில் இந்தக் கருவேப்பிலைக்காரியும் ஒருத்தி போலிருக்கிறது!

அப்பப்பா! அவளுடைய துரதிர்ஷ்டத்தைப் பார்க்கும் போது என்னுடைய அதிர்ஷ்டம் எவ்வளவோ தேவலை போலிருக்கிறதே!

ஐந்து ரூபாய்!-ஆம், ஐந்தே ஐந்து ரூபாய்-அதையும் எனக்குத் தெரிந்து எடுத்துக் கொள்ள அவருக்குத் தைரியமில்லை. எனக்குத் தெரியாமல் எடுத்துக் கொள்வதற்காக இத்தனை நாளும் அவர் என்னிடம் பொய் சொல்லி வந்திருக்கிறார்-எனக்குப் பயந்துதான்; ஆம், என்னுடைய வாய்க்குப் பயந்துதான்!

''அழுகிற பிள்ளைய வைத்துக் கொண்டு அடுப்புக் காரியத்தையும் என்னால் கவனிக்க முடியாது!'' என்று நான் அடித்துச் சொல்லும்போதுகூட, அவர் அந்தக் கருவேப்பிலைக்காரியின் கணவனைப் போல ''அதைவிட நீ என்ன வேலை செய்து கிழித்து விடுகிறாய்?'' என்று என்னை எதிர்த்துக் கேட்பதில்லை.

''என் செலவுக்கு எடுத்துக் கொண்டது போக மீதியைத்தான் உன்னிடம் கொடுத்து விடுகிறேனே, முடியுமானால் ஆள் வைத்துக் கொள்ளேன்!'' என்று அடக்கத்துடன் தான் பதில் சொல்லுகிறார். ஆனால் மறைமுகமாக, ''என்னுடைய செலவுக்கு மேற்கொண்டு ஐந்து ரூபாய் தேவையாயிருக்கிறது: உனக்குத் தெரிந்தால் எரிந்து விழுவாயே என்று தெரியாமலே எடுத்துக்கொண்டு விடுகிறேன்!'' என்று இத்தனை நாளும் அவர் என்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்!

அப்படித்தான் எடுத்துக் கொள்கிறாரே, அதையாவது தன் சொந்த உபயோகத்துக்காகச் செலவழித்துக் கொள்கிறாரா என்று எண்ணிப் பார்த்தால் 'இல்லை' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. அடிக்கடி எனக்கு ஏதாவது வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து என்னைத் திருப்திப் படுத்த முயலுகிறாரே, அதற்கு வேண்டிய காசு அவருக்கு எங்கிருந்து வரும்? இப்படி ஏதாவது எடுத்துக் கொண்டால்தானே உண்டு? ஒரு நாளாவதுஇதைப் பற்றி நான் யோசித்துப் பார்த்தேனா?

அப்பாவி மனுஷர், பாவம்! உண்மை தெரியாமல், ''சாயந்திரம் வரட்டும், அவரை என்ன பாடு படுத்தி வைக்கிறேன். பார்!'' என்று அம்புஜத்திடம் சொன்னோமே, இது நியாயமா?

இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டிருந்த எனக்குப் பொழுது போனதே தெரியவில்லை. அவர் வரும் காலடிச் சத்தம் கேட்டுத்தான் எழுந்தேன்.

ஏனோ தெரியவில்லை; அவரைக் கண்டதும் கோபித்துக் கொள்வதற்குப் பதிலாக நான் 'களுக்' கென்று சிரித்து விட்டேன்.

''ஏன் சிரிக்கிறாய்?'' என்று கேட்டுக் கொண்டே, அவர் ஒன்றும் புரியாமல் தம்முடைய முகத்தை ஓடோடியும் சென்று கண்ணாடியில் பார்த்துக் கொண்டார்!

''முகத்தில் ஒன்றுமில்லை; அகத்தில்தான் இருக்கிறது!'' என்று நான் அழுத்தலுடன் சொல்லிக்கொண்டே காப்பியைக் கொண்டு போய் அவருக்கு முன்னால் வைத்து விட்டு, ''நிஜத்தைச் சொல்லுங்கள், உங்களுக்கு எவ்வளவு சம்பளம்?'' என்று கேட்டேன்.

''இதென்ன கேள்வி, திடீரென்று?''

''சொல்லுங்களேன்!''

''ஏன், தொண்ணூற்றைந்து ரூபாய் தான்!''

''பொய், பொய்! எனக்குத் தெரியவே தெரியாது என்று நினைத்தீர்களா.....?''

''இல்லை, லலிதா! எனக்குச் சம்பளம் என்னமோ நூறு ரூபாய்தான்! ஆனால் உன்னிடம் உண்மையைச் சொன்னால்....''

''என்னிடம் உண்மையைச் சொன்னால் என்ன? நீங்கள் மேற்கொண்டு ஐந்து ரூபாய் எடுத்துக் கொள்வதை நான் 'வேண்டாம்!' என்றா சொல்லியிருக்கப் போகிறேன்?'' என்று ஒரு போடுபோட்டேன்.

அதை அப்படியே நம்பி, ''உன்னுடைய மனசு இவ்வளவு தங்கமான மனசு என்று இதுவரை எனக்குத் தெரியாமலே போய்விட்டதே!'' என்றார் அவர் உருக்கமுடன்.

அவர் சொல்லுகிறாரே, நீங்கள் சொல்லுங்கள்; அவர் நினைக்கிறபடி என் மனசு என்ன, அவ்வளவு தங்கமான மனசா?

# யாருக்குப் பிரதிநிதி?

''அம்மா!''

''யார், அது?''

''ஐயா இருக்கிறாரா, அம்மா?''

''ஒண்ணுமில்லை, அம்மா! அவரைக் கொஞ்சம் பார்க்கணும்.''

''ரொம்பப் பார்க்க வேண்டியதில்லையோ! ஒண்ணுமில்லாததற்கு அவரைப் பார்ப்பானேன்?''

''இல்லை அம்மா! வந்து.....''

''என்னத்தை வந்து......? ஐயாவைப் பார்ப்பதற்கு வேளை நாழி ஒன்றுமே கிடையாதா? நினைத்த நேரத்திலெல்லாம் பார்க்க வந்துவிட வேண்டியது தானா? இந்தக் கொட்டும் மழையிலே எப்படித்தான் நீங்கள் வந்து இப்படிக் கழுத்தை அறுக்கிறீர்களோ தெரியவில்லையே?''

இந்தச் சமயத்தில் புதிதாகச் சிநேகமான ஒரு பெரிய மனிதருடன் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்த 'ஐயா', ''என்னடி அது? இப்படி உள்ளே வா!'' என்று தம்முடைய தர்மபத்தினியை அழைத்தார்.

''அது என்ன எழவோ! இங்கே வந்து பாருங்கள்! அசல் தரித்திரங்களா ஏழெட்டு வந்து நிற்கிறதுகள்!'' என்று சொல்லிக் கொண்டே 'அம்மா' உள்ளே சென்றாள்.

இன்னொரு சமயம் வந்து தம்மைப் பார்க்கும்படி அந்தப் பெரிய மனிதரிடம் சொல்லிவிட்டு, 'ஐயா' எழுந்து வெளியே வந்தார். 'அம்மா' சொன்னபடி அங்கே ஏழெட்டு 'அசல் தரித்திரங்கள்' தங்கள் தங்கள் மனைவி மக்களுடன் தலைவிரி கோலமாக வந்து நின்று கொண்டிருந்தன.

''என்னடா, இது? நீங்கள் யார்? என்ன சேதி?'' என்று வெளியே வந்த 'ஐயா' அதிகாரத் தோரணையில் இரைந்து கேட்டார்.

''சாமி! நாங்க செம்படவனுங்க! சமுத்திரக் கரை யோரமா ஆளுக்கொரு குடிசை போட்டுக்கிட்டு எங்க தொழிலைச் செஞ்சிக்கிட்டு இருந்தோம். அந்தக் குடிசை இருக்கிறது சமுத்திரக்

கரையின் அழகைக் கெடுக்குதாம். அதுக்காவ யாரோ அஞ்சாறு பேர் வந்து எங்க குடிசைகளையெல்லாம் பிரிச்சுப் போட்டுட்டாங்க! நாங்க என்ன செய்வோம், சாமி? எங்களுக்கு இருக்க இடமில்லை.......''

''ஏன், உங்களுக்கெல்லாம் நஷ்ட ஈடு கொடுத்தார்களோ, இல்லையோ!''

''கொடுக்காம என்ன, சாமி! ஆளுக்குப் பத்து ரூவாக் காசு கொடுத்தாங்க.....!''

''பத்து ரூபாய்க் காசு கொடுக்காமல் உங்களுடைய பங்களாக்கள் ஒவ்வொன்றுக்கும் பத்து லட்சமா கொடுப்பார்கள்?''

''பத்து லட்சம் கேட்கலை, சாமி! 'அப்பாடி!'ன்னு படுக்கப் பத்தடி இடந்தான் கேட்கிறோம். அதுக்கு இந்தப் பத்து ரூவாயை வச்சிக்கிட்டு நாங்க என்ன செய்வது, சாமி?''

''அதற்கு என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள். ஊரிலே எந்த எழவு நடந்தாலும் அதற்கு இந்த அன்ன விசாரம்தானா பொறுப்பாளி?-போங்கடா, வேலையைப் பார்த்துக்கொண்டு!'' என்று எரிந்து விழுந்தார் 'ஐயா'.

''அப்படிச் சொல்லிப்பிட்டா எப்படி, சாமி? கோடி வீட்டு ஐயா சொன்னாரு-உங்கக்கிட்ட சொன்னா மேலிடத்திலே சொல்லி எங்களுக்காக ஏதாச்சும் செய்விங்கன்னு!''

''அவனுக்கும் வேலை கிடையாது; உங்களுக்கும் வேலை கிடையாது. நானும் உங்களைப் போலவா இருக்கிறேன்? எனக்கு எவ்வளவோ வேலை இருக்கிறது. நீங்கள் போய்த் தொலையுங்கள்!''

''வேலையோடு வேலையா இந்த ஏழைகளையும் கொஞ்சம் கவனிச்சிக்கிட்டா நீங்க நல்லாயிருப்பீங்க, சாமி!''

''இல்லாவிட்டால் கெட்டு விடுவேனாக்கும்!-அட சனியன்களே! நீங்கள் மட்டுந்தானா ஏழைகள்? நாங்களுந்தான் ஏழைகள்!-முதலில் நீங்கள் இங்கிருந்து நடையைக் கட்டுங்கள்; அப்புறம் நான் உங்களைக் கவனித்துக் கொள்கிறேன்!'' என்று சொல்லிவிட்டுக் கதவைப் 'படா' ரென்று சாத்திக் கொண்டு 'ஐயா' உள்ளே சென்று விட்டார்.

* * *

ஸ்ரீமான் அன்னவிசாரம் எம். எல். ஏ. ஒரு காலத்தில் வேலை கிடைக்காமல் அலைந்து கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அவர் தம்முடைய மனைவியை மாமனார் வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டு, வேறு வழியின்றி நகரிலிருந்த சேவாசிரமத்தில் சேர்ந்தார். அந்த ஆசிரமத்தில் அவருக்கு மாதா மாதம் ரூபாய் ஐம்பது சம்பளம் கிடைத்து வந்தது. அதை அவர் வெளியே சொல்லிக் கொள்வதில்லை. அப்படிச் சொல்லிக் கொள்வது தம்முடைய தொண்டுக்குத் தாமே மாசு கற்பித்துக் கொள்வதாகுமென்று அவர் நினைத்தார்.

அந்த ஆசிரமத்தில் பொதுஜனச் செல்வாக்குள்ள ஒரு நண்பரின் சிநேகம் ஸ்ரீ அன்னவிசாரத்துக்குக் கிடைத்தது. நண்பர் நல்ல பேச்சாளர்; அடிக்கடி பல பொதுக் கூட்டங்களில் பங்கெடுத்துக் கொள்வார். அவர் சமயம் வாய்க்கும் போதெல்லாம் ஸ்ரீ அன்னவிசாரத்தைப் பற்றிச் சக்கைப் போடு போட்டு வந்தார். ஸ்ரீ அன்னவிசாரத்தின் தன்னல மற்ற சேவையைப் பற்றியும், தேசத்துக்காக அவர் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்திருப்பதைப் பற்றியும் அந்த நண்பர் சாங்கோபாங்கமாக எடுத்துச் சொல்லி வந்தார்.

இந்த விஷயத்தில் ஸ்ரீ அன்னவிசாரத்துக்கு மட்டும் அடிக்கடி சந்தேகம் வந்துவிடும். அவ்வாறு சந்தேகம் வரும் போதெல்லாம் அவர் தம் உடலை ஒரு முறை தடவிப் பார்த்துக் கொள்வார்; அது என்றும் இருப்பது போல் வாடாமல் வதங்காமல் இருக்கும். அதற்குள் 'ஆவி இருக்கிறதா?' என்று தெரிய வேண்டாமா? அதற்காக ஒரு முறை அவர் தம் அங்க அவயங்களையெல்லாம் அசைத்துப் பார்த்துக் கொள்வார்; அதன் மூலம் ஆவியும் இருப்பதாகத் தெரிய வரும். பொருளைத்தான் அவர் பார்ப்பதேயில்லை. ஏனெனில், அதுதான் அவரிடம் கிடையவே கிடையாதே!

இருப்பதைச் சொல்லட்டும், இல்லாததைச் சொல்லட்டும்-அந்தப் பக்கத்து ஜனங்கள் அதைப் பற்றி ஒன்றும் கவலைப்படுவதேயில்லை. இத்தகைய மகாஜனங்களின் அசட்டுத்தனத்தினாலும், நண்பருடைய பிரசார பலத்தினாலும் ஸ்ரீ அன்னவிசாரம் எம்.எல்.ஏ. ஆனார். கனம் அங்கத்தினரானதும் ஸ்ரீ அன்னவிசாரத்தின் கவலை ஒருவாறு தீர்ந்தது. மாமனார் வீட்டிலிருந்த தம்முடைய மனைவியை அழைத்துக் கொண்டதோடு, இன்னொரு

மாதரசியையும் காதலித்து இரகசியமாக மறு விவாகம் செய்து கொண்டார்!

'பொதுஜனப் பிரதிநிதி' என்ற ஒரே ஒரு காரணத்துக்காக, அவருடைய 'சிக்கலான வாழ்க்கை'யைச் சிலர் இன்னும் சிக்கலாக ஆக்கி வந்தனர். அவர்களைச் சேர்ந்தவர்கள்தான் அந்தச் செம்படவர்களும். அந்தத் 'தரித்திர'ங்களை அனுப்பிவிட்டு உள்ளே வந்த ஸ்ரீ அன்னவிசாரத்துக்கு ஒன்றுமே ஓடவில்லை.

அவருக்கு எதிரே பிரெஞ்சு அறிஞனான ரூஸ்ஸோவின் புத்தகமொன்று கிடந்தது. ஒரு காரணமுமில்லாமல் அதை எடுத்துப் புரட்டினார். அரசியல் நிர்வாகிகளைப் பற்றி அந்த மேதை எழுதியிருந்த ஒரு விஷயம் அவருடைய கவனத்தைக் கவர்ந்தது!

'அரசியலை நிர்வகிக்கும் ஒவ்வொரு அதிகாரிக்கும் மூன்று வித மனப்பான்மைகள் இருக்கின்றன. முதலாவது, அவனுடைய சொந்த மனப்பான்மை, இது சுயநலத்தை நாடுகிறது. இரண்டாவது, ஆளுகின்ற மனப்பான்மை; இது சர்க்கார் நலத்தை நாடுகிறது. மூன்றாவதாகத்தான் மக்களுடைய மனப்பான்மை இருக்கிறது; இது மக்களுடைய நன்மையை நாடுகிறது.

நியாயமும் நேர்மையும் கொண்ட அரசாங்கம் நடைபெற வேண்டுமானால், சர்க்கார் நிர்வாகிகள் முதலாவது மனப்பான்மையைக் கைவிட வேண்டும். அதாவது, அவர்கள் சுயநலத்தைக் கருதக் கூடாது. இரண்டாவது மனப்பான்மை ஓர் அளவுடன் இருக்க வேண்டும். அதாவது, சர்க்காருடைய நன்மையைக் கவனிக்க வேண்டுமென்றாலும் அதுவே முக்கியமானதா யிருக்கக் கூடாது. மூன்றாவது மனப்பான்மையைத் தான் அவர்கள் முதன்மையானதாகக் கொள்ள வேண்டும். அதாவது, மக்களுடைய நன்மையை முக்கியமாகக் கொண்டு, அந்த நன்மையின் மூலமாக மற்ற இரண்டு நன்மைகளையும் அடையப் பார்க்க வேண்டும். இந்த முறையை விட்டுவிட்டு, முதல் இரண்டு நன்மைகளின் மூலமாக மக்களுடைய நன்மையை நாடவே கூடாது.'

இந்த 'அரசியல் சித்தாந்தம்' ஸ்ரீ அன்னவிசாரத்தை என்னவோ செய்தது. புத்தகத்தை மூடி வீசி எறிந்துவிட்டு எழுந்தார். எதிரே சகதர்மிணி காப்பியுடன் வந்து நின்றாள். அதை அலட்சியமாக வாங்கி ஒரே மூச்சில் குடித்துவிட்டு, அவசர அவசரமாகச் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டார். இன்று சட்ட சபையில் அந்த 'அசல்

தரித்திரங்'களைப் பற்றி எப்படியாவது வெளுத்து வாங்கி விடுவது என்றும், ரூஸ்ஸோவின் கூற்றைப் பொய்யாக்கி, மூன்றாவது மனப்பான்மையான மக்கள் மனப்பான்மையை இனி முதல் மனப்பான்மையாகக் கொள்வதென்றும் தீர்மானித்துக் கொண்டு கிளம்பினார்.

என்றுமில்லாத விதமாக அன்று ஸ்ரீ அன்ன விசாரத்தைக் கண்டதும் மற்ற எம். எல். ஏ.க்கள் எல்லோரும் முகமலர்ச்சியுடன் வரவேற்றனர். ஸ்ரீ அன்னவிசாரம் ஒன்றும் புரியாமல் அவர்களைப் பார்த்து விழித்தது விழித்தபடி நின்றார்.

''அன்னவிசாரத்துக்கு என்ன அப்பா! அடிக்கிறது யோகம்!'' என்றார் ஒருவர்.

''இனிமேல் நம்மையெல்லாம் அவர் எங்கே கவனிக்கப்போகிறார்!'' என்றார் இன்னொருவர்.

''எப்பொழுதாவது ஒரு சமயம் பேட்டியாவது அளிப்பாரோ, என்னமோ!'' என்றார் மற்றும் ஒருவர்.

ஸ்ரீ அன்னவிசாரத்துக்கு ஒன்றும் தெரியாதா! நீரும் ஒரு மந்திரியாகப் போகிறீர் ஐயா, மந்திரியாகப் போகிறீர்!'' என்றார் ஒருவர்.

தூக்கி வாரிப் போட்டது ஸ்ரீ அன்னவிசாரத்துக்கு! இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, 'இதென்ன பிதற்றல்! எந்த இலாக்காவும் காலியாக இருப்பதாகக் கூடத் தெரியவில்லையே!'' என்றார் அவர்.

''இலாக்கா காலியாக இல்லாவிட்டால் என்ன? நீர் 'இலாக்கா இல்லாத மந்திரி'யாக இருந்து விட்டுப் போகிறீர்!'' என்றார் ஒரு வயிற்றெரிச்சல்காரர்.

இப்பொழுதுதான் இந்த விஷயத்தில் ஏதோ உண்மை இருக்க வேண்டுமென்று தோன்றிற்று ஸ்ரீ அன்னவிசாரத்துக்கு. உடனே அவருடைய கவனம் 'அசல் தரித்திரங்'களின் மீது சென்றது.

'இந்தச் சமயத்தில் அந்த 'அசல் தரித்திரங்களைப் பற்றி நாம் இங்கே ஏதாவது உளறுவானேன்? சமுத்திரக்கரை அழகாக இருக்கவேண்டு மென்பது நகரத்துப் பெரிய மனிதர்கள், பிரமுகர்கள் ஆகியவர்களின் அபிப்பிராயம். அவர்களுடைய விருப்பத்துக்கு இணங்கிக் காரியம் செய்வது அரசாங்கத்துக்கு நல்லதா, அந்தத் தரித்திரங்களுடைய விருப்பத்துக்கு இணங்கிக் காரியம் செய்வது

நல்லதா?- சீ, வேண்டாம்; வேண்டவே வேண்டாம். என்ன இருந்தாலும் நம்முடைய புத்தி இப்படிக் கீழே போக வேண்டாம். நாளுக்கு நாள் முன்னேற வேண்டிய நாம், அப்படி ஏதாவது இப்போது கேட்டு வைத்தால் அது சிலருக்கு பிடிக்கும்; சிலருக்குப் பிடிக்காது. அதன் பயனாக ஒரு வேளை மந்திரிப் பதவி கிடைக்காமலே போனாலும் போய்விடலாம். நமக்கு எதற்கு வீண் வம்பு? 'எடுத்ததற்கெல்லாம் கையைத் தூக்கி னோம், வீட்டுக்குப் போனோம்' என்று இருப்பதே மேல்!''

இந்தத் தீர்மானத்துக்கு வந்ததும் ஸ்ரீ அன்ன விசாரம் 'அசல் தரித்திரங்க'ளைப் பற்றிய விசாரத்தை விட்டார். சட்ட சபையில் 'சிவனே!' என்று உட்கார்ந்து கொண்டிருந்து விட்டு, வீடு திரும்பினார்.

அன்றிரவு அவருக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. காரணம், அவருடைய மனம் 'மந்திரியின் மகாத்மிய'த்திலேயே லயித்து விட்டதுதான்!

*          *          *

மறுநாள் காலை ஸ்ரீ அன்னவிசாரம் படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்கும், அந்த 'அசல் தரித்திரங்க'ளில் ஒன்று வந்து ஜன்னல் வழியே தலையை நீட்டுவதற்கும் சரியாயிருந்தது.

''யாரடா, அது?''

''நான் தான் குப்பனுங்க!''

''குப்பனா!''

''ஆமாங்க, நேத்து வந்து குடிசையைப் பிரிச்சுப், போட்டுட்டாங்கன்னு முறையிட்டுக்கிட்டோ மில்லே, அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவனுங்க!''

''ஓஹோ! இப்போது ஏன் இங்கே வந்தாய்?''

''மேலிடத்தில் எங்களைப் பற்றி ஏதாச்சும் சொன்னீங்களான்னு கேட்கத்தான் வந்தேனுங்க!''

''மேலிடம் என்னடா மேலிடம்! எனக்கு மூளைகீளை ஒன்றும் கிடையாதா? நாலு பேருக்கு நல்ல தென்று எண்ணி ஒரு காரியம் செய்தால், அது ஒரிருவருக்குக் கெடுதலாகவும் முடியுந்தான்! அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா, என்ன?-போ, போ!''

''என்ன சாமி, இப்படிச் சொல்றீங்க? 'நீங்க எங்க பிரதிநிதி, எங்க பக்கமாப் பேசத்தான் மேலிடத்துக்குப் போயிருக்கீங்க'ன்னு கோடி வீட்டு ஐயா சொன்னாரே! உங்க பேச்சைப் பார்த்தா நீங்க 'யாருக்குப் பிரதிநிதி'ன்னு தெரியலைங்களே!'' என்றான் குப்பன் வியப்புடன்.

அவ்வளவுதான்; ஸ்ரீமான் அன்னவிசாரத்துக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்துவிட்டது. அவர் படுக்கையை விட்டுத் 'தடா'லென்று கீழே குதித்தார். குப்பனுக்கு நேராகச் சென்று ஜன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டு, ''அடேய், அதிகப் பிரசங்கி! நான் யாருக்குப் பிரதிநிதி என்றா கேட்கிறாய்? சொல்கிறேன், கேட்டுக் கொள்; நான் எனக்குப் பிரதிநிதி; என் மனைவிக்குப் பிரதிநிதி, என் மக்களுக்குப் பிரதிநிதி; என் வீட்டுக்குப் பிரதிநிதி! உனக்குப் பிரதிநிதி இல்லை; உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் பிரதிநிதி இல்லை, போ!'' என்று கத்தி விட்டுக் குளிக்கும் அறையை நோக்கி 'மந்திரி நடை' நடந்து சென்றார்.

''அப்படிப் போடுங்கள், ஒரு போடு! அடுத்த 'எலெக்ஷன்' வரும் வரைதான் நமக்குக் கவலையில்லையே!'' என்று தன் பதி சொன்னதை அப்படியே ஆமோதித்தாள் அவருடைய சதி.

# காரியவாதி

விருத்தாசலம் பாயில் படுத்துப் பத்துப் பதினைந்து நாட்களாகிவிட்டன. இதன் காரணமாக அவனுடைய மனைவியான பொன்னி கண்ணயர்ந்து ஒரு வார காலமாகி விட்டது. இந்த நிலையில் எந்த நேரமும் ''என்னுடைய வயிற்றுக்கு வழி என்ன?'' என்று அவர்களைப் பிய்த்துப் பிடுங்கிக் கொண்டிருந்தது ஒரு குழந்தை.

இவர்களுக்கெல்லாம் கார்டியனாக இருந்தது ஒரே ஒரு கறவை மாடு. எஜமானும் எஜமானியும் தன்னை எத்தனை நாளைக்குத்தான் பட்டினி கிடக்கச் செய்தாலும், அது இயற்கையாகக் கிடைக்கும் புல் பூண்டுகள் மேய்ந்து விட்டு வந்து, வேளைக்கு உழக்குப் பாலையாவது கறந்து விடும். அந்தப் பாலிலிருந்து ஒரு பாலாடைகூடத் தன்னுடைய குழந்தைக் கென்று எடுத்துக் கொள்ள மாட்டாள் பொன்னி. ''அதற்கென்ன கேடு! கத்தும்போது கொஞ்சம் சர்க்கரைத் தண்ணீரை ஊற்றி வைத்தால் போச்சு!'' என்பது அவளுடைய எண்ணம்.

ஏன் தெரியுமா? விருத்தாசலம் பாயில் படுத்து விட்ட பிறகு அவர்களுடைய பிழைப்பே அந்தப் பாலில்தான் இருந்தது. அந்த உழக்குப் பாலுடன் அவள் பாவ புண்ணியத்தைக் கூடக் கவனிக்காமல் கொஞ்சம் தண்ணீரைச் சேர்த்து வீடு வீடாகச் சென்று விற்றுவிட்டு வருவாள் அப்படிச் செய்தால்தான் அவர்கள் தங்களுடைய வயிற்றுக் கவலையை ஒருவாறாவது தீர்த்துக் கொள்ள முடிந்தது. நியாயந்தானே? வயிற்றுக் கவலை இன்னதென்று அறியாதவர்களே பாவ புண்ணியத்தைப் பற்றிக் கவலைப்படாமலிருக்கும் பொழுது, பொன்னியைப் போன்றவர்கள் கவலைப்பட முடியுமா?

நோயின் வேகம் எவ்வளவுதான் அதிகரித்த போதிலும் 'சுக்குக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை; சுப்ரமணியனுக்கு மிஞ்சிய தெய்வமும் இல்லை' என்னும் பழமொழியில் தான் வைத்திருந்த நம்பிக்கையைக் கடைசி வரையில் இழக்காமலே இருந்தான் விருத்தாசலம். அவனுடைய நிலையில், அவற்றைத் தவிர வேறு எதில்தான் அவன் நம்பிக்கை வைக்க முடியும்? கடைசியில் சுக்கும் அவனைக் காப்பாற்றவில்லை; சுப்ரமணியக் கடவுளும் காப்பாற்றவில்லை. நினைத்த போது எதிரே வந்து நின்றதற்காக எத்தனையோ பெரியோர்கள், ''அப்பா! உனக்கு ஆயுசு நூறு!'' என்று விருத்தாசலத்தை வாழ்த்தியிருந்தார்களே, அவர்களுடைய வாக்கும்

ஓரளவாவது பலிக்கவில்லை. முப்பதாவது வயதிலேயே அவனுடைய மூச்சு நின்றுவிட்டது.

பொன்னி புலம்பினாள்; ஓய்ந்தாள்.

* * *

**பி**றந்தகத்தில் பொன்னிக்கு அண்ணா ஒருவனும் அவனுடைய மனைவி மக்களும் இருந்தனர். சொத்து சுமாராக இருக்கத்தான் இருந்தது. பெற்றோர்கள் சம்பாதித்ததுதான். இருந்தும் என்னத்தைச் செய்ய?- பொன்னிதான் பெண்ணாச்சே! அவள் ஆணாய்ப் பிறந்திருந்தாலும், ''அடேய்! எனக்கும் பாகம் பிரித்துக் கொடு!'' என்று மல்லுக்கு நின்றிருக்கலாம். பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு அந்த உரிமை ஏது?

விருத்தாசலம் அவளுக்காக வைத்து விட்டுச் சென்ற சொத்துக்களோ மூன்று வகையானவை; ஒன்று, கூலி வேலை; இரண்டாவது, ஒரு கைக் குழந்தை; மூன்றாவது; ஓர் எருமை மாடு!

கூலி வேலை கிடைத்தால் உண்டு; குழந்தை குடிக்கப் பாலின்றி வளர்ந்தால் உண்டு; எருமை.....?

ஆமாம்; ஆண்டவனைவிட அந்த எருமைதான் இப்போது அவளுக்கு ஆறுதல் அளிக்கக் கூடியதாயிருந்தது. அந்த ஆறுதலும் நெடுநாள் நீடிக்கவில்லை. ஆறு மாதங்களுக்கெல்லாம் அந்த எருமை கருவுற்று விட்டது.

அப்புறம் என்ன? இருக்கும்போது பொன்னியின் வீட்டு அடுப்பு எரிந்தது; இல்லாதபோது அணைந்து கிடந்தது.

அருகில் இருந்தவர்களில் ஒருத்தி ஒரு நாள் பொன்னியை நோக்கி, ''ஏன் பொன்னி! இப்படியே இருந்தா எப்படி. அந்த எருமையை யாருக்காச்சும் வித்துப்பிட்டுப் பணத்தை எடுத்துக்கிட்டுப் பேசாம உங்க அண்ணாச்சி வீட்டுக்காச்சும் போய்ச் சேருவதுதானே?'' என்று கேட்டாள்.

''நல்லாச் சொன்னே! 'உள்ளதும் போச்சு நொள்ளைக் கண்ணா!'ன்னு ஆவதற்கா? அந்தப் பணம் இருக்கிறவரைக்கும் அவன், 'இங்கே வா, தங்கச்சி! அங்கே வா, தங்கச்சி'ன்னு சொல்லிக்கிட்டு இருப்பான். அப்புறம் 'அவன் யாரோ, நான் யாரோ' தானே?''

''என்னடி, அப்படிச் சொல்றே? அந்த வீட்டிலே உனக்கில்லாத அதிகாரம் வேறே யாருக்கு இருக்குங்கிறேன்!''

''ஆமாம். கள்ளங்கபடு இல்லாத அந்தக் காலத்திலேயே அண்ணாச்சி வீட்டுக்குப் போன நல்லதங்காளின் கதி என்ன ஆச்சு?''

''அவள் வகை கெட்டவ, அதனாலே அவளுக்கு அந்த கதி! நீ போய் அடிச்சுப் பிடிச்சு, அந்த வீட்டிலே அதிகாரம் பண்ணப் பார்க்கணும்....''

''அதுக்கென்ன, அடுத்த வீட்டுக்காரிக்குப் புத்தி சொல்றதுன்னா யாருக்கும் சுலபமாகத்தான் இருக்கும். நான் உன்னை ஒண்ணு கேட்கிறேன் - நீ கோவிச்சுக்குவியா?''

''என்ன, கேளேன்?''

''உன் புருசனுடைய தங்கச்சி, அடிச்சுப் பிடிச்சு உன்னை அதிகாரம் பண்ண ஆரம்பிச்சா நீ சும்மா இருப்பாயா?''

''நீ போடி, அம்மா! நான் அவ்வளவு தூரத்துக்கு வரலே. என்னமோ நல்லதைச் சொல்ல வந்தா. அதுக்காக என்னை இப்படிக் குத்திக் கேட்கிறே?'' என்று 'சட்'டென்று எழுந்து போய் விட்டாள் அவள்.

அதற்குமேல்தான் அவள் என்னத்தைச் சொல்வது? என்னமோ 'ஊருக்கு உபதேசம்' செய்யும் சில சீர்திருத்த வாதிகளைப் போல அவளும் பேசிப் பார்த்தாள். கடைசியில், அவள் அப்படித் திருப்பிக் கேட்பாள் என்று எதிர் பார்த்தாளா?

எந்த விதத்திலும் தங்களுடைய சுயநலத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் திருக்கூட்டத்தில் இரண்டு விதம் உண்டு. ஒன்று, பிறரைப் பகைத்துக் கொண்டு தன்னுடைய சுயநலத்தைக் காப்பாற்றிக் கொள்ளும்; இன்னொன்று, பிறரைப் பகைத்துக் கொள்ளாமலேயே தன்னுடைய சுயநலத்தைக் காப்பாற்றிக் கொள்ளும்.

இரண்டாவதாகக் குறிப்பிட்ட கோஷ்டியைச் சேர்ந்தவன் பொன்னியின் அண்ணன். விருத்தாசலத்தின் இறுதிச் சடங்கின்போது வந்திருந்த அவன் போகும்போது பொன்னியை நோக்கிச் சொன்னான்:

''அம்மா! உன் மனசு இப்போ என்னவெல்லாமோ நெனைக்கும். 'அண்ணன் இருக்கச்சே நமக்கு என்ன பயம்!' என்று கூடத்தோணும்.

நெசந்தான் அம்மா, நெசந்தான்! ஆனா, உலகத்திலே அண்ணன்தான் நல்லவனா யிருக்க முடியுமே ஒழிய, அவனுக்கு வந்தவகூட நல்லவளாயிருக்க முடியுமா? நீயே யோசித்துப் பாரு!-அதுதான் நான் சொல்றேன்; என்னமோ கடவுள் கொடுத்த கையையும் காலையும் வச்சுக்கிட்டு நீபாட்டுக்கு இருக்கிறதுதான் நல்லது. உன்னுடைய அண்ணன் தொல்லை தொந்தரவு இல்லாமல் இன்னும் கொஞ்ச நாளைக்கு உலகத்திலே இருக்கணும்னா அப்படிச் செய்; இல்லேன்னா வேணாம்!''

இதற்குப் பொன்னி என்ன மறுமொழி சொல்வாள்? ''அப்படியே ஆகட்டும், அண்ணாச்சி'' என்றாள்.

அவன் போய்விட்டான். பேதை பொன்னி அந்தக் கறவை மாட்டையே கடைசி வரை நம்பினாள். அது கருவுற்றபோதும், ''இன்னும் பத்து மாதம் பல்லைக் கடித்துக் கொண்டு தள்ளி விடுவோம்'' என்று ஆறுதல் அடைந்தாள்.

* * *

**நா**ட்கள் ஓடிக் கொண்டிருந்தன. பத்தாவது மாதமும் பிறந்தது, அந்த மாட்டுக்கு!-''அப்பாடி!'' என்று பெரு மூச்சு விட்டாள் பொன்னி.

''அந்த நாள் என்று வரும், அந்த நாள் என்று வரும்?'' என்று அவளுடைய உள்ளம் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தது. கடைசியில் அந்த நாளும் ஒரு நாள் வரத்தான் வந்தது. ''என்ன ஆகுமோ?'' என்று அவள் ஏங்கினாள். நல்ல வேளை! அவளுடைய ஏக்கம் துக்கத்தில் முடியவில்லை; எருமை ஈன்றது.

பொன்னிக்கு மட்டில்லாத மகிழ்ச்சி! பொழுது புலர்ந்ததும் புல்லினங்கள் அடையும் ஆனந்தத்தை அவள் அடைந்தாள். அவளுடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் ஒரு புது அத்தியாயம் ஆரம்பமாயிற்று.

''தினந்தோறும் ''பாலோ, பாலு!''-''தயிரோ, தயிரு!''-''மோரோ, மோரு!''-''நெய் வாங்கலையா, நெய்!'' என்று வேளைக்கு வேளை அந்தக் கிராமத்தின் எட்டுத் திக்கும் எதிரொலி செய்ய இரைந்து விற்றுவிட்டு வந்தாள்.

நாளடைவில் ஒரு எருமை இரண்டு எருமைகளாகி, இரண்டு மூன்றாகி, மூன்று நான்காகவே ஆகிவிட்டன. காதில் அணிந்திருந்த

சிவப்பு ஓலைச் சுருள்கள் கெம்புக் கற்கள் பதித்த கம்மல்களாக மாறின. மூக்கில் செருகியிருந்த விளக்குமாற்றுக் குச்சி ஜொலிக்கும் ஒற்றைக் கல் பதித்த மூக்குத் திருகாணியாயிற்று. கைகளை அலங்கரித்துக் கொண்டிருந்த பித்தளைக் காப்புகள் 'தகதக'வென்று மின்னும் தங்கக் காப்புகளாக ஜன்ம மெடுத்தன.

இப்பொழுதெல்லாம் அவள் தன்னுடைய குழந்தை கத்தும்போது, ''அதற்கென்ன கேடு! கொஞ்சம் சர்க்கரைத் தண்ணீரை ஊற்றி வைத்தால் போச்சு!'' என்று எண்ணுவதில்லை; ''அவனுக்கு இல்லாத பாலா! அவன் குடித்து மீந்த பாலை விற்றால் போச்சு!'' என்று நினைத்தாள்.

*       *       *

இந்த இரண்டு வருட காலமும் ஒரு நாளாவது பொன்னியின் வீட்டுப் பக்கமே எட்டிப் பார்க்காத அவளுடைய அண்ணன், திடீரென்று ஒரு நாள் அவளைத் தேடி வந்தான். அப்படி வரும்போது அவன் சும்மா வரவில்லை; ஒரு அழகான காரணத்தையும் சொல்லிக் கொண்டு வந்தான்.

''பொன்னி! இந்த மனசு இருக்குதே, இது ரொம்ப ரொம்பப் பொல்லாதது! எத்தனை நாளா உன்னைப் பார்க்கணும், பார்க்கணும்னு அது அடிச்சிக்கிட்டு இருந்தது, தெரியுமா? எங்கே, வேலை ஒஞ்சாத்தானே! அதில்லாம எத்தனையோ தொல்லை, தொந்தரவுங்க! வீட்டுக் கூரை பொத்தலாப் போச்சு! வரப்போறது மழைக் காலம். அதைப் பிரிச்சுக் கட்டறதுண்ணா இப்போ ஐம்பது ரூபாயாச்சும் வேணும். உழவுமாடு ரெண்டும் திடீர்னு 'சீக்கு' வந்து செத்துப் போச்சு; திரும்ப வாங்கிறதுன்னா இருநூறு ரூபாயாச்சும் ஆவும். ஆடித் தூறல் தூறுது, நாலு கலம் விதை நெல்லு வாங்கி விதைக்கலாம்னா கையிலே காசில்லே! -உம், அப்படியெல்லாம் இருக்குது, என் கஷ்டம்! இங்கே வந்து உன்னுடைய கஷ்டத்தையும் பார்த்து ஏன் இன்னும் கஷ்டப்படணும்னுதான் நான் இத்தனை நாளா இங்கே வரலே, தங்கச்சி!'' என்று ஒரே 'கஷ்ட'மாகச் சொல்லிக் கொண்டே போனான் அவன்.

''ஊம்'' என்று விஷமத்தனத்துடன் புன்னகை புரிந்தாள் பொன்னி.

அடுத்தாற்போல் அந்த ''நாலு பேர்'' இருக்கிறார்களே, நன்மைக்கும் தீமைக்கும் - அவர்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டு விட்டான் அண்ணன்!

''அம்மா! எத்தனை கஷ்டங்கள் எனக்கு இருந்தாலும் இனிமே உன்னுடைய கஷ்டத்தைப் பார்த்துக்கிட்டு என்னாலே ஒரு நிமிசம்கூடச் சும்மா இருக்க முடியாது. 'நாலு பேரு' சொல்றது என் காதிலே நாராசமா விழறது...!''

''ஐயோ! அப்படி என்ன அபாண்டம் சொன்னாங்க, அண்ணாச்சி?''

''வேறே என்ன சொல்லுவாங்க, தங்கச்சி! 'என்ன இருந்தாலும் ஒரு அறியாத பொண்ணு; சின்னஞ் சிறிசு; அறுத்துப் போட்டவ; ஊரிலே இருக்கிற தடியன்களுக்கு மத்தியிலே ஒண்டியாயிருக்கலாமா?''ன்னு அவங்க கேட்கிறாங்க. அதை என்னாலே காது கொடுத்துக் கேட்க முடியலே. 'அறுத்தவ ஆத்தா வீட்டிலே' என்று பெரிய வங்க சொல்லுவாங்க; அதன்படி நீ என் வீட்டிலே வந்து இருக்கிறதுதான் நல்லது. என்ன, நான் சொல்றது?''

அன்று கடவுள் கொடுத்த கையையும் காலையும் நம்பி வாழச் சொன்ன அண்ணன், இன்று ஏன் இப்படிச் சொல்கிறான்? பொன்னிக்கு விஷயம் புரியாமல் போகவில்லை. அவள்'களுக்'கென்று சிரித்து விட்டாள்.

'அண்ணாச்சி'யின் முகம் சுண்டி விட்டது. ''ஏனம்மா, சிரிக்கிறே?'' என்று கேட்டான், எதையோ பறிகொடுத்தவன் போல.

''ஒண்ணுமில்லை, அண்ணாச்சி! என்ன இருந்தாலும் கடவுள் கொடுத்த கையையும் காலையும் வச்சிக்கிட்டு, நான் பாட்டுக்கு இருக்கிறதுதான் நல்லது. அண்ணாச்சி! இன்னும் கொஞ்ச நாளைக்கு நீ தொல்லை, தொந்தரவு இல்லாமல் இருக்க வேணாமா?'' என்றாள் பொன்னி.

அவள் அவ்வாறு சொல்லி வாய்மூடியதுதான் தாமதம், அவன் தன்னுடைய 'வேஷத்தைக் கலைத்தான். ''ஓஹோ! அம்மட்டுத் தூரத்துக்கு வந்துட்டியா?-இனிமே உன் வீட்டு வாசல்லே காலை வச்சா ஜோட்டை எடுத்துக்கோ!'' என்று வீராப்புடன் சொல்லிக் கொண்டே, துண்டை உதறித் தோளின் மேல் போட்டுக் கொண்டு எழுந்தான்.

அந்தக் காரியவாதி எதிர்பார்த்தபடி, பொன்னி அவனுடைய காலில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொள்ளவில்லை!

# நடக்காத கதை

''காத்தாயி! அந்தப் பக்கிரிப் பயல் போற 'மிடுக்' கைப் பார்த்தியா? மானத்தைப் பார்த்துக்கிட்டு இல்லே அவன் நடக்கிறான்? என்னதான் வாழ்வு வந்தாலும் இப்படியா?'' என்று அதிசயித்தவண்ணம், கையிலிருந்த புகையிலையிலிருந்து கொஞ்சம் திருகி எடுத்து வாய்க்குள் திணித்துக்கொண்டான் கண்ணுச்சாமி.

வீட்டுக்குள் ஏதோ வேலையாயிருந்த காத்தாயி வெளியே வந்து பார்த்தாள். பக்கிரி ராணுவ உடையுடன் 'கவாத்து நடை' நடந்து சென்று கொண்டிருந்தான். ''ஆமாம், சண்டைக்குப் போய் வந்த சூரர் இல்லே; அப்படித்தான் நடப்பாரு!'' என்றாள் காத்தாயி.

''ஊம்....இவன் சண்டைக்குப் போய் என்னத்தைக் கிழிச்சிப்பிட்டான்? அங்கே இந்த வெள்ளைக்கார சோல் ஜருங்க இருக்கானுங்க பாரு, அவனுங்க பூட்ஸைக் கீட்ஸைத் தொடைச்சுக்கிட்டு இருந்திருப்பான்!''

''நல்லாச் சொன்னே! இருட்டிலே ஈச்ச மரத்தைக் கண்டா, 'ஐயோ, பிசாசு!'ன்னு அவன் அலறிக்கிட்டு ஓடுவானே!''

''அதுக்கில்லை காத்தாயி, நான் சொல்றது! மனிசன் முன்னே பின்னை இருந்ததைக் கொஞ்சமாச்சும் நினைச்சுப் பார்க்க வேணாம்?-அந்தப் பயல் சண்டைக்குப் போறதுக்கு முந்தி நம்மைத் தேடி நம்ம வீட்டுக்கு வந்து ஒரு நாளாவது பேசிவிட்டுப் போகாமல் இருந்திருப்பானா?-நீயே சொல்லு!

''ஐயோ! அதை ஏன் கேட்கிறே? இவன்தான் இப்படின்னா, இவன் பெண்டாட்டியிருக்காளே பெரியாத்தா, அவளுக்கு எம்மா 'ராங்கி'ங்கிறே? தீவாளிக்கு ஒரு பட்டுப் புடவை வாங்கிக் கொடுத்துட்டாலும் கொடுத்துட்டான், அவள் என்னமா ஓடிஞ்சி போறாங்கிறே?-அன்னிக்கு எதுக்கோ அவங்க வீட்டுக்குப் போயிருந்தேன்; நம்ம பையனும் கூட வந்திருந்தான். அவங்க பொண்ணு திண்ணைமேலே வாங்கி வச்சிருந்த பட்டாசுக் கட்டை எடுத்துப் பார்த்துக்கிட்டு இருந்தது. நம்ம பையன் ஓடிப் போய் அந்தப் பெண்ணு கையிலேயிருந்த பட்டாசுக் கட்டை வாங்கிப் பார்த்தான். அதிலே என்ன தப்பு? அதைப் பார்த்ததும் அந்த ராங்கிக்காரி திடுதிடுன்னு என்னமா ஓடி வந்து 'வெடுக்'குன்னு பிடுங்கிக் கிட்டாங்கிறே? - எனக்கு ஆத்திரமா வந்திச்சு. நம்ம பையன் முதுகிலே நாலு அறை அறைஞ்சு உடனே கூட்டியாந்துட்டேன்!''

''அந்த நாய்ங்க வீட்டுக் கெல்லாம் நாம் போகவே படாதுங்கறேன்!-நீ பேசாம இரு; தர்மராஜா கோயில் உற்சவம்தான் நாளையோடு முடிஞ்சுபோவுதே?-இந்தப் பத்து ராத்திரியும் அம்மாம் பெரிய வெளக்கைத் தூக்கிக் கிட்டு நான் ஏன் தர்மராஜா சாமியோடு ஊரையெல்லாம் சுத்திச் சுத்தி வாரேன் தெரியுமா, காத்தாயி?-எல்லாம் உனக்காகத்தான்! தினம் தினம் கூலியைக்கூட வாங்கிக் கொள்ளாம ராவுத்திரை இல்லே சேர்த்து வைக்கச் சொல்லியிருக்கேன்? நாளைத் திருநாள் முடிஞ்சுதுன்னா, நாளன்றைக்குக் காலையிலே இந்தக் கையிலே முழுசா இருவது ரூவா இருக்கும். அப்புறம் நமக்கென்ன குறைவு, காத்தாயி? நம்ம வீட்டிலும் தீபாவளிதான்! அந்தப் பயல் பெண்டாட்டிக்குப் பட்டுப் புடவை எடுத்துக் கொடுத்தாக்கே, நான் உனக்கு ஒரு பருத்திப் புடவையாச்சும் எடுத்துக் கொடுக்கமாட்டேனா?'' என்றான் கண்ணுச்சாமி.

அந்த வருஷம் ஆலங்குடியில் தர்மராஜா கோயில் உற்சவம் ஒரே அல்லோல கல்லோலப் பட்டது. காரணம், யாரோ ஒரு இரும்புக் கடைச் செட்டியார் மேற்படி உற்சவத்தை நடத்தி வைப்பதற்கு ஒப்புக் கொண்டதுதான். அவரைப்பற்றி ஊரில் பலர் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள். ''ஆமாம், அவன் கள்ள மார்க்கெட்டில் கொள்ளையடித்த காசெல்லாம் கரைய வேண்டாமா?'' என்றனர் சிலர். ''பண்ணிய பாவத்துக்கு ஏதாவது பிராயச் சித்தம் செய்ய வேண்டுமோ, இல்லையோ!'' என்றனர் சிலர். யார் எப்படிப் பேசிக்கொண்டாலும் கண்ணுச்சாமியைப் பொறுத்தவரையில் செட்டியார் நல்லவராய்த்தான் இருந்தார். திருவிழாவின்போது 'காஸ் லைட்' கடை அல்லாப் பிச்சை ராவுத்தரிடமிருந்து அவனுக்குத் தினசரி கிடைத்து வந்த இரண்டு ரூபாயைத் தவிர செட்டியாரும் மேற் கொண்டு ஒரு ரூபாய் கொடுத்து வந்தார். கண்ணுச்சாமி, செட்டியார் கொடுத்து வந்த ஒரு ரூபாயை வீட்டுச் செலவுக்கு வைத்துக்கொண்டு, அல்லாப் பிச்சை ராவுத்தரின் இரண்டு ரூபாயை அவரிடமே சேர்த்து வைத்தான். பத்து நாள் திருவிழாவும் முடிந்தபிறகு, அந்த இருபது ரூபாயை மொத்தமாக வாங்கித் தீபாவளி கொண்டாடலாமென்பது அவனுடைய எண்ணம்.

அன்று பத்தாவதுநாள். வழக்கம்போல் இரவு பத்து மணிக்குப் பிறகு சுவாமியின் திருவீதி உலா ஆரம்பமாயிற்று. கண்ணுச்சாமி கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு 'காஸ் லைட்'டைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டான். அவனைப் பின்பற்றி அவனுடன்

வந்தவர்களும், தங்கள் தங்கள் தலையில் விளக்குகளைத் தூக்கி வைத்துக் கொண்டனர். எல்லா விளக்குகளும் அல்லாப் பிச்சை ராவுத்தரின் கடையைச் சேர்ந்தவைதான். இந்த விளக்குத் தூக்கும் வேலையில் கண்ணுச்சாமியும், அவனுடைய நண்பானான முனிசாமியும் 'நிபுணர்கள்' என்று பட்டம் பெற்றவர்கள். ஆகவே, அவர்கள்தான் எல்லோருக்கும் முன்னால் காட்சியளித்தனர்.

வாணவெடிகளும் வாத்திய கோஷங்களும் முழங்க, சுவாமி மாட வீதியைக் கடந்து தேர் வீதிக்குத் திரும்பிற்று.

ஐயோ! இதென்ன? அந்தத் தெரு முனையிலிருந்த எல்லைக் கல்லைக் கண்ணுச்சாமி ஏன் கவனிக்கவில்லை? அவனுடைய கால்கள் ஏன் அந்தக் கல்லுடன் மோதிக் கொண்டன? பாவம், அவன் தொபுகடீரென்று அப்படியா விழ வேண்டும்?

அவன் தலைமேலிருந்த 'காஸ் லைட்....?

ஆயிரமாயிரம் சுக்கல்களாக வேண்டியதுதானே?

அப்படியானால் கழுத்து வலிக்க, கைகள் நோக, கால்கள் கடுக்க, கண்கள் எரிய, வியர்வை துளிர்க்க அவன் விடிய விடிய அந்தப் பத்து நாளும் பாடுபட்டதெல்லாம் வீண்தானா?

நாளைக் காலை பொழுது விடிந்ததும் குழந்தையைத் தூக்கித் தோளின் மேல் வைத்துக் கொண்டு, காத்தாயியுடன் கன குஷியாகக் கடைக்குச் செல்லலாம் என்று இருந்தானே!

இப்போது என்ன செய்வது? எப்படிச் சமாளிப்பது? அல்லாப் பிச்சை ராவுத்தர் இதற்கு என்ன செய்வார்?

சொல்வதென்ன?-இந்தப் பத்து நாளும் விளக்குத் தூக்கிய கூலி இருப்பது ரூபாயும் போக, மீதிக்கு "என்ன வழி?" என்று கேட்பார்.

"அதையும் தங்களிடமே வேலை செய்து தீர்த்து விடுகிறேன்!" என்றுதான் சொல்லித் தொலைக்க வேண்டும்.

அந்தப் பக்கிரிப் பயலின் முன்னால் நம் வீட்டில் தீபாவளி இல்லாமலா இருப்பது? குழந்தை அந்த அற்பப் பயலின் வீட்டுக்குப் போய்த் தூணைக் கட்டிக் கொண்டா நிற்பது?

அட, கடவுளே! உனக்குத்தானே விளக்குத் தூக்கினேன்?-இந்தக் கும்மிருட்டில் உன் திருமுகத்தை எல்லோரும் கண்டு களிக்கட்டும் என்றுதானே விளக்குத் தூக்கினேன்?-அதற்குப் பலன் இதுதானா?

கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் விழுந்து எழுந்த கண்ணுச்சாமியின் மனம் என்னவெல்லாமோ எண்ணி எண்ணி ஏங்கிற்று. அவனுடன் விளக்கைத் தூக்கிக் கொண்டு வந்த யாரும் அவனைக் கவனிக்கவில்லை- முனிசாமி கூடத்தான்!-எப்படிக் கவனிக்க முடியும்? சுவாமி தூக்குபவர்களோ, கஷ்டம் தெரியாமல் இருப்பதற்காக 'ஓ'வென்று ஆரவாரம் செய்து கொண்டு மேலே மேலே போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னாலல்லவா 'காஸ் லைட்' சுமப்பவர்கள் ஓட்டமும் நடையுமாகச் செல்ல வேண்டியிருக்கிறது?

ஆகவே சிறிது நேரத்திற்கெல்லாம் கண்ணுச்சாமி தன்னந்தனியனாகி விட்டான். அந்த நள்ளிரவில் தள்ளாடிய வண்ணம் எழுந்து, அவன் தன் வீட்டை நோக்கி நடந்தான். வாயிலில் கட்டி வைத்திருந்த மூங்கில் தட்டியை அவிழ்த்து அப்பால் வைத்துவிட்டு உள்ளே நுழைந்தான். அரவம் கேட்டு அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்த காத்தாயி, "யார் அது?" என்று அவனை அதட்டிக் கேட்டாள்.

"நான்தான், காத்தாயி!" என்று கண்களில் நீர் மல்கச் சொன்னான் கண்ணுச்சாமி.

"என்ன, இந்த நேரத்திலேயே வந்துட்டே? பொழுது விடிந்தில்லே வருவேன்னு பார்த்தேன்?"

"நானும் அப்படித்தான் நினைச்சுக்கிட்டுப் போனேன். காத்தாயி! அந்தப் பாழும் தெய்வம்....."

"என்ன, என்ன!-ஏன்? என்ன நடந்தது?" என்று படபடப்புடன் கேட்டுக் கொண்டே, கட்டிச் சுருட்டிக் கொண்டு எழுந்து தன் கணவனுடைய தோள்களைப் பற்றினாள் காத்தாயி.

கண்ணுச்சாமி நடந்ததைச் சொன்னான்.

"இதற்கா இப்படி அழுறே? 'அந்தத் தர்ம ராஜா தலையிலே இடி விழ!' என்று நினைச்சுக்கிட்டுப் பேசாம இருக்காம!" என்று சொல்லிக் காத்தாயி அவனைத் தேற்றினாள்.

* * *

பொழுது விடிந்தது. "தன்னுடைய கஷ்டம் விடியுமா?" என்று எண்ணிக் கொண்டே படுக்கையை விட்டு எழுந்தான் கண்ணுச்சாமி, காலைக் கடன்களையெல்லாம் முடித்துக் கொண்டு, கவலையுடன் அல்லாப் பிச்சை ராவுத்தரின் கடையை நெருங்கினான்.

நடுங்கிக் கொண்டே ஒரு புறமாக ஒதுங்கி நின்ற அவனை நோக்கி, ''என்னா பிள்ளை! ஏன் அங்கிட்டு நிக்கறே? -சும்மா இங்கிட்டு வா!'' என்றார் அல்லாப்பிச்சை ராவுத்தர்.

கண்ணுச்சாமி தலையைச் சொறிந்து கொண்டே மெள்ள அவரை நெருங்கி, ''ராத்திரி.....ராத்திரி....ராத்திரி.....'' என்று மேலே ஒன்றும் சொல்ல முடியாமல் மென்று விழுங்கினான்.

''எல்லாம் தெரியும், பிள்ளை! அதுக்கா இப்படி நடுங்கிக் கிட்டு நிக்கிறே?-சே! விட்டுத் தள்ளுங்கிறேன்! உன்னைக் கொண்டு இத்தனை வருஷமா நான் எவ்வளவு பணம் சம்பாதிச்சிருப்பேன்? இப்போ நீ தவறி ஒரு விளக்கை உடைச்சி விட்டதுக்காகவா அந்த நஷ்டத்தை உன் தலையிலே கட்டறது அநியாய மில்லே! நானே உடைச்சி விட்டிருந்தேன்-அப்போ என்ன பண்ணியிருப்பேன், பிள்ளை?-அதே நியாயந்தான் உனக்கும்!'' என்றார் அல்லாப்பிச்சை ராவுத்தர்.

கண்ணுச்சாமிக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''எசமா!....நிசமாகவா எசமான்.....?'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

''ஆமாம் பிள்ளை, ஆமாம்! இந்தா, உன்னுடைய பத்து நாள் கூலி இருபது ரூபாய்!-எடுத்துக்கிட்டுச் சந்தோஷமாய்ப் போய் வா!'' என்று மலர்ந்த முகத்துடன் இருபது ரூபாயை எடுத்து ராவுத்தர் அவனிடம் கொடுத்தார்.

அதைக் கைகூப்பிப் பெற்றுக் கொண்டு கண்ணுச்சாமி வீடு திரும்பினான். அவன் சொன்ன சேதியைக் கேட்ட காத்தாயி, ஏனோ மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்து விட்டாள். சிறிது நேரத்திற்குப் பிறகு மூர்ச்சை தெளிந்து எழுந்த அவளையும், குழந்தையையும் கூட்டிக் கொண்டு கடை வீதிக்குச் சென்றான் கண்ணுச்சாமி. தீபாவளிக்கு வேண்டியவற்றை யெல்லாம் ஒன்று விடாமல் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான்.

மறு நாள் அவர்களுடைய வீட்டில் தீபாவளி ஏக அமர்க்களமாகக் கொண்டாடப்பட்டது. ஆனால் அன்று கிருஷ்ண பரமாத்மா அவர்களுடைய உள்ளத்தில் குடி கொண்டிருக்கவில்லை; அல்லாப்பிச்சை ராவுத்தர்தான் குடி கொண்டிருந்தார்!

# என்ன பாவம் செய்தேன்?

**எ**னக்கு உலகம் இன்னதென்று ஒருவாறு தெரிந்த பிறகு, என் வாழ்க்கையின் முதல் அத்தியாயம் ஆரம்பமாயிற்று. அப்போதுதான் என் தந்தைக்குப் பாரமாயிருப்பதை நான் ஓரளவு உணர்ந்தேன்.

வேலையிலிருந்து வீடு திரும்பியதும், ''ராஜினி, ராஜினி!'' என்று இரைவார் என் அப்பா. அந்தக் குரலில் தேனின் இனிமையும் பாலின் சுவையும் கலந்திருப்பது போல் எனக்குத் தோன்றும்.

அக்கம் பக்கத்து வீடுகளில் என் அன்புக்குகந்த தோழர்-தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருக்கும் நான், அதைக் கேட்டு ஓடோடியும் வருவேன்.

அன்புடன் என் கன்னத்தைக் கிள்ளி, ஆசையுடன் என்னைத் தூக்கிக் கொண்டு, வீட்டுக்குள் நுழைவார் என் அப்பா.

அங்கே விதவிதமான பட்சண வகைகளெல்லாம் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கும். எல்லாம் எனக்கென்று என் அப்பா வாங்கி வந்தவைதான். அவற்றை யெல்லாம் ஒருவாறு தீர்த்துக் கட்டுவதற்கும், ''காப்பி கூடச் சாப்பிடாமல் இத்தனை நாழி எங்கே போயிருந்தாயாம்?'' என்று அம்மா என்னைச் செல்லமாகக் கடிந்த வண்ணம் காப்பி கொண்டு வருவதற்கும் சரியாயிருக்கும். அதையும் குடித்து வைத்த பிறகு, அம்மா என்னைத் தன் மனதுக்குப் பிடித்த மாதிரி அலங்காரம் செய்து வைப்பதில் முனைவாள்.

ஒரு நாளாவது எனக்கென்று ஏதும் செய்து கொள்ள என்னை விடுவதில்லை என் அம்மா. உயிரற்ற என் விளையாட்டுப் பொம்மைகளில் என்னையும் ஒன்றாக அவள் எண்ணி விட்டாளோ என்னமோ! இல்லையென்றால், என் முகத்தை நானே அலம்பிக் கொள்ளக் கூடவா அவள் என்னை விட மாட்டாள்?

அம்மாவின் லட்சணம்தான் இப்படியென்றால், அப்பாவாவது அதற்குக் கொஞ்சம் விரோதமாயிருக்கக் கூடாதோ? அதுவும் இல்லை. அவரிடம் நான் ஏதாவது என்னைப் பற்றிச் சொல்ல வாயெடுத்தால் போதும், ''உனக்கெதற்கு, அந்தக் கவலையெல்லாம்!'' என்று கேட்டு, எல்லாக் கவலைகளையும் தன் தலையிலேயே போட்டுக் கொள்வார்.

''எதற்கும் நான் ஏதாவது ஒரு தொழிலுக்குப் படித்து வைக்கிறேனே, அப்பா!'' என்றால், ''குழந்தையும் குட்டியுமாகக்

குடித்தனம் செய்வதைவிட, வேறு தொழில் உனக்கு என்னத்திற்கு?'' என்று கேட்டு என் வாயை அடக்கி விடுவார்.

யோசித்துப் பார்த்தால், இப்போது நான் கொஞ்ச நஞ்சம் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறேனே, அதுகூட எனக்காக இல்லையென்று தோன்றுகிறது.

வேடிக்கையைத்தான் கேளுங்களேன்:

என்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்காக என் அப்பா பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்த போது, ''இந்தக் காலத்தில படித்த பெண்களின் நடவடிக்கைகளைப் பார்த்தால், நம்ம ராஜினியை ஏன் படிக்க வைக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது!'' என்றாள் அம்மா.

''சில சமயம் எனக்கும் அப்படித்தான் படுகிறது. ஆனால் இந்தக் காலத்துப் பையன்கள்தான், 'பெண்ணுக்குப் படிக்கத் தெரியுமா, பாடத் தெரியுமா, ஆடத் தெரியுமா?' என்றெல்லாம் கேட்க ஆரம்பித்து விட்டார்களே! அதற்காகத்தான் இவளைப் படிக்க வைக்க வேண்டுமென்று பார்க்கிறேன்'' என்றார் அப்பா.

எப்படியிருக்கிறது, கதை? எப்பொழுதோ எவனோ வரப்போகிறானே, அவனுக்காக என்னைப் படிக்க வைக்கப் போகிறார்களாம், எனக்காக, என் வயிற்றை நானே வளர்த்துக் கொள்வதற்காக அவசியமானால் என் உயிரை நானே காப்பாற்றிக் கொள்வதற்காக, வேறொருவர் துணையின்றி நானும் இந்த உலகத்தில் சுயமரியாதையோடு உயிர் வாழ்வதற்காக-அவர்கள் ஒன்றும் செய்ய மாட்டார்களாம்; என்னையும் ஏதாவது செய்து கொள்ள விடமாட்டார்களாமே!

பார்க்கப் போனால், நாளாக ஆக என்னைப்பற்றி அவர்களுக்கு ஒரே ஒரு கவலைதான் மிஞ்சியிருந்தது. அந்தக் கவலை உலக வழக்கத்தை யொட்டித் தாங்கள் கண்ணை மூடுவதற்குள் எனக்குக் கல்யாணத்தைப் பண்ணி வைத்து விட வேண்டு மென்பதுதான்!

அதற்கேற்றாற் போல் அத்தகைய கவலையை அவர்களுக்கு அளிக்கக்கூடிய வயதை நானும் அப்போது அடைந்திருந்தேன். என் உடம்பிலே புதிய தெம்பு, உள்ளத்திலே புதிய உணர்ச்சி, அங்க அவயவங்களிலே புதிய கவர்ச்சி எல்லாம் என்னை வந்து எப்படியோ அடைந்து விட்டன. இந்த மாறுதல் என் தாய் தந்தையர் அதுவரை என்னிடம் காட்டி வந்த அன்பிலும் ஆதரவிலும் கூடத் தலையிட்டது.

முன்போல், ''ராஜினி, ராஜினி!'' என்று அப்பா என்னை அழைக்கும் போது, அந்தக் குரலில் தேனின் இனிமையும் பாலின் சுவையும் கலந்திருப்பது போல் எனக்குத் தோன்றுவதில்லை; விஷமும் விளக்கெண்ணெயும் கலந்திருப்பது போல் தோன்றும்.

''ஏன் அப்பா!'' என்று கேட்டுக் கொண்டே வந்தால் அவர் முன்போல் என் கண்ணத்தை அன்புடன் கிள்ளி, ஆசையுடன் தூக்கிவைத்துக் கொள்வதில்லை. ''போ, உள்ளே! இன்னொரு தரம் அங்கேயெல்லாம் போனாயோ, உன் காலை ஒடித்து விடுவேன்!'' என்று எரிந்து விழுந்தார்.

அவர் மட்டுமா? அம்மாவும், ''காப்பிகூடச் சாப்பிடாமல் இத்தனை நாழி எங்கே போயிருந்தாயாம்?'' என்று முன் போல் என்னைச் செல்லமாகக் கடிந்து கொள்வதில்லை; ''இத்தனை நாழி வெளியே என்னடி வேலை, உனக்கு? பேசாமல் ஒரு மூலையைப் பார்த்துக் கொண்டு உட்காரு? என்பாள், முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க.

''இதென்ன வேடிக்கை! இவர்கள் இப்படி எரிந்து விழும்படியாக நாம் என்ன குற்றம் செய்தோம்?'' என்று ஒன்றும் புரியாமல் நான் 'திரு திரு' வென்று விழிப்பேன்.

என் வாழ்நாட்கள் இப்படியே புரிந்தும் புரியாமலும் சென்று கொண்டிருந்தன. கடைசியில் என் பெற்றோர் கவலையைத் தீர்க்கும் அந்த நாளும் வந்தது. ''இதுவரை உன் பெற்றோர் உன்னைக் காப்பாற்றியது போதும்; இனி மேல் நான் காப்பாற்றுகிறேன், வா!'' என்று சொல்லிக் கொண்டு யாரோ முன் பின் தெரியாத ஒருவன் வந்து என் கரங்களைப் பற்றினான். நானும் அவனைப் பின் தொடர்ந்து சென்றேன்.

தங்கள் கவலை தீர்ந்ததென்று எண்ணியோ என்னமோ, என் பெற்றோர் எனக்குக் கல்யாணமான சில வருடங்களுக்கெல்லாம் ஒருவர் பின் ஒருவராகக் கண்ணை மூடி விட்டார்கள்.

* * *

**என்** வாழ்க்கையின் முதல் அத்தியாயம் முடிந்து, இரண்டாம் அத்தியாயம் ஆரம்பமாயிற்று. அதாவது நேற்று வரை என் தந்தைக்குப் பாரமாயிருந்த நான், இன்று, என் கணவருக்குப் பாரமானேன்.

ஆரம்பத்தில் என் கணவர் என்னிடம் காட்டிய அன்பு, சின்னஞ் சிறு வயதில் என் தகப்பனார் காட்டிய அன்பைக் கூடத் தூக்கியடிப்பதாயிருந்தது. அதைக் கண்டு நான் அடைந்த பெருமைக்கு ஓர் எல்லையே இல்லை. வெறும் புத்தக அனுபவத்தோடு இருந்த எனக்கு அந்த அன்பு அமரத்துவம் வாய்ந்ததென்றே முதலில் தோன்றிற்று, உண்மையில் அவர் என் மீது காதல் கொள்ளவில்லை, என் 'கன்னிப் பருவ'த்தின் மீதுதான் காதல் கொண்டார் என்ற விஷயம் பிறகுதான் எனக்குத் தெரிந்தது.

அந்த நாளில் அவரைக் கண்ட மாத்திரத்தில் என்னை வெட்கம் பிடுங்கித் தின்னும். எதிரே நிற்பதென்றால் என்னவோ மாதிரி இருக்கும்! தப்பித்தவறி அவரிடம் ஒரு வார்த்தை பேசிவிட்டாலோ என் உடம்பே சில்லிட்டுப் போகும்.

அவரோ என்னை நேருக்கு நேராக ஒரு முறையாவது பார்த்துவிட வேண்டு மென்றும், ஒரு வார்த்தையாவது பேசிவிட வேண்டுமென்றும் துடியாய்த் துடிப்பார். ஆடு திருடிய கள்ளனைப் போல் அக்கம் பக்கம் பார்த்து விழித்த வண்ணம், ''ராஜினி, ராஜினி!'' என்று மெல்லிய குரலில் அழைத்துக் கொண்டே, என்னைச் சுற்றிச் சுற்றி வருவார். அவரைக் கடைக்கண்ணால் கவனித்துக் கொண்டே நான் காரியமும் கையுமாக இருப்பேன். ஒரு காரியமும் இல்லாத போதுகூட யாரையாவது கூப்பிட்டு வைத்துக்கொண்டு சாங்கோபாங்கமாகப் பேசிக் கொண்டிருப்பேன்-ஆமாம், அவர் என்னை நெருங்குவதில் எவ்வளவுக்கெவ்வளவு ஏமாற்ற மடைகிறாரோ, அவ்வளவுக்கவ்வளவு அப்போது எனக்கு ஆனந்தமாய்த் தானிருந்தது.

போனால் போகிறதென்று நான் எப்பொழுதாவது அவரிடம் ஒரு வார்த்தை பேசி விட்டால் போதும்; இந்த உலக சாம்ராஜ்யமே தம்முடைய கைக்குக் கிட்டிவிட்டது போல் அவர் ஒரே குதூகலத்தில் ஆழ்ந்து விடுவார்.

இந்த ரஸமான வாழ்க்கை நெடு நாள் நீடிக்கவில்லை. சிறிது நாளைக்கெல்லாம் காதலும் ஊடலும் குடிகொண்டிருந்த எங்கள் வாழ்க்கையில் கோபமும் தாபமும் வந்து குடிகொண்டன. அன்று என்னை ஒரு முறையாவது நேருக்கு நேர் பார்த்து, ஒரு வார்த்தையாவது பேசிவிடவேண்டுமென்று அவர் என்னைச் சுற்றிச் சுற்றி வந்தது போய், இன்று அவரை ஒரு முறையாவது நேருக்கு நேராகப் பார்த்து ஒரு வார்த்தையாவது கேட்டுவிட வேண்டுமென்று

நான் அவரைச் சுற்றி சுற்றி வந்தேன். இந்த நிலையிலே நான் எதற்காகப் பெண்ணாய்ப் பிறந்தேனோ, அதற்காக மூன்று குழந்தைகளையும் பெற்று வைத்தேன்.

நாங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டிருந்த அன்பு அத்தனையும் சேர்ந்து அந்தக் குழந்தைகளாக உருவெடுத்து வந்து விட்டனவோ என்னவோ, அதற்குப் பிறகு எங்கள் வாழ்க்கையில் துளிக்கூட அன்பே யில்லாமற் போய்விட்டது. நாளடைவில் அவர் என்னை எலியைப்போல் பாவிப்பதும், அவரை நான் பூனையைப்போல் பாவிப்பதும் சர்வ சாதாரணமாகி விட்டது.

இதனால் அந்த வீட்டில் குடித்தனம் செய்வதை 'என் தலைவிதி' என்று நான் நினைத்துக் கொண்டேன்; அந்தக் குடித்தனம் நடப்பதற்கு வேண்டிய வரும்படிக்கு வழி தேடுவதை அவர் 'தன் தலைவிதி' என்று நினைத்துக் கொண்டார்.

இந்த லட்சணத்தில் 'ஏன் பிறந்தோம்?' என்ற நிலையில் எங்கள் குழந்தைகள் வளர்ந்து வந்தன.

போதிய பணம் மட்டும் இருந்திருந்தால், துன்பத்தை எதிர்த்து நின்று நாங்கள் ஓரளவு இன்பத்தை அடைந்திருக்கலாம் என்பது உண்மைதான். ஆனால், அதுதானே எங்களிடம் இல்லை?

* * *

**எ**ன் வாழ்க்கையின் இரண்டாம் அத்தியாயம் ஆரம்பமாகி எப்படியோ பத்து வருஷங்கள் கழிந்துவிட்டன. இனி மூன்றாம் அத்தியாயம் ஒன்றுதான் பாக்கியிருந்தது. அதாவது, முதலில் என் தந்தைக்குப் பாரமாயிருந்து, பின்னால் என் கணவருக்குப் பாரமாயிருந்த நான், இப்போது என் மகனுக்குப் பாரமாக வேண்டும்.

இந்த மூன்றாவது அத்தியாயத்தோடு மற்ற பெண்களுடைய வாழ்க்கையைப் போல் என்னுடைய வாழ்க்கையும் முடிந்துவிடும். ஆனால் அதற்குரிய வயதை என் மகன் அடைய வேண்டியிருந்தது. அது வரை ஒன்று என் கணவர் உயிருடன் இருந்தாக வேண்டும்; இல்லையென்றால் நான் அவருக்கு முன்னால் இறந்துபோக வேண்டும்-இதுதானே நம்பாரத நாட்டுப் பெண்மணிகளுக்குப் பெரியோர் வகுத்துள்ள வழி?

வழி, நல்ல வழியாயிருக்கலாம். ஆனால் யமனுடைய ஒத்துழைப்பும் அல்லவா அதற்கு அவசியம் வேண்டியிருக்கிறது?

சின்னஞ் சிறு வயதிலே எத்தனையோ தாய்மார்கள், 'மஞ்சள் குங்குமத்தோடு என்னை அவருக்கு முன்னால் கொண்டு போய்விடு, பகவானே!'' என்று வேண்டிக் கொள்வதை நான் கேட்டிருக்கிறேன். அந்த வேண்டுகோளில் பொதிந்து கிடந்த பொருள் இப்பொழுதல்லவா எனக்குத் தெரிகிறது!

இந்த உண்மை தெரிந்ததும் நானும் அப்படியே பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தேன். வாழ்வதற்காக அல்ல; சாவதற்காக!

என்னுடைய பிரார்த்தனை பலிக்கவில்லை. திடீரென்று ஒரு நாள் என் கணவரை யமன் வந்து அழைத்துச் சென்ற போது, அந்தப் பாழும் கடவுள் எதிர்பாராத விதமாகத் தோன்றி அவனைக் காலால் உதைக்கவில்லை!

அன்றிலிருந்து நான் அனாதையானேன். அத்துடன் சம்பிரதாயப்படி என் மகனுக்கு நான் பாரமாயிருப்பது போய், அவன் எனக்குப் பாரமானான்.

இந்த லட்சணத்தில் தான் என் வாழ்க்கையின் மூன்றாம் அத்தியாயம் ஆரம்பமாகியிருக்கிறது. எனக்கோ குழந்தை குட்டியுடன் குடித்தனம் செய்வதைத் தவிர வேறொன்றும் தெரியாது. என் அப்பாவும் அந்தக் காலத்தில் எனக்கு அவ்வளவு தெரிந்தால் போதுமென்று தானே சொன்னார்?

அவருடைய வாக்கின்படி இப்பொழுது யாருடைய வரும்படியைக் கொண்டு நான் குடித்தனத்தை நடத்துவது? என்னை நானே காப்பாற்றிக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லாத எனக்கு யார் இப்போது உதவப்போகிறார்கள்? இந்தக் கதிக்கு ஆளாக நான் என்ன பாவம் செய்தேன்?

# வேலைக்காரி விசாலம்

அனந்தகிருஷ்ணனுக்கு ஐந்து வயது. ஆனால் செல்வத்தின் காரணமாக அவன் ரொம்ப ரொம்பச் சின்னக் குழந்தையாகப் பாவிக்கப்பட்டு வந்தான். ஸ்ரீமான் ராமேஸ்வரனுக்கு அவன் ஏகபுத்திரன். வழக்கம் போல் அன்றும் மாலை வேளையில் அவனைத் தள்ளு வண்டியில் உட்கார வைத்துத் தள்ளிக் கொண்டு சென்றாள் வேலைக்காரியான விசாலம்.

விசாலத்துக்கும் ஒரு குழந்தை இருந்தது. சேகரன் என்பது அவன் நாமதேயம். அவனுக்கும் ஏறக்குறைய ஐந்து வயதுதான் இருக்கும். ஆனால் வறுமையின் காரணமாக அவன் ரொம்ப ரொம்பப் பெரிய குழந்தையாகப்பாவிக்கப்பட்டு வந்தான். அம்மாவின் இடுப்புக்கூட அவன் சவாரி செய்வதற்குக் கிடைப்பதில்லை. அது கூட அனந்த கிருஷ்ணனுக்குத்தான் அடிக்கடி உபயோகப்பட்டு வந்தது.

அன்று என்னவோ தெரியவில்லை; சேகருக்குத் தானும் தள்ளுவண்டியில் ஏறிக்கொண்டு சவாரி செய்யவேண்டுமென்ற ஆசை வந்து விட்டது.

''அம்மா!''

''ஏண்டா?''

''தள்ளு வண்டி, அம்மா!''

குழந்தை தன்னுடைய நிலைமை தெரியாமல் தனக்கும் ஒரு தள்ளு வண்டி வாங்கிக் கொடுக்கச் சொல்கிறானாக்கும் என்று நினைத்து விசாலம் சிரித்துக்கொண்டே, ''ஆகட்டும்; நாளைக்கே ஒரு வண்டி வாங்கி விடலாம்; அந்த வண்டியில் உன்னை உட்கார வைத்துத் தள்ளிக்கொண்டு செல்ல ஒரு வேலைக்காரியையும் வைத்துக் கொள்ளலாம்!'' என்றாள்.

வாழ்க்கையில் அவ்வளவு நம்பிக்கை அற்றுப் போயிருந்தது அவள் உள்ளம்.

''இல்லை, அம்மா!'' என்று தன் பிரேரணையில் ஒரு சிறு திருத்தம் கொண்டு வந்தான் பையன்.

''பின் என்னடா?'' என்று அதட்டினாள் தாயார்.

அன்னையின் அதட்டலைக் கேட்டதும், அஸ்தமிக்கும் ஆதவனைக் கண்ட அல்லி மலரைப் போலக் குழந்தையின் வதனம் குவிந்து விட்டது.

தன் விருப்பத்தை வாய் மூலம் தெரிவிப்பதற்குக்கூட அஞ்சிய குழந்தை ஒரு கையால் கண்ணைக் கசக்கிக் கொண்டே இன்னொரு கையால் தள்ளு, வண்டியில் உட்கார்ந்திருந்த அனந்தகிருஷ்ணனைச் சுட்டிக் காட்டினான்.

அப்பொழுதும் விசாலத்துக்கு விஷயம் என்னவென்று தெரியவில்லை.

ஆனால் குழந்தையின் மனம் குழந்தைக்குத் தெரியுமோ என்னமோ, சேகரின் விருப்பத்தை அனந்தகிருஷ்ணன் எப்படியோ தெரிந்து கொண்டு விட்டான். உடனே வண்டியை விட்டுக் கீழே இறங்கி, ''ஊம்......ஏறிக்கோ!'' என்றான்.

பரஸ்பரம் குழந்தைகள் தங்களுக்குள் இப்படி விட்டுக் கொடுத்துக் கொண்டதுகூட விசாலத்துக்குப் பிடிக்கவில்லை. பிடிக்காமற் போனதோடு மட்டும் இல்லை; அவளுக்குப் பயமாயும் இருந்தது-எஜமான் பார்த்துவிட்டால் என்ன ஆகும்? இந்த வேலையில்கூட மண்ணைப் போட்டுக் கொண்டு அப்புறம் எப்படிக் காலந் தள்ளுவது? இந்தச் சண்டாளன் வேலைக்கு எமனாயிருப்பான் போலிருக்கிறதே!

இப்படி அவள் எண்ணிக் கொண்டிருந்ததைக் குழந்தைகள் கவனித்ததாகத் தெரியவில்லை. அனந்த கிருஷ்ணன் 'ஊம்' என்றதுதான் தாமதம்; சேகரன் 'ஜம்' என்று வண்டிக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

விசாலம் பொறுமையை இழந்து விட்டாள். அவள் ஆத்திரத்துடன் சேகரனைத் தூக்கிக் கீழே விட்டுவிட்டு, ''அனந்த், ஏறிக்கொள்!'' என்றாள்.

''ஊஹூம்....மாட்டேன்! கொஞ்ச தூரம் நான் நடக்கத் தான் போகிறேன்!'' என்று பிடிவாதம் பிடித்தான் அனந்தகிருஷ்ணன்.

சேகரன் அழ ஆரம்பித்து விட்டான்.

தாயாருக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. ஒன்றும் புரியாமல் தவித்தாள்.

அனந்தகிருஷ்ணன் அவளைக் கவனிக்கவில்லை. சேகரனை மீண்டும் வண்டியில் ஏற்றிவிட்டு, தானே வண்டியைத் தள்ள ஆரம்பித்தாள்.

'பாம் பாம், பாம், பாம்!'' என்று பங்களாவுக்கு வரும் பாதையிலிருந்து மோட்டார் 'ஹார்ன்' சத்தம் கேட்டது-ஆமாம்; விசாலம் எதிர்பார்த்தபடி எஜமான் தான் அந்தக் காரில் வந்து கொண்டிருந்தார்.

கதிகலங்கிப் போய் விட்டாள் விசாலம்.

கடைசியில் என்ன?-எஜமான் அந்த அநீதியை-அக்கிரமத்தைப் பார்த்தே விட்டார்! -சேகரன் வண்டியில் ஏறிக் கொண்டிருப்பதையும், தம்முடைய குழந்தை வண்டியைத் தள்ளிக்கொண்டு செல்வதையும்தான்!

என்ன கர்வம், இவளுக்கு! தள்ளு வண்டியில் தன் பிள்ளையை உட்கார வைத்ததோடு இல்லாமல், அனந்த கிருஷ்ணனை விட்டு அல்லவா வண்டியைத் தள்ளச் சொல்லியிருக்கிறாள்!

''ஏய்!''-ஆமாம்; இது எஜமானின் அதிகாரப் பூர்வமான அழைப்பு! உழைப்பைப் பெற்றுக் கொண்டு ஊதியம் கொடுக்கும் அவனுக்கு, அவள் சுயமரியாதையையும் தத்தம் செய்துவிட வேண்டும்!

விசாலத்தின் கண்கள் கலங்க ஆரம்பித்து விட்டன. கார் நிறுத்தப்பட்டது.

விசால் பயபக்தியுடன் வந்து நின்றாள். ''மன்னிச் சுடுங்கோ!'' என்ற வார்த்தை அவள் வாயிலிருந்து ஒவ்வொரு அக்ஷரமாகத் தயங்கித் தயங்கி வெளியே வந்தது.

எஜமானின் விழிகள் அப்படியும் இப்படியுமாக ஒரு நிமிஷம் உருண்டன. மறு நிமிஷம் ஒரு நீண்ட பெருமூச்சு; கடை சியில் 'உம்' என்ற ஒரு பயங்கர உறுமல்; கார்கிளம்பி விட்டது.

'அப்பாடி!' என்று விசாலம் 'விடுவிடு'வென்று தள்ளு வண்டி சென்ற திக்கை நோக்கி நடந்தாள். வண்டியில் உட்கார்ந்திருந்த சேகரனின் இரு கன்னத்திலும் இரண்டு அறைகள் வைத்தாள். குழந்தை 'வீல்' என்று கத்தினான்; துடியாய்த் துடித்துப் போனான்; ''அம்மா! அம்மா!'' என்று அலறினான். ஆனாலும் அவள் மனம் இரங்கவில்லை-கூலிப் பிழைப்பை விடவா குழந்தை?

பரபரப்புடன் அனந்தகிருஷ்ணனைத் தூக்கி வண்டியில் உட்கார வைத்தாள்; பங்களாவை நோக்கி வண்டியைத் தள்ளிக் கொண்டு சென்றாள்.

குழந்தையைக் கூடக் கவனிக்காமல் தான்!

எஜமான் முன்னால் வண்டியை நிறுத்தினாள். அவர் விரைந்து வந்து அனந்தகிருஷ்ணனைத் தூக்கித் தோளின் மேல் போட்டுக்கொண்டு' ''ஜாக்கிரதை! இன்னொரு முறை இம்மாதிரி செய்தாலோ, வீட்டுக்குத்தான்!'' என்று எச்சரித்தார்.

இந்தச் சம்பவத்தில், ''அவள் செய்யவில்லை, அப்பா! நானேதான் அவனை வண்டியில் உட்கார வைத்துத் தள்ளினேன். எனக்கு அப்படிச் செய்ய வேண்டுமென்று ஆசையாயிருந்தது, அப்பா!'' என்றான் அனந்தன்.

''குழந்தை! உனக்கென்ன தெரியும்? நீ செய்தால் அவள் பார்த்துக் கொண்டிருப்பதா?'' என்று சொல்லிக் கொண்டே ராமேஸ்வரன் உள்ளே போய்விட்டார்.

விசாலம் திரும்பினாள். அவளுக்குப் போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது. அடிக்கும் கைதானே அணைக்கவும் வேண்டும்? சாலையிலேயே நின்று அழுது கொண்டிருந்த குழந்தையை நோக்கி நடந்தாள். குழந்தையும் விக்கி விக்கி அழுது கொண்டே அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான். இருவரும் சந்தித்தனர்- ஐயோ! இரண்டு கன்னத்திலும் என்ன, அத்தனை பெரிய தழும்புகள்?

பார்த்த மாத்திரத்தில் விசாலத்தின் வயிறு 'பகீர்' என்றது. குழந்தையை வாரி மார்புடன் அணைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள்.

அடி பைத்தியக்காரி! உன்னை யார் அடிக்கச் சொன்னார்கள், அப்புறம் யார் அழச்சொன்னார்கள்?

* * *

**அ**ன்று ஏனோ தெரியவில்லை. வீட்டுக்கு வரும் போதே ஸ்ரீமான் ராமேஸ்வரன் ஒரு மாதிரியாக வந்தார். தேள் கொட்டிய திருடனின் வேதனை அவருடைய திவ்யவதனத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. ''அடியே!'' என்று மனைவியைக் கூப்பிட்டுக் கொண்டே ஆயாசத்துடன் ஹாலிலேயே உட்கார்ந்து விட்டார்.

'என்னமோ, ஏதோ' என்ற பீதியுடன் அவர் மனைவி மனோன்மணி ஓடோடியும் வந்தாள்.

அவளைப் பார்த்ததும், சுகாசனத்தில் நிமிர்ந்த படி உட்கார்ந்திருந்த ராமேஸ்வரன், ''வந்துட்டாண்டீ!'' என்று சொல்லிக் கொண்டே பின்னால் 'தொப்' பென்று சாய்ந்தார்.

''யார் 'வந்துட்டாண்டி?''' என்று பதட்டத்துடன் கேட்டாள் மனோன்மணி.

''நம்முடைய கம்பெனிக்கு ஒரு 'அக்கௌண்டெண்ட்' தேவை என்று பத்திரிகையில் விளம்பரம் செய்திருந்தேனோ இல்லையோ, அதற்கு ஒரு 'அப்ளிகேஷன்' வந்தது. ஆசாமியை நேரில் வரச் சொல்லி கடிதம் எழுதச் சொன்னேன்; வந்தான். பார்த்தால் அவனே அந்த ஆசாமி!''

''ஐயோ! 'அவன், இவன்' என்று சொல்லி ஏன் என் பிராணனை வாங்குகிறீர்? ஆசாமி யார் என்று சொல்லித் தொலையுங்களேன்!'' என்று தலையில் அடித்துக்கொண்டு கேட்டாள் மனோன்மணி.

''போடி, போ! உனக்குத்தான் எல்லாம் தெரிந்த கதையாச்சே! பர்மாவிலிருந்து எவனுடைய பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு வந்து இங்கே நாம் இவ்வளவு அமர்க்களமாயிருக்கிறோமோ, அந்தப் பணத்துக்குச் சொந்தக்காரன் என்னிடம் 'அக்கௌண்டெண்ட்' வேலை பார்க்க வந்திருக்கிறான்!'' என்றார் ராமேஸ்வரன்.

''நான் அப்பொழுதே சொல்லவில்லையா? எங்கேயாவது அவர் இன்னும் உயிரோடு இருந்தாலும் இருப்பார் என்று. நீங்கள்தான் அந்த மனுஷர் செத்தே போயிருப்பார் என்று ஒரேயடியாய்ச் சாதித்தீர்கள்!''

''நான் என்னத்தைக் கண்டேன்? நாம் வரும் போது நம் கண் முன்னாலேயே எத்தனையோ பேர் சாகவில்லையா? அத்தனை பேரில் அவனும் ஒருவனாயிருப்பான் என்று நான் நினைத்தேன். கடைசியில் என்னடா என்றால்.....'' என்று சொல்லிக் கொண்டே ராமேஸ்வரன் தம் முகவாய்க் கட்டையை அப்படியும் இப்படியுமாகத் தடவி விட்டுக் கொண்டார்.

''கடைசியில் என்னதான் ஆச்சு?''

''என்ன ஆவது? குற்றத்தை ஒப்புக் கொண்டேன். எல்லாம் உம்முடைய பணந்தான், சந்தர்ப்பம் உம்மிடம் பணத்தை ஒப்புவிக்க

முடியாமல் செய்துவிட்டது. இப்பொழுது இந்தக் கம்பெனியை நீங்களே ஏற்றுக் கொள்ளுங்கள். நான் பழையபடி உங்களிடம் 'அக்கௌண்டெண்ட்'டாகவே இருந்து உத்தியோகம் பார்க்கிறேன்' என்று சொல்லி விட்டேன். அவரும் என்னுடைய பெருந்தன்மையை மெச்சி என்னைக் கட்டித் தழுவிக் கொண்டார்!''

''நல்ல மனுஷர், பாவம்!''

''நல்ல மனுஷராவது, நல்ல மனுஷர்! இப்பொழுது வந்து நம் குடியைக் கெடுத்தானே, அதைச் சொல்லு!''

''போகட்டும்; அந்த மட்டுமாவது விட்டாரே!-கடவுள் கிருபையிருந்தால் நாளைக்கே கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்து விடுகிறோம்!''

''கடவுள் கிருபையுமாச்சு, கஷ்டப்பட்டு முன்னுக்கு வருவதுமாச்சு! இந்த ஜன்மத்தில் அதெல்லாம் நடக்கிற காரியமா?-என்னமோ ஜப்பான்காரன் நமக்காகப் பெரிய மனது பண்ணி பர்மாவைத் தாக்கினான்; நமக்கும் நல்ல காலம் வந்தது; அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு வந்து இங்கே குடியும் குடித்தனமுமானோம். கொடுத்து வைக்க வில்லை, போய்விட்டது!'' என்று கையை விரித்தார் ராமேஸ்வரன்.

மனோன்மணி அதற்குமேல் ஒன்றும் கேட்க விரும்பவில்லை; பேசாமல் உள்ளே போய்விட்டாள்.

வீட்டு முற்றத்தில் உட்கார்ந்தபடி வீதியை நோக்கிக் கொண்டிருந்தார் ராமேஸ்வரன்- தமது பழைய எஜமானரின் வரவை எதிர்பார்த்துத்தான்!

சிறிது நேரத்திற்கெல்லாம் அவரும் வந்து சேர்ந்தார். மலர்ந்த முகத்துடன் அவரைக் கை கூப்பி வரவேற்று, தமக்கு எதிரேயிருந்த ஆசனத்தில் உட்காரும்படி வேண்டிக் கொண்டார் ராமேஸ்வரன். மரியாதைக்காகத் தமக்கு முன்னால் எழுந்து நின்ற ராமேஸ்வரனை நோக்கி, ''பரவாயில்லை, உட்காருங்கள்!'' என்றார் வந்தவர்.

இந்தச் சமயத்தில் ஏதோ வேலையாக வெளியே போய் விட்டு விசாலம், முற்றத்தில் உட்கார்ந்திருந்த புதிய மனிதரைப் பார்த்ததும், ''ஹா! நீங்களா!'' என்று அலறிக் கொண்டே மின்னல் வேகத்தில் அந்த மனிதரை நோக்கிப் பாய்ந்தாள். அடுத்த நிமிஷம் அவருடைய

மடியில் தலையைப் புதைத்துக் கொண்டு அவள் விம்மி விம்மி அழுதாள்.

''விசாலம்! நீயா விசாலம்! இதென்ன கோலம்? இந்தக் கோலத்தில் உன்னைப் பார்க்கவா நான் இத்தனை நாளும் உயிரை வைத்துக் கொண்டிருந்தேன்? குழந்தை எங்கே?- குழந்தை எங்கே?'' என்று கண்ணீர் மல்கத் துடிதுடித்துக் கொண்டே அவளைத் தூக்கி நிறுத்தினார் அவர்.

''நான் சொன்னபடி முதலிலேயே அந்தப் பாழாய்ப் போன பர்மாவை விட்டு வெளியேறியிருந்தால் நமக்கு இந்தக் கதி நேர்ந்திருக்குமா? 'இன்னும் என்ன ஆகிறதென்று பார்ப்போம்' என்று பணத்தை நம்பி நாளைத் தள்ளிக்கொண்டு வந்தீரே, கடைசியில் அந்தப் பணம் போன வழி நமக்குத் தெரிந்ததா? நாம் போன வழி பணத்துக்குத் தெரிந்ததா?'' என்று விம்மலுக்கும் விக்கலுக்கும் இடையே கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டாள் விசாலம்.

ராமேஸ்வரனுக்கு ஒன்றுமே புரியவில்லை; அவருக்கு எல்லாம் ஒரே வியப்பாயிருந்தது. வாயைப் பிளந்தபடி, ''நம்முடைய எஜமானியம்மாளா நமக்கு இத்தனை நாளும் வேலைக்காரியாக இருந்தாள்!'' என்று எண்ணமிட்டார்.

மனோன்மணியும் இன்னதென்று சொல்ல முடியாத நிலையில் தவியாய்த் தவித்தாள்.

* * *

அடுத்த நிமிஷம் ஸ்ரீமான் ராமேஸ்வரனுக்கு என்ன தோன்றிற்றோ என்னமோ, அவர் தம்மை அறியாமலேயே, ''சேகர்! சேகர்!'' என்று இரைந்து கொண்டே வாயிற்படிக்கு வந்தார்.

எங்கேயோ விளையாடிக் கொண்டிருந்த சேகர் ஓடோடியும் வந்தான். ராமேஸ்வரன் அவனை வாரியெடுத்து அன்புடன் அணைத்துக் கொண்டுபோய்த் தள்ளு வண்டியில் உட்கார வைத்தார்; தாமே வண்டியைத் தள்ளிய வண்ணம் தோட்டத்தைச் சுற்றிச் சுற்றி வந்தார்.

சேகருக்கு ஒன்றும் புரியவில்லை; திருதிருவென்று விழித்தான்-என்றும் இல்லாத திருநாளாய், கேவலம் ஒரு வேலைக்காரியின் பிள்ளை ஆனானப்பட்ட எஜமானே வண்டியில் வைத்துத் தள்ளுவதென்றால்.....?

# கிளி பேசுகிறது!

அந்த பங்களாவைச் சுற்றிலும் பெரிய தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தில் எத்தனையோ விதவிதமான மரங்கள், செடிகள், கொடிகள்! இலைகளில்தான் எத்தனை யெத்தனை வகைகள்; மலர்களில்தான் எத்தனை யெத்தனை நிறங்கள்; மணங்களில்தான் எத்தனை யெத்தனை விதங்கள்; கனிகளில்தான் எத்தனை யெத்தனை சுவைகள்! அம்மம்மா! அவற்றின் அழகை மனதினால்தான் உணர முடியுமே தவிர, வாயினால் விவரிக்க முடியாது.

எல்லோருக்கும் பொதுவாக இயற்கை அளிக்கும் அந்தச் செல்வத்தை பங்களாவில் குடியிருந்த ஒரு சிலர் மட்டும் ஏகபோகமாக அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், தங்களைப் போன்ற மனிதர்களைத்தான் அவற்றை அனுபவிக்க முடியாதபடி அவர்களால் தடுக்க முடிந்ததே தவிர, எங்களைப் போன்ற புள்ளினங்களை அவ்வாறு தடுக்க முடியவில்லை.

அந்தத் தோட்டம் அவர்களுக்குச் சொந்தமாயிருக்கலாம்; அதன் மூலம் இயற்கை அளிக்கும் செல்வம் அனைத்தையும் அவர்களே அனுபவிப்பதற்கு உரிமையிருக்கலாம்; அந்த உரிமையும் சொந்தமும் எங்களுக்கு இல்லாமலிருக்கலாம். ஆனால் எங்களுடைய தயவு அவர்களுக்கு இல்லை யென்றால், அந்த இயற்கைச் செல்வத்தில் கொஞ்சமாவது அவர்கள் அனுபவிக்க முடியுமா?

யாருடைய அனுமதியுமின்றி என் தாயும் நானும் அந்தத் தோட்டத்திலிருந்த ஒரு மாமரப் பொந்தில் வசித்து வந்தோம். எங்களுக்கு அரசன் கிடையாது; சட்டம் கிடையாது; தண்டனையும் கிடையாது.

நாங்கள் அடிமைகளாயிருக்கவுமில்லை; விடுதலை கோரவும் இல்லை.

நாடு எங்களுடையது; காடு எங்களுடையது; கடல் எங்களுடையது, வானம் எங்களுடையது; மலைகள் நதிகளெல்லாம் எங்களுடையவை; மரம், செடி, கொடி எல்லாமே எங்களுடையவைதான்.

'என்னுடையது' என்று நாங்கள் எதையுமே சொல்லிக் கொள்வதில்லை; எல்லைக்கோடு வகுத்துக் கொள்வதில்லை;

பத்திரமோ சித்திரமோ எழுதிக் கொள்வதில்லை, ரிஜிஸ்தரோ கிஜிஸ்தரோ பண்ணிக் கொள்வதில்லை; எல்லைச் சண்டை போட்டுக் கொண்டு தொல்லைப்படுவது மில்லை; கோர்ட்டுக்குப் போய்க் கூப்பாடு போடுவதுமில்லை.

இன்னும் இறந்த காலத்தைக் குறித்து நாங்கள் வருந்துவதில்லை; எதிர்காலத்தைக் குறித்து ஏங்குவதுமில்லை; நிகழ்காலத் தோடு எங்கள் நினைவு நின்றுவிடும். ஆடுவதும் பாடுவதும் ஆனந்தக் கூத்தாடுவதுமாகவே எங்கள் பொழுதெல்லாம் கழியும்.

ஆஹா! என்ன அற்புதமான வாழ்வு! எவ்வளவு ஆனந்தமான வாழ்வு!

* * *

இத்தகைய ஆனந்த வாழ்வுக்கு ஒரு சமயம் பங்கம் நேர்ந்து விட்டது. என்னுடைய அம்மா தேடிக் கொண்டு வந்து கொடுத்த இரையைத் தின்று நான் வளர்ந்து கொண்டிருந்த காலம். அப்போது தான் எனக்கு இறகுகள் முளைத்துக் கொண்டிருந்தன. புதிய இறகு முளைப்பதோடு என் உள்ளத்தில் புதிய உற்சாகமும் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. பொந்தில் இருந்தபடி வானத்தை எட்டி எட்டிப் பார்ப்பேன். அந்த நீல வானிலே எத்தனை எத்தனையோ பறவைகள் வட்டமிட்டுப் பறந்து கொண்டிருக்கும். அவற்றைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கும் பறந்து சென்று அவைகளுடன் கலந்து கொள்ளவேண்டும் போல் தோன்றும். அந்தப் பறவைகள் என்னை 'வா, வா' என்று அழைத்தனவோ என்னவோ-எனக்குத் தெரியாது! எனக்கு மட்டும் அவை 'வா, வா' என்று என்னை அழைப்பது போலிருக்கும்.

ஒரு நாள் என்னுடைய ஆவலை அம்மாவிடம் தெரிவித்தேன். "அவசரப்படவேண்டாம்; காலம் வரும்போது உன்னுடைய ஆசை நிறைவேறும்" என்று அவள் சொல்லி விட்டாள்.

"காலம் எப்போது வருவது, ஆசை எப்போது நிறை வேறுவது?" என்று எனக்கு ஆத்திரமாயிருந்தது.

அதற்கேற்றாற்போல் அன்று ஒரு சிட்டுக் குருவி, நான் இருந்த மாமரத்துக்கும் பூமிக்குமாக 'ஜிவ், ஜிவ்' என்று பறந்து, 'கீச், கீச்' என்று விளையாடி என்னுடைய ஆத்திரத்தை மேலும் மேலும் கிளப்பி விட்டுக் கொண்டே இருந்தது.

நான் துணிந்து விட்டேன். ''வான வீதிக்கு வேண்டுமானால் போக வேண்டாம்; இந்தச் சிட்டுக் குருவி போல் இங்கேயே மாமரத்துக்கும் பூமிக்குமாகப் பறந்து கொண்டிருந்தால் என்ன?'' என்று எண்ணிக் கீழே இறங்குவதற்காகச் சிறகடித்தேன். ஆனால், என்ன ஏமாற்றம்! என்னால் ஓர் அடிகூடப் பறந்து செல்ல முடியவில்லை; 'பொத்'தென்று கீழே விழுந்து விட்டேன்.

உடம்பில் பலமான அடி; வேதனையைத் தாங்க முடியவில்லை என்னால், 'கீ, கீ' என்று கத்த ஆரம்பித்துவிட்டேன்.

அப்போது யாரோ ஒரு சிறுமி அங்கே வந்தாள்-அவள் அந்த பங்களாவில் குடியிருப்பவர்களைச் சேர்ந்தவள் போலிருக்கிறது - என்னுடைய கதறலைக் கேட்டதும் அவள் நான் இருக்கும் இடத்திற்கு ஓடோடியும் வந்தாள். என்னைக் கண்டதும் அவளுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு ஆனந்தம் உண்டாகி விட்டதோ, தெரியவில்லை. ''அக்கா! கிளி, கிளி, கிளி! அக்கா! கிளி, கிளி, கிளி!'' என்று அவள் கத்தினாள்.

உடனே அந்த பங்களாவிற்குள்ளிருந்து இன்னொரு பெண், ''எங்கேடி, எங்கேடி?'' என்று கேட்டுக்கொண்டே ஓட்டமாய் ஓடி வந்தாள்.

அவ்வளவுதான்; அடுத்த கணம் நான் அவர்களால் கைது செய்யப்பட்டேன்.

என்னுடைய அறியாமையால், ஆத்திரத்தால், அவசரத்தால், எனக்கு இயற்கையாகவே கிடைத்திருந்த சுதந்திரம் அன்று அநியாயமாகப் பறிக்கப்பட்டு விட்டது!

''விடுதலை, விடுதலை, விடுதலை!'' என்று நான் கதறும் படியாகிவிட்டது!

அவர்கள் என்னமோ, என்னிடம் எவ்வளவோ அன்பு காட்டத்தான் செய்தார்கள். பழமும் பாலும் பரிந்து பரிந்து ஊட்டினார்கள். அடிக்கொரு தரம் என்னைத் தடவித் தடவிக் கொடுத்தார்கள். ஆத்திரத்தால் நான் 'வெடுக், வெடுக்'கென்று கடிப்பதை அன்பினால் முத்தமிடுவதாக அந்த அப்பாவிகள் நினைத்துக் கொண்டார்கள்!

ஆனால் எனக்கோ பழமும் வேண்டியிருக்கவில்லை; பாலும் வேண்டியிருக்கவில்லை. யாருக்குவேண்டும், இந்தப் பழமும் பாலும்?

ஐயோ! நம்மைக் காணாமல் அம்மா எப்படித் தவிக்கிறாளோ!

ஆம், ஆம். அவள் பேச்சைக் கேட்காத நமக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டியதுதான்!

இப்படியெல்லாம் என்ன வெல்லாமோ எண்ணியெண்ணி என் மனம் அலை பாய்ந்தது.

அந்தச் சிறுமிகளோ என்னுடைய சுதந்திர வேட்கையைக் கொஞ்சமாவது பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. மேலும் மேலும் ராஜோபசாரம் செய்துகொண்டே இருந்தார்கள்.

என்னுடைய சிறைச்சாலைக்குத்தான் எத்தனை விதமான சிங்காரம்! எத்தனை விதமான வர்ணப் பூச்சு; எத்தனை விதமான பட்டுக் குஞ்சங்கள்!

''ஆஹா! அதன் அழகுதான் அவர்களுக்கு எவ்வளவு ஆனந்தத்தைக் கொடுத்தது!

என்னை அடிமை கொண்ட அவர்களுக்கு வேண்டுமானால் அந்தப் பாழும் சிறைச் சாலை ஆனந்தத்தை அளிக்கலாம்; அடிமைப்பட்ட எனக்கோ? அதைப்பார்க்கும் போதெல்லாம் ஆத்திரம்தானே பற்றிக் கொண்டு வருகிறது!

எனக்கு மட்டும் போதிய பலம் இருந்திருக்குமானால், அதை அன்றே உடைத்தெறிந்து விட்டல்லவா வெளியே வந்திருப்பேன்?

* * *

**வே**டிக்கையைக் கேளுங்கள்; அதே பங்களாவில் என்னைப் போல் ஒரு நாயும் வளர்ந்து வந்தது. அதைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு ஒரே எரிச்சலாயிருக்கும். அதன் அடிமை வாழ்வில்தான் அதற்கு எவ்வளவு திருப்தி;

''நன்றியுள்ள பிராணி'' என்று பெயரெடுக்க வேண்டுமாம், பெயர்! அதற்காக அது தன்னை யார் என்ன சொன்னாலும் பொருட்படுத்துவதில்லை. ''சீ, நாயே!'' என்று எத்தனை முறைதான் விரட்டியடிக்கட்டுமே-இல்லை, செருப்பால்தான் அடித்துத் துரத்தட்டுமே-ஊஹூம், அப்போதும் அது வாலை ஆட்டு ஆட்டு என்று ஆட்டிக் கொண்டு, அவர்களுக்குப் பின்னால் சுற்று சுற்று என்று சுற்றிக் கொண்டு தானிருக்கும். அதற்குச் சுந்திரமும் வேண்டாம்.

ஒன்றும் வேண்டாம்; எச்சில் சோறும், எலும்பும், 'நன்றியுள்ள பிராணி' என்ற பட்டமும் கிடைத்தால் போதும்!

சீசீ; அதுவும் ஒரு ஜன்மமா!

அதை அவிழ்த்து வெளியே விடுகிற மாதிரி என்னையும் வெளியே விட்டால்......?

அந்த நாயைப் போல் நான் திரும்பியா வருவேன், அடிமையாயிருக்க? ''ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்!'' என்று ஆகாய வீதியை நோக்கிக் கம்பி நீட்டிவிட மாட்டேனா!

* * *

அன்றொரு நாள் அந்தச் சிறுமிகள் இருவரும் என்னிடம் வந்து, ''ரங்க ரங்க ரங்க ரங்க ரங்கா! அக் அக் கக் கக் கா!'' என்று கூச்சலிட்டனர்.

நானும் அப்படியே சொன்னேனோ இல்லையோ, அவர்களுக்கு ஒரே குஷி!

ஏன் தெரியுமா? அவர்கள் எனக்குப் பேசக் கற்றுக் கொடுத்தார்களாம்; நான் உடனே பேசக் கற்றுக்கொண்டு விட்டேனாம்!

என்ன அசட்டுத்தனம்! எனக்கிருந்த வெறுப்பில் நான் அவர்களுக்கு அழகு அல்லவா காட்டினேன்? அதற்குக் கோபித்துக் கொள்வதற்குப் பதிலாக இப்படி ஆனந்தப் படுகிறார்களே!

இப்படி எண்ணி நான் வியந்து கொண்டிருந்த போது, ''அக்கா! இந்தக் கிளிக்கு இப்போது இறக்கைகள் வளர்ந்து விட்டன; கத்திரிக்கோல் கொண்டு வருகிறேன், வெட்டி விடுகிறாயா?'' என்றாள் தங்கை.

எனக்குப் பகீரென்றது. ''அடி பாவிகளா!'' என்று சபித்தேன்.

நல்ல வேளையாக அக்கா அதற்கு ஒப்பவில்லை. ''இறக்கைகள் வளர்ந்த பிறகுதான் கிளி பார்ப்பதற்கு அழகாயிருக்கிறது! அதை வெட்டிவிட்டால் அவலட்சணமாய்ப் போய்விடாதோ?'' என்றாள்.

அப்பாடி! 'பிழைத்தேன்!' என்று நான் பெருமூச்சு விட்டேன்.

அந்தப் போக்கிரிப் பெண் அத்துடன் நிற்கவில்லை. ''எனக்கென்ன, ஏமாந்தால் என்றைக்காவது ஒரு நாள் அது ஓடிவிடப் போகிறது!'' என்று அவள் தன் அக்காவை எச்சரித்தாள்.

''ஏண்டி, இவ்வளவு நாள் நம்மிடம் வளர்ந்த பிறகு அது எங்கேயாவது நன்றி கெட்டதனமாக ஓடி விடுமா?'' என்றாள் அக்கா.

ஐயோ, பாவம்! என்னையும் அவள் அந்தக் கேடுகெட்ட நாயுடன் சேர்த்துக் கொண்டாள் போலும்! இவளை நானா என்னிடம் நன்றி காட்டச் சொல்லி அழைத்தேன்?

ரொம்ப அழகு தான்!

''கூண்டின் கதவைத் திறந்துதான் பாரேன்; அது நன்றி கெட்டதனமாக நடந்துகொள்கிறதா, இல்லையா என்று!'' என்றாள் தங்கை.

அக்காவுக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. ''திறந்தால் என்னடி? ஓடிப்போய்விடுமா?'' என்று தங்கையிடம் வீம்பு பேசிக் கொண்டே, நான் அத்தனை நாளும் அடைபட்டிருந்த சிறையின் கதவை அவள் அன்று திறந்தே விட்டாள்!

அவ்வளவுதான்; அதற்குப் பிறகு ஒரு நிமிஷமாவது அங்கே தாமதிக்க எனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? ''விடுதலை, விடுதலை, விடுதலை!'' என்று கூவிக்கொண்டே எடுத்தேன் ஓட்டம்!

ஆஹா! எத்தனையோ நாட்களுக்குப் பிறகு- எவ்வளவோ கஷ்டங்களுக்குப் பிறகு-நான் கொஞ்சமும் எதிர்பாராத விதமாகக்கிடைத்த விடுதலையில்தான் என்ன இன்பம்! என்ன இன்பம்!

# சமுதாய விரோதி

வருஷந்தோறும் கோடை விடுமுறைக்கு முன்னால் பரீட்சை என்னும் பாதகத்தை நடத்தி முடித்துவிடும் அதிகாரிகளின் புத்திசாலித்தனத்தை எண்ணி வியந்து கொண்டே, புஷ்பராஜ் தன்னுடைய சொந்த கிராமமான தாழம்பேடுக்குப் புறப்பட்டான். ஏறக்குறைய இரண்டு மாதகாலம் அங்கே சகலவிதமான சலனமுமின்றி அமைதியுடன் காலத்தைக் கழித்துவிட்டு வரலாம் என்று நினைத்தபோது அவனுக்கு எவ்வளவோ ஆறுதலாயிருந்தது. முன்னாலாவது அந்தக் கிராமத்தில் சிலர் கள்ளையும் சாராயத்தையும் குடித்துவிட்டு வந்து அங்கங்கே சண்டையிட்டுக் கொண்டிருப் பார்கள். இப்போது அதுவும் இருக்காது; 'காந்தி ராசா'வின் புண்ணியத்தால் மதுவிலக்குச் சட்டந்தான் அமுலுக்கு வந்து விட்டதே!

இவ்வாறு எண்ணி மகிழ்ந்த வண்ணம் புஷ்பராஜ் தன்னுடைய சொந்த கிராமத்தை யடைந்தபோது இருள் சூழும் நேரம். கிராமக் குடிசைகளெல்லாம் அநேகமாகப் புகைய ஆரம்பித்துவிட்டன. குடிசைகள் புகைய ஆரம்பித்து விட்டன என்றால் அவற்றிலுள்ள அடுப்புகள் புகைய ஆரம்பித்து விட்டன என்று அர்த்தம். அடுப்புகள் புகைந்தால் தானே அந்தக் குடிசைகளில் அடைப்பட்டுக் கிடக்கும் அப்பாவி ஜீவன்களுக்கு அடிவயிறாவது நிறையும்?

புகைந்து கொண்டிருந்த குடிசைகளுக்கு இடையிலே புகையாமலிருந்த சில குடிசைகளும் இருக்கத்தான் இருந்தது. அவற்றைக் கண்டதும் புஷ்பராஜுக்கு என்னவோ மாதிரி இருந்தது. "கள்ளரக்கன் ஒழிந்த பிறகுமா இந்தத் தரித்திரம்?" என்று எண்ணி அவன் ஒருகணம் ஏங்கினான். மறுகணம் "மதுவிலக்கால் மட்டும் மக்களின் வறுமையைப் போக்கிவிட முடியாதல்லவா?" என்று எண்ணியவனாய் மேலே நடந்தான்.

வழியில் ஒரு தேநீர்க் கடை குறுக்கிட்டது. அந்தத் தேநீர் கடையைக் கண்டதும் அதற்கு முன்னால் அங்கே இருந்த கள்ளுக்கடை புஷ்பராஜின் மனக்கண் முன்னால் காட்சியளித்தது. ஆடலும் பாடலும் அடிதடிச் சண்டையுமாக யிருக்கும் இந்த இடத்திலே, இப்போது அமைதி குடி கொண்டிருப்பதைக் கண்டதும் தன்னை மறந்த நிலையில் அவன் தேநீர்க் கடைக்கு முன்னால் சிறிது நேரம் அப்படியே நின்று விட்டான்.

கள்ளுக்கடை இருந்த நாட்களில் அங்கே கூடும் மனிதர்களைப் புஷ்பராஜ் எத்தனையோ முறை பார்த்திருக்கிறான். அப்பொழுதெல்லாம் அவர்கள் மனிதராகவே அவனுக்குத் தோன்றமாட்டார்கள். அதே இடத்தில் தேநீர்க் கடை இருக்கும் இந்த நாளிலோ, அங்கே கூடியிருந்தவர்களெல்லாம் அவனுக்கு மனிதர்களாகவே தோன்றினார்கள். இந்த அதிசயத்துக்கு மத்தியில் இன்னொரு அதிசயத்தையும் புஷ்பராஜ் காண நேர்ந்தது. அதாவது தேநீரையும் அந்த 'மாஜிகுடியர்கள்' கள்ளைப்போல் பாவித்துக் கண்ணை மூடிய வண்ணம் குடித்துக் கொண்டிருந்தனர். அந்தக் காட்சி பார்ப்பதற்கு வேடிக்கையா யிருந்ததோடு மட்டுமல்ல, பரிதாபமாகவும் இருந்தது!

அவர்களில் ஒருவன் இன்னொருவனை நோக்கி, ''என்ன, இசக்கிமுத்து அண்ணே! நம்ம பேச்சிமுத்துவைக் காணவே காணோமே?'' என்று விசாரித்தான். ''அவனுக்கென்னப்பா, மவராசன்!'' என்றான் இசக்கிமுத்து.

''நல்லாச் சொன்னே, போ! மவராசனாவது, மண்ணாங்கட்டியாவது! காலையிலேருந்து சாயந்திரம் வரை ரெண்டு ரூவாக் காசுக்கு அவன் குப்புக் கொல்லன் பட்டறையிலே என்னோடு சேர்ந்து இல்லே சம்மட்டி அடிச்சிட்டு இருந்தான்?''

இந்தத் தகவலைக் கேட்டதும் ''நிசமாவா, நல்ல முத்து?'' என்று வியப்புடன் கேட்டான் இசக்கிமுத்து.

''ஆமாங்கிறேன்!'' என்றான் நல்லமுத்து.

''அப்படின்னா நான் நெனைச்சது சரிதான்; அவன் 'துத்தா' போட்டுக்கிட்டு வரத்தான் போயிருப்பான்?'' என்றான் இசக்கிமுத்து.

இந்த 'துத்தா' என்ற வார்த்தையைக் கேட்டதும் புஷ்பராஜ் திடுக்கிட்டான். அந்தப் பக்கத்துக் குடியர்கள் 'துத்தா' என்று சொன்னால் 'கள்' என்று அர்த்தம். மதுவிலக்கைப் பற்றி என்னவெல்லாமோ எண்ணிக் கொண்டு வந்த புஷ்பராஜுக்கு இந்த வார்த்தையைக் கேட்டதும் எப்படி இருக்கும்? - அவன் முகத்தில் அசடு வழிய இசக்கிமுத்தையும் நல்லமுத்தையும் இமை கொட்டாமல் பார்த்த வண்ணம் மேலே என்ன பேசுகிறார்கள் என்று கவனித்தான்.

''என்ன சொன்னே, துத்தாவா? அது எங்கேப்பா இப்போ கெடைக்குது?'' என்று கேட்டான் நல்லமுத்து.

''உனக்குத் தெரியாதா? - அதுதானே பார்த்தேன்; தெரிஞ்சிருந்தாத் தான் நீயும் அவனோடு 'துத்தா' போட்டுகிட்டு வரப் போயிருப்பயே?'' என்றான் இசக்கிமுத்து.

''அவனைப் போல் என்னையும் மானங்கெட்ட பயலுன்னா நினைச்சுட்டே? நெயாயமாப் பார்க்கப் போனா அந்தக் காந்திராசா பேச்சைக்கேட்டு நாமே கள் குடிப்பதை நிறுத்தி இருக்கணும். அதுதான் இல்லேன்னா, காலையும் கையையும் பிடிச்சுக்கிட்டுக் குழந்தைக்கு மருந்து ஊத்தறாங்களே, அந்த மாதிரிக் காங்கிரசு ராசாங்கம் கள்ளுக்கடையை எடுத்த அப்புறமாவது கள் குடிப்பதை நிறுத்தியிருக்கணும். ரெண்டுமில்லாம திருட்டுத்தனமாக குடிக்கிறதுன்னா அது அக்குறும்பு இல்லே?''

''அக்குறும்புதான்; ஆனா அதைக் கேட்க யாரு இருக்காங்க?''

''ஏன் இல்லே? போலீசு ஜவானுங்க இல்லையா? அவங்ககிட்ட மாட்டிக்கிட்டா இல்லே சங்கதி தெரியும்?''

''ஊம்....அவனுங்க இல்லே அந்த அக்குறும்புக்காரனுங்கிட்ட மாட்டிகிட்டு முழிச்சானுங்க!''

''என்ன....!''

''ஆமா அண்ணங்கிறேன்! நேத்து மேலத் தெருவிலே ரெண்டு பயலுங்க குடிச்சுப்பிட்டு வந்து சண்டை போட்டுகிட்டு இருந்தானுங்க. அந்தப் பக்கமாப் போன ரெண்டு ஜவானுங்க அவனுங்களைப் பிடிச்சிக்கிட்டுப் போக ஓட்டமா ஓடி வந்தாங்க! - அவ்வளவுதான்; அண்ணே! அந்தத் தெருவாரெல்லாம் ஒண்ணாக் கூடிக்கிட்டு அவனுங்களை 'அடி அடி'ன்னு அடிச்சுப் போட்டுட்டாங்க....!''

''அப்பாலே...?''

''இன்ச்சுபெட்டரு, அவங்க இவங்க எல்லாம் வந்து அந்தத் தெருவிலே யிருந்த முரட்டுப் பயல்களை யெல்லாம் பிடிச்சுக்கிட்டுப் போனாங்க!''

''என்ன புத்தி கெட்ட பயலுங்க பார் அண்ணே! இவனுங்க பெண்டாட்டி பிள்ளை பிழைக்கத்தானே கள் குடிக்க வேணாம்னு சொல்றாங்க! அதைக் கேட்டு ஒழுங்கா இல்லாம திருட்டுத்தனமா சாராயம் காய்ச்சறதும், கள் குடிக்கிறதும் என்ன வேலைங்கிறேன்?

இப்படிப்பட்டவனுங்களை நாமே பிடிச்சுப் போலீசு ஜவானுங்ககிட்ட ஒப்படைச்சாக்கூடக் குற்றமில்லை தான்! நீ என்ன சொல்றே, அண்ணே?''

''நல்ல ஆளப்பா நீ! நம்ம பெண்டாட்டிமாருங்க கழுத்திலே தாலி இருக்கக் கூடாதுங்கிறது உன் எண்ணமா?''

''அட, நீ கூட இப்படிப் பயந்து சாவறியே? ஆறிலுஞ் சாவு, நூறிலுஞ் சாவு! - அப்படியா நம்ம தலையை அவனுங்க 'நறுக்'குன்னு கிள்ளி எறிஞ்சிடுவானுங்க?''

''ஒண்ணுந் தெரியாம நீ பாட்டுக்குச் சும்மாப் பேசாதே. யாரு காதிலாச்சும் விழுந்து வைக்கப் போவுது!''

''நான் எல்லாம் தெரிஞ்சிதான் பேசறேன்! எனக்கு இன்னும் என்ன தெரியணுங்கிறே நீ?''

''நிசமாச் சொல்றேன் அண்ணே! இந்தக் கிராமத்திலே திருட்டுச் சாராயம் காய்ச்சறதுக்கு யார் பணம் கொடுக்கிறாங்க என்கிற விசயம் உனக்குத் தெரிஞ்சா நீ இப்படியெல்லாம் பேசவே மாட்டே - ஆமாம்!'' என்று முன்னும் பின்னும் பீதியுடன் பார்த்துக் கொண்டே சொன்னான் இசக்கிமுத்து.

''அடடே! அந்த ஆளை உனக்கு மட்டுந்தான் தெரியும்னு நீ நெனைச்சுட்டிருக்கியா? - போ அண்ணே, போ! அந்தக் குடிகெடுக்கும் மனுசனை எனக்குந்தான் தெரியும்'' என்றான் நல்லமுத்து அலட்சியமாக.

அதற்குமேல் அவனுடைய வாயைக் கிண்டிவிட விரும்பாத இசக்கிமுத்து ''ஐயையோ! நம்ம தலைக்கு ஆபத்து இல்லே வந்துடும் போலிருக்குது? அந்த மனுசன் பேரை நீ வெளியே கிளியே சொல்லிப்பிடாதேப்பா!'' என்று கத்திக் கொண்டே அவனுடைய வாயை இறுகப் பொத்தினான்.

புஷ்பராஜ் உள்ளம் உடைந்தவனாய்த் தன்னுடைய வீட்டை நோக்கி மெல்ல நடந்தான். அவனுடைய உடைந்த உள்ளத்திலிருந்து ஏனோ ஒரு கேள்வி எழுந்து, எங்கெல்லாமோ சுற்றியலைந்து, பதிலைத் தேடித் தேடித் திரிந்தது. அந்தக் கேள்வி வேறெதுவுமில்லை; இதுதான்:-

''சட்டத்தை மீறிச் சாராயம் காய்ச்சும் அந்தக் குடிகெடுக்கும் மனுசன் யாராயிருக்கும்?''

* * *

இசக்கிமுத்தும் நல்லமுத்தும் தேநீர் குடித்து முடிந்ததும், கள் குடித்தவர்கள் போல மீசையை ஒதுக்கி விட்டுக் கொண்டே தங்களுடைய குடிசைகளை நோக்கி விறைப்புடன் நடந்தனர். அந்தச் சமயத்தில் ''மருக்கொழுந்து, மருக்கொழுந்து!'' என்னும் 'வையம் பெறும் வழங்கோசை' எங்கிருந்தோ வந்து, அவர்களுடைய காதில் 'கணீ'ரென்று விழுந்தது. அந்த ஓசையைத் தொடர்ந்து மருக்கொழுந்தின் வாசமும் வந்தது. அடுத்த விநாடி அவர்களுக்கு எதிரே மருக்கொழுந்து கூடைக்காரி ஒருத்தி 'இட்டி அடி நோவ' ஆனால் 'எடுத்த அடி கொப்பளிக்காமல்' வட்டில் சுமந்து மருங்கசைய 'வந்து கொண்டிருந்தாள். அவளை வழிமறித்து நிறுத்தி ''என்ன புள்ளே! இந்த மருக்கொழுந்து வாசம் உன் மேலே யிருந்து வீசுதா? இல்லே மருக்கொழுந்திலே யிருந்து வீசுதா?'' என்று கேட்டான் இசக்கிமுத்து.

''எப்படி வேணுமினாலும் வச்சுக்கோ!'' என்று இடையிலிருந்த கூடையை எடுத்து அவனுக்கு எதிரே நீட்டினாள் அவள்.

உடனே இசக்கிமுத்து அரையணாவுக்கு மருக்கொழுந்து வாங்கித் தன்னுடைய மடியில் வைத்துக் கொண்டு நல்லமுத்துவைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

''என்ன அண்ணே, உனக்கும் சோக்குப் பிறந்துடிச்சுப் போல் இருக்குது!'' என்றான் நல்லமுத்து.

''நல்லாயிருக்குது அண்ணே, நீ சொல்றது! நான் மட்டும் என்ன உனக்கு மனுசனாகத் தோணலையா?''

''என்னியிலேருந்து நீ மனுசனானே, கள்ளுக்கடையை எடுத்த நாளிலே யிருந்துதானே!''

''நீ மட்டும் அதுக்கு முன்னாலேயே மனுசனா யிருந்தியா? போ அண்ணே, போ! வெளியே சொன்னா வெக்கக் கேடு; அழுதாத் துக்கக் கேடு. நம்ம அழகை நாமே எடுத்துச் சொல்லிக்கணுமாக்கும்?''

''சரி அண்ணே, நானும் மருக்கொழுந்து வாங்கிக்கிறேன்; எனக்கும் சோக்குப் பிறக்கட்டும்!'' என்று சொல்லிக் கொண்டே நல்லமுத்தும் அரையணாவுக்கு மருக்கொழுந்து வாங்கித் தன் மடியில் வைத்துக் கொண்டான்.

இருவரும் மேலே நடந்தனர்.

சிறிது தூரம் சென்றதும் எங்கிருந்தோ சாராய நெடி 'குப்'பென்று வந்து அவர்களுடைய மூக்கைத் துளைத்தது. திடுக்கிட்டுத்

திருதிருவென்று விழித்துக் கொண்டே இருந்தவாறு சுற்றும் முற்றும் பார்த்தனர். என்ன கண்ணாறாக் காட்சி இது! - கண்ணுக்கெட்டிய தூரத்தில் பேச்சிமுத்து பேச்சு மூச்சற்றுக் கீழே விழுந்து கிடந்தான்.

இசக்கிமுத்து அவனை நெருங்கி இப்படியும் அப்படியுமாய் இரண்டு உருட்டு உருட்டிப் பார்த்தான்; ஆசாமி அசைந்து கொடுப்பதாயில்லை. நல்லமுத்து ஒரு பெரும் பிராயத்தனம் செய்து அவனைத் தூக்கி உட்கார வைத்தான். அவ்வளவுதான்; 'கப கப'வென்று பேச்சிமுத்து வாயிலெடுத்துவிட்டான்!

இதனால் அவனுடைய மயக்கம் கொஞ்சம் தெளிந்தது. கண்களை அகல விரித்து அவன் தனக்கு எதிரேயிருந்தவர்களைப் பார்த்தான்; இருவர் நால்வராகத் தோன்றினர்.

அடுத்த நிமிஷம், ''ஐயையோ! ஆப்பிட்டுக்கிட்டேன்! ஐயையோ! ஆப்பிட்டுக்கிட்டேன்!'' என்று அலறிக்கொண்டே அவன் எழுந்து ஓட முயன்றான்.

முடியவில்லை!

''என்ன தம்பி இந்த லோகத்திலேதான் நீ இருக்கிறாயா? இல்லை வேறே எந்த லோகத்திலாச்சும் இருக்கிறாயா?'' என்று அவனுடைய தலையைப் பிடித்து ஆட்டிய வண்ணம் கேட்டான் நல்லமுத்து.

அவனுடைய கேள்விக்குப் பேச்சிமுத்து ஒன்றும் பதில் சொல்லவில்லை. அதற்கு பதிலாக அவன், ''கபர்தார்! கபர்தார்!'' என்று சம்பந்தமில்லாமல் கத்தினான்.

'கபர்தார்' என்ற வார்த்தையைக் கேட்டதும் இசக்கிமுத்தும் நல்லமுத்தும் ஒருவரை யொருவர் ஜாடையாகப் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

''என்ன அண்ணே, விசயம் புரிஞ்சுதா?'' என்று கேட்டான் இசக்கிமுத்து.

''ரொம்ப நல்லாப் புரிஞ்சுது!'' என்று தலையைப் பலமாக ஆட்டினான் நல்லமுத்து.

அதற்குள் ஓரளவு சுய உணர்ச்சி பெற்று பேச்சிமுத்து தட்டுத் தடுமாறி எழுந்து நின்று இசக்கிமுத்துவையும் நல்லமுத்துவையும் மாறி மாறிப் பார்த்தான்.

''என்ன, தம்பி! நல்லாயிருக்குதா, நியாயம்?'' என்று அவனுடைய தோளைப் பிடித்துக் குலுக்கிய வண்ணம் கேட்டான் நல்லமுத்து.

பேச்சிமுத்து தலையைச் சொறிந்துகொண்டே, ''குரலைப் பார்த்தா நல்லமுத்து அண்ணனாட்டம் இருக்குது; ஆனா பார்க்கிற பார்வையைப் பார்த்தா போலீசு ஜவானாட்டம் இருக்குதே!'' என்று முணுமுணுத்தன.

''பயப்படாதே, நல்லமுத்து அண்ணன்தான்!'' என்றான் நல்லமுத்து.

''நல்லமுத்து அண்ணே! நல்ல சமயத்திலே வந்து சேர்ந்தேப்பா! - இதோ உன் பக்கத்திலே நிற்கிறாரே, இவர் யாரு?''

''இசக்கிமுத்து அண்ணன்!''

''அப்படியா சங்கதி? நீங்க போலீசு ஜவானுங்களாக்கும்னு நெனைச்சி நான் பயந்தே போயிட்டேன்!'' என்றான் பேச்சிமுத்து.

''அப்படிப் பயந்துகிட்டு இந்த ஜோலிக்கு ஏன் போகணும், தம்பி?''

''என்னமோ, போனேன்! மனசு கேக்குதா?''

''ஆமாம்; ஆறு மாசம் உள்ளே தள்ளி வச்சாத்தானே மனசு கேக்கும்!''

''அப்படின்னா நீ என்னைப் போலீசு ஜவானுங்கக்கிட்ட காட்டிக் கொடுத்துடப் போறியா?''

''பின்னே, அப்போத்தானே உனக்குப் புத்திவரும்?''

''அண்ணே, அண்ணே! உன் காலிலே விழுந்து கேட்டுக்கிறேன். அண்ணா! - நீ என்னை வேணும்னா காட்டிக் கொடுத்துடு; அந்த 'கபார்தார் ஐயா'வை மட்டும் காட்டிக் கொடுத்திடாதே!''

''கொடுத்தா என்ன, தம்பி?''

''ஐயையோ! என் தலை போயிடுமே! அவரு கொடுக்கும்போதே சொல்லித் தானே கொடுக்கிறாரு - 'அடே, உன் காசு எனக்கு பெரிசில்லே! என்னமோ கஷ்டப்பட்டுக் களைச்சுப் போறியேன்னு கள்ளத்தனமா இந்தச் சாராயத்தை காய்ச்சி கொடுக்கிறேன். குடிச்சிட்டுப் போய்ப் பேசாமக் குடிசையிலே படுத்துக்கிடக்கணும். வழியிலே தப்புத் தண்டாவுக்குப் போய்ப் போலீசு ஜவானுங்கக்கிட்ட மாட்டிக்கிட்டியோ, என் பேரை வெளியிலே சொல்லக்கூடாது. அடியோ, உதையோ, குத்தோ, ஜெயிலோ எதுவாயிருந்தாலும் நீ தான் அனுபவிச்சித் தீரணும். அதிலே என்னையும் மாட்டிவிட்டியோ, உன்

தலை என் புழக்கடையிலே கிடந்து உருளும் - ஆமாம் கபர்தார்!''என்று ஒரு தடவை ரெண்டு தடவையில்லே, ஆயிரந் தடவை சொல்லித்தானே கொடுக்கிறாரு?''

''புழக்கடையிலே தலை கிடந்து உருளும்னா அவரு என்ன, இந்த ஊருக்கு ராசாவா?'' என்று கேட்டான் நல்லமுத்து.

''சங்கதி தெரியாதுபோல இருக்குது! போன வாரம் அவரு வீட்டுப் புழக்கடையிலே புதுசா ஒரு கிணறு தோண்டினாங்களாம். தோண்டத் தோண்ட ஒரே மனுசனுங்க மண்டையும் எலும்புமா வந்ததாம்! அத்தனை பேரை அவரு அக்கம் பக்கம் தெரியாம தீர்த்துப்பிட்டு இருக்காரு, தெரியுமா?'' என்றான் பேச்சிமுத்து.

இதைக் கேட்டதும் நல்லமுத்துவுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்துவிட்டது. அவன் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டான்.

இசக்கிமுத்துவுக்கு அவன் சிரித்தது பிடிக்கவில்லை. ''உனக்கு எல்லாம் வேடிக்கையாகத்தான் இருக்கும்!'' என்றான் அவன்.

''நீ கூடவா அண்ணே, அதை நம்பறே? விசயம் என்னான்னா, அவரு வீடு இருந்த இடத்திலே முன்னே இடுகாடு இருந்ததாம். அதுதான் அந்த இடத்திலே எங்கே தோண்டினாலும் மனுசனுங்க மண்டையும் எலும்புமா கெடைக்குதாம்! இப்போ தெரியுதா, எது நிசம், எது பொய்ன்னு?'' என்று சட்டென்று ஒரு 'கதை'யைக் கட்டி விட்டுவிட்டு, நல்லமுத்து மீண்டும் விழுந்து விழுந்து சிரித்தான்.

''உனக்கு எப்பொப் பார்த்தாலும் இந்த விளையாட்டுப் புத்திதான், அண்ணே! வாயை மூடிக்கிட்டுப் பேசாம வா; வீட்டுக்குப் போவோம்!'' என்று சொல்லிக் கொண்டே இசக்கிமுத்து நடையைக் கட்டினான். நல்லமுத்து அவனைப் பின் தொடர்ந்தான்! பேச்சிமுத்தும் அவர்களைத் தொடர்ந்து 'பின்னால் நடை' நடந்து சென்றான்.

* * *

மறுநாள் மாலை கிராம வீடுகளில் சில அங்கொன்றும் இங்கொன்றுமாக அப்பொழுது தான் புகைய ஆரம்பித்திருந்தது. அவ்வாறு புகைய ஆரம்பித்திருந்த குடிசைகளுக்கு முன்னால் பசியை மறக்கப் புழுதியில் புரண்டு விளையாடிவிட்டு வந்த குழந்தைகள், குதித்துக் கைகொட்டிக் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தன. அன்றிரவு நிச்சயம் சோறு கிடைக்கும் என்ற நம்பிக்கை அந்தக்

குழந்தைகளை அப்படி யெல்லாம் ஆடச் செய்துகொண்டிருந்தது. 'மாஜி குடியர்'களில் பலர் தேநீர் கடையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்; அவர்களுடைய விழி ராஜவிழியாயிருந்தது. 'திருட்டுச் சாராயம் குடித்துவிட்டு வருவதற்காகச் சிலர் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றனர்; அவர்களுடைய விழி திருட்டு விழியாயிருந்தது. தலையை வாரி முடிந்து கொள்ளக்கூட நேரமில்லாத - நேரமிருந்தாலும் விருப்பமில்லாத கிராமத்துப் பெண்களில் பலர் நீர்க் குடத்துடன் கிணற்றடியில் நின்று, தங்களுடைய தரித்திரத்தை ஓரளவு மிகையாகவே உருவகப்படுத்தி உலகத்துக்குக் காட்டிக் கொண்டிருந்தனர். திண்ணைக் கச்சேரிகளிலும் மரத்தடிக் கச்சேரிகளிலும் கலந்துகொண்ட பரசிரம ஜீவிகளின் கூச்சலோ பெருங் கூச்சலாயிருந்தது. அவர்களுடைய கூச்சல் பொழுது விடிந்ததும் குளக்கரையில் மல்லாந்து படுத்துவிடும் மழைக் காலத்து மண்டூகங்களின் ஓசை நயத்தோடு கூடிய இரைச்சலை ஒத்திருந்தது. மூன்று மாதத்துக்கொருமுறை, ஆறு மாதத்துக்கொருமுறை காசைக் கண்ணால் பார்க்கும் கிராமத்துச் சுய சிரம ஜீவிகளோ களைப்பின் மிகுதியால் கஞ்சித் தண்ணீருக்காக அடுப்பண்டை காத்துக் கொண்டிருந்தனர். உலர்ந்த வெற்றிலை சருகைப் போட்டுக் குதப்புவதிலேயே இந்த உலகத்தையும் - ஏன் சோற்றையும்கூட மறந்துவிடும் கிராமத்து கிழவர்களும் கிழவிகளும் தங்களுடைய பேரப்பிள்ளைகளை அழைத்துக் கொஞ்சம் வெற்றிலை பாக்கு நறுக்கித் தருமாறு வேண்டிக் கொண்டிருந்தனர். மாடும் மனிதனும் ஒன்றாக ஓய்வு பெறும் அந்த வேளையிலே, புஷ்பராஜ் தன்னுடைய ஆற்றங்கரை பங்களாவின் அழகிய வராந்தாவில் இப்படியும் அப்படியுமாக 'ராஜ நடை' போட்டுக் கொண்டிருந்தான்.

கிராமத்தின் ஒரு கோடியில் தனியாக இருந்த அந்தப் பங்களாவின் முன்னால் அவனுடைய கவனத்தைக் கவருவதற்கு எத்தனையோ காட்சிகள் இருந்தன. எனினும் முதல் நாள் எழுந்த கேள்வி அவனுடைய உள்ளத்தில் ஏனோ இன்னும் இடம் பெற்றிருந்தது.

''சட்டத்தை மீறிச் சாராயம் காய்ச்சும் அந்தக் குடிகெடுக்கும் மனுசன் யாராயிருக்கும்?''

புஷ்பராஜின் சிந்தனை மேலும் மேலும் விரிந்து கொண்டே சென்றது. அவ்வாறு விரிந்த சிந்தனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கத்தானோ என்னமோ 'மாஜி குடியன்' ஒருவன் அங்கே வந்து சேர்ந்தான்.

அவனைக் கண்டதும், ''யார் அப்பா நீ?'' என்று கேட்டான் புஷ்பராஜ்.

''பேச்சிமுத்துங்க!'' என்றான் வந்தவன்.

'பேச்சிமுத்து' என்றதும் முதல் நாள் தேநீர்க் கடையில் நடந்த சம்பாஷணை புஷ்பராஜின் நினைவுக்கு வந்தது. அவன் ஒரு கணம் திடுக்கிட்டான். மறுகணம் இன்னொரு சந்தேகம் எழவே, ''அது சரி; உனக்கு இசக்கிமுத்தைத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''தெரியுங்க!''

''நல்லமுத்து....?''

தூக்கிவாரிப் போட்டது பேச்சிமுத்துக்கு - ''தெரியுங்க....!'' என்று சொல்ல ஆரம்பித்தவன், ''தெரியாதுங்க!'' என்று குழறினான்.

அந்தப் பயல்கள் ஒருவேளை 'கபர்தார் ஐயா'வைப் பற்றி இந்தப் பிள்ளையாண்டானிடம் சொல்லி விட்டார்களோ, என்னமோ என்ற சந்தேகம் வந்து விட்டது அவனுக்கு.

அந்த அப்பாவியின் நிலையை ஒருவாறு உணர்ந்த புஷ்பராஜ் பேச்சை மாற்ற எண்ணி ''சரி இப்போ நீ எதற்காக இங்கே வந்திருக்கிறே?'' என்று கேட்டான்.

அதற்குள் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டான் பேச்சிமுத்து. ''என்னசாமி, ஒண்ணுந் தெரியாத மாதிரிக் கேட்கிறீங்களே! இந்த நேரத்திலே, இப்படிப் பதுங்கிப் பதுங்கிப் பார்த்து முழிச்சுக்கிட்டு வேறே எங்கே வருவேனுங்க?'' என்றான்.

''எனக்கு உண்மையிலேயே ஒன்றும் தெரியாது! நான் இந்த ஊருக்குப் புதுசு; நீயே விஷயத்தைச் சொல்லு!'' என்றான் புஷ்பராஜ்.

பேச்சிமுத்துவுக்கு மீண்டும் சந்தேகம் வந்துவிட்டது. ''அப்படின்னா நீங்க யாருங்க?'' என்று கேட்டான்.

இந்தச் சமயத்தில் உள்ளே யிருந்துவந்த ஒரு நெடிதுயர்ந்த மனிதர் ''என்னடா, பேச்சிமுத்து! அவனை உனக்குத் தெரியலையா?...அவன் என் மவன் புஸ்பராசன்! பட்டணத்திலே படிச்சுக்கிட்டு இருந்தான்; இப்போ லீவுலே ஊருக்கு வந்திருக்கிறான்!'' என்றார்.

''அப்படியா சாமி? இவரு பட்டணத்திலே படிச்சுக்கிட்டு இருந்தவரா? அதான் இவருக்கு ஒண்ணுமே தெரியலே!'' என்றான் பேச்சிமுத்து.

''ஆமாம், உன்னை நான் புழக்கடைப் பக்கமாகத்தானே வரச் சொன்னேன்? நீ ஏன் இந்தப் பக்கமா வந்தே?'' என்று கேட்டார் அந்த ஆஜானுபாகு.

''அந்த பக்கமாகத்தான் வந்தேன், சாமி! அங்கே இந்த நல்லமுத்துப் பய இல்லே; அவன் நின்னுக்கிட்டிருந்தான்; அவனுக்கு நம்ம விசயம் தெரிவானேன்னு இப்படி வந்துட்டேன்!'' என்றான் பேச்சிமுத்து.

''தெரிஞ்சா, என்னடா? அந்தப் பய உன்னை வெல்லத்திலே வெச்சு முழுங்கிடுவானா? அந்த மாதிரிச் சோனிப்பயங்களுக்கெல்லாம் நீ ஒண்ணும் பயப்பட வேணாம். நாளையிலேயிருந்தாச்சும் நீ புழக்கடைப் பக்கமா வா; உன்னைப்போல் எத்தனையே பேர் அந்தப் பக்கமா வரப்போ, நீ மட்டும் இந்தப் பக்கம் வருவானேன்?'' என்று ஊக்கமூட்டிய வண்ணம் அவனைப் புழக்கடைக்கு அழைத்துச் சென்றார் புஷ்பராஜின் தகப்பனார்.

இப்பொழுது தான் புழக்கடையில் பூட்டியிருந்த ஓர் அறை புஷ்பராஜின் ஞாபகத்துக்கு வந்தது. முதல் நாள் இரவு அவன் புழக்கடைப் பக்கமே போகவில்லை; மறுநாள் காலையில்தான் அந்தப் பக்கம் போயிருந்தான். அப்போது பூட்டியிருந்த அந்த அறையையும் பார்த்தான். அதற்குள் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள அவனுக்குக் காலையில் விருப்பமில்லை. இப்போது தன்னுடைய தகப்பனார் பேச்சிமுத்தைப் புழக்கடைப் பக்கமாக அழைத்துச் செல்லவே, அந்த அறைக்குள் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள அவன் விரும்பினான்.

ஆனால் தன் மகன் தன்னுடன் வருவதைத் தகப்பனார் விரும்பவில்லை. அவர் அவனைத் தடுத்து நிறுத்தி, ''இதெல்லாம் பெரியவங்க காரியம்; நீ ஒண்ணும் கண்டுக்கிடாதே! போ, போய் உன் வேலையைப் பாரு! இல்லாட்டா, ஏதாச்சும் ஒரு புத்தகத்தை எடுத்து வச்சிகிட்டுப் படி!'' என்றார்.

''இருக்கட்டும் அப்பா! உங்களுடைய வேலையை நானுந்தான் கொஞ்சம் பார்க்கிறேன்!'' என்றான் புஷ்பராஜ்.

''அப்படின்னா எனக்குச் சந்தோசந்தான்! - ஆனா இந்த விசயம் அக்கம் பக்கம் தெரியக்கூடாது - ஆமாம், கபர்தார்!'' என்று எச்சரித்தார் தகப்பனார்.

''அக்கம் பக்கத்திலேதான் யாருமே இல்லையே!'' என்று சொல்லிக் கையை விரித்துக் கொண்டே அவர்களை தொடர்ந்து சென்றான் புஷ்பராஜ்.

ஐயோ! இது என்ன? அங்கே பூட்டியிருந்த அறை திறந்திருந்தது. அந்த அறைக்கு முன்னால் பத்துப் பன்னிரண்டு பேர் கூடியிருந்தனர். அதற்குள் போட்டிருந்த ஒரு நாற்காலியின் மேல் பெரிய ஜாடி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது! அதன் அருகே பயங்கர ஆகிருதியுடன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவனுடைய கையில் ஓர் அளவுக் கிண்ணம் இருந்தது. அந்த ஆசாமி உள்ளே வந்த வாடிக்கைக்காரர்களுக்கெல்லாம் நாட்டுச் சாராயத்தை அளந்து ஊற்றிக் கொண்டிருந்தான்.

அதாவது, மதுவிலக்குப் பிராந்தியத்தில் அசல் சாராயக் கடை ஒன்று திறந்து வைக்கப்பட்டிருந்தது.

அருவருக்கத்தக்க இந்தக் காட்சியைக் கண்டதும் புஷ்பராஜின் கண்களில் தீப்பொறி பறந்தது. ''அப்பா! நீங்கள் தானா சட்டத்தை மீறிச் சாராயம் காய்ச்சும் அந்தக் குடிகெடுக்கும் மனிதர்?'' என்று அவன் வியப்புடன் கேட்டான்.

அவன் குரல் நடுங்கிற்று.

''ஆமாண்டா, ஆமாம்!'' என்று சொல்லிவிட்டு அவர் ஒரு பயங்கரச் சிரிப்புச் சிரித்தார்.

அவன் தலை சுழன்றது.

''அப்பா! இது சட்ட விரோதம்'' என்று ஆரம்பித்தான் அவன்.

''அது எனக்குத் தெரியும்; அப்புறம்?'' என்று உறுமினார் அவர்.

''மனித தர்மத்துக்கும் விரோதம், அப்பா!''

''அதுவும் எனக்குத் தெரியும்; அப்புறம்?''

''அப்புறமா! திருட்டுச் சாராயத்தை காய்ச்சி ஊற்றி இந்த ஊமை ஜனங்களை அணுஅணுவாகக் கொல்வதைக் காட்டிலும், விஷத்தை ஊற்றி ஒரேயடியாய்க் கொன்றுவிடலாம், அப்பா!'' என்றான் அவன்.

''அடேய், என்ன சொன்னே? நேற்று பிறந்த பயல், நீ! நீயா எனக்கு வந்து புத்தி சொல்றே? 'இதெல்லாம் பெரியவங்க காரியம்; நீ ஒண்ணும் கண்டுகிடாதே!' என்று நான் உனக்கு முன்னாலேயே

சொன்னேனா, இல்லையா? - வீணா என்னுடைய கோவத்துக்கு ஆளாகாதே, போ!''

''இந்த அக்கிரமத்தை நீங்கள் நிறுத்தாதவரை என் உயிரே போவதாயிருந்தாலும் சரி, நான் இந்த இடத்தை விட்டுப் போகவே மாட்டேன்!''

''அட, பெரிய சீமான் இவரு! - சீ, போடா நாயே! இந்தக் 'கபர்தார் கனகராஜ்' கிட்டவா வந்து நீ 'கணக்கு'ப் பண்றே, கணக்கு? இந்த இடத்தைவிட்டு மரியாதையாய்ப் போறியா? - இல்லே, நானே கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளட்டுமா?'' என்று அவர் சிம்மநாதம் செய்தார்.

அவ்வளவுதான்; மகன் ஆட்டுக்குட்டியாக அடங்கி நின்ற இடத்திலேயே நின்றான்.

கபர்தார் கனகராஜ் கண்கள் 'ஜிவ்'வென்று சிவக்க, மீசை முறுக்குக்கலைந்து துடிக்க, அவனை ஏறிட்டுப் பார்த்தார்.

அப்பொழுதும் அவன் அசைந்து கொடுக்கவில்லை!

அடுத்த நிமிஷம் 'பளீர் பளீர்' என்று இரண்டு அறைகள் அவனுடைய கன்னத்தில் மின்னலிட்டன.

புஷ்பராஜ் அசந்துபோனான்!

அதற்குப் பிறகு அவன் அங்கே நிற்கவில்லை. கன்னத்தைத் தடவிக் கொண்டே தன் அறைக்கு வந்து சேர்ந்தான்.

திருட்டுச் சாராயவியாபாரம் எந்தவிதமான இடைஞ்சலுமின்றி வழக்கம் போல் இரவு பத்து மணி வரை தொடர்ந்து நடந்து முடிந்தது.

* * *

**ப**த்து மணிக்குப் பிறகு புழக்கடை அறையை பூட்டிக் கொண்டு வந்த கபர்தார் கனகராஜ் நேரே புஷ்பராஜின் அறைக்குள் ஆவேசத்துடன் நுழைந்தார்.

அவருடைய ஆவேசத்தைக் கண்டதும் புஷ்பராஜ் தன்னையறியாமலே எழுந்து நின்றான்.

''அடேய், எனக்கு முன்னமேயே தெரியும் - நீ இப்படி ஏதாச்சும் 'தத்துப்பித்து'ன்னு உளறுவேன்னு! - பேசாம நான் சொல்றதைக்

கேளு! உனக்கும் எனக்கும் இனிமே சரிப்பட்டு வராது. பட்டணத்துப் படிப்புப் படிச்சி உன் புத்தி கோணலாப் போயிடுச்சு! 'காத்துள்ள போதே தூத்திக்கணும்' என்கிறாப்போல, கள்ளுக் கடையை எடுத்திருக்கிற இந்த நாளிலேதான் நான் நாலுகாசு சம்பாதிக்கணும்னு இருக்கேன். அதுக்கு இடைஞ்சலா நீ இருந்தியோ, எனக்கு ரொம்பக் கோவம் வரும் - ஆமாம், கபர்தார்! - அந்தக் கோவத்திலே நான் உன்னை என்ன வேணுமானாலும் செய்துபிடுவேன்! - அதனாலே இன்னிக்கு ராத்திரியே நீ திரும்பிப் பட்டணத்துக்குப் போயிடறதுதான் நல்லது. இந்தா, ஒரு அம்பது ரூவா வச்சுக்கோ! அப்புறம் மாசா மாசம் உன் செலவுக்கு நான் வழக்கம் போல் பணம் அனுப்பறேன் - என்ன? என்று நயத்துடன் பயமும் காட்டிப் பார்த்தார் கனகராஜ்.

''இருக்கிற காசே ஏழு தலைமுறைக்குப் போதுமே அப்பா!'' என்று மீண்டும் ஏதோ சபலத்துடன் ஆரம்பித்தான் புஷ்பராஜ்.

''இந்த உபதேசந்தானே நான் வேணாங்கிறேன்!'' என்று கர்ஜித்தார் கனகராஜ்.

புஷ்பராஜ் அதற்குமேல் என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவன் வாயடைத்துப் போனான். கபர்தார் கனகராஜ் அவனுடைய கையில் ஐம்பது ரூபாயைப் பலவந்தமாகத் திணித்தார்.

புஷ்பராஜ் அந்தப் பணத்தையும் அப்பாவின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான். அதற்குப் பிறகு எதிர்ச் சுவரில் மாட்டியிருந்த தன் தாயாரின் போட்டோவைப் பார்த்தான். ஒரு நீண்ட பெருமூச்சுக்குப் பிறகு, 'அம்மா இன்று உயிருடன் இருந்திருந்தால்....?' என்று எண்ணி அவன் மனம் ஒரு கணம் ஏங்கிற்று. மறுகணம் அம்மா இன்று இல்லாமற் போனதே மேல்' என்று எண்ணி அவன் மனம் ஆறுதலடைந்தது.

சிற்றன்னையோ அந்தப் பக்கம் தலைகாட்டவேயில்லை; கபர்தார் கனகராஜைக் கண்டால் அவளுக்கு அவ்வளவு தைரியம்!

புஷ்பராஜ் நின்றது நின்றபடி நின்று மேலே என்ன செய்வதென்று யோசித்தான். கபர்தார் கனகராஜ் பொறுமையிழந்து, ''என்ன சொல்கிறாய்?'' என்று அதட்டினார்.

''அப்படியே ஆகட்டும், அப்பா!'' என்று சொல்லிவிட்டான் புஷ்பராஜ்.

அந்த நிமிஷம் அப்பாவின் யோசனை அவனுக்கு ஒரு விதத்தில் நல்லாதாகவே தோன்றிற்று. ஆனால் அடுத்த நிமிஷம்...?

அவனுடைய மன்திலே ஒரு பெரிய போராட்டம் எழுந்தது. அந்தப் போராட்டத்தின் காரணமாக அவனுடைய யோசனை வேறு திக்கை நோக்கிச் சென்றது. அந்தத் திக்கிலே ஒரு வாயில்லாத பசுவின் கன்றுக்காகத் தன் ஒரே மகனைத் தேர்க்காலில் பலிகொடுத்து நீதி வழங்கிய சோழனை அவன் அகக்கண்ணால் கண்டான்.

அவ்வளவுதான்; அவன் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த எரிமலை வெடித்தது!

அதன் பலன்....?

* * *

அன்றிரவே வீட்டை விட்டுச் சென்ற புஷ்பராஜ் மறுநாளை காலை கபர்தார் கனகராஜ் கொஞ்சமும் எதிர்பாராத விதமாகப் போலீஸ் அதிகாரிகளுடன் வீட்டுக்குள் நுழைந்தான். புழக்கடையில் பூட்டி வைக்கப்பட்டிருந்த அறை கபர்தாரின் உத்தரவில்லாமலே திறக்கப்பட்டது. உள்ளேயிருந்த சாராய ஜாடிகளெல்லாம் போலீஸாரால் கைப்பற்றப்பட்டன.

கபர்தார் கனகராஜ் கைதியானார்!

அதுவரை தன் மார்பை அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்த புஷ்பராஜ், அப்பாவை அந்தக் கோலத்தில் பார்க்கச் சகிக்காமல் கண்களைக் கைகளால் மறைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதான்.

என்ன விசித்திரமான மனித இதயம்!

* * *

அடுத்த சில நாட்களில் கபர்தார் கனகராஜின் வாக்கு மூலத்தைக் கொண்டு மற்றும் பலரைப் போலீஸார் கைது செய்தனர். அவர்களெல்லாம் கபர்தாருக்குத் துணையாக இருந்து, அவ்வப்பொழுது திருட்டுச் சாராயம் காய்ச்சி கிராமமெங்கும் விநியோகித்துக் கொண்டிருந்தவர்கள் என்ற விஷயம் பின்னால் தெரிந்தது.

காட்டுத் தீ போல் பரவிய இந்தச் சேதி தாழம்பேடு முழுவதையுமே ஒரு கலக்குக் கலக்கி விட்டது. அதன் காரணமாகப் புஷ்பராஜைச் சிலர் வைதார்கள்; சிலர் வாழ்த்தினார்கள்.

நல்லமுத்தோ அவனைத் 'தெய்வம்' என்றே சொல்லி விட்டான்!

எதையும் புஷ்பராஜ் பொருட்படுத்தவில்லை. ஆனால் அவனுடைய இதயத்தின் அடிவாரத்தில் மட்டும் இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு வேதனை குடி கொண்டிருந்தது. அந்த வேதனை சிற்றன்னைக்கு என்ன சமாதானம் சொல்வதென்ற வேதனைதான்.

அவளோ அவனை ஏறெடுத்துக் கூடப் பார்க்காமல் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக ஒரு மூலையில் உட்கார்ந்து 'துக்கம்' கொண்டாடிக் கொண்டிருந்தாள்.

புஷ்பராஜ் அவளை மெல்ல நெருங்கி, ''சித்தி என்னை மன்னித்து விடுங்கள் சித்தி!'' என்று தழுதழுத்த குரலில் வேண்டினான்.

அதே சமயத்தில் பத்திரிகைகளின் மூலம் விஷயத்தை அறிந்த கபர்தார் கனகராஜின் இளைய மாமனார் தாழம் பேடை நோக்கிப் பறந்து வந்து சேர்ந்தார்.

சோகமே உருவாய் உட்கார்ந்திருந்த மகளைக் கண்டதும் அவருக்குப் பகீரென்றது. ''ஏன் தம்பி! இப்படிக் கூடச் செய்யலாமா?'' என்று அவர் புஷ்பராஜை நோக்கிக் கேட்டார்.

அவரிடம் பணம் இல்லாததால்தானோ, என்னவோ அவருடைய குரலில் ஆத்திரம் இல்லை; அனுதாபம் இருந்தது.

புஷ்பராஜ் ஒன்றும் சொல்லாமல் தலையைக் குனிந்து கொண்டான். அவனுடைய கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் கீழே விழுந்து சிதறின.

பெரியவர் ''அவர் உன்னைப் பெற்று வளர்த்தவர் இல்லையா?'' என்று கேட்டார்.

புஷ்பராஜ் குனிந்த தலை நிமிராமல் ''ஆமாம்'' என்றான்.

''புஷ்பராஜ் என்று அழகாகப் பெயரிட்டு அன்புடன் உன்னை அழைத்தவர் இல்லையா?''

''ஆமாம்''

''நீ படித்து முன்னுக்கு வரவேண்டும் என்பதற்காகப் பணத்தைத் தண்ணீராப் பாவித்துச் செலவழித்தவர் இல்லையா?''

''ஆமாம்''

எல்லாவற்றுக்கும் அவன் ''ஆமாம்'' என்று சொல்லவே பெரியவர் இன்னும் கொஞ்சம் அவனை நெருங்கி, ''அப்படிப் பட்டவரா உனக்கு விரோதி?'' என்று கேட்டார்.

''அவர் எனக்கு விரோதி இல்லை...''

''பின்னே யாருக்குத் தம்பி விரோதி?''

''சமுதாயத்துக்கு விரோதி!''

''சொந்த அப்பாவை விடவா சமுதாயம் பெரிது?''

''ஆமாம், அது அப்பாவை விடப் பெரியது; அரசாங்கத்தை விடப் பெரியது!'' என்றான் புஷ்பராஜ்.

பெரியவர் வீட்டின் முகட்டைப் பார்த்த வண்ணம் ஒரு வினாடி யோசித்தார். பிறகு ''பிள்ளையாண்டான் சொல்வதும் ஒருவிதத்தில் சரிதான்; ஆனால் மனசு கேட்கமாட்டேன் என்கிறதே!'' என்றார்.

இந்தச் சமயத்தில் புஷ்பராஜின் சிற்றன்னை எழுந்து நின்று, ''பிள்ளையாண்டான் சொல்வது சரிதான், அப்பா! ஆனால் அந்த மனுசன் வெளியே வந்த பிறகு இந்தப் பிள்ளையை உயிரோடு வைத்திருக்க வேண்டுமே!'' என்று கண்ணீரும் கம்பலையுமாகத் தன் கவலையைத் தெரிவித்தாள்.

இதைக் கேட்டதும் புஷ்பராஜ் திகைத்துப் போனான்.

அடுத்த நிமிஷம் அவனுடைய இதய பாரம் குறைந்தது; முகமும் மலர்ந்தது. ''சித்தி, எனக்காக நீங்கள் வருந்த வேண்டாம். இதோ நான் இன்றே இந்த வீட்டை விட்டுப் போகிறேன்; எனக்கு அப்பாவின் பணமும் வேண்டாம்; பாத்தியதையும் வேண்டாம். வஞ்சகமின்றி உழைத்து வயிறு வளர்க்கும் கோடானு கோடி மக்களில் ஒருவனாக நானும் வாழ்கிறேன். அவர் சிறையிலிருந்து விடுதலையாகி வரும்வரை தாத்தா உங்களுக்குத் துணையாக இருக்கட்டும்!'' என்று சொல்லிவிட்டு, அவன் 'விர்'ரென்று வெளியே கிளம்பி விட்டான்.

அதற்குப் பிறகு புஷ்பராஜ் அந்தப் பக்கம் திரும்பவே இல்லை. இவ்வளவு பெரிய உலகத்தில் அவன் நாணயத்துடன் வாழ இடமா கிடைக்காமற் போயிருக்கும்?

# சுற்றமும் நட்பும்

ஒரு மாதத்திற்குப் பிறகு, அன்றுதான் ஊரிலிருந்து திரும்பி வந்தேன். எனது நண்பன் அரங்கநாதன் இறந்து விட்டான் என்ற செய்தி என் காதில் விழுந்தது. காலனைக் காலால் உதைத்தானாமே, அந்த சிவனை வழிபடுவதில் சாட்சாத் மார்க்கண்டேயனைக் கூடத் தூக்கியடித்துக் கொண்டிருந்த அவனுக்கா இந்த கதி?

''குழந்தையைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு பாலூட்டும் அதன் தாய், ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்துக்கு மாற்றும்போது அது வீறிட்டு அழுகிறது. மீண்டும் தனக்குப் பாலூட்டுவதற்காகத்தான் அன்னை அவ்வாறு செய்கிறாள் என்பதை அறிவதில்லை. அந்தக் குழந்தையின் அழுகையைப் போன்றதுதான் மனிதன் மரணத்தைக் கண்டு மனம் பதைப்பதும்'' என்கிறார் கவியரசர் தாகூர். ஆனாலும் அவனையறிந்த இதயம் சும்மா யிருக்கிறதா? என்னவெல்லாமோ எண்ணி எண்ணி ஏங்குகிறது....

என்னுடைய நிலை இப்படியென்றால் அவனுடைய சுகதுக்கங்களில் என்னைவிடச் சிறப்பாகப் பங்கெடுத்துக் கொண்டிருந்த அவன் மனைவியும் மக்களும் எந்த நிலையில் இருப்பார்கள்? - அவர்களைப் போய்ப் பார்த்து விட்டு வரலா மென்று புறப்பட்டேன்.

வழியில் சதாசிவம் வந்து கொண்டிருந்தார். அரங்கநாதனின் அத்தியந்த நண்பர் அவர். என்னைக் கண்டதும் ''உங்களுக்குச் சமாச்சாரம் தெரியுமா என்று அவர் ஆரம்பித்தார்.

''தெரியும்; அரங்கநாதன்..

''ஆமாம், என்ன அநியாயம் பாருங்கள். இன்னும் அவர் மறைந்துவிட்ட மாதிரியே எனக்குத் தோன்றவில்லை. அடடா, என்ன தங்கமான குணம்! கேட்கும் போதெல்லாம் நூறும் இறுநூறுமாகக் கொடுத்துக் கொண்டே யிருப்பார். இனிமேல் அவரைப்போல் எனக்கு யார் உதவப் போகிறார்கள்?'' என்றார் அவர்.

''ம் என்ன செய்யலாம்? நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்! என்று உலக வழக்கத்தை யொட்டி உதட்டைப் பிதுக்கிவிட்டு, நான் மேலே நடையைக் கட்டினேன்.

அரங்க நாதனின் வீடு நெருங்கிற்று. முன்னிருந்த களை இப்போது அந்த வீட்டிற்கு இல்லை; பட்டப் பகலிலேயே இருளடைந்து கிடந்தது. உள்ளே நுழைந்தேன். கலகலப்பே யில்லை; வெறிச்சென்றிருந்தது. அவருடைய மூத்த குமாரனான விநாயகம் மட்டும் சோகமே உருவாய்க் கூடத்தில் உட்கார்ந்திருந்தான்.

என்னைக் கண்டதும் அவன் கண்களில் துளித்த நீரைக் கைக்குட்டையால் துடைத்து விட்டுக்கொண்டே, ''வாருங்கள்!'' என்றான். அவனுடைய கையை அனுதாபத்தோடு பற்றி, ''அழாதே, விநாயகம்! அவன் விருப்பம் அப்படி யிருந்தால் அதற்கு நாம் என்ன செய்யலாம்?'' என்று நான் அவனுக்கு நம் வழக்கத்தை யொட்டி வானத்தைக் காட்டினேன்.

அவன் அதைப் பார்த்து விட்டு ஆளை விடாமல், ''ஒரு விஷயம் கேளுங்கள்!'' என்னிடம் அவர் எதைச் சொன்னாலும் மற்றவர்களைப் போல் நான் அவ்வளவு எளிதில் ஒப்புக் கொள்வதே இல்லை. இல்லாத விதண்டா வாதமெல்லாம் செய்வேன். அவர் கொஞ்சமாவது கோபித்துக் கொள்வார் என்கிறீர்களா? மாட்டவே மாட்டார்; குலுங்க குலுங்கச் சிரித்துக் கொண்டே 'டேய், விநாயகம்! உனக்கு வாதம் செய்வதில் நல்ல திறமை யிருக்கிறது; நீ வக்கீல் வேலைக்குத்தான் படிக்க வேண்டும்!'' என்பார். நானும் இப்போது படிக்கும் பிஏயை முடித்ததும் அப்படியே படிக்கலாம் என்று எண்ணியிருந்தேன். என்னுடைய எண்ணத்தில் மண்ணைப் போட்டு விட்டு அவர் போயே போய்விட்டார் என்றான்.

இந்தச் சமயத்தில் அங்கே வந்த விநாயகத்தின் பாட்டி, ''இத்தனை நாளா எங்கேடாப்பா, போயிட்டே. அத்தனை சிநேகமாயிருந்து, கடைசியா ஒரு முறை அவன் முகத்தைப் பார்க்கக் கூட நீ கொடுத்துவைக்கலையே, உங்க வீட்டுக்கு ஆளைக்கூட அனுப்பி வைத்தோம். நீ ஊரிலேயே இல்லையாமே!...ம்.... என்னவோ, 'அவர்'தான் என்னை அமங்கலியாக்கிட்டுப் 'போறேன்'னு போய்விட்டாரே, இவனாவது என்னை எடுத்துப் போட்டுவிட்டுப் போவான்னு பார்த்தேன்; பாழும் தெய்வம் மோசம் பண்ணி விட்டது என்று இல்லாத தெய்வத்தின் மேல் பழியைப் போட்டுக் கொண்டே அவள் தன் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டாள்.

தர்ம சங்கடமாகப் போய்விட்டது எனக்கு. எழுந்து நின்றேன். எதிர்த்த அறையிலிருந்து விநாயகத்தின் தாயார் என்னைக் கண்டதும்

'கோ'வென்று கதற ஆரம்பித்து விட்டார். அவர் ஆணாயிருந்தாலும் 'அட! அது கிடக்கு விட்டுத் தள்ளப்பா! இது போனால் இன்னொன்று... 'ஜம்'மென்று கல்யாணம் செய்து கொண்டால் போச்சு!'' என்று ஊர் வழக்கத்தை யொட்டி உற்சாகப்படுத்தி யிருப்பேன். என்னுடைய துரதிர்ஷ்டம் அவள் பெண்ணா யிருந்துவிட்டாரே, என்ன செய்வது? மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு ''அழாதே, அம்மா, அழாதே! 'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றாமலே இருக்க போகிறான்?' என்று அந்தக் காலத்தில் வாய்க்கு வந்ததைச் சொல்லி வைத்தேன்.

''ஐயோ, மஞ்சள் குங்குமத்தோடு போய்ச் சேரலாமென்று இருந்தேனே! என்னுடைய தலையெழுத்து இப்படி ஆகிவிட்டதே? இந்தப் பாவிக்கு தலைவலி காய்ச்சல் என்றால் அவர் என்ன பாடு படுத்துவார்? அங்கேயும் இங்கேயுமாகக் குட்டி போட்ட பூனைபோல ஓடி ஓடிவருவாரே! இனிமேல் அப்படி யார் எனக்காக அலையப் போகிறார்கள்?'' என்றாள் அவள் விம்மலுக்கும் விக்கலுக்கும் இடையே.

அதைப்பார்க்கச் சகிக்காமல் நான் முகத்தைத் திருப்பினேன். ''என்ன இருந்தாலும் அந்தப் பாழும் தெய்வம் என்னை இப்படி அனாதையாக்கி விட்டிருக்க வேண்டாம்! என்னவோ, இத்தனை நாளும் என் கையைப் பிடித்தவர் என்னைப் பாடாய்ப் படுத்தி வைக்கும்போதெல்லாம் ''அண்ணா இருக்கிறார்!'' என்று கொஞ்சம் தைரியமாயிருந்தேன். இப்போது அதுவும் போய்விட்டது!'' என்றாள் விநாயகத்தின் அத்தை.

என்னால் முடிந்தவரை அந்த அம்மாவையும் ஒருவாறு தேற்றிவிட்டு வீடு திரும்பினேன்.

வழியில் என் சிந்தனை சுழன்றது. சதாசிவமோ ''கேட்டபோதெல்லாம் இனி யார் எனக்குக் கடன் கொடுக்கப் போகிறார்கள்!'' என்று வருந்துகிறார்.

விநாயகமோ, ''வக்கீல் வேலைக்குப் படிக்க முடியாமற் போய்விட்டதே!'' என்று வருந்துகிறான்.

அம்மாவோ, ''என்னை எடுத்துப் போடாமல் எனக்கு முன்னால் போய் விட்டானே!'' என்று வருந்துகிறாள்.

மனைவியோ, ''என்னுடைய உடம்புக்கு ஏதாவது வந்தால் இனிமேல் கவனிப்பதற்கு யாரும் இல்லையே!'' என்று வருந்துகிறாள்.

தங்கையோ, ''அண்ணா இருக்கிறார்!'' என்று இனிமேல் தைரியமாய் இருப்பதற்கில்லையே!'' என்று வருந்துகிறாள்.

எல்லாம் அவரவர்களுடைய சொந்த நலனைப் பற்றி - அவனால் தாங்கள் அடைந்த அடையவிருக்கின்ற நன்மைகளைப் பற்றி.

அப்படியானால் இவ்வுலக வாழ்வை நீத்த அந்த அரங்க நாதனைப் பற்றி....

வருந்துவார் யார்?

இந்தக் கேள்விக்கு 'கேள்விக் குறி'க்கு உங்களில் யாராவது 'முற்றுப் புள்ளி' வைக்க முடியுமா?

எப்படி முடியும்? - சுற்றமும் நட்பும் சூழ இருப்பதே சுயநலத்துக்காகத் தானே!

அந்த 'சுயநல'த்தை மனிதன் செத்தாலும் விட மாட்டார்கள் போல் இருக்கிறது!

# முதல் தேதி

**மா**தக் கடைசி; தேதி இருபத்து மூன்று; வெள்ளிக்கிழமை; மாலை நேரம்.

கணேசன் காரியாலயத்திலிருந்து மனச்சோர்வுடன் வீட்டுக்குத் திரும்பி வந்தான். அவனுடைய சோர்வுக்குக் காரணம் வேறொன்றுமில்லை; இந்தியாவின் பொருளாதார நிலை திருப்திகரமா யிருப்பதுபோல், அவனுடைய பொருளாதார நிலை திருப்திகரமாக யில்லாமற் போனது தான்!

அவனுடைய மனைவி மரகதம் அப்பொழுதுதான் கோயிலுக்குப் போவதற்காக வெற்றிலை, பாக்கு, பூ, பழம் தேங்காய் முதலியவற்றையெல்லாம் எடுத்துப் பூக் கூடையில் வைத்துக் கொண்டிருந்தாள். கடைசியாக எதையோ எடுத்து வைக்கப் போனவள், அது இல்லாமற் போகவே கணேசனிடம் ஓடோடியும் வந்து, ''கற்பூரம் வீட்டில் இருக்கிறதாக்கும்னு நினைத்தேன் - இல்லை; ஒரு காலணா இருந்தால் கொடுக்கிறீர்களா?'' என்று கேட்டாள்.

கணேசன் தன்னுடைய 'மணிபர்'ஸை எடுத்துத் திறந்து பார்த்தான். அதில் ஒரே ஒரு ஓட்டைக் காலணா இருந்தது. அந்தக் காலணாவுக்கும் அன்று வரை செலவு இல்லாமற் போகவில்லை; 'மணிபர்ஸ் காலியாக இருக்கக் கூடாதே!' என்ற அசட்டு நம்பிக்கையின் காரணமாக அவன் அதைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தான்.

அந்தக் காலணாவைப் பெற்றுக் கொண்டதும் ''ஒரே ஒரு காலணாதான் வைத்திருக்கிறீர்கள் போலிருக்கிறது; அதற்கும் பகவான் பங்குக்கு வந்து விட்டார்!'' என்றாள் மரகதம் சிரித்துக் கொண்டே.

''பங்குக்கு வந்துவிட்டாரா! முழுக் காலணாவையும் அவரேயல்லவா அடித்துக் கொண்டு போகிறார்!'' என்றான் கணேசன்.

அதற்குள் குழந்தை பானு கையில் பூக்கூடையுடன் அங்கே வந்து, ''அம்மா! வா அம்மா!'' என்று மரகதத்தை அழைத்தாள்.

''அத்தை வரவில்லையா?'' என்று கேட்டாள் மரகதம்.

''இதோ வந்துவிட்டேன்!'' என்றாள் அறைக்குள் தன் குழந்தைக்குப் பால் ஊட்டிக் கொண்டிருந்த காவேரி, அவள் கணேசனின் தங்கை; ஊரிலிருந்து வந்திருந்தாள்.

நால்வரும் கோயிலுக்குக் கிளம்பினார்கள். குழந்தை முரளி மட்டும் போக வில்லை; அவன் ஏதோ பாடம் எழுதுவதில் முனைந்திருந்தான்.

''என்ன மரகதம், பேசாமற் போகிறாயே! நிஜமனைவியைவிட கதையில் வரும் மனைவியே எவ்வளவோ தேவலைபோலிருக்கிறதே!'' என்றான் கணேசன்.

மரதகம் சற்று நின்று அவனைத் திரும்பிப் பார்த்து, ''ஏன் நிஜ மனைவிக்கு என்ன குறைச்சலாம்?'' என்று கேட்டாள்.

''கணவன் வேலை முடிந்து வீட்டுக்கு வந்ததும் கதையில் வரும் மனைவி காப்பி கொடுக்கத் தவற மாட்டேன் என்கிறாள்; நீ என்னடாவென்றால்...?''

''கதையில் வரும் மனைவியா கொடுக்கிறாள்? கதாசிரியர் கொடுக்கிறார்! - அவருக்கென்ன, காப்பி போட வேண்டுமானால் சர்க்கரை தேவையில்லை, பால் தேவையில்லை, காப்பிப் பொடி தேவையில்லை. கையில் பேனாவும் மேஜையின்மேல் காகிதமும் இருந்தால் எத்தனை 'கப்' காப்பி வேண்டுமானாலும் போட்டுவிடுவார்! என்னால் அப்படிப் போட முடியுமா? நான்தான் காலையிலேயே படித்துப் படித்துச் சொல்லி யனுப்பினேனே, சாயங்காலம் வரும்போது மறக்காமல் காப்பிப் பொடி வாங்கி வாருங்கள் என்று! - வாங்கி வந்தீர்களா?''

''பால்காரன் கடனுக்குப் பால் ஊற்றுவது போலக் காப்பிப் பொடியும் யாராவது கடன் கொடுத்தால் தேவலை; இருபத்து மூன்றாம் தேதியன்று இன்னொரு சம்பளமா வருகிறது? முதல்தேதி யன்று தான் வாங்கிக் கொண்டு வரவேண்டும்''

''அப்படியானால் முதல் தேதி வரை காப்பி சாப்பிடாமல் இருங்கள்!''

''சரி, கொஞ்சம் வெந்நீராவது கொடுத்துவிட்டுப் போயேன்!''

''கொஞ்சம் என்ன! எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறேன்!'' என்று சொல்லிக் கொண்டே அடுக்களைக்குச் சென்று, ஒரு செம்பு நிறைய வெந்நீரைக் கொண்டு வந்து அவனுக்கு எதிரே 'நக்' என்று வைத்தாள் மரகதம்.

இந்தச் சமயத்தில் ''அண்ணா! இன்றுகூட அவரிடமிருந்து கடிதம் வந்தது...'' என்று ஆரம்பித்தாள் தங்கை காவேரி..

''உடனே புறப்பட்டு வரச் சொல்லித்தானே...?''

''ஆமாம்.''

''இப்பொழுது எங்கே புறப்படுவது? முதல் தேதியன்று தான் புறப்பட வேண்டும்''

இடையில் பானு குறுக்கிட்டு ''ஏன், அப்பா! என்னை எப்போ சர்க்கஸுக்குக் கூட்டிக் கொண்டு போவே?'' என்று தினசரி கேட்கும் கேள்வியை அன்றும் மறக்காமல் கேட்டு வைத்தாள்.

''முதல் தேதியன்று கட்டாயம் கூட்டிக் கொண்டு போவேன்!'' என்று தினசரி சொல்லும் பதிலைக் கணேசனும் மறக்காமல் சொல்லி வைத்தான்.

''சாக்லெட்.....''

''முதல் தேதிக்கு!''

''அப்பா! ஹிஸ்டரிக்கு ஒரு நோட், ஜாக்ரபிக்கு ஒரு நோட், மேதமெடிக்ஸுக்கு ஒரு நோட்.....'' என்று சந்தர்ப்பத்தைக் கைவிடாமல் ஆரம்பித்தான் முரளி.

''சரிதாண்டா! ஆறு நோட்டுப் புத்தகங்கள் வேண்டுமென்று சொன்னாயே, அதைத்தானே கேட்கிறாய்?'' என்று இடைமறித்துக் கேட்டான் கணேசன்.

''ஆமாம், அப்பா!''

''முதல் தேதியன்று வாங்கிக் கொண்டு வருகிறேன்''

''பேபி ஸைக்கிள்....?''

''முதல் தேதிக்கு!''

''எதிர்வீட்டில் இன்று எல்லோரும் 'எக்ஸிபிஷ'னுக்குப் போய் வந்தார்கள். இதுவரை அவர்கள் நாலு தரம் போய்வந்து விட்டார்கள். நீங்கள் என்னடாவென்றால் ஒருதரம்கூட அழைத்துக் கொண்டு போக மாட்டேன் என்கிறீர்கள்!'' என்றாள் அதற்குள் காப்பி விஷயத்தை மறந்த மரகதம்.

''அதுதான் முதல் தேதியன்று ஆகட்டும் என்று சொன்னேனே!'' என்றான், எதை விட்டாலும் முதல் தேதியை விடாத கணேசன்.

''எல்லாவற்றுக்கும் முதல் தேதிதான்!'' என்று அலுத்துக் கொண்டு மரகதம் நடையைக் கட்டினாள். பானும் காவேரியும் அவளைப் பின்தொடர்ந்து சென்றனர்.

'அப்பாடா!' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே கணேசன் சாய்வு நாற்காலியில் சாய்ந்தான்.

'ஸார்!' என்று குரல் கொடுத்துக்கொண்டே வீட்டுக்காரர் வந்தார்.

'வாங்க ஸார்! என்ன விசேஷம்?' என்று யாரை என்ன கேட்கிறோம் என்று தெரியாமலே கேட்டு வைத்தான் கணேசன்.

''வீட்டுக்காரருக்கும் குடியிருப்பவருக்கும் மத்தியில் வேறு என்ன ஸார், விசேஷம் இருக்கும்? தேதி இருபத்து மூன்று ஆகிவிட்டதே!''

''ஓ, அதுவா! முதல் தேதியன்று ஆகட்டும் ஸார்! இரண்டு மாத வாடகையையும் சேர்த்துக் கொடுத்து விடுகிறேன். இந்த மாதம் காவேரி ஊரிலிருந்து வந்திருந்தாளோ, இல்லையோ - அதனால் கொஞ்சம் தாமதம்....

''சரி; மறந்து விடாதீர்கள்!'' என்று சொல்லிவிட்டு வீட்டுக்காரர் நல்ல வேளையாக அத்துடன் நழுவினார்.

அந்தச் சமயம் பார்த்துச் சலவைக்காரி வந்து அவனுக்கு எதிரே நின்று ''மத்தியானம் சலவை கொண்டு வந்து கொடுத்தேனுங்க; இதோடு நாலு சலவை ஆச்சுங்க; அம்மா, 'காசுக்கு ஐயா வந்ததும் வா'ன்னு சொன்னாங்க; அதுதான் வந்தேனுங்க!'' என்றாள்.

''காசுக்கு வேளை, நாழி, நாள், கிழமை ஒன்றும் கிடையாதா? நினைத்த போதெல்லாம் வந்துவிட வேண்டியதுதானா? போ, போ! முதல் தேதியன்று வா!'' என்று அவளை விரட்டிவிட்டு, சற்று விச்ராந்தியாக இருந்துவிட்டு வரலாமென்று கணேசன் மாடிக்குச் சென்றான்.

அடுத்த வீட்டு மொட்டை மாடியில் சாப்பிட்டு விட்டு உலாவிக் கொண்டிருந்த சதாவதானம் கணேசனைக் கண்டதும் ''ஸார்! ஒரு சின்ன விஷயம் - நீங்கள் என்னிடம் ஒரு சமயம் ஐந்து ரூபாய் வாங்கினீர்கள்; 'மறந்தே போய் விட்டீர்கள்!'' என்று தலையைச் சொறிந்து கொண்டே சொன்னார்.

''மறக்கவில்லை, ஸார்! வரப்போகிற முதல் தேதியன்று கட்டாயம் கொடுத்து விடுகிறேன்!'' என்று சொல்லிவிட்டுக் கணேசன் உடனே கீழே இறங்கி வந்து விட்டான்.

* * *

கணேசனுக்கு மாதா மாதம் நூற்றைம்பது ரூபாய் சம்பளம் வந்து கொண்டிருந்தது. அந்தச் சம்பளத்தைக் கொண்டு அவன் எவ்வளவோ செளகரியமாக வாழலாம் என்றுதான் ஆரம்பத்தில் நினைத்தான். ஆனால் நடைமுறையில் அது அசாத்தியம் என்று தோன்றிற்று. அதற்காக அவன் தன்னுடைய வாழ்க்கைச் செலவை எப்படி யெல்லாமோ கட்டுப்படுத்திப் பார்த்தான். ஆனால் அப்படிக் கட்டுப்படுத்திக் கொள்ளும்போது அவன் அடுத்த வீட்டுக்காரரையும், அவரையும் மிஞ்சியே அந்த 'நாலுபேரையும்' கொஞ்சம் அனுசரித்தே போக வேண்டியிருந்தது.

'உண்டுண் டுறங்குவது தான் வாழ்க்கை' என்ற கூற்றைக் கணேசன் ஒப்புக் கொள்ளவில்லை. அழகு எதிலிருந்தாலும், எங்கிருந்தாலும் அதை அனுபவிக்கும் திராணி அவனுக்கு இயற்கையாகவே இருந்தது. அடுத்த வீட்டுக்காரி நல்ல புடவையோ, நகையோ அணிந்திருந்தால் தன் மனைவியும் அணிய வேண்டும் என்று அவன் விரும்புவான். பக்கத்து வீட்டுக் குழந்தை 'சாக்லெட்' தின்றால் தன் வீட்டுக் குழந்தை அதனிடம் கையேந்திவிடக் கூடாது என்பது அவன் எண்ணம். எதிர் வீட்டுச் சிறுவன் சைக்கிள் விட்டால், தன் வீட்டுச் சிறுவன் அந்த ஸைக்கிளுக்காக ஏங்கி விடக் கூடாது என்பது அவன் ஆசை. இவை யெல்லாவற்றையும் விட, பாரத நாட்டின் பழம் பெருமையை விளக்கும் சின்னங்கள் எதுவாயிருந்தாலும் அவற்றைப் பார்க்க அவன் துடிதுடிப்பான்; அருங் கலைகளில் அவனுக்கிருந்த ஆர்வத்தையோ சொல்லி முடியாது.

இத்தகைய மனோபாவத்தின் காரணமாக அவன் தன் வாழ்க்கையில் இருந்த கொஞ்ச நஞ்ச இன்பத்தையும் அனுபவிக்க முடியாமற் போயிற்று; துன்பம், துன்பம், துன்பம் என்று அவன் ஒரே துன்பத்தில் உழலவேண்டியதாயிற்று. அந்தத் துன்பம் ஒவ்வொரு முதல் தேதியும் உச்ச நிலையை அடையும்; முதல் தேதி வருவதற்கு ஒரு வாரம் இருக்கும்போதே, துன்பத்தின் சாயை அவனைத் தொடரும்.

அதன் கோர சொரூபத்திலிருந்து அன்றிரவாவது அவனால் தப்ப முடிந்ததா என்றால் அது தான் இல்லை. ''பத்துப் பதினைந்து ரூபாயில் மில் புடவைகளிலாவது இரண்டு எடுத்துக் கொடுக்கிறேன் என்கிறீர்களே, எடுத்துக் கொடுத்தீர்களா?'' என்று கேட்டுக் கொண்டே அவன் அறைக்குள் வந்தாள் மரகதம்.

''எங்கே எடுத்துக் கொடுப்பது? மாதம் பிறந்தால் தான் ஏதாவது ஒரு புதுத் தொல்லை வந்து சேருகிறது!'' என்றான் கணேசன்.

''சொன்னால் கோபித்துக் கொள்வீர்கள். நீங்கள் போகிற தொல்லையையாவது போகவிட்டால் தானே?''

''காவேரியைப் பற்றித் தானே சொல்கிறாய்? அவளை அனுப்பி வைப்பதற்குக் குறைந்த பட்சம் முப்பது ரூபாயாவது வேண்டுமே, அதற்கு என்ன செய்வது?''

''முப்பது ரூபாய் இல்லை என்று சொல்லிக் கொண்டு இதுவரை நீங்கள் அவர்களுக்காக அறுபது ரூபாய் செலவழித்திருப்பீர்கள் போலிருக்கிறதே!''

''ஒரு பெரிய உண்மையை எடுத்துச் சொல்கிறாய் மரகதம்! நம்மைப் போன்றவர்களுடைய கஷ்டம் எப்படி வளருகிறது - தெரியுமா? இப்படித்தான் வளருகிறது!''

''செலவைக் கூடியவரை கட்டுப்படுத்திக் கொண்டு சிக்கனமாக வாழ முயன்றால் கஷ்டம் ஏன் வளருகிறது?''

''ஏது உன்னிடமும் அந்த 'மலிவான சரக்கு, நிறைய இருக்கிறது போலிருக்கிறதே!''

''எந்த மலிவான சரக்கு?''

''பிறருக்குப் புத்திமதி சொல்வது!''

மரதகம் சிரித்தாள்.

''இதைக் கேள், மரகதம்! உன்னைப் போலத்தான் என்னுடைய நண்பர்களெல்லாம் கூடச் சொல்கிறார்கள். அவர்களுடைய புத்திமதியின் படி நாம் சிக்கனமாக வாழ வேண்டுமானால் என்ன செய்யவேண்டும் தெரியுமா? முதலில் இந்த வீட்டைக் காலி செய்துவிட்டுக் குடியிருக்க ஒரு 'கிளிக்கூண்டு' வாங்கிக் கொள்ள வேண்டும்; நீயும் நானும் பழைய மலையாளத்து ஸ்தீரி - புருஷர்களைப் போல ஆளுக்கொரு முண்டு வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டும்; காலையில் வெறும் காப்பி குடிக்கிறோமல்லவா? அதை நிறுத்தி விட்டு கொட்டாவி விட்டுக் கொண்டே வேலைக்குக் கிளம்பவேண்டும். அப்புறம் இரண்டு வேளை சாப்பாட்டை ஒருவேளையாக குறைத்துக் கொள்ள வேண்டும்.......''

''வேடிக்கைதான்! சிக்கனம் என்றால் இதுவா சிக்கனம்...?''

''பின் என்ன செய்வது? கூரை வீட்டை இடித்து விட்டு மாடி வீடு கட்டலாம் என்று இருந்தோமே, அதை நிறுத்தி விடுவதா? 'ஆஸ்டின்' காரை விற்று விட்டு 'போர்டு' கார் வாங்கலாம் என்று இருந்தோமே, அந்த யோசனையைக் கைவிட்டு விடுவதா? உச்சி வேளையில்

பழரசம் அருந்திக் கொண்டிருந்தோமே, அதை மறந்துவிட்டுப் பச்சைத் தண்ணீர் குடிப்பதா...?''

''எட்டாதவற்றுக்கெல்லாம் கொட்டாவி விட்டு என்ன பிரயோஜனம்...?''

''இல்லையே! எட்டுபவைக்கே அல்லவா நாம் கொட்டாவி விட வேண்டியிருக்கிறது....!''

''அதைச் சொல்லவில்லை நான்! வாழ்க்கைச் செலவுகளை வரவுக்குத் தகுந்தபடி ஒரு ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறேன்; அதாவது, மேற்கொண்டு கடனே வாங்கக்கூடாது என்கிறேன்!''

''அதற்கு வாழ்க்கைப்பாதை பட்டணத்து ரஸ்தா மாதிரி தார் போட்டு 'ஜம்'மென்று இருக்கவேண்டும். அப்படியில்லையே! அது மேடும் பள்ளமும் நிறைந்த பட்டிக்காட்டு ரஸ்தா மாதிரியல்லவா இருக்கிறது? அதை ஒரு ஒழுங்குக்குக் கொண்டு வருவது எப்படி?''

''போதுமென்ற மனம் இருந்து, உள்ளவரை திருப்தியும் அடைவதாயிருந்தால்....''

''இன்று சாயந்திரம் நீ காப்பி இல்லை என்றாய்; நான் திருப்தி யடைந்துவிட்டேன். அதேமாதிரி நான் புடவை இல்லை என்கிறேன், நீயும் திருப்தியடைந்து விடுகிறாயா?''

''ரொம்ப அழகுதான்!''

''பார்க்கப்போனால் நம்மைக் காட்டிலும் வாழ்க்கையில் குறைந்த அளவு தேவையுடன் திருப்தி யடைபவர்கள் வேறு யாருமே இருக்கமாட்டார்கள், மரகதம்!''

''ஏன் இல்லை? எத்தனையோ பேர் இருக்கிறார்கள். முனியன், மூக்கன், தொப்பை, சப்பை என்று இல்லையா?''

''அவர்கள் எங்கே வாழ்கிறார்கள்? பிறர் வாழ்வதற்காக நிமிஷத்துக்கு நிமிஷம் செத்துக் கொண்டிருக்கிறார்கள்! அவர்களுக்கும் நமக்கும் வித்தியாசம் இருக்கிறது, மரகதம்! பிரெஞ்சு அறிஞன் ஒருவன் ஜனங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிந்திருக் கிறான். அதாவது மேல் வகுப்பு, மத்திய வகுப்பு, கீழ்வகுப்பு என்று அவன் வகுத்திருக்கிறான். 'மேல் வகுப்பார் சுதந்திரத்தை விலைக்கு வாங்குகிறார்கள்; கீழ் வகுப்பார் சுதந்திரத்தை விலைக்கு விற்கிறார்கள்' என்று அவன் சொல்கிறான். இந்த இரு வகுப் பார்களுக்கும் மத்தியில் இரண்டுங்கெட்டானாக இருந்துகொண்டு

அவதிப்படுபவர்கள் தான் நம்மைப் போன்றவர்கள். நம்முடைய சூழ்நிலை வேறு; அவர்களுடைய சூழ்நிலை வேறு. நம்முடைய சுற்றுப்புறம் வேறு; அவர்களுடைய ஆசாபாசங்கள் வேறு. இவையனைத்தையும் கூட்டிக் குழப்பி ஒன்று சேர்க்கத்தான் அரசியல் தலைவர்கள் முயற்சி செய்து வருகிறார்கள். அவர்களுடைய முயற்சி இன்றுவரை வெற்றியடைய வில்லை....''

''இது என்ன, பெரிய பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டீர்களே! - போதும், தூங்குங்கள்!'' என்று சொல்லி விட்டு மரகதம் வெளியே வந்து தன் நாத்தனாருடன் படுத்துக் கொண்டாள்.

''தேவைக்குமேல் வரும்படி உள்ளவர்களுக்கல்லவா சிக்கன உபதேசம் செய்ய வேண்டும்? தேவைக்குக் குறைவான வரும்படி உள்ளவர்களுக்குச் சிக்கன உபதேசம் செய்து என்ன பிரயோஜனம்?'' என்று தனக்குள் முனகிக் கொண்டே அப்படியும் இப்படியுமாகப் புரண்டு படுத்தான் கணேசன்.

*    *    *

மறுநாள் காலை, ''மரகதம்! குளிப்பதற்கு வெந்நீர் போட்டுவிட்டாயா?'' என்று கேட்டுக் கொண்டே கணேசன் எழுந்து வந்தான்.

''கரி இல்லை; கட்டையும் இன்னும் இரண்டு நாட்களுக்குத்தான் காணும் போலிருக்கிறது. நீங்கள் செம்பை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்கு போங்கள்!'' என்றாள் மரகதம்.

''சரி, அப்படியே செய்தால் போச்சு!'' என்று அழுத்தலாகச் சொல்லி விட்டுக் கணேசன் கிணற்றடியை நோக்கி நடந்தான்.

அதன் பயனாக அன்று மாலை அவன் ஜலதோஷத்துடன் வீடு திரும்ப வேண்டியதாயிற்று; அன்றிரவே அவனுக்கு ஜுரம் வேறு வந்துவிட்டது. பொழுது விடிந்ததும் மரகதம், ''டாக்டரிடம் போய் வாருங்களேன்!'' என்று சொன்னாள்.

''எடுக்கும்போதே டாக்டரிடம் போவானேன்? உன்னுடைய சிக்கன உபதேசத்தை உத்தேசித்து இரண்டு நாட்கள் ஆஸ்பத்திரிக்குத்தான் போய் வருவோமே என்று பார்க்கிறேன்!'' என்றான் கணேசன்.

''உங்கள் இஷ்டம்!'' என்று சொல்லிவிட்டு முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டாள் மரகதம்.

இரண்டு நாட்கள் ஆஸ்பத்திரியில் மருந்து சாப்பிட்டதால் தானோ என்னவோ, கணேசன் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாதவனானான். இப்பொழுது அவன் டாக்டர் வீட்டுக்குப் போவதாயிருந்தால் ஏதாவது ஒரு வாகனத்தில் போகவேண்டும். அதற்குக் காசு வேண்டாமா? என்ன செய்வது? மரகதம் நல்லவேளையாகக் கடுகு டப்பியில் எட்டணா சேர்த்து வைத்திருந்தாள். அதை வாங்கிக் கொண்டு கணேசன் டாக்டர் வீட்டுக்குப் போனான். டாக்டர் தெரிந்தவராகையால் மருந்துக்கு உடனே பணம் கேட்கவில்லை. முதல் தேதியன்று பில் அனுப்பி வைக்கலாம் என்று பேசாமல் இருந்துவிட்டார்.

மரகதம் தனக்குத் தெரிந்த சிநேகிதி ஒருத்தியிடம் இருபத்தைந்து ரூபாய் கடன் வாங்கி அந்த வாரம் முழுவதும் காலக்ஷேபம் செய்து வந்தாள். ஒரு காலத்தில் கணேசனின் உடம்பும் தேறிற்று

* * *

அன்று முதல் தேதி; அதே வெள்ளிக்கிழமை தான்; ஆனால் காலை நேரம்.

அதற்கு முதல் நாளே சம்பளம் வந்துவிட்டது. தங்கையின் பிரசவத்துக்காக வாங்கிய நூறு ரூபாய்க் கடனுக்கு இருபது ரூபாய் கொடுத்து விட்டுப் பாக்கியை வீட்டுக்குக் கொண்டு வந்திருந்தான். அவன் முகத்தை அன்று ஏனோ பார்க்கச் சகிக்க முடியவில்லை. அவ்வளவு வேதனை அவனுடைய முகத்தில் குடி கொண்டிருந்தது.

''காவேரி!'' என்று இரைந்தான் கணேசன்.

அவள் கைக்குழந்தையுடன் வந்து அவனுக்கு எதிரே நின்றாள். அவளிடம் முப்பது ரூபாயை எடுத்துக் கொடுத்து ''இன்றே மன்னியுடன் சென்று இருபது ரூபாயில் உனக்கு ஒரு புடவையும், குழந்தைக்கு ஒரு சட்டையும் வாங்கிக் கொள். பாக்கிப் பத்து ரூபாய் இருக்கிறதல்லவா? அதைச் செலவுக்கு வைத்துக் கொள். நாளைக்கே நீ ஊருக்குக் கிளம்பி விடலாம், போ!'' என்றான்.

அவள் போய்விட்டாள்.

வீட்டுக்காரர் வந்தார். அவரிடம் இரண்டு மாத வாடகைக்கு நாற்பது ரூபாயை எடுத்துக் கொடுத்தான்.

மரகதத்தினிடம் இருபத்தைந்து ரூபாய் கொடுத்து, அதை உடனே அவள் சிநேகிதியிடம் கொடுத்துவிட்டு வரச் சொன்னான்.

மறக்காமல் மாடிக்கு ஓடோடியும் சென்று, சதாவதானத்திடம் ஐந்து ரூபாய் கொடுத்துவிட்டு வந்த பிறகு, ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

பால்காரனுக்குப் பன்னிரண்டு ரூபாய்; வண்ணாத்திக்கு ஏழு ரூபாய்; டாக்டருக்குப் பத்து ரூபாய் - தனித்தனியே எடுத்துவைத்தான்.

மொத்தம் 149 ரூபாய் ஆயிற்று!

பாக்கி ஒரே ஒரு ரூபாய் இருந்தது. கொஞ்சங்கூட யோசிக்காமல் அதை வீட்டுச் செலவுக்காக தன் மனைவியிடம் அப்படியே முழுசாகத் தூக்கிக் கொடுத்துவிட்டான்!

''ஒரு மாதச் செலவுக்கு இவ்வளவுதானா?'' என்று அவள் திடுக்கிட்டுக் கேட்டாள்.

''வாழ்க்கைச் செலவை ஒரு ஒழுங்குக்குக் கொண்டு வரவேண்டுமென்றாயே, கொண்டுவா! மேற்கொண்டு கடன் வாங்குவது தான் உன்னுடைய புத்திமதிப்படி ஒழுங்கீனமாச்சே!'' என்றான் கணேசன் வெறுப்புடன் சிரித்துக் கொண்டே.

அவன் சிரித்ததும் அதுவரை அப்பாவை நெருங்கப் பயந்து கொண்டிருந்த குழந்தைகள் இரண்டும் கொஞ்சம் தைரியமடைந்து அவனை நெருங்கின.

''அப்பா! என்னை எப்போ சர்க்கஸுக்குக் கூட்டிக் கொண்டு போவே?'' என்று கேட்டாள் பானு.

''முதல் தேதி!''

''சாக்லெட்....?''

''முதல் தேதிக்குத்தான்!''

''எனக்கு நோட் புத்தகம் எப்போ அப்பா வாங்கி வருவே?'' என்று கேட்டான் முரளி.

''முதல் தேதி!''

''சைக்கிள்.....?''

''முதல் தேதிக்குத்தான்!''

''இந்த முதல் தேதிக்கு ஒரு முடிவே கிடையாதோ?''

என்றாள் மரகதம்.

''நம் வாழ்வு முடியும்வரை அதற்கு ஒரு முடிவே கிடையாது!'' என்று அழுந்தந் திருத்தமாகச் சொன்னான் கணேசன்.

# எங்கள் ஏகாம்பரம்

**வ**யிற்றுப் பிழைப்புக்காகப் பம்பாயின்மீது நான் படை யெடுத்து வந்து எத்தனையோ வருஷங்களாகி விட்டன. ஆயினும் எங்கள் டிவிஷனையும் எங்களுடைய டிவிஷன் கௌன்ஸிலரான ஏகாம்பரம் அவர்களையும் என்னால் இன்றுவரை மறக்க முடியவில்லை.

சிலர் உலகத்தைச் சீர்திருத்த நினைக்கிறார்கள்; சிலர் தங்கள் தேசத்தைச் சீர்திருத்த நினைக்கிறார்கள்; சிலர் தாங்கள் பிறந்த ஜில்லாவைச் சீர்திருத்த நினைக்கிறார்கள்; சிலர் தாங்கள் வசிக்கும் வட்டாரத்தைச் சீர்திருத்த நினைக்கிறார்கள். இவர்களில் கடைசி இனத்தைச் சேர்ந்தவர் எங்கள் ஏகாம்பரம்.

நான் மட்டும் அல்ல; எங்கள் வட்டாரத்தைச் சேர்ந்த எல்லோருமே அவரை 'எங்கள் ஏகாம்பரம்' என்று 'செல்ல'மாகக் குறிப்பிடுவது வழக்கம்.

கடந்த இருபது வருஷ காலமாக இந்தப் பெயர் அவருக்கு நிலைத்துவிட்டது. அதாவது, அவர் எங்கள் வட்டாரத்துக்குக் கௌன்ஸிலராக வந்ததிலிருந்து என்று வைத்துக் கொள்ளுங்களேன்! - அதற்கு முன்னால் அந்தப் பக்கத்தில் அவரை எல்லாரும் 'பொடிக்கடை ஏகாம்பரம்' என்று அழைப்பது வழக்கம்.

ஆமாம், பூர்வாஸ்ரமத்தில் அவருடைய தொழில் பொடி வியாபாரமாய்த் தான் இருந்தது. வெகு நாட்களாக எங்கள் டிவிஷனில் நல்ல பொடி கிடைக்காமலிருந்த பெருங் குறையை அவர்தான் முதன் முதலில் நிவர்த்தி செய்து வைத்தார். அதைப் பற்றி அவர் அடைந்த பெருமை இவ்வளவு அவ்வளவு அல்ல. அவரிடம் இருந்த சிறப்பான குணம் என்னவென்றால், அவர் எதையுமே எப்பொழுதுமே தமக்கென்று செய்வதில்லை; எல்லாவற்றையும் எங்கள் டிவிஷன் வாசிகளின் நன்மைக்கென்றே செய்வார். அதற்கேற்றாற்போல் 'என் கடன் பணி செய்து கிடப்பதே!' என்று எழுதப்பட்ட ஒரு சிறு போர்டு அவருடைய கடையின் முகப்பை எப்பொழுதும் அலங்கரித்துக் கொண்டிருக்கும். பொடி வியாபாரத்தையும் ஒரு 'பணி'யாகக் கருதிய அவருடைய 'மேதை'யை என்னவென்று சொல்வது, போங்கள்!

* * *

திருவாளர் ஏகாம்பரம் அவர்களுக்கு எங்கள் வட்டாரத்தைச் சீர்திருத்த வேண்டுமென்பதில் இருந்த ஆர்வம் கொஞ்ச நஞ்சமல்ல. அந்த ஆர்வத்தை என்னுடன் பேச நேரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் காட்டிக் கொள்ளத் தவற மாட்டார்.

தினந்தோறும் நான் கடைக்குச் செல்லும் வழியில் தான் அவருடைய வீடு இருந்தது. அவர் வசித்து வந்த தெருவைக் கடக்கும்வரை யாரும் மூக்கைப் பிடித்துக் கொள்ளாமல் செல்ல முடியாது. காரணம், அந்தத் தெருவில் பூமிக்குக் கீழே செல்ல வேண்டிய சாக்கடைக் கால்வாய்களெல்லாம் மேலே சென்று கொண்டிருந்ததுதான்.

இதேமாதிரி இன்னும் எத்தனையோ தெருக்கள் எங்கள் வட்டாரத்தில் இருந்தன. வீட்டுக்கு வீடு ஒரு நாள் கடைக் கால்வாய் கிளம்பி எதிரேயிருக்கும் மைதானத்தை நோக்கி மௌனமாகச் செல்லும் காட்சியையும் கொசுக்கள் தங்களுடைய ரீங்காரத்தின் மூலம் அவற்றின் மௌனத்தைக் கலைத்து மகிழும் காட்சியையும் எங்கள் வட்டாரத்தைத் தவிர வேறு எங்கும் பார்க்க முடியாது. இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்ந்து நடை முறையில் இருந்துவரும் இந்த அதிசயத்தை எண்ணி வியந்த வண்ணம் மேலே சென்றால், தெருக் கோடியில் இருக்கும் சென்னை நகரசபையாரின் போர்டு, 'தெருவை அசுத்தம் செய்யாதே; அசுத்தமே வியாதிக்குக் காரணம்' என்று நம்மை எச்சரிக்கும். இந்த எச்சரிக்கையைக் கண்டு சிரித்தால் எதிரே ஏகாம்பரம் தோன்றி ''என்ன ஸார், சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்பார்.

''ஒன்றுமில்லை; இந்தத் தெருவை இவ்வளவு அழகாக வைத்துக் கொண்டு ''அசுத்தம் செய்யாதே!'' என்று கார்ப்பொரேஷன்காரர்கள் நம்மை எச்சரிக்கிறார்களே என்று நினைத்தேன் - சிரிப்பு வந்துவிட்டது!'' என்பேன்.

''அதற்குத்தானே ஸார், இரண்டு வருஷங்களாக நான் கரடியாய்க் கத்திக் கொண்டு வருகிறேன் - எனக்கு உங்கள் வோட்டைப் போடுங்கள் ஐயா, இதையெல்லாம் வெளுத்துக் கட்டிவிடுகிறேன் என்று! யாராவது கேட்டால் தானே?'' என்பார்.

பாவம், இரண்டு வருஷங்களாக நகரசபைத் தேர்தலில் நின்று, தாம் தோல்வியடைந்து விட்டதைத்தான் அவர் அடிக்கடி மேற்கண்டவாறு குறிப்பிடுவது வழக்கம்.

* * *

ஏகாம்பரம் இப்படி யென்றால், எங்கள் வட்டாரத்தைப் பற்றியோ சொல்லவே வேண்டாம். அதன் பெருமைகளைப் பற்றிச் சொல்லப் போனால் அவை எண்ணில் அடங்கா; எழுத்தில் அடங்கா; ஏட்டிலும் அடங்கா; மலேரியா, வைசூரியா, காலராவா - எது வந்தாலும் அதற்கு முதல் வரவேற்பு அளிக்கும் பெருமை எங்கள் வட்டாரத்தையே சாரும். மழைக் காலங்களிலோ சொல்ல வேண்டியதில்லை, எங்கள் தெருக்களைப் பார்க்க இரண்டு கண்களும் இல்லாமலிருக்கக் கூடாதா என்று தோன்றும். இரண்டு நாட்கள் விடாமல் மழை பெய்து விட்டால் ஒரே வெள்ளக்காடுதான். அந்த வெள்ளத்தில் நீந்திக் கொண்டு சென்றால், ''இதற்குத்தானே இரண்டு வருஷங்களாக எனக்கு உங்கள் வோட்டைப் போடுங்கள்! என்று நான் அடித்துக் கொள்கிறேன்!'' என்று சொல்லிக் கொண்டே ஏகாம்பரம் எதிரே வந்து நிற்பார்.

இப்படி அவர் என்னைக் கண்டால் மட்டும் சொல்லிக் கொண்டிருக்கவில்லை; எங்கள் வட்டாரவாசிகளில் யாரைக் கண்டாலும் சொல்லிக் கொண்டிருந்தார். இந்தத் தொந்தரவைத் தாங்க முடியாமல்தானோ என்னவோ மூன்றாவது வருஷம் அவர் தேர்தலுக்கு நின்றபோது எங்கள் வட்டார வாசிகள் அவரையே தங்கள் கௌன்ஸிலராகத் தேர்ந்தெடுத்து விட்டார்கள்!

அத்துடன் அவருடைய கவலை தீர்ந்தது! அதற்கு பிறகு அவரை யாரும் எதிர்த்து நின்று வெற்றி பெற முடியவில்லை. அதற்குள் வோட்டுச் சேகரிக்கும் வித்தையில் அவர் கைதேர்ந்தவராகிவிட்டார். அதன் பயனாக எங்கள் வட்டார வாசிகளின் ஆதரவு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அவரே வருஷா வருஷம் கௌன்ஸிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்!

* * *

பத்து வருஷங்களுக்குப் பிறகு ஒரு நாள் பழைய நண்பர்களைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்பதற்காக நான் சென்னைக்குத் திரும்பினேன். எங்கள் வட்டாரத்தில் எத்தனையோ மாறுதல்களை நான் எதிர்பார்த்து வந்தேன். ஆனாலும் இங்கே வந்ததும் எந்த விதமான மாறுதலையும் காணாமல் திகைத்துப் போனேன். சர்க்கார் புராதன சின்னங்களைப் பாதுகாப்பது போல் திருவாளர் ஏகாம்பரமும் எங்கள் வட்டாரத்தின் பழம் பெருமைகளைப் பாதுகாத்து வருகிறாரோ என்று நினைத்தேன். இருந்தாலும் அவரை நேரில் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஆவலாயிருந்தது. வழக்கம்போல் மூக்கைப் பிடித்துக் கொண்டு சென்று அவருடைய வீட்டை

அடைந்ததும் ''ஏகாம்பரம் இருக்கிறாரா?'' என்று ஆவலுடன் விசாரித்தேன்.

''யார் அது ஏகாம்பரமா?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளேயிருந்து வந்தார் ஒருவர்.

''ஆமாம், இந்த டிவிஷன் கௌன்ஸிலரைத்தான் கேட்கிறேன்!'' என்றேன்.

''அவர் இந்த வீட்டை விட்டுப் போய் இரண்டு வருஷங்கள் ஆகப் போகிறதே!''

''அப்படியா! இப்பொழுது எங்கே இருக்கிறார்?''

''தியாகராய நகரில்!''

''அவருடைய விலாசம் தெரியுமா?''

''தெரியாது; அடுத்தாற்போல் இருக்கும் கடைத் தெருவில் 'ஏகாம்பரம் எம்போரியம்' என்று ஒரு ஜவுளிக்கடை இருக்கிறது. ஒருவேளை அங்கு இருப்பார்!'' என்றார் அவர்.

உடனே நான் கடைத்தெருப் பக்கம் திரும்பி, ஒவ்வொரு கடையின் போர்டையும் கவனித்துக் கொண்டு சென்றேன். பத்து வருஷங்களுக்கு முன்னால் எங்கே ப்ளாடிக்கடை இருந்ததோ, அங்கே தான் 'ஏகாம்பரம் எம்போரியம்' இருந்தது. அந்தப் பெரிய போர்டுக்குக் கீழே, 'என் கடன் பணி செய்து கிடப்பதே!' என்று ஒரு சிறு போர்டு தொங்கவிடப் பட்டிருந்ததைக் கண்டதும் ''சந்தேகமே யில்லை; இது அவருடைய கடைதான்!'' என்று தீர்மானித்துக் கொண்டு உள்ளே நுழைந்தேன். அங்கும் ஏகாம்பரத்தைக் காணவில்லை. உள்ளே யிருந்த ஒருவர், ''உங்களுக்கு யார் ஸார் வேண்டும்?'' என்று கேட்டார்.

''ஏகாம்பரம் அவர்களைப் பார்க்க வேண்டும்'' என்றேன் நான் பவ்வியமாக.

''அடடா! இப்பொழுது தான் அவர் இங்கிருந்து போனார். நீங்கள் ஒன்று செய்யுங்கள்; நேரே 'டவு'னுக்குச் செல்லுங்கள். அங்கே 'ஏகாம்பரம் ஜுவல்லர்ஸ்' என்றுஒரு கடை இருக்கிறது. அந்த கடையில் அவரைப் பார்க்கலாம்'' என்றார்.

எப்படியாவது அவரைப் பார்த்துவிட வேண்டுமென்ற ஆவலில் அடுத்த நிமிஷமே சைனாபஜாருக்குக் கிளம்பினேன். ஆனால் என்ன ஏமாற்றம்! அங்கும் ஏகாம்பரத்தைக் காணவில்லை!!

''பணி செய்து கிடப்பதையே தங்கள் கடனாகக் கொண்டவர்களுக்கு ஓய்வென்பதே இருக்காதோ!'' என்று எண்ணி நான் தயங்கிக் கொண்டிருந்த போது அங்கிருந்த ஒருவர் என்னை நோக்கி ''யாரைப் பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''ஏகாம்பரம் அவர்களைத்தான் பார்க்கிறேன்!'' என்றேன்.

''அவர் இப்பொழுது தியாகராய நகரிலிருக்கும் பாண்டி பஜாரில் இருப்பார். அங்கே 'ஏகாம்பரம் அண்டு ஸன்ஸ் - கெமிஸ்ட்ஸ் அண்டு ட்ரக்கிஸ்ட்ஸ்' என்று ஒரு மருந்துக்கடை இருக்கிறது. இந்த நேரத்தில் அவரை அங்குதான் பார்க்கலாம். ஒருவேளை அங்கில்லா விட்டாலும் அடுத்தாற்போல் தான் அவருடைய பங்களா இருக்கிறது. 'ஏகாம்பர நிலையம் எங்கே இருக்கிறது?' என்று கேட்டால் யாரும் சொல்வார்கள். அந்தப் பங்களாவில் முகப்புச் சுவரில்.....'' என்று அவர் மேலும் மேலும் சொல்லிக் கொண்டே போனார்.

நான் பொறுமையிழந்து ''....அந்தப் பங்களாவின் முகப்புச் சுவரில் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று எழுதியிருக்கும். அந்தப் பங்களாவிலும் அவர் இல்லாவிட்டால் கார்ப்பொரேஷன் கட்டிடத்தில் கட்டாயம் அவர் இருப்பார். அங்கும் இல்லாவிட்டால்....'' என்று அவருடன் சேர்ந்து சொல்ல ஆரம்பித்தேன்.

அந்த மனிதர் என்னை முறைத்துப் பார்த்தார். நானும் பதிலுக்கு அவரை முறைத்துப் பார்த்துக் கொண்டே நடையைக் கட்டினேன்.

எதிரே என்னுடைய நண்பன் கைலாசம் வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் ''என்னப்பா கைலாசம்! இந்த ஏகாம்பரத்தைப் பார்க்கவே முடியாதோ?'' என்றேன் வெறுப்புடன்.

''ஏன், நீ அவருக்காகத்தான் அலைந்து கொண்டிருக்கிறாயா? அட பைத்தியமே! இப்பொழுதெல்லாம் அவரை அவ்வளவு லேசில் பார்த்துவிட முடியாதே! அப்படிப் பார்ப்பதாயிருந்தால் முன்னாலேயே அவருக்கு எப்பொழுது சௌகரியப்படும் என்று கேட்டுக் கொண்டுதான் நீ வந்திருக்க வேண்டும்!'' என்றான் அவன்.

எனக்கு ஒரே வியப்பாயிருந்தது. ''என்ன, அவ்வளவு தூரம் அவர் முன்னுக்கு வந்துவிட்டாரா?'' என்றேன்.

''ஆமாம், நம் டிவிஷனுக்குக் கௌன்ஸிலரானாரோ இல்லையோ! - டிவிஷன் முன்னுக்கு வருவதற்குப் பதிலாக அவர் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறார்!'' என்றான் அவன்.

# வாழ வழியில்லை!

கடைசி கடைசியாக எங்களுக்கு அப்படித்தான் தோன்றிற்று. அதாவது "நாங்கள் இந்த உலகத்திலே வாழ வழியில்லை!" என்று.

என்ன, 'எங்களுக்கு' என்றா சொன்னேன்? - இல்லை, இல்லை; எனக்குத்தான்!

இந்தத் தீர்மானத்துக்கு நான் திடீரென்று வந்து விடவில்லை; எவ்வளவு தூரம் முடியுமோ, அவ்வளவு தூரம் தீர்க்காலோசனை செய்த பிறகுதான் வந்தேன்.

"இதை அவளிடம் இன்றே சொல்லிவிட வேண்டும், -சொல்லுவதாவது? எழுதிவிட வேண்டும்!"

இந்த எண்ணம் தோன்றியதும் ஒரு நிமிஷம் கூட நான் தாமதிக்கவில்லை; தாமதித்ததெல்லாம் போதும் என்று உடனே ஒரு காகிதத்தை எடுத்தேன்; விஷயத்தை 'விறு விறு'வென்று எழுதினேன்; அதை உறைக்குள் போட்டுத் திணித்துத் தபாலில் சேர்த்தேன்.

அப்புறந்தான் என்னால் வேறு காரியம் பார்க்க முடிந்தது!

கடிதத்தில் "மொட்டைத் தாதன் குட்டையில் விழுந்த கதை தான்!" என்று வெறுமனே எழுதிவிடவில்லை. "ஏன் விழுந்தான், எப்படி விழுந்தான்?" என்றெல்லாம் விவரித்துத்தான் எழுதினேன். ஏன் தெரியுமா? என்னுடைய பேச்சுக்கு எதிர்ப்பேச்சின்றி அவள் அப்படியே என்னுடைய தீர்மானத்தை அங்கீகரித்துவிட வேண்டும் என்ற எண்ணம்தான்!

ஆனால், என்ன கஷ்டம் பாருங்கள்; அது தான் அவளிடம் நடக்கவில்லை.

எல்லாவற்றையும் பொறுமையுடன் படித்துவிட்டு அவள் எனக்கு என்ன எழுதியிருந்தாள் தெரியுமா? - அதை ஏன் கேட்கிறீர்கள், போங்கள்!

இத்தனைக்கும் அவள் எழுதியிருந்தது ஒரே ஒரு வார்த்தைதான். அந்த ஒரு வார்த்தை அந்த ஒரே ஒரு வார்த்தை - என்னை என்ன தாக்கு தாக்கி விட்டதென்கிறீர்கள்! - அப்பப்பா! பொல்லாதவர்கள் ஐயா, இந்தப் பெண்கள்! மிகமிகப் பொல்லாதவர்கள்!

அவள் எழுதியிருந்த அந்த வார்த்தையைப் படித்த பிறகு எனக்கே என்னுடைய தீர்மானத்தில் சந்தேகம் வந்துவிட்டது. எனக்கு மட்டும் என்ன? என்னுடைய கதையைக் கேட்டால் உங்களுக்கும் அந்தச் சந்தேகம் தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லைதான்!

* * *

அந்தச் சங்கத்தின் பெயர் இன்னதென்று எனக்கு இப்பொழுது ஞாபகமில்லை. ஆனால் பல பெண்கள் ஒன்று சேர்ந்து கூத்தடிக்கும் சங்கம் அது என்பது மட்டும் என்னுடைய நினைவில் இன்றும் தங்கியிருக்கிறது. அந்தச் சங்கத்துக்கு அவள் காரியதரிசி. அதற்கு ஒரு சமயம் வருஷாந்திர விழா நடந்தபோது, அதில் என்னைப் பேசுவதற்கு அவள் அழைத்திருந்தாள்.

பெண்களுக்கு மத்தியில் போய்ப் பேசுவதற்கு எனக்கு முதலில் கொஞ்சம் வெட்கமாயிருந்தது. ஆகவே, ''எனக்குப் பதிலாக யாராவது ஒரு பெரியவரை அழைத்துப் பேசச் சொல்லுங்கள்!'' என்று எழுதினேன். அதற்கு அவள் கன்னத்தில் அடித்தாற்போல் ''நாங்கள் பாட்டி மார்களல்ல; நீங்களே வாருங்கள்!'' என்று எழுதினாள்.

அதற்குமேல் என்னால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அடக்க ஒடுக்கத்துடனும் பயபக்தியுடனும் சென்று அந்த மாதர் மகாசபையில் பேசினேன். விழாவில் கலந்து கொண்ட பிறகு அதுவரை என்னைப் பீடித்திருந்த வெட்கமும் போன இடம் தெரியாமல் போயே போய்விட்டது. எல்லாம் இடத்தின் விசேஷம் என்று வைத்துக் கொள்ளுங்களேன்!

காரியதரிசி வந்தனோபசாரம் கூறியதும் என்னை வழியனுப்ப வந்தாள். வாசலைக் கடந்ததும், ''தங்களுடைய பிரசங்கம் ரொம்ப ஜோர்! ரொம்ப ரொம்ப ஜோர்! எனக்கு மிகவும் பிடித்திருந்தது!'' என்றாள்.

இதைச் சொல்லிவிட்டு அவள் ஒரு காரணமுமின்றிச் சிரித்தது, என்னை என்னவோ செய்தது. அதன் காரணமாகத்தானோ என்னவோ, ''நல்லவேளை! என்னுடைய பிரசங்கத்தை மட்டுந்தானே உங்களுக்குப் பிடித்தது?'' என்று நான் கொஞ்சம் கிருதக்காகக் கேட்டுவிட்டேன்.

அவள் சளைக்கவில்லை. ''உங்களையுந்தான்!'' என்று சொல்லிவிட்டு எடுத்தாள் ஓட்டம்.

அவ்வளவுதான்; அன்றைய தினத்திலிருந்து நான் அவளுடைய காதலனானேன்; அவள் என்னுடைய காதலியானாள்.

இருவருக்கும் கடிதப் போக்குவரத்து வருஷக்கணக்கில் நீடித்தது. அப்படி நீடித்ததற்குக் காரணம் எங்களுடைய 'காதல் பிரச்சனை'யில் இருந்த ஒரே ஒரு சிக்கல்தான். அந்தச் சிக்கல் அப்படியொன்றும் அற்ப சொற்பமானதல்ல; அகில உலகத்தையும் இன்றுவரை ஆட்டிவைத்துக் கொண்டிருப்பது!

அப்படிப்பட்ட சிக்கல்தான் என்ன என்று கேட்கிறீர்களா? - **அவள் ஒரு ஜாதி, நான் ஒரு ஜாதி!**

இந்த ஜாதி வித்தியாசம் எங்களுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கத்தான் செய்தது, அதாவது எப்படித் தெரிந்திருந்தது என்கிறீர்களா? நான் **ஆண் ஜாதி** என்றும் அவள் **பெண் ஜாதி** என்றும் தெரிந்திருந்தது!

எங்களுக்குத் தெரியும் இந்த உண்மையை எங்களுடைய பெற்றோர் ஒப்புக் கொள்ளவில்லை; நண்பர்கள் ஒப்புக் கொள்ளவில்லை; உறவினர்கள் ஒப்புக் கொள்ளவில்லை; ஊராரும் உலகத்தாரும் ஒப்புக்கொள்ளவில்லை!

* * *

எங்கள் காதலுக்கு உவமை சொல்ல வேண்டுமானால் சந்திரனைத்தான் சொல்ல வேண்டும். ஏனெனில் எங்கள் காதல் சில சமயம் வளர்பிறைபோல் வளர்வதும் உண்டு; தேய் பிறைபோல் தேய்வதும் உண்டு. இந்த வளர்ச்சியும் தேயவும் அநேகமாக அடிக்கடி மாறும் எங்களுடைய மனோபாவத்தைப் பொறுத்தே இருந்தன.

ஒருசமயம் நாங்கள் நினைப்போம் ''இந்த உலகமே எதிர்த்து நின்றாலும் நாம் நம்முடைய காதலைக் கைவிடக் கூடாது'' என்று; இன்னொரு சமயம் நினைப்போம் ''இந்த உலகத்தை வெறுத்துக் கொண்டு நாம் தனியாக இருந்து என்னத்தைச் செய்வது?'' என்று!

இப்படியாக எங்களுடைய மனம் பேதலித்து நின்றாலும், அவற்றையும் அறியாத ஏதோ ஒன்று எங்களை விடாப்பிடியாகப் பிடித்து வைத்துக் கொண்டிருந்தது. அது நாங்கள் பரஸ்பரம் கடிதம் எழுதிக் கொள்வதோடு திருப்தி யடையவில்லை; அடிக்கடி நேரில் சந்திக்க வேண்டுமென்றும், அளவளாவ வேண்டுமென்றும்,

அன்புடன் இறுகத் தழுவி ஆனந்தபாஷ்யம் சொரிய வேண்டு மென்றும் அந்தச் சக்தி எங்களைத் தூண்டிவந்தது.

இந்தத் தூண்டுதலினால், ஒரு முறை அவளை என் வீட்டுக்கு வா என்று நான் துணிந்து அழைத்துவிட்டேன்!

அவள் வந்தாள்; வாசலில் நின்றாள். நான் அவளைப் பார்த்தேன்; அவள் என்னைப் பார்த்தாள். நான் புன்னகை புரிந்தேன்; அவளும் புன்னகை புரிந்தாள்.

அந்த ஒரு கணத்திற்குப் பிறகு....?

அப்பா பார்த்துவிட்டால்...? அண்ணா பார்த்து விட்டால்...? அம்மா பார்த்து விட்டால்....? அக்கா பார்த்துவிட்டால்....?

இப்படி அடுத்தடுத்துப் பல கேள்விகள் அடுக்கடுக்காக என் உள்ளத்தில் எழுந்தன. அவ்வளவுதான்; என் கண்களில் பீதி நிறைந்தது; கால்கள் தரையில் பாவவில்லை; தடுமாறின.

ஏன் இந்த நடுக்கம்? அப்பா, அம்மா, அண்ணா, அக்கா எல்லோரும் என்னுடைய ஜன்ம விரோதிகளா, என்ன? - விரோதிகள் இல்லையென்றால் எனக்குப் பிடித்தமான அவளை என் வீட்டுக்குள் அழைக்க என்னால் ஏன் முடியவில்லை?

இந்நிலையில் ஆவலுடன் என்னிடம் ஏதோ சொல்லத் துடித்த அவள், அசடு வழியும் என் முகத்தைக் கண்டதும் திடுக்கிட்டு நின்றாள்!

நானோ எப்படியாவது ராஜ விழி விழிப்பதென்று தீர்மானம் செய்து கொண்டு, அதற்காகப் பெரும் பிரயத்தனம் செய்து பார்த்தேன்.

முடியவில்லை; அவள் திரும்பிப் போனாள்!

* * *

அடுத்தபடி, எனக்கென்று நான் தனியாக எங்கேயாவது ஓரு அறையை வாடகைக்கு அமர்த்திக் கொள்வதென்றும், அந்த அறைக்கு அடிக்கடி அவள் வந்து என்னைச் சந்தித்துவிட்டுச் செல்வதென்றும் எங்களுக்குள் தீர்மானமாயிற்று. அதன்படியே நானும் படாத பாடுபட்டு ஓர் அறையை வாடகைக்குப் பிடித்தேன்.

அவள் வந்தாள்; எனக்கு எதிரேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

நான் கதவைச் சாத்தித் தாளிடப் போனேன்.

''பிறருடைய கவனத்தைக் கவருவதற்கு வேறு வினை வேண்டியதில்லை!'' என்றாள் அவள்.

எனக்கும் அது உண்மையாகப் பட்டது. கதவைத் தாளிடாமல் வெறுமனே சாத்திவிட்டு வந்து உட்கார்ந்து, அவளுடைய மிருதுவான கரத்தை மெல்லப் பற்றினேன்.

அவள் என் உடலையும் உயிரையுமே தன் வசப்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு மந்திரச் சிரிப்பால் என்னைக் காந்தம்போல் இழுத்தாள்.

நான், அவளுடைய கரத்தைக் கொஞ்சம் அழுத்திப் பிடித்து, ''அப்பா! இதற்காக நாம் எவ்வளவு நாட்கள் காத்திருக்க வேண்டியிருந்தது!'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டேன். அதற்குள், ''என்னடா, கதவைச் சாத்திக் கொண்டு...?'' என்று கேட்டுக்கொண்டே, எதிர்பாராத விதமாக வந்து சேர்ந்தான் என் நண்பன் நாராயணன்.

இருவரும் திடுக்கிட்டு அவனைத் திரும்பிப் பார்த்தோம்.

''ஓ!'' என்று அவன் ஒரு தினுசாக நீட்டி முழக்கிக் கொண்டே வெளியே சென்றான். அவன் வெளியே சென்றதும் 'களுக்' என்ற சிரிப்பொலி எங்கள் காதில் விழுந்தது.

''என்னுடைய நண்பன் எப்படிப்பட்டவன், தெரியுமா? கோயபெல்ஸின் திரு அவதாரம்!'' என்றேன் நான்.

''பார்த்தாலே தெரிகிறதே! இங்கிலீஷ்காரனிடமிருந்து ஹாட்டும் சூட்டும் போடக் கற்றுக்கொண்ட மனுசன், அவனிடமிருந்து கொஞ்சம் ஒழுங்கும் கற்றுக் கொண்டிருக்கக் கூடாதோ?'' என்றாள் அவள்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. ''அது என்ன ஒழுங்கு?'' என்று கேட்டேன்.

''இங்கிலீஷ்காரன் இப்படியா 'திடுதிப்' என்று பிறத்தியாருடைய அறைக்குள் நுழைவான்? கதவைத் தட்டிக் கொண்டு வெளியிலே அல்லவா நிற்பான்? உள்ளேயிருப்பவர்கள் 'வா' என்று சொல்வதற்கு முன்னால் அவன் வரவே மாட்டானே!'' என்றாள் அவள்.

''அந்த வழக்கம் இங்கிலாந்தில்தானே?'' என்றேன்.

''ஏன், இந்தியாவில் மட்டும் யாராவது வேண்டா மென்றார்களாக்கும்!'' என்று சொல்லிக்கொண்டே எழுந்து அவள் நடையைக் கட்டினாள்; நான் தடுக்கவில்லை.

* * *

இந்தச் சோதனைக்குப் பிறகு என் உள்ளத்தில் புயல் வீச ஆரம்பித்து விட்டது. நண்பன் நாராயணனைப் பார்த்து, அவளை எனக்கு முன்பின் தெரியாதென்றும், நான் நடிக்கப் போகும் உதவி நாடகம் ஒன்றுக்கு டிக்கெட் விற்பதற்காக அன்று என்னைத்தேடி வந்திருந்தாளென்றும் ஒரு மகத்தான பொய்யைச் சிருஷ்டித்துச் சொன்ன பிறகு தான் என் மனம் ஒருவாறு நிம்மதியடைந்தது.

அதற்குப் பிறகாவது நாங்கள் 'சும்மா இருப்பதே சுகம்' என்று இருந்துவிட்டோமா என்றால், அது தான் இல்லை!

இன்னதென்று தெரியாத அந்தச் சக்தி எங்களை மீண்டும் ஆட்டுவித்தது; நாங்கள் ஆடினோம்!

அதன்படி, மூன்றாவதாக இருவரும் ஏதாவது ஒரு பொது இடத்தில் சந்திப்பதென்ற முடிவுக்கு வந்தோம். அன்று மாலை ஆறரை மணிக்குக் குறிப்பிட்ட சினிமா ஒன்றுக்குச் செல்வதென்றும், ஒருவரையொருவர் எதிர் பாராமலே மேல்வகுப்புக்குச் சென்று விடுவதென்றும் தீர்மானித்தோம்.

என்னத்தைச் சொல்ல? - நான் சினிமாவுக்குச் சென்றது அதுதான் முதல் தடவையல்ல; எத்தனையோ தடவை சென்றிருக்கிறேன். அவ்வாறு சென்றபோதெல்லாம் ''எனக்குப் பின்னால் யார் வருகிறார்கள், என்னைச் சுற்றி யார் யார் நிற்கிறார்கள்?'' என்றெல்லாம் நான் கவனித்ததே கிடையாது. அன்று என்னடாவென்றால், என்னுடைய கவனமெல்லாம் எனக்குப் பின்னால் வந்தவர்கள் மீதும், என்னைச் சுற்றி நின்றவர்கள் மீதும் சென்றது.

''இதென்ன சங்கடம்!'' என்று எண்ணிக் கொண்டே டிக்கெட்டை வாங்கினேன். மாடிப்படி ஏறியதும் எனக்குப் பின்னால் 'தடதட'வென்ற சத்தம் கேட்டது. ''நம்மை யார் தொடர்ந்து

வருகிறார்கள்?'' என்று திரும்பிப் பார்த்தேன். யாருமில்லை; படிகள் மரப் படிகளாதலால் நான் ஏறியபோது கேட்ட சத்தம் அது!

எனக்கு முன்னாலேயே அவள் வந்து அங்கே உட்கார்ந்திருந்தாள். நான் சிரித்துக் கொண்டே சென்று அவள் பக்கத்தில் அமர்ந்தேன்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''ஒன்றுமில்லை!'' என்று மழுப்பிவிட்டுச் சுற்றும் முற்றும் பார்த்தேன். எங்கள் இருவரைத் தவிர அங்கு வேறு யாருமே இல்லை!''

அந்த நிமிஷம் எனக்கு மிகவும் சந்தோஷமாகத்தான் இருந்தது. ''இன்றைக்காவது மனம் விட்டுப் பேசலாம்'' என்று எண்ணிக் கொண்டேன்.

அடுத்த நிமிஷம் அதற்கும் வந்தது ஆபத்து! எங்கிருந்தோ பத்துப் பன்னிரண்டு பேர் ஒருவர் பின் ஒருவராக வந்து சேர்ந்தார்கள். வந்தவர்களுக்கு உட்கார இடமா இல்லை? எங்களுக்குச் சற்றுத் தூரத்தில் எவ்வளவோ இடம் இருக்கத்தான் செய்தது. ஆயினும் அவர்கள் அனைவரும் எங்களைச் சுற்றியிருந்த இடங்களிலேயே உட்கார்ந்தார்கள்!

எங்களுடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ள வேண்டுமென்பதில்தான் இந்த ஜன்மங்களுக்கு எவ்வளவு ஆர்வம்! ஏழேழு ஜன்மத்துக்கும் தொடர்ந்து வரும் என்கிறார்களே, அந்தப் பாவத்தைப் போலல்லவா இவர்கள் எங்கு போனாலும் எங்களை விடாமல் தொடர்ந்து வந்து தொலைக்கிறார்கள்!

எங்களுக்கு வந்த ஆத்திரத்தில் அவர்களையெல்லாம் வாயாரத் திட்ட வேண்டும்போல் இருந்தது. ஆனால் அத்தனை பேருக்கும் மத்தியில் அது சாத்தியமா? ஆகேவ, அவரவர்களை மனமாரத் திட்டிக்கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தோம்.

படம் முடிந்ததும் ஒருவரையொருவர் எதிர்பார்க்கவில்லை; 'பதவிசு'கள் போல அவரவர்களுடைய வீட்டை நோக்கி நடையைக் கட்டிவிட்டோம்.

* * *

அன்றிரவுதான் விடிய விடிய நான் யோசித்தேன். அப்படியும் இப்படியுமாக ராஜ நடை நடந்த வண்ணம் யோசித்தேன்; கட்டிலில் உட்கார்ந்து வீட்டு முகட்டைப் பார்த்த வண்ணம் யோசித்தேன்; மல்லாந்து படுத்துக் கொண்டும் மண்டையைக் குடைந்து கொண்டும் யோசித்தேன். அதன் பயனாகத்தான் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்த தீர்மானத்திற்கு நான் வந்தேன். அதாவது ''நாங்கள் இந்த உலகத்தில் வாழ வழியில்லை!'' என்று.

உடனே என்னுடைய தீர்மானத்தை அவளுக்கு எழுதினேன் - வருத்தத்துடன்தான்!

என்னுடைய வருத்தத்தை அவள் பொருட்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக, ''இந்தப் பரந்த உலகத்தில் நாம் வாழ வழியா இல்லை? வழி இருக்கத்தான் இருக்கிறது. ஆனால், **உங்களுக்கு என்மீது காதல்தான் இல்லை!**'' என்று அவள் எழுதியிருந்தாள்.

இதைப் படித்ததும் எனக்குச் 'சுருக்'கென்றது!

என்ன அக்கிரமம், இது! - எவ்வளவு பொல்லாதவள், அவள்!

எனக்கு அவள்மீது காதல் இல்லையாமே!

ஒருவேளை அவள் சொல்வதும் உண்மையா யிருக்குமோ! - அவ்வளவுதான்; என்னுடைய தீர்மானத்தில் எனக்கே சந்தேகம் வந்துவிட்டது. அப்படியே அசந்து உட்கார்ந்துவிட்டேன். உட்கார்ந்து நெடுநேரம் ஆழ்ந்து யோசித்தேன் - ஆம் அவள் சொல்வது உண்மை; முற்றிலும் உண்மை; முக்காலும் உண்மை!

அவள்மீது எனக்கு உண்மையிலேயே காதல் இருந்தால், அந்தக் காதல் எந்தச் சக்தியைத்தான் எதிர்த்து நிற்காது?

# எத்தனை பேரோ!

நீங்கள் 'கஸ்தூரி பவ'னத்துக்குச் சென்றிருந்தால் அங்கே பெரியசாமியையும் சின்னச்சாமியையும் பார்த்திருக்கலாம். இரவிலும் பகலிலுமாக இருவரும் அந்தப் பங்களாவைக் காவல் காத்து வருபவர்கள். ஒருவாரம் பெரியசாமி பகலில் காவல் காத்தால், இன்னொரு வாரம் சின்னச்சாமி இரவில் காவல் காப்பான். இப்படியே இருவரும் அந்தக் கஸ்தூரி பவனத்தை மாறி மாறிக் காவல் காத்து வந்தார்கள்.

பகலில் காவல் காப்பவன் காலை ஆறு மணிக்கே பங்களாவுக்கு வந்துவிட வேண்டும். அதற்குப் பிறகு இரவு எட்டு மணிக்குத்தான் அவன் வீட்டுக்குச் செல்ல வேண்டும். இரவில் காவல் காப்பதற்காக எட்டு மணிக்கு வருபவன் காலை ஆறு மணிக்குத்தான் வீட்டுக்குச் செல்ல வேண்டும். மத்தியில் அவர்கள் இருவரும் அந்தப் பங்களாவின் வாயிலை விட்டு அப்படி இப்படி நகரக் கூடாது, நின்றது நின்றபடி நிற்கவேண்டும். ஒருமாதம் இரண்டு மாதங்கள் அல்ல; ஒரு வருடம் இரண்டு வருடங்கள் அல்ல; எத்தனையோ நாட்களாக, எத்தனையோ மாதங்களாக, எத்தனையோ வருடங்களாக நின்று வருகிறார்கள்.

அந்தப் பங்களாவில் வேலை பார்க்க வந்தபோது பெரியசாமிக்கு வயது இருபத்திரண்டு; சின்னசாமிக்கு வயது இருபது. இன்று அவர்கள் இருவரும் கிட்டத்தட்ட அறுபதாவது வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் கஸ்தூரி பவனத்தின் வாயிலில் அவர்கள் இன்றுவரை உட்காரவில்லை!

அரிதினும் அரிதான மானிடப் பிறவி எடுத்த அவர்கள் இருவரும், பகலில் வேலை செய்யும்போது இரவில் தூங்குவார்கள்; இரவில் வேலை செய்யும் போது பகலில் தூங்குவார்கள். இதைத் தவிர அவர்கள் வேறொன்றும் அறியாதவர்கள். அறிவதற்கு வேண்டிய அவகாசமும் அவர்களுக்குக் கிடையாது!

காலைக் கதிரவனின் பொன்னிறக் கிரணங்களிலோ, மாலைக் கதிரவனின் செந்நிறக் கிரணங்களிலோ அவர்கள் தங்கள் கருத்தைச் செலுத்துவதில்லை; வெண்ணிலவின் தண்ணொளியிலும் அவர்கள் தங்கள் மனதைப் பறிகொடுப்பதில்லை; முடிவில்லாத வானத்தில் தவழ்ந்து விளையாடும் மேகக் கூட்டங்களைக் கண்டோ, சுடர்விட்டு

ஒளிரும் நட்சத்திரக் குழுவைக் கண்டோ அவர்கள் மகிழ்வதில்லை; வானளாவிய மரங்களும் மலைகளும் அவர்களுடைய கவனத்தைக் கவருவதில்லை; அதிகாலையில் கேட்கும் பட்சி ஜாலங்களின் உதயகீதமும், அர்த்தராத்திரியில் கேட்கும் ஆந்தையின் அலறலும், ஓயாத ஒழியாத கடல் அலைகளின் பேரிரைச்சலுங்கூட அவர்கள் காதில் விழுவதில்லை!

''ஹிட்லர் உயிருடன் இருக்கிறாரா, இல்லையா?'' ''மூன்றாவது உலக மகா யுத்தம் எப்பொழுது வரும்?'' ''உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மந்திரிமார்கள் இன்னும் எத்தனை அறிக்கைகள் விட வேண்டும். எத்தனை பிரசங்கங்கள் செய்யவேண்டும்?'' ''நகரசுத்தித் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்வதற்கும், அதிகாரிகள் அவர்களுடைய குடிசைகளைப் பிய்த்து எறிவதற்கும் என்ன சம்பந்தம்?'' ''விதவா விவாகம் வேண்டுமென்று புருஷர்கள் என்னதான் கரடியாய்க் கத்தினாலும் பெண்கள் ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்?'' - இம்மாதிரி பிரச்சனைகளுக்கும், பெரியசாமி - சின்னசாமிக்கும் ரொம்ப ரொம்ப தூரம்!

இவற்றையெல்லாம் பார்க்கும்போது ''கஸ்தூரி பவனத்தைக் காவல் காக்கத் தானா இவர்கள் பிறந்தார்கள்?'' என்று நமக்குக் கேட்கத் தோன்றுகிறதல்லவா? அதுகூட அவர்களுக்குத் தோன்றுவதில்லை!

இன்னும் சொல்லப் போனால் ''நாம் ஏன் பிறந்தோம், எதற்காக உயிர் வாழ்கிறோம்?'' என்று கூட அவர்கள் சிந்திப்பதில்லை. அதற்கு வேண்டிய நேரந்தான் அவர்களுக்கு இல்லையோ, அல்லது மனந்தான் இல்லையோ யார் கண்டார்கள்?

* * *

கடவுள் எல்லோருக்கும் பொதுவானவர் என்றாலும் அவருடைய கடாட்சத்தை சிலர் தான் பெற முடிகிறதல்லவா? அப்படிப் பெற்றவர்களில் வைரவன் செட்டியாரும் ஒருவர். கஸ்தூரி பவனம் அவருடைய சொந்தப் பங்களாதான். இகவாழ்க்கையிலுள்ள சுகங்கள் அத்தனையையும் அனுபவித்து அனுபவித்து அவர் அலுத்துப் போனவர். ஆனால் அதற்குப் பரலோகம் சென்று விடவும் அவர் விரும்பவில்லை. இத்தனைக்கும் இகலோகத்தைவிடப் பரலோகம் எத்தனையோ விதங்களில் சிறந்தது என்பதை அவர் அறிந்துதான் இருந்தார். தாம் அறிந்த அந்த உண்மையைப் பிறருக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டும் வந்தார். ஆனால் அவர் மட்டும் அந்த வழியைப்

பின்பற்ற ஏனோ தயங்கினார். இல்லையென்றால் வைர வியாபாரியான அவருக்குப் பரலோகம் செல்ல வழியா தெரியாமலிருக்கும்?

எந்தவிதமான ஆசையும் இல்லாமலிருந்த அவருடைய உள்ளத்தில் சில நாட்களாக ஒரே ஒரு ஆசை மட்டும் கிடந்து தவித்துக் கொண்டிருந்தது. அந்த ஆசை வேறொன்றுமில்லை. தானும் ஒரு மந்திரியாக வேண்டுமென்ற ஆசைதான்! இந்த ஆசைக்குக் காரணம், ஏழைகளுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்பத்தில் தமக்குள்ள ஆர்வந்தான் என்று அவர் சொல்லிக் கொண்டார். இதைத் தவிர அவருடைய ஆசைக்கு வேறொரு காரணமும் இல்லையா என்று சில 'சந்தேகப் பிராணி'கள் ஆராய ஆரம்பித்தார்கள். இத்தகைய 'தேசத் துரோகி'களைப் பார்க்கும் போதெல்லாம் செட்டியாருக்கு ஆத்திரம் பொங்கி வந்ததில் ஆச்சரியமென்ன?

இத்தனைக்கும் வைரவன் செட்டியார் அவசரக்காரர் அல்ல; எந்தக் காரியத்தையும் ஆற அமர யோசித்துச் செய்பவர். பெரியசாமியையும் சின்னச்சாமியையும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் விஷயத்தில் கூட அவர் எத்தனையோ நாட்கள் யோசித்தார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் பதினைந்து ரூபாய் சம்பளம் என்று தீர்மானம் செய்வதற்கு முன் அவர் ஒரு சின்னக் கணக்கும் போட்டுப்பார்த்தார். அதாவது, அவர்களுக்குப் பதிலாகப் பேஷா ராஜபாளையத்து நாய் ஒன்றை வாங்கி வளர்த்தால் என்ன செலவாகும் என்று எண்ணிப் பார்த்தார். அவ்வாறு எண்ணிப் பார்த்ததில் அந்த நாய்க்கு மாதம் முப்பது ரூபாய்க்கு குறையாமல் செலவாகும் என்று தெரிந்தது; அதுமட்டுமில்லை; இவர்களுக்கும் நாய்க்கும் எவ்வளவோ வித்தியாசமும் இருக்குமல்லவா?

நாய்க்கு என்ன தெரியும்? எஜமானைக் கண்டால் வாலை ஆட்டவும், அன்னியரைக் கண்டால் குரைக்கவும் தெரியும். எஜமான் காரில் ஏறும்போதும் இறங்கும்போதும் கதவைத் திறந்துவிட அதற்குத் தெரியுமா? 'ஹாரன்' சத்தத்தைக் கேட்டதும் அறில அடித்துக் கொண்டு ஓடி வந்து, பங்களாவின் கேட்டைத்திறந்து விட அதற்குத் தெரியுமா? 'ஏய்!' என்று கூப்பிட்ட மாத்திரத்தில் ஓடோடியும் வந்து, 'ஏன்சாமி!' என்று மரியாதை செலுத்த அதற்குத் தெரியுமா? இன்னும் 'இரவில் தூங்கினாயோ, உன்னை வேலையிலிருந்து நீக்கிவிடுவேன்!' என்றும், 'நின்ற இடத்திலேயே நிற்காமற் போனாயோ விரட்டி விடுவேன்' என்றும் நாயைப் பயமுறுத்த முடியுமா? - இப்படிப் பல

சௌகரியங்களையும் உத்தேசித்துத் தான் அவர் பெரியசாமியையும் சின்னசாமியையும் தமது பங்களாவைக் காவல் காக்க வைத்துக் கொண்டார். ''ஏதோ, எசமான் புண்ணியத்திலே கால் வயிற்றுக் கஞ்சியாவது குடிக்கிறோமே!'' என்று திருப்தியுடன் அவர்களும் அந்த வேலையைச் செய்து வந்தனர். வேறு என்ன திருப்தி அவர்களுக்கு வேண்டிக் கிடக்கிறது!

* * *

**அ**ன்று பெரியசாமிக்குப் பகல் வேலை. அதற்காக வழக்கம்போல் அவன் கையில் கட்டுச்சாதத்துடன் காலை ஆறுமணிக்கே கஸ்தூரி பவனத்திற்கு வந்துவிட்டான். மத்தியானம் பன்னிரண்டு மணிவரை கால் கடுக்க நின்ற பிறகு, அவனுக்கு வயிற்றைப் பசித்தது. ஒரு மரத்தடிக்குச் சென்று கட்டுச் சாதத்தை அவிழ்த்துச்சாப்பிட ஆரம்பித்தான். அதற்குள் அந்தப் பாழாய்ப்போன 'ஹாரன்' சத்தம் அவனுக்குக் காதில் விழுந்தது. அவ்வளவுதான்; கட்டுச் சாதத்தைக் கீழே விரித்தது விரித்தபடி வைத்துவிட்டு அவன் விழுந்தடித்துக் கொண்டு ஓடினான்; பங்களாவின் கேட்டைத் திறந்து விட்டான்; கார் உள்ளே நுழைந்ததும் அப்புறம் எஜமான் கீழே இறங்குவதற்காகக் கதவைத் திறந்துவிட வேண்டாமா? அதற்காக அவன் காரைப் பின் தொடர்ந்து ஓட்டமும் நடையுமாகச் சென்றான்.

இந்தச் சமயத்தில் பெரியசாமியின் சாப்பாட்டுக் கவலையைத் தீர்த்து வைக்க ஒரு காகம் முன்வந்தது. மனிதனைப் போல் கிடைத்ததைத் தானே தின்றுவிட வேண்டும் என்ற ஆசை காகத்துக்குக் கிடையாதல்லவா? ஆகவே, அது 'சேர வாரும் ஜெகத்தீரே!' என்று தன் அண்டை அயலிலிருந்த காகங்களை எல்லாம் கூவி யழைத்தது. அப்புறம் கேட்க வேண்டுமா? அவன் திரும்பி வருவதற்குள் மரத்தடியிலிருந்த கட்டுச்சாதம் அத்தனையும் காலி!

வெறும் இலையைக் கண்ட பெரியசாமிக்கு எப்படியிருந்ததோ என்னமோ, அவன் தன் வயிற்றில் ஓங்கி ஓர் அடி அடித்துக் கொண்டு வாசலுக்கு வந்து நின்று கொண்டான்!

நேரம் ஆக ஆக, அவனுக்குப் பசி அதிகரித்தது. மணி எப்பொழுது எட்டடிக்கப் போகிறது என்று அவன் ஒவ்வொரு நிமிஷத்தையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்து வந்தான். பொழுது சாய்ந்து தெரு விளக்குகள் ஏற்றப் பட்டதும் அவனுக்குக் கொஞ்சம் தெம்பு உண்டாயிற்று. 'சின்னச்சாமி இன்னும் கொஞ்ச

நேரத்திற்கெல்லாம் வந்து விடுவான்!'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

''அவன் வந்தால் வருகிறான் வராவிட்டால் போகிறான்!'' என்று அவன் தன்பாட்டுக்கு வீட்டுக்குப் போய்விடவும் முடியாது; சின்னச்சாமி வந்து தன் இரவு வேலையை ஒப்புக்கொண்ட பிறகு தான் போகவேண்டும் இல்லையென்றால் வேலை போய்விடுமே!

களைப்பு மிகுதியால் பெரியசாமிக்குக் கொட்டாவி மேல் கொட்டாவியாக வந்தது. அவன் அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். மணி எட்டும் அடித்தது; ஒன்பதும் அடித்தது; பத்தும் அடித்தது. பதினொன்றும் அடித்தது. சின்னச்சாமியைக் காணவே காணோம்! ''சரி, அவன் செத்துத் தொலைந்திருக்க வேண்டும். இல்லையென்றால் இந்த ஜன்மத்தில் இப்படி லீவு எடுத்துக் கொள்ள எப்படித் துணிந்திருக்க முடியும்?'' என்று பெரியசாமி தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

இந்தத் தீர்மானத்திற்கு வந்ததும் அத்தனை நேரமும் அவனிடம் குடி கொண்டிருந்த பரபரப்பு அவனை விட்டு அகன்று விட்டது. மறுநாள் காலை ஆறு மணியை எதிர் பார்த்தபடி அவன் நிம்மதியாக நின்றுவிட்டான்!

* * *

**அ**ன்றிரவு மணி ஒன்று அல்லது இரண்டு இருக்கும். என்றுமில்லாத அசதியாக அன்று என்னமோ அவனுடைய கால்கள் அவனுடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டன; வேறு வழியின்றி உட்கார்ந்துவிட்டான். அவ்வளவுதான்; அவன் கண்கள் அவனுடைய அனுமதியில்லாமலே சிறிது அயர்ந்து விட்டன.

அடுத்த நிமிஷம் அவன் தலையில் யாரோ ஓங்கி ஓர் அடி அடித்து, அவனை எழுந்து நிற்கச் செய்தது போலிருந்தது. எசமான்தான் தற்செயலாக வந்து, தான் செய்த அநியாயத்தைப் பார்த்துவிட்டாரோ என்று பயந்து ''இல்லை, எசமான்....!'' என்று நடுங்கும் குரலில் சொல்லிக் கொண்டே அவன் எழுந்து நின்றான்.

''பயப்படாதே அண்ணே! எசமான் இல்லை திருடன்!'' என்றான் அவனுக்கு எதிரே நின்ற ஒருவன்.

இதைக் கேட்டதும் பெரியசாமிக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. ''இவன் என்ன புதுத் திருடனா யிருக்கிறானே! திருட வருபவன்

எங்கேயாவது தூங்குகிற காவற்காரனை எழுப்புவதுண்டா?'' என்று எண்ணி அவன் குழம்பினான்.

''என்ன அண்ணே! என்ன யோசிக்கிறே?'' என்றான் திருடன்.

''இல்லை, நீ நிசமாவே திருடன்தானான்னு யோசிக்கிறேன்!'' என்றான் பெரியசாமி.

''திருடன்தான் அண்ணே! அதில் என்ன சந்தேகம்? இந்தத் தள்ளாத வயசிலே உறங்கி விழுந்துக் கிட்டே காவல் காக்கும் உன்னைக் கண்டதும், எனக்கு 'ஐயோ பாவம்!'ன்னு இருந்திச்சு, உங்கிட்டே சொல்லாமப் போவானேன்னு, சொல்லிவிட்டுப் போலாம்னு எழுப்பினேன் - சரி நான் உள்ளேபோய் வரட்டுமா?'' என்றான் திருடன்.

இதைக் கேட்டதும் பெரியசாமிக்குக் கோபம் கோபமாக வந்தது. அவன் சற்று நிமிர்ந்து நின்று ''என்ன துணிச்சல்டா, உனக்கு? என்னையே கேட்டுக் கிட்டா உள்ளே நுழையப் பார்க்கிறே?'' என்று தன் கையிலிருந்த தடியை ஓங்கினான்.

''டேய், சும்மா நிறுத்து! உனக்கோ வயசாயிடிச்சு இன்னும் நீ ஏன் இந்த வேலையைக் கட்டிக்கிட்டு அழறே? பேசாம இருந்து நான் சொல்றதைக் கேளு - இன்னும் கொஞ்சநேரம் பொறுத்துக்கோ! அப்புறம் உனக்கு என்ன வேணுமோ, என்னைக் கேளு; நான் கொடுக்கிறேன், அதை வச்சிக்கிட்டுச் சாகிற காலத்திலாச்சும் நீ கொஞ்சம் சந்தோஷமா யிருக்கப் பாரு! - என்ன, எனக்கு உத்தரவுதானே?''

''நல்லாயிருக்குடா, நீ சொல்ற ஞாயம்! இத்தனை நாளா என் உசிரைக் காப்பாத்தி வந்த எசமானுக்கா என்னைத் துரோகம் செய்யச் சொல்றே?

''என்னா, அண்ணே! நீ கொஞ்சங்கூட விசயம் தெரியாமப் பேசறியே. எசமான் இத்தனை நாளா உன் உசிரை எதுக்காவக் காப்பாத்திக்கிட்டு வந்தாரு? - அவரு வீட்டை நாயாட்டம் காவல் காக்கத்தானே? நாலு பேரைப் போல நீயும் சந்தோஷமா வாழறத்துக்கு இல்லையே!''

''டேய், இந்த உபதேசமெல்லாம் எனக்கு வேணாம்! ஒருநாளும் நான் உண்ட வீட்டுக்கு ரெண்டகம் நினைக்க மாட்டேன். நீ மரியாதையா இந்த இடத்தைவிட்டுப் போறியா? - இல்லை, கூச்சல் போடட்டுமா?

''நானும் உன்னை மரியாதையாய்த்தான் கேட்டுக்கிறேன் - பேசாம நீ என்னை உள்ளே விட்றியா? - இல்லே உன் மென்னியைப் பிடித்துத் திருகிடட்டுமா?'' என்று தன் கைகளைப் பெரியசாமியின் கழுத்துக்கு அருகே கொண்டு போனான் திருடன்.

''திருகுவேடா, திருகுவே! என்னை என்ன கிழவன்னு நினைச்சுக்கிட்டியா? மரியாதையாய்ப் போடா, வெளியே!'' என்று கத்திக்கொண்டே, அவன் கழுத்தில் கம்பை வைத்து நெட்டித் தள்ளினான் பெரியசாமி.

அவ்வளவுதான்; ''வாழத் தெரியாத மனுஷனுக்கு வைகுண்டந்தான் சரி!'' என்று சொல்லிக் கொண்டே திருடன் அவன் மென்னியைப் பிடித்து விட்டான்.

அடுத்த நிமிஷம் ''எசமான் எசமான்! திருடன் திருடன்!' என்று அலறிக் கொண்டே கீழே விழுந்தான் சாகத் தெரியாத பெரியசாமி.

அவனுடைய அலறலைக் கேட்டுச் செட்டியார் 'ரிவால்வர்' சகிதம் எழுந்து ஓடி வருவதற்குள் திருடன் ஓடி விட்டான். அதுமட்டுமில்லை. பெரியசாமியின் உயிரும் அவன் உடலைவிட்டு ஓடி விட்டது.

''இதென்ன சங்கடம்! போயும் போயும் இவன் இங்கே விழுந்தா செத்துத் தொலைய வேண்டும்? இவன் உழைத்த உழைப்புக்கு 'எங்களுக்கு ஏதாவது கொடு' என்று இவனுடைய பெண்டாட்டி பிள்ளைகளெல்லாம் வந்து என் கழுத்தை அறுக்குமே?'' என்று எண்ணிக் கண்ணீர் வடித்தார் எதிர்கால மந்திரியான வைரவன் செட்டியார்.

அடுத்த கணம் அவருடைய கவனம் சின்னச்சாமியின் மீது சென்றது. ''அவன் ஏன் இன்றிரவு வேலைக்கு வரவில்லை? அவனும் இவனைப்போல் செத்துத் தொலைந்தானோ? சனியன்கள்! இரண்டு கிழங்களும் ஒரேயடியாய் ஒழிந்து தொலைந்தால் நம்மைப் பிடித்த பீடை விட்ட மாதிரி! - ஆனால் வேறு யாராவது வந்தால் இவர்களைவிட அதிகச் சம்பளம் கேட்பார்களோ, என்னமோ! - அதற்காகத்தானே 'இந்தக் கிழங்களே இருந்துவிட்டுப் போகட்டும்!' என்று இத்தனை நாளும் சும்மா இருந்தேன் என்று அவர் தமக்குள் அலுத்துக் கொண்டார். பிறகு, திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவர் போல் 'விடுவிடு'வென்று ஓடி, போலீஸ் ஸ்டேஷனுக்கு 'டெலிபோன்' செய்தார். 'வைர வியாபாரி வைரவன் செட்டியார்'

என்று தெரிந்ததும் அவர்களும் உடனே விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தனர். அடுத்த நிமிஷம் பெரியசாமியின் பிரேதம் வழக்கம்போல் பரிசோதனைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டு, எல்லாம் வல்ல பரம் பொருளான பணத்தின் அருளினாலே, 'இயற்கை மரணம்' என்று தீர்ப்புக் கூறப்பட்டது - எவனா யிருக்கட்டும், செத்துப்போன பிறகு விசேஷ கவனம் செலுத்தும் நம் சர்க்காரின் கருணையை எவ்வளவு தூரம் பாராட்டினாலும் போதாது போங்கள்!

* * *

மறுநாள் காலை ஆறு மணிக்கு, ''எசமான் என்ன சொல்வாரோ, என்னமோ!'' என்று நடுங்கிக்கொண்டே சின்னச்சாமி வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் செட்டியாருக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. ''ஏண்டா, நாயே! நேற்றிரவு ஏன் வரவில்லை?'' என்று எரிந்து விழுந்தார்.

''என் பெண்டாட்டியைத் தேள் கொட்டிவிட்டதுங்க!'' என்று ஆரம்பித்தான் சின்னச்சாமி.

''சரி, உன் பெண்டாட்டியைத் தேள் கொட்டிவிட்டதோ இல்லையோ, பின்னே நீ ஏன் இன்று வேலைக்கு வந்தாய்? போய் அவளைத் தூக்கி வைத்துக் கொண்டிரு, போ! இங்கே நிற்காதே!''

''எசமான்....!''

''போடா! நேற்று அவன் திருடனைக் கண்டதுமே கீழே விழுந்து பிராணனை விட்டுவிட்டான்; நீ இருட்டைக் கண்டாலே பிராணனை விட்டு விடுவாயோ, என்னமோ! - போய்த் தொலை!''

சின்னச்சாமிக்கு ஒன்றும் புரியவில்லை. அருகிலிருந்த தோட்டக்காரனை ரகசியமாக விசாரித்து விஷயத்தைத் தெரிந்து கொண்டான். ''நல்ல வேளை! நேற்று நாம் வராமற் போனது நல்லதாய்ப் போச்சு!'' என்று அவன் தனக்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டான்!

அதற்குள் செட்டியாரின் ஆத்திரமும் ஒருவாறு அடங்கியது. அவர் குரலும் உச்சஸ்தாயியிலிருந்து கீழ்ஸ்தாயிக்கு இறங்கியது. ''ஏண்டா, சின்னச்சாமி! அந்தப் பெரியசாமிக்குப் பெண்டாட்டி பிள்ளையெல்லாம் இருக்கா என்ன?'' என்று விசாரித்தார்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லைங்க; அவன் ஒண்டிக்கட்டைங்க! அது தெரியாமத்தான் நீங்க இத்தனை நாளும் எனக்கும் அவனுக்கும்

ஒரே சம்பளம் கொடுத்துக்கிட்டு வந்தீங்க!'' என்று சொல்லிவிட்டு அவன் மெள்ளத் தலையை சொறிந்தான்.

சம்பள உயர்வு கேட்பதற்கு இதைவிட நல்ல சந்தர்ப்பம் அவனுக்கு எங்கே கிடைத்திருக்கப் போகிறது?

ஆனால், அவன் எடுத்துக் காட்டிய வித்தியாசத்தைச் செட்டியார் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவர் அதையார் கேட்டார்? ''செத்துப் போன பெரியசாமிக்குப் பெண்டாட்டி, பிள்ளை இருக்கிறதா, இல்லையா?'' என்று தானே கேட்டார்? - ''இல்லை'' என்று தெரிந்ததும், ''கவலை விட்டது, கடவுள் நம்முடைய பங்கில் இல்லாமலிருப்பாரா!'' என்று தமக்குள் எண்ணி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார்.

அடுத்த நிமிஷம் அவருடைய முகம் மலர்ந்தது. ''ஏலே, சின்னச்சாமி! நாளைக்கு நம்ம பெரியசாமிக்குப் பதிலா வேறே ஒரு ஆளைப் பிடித்துக் கொண்டு வருகிறாயா?'' என்று கேட்டார் உற்சாகத்துடன்.

இதைக் கேட்டதும் சின்னச்சாமிக்கும் உற்சாகம் பிறந்தது. ''அதுக்கென்னங்க, நம்ம ஊரிலே ஆளுக்கா பஞ்சம்? வேண்டிய ஆளை நான் இழுத்துக்கிட்டு வரேனுங்க!'' என்றான்.

''சரி, போய் 'கேட்'டண்டை நில்லு!'' என்று சொல்லிவிட்டுச் செட்டியார் உள்ளே போய்விட்டார்.

சின்னச்சாமி பிழைத்தான்!

பெரியசாமியைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை; செட்டியாருக்காகவே பிறந்தவன்போல் பிறந்து, செட்டியாருக் காகவே வளர்ந்தவன் போல் வளர்ந்து, செட்டியாருக்காகவே வாழ்ந்தவன் போல் வாழ்ந்து, செட்டியாருக்காகவே மடிந்தவன்போல் மடிந்த அவன் தன்னலமற்ற சேவையின் பெருமையைப் பற்றி யாரும் பேசவில்லை. அப்படிப் பேசுவதற்கு அவன் மட்டுமா இந்த உலகத்தில் அந்த நிலையில் வாழ்ந்து அபூர்வமாகச் செத்துப் போனான்? அவனைப்போல் இன்னும் எத்தனை பேரோ?

# சோறும் சுதந்திரமும்

மனிதனின் ஆசைக் கனவில் உதித்த அதிசய உலகிலே பசி, பிணி, மூப்பு, சாக்காடு ஆகியவை யற்ற ஆனந்த மயமான வானுலகிலே - சுயசிரம ஜீவிகள் இருவர் ஒரு நாள் சந்தித்தனர். அவர்களில் ஒருவர் நீக்ரோ; இன்னொருவன் இந்தியன்.

நீக்ரோவின் தோற்றத்தைப் பார்த்ததும் ''நீ எந்த தேசத்தைச் சேர்ந்தவன், ஐயா?'' என்று இந்தியனுக்குக் கேட்கத் தோன்றிற்று; கேட்டான்.

நீக்ரோ அதிசயத்துடன் அவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு ''நல்லவேளை! எடுத்ததும் 'நீ கறுப்பனா?' என்று கேட்கமாமல் 'எந்த தேசத்தை சேர்ந்தவன்?' என்று கேட்டாயே 'அந்த அளவில் மகிழ்ச்சி!' என்றான்.

''ஏன், என்ன?'' என்று ஒன்றும் புரியாமல் கேட்டான் இந்தியன்.

''அதை ஏன் கேட்கிறாய், அப்பனே! அமெரிக்காவில் என்னைப் போன்றவர்களைக் கண்டதும் 'நீ கறுப்பனா?' என்றுதான் முதலில் கேட்பார்கள் - ஏன் தெரியுமா? என் தோல் கறுப்பாம்; அவன் தோல் வெளுப்பாம்!'' என்றான் நீக்ரோ.

''ஓகோ! நீ அமெரிக்காவைச் சேர்ந்தவனா? - அப்படியானால் சரிதான். எங்கள் தேசத்தில் சனாதனிகள் ஜாதித் திமிர் பிடித்து அலைவது போல் உங்கள் தேசத்தில் வெள்ளையர்கள் நிறத் திமிர் பிடித்து அலைகிறார்கள் என்று நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றான் இந்தியன்.

''எனக்குத் தேசம் என்று ஒன்று கேடா! - என்னை ஆப்பிரிக்கா தேசத்தைச் சேர்ந்தவன் என்று சொல்வார்கள்; ஆனால் நான் இருந்ததெல்லாம் அமெரிக்காவில் தான்!'' என்றான் நீக்ரோ.

''நீ இங்கே வந்து எத்தனை நாட்களாகி யிருக்கும்?''

''நாட்களா! எத்தனையோ வருஷங்களாகிவிட்டன!''

''ஆமாம், பூலோகத்தில் நீ என்ன வேலை செய்து கொண்டிருந்தாய்?''

வேலையைப் பற்றிக் கேட்டதும் நீக்ரோ ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். பிறகு, ''இன்ன வேலை என்று சொல்வதற்கில்லை அப்பனே! எல்லா வேலையும் செய்து கொண்டிருந்தேன்!'' என்றான் துக்கம் தோய்ந்த குரலில்.

''எல்லா வேலையும் என்றால்...?''

''இது என்ன கேள்வி? அடிமைக்கு ஒரு வேலை என்று உண்டா, என்ன!''

**அடிமை!**

இந்த வார்த்தையைக் கேட்டதும் இந்தியனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''என்ன! அமெரிக்காவில் கூடவா அடிமைகள் இருக்கிறார்கள்?'' என்றான் அவன் வியப்புடன்.

அவனுடைய வியப்புக்குக் காரணம் இல்லாது போகவில்லை. அமெரிக்கா ஒரு 'குபேர நாடு' என்று அவன் கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால், அம்மாதிரி குபேர நாடுகளில் தான் 'அடிமைகள்' அதிகமாயிருப்பார்கள் என்னும் உண்மையை மட்டும் அவன் அறிந்திருக்கவில்லை!

இந்தியனின் அறியாமையைக் கண்டு நீக்ரோ சிரித்து விட்டு, ''நீ எந்த தேசத்தைச் சேர்ந்தவன்?'' என்று திருப்பிக் கேட்டான்.

''இந்தியாவைச் சேர்ந்தவன்!''

''உனக்கு அங்கே என்ன வேலை...?''

நீக்ரோ இவ்வாறு கேட்டதும் இந்தியனுக்குத் தர்மசங்கடமாய் போய்விட்டது. ''நானும் உன்னைப் போல்தான்...'' என்று அவன் மென்று விழுங்கிக் கொண்டே ஆரம்பித்தான்.

''என்னைப் போல்தான் என்றால்...?''

''அதுதான், அடிமையைப் போல!'' என்றான் இந்தியன்.

''என்ன! இந்தியாவில் கூடவா அடிமைகள் இருக்கிறார்கள்?'' என்றான் நீக்ரோ ஆச்சரியத்துடன்.

ஏனெனில் இந்தியா 'புண்ணிய பூமி' என்றும், அங்கே 'பாவி'களே கிடையாதென்றும் அவன் கேள்விப்பட்டிருந்தான். அப்படிப்பட்ட இடத்திலும் 'அடிமைகள்' இருக்கிறார்கள் என்ற விஷயம் அவனுக்கு முற்றிலும் புதிதாக இருந்தது!

நீக்ரோவின் அறியாமையைக் கண்டதும் இந்தியனுக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது. அவன் வாய் விட்டுச் சிரித்துக் கொண்டே ''அடிமைகள் இல்லாத இடமே அந்த அழகான உலகத்தில் கிடையாது போலிருக்கிறது!'' என்றான்.

''ஆமாம், அப்பனே ஆமாம், உலகம் பூராவும் அடிமைகள் இருக்கத்தான் இருப்பார்கள். அரசியல்வாதிகள் அவர்களுடைய

அடிமைத்தனத்தின்மேல் அவ்வப்பொழுது சுதந்திரம், ஜனநாயகம் என்பது போன்ற அழகான வர்ணங்களைப் பூசி, ஜாலவித்தை செய்து காட்டிக் கொண்டிருப்பார்கள். அதைப் பார்த்துக் கை தட்டி ஆரவாரம் செய்வதற்கும் சிலர் தயாராயிருப்பார்கள். ஆனால் எங்களைப் போன்ற அடிமைகள் - ஈன ஜன்மங்கள் மட்டும் எங்குமே, எப்பொழுதுமே இருந்திருக்க முடியாது!'' என்றான் நீக்ரோ.

அவனுடைய குரலில் ஆத்திரத்தோடு அழுகையும் கலந்திருந்தது. பாவம், தனக்கும் கீழான அடிமை ஒருவன் இந்த உலகத்திலே இருப்பான் என்று அவன் அப்போது எதிர்பார்க்கவில்லை.

இந்தியன் ஒருமுறை லேசாகக் கனைத்துத் தன் தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டு ''உங்களுடைய அடிமைத்தனத்தில் மட்டும் அப்படி என்ன விசேஷம் ஐயா?'' என்று மீண்டும் பேச்சை ஆரம்பித்து வைத்தான்.

''விசேஷமா! ஒரு காலத்தில் பணம் படைத்த பாதகர்கள் ஆடுமாடுகள் போல எங்களைச் சந்தையில் விலை கொடுத்து வாங்கிக் கொண்டிருந்தார்கள் ஐயா, வாங்கிக் கொண்டிருந்தார்கள்!'' என்று நீக்ரோ பொங்கி வந்த கோபத்தில் கத்தினான்.

அவனைத் தேற்ற இந்தியன் அலட்சியமாக ''பூ! இவ்வளவுதானா? எங்கள் தேசத்திலே எங்களையெல்லாம் விலை கொடுக்காமலே வாங்குகிறார்கள்!'' என்றான்.

நீக்ரோவின் தலையில் இடிவிழுவது போலிருந்தது. ''என்ன!'' என்று அவன் வியப்பின் மிகுதியால் வாயைப் பிளந்தான்.

''ஆமாம், பெரிய பெரிய பண்ணையார்களிடம் நாங்கள் பரம்பரை பரம்பரையாகவே அடிமைகளா யிருப்போம். எங்கள் தாத்தா அடிமையா? - என் அப்பாவும் அடிமை; அப்பா அடிமையா? - நானும் அடிமை; நான் அடிமையா? - என் மகனும் அடிமை; மகன் அடிமையா? - என் பேரனும் அடிமை - இந்த ரீதியில் எங்களுடைய வாழ்நாட்கள் கழிந்து கொண்டிருக்கும். ஆனால் 'அடிமை' என்ற வார்த்தைக்கு எங்கள் நாட்டில் பலவித அர்த்தங்களுண்டு; அவற்றைக் கண்டு நாங்கள் சிரிப்பதுண்டு. எது எப்படி யிருந்தாலும் என்னைப் போன்றவர்களுக்கு அங்கே விலையும் கிடையாது, கிலையும் கிடையாது!'' என்றான் இந்தியன்.

இந்த இடத்தில் நீக்ரோவுக்கு ஒரு சந்தேகம் தோன்றிற்று. அந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வதற்காக, ''ஆமாம், உங்களைத்

தேடிக் கொண்டு அவர்கள் வருவார்களா, அவர்களைத் தேடிக்கொண்டு நீங்கள் போவீர்களா?'' என்று அவன் கேட்டான்.

''அழகுதான்! எங்களைத் தேடிக்கொண்டு அவர்கள் ஏன் வருகிறார்கள்? நாங்கள்தான் அவர்களைத் தேடிச் செல்வோம்!'' என்றான் இந்தியன்.

''நல்லவேளை! நாங்கள் அவர்களைத் தேடிக் கொண்டு செல்வதில்லை; அவர்கள் தான் எங்களைத் தேடிக் கொண்டு வருவார்கள்!'' என்றான் நீக்ரோ.

இந்தியன் ''பரவாயில்லையே!'' என்று சொல்லி நீக்ரோவின் முதுகில் ஒரு 'ஷொட்டு'க் கொடுத்து தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டான்.

''பரவாயில்லையாவது! எங்களுக்குக் கிடைத்த அடியும் உதையும் உங்களுக்கெல்லாம் கிடைத்திருக்குமா? என்ன'' என்று சொல்லிவிட்டு, நீக்ரோ தழும்புகள் நிறைந்த தன் முதுகை இந்தியனுக்குத் திருப்பிக் காட்டினான்.

''வெட்கக் கேடுதான்! அடியும் உதையும் எங்களுக்கு மட்டும் கிடைக்காமல் இருக்குமா? - ஏதாவது ஒரு சிறு தவறு செய்தால் போதும்; மரத்தோடு மரமாக எங்களைச் சேர்த்துக் கட்டி 'வெளு, வெளு' என்று வெளுத்து விடுவார்கள். உனக்கு ஒரு கதை தெரியுமா? - எங்கள் வம்சத்தில் நந்தன் என்று ஒருவன் இருந்தானாம். அவன் ஒரு பைத்தியம் - அதாவது பகவான் மீது பைத்தியம். அந்தப் பைத்தியத்தின் காரணமாக அவன் பண்ணையார் இட்ட வேலையைச் சரியாகச் செய்ய மாட்டானாம். அதனால் அடிக்கடி அவன் அவரிடம் அடிபட நேர்ந்ததாம். அப்படி அடிபட நேரும்போதெல்லாம் அந்த அப்பாவி என்ன சொல்வானாம் தெரியுமா? - 'ஐயோ! என்னை அடிப்பதால் உங்கள் கை வலிக்குமே ஆண்டே!' என்று சொல்லிக் கதறுவானாம்! - அந்தக் காலத்து நந்தனார் அப்படியென்றால் இந்தக் காலத்து நந்தனார்கள் எப்படி என்கிறாய்? - 'சும்மா அடியுங்க, சாமி! நல்லா அடியுங்க! உங்க உப்பைத் தின்றேன். உங்க துணியைக் கட்றேன் - நீங்க அடிக்காம வேறே யாரு சாமி, அடிக்கிறது?' என்று சொல்லித் தங்கள் முதுகை முதலாளிகளுக்குத் திருப்பித் திருப்பிச் காட்டுகிறார்கள்! - எப்படியிருக்கிறது, கதை?''

''கதை நன்றாய்த்தான் இருக்கிறது! ஆனால் இதுகூட எனக்கு தேவலை என்று படுகிறது; ஏனெனில், இதை விட மோசமாக சோதனைகளுக்கெல்லாம் ஒரு காலத்தில் நாங்கள் ஆளாகியிரு கிறோம்...''

''அப்படி என்ன சோதனைகள், ஐயா?''

''சில சமயம் எங்கள் எஜமானர்களுக்கு ஏதாவது பொழுது போக்கு வேண்டியிருக்கும். அப்பொழுதெல்லாம் அவர்கள் என்ன செய்வார்கள், தெரியுமா? சிங்கம், புலி முதலிய பயங்கரக் காட்டு மிருகங்களோடு எங்களைச் சண்டையிட வைத்து வேடிக்கை பார்ப்பார்கள் - அதுவும் எப்படி? சண்டைக்கு விடுவதற்கு முன்னால் கூண்டிலிருக்கும் சிங்கத்துக்கோ, புலிக்கோ இரண்டு மூன்று நாட்கள் தீனி எதுவும் கொடுக்காமல் பட்டினி போட்டு வைத்திருப்பார்கள்....''

''ஏன் அப்பொழுது தான் நீங்கள் அதனுடன் சண்டையிட்டு ஜயிக்க முடியும் என்றா...?''

''ஜயிக்கவாவது, கியிக்கவாவது! பசி எவ்வளவுக் கெவ்வளவு அதிகமா யிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரத்தில் அது எங்களை தீர்த்து விடும் என்றுதான்!''

''நிஜமாகவா?''

''ஆமாம், அப்பனே! நாங்கள் அதற்குத் தயாராக இருக்கவில்லை யென்றால் எஜமானர்களே எங்களை தீர்த்து விடுவார்கள்! சொல்லப் போனால் நாங்களும் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை; 'எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரம் அந்த மனித அரக்கர்களிடமிருந்து விடுதலை கிடைக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு நல்லது' என்று எண்ணி, இந்த ஜன்மத்தை உயிரோடு மறந்து விடுவோம்''

இந்தக் கதையைக் கேட்டதும் இந்தியன் ஒரு பெருமூச்சு விட்டு, ''இதே மாதிரி எங்களுடைய முதலாளிகளும் எங்களைச் சண்டையிட வைப்பதுண்டு; ஆனால் மிருகங்களோடு அல்ல; மனிதர்களோடு....!'' என்று சொல்லித் தன் கதையை ஆரம்பித்தான்.

''என்ன! உங்கள் தேசத்தில் மனிதர்களோடு மனிதர்களா சண்டையிடுவீர்கள்?'' என்று நீக்ரோ வியப்புடன் கேட்டான்.

''ஆமாம், வேலையில்லாதவர்களோடு வேலையிருப்பவர் களைச் சண்டையிட வைத்து, எங்கள் முதலாளிகள் வேடிக்கை பார்ப்பார்கள். அதுதான் அவர்கள் பொழுது போக்கு!''

''அது எப்படி?''

''லாபத்தில் நஷ்டம் வரும் என்று தோன்றும் போதெல்லாம் அவர்கள் எங்களுடைய கூலியைக் குறைக்கப் பார்ப்பார்கள்; அல்லது எங்களில் சிலரை வேலையிலிருந்து நீக்கப் பார்ப்பார்கள். இந்த அக்கிரமத்தை எதிர்த்து நாங்கள் வேலை நிறுத்தம் செய்வோம். அந்தச்

சமயத்தில் வேலையில்லாதவர்களை முதலாளிகள் எங்களுக்குப் போட்டியாக வேலைக்கு அமர்த்திக் கொள்ள முயற்சி செய்வார்கள். அவர்களும் 'சும்மா இருப்பதற்குப் பதிலாக கிடைத்தவரை கிடைக்கட்டுமே' எனறு வேலை செய்ய வருவார்கள். நாங்கள் அந்தக் கருங்காலிகளைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியுமா? - எங்களுக்கும் பசி; அவர்களுக்கும் பசி! - பசியோடு பசி மோத வேண்டியது தானே? - சண்டை பிரமாதமாக நடக்கும்; முதலாளியின் பாடு குஷிதான்!''

''என்ன சொன்னாய்? பசியா!'' என்று நீக்ரோ அதுவரை கேள்விப்படாத ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்டவன் போல் துள்ளியெழுந்து நின்று கேட்டான்.

''ஆமாம், பசிதான்!'' என்றான் இந்தியன்.

''அதைப்பற்றி நீ கவலைப்பட்டதுண்டா, என்ன?''

''நல்ல கேள்வி கேட்கிறாய், ஐயா! அந்தப் பாழும் பசியைப் பற்றித் தான் என்னைப் போன்றவர்களுக்கு அல்லும் பகலும் அங்கே கவலை!'' என்றான் இந்தியன்.

''நிஜமாகவா சொல்கிறாய்?''

''பின்னே பொய்யா சொல்கிறேன்?''

''எனக்கென்னமோ இது வேடிக்கையாகத்தான் இருக்கிறது! பூலோகத்திலிருந்து எத்தனையோ விஷயங்களைப் பற்றி நான் கவலைப்பட்டிருக்கிறேன், ஆனால் பசியைப்பற்றி நான் மட்டும் கவலைப்பட்டதே கிடையாது. ஏனெனில், சாகும் வரை என்னுடைய எஜமான் எனக்குச் சோறு போட்டு விடுவார் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது!'' என்றான் நீக்ரோ பெருமையுடன்.

''தேவலையே! அப்படியானால் நீ **பழைய அடிமை** என்று சொல்லு!'' என்றான் இந்தியன்.

''நமக்குள்ளேயே வித்தியாசமா! நீ மட்டும் என்ன அடிமை?'' என்று நீக்ரோ சிரித்துக் கொண்டே கேட்டான்.

''**புது அடிமை!** ஏனெனில், உனக்கு இருந்த அந்தச் 'சோற்று நம்பிக்கை' எனக்கு இல்லையல்லவா?' என்றான் இந்தியன்.

நீக்ரோ ஒரு கணம் யோசித்துவிட்டு, ''அப்படியானால் நீ சொல்வதை நான் ஒப்புக் கொள்ள வேண்டியதுதான் அப்பனே!'' என்றான்.

* * *

# அவன் கேள்வி

எத்தனை முறை எண்ணிப் பார்த்தாலும் எனக்கு இது அதிசயமாய்த்தான் இருக்கிறது. தன் உயிரின்மேல் அந்தக் கிழவனுக்குத் துளிக்கூட ஆசை இல்லை; ஆனால் உயிரோ அவன் மீது அளவற்ற ஆசை வைத்திருக்கிறது. என்ன செய்வான், பாவம்! படுக்கையில் படுத்தபடி ஒரு நாளைப்போலத் தன் உயிரோடு அவன் போராடிக் கொண்டிருந்தான்.

அன்று மாலை அந்த ஊர் ஆலையின் சங்கு ஊதி ஓய்ந்ததும், வழக்கம் போல் அந்தக் கிழவரின் முகம் மலர்ந்தது. ''பையன் இன்னும் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் வந்து விடுவான்!'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். இத்தனைக்கும் 'அந்தப் பையன்' வந்து அவனுக்குப் புதிதாக ஆகப்போவது ஒன்றுமே யில்லை.

கிழவன் எதிர்பார்த்தபடி அவன் அவ்வளவு சீக்கரமாக அன்று வீட்டுக்கு வந்து விடவில்லை; அவனுக்குப் பதிலாக இருள்தான் அவசர அவசரமாக வந்து அவன் வீட்டைக் கவ்விக் கொண்டது.

''ஏ, முனியம்மா, நீ எங்கே போயிட்டே?'' என்று கிழவன் இரைந்தான்; பதில் இல்லை.

''எங்கே போயிருப்பா? வீட்டிலே கொஞ்சம் விளக்கையாச்சும் ஏத்தி வச்சுட்டுப் போயிருக்கக் கூடாதா?''

இதற்குள் யாரோ வரும் காலடி ஓசை அவன் காதில் விழுந்தது. ''முனியம்மா!'' என்றான் கிழவன் மீண்டும்.

''ஏன்?''

''எங்கே அம்மா, போயிட்டே? பொழுதோட விளக்கைக் கொஞ்சம் ஏத்தி வைக்கக் கூடாதா?''

''அதுக்குத்தான் தீக்குச்சி வாங்கிவரப் போயிருந்தேன்!''

''எதுக்குத் தீக்குச்சி! - யாரு வீட்டு விளக்கிலாச்சும் கொஞ்சம் ஏத்திக்கிட்டு வந்துட்டாப் போச்சு!''

''நல்லாச் சொன்னீங்க! இன்னொருத்தர் வீட்டிலே நம்ம வீட்டு விளக்கை ஏத்தப் போனா சும்மா இருப்பாங்களா? அவங்க வீட்டு லச்சுமி நம்ம வீட்டுக்கு வந்துட்டான்னு சண்டை பிடிக்க மாட்டாங்களா!''

''அட எழவே! அப்படின்னா நம்ம வீட்டுத் தரித்திரம் சுலபமாத் தொலையறதுக்கு ஒரு வழி இருக்காப்போல இருக்கே?''

''அது என்ன வழி, மாமா?''

''யாராச்சும் ஒரு பணக்காரப் பய வீட்டுக்குப்போய் அவனுக்குத் தெரியாம ஒரு நாளைக்கு நம்ம வீட்டு விளக்கை ஏத்திக்கிட்டு வந்துட்டா, அவன் வீட்டு லச்சுமி நம்ம வீட்டுக்கு வந்துடுவா, இல்லையா?''

முனியம்மாள் சிரித்தாள்; கிழவனும் ஒருகணம் தன் கவலையை மறந்து அவளுடைய சிரிப்பில் கலந்து கொண்டான்.

* * *

சிறிது நேரத்திற்குப் பிறகு குழந்தை அழும் சத்தமும், அந்தக் குழந்தையை முனியம்மாள் அதட்டி அடிக்கும் சத்தமும் கிழவன் காதில் விழுந்தது.

''என்னத்துக்குக் குழந்தை அழுவுது? ஏன் அதைப் போட்டு நீ அடிக்கிறே?'' என்று கிழவன் கேட்டான்.

''அத்தனை சோள மா வீட்டிலே கிடந்திச்சு. அதையாச்சும் நாலு ரொட்டியாத் தட்டி உழைச்சிட்டு வர 'அந்த மனுச'னுக்கு வைக்கலாம்னு பார்த்தா, இந்தப் பேய்ப் பிள்ளை அது மாவாயிருக்கிறப்பவே தின்னுப் பிடணும்னு ஒரேயடியாய்ப் பிடிவாதம் பிடிச்சுத் தொலைக்குது!''

''குழந்தைக்குப் பசிபோல இருக்குது. சுருக்க ஒரு ரொட்டி சுட்டு அதன் கையிலே கொடேன்!''

''எல்லாங் கொடுத்தேன்! சுட்டரொட்டி வேணாமாம்; பச்சை மாவுதான் வேணுமாம்!''

''சரிதான்! சோள ரொட்டியினுடைய லட்சணம் நம்ம குழந்தைக்கும் தெரிஞ்சு போச்சாக்கும்? அந்தப் பாழும் ரொட்டி தொண்டையை விட்டுக் கீழே இறங்கினாத்தானே? அதுக்குத்தான் பச்சை மாவாவே தின்னுப்பிடணும்னு குழந்தை நெனைக்குது!''

''சோள ரொட்டி இறங்கலேன்னா, அப்பாவை பிஸ்கோத்து வாங்கி வந்து தரச் சொல்லிச் சாப்பிடறது தானே? நானா வேண்டாங்கிறேன்!'' என்று முனியம்மாள் அந்தக் குழந்தையின் கன்னத்தில் ஓர் இடி இடித்தாள்.

''குழந்தைகிட்ட உன் கோவத்தைக் காட்டாதே முனியம்மா! அது பிஸ்கோத்துக்கு எங்கே போவும்? அதன் அப்பன்தான் எங்கே போவான்?'' என்றான் கிழவன்.

இந்தச் சமயத்தில் அவன் மகன் கண்ணுச்சாமி உள்ளே நுழைந்து மௌனமாகச் சட்டையைக் கழற்றிக் கொடியில் போட்டான்.

அவனைக் கண்டதும் ''ஏண்டா அப்பா, இவ்வளவு நேரம்?'' என்று கேட்டான் கிழவன்.

''சங்கத்திலே இன்னிக்கு ஒரு மீட்டிங்கு; அதுக்குப் போயிருந்தேன்!'' என்றான் கண்ணுச்சாமி.

''மீட்டிங்காவது, கீட்டிங்காவது! பொழுதோட வீட்டுக்கு வந்து சேராம..

''அதெப்படி வந்துவிட முடியும்? ஸ்டிரைக் கமிட்டியிலே நானுமில்லே ஒரு மெம்பரா யிருக்கேன்!''

''என்னது அது, என்னது அது....''

''ஸ்டிரைக் கமிட்டியிலே...''

''ஸ்டிரைக்குமாச்சு, மண்ணுமாச்சு! வேலை செய்யறப்பவே வயிற்றுச் சோத்துக்கு வழியைக் காணோம் - ஸ்டிரைக்காம், ஸ்டிரைக்கு!''

''அப்படித்தான் நானும், இன்னும் என்னைச் சேர்ந்த நாலைந்து பேரும் சொன்னோம். நம்ம தலைவர்களும் அப்படித்தானே சொல்றாங்க - முதல்லே உற்பத்தியைப் பெருக்கி ஊர்லே இருக்கிற பஞ்சத்தை ஒழியுங்க; அதுதான் உங்க கடமை; அப்புறம் உங்க உரிமையைப் பற்றிப் பேசிக்கலாம்னு...''

''ஆமா, அதுவரை உடம்பிலே உசிரு இருந்தாயில்லே!'' என்று முனியம்மாள் குறுக்கிட்டாள்.

''சீ, சும்மா யிரு! ஸ்டிரைக் சேஞ்சா மட்டும் உடம்பிலே உசிரு வந்துடுமா? இருக்கிற உசிருமில்லே போயிடும்?''

''பொம்பளைக்கு என்னத்தைத் தெரியும்? நீ விசயத்தைச் சொல்லு!'' என்றான் எல்லாம் தெரிந்த ஆண்பிள்ளையான கிழவன்.

''என்னத்தைச் சொல்றது? கமிட்டியிலே எங்க கட்சிக்குப் பலமில்லே; ஸ்டிரைக் செய்யணும்னு சொல்ற கட்சிதான் ஜெயிச்சுடும்போல இருக்குது!''

''அட பாவி பயல்களா! திங்கிற சோத்திலே இப்படியும் மண்ணை அள்ளிப் போட்டுக்கிடுவானுங்களா?''

''யாரும் தான் சாக மருந்து தின்னமாட்டாங்க; பிழைக்கத்தான் மருந்து தின்னுவாங்க!'' என்றாள் முனியம்மாள்.

''என்ன முனியம்மா! உனக்கு வாய் ரொம்ப நீண்டு போச்சே! வேலை செஞ்சி மாதம் பொறந்தா சம்பளம் வாங்கிக்கிட்டு வரப்பவே, நீ நேத்துப் பட்டினி, முந்தா நாள் பட்டினிங்கிறே, அதுவுமில்லேன்னா என்னத்தைச் செய்வே?'' எனறு கேட்டான் கண்ணுச்சாமி.

''பாடுபடட்டும் 'பசி, பசி'ன்னு பரிதவிக்கிறதைவிட பாடு படாமலே பரலோகமாச்சும் போய்ச் சேர்ந்துடலாமில்லே?''

''அதுக்கும் நாளு வரவேணாமா? அந்த நாளு வந்துட்டா தன்னாலே போய்ச் சேர்ந்துடறோம்!''

''ஐயோ! இந்த இளம் வயசுலே நீங்க இப்படி உலகத்தை வெறுத்துப் பேசற கண்றாவியை நான் எங்கே போய்ச் சொல்லி அழுவேன்? பாழும் எமனும் என்கிட்ட வந்துட்டான் போல இருக்குது; நான் வேறே உங்களுக்குப் பாரமா இன்னும் இருந்துக்கிட்டு இருக்கேன்!'' என்றான் கிழவன்.

இந்தச் சமயத்தில் ''அந்த ரொட்டி ஆறிப் போவுது; எடுத்துக்கிட்டு வரட்டுமா?'' என்று தன் கணவனை நோக்கிக் கேட்டாள் முனியம்மாள்.

''சரி, எடுத்துக்கிட்டு வா! எரிகிற வயித்துக்கு எதையாச்சும் போட்டு அடைக்க வேண்டியது தானே?'' என்றான் கண்ணுச்சாமி.

அவன் கை கால்களை அலம்பிக் கொண்டு வருவதற்கும் முனியம்மாள் ரொட்டி கொண்டு வைப்பதற்கும் சரியாயிருந்தது. அதில் ஒன்றை எடுத்துச் சுவைத்துக் கொண்டே, ''அப்பாவுக்குமா இந்த ரொட்டி?'' என்று கேட்டான் கண்ணுச்சாமி.

''இல்லே, சாமி குத்தறப்போ விழற தவிட்டையெல்லாம் சேர்த்து வச்சிருந்தேன். அதை இன்னைக்கு எடுத்துப் புடைச்சுப் பார்த்தேன்; ஒரு கையளவு நொய் தேறிச்சு. அந்த நொய்யைக் கஞ்சியாய்க் காய்ச்சி அவருக்குன்னு எடுத்து வச்சிருக்கேன்!''

''நல்ல வேலை செஞ்சே! அவரு இன்னும் கொஞ்ச நாளைக்கு அந்த 'ஸ்பெஷலு கஞ்சி'யைக் குடிச்சி நமக்குத் துணையா யிருக்கட்டும்!'' என்றான் கண்ணுச்சாமி.

* * *

கண்ணுச்சாமியின் குடும்பத்தில் ஒரு நாள் காட்சி இது. ஒருநாள் என்ன, ஒவ்வொரு நாளும் இதே காட்சி தான். மாதந்தோறும் அவனுக்கு ஏறக்குறைய நாற்பது ரூபாய் கிடைத்து வந்தது - பஞ்சப்படியையும் சேர்த்துத் தான்! இந்த வரும்படியில்தான் அந்த நாலு ஜீவன்களும் காலத்தைக் கழிக்கவேண்டும்.

'வரவுக்குத் தகுந்த செலவு செய்ய வேண்டும்' என்பதில், அவனுடன் அவனைச் சேர்ந்த மூன்று ஜீவன்களும் ஒத்துழைத்தன. ஆனால் ஒத்துழைக்காத ஒன்றும் அவர்களிடையே இருக்கத்தான் செய்தது. அது வேறு எதுவுமில்லை; அவரவர்களுடைய வயிறுதான்! பார்க்கப்போனால் அந்த வயிறுகளின்மீதும் குற்றம் சொல்வதற் கில்லை. ஏனெனில், ஆண்டவன்தான் ஏழை - பணக்காரன் என்ற வித்தியாசமின்றி அந்த வயிறுகளைத் தினந்தோறும் நாலு வேளைப் பசிக்கு ஆளாக்கினான். கடவுளையும் மீறி அவற்றை கண்ணுச் சாமியால் ஒருவேளை ஏமாற்ற முடிந்தது; சில நாட்கள் இரண்டு வேளைகள் கூட ஏமாற்ற முடிந்தது. ஆனால், ஒருநாளாவது நாலு வேளைகளிலும் ஏமாற்றமுடியவில்லை!

இதனால் அவன் மாதா மாதம் தன் வரும்படிக்கும் மேலே, வேறு யாரிடமாவது ஐந்து, பத்து என்று கடன் வாங்க நேர்ந்தது - வட்டிக்குத் தான்! இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், அவனால் கடன் வாங்கத்தான் முடிந்ததே தவிர, திருப்பித் தர முடியவில்லை. அப்படியே கொடுத்தாலும் அதைத் திருப்பி வாங்காமல் இருக்க முடியவில்லை.

இப்படியே ஆளுக்குக் கொஞ்சமாக வாங்கிய கடன் நாளடைவில் முப்பது ரூபாய்க்கு மேல் ஆகிவிட்டது. அதாவது, கிட்டத்தட்ட அவனுடைய ஒரு மாதச் சம்பளத்துக்குச் சேர்ந்து விட்டது! வாங்கிய சம்பளத்தைக் கடன்காரர்களிடம் கொடுத்துவிட்டு அவன் வெறுமனே வீட்டிற்கு வரமுடியுமா? ஆகவே, அவன் ஒரு யுக்தி செய்தான். தன்னுடைய நண்பன் ஒருவன் உதவியால் ஒரு காபூலிவாலாவைப் பிடித்தான். அவனிடம் ரூபாய்க்கு இரண்டனா வட்டி விகிதத்துக்கு நாற்பது ரூபாய் மொத்தமாகக் கடன் வாங்கினான்.

முப்பத்தைந்து ரூபாயை கண்ணுச்சாமியிடம் கொடுத்தான். இதனால் அவனுடைய கவலையும் ஒருவாறு தீர்ந்தது. மாதா மாதம் சம்பளம் வாங்கி அப்படியே காபூலிவாலாவிடம் கொடுத்து விடுவான். அவன் அதைப் பழைய கடனுக்கு வரவு வைத்துக் கொண்டு, புதுக் கடனாக மீண்டும் நாற்பது ரூபாய் கொடுப்பான் - வட்டிக்காக ஐந்து ரூபாய் எடுத்துக்கொண்டு தான்! - இந்த ரீதியில் கண்ணுச்சாமியின் காலம் கழிந்து வந்தது.

மத்தியில் ஏதாவது 'போன'ஸாகக் கிடைக்கும்போது கண்ணுச்சாமி அந்தக் கடனைத் தீர்த்து தலை முழுகிவிட வேண்டும் என்று நினைப்பான். ஆனால், மனிதன் நினைப்பதுபோல்தான் தெய்வம் நினைப்பதில்லையே! - அதற்கென்று வேறு வகைகளில் ஏதாவது செலவோ, கடனோ காத்துக் கொண்டிருக்கும். அவை 'போனஸ்' தொகையைச் சந்தடி செய்யாமல் விழுங்கிவிட்டு அப்பாற் போய்விடும். அந்த நாற்பது ரூபாய் கடன் மட்டும் என்றும் சிரஞ்சீவியாக - இறவா வரம் பெற்றதாக - காபூலிவாலாவுக்கு மாதம் ஐந்து ரூபாய் லாபத்தையும், கண்ணுச்சாமிக்கு ஐந்து ரூபாய் நஷ்டத்தையும் கொடுத்துக் கொண்டு ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருக்கும். இது கதையல்ல; கற்பனையல்ல; கண்ணுச்சாமியின் சொந்த அனுபவம்!

* * *

அன்று பத்தாந்தேதி; சனிக்கிழமை; சம்பள தினம். 'காலையில் கண்ணுச்சாமி வேலைக்குக் கிளம்பும் போது, ''மத்தியானம் சாப்பிட வீட்டுக்கு வராதீங்க! அங்கேயே ஏதாச்சும் வாங்கித் தின்னுட்டு வேலையைப் பாருங்க!'' என்றாள் முனியம்மாள்.

''ஏன்...?''

''அந்தச் சோளமாக்கூட நேத்தோடே தீர்ந்து போச்சு; சாயந்திரம் சம்பளம் வந்து நாளைக்குப் போய் அரிசி வாங்கிக்கிட்டு வந்தாத்தான் அடுப்புப் புகையும்!''

''உம்.....இங்கே இப்படியிருக்குது, அங்கே என்னடான்னா, அந்தப் பயலுங்கெல்லாம் நேத்துக் கூடி இன்னைக்குச் சம்பளத்தை வாங்கிக்கிறதுன்னும், நாளையிலேருந்து 'ஸ்டிரைக்கு' செஞ்சிப்பிடறதுன்னும் தீர்மானம் பண்ணிப்பிட்டானுங்க!''

''நீங்க என்னத்துக்கு அந்த 'ஸ்டிரைக்'கைப் பத்தியே சும்மா பேசிக்கிட்டு இருக்கீங்க? நாலு பேருக்கு ஆகிறது நமக்கும்!''

''சரி, நான் போயிட்டு வரேன்!''

''வரும்போது உங்க அப்பாவுக்கும் குழந்தைக்கும் ஏதாச்சும் தின்ன வாங்கிக்கிட்டு வாங்க!'' என்றாள் முனியம்மாள்.

''ஆகட்டும்!'' என்று துண்டை உதறித் தோளின் மேல் போட்டுக் கொண்டு கிளம்பிவிட்டான் கண்ணுச்சாமி.

* * *

அன்று மாலை கண்ணுச்சாமியின் தலையில் எதிர்பாராத விதமாக ஒரு பேரிடி விழுந்தது. அவனிடமிருந்து வழக்கம்போல் பழைய கடனை வாங்கிக் கொண்ட காபூலிவாலா புதுக் கடன் கொடுக்க மறுத்துவிட்டான். காரணம் என்னவென்று கேட்டதற்கு ''நீங்க நாளைக்கு வேலை செய்யாம 'ஸ்டிரைக்' பண்ணப் போறீங்க இல்லே, நான் இன்றைக்கே உங்களுக்குக் கடன் கொடுக்காம 'ஸ்டிரைக்' பண்ணிப்பிட்டேன்!'' என்று அவன் சிரித்துக் கொண்டே பதில் சொல்லிவிட்டான்.

கண்ணுச்சாமிக்கோ சிரிக்கவுந் தோன்றவில்லை; அழவுந் தோன்றவில்லை; எவ்வித உணர்ச்சியுமின்றி அவன் அடிமேல் அடி எடுத்துவைத்து வெளியே வந்தான்.

ஒருகணம் நாலா திசைகளிலிருந்தும் இடியோசை கிளம்பிக் காதுகளைத் தாக்குவது போலவும், பூமி பிளந்து கால்கள் கீழே நழுவிச் செல்வது போலவும் அவனுக்குத் தோன்றிற்று.

அவ்வளவுதான்; அப்படியே உட்கார்ந்துவிட்டான்.

''....சாயந்திரம் சம்பளம் வந்து நாளைக்குப் போய் அரிசி வாங்கிக்கிட்டு வந்தாத்தான் அடுப்புப் புகையும்''

''வரும்போது உங்க அப்பாவுக்கும் குழந்தைக்கும் ஏதாவது தின்ன வாங்கிக்கிட்டு வாங்க!''

இந்த 'அபாய அறிவிப்பு'களை நினைத்ததும் கண்ணுச்சாமிக்குச் சிரிப்பு வந்தது. சிரித்துக்கொண்டே எழுந்தான்; எழுந்து நடந்தான். எங்கும் நிற்கவில்லை; நடந்து கொண்டேயிருந்தான்.

ஓர் ஒற்றையடிப் பாதை - அது கலக்குமிடத்தில் ஒரு சின்னத் தெரு; அடுத்தாற்போல ஒரு பெரிய வீதி. அதற்கும் அப்பால் ஒரு விசாலமான சாலை - அந்தச் சாலையின் கோடியே தெரியவில்லை - அதையும் கணப் பொழுதில் கடந்துவிட்டான் அவன். ஆயினும் அவன் நிற்கவில்லை; நடந்து கொண்டேயிருந்தான், எங்குதான் போகிறான்?

''என்ன கண்ணுச்சாமி! எங்கே போறே?'' என்று அவனை வழிமறித்துக் கேட்டான் ஒரு சகோதரத் தொழிலாளி.

அவனை மேலுங் கீழுமாகப் பார்த்துத் திருதிருவென்று விழித்துக் கொண்டே ''வேறே எங்க போவேன்? வீட்டுக்குத்தான்!'' என்றான் கண்ணுச்சாமி.

''ஹிஹ்ஹிஹ்ஹி! உன் வீடு எங்கே போச்சு, இங்கே வந்து நிக்கிறியே, அப்பா!''

''மறந்துட்டேன்; என் வீட்டுக்கு வழி அப்படியில்லே போவுது!'' என்று சொல்லிக் கொண்டே கண்ணுச்சாமி திரும்பினான்.

''எப்படிப் போவுது? - இப்படிப் போறதை விட்டுட்டு அப்படியில்லே போறே! தண்ணி கிண்ணி போட்டுக்கிட்டு இருக்கியா, என்னப்பா? சரி சரி எப்படியாச்சும் தொலைஞ்சுபோ, அதுவும் ஒருவிதத்திலே நல்லது தான்!'' என்று சொல்லிவிட்டு, அவன் மேலே நடந்தான்.

கண்ணுச்சாமியோ தன்பாட்டுக்குப் போய்க்கொண்டிருந்தான் - வேறு திசையை நோக்கினான்!

வழியில் ஒரு சிறுவன் இராப் பள்ளியிலிருந்து வந்து கொண்டிருந்தான். அவன் கையில் நோட்டுப் புத்தகத்தையும் பென்ஸிலையும் கண்டதும் கண்ணுச்சாமிக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றிற்று. அவனிடமிருந்த நோட்டுப் புத்தகத்தை வாங்கி, அதில் ஏதோ எழுதினான். பிறகு, தான் எழுதிய பக்கத்தை மட்டும் கிழித்து எடுத்துச் சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டு நடையைக் கட்டினான்.

இப்பொழுது அவனுடைய மூளை தீவிரமாக வேலை செய்தது. அதன் பயனாகத்தானோ என்னவோ, நாற்சந்தியொன்றைக் கண்டதும் அவனுடைய நடை சிறிது தளர்ந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் அங்கே நின்று விட்டான்!

நின்றபடி யோசித்தான். யோசித்தான் - அப்படி யோசித்தான்.

பிறகு, தனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் சென்று தன்னுடைய நிலைமையைச் சொல்லி, ''இந்தச் சமயத்தில் எனக்கு உங்களால் ஏதாவது உதவி செய்ய முடியுமா?'' என்று கல்லுங் கரைந்துருகுமாறு கேட்டான்.

நாளையிலிருந்து 'ஸ்டிரைக்' அல்லவா? ஆகவே, எல்லோரும் ஏகோபித்துக் கையை விரித்துவிட்டார்கள்.

நடைபாதை ஒன்றுதான் அவனுக்கு வஞ்சனையில்லாமல் வழி விட்டுக் கொண்டேயிருந்தது; மீண்டும் நடந்தான்!

ஒரு குளம் குறுக்கிட்டது; அதைக் கண்டதும் அவன் முகம் மலர்ந்தது.

சட்டையைக் கழற்றிக் கரையில் வைத்தான். நல்ல வேளையாக அன்றுவரை தான் நீந்தக் கற்றுக் கொள்ளவில்லை என்பதை நினைத்துச் சந்தோஷப்பட்டான்.

அடுத்த நிமிஷம் 'தொபுகடீர்' என்று ஒரு சத்தம்; அவன் குளத்தில் விழுந்தேவிட்டான்!

''யார் அது?''

''மணி பத்துக்கு மேலாகிறதே! இந்நேரத்தில் குளத்தில் குதிப்பானேன்?''

இது அவ்வழியே வந்துகொண்டிருந்த போலீஸாரின் பேச்சு!

இருவரும் உடனே குளக்கரையை நெருங்கினர்; திக்குமுக்காடும் கண்ணுச்சாமியைக் கண்டனர். கரையும் சேர்த்தனர்.

கண்ணுச்சாமி வாழ்க்கையை வெறுத்தான்; ஆனால் வாழ்க்கை அவனை வெறுக்கவில்லை!

''என்னப்பா, யாரையாவது தீர்த்துப்பிட்டு வந்து குளுத்திலே குளிக்கிறியா, என்ன?''

''கையிலே ஏதாச்சும் கத்திகித்தி இருக்குதான்னு பார், அண்ணே!''

''கையிலே ஒண்ணுமில்லே; சட்டையைத்தான் இங்கே கழற்றி வைத்திருக்கிறான்!''

''அதை எடு, பார்ப்போம்?''

''இதோ பார், அப்பா!''

''என்ன அது?''

''கடிதாசி!''

''அந்த 'டார்ச்'சை இந்தப் பக்கமாகக் கொஞ்சம் காட்டு - கடிதாசியிலே என்ன எழுதி இருக்குதுன்னு பார்ப்போம்!''

''போலீஸ் ஜவான்களுக்கு

என்னை யாரும் குளத்தில் தள்ளவில்லை; நானே தான் என்னைத் தள்ளிக் கொண்டேன். காரணம் என்னவென்று தெரிந்து நீங்கள் இனிமேல் செய்யப்போவது ஒன்றுமில்லை. இந்தக் கடிதம் எதற்காக வென்றால், நீங்கள் அனாவசியமாக துப்பு விசாரித்து அவதிப்பட வேண்டாம் என்பதற்கே! - கண்ணுச்சாமி!''

''ஐயே, இவரு தற்கொலையில்லே பண்ணிக்க வந்திருக்காரு?''

''சரிசரி, நமக்கு ஏன் இந்த வம்பு ஸ்டேசனுக்கு இழுத்துக்கிட்டுப் போயிடுவோம்!''

இது போலீஸாரின் முடிவு.

* * *

அடுத்த சில தினங்களுக்கெல்லாம் கண்ணுச்சாமியின் தற்கொலை வழக்கு நீதி மன்றத்தில் வழக்கம்போல் எடுத்துக் கொள்ளப்பட்டது.

கண்ணுச்சாமியிடம் அனுதாபம் கொண்ட தோழர்களில் சிலர், ஆளுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து, அவனுக்கென்று ஒரு வக்கீலை நியமித்தனர்.

அந்த வக்கீல் தன் கட்சிக்காரன் தற்கொலை செய்து கொள்வதற்காகக் குளத்தில் குதிக்கவில்லை என்பதற்கு என்னென்ன ஆதாரங்கள் தேட முடியுமோ, அத்தனை ஆதாரங்களையும் தேடி எடுத்துக் காட்டி வாதித்தார்.

சர்க்கார் தரப்பு வக்கீலோ, கண்ணுச்சாமி தற்கொலை செய்து கொள்வதற்காகத்தான் குளத்தில் குதித்தான் என்பதற்கு என்னென்ன

*ஆதாரங்கள் தேட முடியுமோ, அத்தனை ஆதாரங்களையும் தேடி எடுத்துக்காட்டி வாதித்தார்.*

*கடைசியில், சர்க்கார் தரப்பு வக்கீலின் கட்சிதான் ஜயித்தது!*

*நீதிபதி தமது தீர்ப்பை வாசித்தார் - கண்ணுச்சாமிக்கு ஏழு வருஷச் சிறைத் தண்டனை என்று!*

*இதைக் கேட்டதும் கண்ணுச்சாமி 'இடி இடி' என்று சிரித்துக் கொண்டே சொன்னான்:*

''நல்ல வேடிக்கை ஐயா இது! எனக்கு வைச்ச வக்கீல் என்னடான்னா, நான் தற்கொலை பண்ணிக்கிறதுக்காகக் குளத்திலே விழலேங்கிறதை நிரூபிக்கிறதுக்காக இத்தனை நேரமும் கரடியாக் கத்தினாரு; சர்க்கார் கட்சி வக்கீல் என்னடான்னா, நான் தற்கொலை பண்ணிக்கிறதுக்காகத்தான் குளத்திலே விழுந்தேன் என்கிறதை நிரூபிக்கிறதுக்காக இத்தனை நேரமும் படாத பாடு பட்டாரு. ஆனா, 'நான் என்னத்துக்காகத் தற்கொலை பண்ணிக்கப் போனேன்?' என்கிறதைப் பற்றி மட்டும் யாரும் விசாரிக்கலையே! - இல்லை நான் கேட்கிறேன் - இந்த கோர்ட்டுங்க எல்லாமே குற்றத்தை மட்டுந்தான் விசாரிக்குமா? குற்றத்துக்குக் காரணம் என்னன்னு விசாரிக்கவே விசாரிக்காதா?''

*அதற்குமேல் கோர்ட் சேவகன் சும்மா நிற்கவில்லை; 'உஸ், ஸைலன்ஸ்!' என்று உரத்துக் கூவினான்.*

# புரியாத புதிர்

நினைத்துப் பார்த்தால் எனக்கே வேடிக்கையாய்த் தான் இருக்கிறது - எத்தனையோ பேரைப் பற்றி நான் தெரிந்தவன் போல் எழுதுகிறேன், பேசுகிறேன் - ஆனால் என்னைப் பற்றியே எனக்கு இன்னும் தெரிந்ததாகத் தெரியவில்லை!

இது கதையல்ல; கற்பனை யல்ல; உண்மை; உண்மையிலும் உண்மை.

என்னைப் பற்றியே நான் இன்னும் தெரிந்துகொள்ளாம லிருக்கும்போது, என் மனைவியைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? - ஒன்றுமே தெரியாது தான்!

ஆனால், இந்த அதிசயமான உண்மையை நான் ஒப்புக்கொள்கிறேனா என்றால், அதுதான் கிடையாது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வருஷமும் நான் அவளைப் பற்றி ரொம்ப ரொம்பத் தெரிந்து கொண்டிருப்பவன் போலவே பாவனை செய்து வருகிறேன்.

நான்தான் இப்படி யென்றால் அவளாவது எனக்கு மாறுபட்டிருக்கிறாளா? - அதுவும் இல்லை; அவளும் என்னைப் பற்றி ரொம்ப ரொம்பத் தெரிந்து கொண்டிருப்பவள் போலவே நாளதுவரை பாவனை செய்து வருகிறாள்!

இந்த லட்சணத்தில் எங்களுடைய வாழ்நாட்கள் ஒவ்வொன்றாக எங்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த நாட்களைப் பற்றி நாங்களும் கவலைப்படுவதில்லை.

அப்படி ஏதாவது ஒரு நாளைப் பற்றி நாங்கள் கவலைப்பட்டோம், அந்த நாளும் எங்களைப் பற்றிக் கொஞ்சம் கவலைப்பட்டது என்றால் அது ஒரே ஒரு நாளாய்த்தான் இருக்க முடியும்- அந்த நாள் எங்கள் வாழ்வில் ஒரு திருநாள்!

அந்தத் திருநாளைப் பற்றிச் சொல்வதற்கு முன்னால் உங்களிடம் ஒரு வெறும் நாளைப் பற்றிச் சொல்ல வேண்டும்; ஆமாம்; சொல்லிவிடத்தான் வேண்டும்.

* * *

அன்றிரவு நான் சாப்பிட்டு முடித்ததும், படுக்கையைச் சுருட்டி எடுத்துக் கொண்டு எங்கள் வீட்டு மாடிப்படிகளில் காலை எடுத்து

வைத்தேன். அவள் என்னைத் தடுத்து நிறுத்தி 'எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டாள்.

நான் திரும்பி, ''ஏன், தெரியவில்லையா?'' எலெக்ட்ரிக் லைட்டின் வெளிச்சம்தான் பட்டப் பகலைப்போலக் கண்ணைப் பறிக்கிறதே!'' என்றேன்.

''தெரியாமல் என்ன! 'படுக்கவா போகிறீர்கள்!' என்று கேட்டாள்...''

''ஆமாம்!''

''திறந்த வெளியிலா...?''

''ஆமாம்!''

''கொட்டும் பனியிலா?''

''ஆமாம்!''

''ஏன், உள்ளே படுப்பதற்கு என்ன குறைச்சலாம்?''

''நீ இருக்கிறாய்; உன்னுடைய அருமையான குழந்தைகள் இருக்கின்றன; இன்னும் வேறு என்ன வேண்டும்?''

''ஒரு சாண் கயிறுதான் வேண்டும்!''

''ஒரு சாண் என்ன, ஒரு முழம் வேண்டுமானாலும் தருகிறேன்!''

''என்னை ஏன் இப்படி எடுத்ததற்கெல்லாம் கரிக்கிறீர்கள்? உங்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை என்றால் சொல்லிவிடுங்களேன்!''

''பிடிக்கவில்லை என்றால் உடனே பிறந்தகத்துக்குப் போய்விடுவாய்; அவ்வளவுதானே? - பேஷாய்ப் போ! இப்பொழுதே வேண்டுமானாலும் போ!'' என்று சொல்லி விட்டு நான் மாடிக்குச் சென்றேன்.

கீழேயிருந்து விம்மல் சத்தம் வந்தது!

அதைப் பொருட்படுத்தாமல் நான் படுக்கையை விரித்துப் படுத்தேன்.

விம்மல் சத்தம் தொடர்ந்தது!

சிறிது நேரமாவது நிம்மதியாக இருந்துவிட்டு வரலாம் என்று எண்ணி மாடிக்கு வந்த எனக்கு இது என்ன சோதனை? இந்த சோதனைக்கு யார் காரணம்?

நான்தான் காரணம் என்றால், அந்தக் காரணத்துக்கு நான் ஏன் ஆளானேன்?

இல்லை, அவள்தான் காரணம் என்றால், அந்தக் காரணத்துக்கு அவள் ஏன் ஆளானாள்?

ஒருவரைப்பற்றி ஒருவர் தெரிந்து கொள்ளாததால் வந்த வம்பு மட்டும் அல்ல அது; என்னைப் பற்றி நானும் அவளைப்பற்றி அவனும் தெரிந்து கொள்ளாததால் வந்த வம்புதான் இது!

அப்படித் தெரிந்து கொள்ளாத குற்றம் யாருடையது? எங்களுடையதா? - இல்லை, இல்லவே இல்லை!

ஏனெனில், விரிந்து பரந்து கிடக்கும் இந்த உலகத்தில் நாங்கள் மட்டும் ஏன் எங்களைப்பற்றி எங்களுக்கே தெரியாமலும், ஒருவரைப்பற்றி ஒருவர் தெரிந்து கொள்ளாமலும், வாழ்க்கை நடத்தவில்லை. வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதி, ஊருக்கு ஊர் எங்களைப் போல் விசித்திர வாழ்க்கை நடத்துபவர்கள் இருக்கத்தான் இருக்கிறார்கள்.

இன்று தெரியும் இந்த உண்மைக்கும் அன்று தெரிந்த அந்த உண்மைக்கும்தான் எவ்வளவு வித்தியாசம்!

* * *

''**கா**தலினால் வாழ்க்கையில் சாதிக்க முடியாத காரியம் ஒன்றுமே இல்லை!'' என்று கவிஞர்கள் கதைக்கிறார்கள். அவர்களுக்கு எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறோம். ஏனெனில் நாங்கள் ''பெரியோர்கள் நிச்சயித்தபடி'' கல்யாணம் செய்துகொண்டவர்களல்ல; ''நாங்கள் நிச்சயித்தபடி'' கல்யாணம் செய்து கொண்டவர்கள்தான்.

அதாவது, எங்கள் கல்யாணம் காதல் கல்யாணம்!

குடும்ப நண்பர்கள் என்ற முறையில் கல்யாணத்துக்கு முன்னால் நான் அடிக்கடி அவளுடைய வீட்டுக்குப் போய் வருவதுண்டு. அவளும் என்னுடைய வீட்டுக்கு அடிக்கடி வந்து போவதுண்டு.

கல்யாணமான பிறகு அன்றுதான் இருவரும் முதன்முதலாகச் சந்திப்பதென்று முடிவாயிற்று.

அந்த நாள் நெருங்க நெருங்க, அந்த நேரமும் நெருங்க நெருங்க, எனக்கு உண்டான கிளர்ச்சியைத்தான் என்னவென்பேன்! உயிரும் உடலும் ஒன்றி உண்டான உணர்ச்சியைத்தான் என்னவென்பேன்!

கடைசி கடைசியாக அந்த நாளும் வந்தது; அந்த நேரமும் வந்தது. இருவரும் பெரியோருக்குத் தெரிந்து, பெற்றோருக்குத் தெரிந்து, உற்றாருக்குத் தெரிந்து, ஊராருக்குத் தெரிந்து,

எங்களுக்கென்று அலங்கரிக்கப்பட்டிருந்த அந்தத் தனி அறைக்குள் பிரவேசித்தோம்.

மலர் மணம் எங்களை மனமுவந்து வரவேற்றது!

பன்னீரும் சந்தனமும் பல்வேறு பழவகைகளும் எதிர்த்தாற்போலிருந்த கண்ணாடியில் தெரிந்த காட்சி கண் கொள்ளாக் காட்சியா யிருந்தது!

ஆதுரத்துடன் உள்ளே நுழைந்த எங்கள் இருவருடைய கண்களிலும் ஆசைக் கனல் பறந்தது!

ஆனால்....

பெருகிவந்த உணர்ச்சிக்கு எங்கள் இருவருக்கும் இடையே யிருந்த நாணம் தடை விதித்தது. அந்தத் தடையை மீறுவதற்கு - அப்பப்பா! நாங்கள் செய்த பிரயத்தனங்கள் எத்தனை எத்தனையோ!

நான் அவளைப் பார்க்காதபோது அவள் என்னைப் பார்த்தாள்; அவள் என்னைப் பார்க்காத போது நான் அவளைப் பார்த்தேன்.

அவளுக்குத் தெரியாமல் என் இதழ்கள் சற்றே விரிந்தன; எனக்குத் தெரியாமல் அவள் இதழ்கள் சற்றே மலர்ந்தன.

ஆனால் இருவருக்கும் வாய்தான் அடைத்துப் போயிருந்தது!

இந்த நிலைமை வெகுநேரம் நீடிக்கவில்லை. நான் துணிந்து அவளை நேருக்கு நேராகப் பார்த்தேன்; அவளும் துணிந்து என்னை நேருக்கு நேராகப் பார்த்தாள். அவள் 'சட்'டென்று தலை குனிந்தாள்; நானும் 'சட்'டென்று தலை குனிந்தேன். அவள் முகம் சிவந்தது; என் முகமும் சிவந்தது. என்னுடைய கண்கள் 'படபட'வென்று அடித்துக் கொண்டன; அவளுடைய கண்களும் 'படபட'வென்று அடித்துக் கொண்டன.

ஆம், அவை பேசின; பேசத்தான் செய்தன!

எல்லோருக்கும் தெரிந்த பாஷையிலா? இல்லை; எவருக்கும் தெரியாத பாஷையில்! - இரைந்தா? இலலை; இரகசியமாக!

இந்தக் கோலத்துக்கு மத்தியில் எங்களுக்கிடையே யிருந்த நாணம் கொஞ்சம் கொஞ்சமாக நழுவ ஆரம்பித்திருக்க வேண்டும். இல்லையென்றால், நான் ஏன் அவளை இப்போது விழுங்கிவிடுபவன் போல் பார்க்கிறேன்? அவள் ஏன் என்னை இப்போது விழுங்கிவிடுபவள் போல் பார்க்கிறாள்?

இருவரும் ஒருவர்மீது ஒருவர் வைத்த விழிகளை வாங்கவேயில்லை; பார்த்தோம் பார்த்தோம் பார்த்தோம் பார்த்துக் கொண்டே இருந்தோம்.

நேரம் போய்க்கொண்டே இருந்தது! - ஆம், நேரம் போய்க்கொண்டே தான் இருந்தது!

இத்தனைக்கும் அவள் ஏற்கனவே எனக்குத் தெரிந்தவள்; நானும் அவளுக்கு தெரிந்தவன்.

ஆனால், பேசத்தான் நா எழவில்லை!

''இருவருக்கும் இடையே ஏதாவது ஒன்று தூதாக வந்து சேர்ந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?'' என்று நினைத்தேன்.

நினைத்ததுதான் தாமதம்; சாளரத்தின் வழியாக எங்கிருந்தோ ஒரு பூனை வந்து எட்டிப் பார்த்தது; உடனே அந்தப் பூனையை நான் துணைக்கு அழைத்தேன்.

''மியாவ், மியாவ்...!''

அவள் 'களுக்'கென்று சிரித்தாள்; நானும் 'களுக்'கென்று சிரித்தேன்.

பூனை இறங்கி வந்தது!

நான் மேஜை மீதிருந்த பாலை எடுத்துத் தரையில் கொஞ்சம் கொட்டி நிறுத்தினேன்.

பூனை சுவாரஸ்யமாக அந்தப் பாலை நக்கிக் குடித்தது.

''தனியாக வந்திருக்கிறீரே, தம்பதி சமேதராக வந்திருக்கக் கூடாதோ!'' என்றேன் நான், பூனையைப் பார்த்து. பதிலுக்கு அது ''மியாவ், மியாவ்!'' என்றது.

நான் அதைத் தடவிக் கொடுத்துக் கொண்டே இன்னும் கொஞ்சம் பாலைக் கீழே கொட்டினேன்.

அவ்வளவுதான்; அந்த மெல்லியலாள் பொறுமையிழந்தாள். ஓடோடியும் வந்து என் கையிலிருந்த பால் செம்பை 'வெடுக்'கென்று பிடுங்கி, மேஜைமீது 'தக்'கென்றுவைத்தாள்.

பூனை எடுத்தது ஓட்டம்!

நான் அவளுடைய மலர்க்கரத்தைப் பற்றி மதி முகத்தை நோக்கினேன்.

எங்களுடைய கரங்கள் இணைந்தன!

இணைந்தவை இணைந்தவைதான்; வெகுநேரம்வரை அவை பிரியவேயில்லை.

பிரியாமலே பேச்சு ஆரம்பமாயிற்று!

மணி பத்து, பதினொன்று, பன்னிரண்டு - ஊஹூம்; பேச்சு ஓயவே இல்லை - பேசினோம், பேசினோம், பேசினோம், பேசிக் கொண்டே இருந்தோம்.

''இனி நாம் இருவரும் உடலும் உயிரும்போல!'' என்றேன் நான்.

''இனி நாம் இருவரும் மலரும் மணமும் போல!'' என்றாள் அவள்.

''இனி நாம் இருவரும் நகமும் சதையும் போல!'' என்றேன் நான்.

''இனி நாம் இருவரும் நிலவும் ஒளியும்போல!'' என்றாள் அவள்.

இதை உணர்ந்தோ என்னமோ, அவள் எழுந்து சென்று, தன் தளிர்க்கரங்களில் பால் செம்பை ஏந்திக் கொண்டு வந்து எனக்கு எதிரே நின்றாள்.

நான் அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, ''அமிர்தகலசம் ஏந்தி நிற்கும் அப்ஸர ஸ்திரீ போலவே இருக்கிறாயே!'' என்றேன்.

அவள் தலையைக் கீழே கவிழ்த்திக் கொண்டு, ''அந்த அமிர்தத்தைப் பருகப் போகும் அசல் தேவ புருஷனைப் போலவே நீங்கள் இருக்கிறீர்கள்!'' என்றாள் அவள்.

நான் அவளுடைய தலையை நிமிர்த்திவிட்டுச் சிரித்தேன் - ஆம், அப்பொழுதுதான் நாங்கள் இருவரும் முதன் முறையாக மனம் விட்டுச் சிரித்தோம்.

அவள் மெள்ள நடந்து சென்று, விளக்கின் திரியை மெள்ள இறக்கிவிட்டு வந்தாள்.

வெளிச்சம் சற்றே குறைந்தது; எங்களைப் பிடித்திருந்த வெட்கமும் சற்றே மறைந்தது. இருவரும் ஒருவரையொருவர் நெருங்கினோம்...

''மற்றவர்களைப் போல் நாம் ஒருவரை ஒருவர் முன்பின் தெரியாமல் கல்யாணம் செய்துகொள்ளவில்லையே!'' என்றாள் அவள் பெருமிதத்துடன்.

''ஆம், நாம் ஒருவரை ஒருவர் முன்பின் தெரிந்தே கல்யாணம் செய்து கொண்டிருக்கிறோம்!'' என்றேன் நானும் பெருமிதத்துடன்.

அன்று இருந்த அந்த ஒற்றுமை இன்று....?

* * *

பொழுது விடிந்ததும் படுக்கையைச் சுருட்டி எடுத்துக் கொண்டு மாடியை விட்டு கீழே வந்தேன். அவள் பெட்டி, படுக்கையுடன் வந்து எனக்கு எதிரே நின்றாள்.

''என்ன, எங்கே பிரயாணம்?'' என்று கேட்டேன்.

''ஊருக்கு!'' என்றாள் அவள்.

''எப்பொழுது....?''

''இப்பொழுதுதான்...?''

''பின்னே ஏன் நிற்கிறாய்? - போகிறதுதானே?''

''உங்கள் உத்தரவை எதிர் பார்த்துத்தான் நிற்கிறேன்....''

''என்னுடைய உத்தரவு என்ன தெரியுமா? - நீ ஊருக்குப் போகக்கூடாது!''

''என்னுடைய இஷ்டம் என்ன தெரியுமா? - நான் ஊருக்குப் போக வேண்டும்!''

''உன்னுடைய இஷ்டப்படி நடப்பதற்கு இது இடமில்லை!''

''அதற்குத்தான் என் பிறந்தகத்துக்குப் போகிறேன்''

''போகக்கூடாது!''

''என்னை ஏன் வீணாகத் தடுக்கிறீர்கள்?''

''நீ மட்டும் நேற்றிரவு மாடிக்குப் போன என்னை ஏன் வீணாகத் தடுத்தாய்!''

''பனியில் நனைந்தால் உடம்புக்கு ஆகாதே என்று தடுத்தேன்!''

''நானும் நீ ஊருக்குப் போனால் எனக்குப் பொழுது போகாதே என்று தடுக்கிறேன்!''

அவள் சிரித்தாள்; நானும் சிரித்தேன்.

''இது ஏன் உங்களுக்கு முன்னமே தெரியவில்லை?'' என்றாள் அவள்.

''நல்ல வேடிக்கை!'' என்று சொல்லிவிட்டு, அவள் பெட்டியையும் படுக்கையும் தூக்கிக் கொண்டு போய் பழையபடி உள்ளே வைத்தாள்.

நான் அவளுக்குப் பின்னால் சென்று, ''வாழ்க்கை வேடிக்கையல்ல! அது ஒரு புதிர்!'' என்றேன்.

''வாழ்க்கை மட்டும் என்ன, மனித வர்க்கத்தின் குணாதிசயமே ஒரு புரியாத புதிராய்த்தான் இருக்கிறது!'' என்றாள் அவள்.

# மவராசர்கள்

''வழியில் எந்தவிதமான ஆபத்தும் நேராமற்போய்ச் சேர வேண்டுமே, கடவுளே!'' என்று எண்ணிப் பெருமூச்சு விட்ட வண்ணம் மாயவரம் ஜங்ஷனில் 'திருவனந்தபுரம் பாஸஞ்சர்' வந்து நின்றது. தங்களுடைய பெட்டி படுக்கைகளுடன் ஜனங்கள் விழுந்தடித்துக் கொண்டு ரயிலை நோக்கி ஓடினர். அப்படி ஓடியவர்களில் பிரபல வியாபாரியான பீதாம்பர முதலியாரும் ஒருவர். அவர் தம்முடைய 'யுத்தகால தொந்தி'யைச் சுமக்க முடியாமல் சுமந்து சென்றது பார்ப்பதற்கு வேடிக்கையா யிருந்தது. அவரைப் பின்பற்றி அவருடைய மூன்றாவது மனைவி கையில் குழந்தையுடன் ஓட்டமும் நடையுமாக வந்தாள். அவர்கள் இருவரையும் தொடர்ந்து 'போர்ட்டர்' ஒருவர் தலையில் பெட்டியுடனும் கையில் படுக்கையுடனும் முக்கி முனகி நடந்து கொண்டிருந்தான்.

ஏற்கனவே முதல் வகுப்பில் வேண்டிய இடத்துக்கு 'ரிஸர்வ்' செய்துவிட்டு அப்புறம் சாவகாசமாக வந்து வண்டி ஏறுவதற்குரிய வசதி பீதாம்பர முதலியாருக்கு இருக்கத்தான் செய்தது. இருந்தாலும் சிக்கனத்தை உத்தேசித்து முதலியார் எப்பொழுதும் மூன்றாம் வகுப்பில் தான் பிரயாணம் செய்வது வழக்கம். 'சௌகரியமாக வாழ்வதற்கு வசதியிருந்தும் உலகத்தில் வாழத் தெரியாத எத்தனையோ பேர் இல்லையா?' அவர்களில் முதலியாரும் ஒருவர் போலிருக்கிறது!' என்று நீங்கள் நினைத்து விடாதீர்கள். ஏனெனில், மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்வதற்கு முதலியார் சொல்லும் காரணமே வேறு. அந்தக் காரணம் என்ன தெரியுமா? மகாத்மா காந்தி மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்து கொண்டிருந்தாராம்; அவரைப் பின்பற்றி நம் முதலியாரும் சிரமத்தைப் பொருட்படுத்தாமல் மூன்றாம் வகுப்பில் பிரயாணம் செய்கிறாராம்!

இவ்வாறு சொல்லிக் கொள்வதின் மூலம் முதலியார் தம்மை மகாத்மா காந்திக்கு அடுத்த வாரிசாக எண்ணிக் கொண்டிருந்தார். அந்த மகானைப் போலவே தாமும் ஏழைகளிடத்தில் இரக்கம் கொண்டவர் என்று அவர் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் உண்மையோ வேறு விதமா யிருந்தது. ரயில் பிரயாணத்தில் தான் நம்முடைய முதலியார் காந்தி மகாத்மாவைப் பின்பற்றினாரே தவிர வாழ்க்கைப் பிரயாணத்தில் அவரைப் பின்பற்றவில்லை.

அப்படிப் பின்பற்றியிருந்தால் ஒரு வேளை அவருக்கு அந்த 'யுத்தகாலத் தொந்தி' விழாமலே இருந்திருந்தாலும் இருந்திருக்கலா மல்லவா?

இந்த 'ஏழை - பங்காளர்' ஏறி உட்கார்ந்ததும் ரயில் நகர்ந்தது. அந்தச் சமயத்தில் 'கார்டு' அலறியதையும் பொருட்படுத்தாமல் ஒருவன் தலை தெறிக்க ஓடிவந்து முதலியார் ஏறியிருந்த பெட்டிக்குள் ஏறினான். அவன் பெயர் நாச்சியப்பன். யாரோ ஒரு 'மவராசன்' குப்பையில் எறிவதற்காக வைத்திருந்த பழைய கோட்டு ஒன்றை அவனிடம் கொடுத்து, அவனுக்குத் தெரியாமல் திருட்டுத் தனமாகப் புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொண்டிருந்தான். அந்தக் கோட்டைத்தான் அவன் அன்று அணிந்து கொண்டிருந்தான். அதற்குள் சட்டையோ, பனியனோ ஒன்றுமில்லை. அவனுடைய அரையை ஓர் அழுக்கடைந்த 'கைலி' அலங்கரித்துக் கொண்டிருந்தது. முகத்தின் அழகைப்பற்றியோ சொல்லவே வேண்டாம். அந்த நீண்டு வளர்ந்திருந்த மீசைகள் மட்டும் அவனுடைய குழி விழுந்த கன்னங்களை மறைத்துக் கொண்டிராவிட்டால், அவனை ஒரு கணம்கூட யாராலும் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. தலையையாவது கொஞ்சம் எண்ணெய் தடவி வாரிக் கொண்டிருக்கலாம். அதற்கும் அவனுக்கு வசதியில்லையோ, அல்லது மனந்தான் இல்லையோ? - யார் கண்டார்கள்?

இந்த லட்சணத்தில் இருந்த அவனைத் தொடர்ந்து நல்ல வேளையாக 'மனைவி' என்று சொல்லும் முறையில் யாரும் வரவில்லை. ஆனால் அவனுடைய இடுப்பில் மட்டும் ஒரு குழந்தை இருந்தது. தோற்றத்தில் அது அவனையே ஒத்திருந்தது. அந்தக் குழந்தைக்கு ஒரு வருஷம் பூர்த்தியாகி யிருக்கலாம். ''இன்று சாகுமோ, நாளை சாகுமோ!'' என்று இருந்த அதற்குக் குரல் மட்டும் எட்டரை கட்டைக்கு மேல் இருந்தது. ஜனக் கூட்டத்தில் இடிபட்டு அது 'வீல், வீல்' என்று கத்திய சத்தம், ரயிலின் ஊதல் சத்தத்தைக்கூடத் தோற்கடித்து விட்டதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

நாச்சியப்பனுடைய கையில் பெட்டியும் இல்லை. படுக்கையும் இல்லைதான். ஆனால் அவை யிரண்டும் இருந்தால் அவனுக்கு எவ்வளவு தொந்தரவாயிருக்குமோ அதற்கு மேல் அந்தக் குழந்தை இருந்தது தொந்தரவாயிருந்தது! - 'சிசுஹத்தி' செய்வது மகா பாவமென்றும், அதனால் ஏழு நரகங்களுக்கும் கீழான நரகத்துக்குச் செல்லவேண்டி நேரும் என்றும் சாஸ்திரம் பயமுறுத்துவதாக

நாச்சியப்பன் மட்டும் கேள்விப்பட்டிராவிட்டால், நிச்சயம் அந்தக் குழந்தையை அவன் உடைப்பில் தூக்கிப் போட்டுக் கொன்றே விட்டிருப்பான்!

* * *

பீதாம்பர முதலியாரும் நாச்சியப்பனும் ஏறக்குறைய ஒரே சமயத்தில் தான் அந்தப் பெட்டிக்குள் ஏறினர். ஆனால் எதற்கும் ஒழுக்கத்தைக்கூட மீறி நிற்கும் அந்தப் பாழாய்ப்போன அந்தஸ்து என்று ஒன்று வந்து குறுக்கே நிற்கிறதல்லவா? அதன் காரணமாக, முதலியாருக்கும் அவருடைய மனைவிக்கும் மட்டும் தான் உள்ளே இருந்தவர்கள் நெருக்கியடித்து உட்கார்ந்து கொஞ்சம் இடம் விட்டனர். நாச்சியப்பனையோ யாரும் கவனிக்க வில்லை. எல்லோரும் அவனை ஏதோ ஒரு விநோத ஜந்துவைப் பார்ப்பதுபோல் பார்த்தனர். அப்படிப் பார்த்தவர்கள் சும்மா இருக்கவும் இல்லை; தங்களுக்குள் அடிக்கடி ஏதோ பேசிக் கொள்வதும் 'களுக்'கென்று சிரிப்பதுமாக இருந்தனர்.

உலகத்தில் ஏழை எளியவனைக் கண்டால் எள்ளி நகையாடுபவர்கள்தான் அதிகம் என்ற உண்மையை நாச்சியப்பன் உணர்ந்திருந்தானோ என்னமோ, மேற்கூறிய காட்சிகளை யெல்லாம் கண்டும் காணாதவன் போல் இருந்தான். அந்தச் சமயத்தில் தான் உட்காருவதற்கு எப்படியாவது கொஞ்சம் இடம் கிடைத்தால் போதும் என்பது அவனுடைய ஒரே நோக்கமாயிருந்தது. அதற்காக, அந்தப் பெட்டிக்குள் உட்கார்ந்திருந்த ஒவ்வொருவரையும் அவன் பரிதாபத்துடன் பார்த்தான். ''கொஞ்சம் இடம் விடுங்கள் ஐயா!'' என்று கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டான். ஊஹூம் யாரும் அசைந்து கொடுக்கவில்லை.

நேரம் போய்க்கொண்டே இருந்தது. ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் வண்டி நிற்பதும் கிளம்புவதுமாக ஓடிக் கொண்டே இருந்தது. ரயிலின் ஆட்டத்திற்கேற்ப நாச்சியப்பன் ஆடிக் கொண்டே சென்றான். அந்த ஆட்டத்தில் குழந்தையின் தூக்கம் எங்கே கலைந்து விடுமோ என்று அவனுக்குப் பயமாயிருந்தது. அப்படி எழுந்துவிட்டால் அதனுடன் மாரடிப்பதற்கு வேண்டிய தெம்பும் அவனுக்கு அந்தச் சமயத்தில் இல்லை. கீழே உட்கார்ந்து விடலாம் என்று பார்த்தாலோ எங்கும் ஒரே பெட்டியும் படுக்கையுமாக இருந்தன. அவற்றின் மேலே உட்காருவதற்கும் அவனுக்கு, 'என்ன சொல்வார்களோ என்னமோ' என்று அச்சமாயிருந்தது. ஆனாலும் அவன் குழந்தையை வைத்துக்

கொண்டு எவ்வளவு நேரந்தான் நின்று கொண்டிருக்க முடியும்? - கொஞ்சம் துணிந்து அங்கிருந்த பெட்டி ஒன்றைச் சிறிது நகர்த்த முயன்றான்.

அவ்வளவுதான்; அந்தப் பெட்டிக்கு அடுத்தாற் போலிருந்த பெஞ்சியில் காலை நீட்டிக் கொண்டு படுத்திருந்த அதன் சொந்தக்காரர் சீறி எழுந்து, "சீ! எடு கையை! என்னிடம் சொன்னால் நான் நகர்த்த மாட்டேனா? நீ எதற்கு என் பெட்டியைத் தொடணும்? எவ்வளவு பளு இருக்கிறது என்று பார்த்துக் கொள்கிறாயா? கண்ணை மூடினால் அடித்துக் கொண்டு போய் விடலாமென்று? எட்டிப் போடா, நாயே!" என்று இரைந்தார்.

உண்மையிலேயே நாச்சியப்பன் நாயா யிருந்திருந்தால் அவரைக் கட்டாயம் கடித்திருப்பான். அவன்தான் தன்மானமில்லாத மனிதனாயிருக்கிறானே, அதனால் கடிக்கவில்லை. அதற்குப் பதிலாக, "நானும் எவ்வளவு நேரமா நின்னுக்கிட்டு வர்றதுங்க? குழந்தை வேறே கையிலே இருக்குது. இல்லாட்டிப்போனா, தொட்டாத் தோசமில்லைன்னு தொட்டேன்; அதுக்கு இப்படிக் கோவிச்சுக்கிறீங்களே!" என்றான்.

"கோபித்துக் கொண்டேனா! உன்னுடைய கையையே ஒடித்துப் போட்டிருப்பேன்; போனாற் போகிறதென்று சும்மா விட்டேன்!" என்று உறுமினார் பெட்டிக்காரர்.

பொறுமை இழந்த நாச்சியப்பன், "அப்படிப்பட்டவரு இப்படிக் 'கும்பலிலே கோவிந்தா' போட்டுக்கிட்டு வரக் கூடாதுங்க" என்றான்.

உடனே, "அதிகப் பிரசங்கி! பல்லை உடைத்துவிடுவேன், பல்லை!" என்று முஷ்டியை மடக்கிக் கொண்டு எழுந்தார் பெட்டிக்காரர்.

அதற்குள் அங்கிருந்த சில பெரிய மனிதர்கள் "கிடக்கிறான் கழுதை! விட்டுத் தள்ளுங்கள் ஸார்" என்று பெருந்தன்மையுடன் சொல்லி அந்தப் பெட்டிக்காரரை உட்கார வைத்தனர்.

"பல்லை உடைக்க வேண்டுமானா அவனைத் தொட வேண்டுமே என்று பார்க்கிறேன். இல்லை யென்றால் கட்டாயம் அவனுடைய முப்பது பற்களையும் உடைத்து கையில் கொடுத்திருப்பேன்!" என்று உச்சஸ்தாயியில் கத்திக் கொண்டே உட்கார்ந்தார் 'உயர்ந்த ஜாதிக்கார' ரான பெட்டிக்காரர்.

''ஏன், வெளியே வீசி எறியப்படாதோ? கையில் தான் கொடுக்க வேண்டுமோ?'' என்றார் அவருக்கு எதிர்த்தாற்போலிருந்த ஒரு அமுத்தல் பேர்வழி.

அவருக்கு அருகிலிருந்த ஒரு புரொபஸர் ''தப்பு, தப்பு! மொத்தம் முப்பத்திரண்டு பற்கள், ஸார்!'' என்று கூறி 'ஹோ'வென்று சிரித்தார்.

''எல்லாம் பார்த்துத்தான் சொன்னேங்காணும்! அவனுக்கு முன் வரிசையில் இரண்டு பற்களைக் காணோம்!'' என்றார் பெட்டிக்காரரும் சிரித்துக் கொண்டே.

இந்தச் சமயத்தில் இன்னொரு பெரிய மனிதர் ஒரு சின்னச் சந்தேகத்தை கிளப்பிவிட்டார். ''ஏன், ஸார்! இவன் டிக்கெட் வாங்கியிருப்பானா?'' என்னும் சந்தேகம் தான் அது!

அவன் டிக்கெட் வாங்கியிருக்காவிட்டால் தாம் வாங்கிக் கொடுக்கலாம் என்ற நோக்கத்துடன் அவர் அந்தச் சந்தேகத்தைக் கிளப்பிடவில்லை. 'டிக்கெட் செக்கர்' வந்து அவனை இறக்கிவிடுவதற்கு முன்னால் தாமே இறக்கி விட்டுவிடலாமே என்ற பரந்த நோக்கத்துடன்தான் அந்தச் சந்தேகத்தை கிளப்பிவிட்டார்!

இதைக் கேட்டதும் நாச்சியப்பனுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. இருந்தாலும் அதை ஒருவாறு அடக்கிக் கொண்டு ''நான் சின்ன மனுஷனுங்க; எனக்கு அந்தப் பெரிய மனுஷன் தில்லு முல்லெல்லாம் செய்யத் தெரியாதுங்க!'' என்று சொல்லிக்கொண்டே, தன் மடியில் பத்திரமாக வைத்திருந்த டிக்கெட்டை அவன் எடுத்துக் காட்டினான்.

அதே சமயத்தில அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றது. எதிர்பாராதவிதமாக நாச்சியப்பன் ஏறியிருந்த பெட்டிக்குள் டிக்கெட் பரிசோதகர் ஏறினார். அவன் சொன்னதற்கு ஏற்றார் போல் அவரைக் கண்டதும் 'பெரிய' மனிதர் ஒருவர் ஓடி ஒளியப் பார்த்தார். டிக்கெட் பரிசோதகர் அவரை விடவில்லை. விரைந்து சென்று ''எங்கே டிக்கெட்?'' என்று கேட்டார்; அவர் விழித்தார். உடனே அவரைக் கீழே இறக்கி விட்டுவிட்டு 'டிச்கெட் செக்கர்' மேலே போனார்.

இந்தக் காட்சியைக் கண்டதும் எல்லோருடைய வாய்களும் அடைத்து விட்டன. நாச்சியப்பன் காலியான இடத்தில் கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தான். தங்கள் சகாவிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொண்ட 'டிக்கெட் செக்கர்'ரைப் பற்றி பெரிய மனிதர்கள் முணுமுணுத்தனர்.

* * *

இத்தனை ரகளைகளையும் அதுவரை கவனித்தும் கவனியாதவர் போலிருந்த பீதாம்பர முதலியார் ''ஏன், அப்பா! உனக்கு எந்த ஊர்?'' என்று நாச்சியப்பனைப் 'பொழுது போக்கு'க்காகக் கேட்டு வைத்தார்.

''மாயவரம்தானுங்க!'' என்றான் நாச்சியப்பன்.

''இப்பொழுது எங்கே பயணம்?''

''பட்டணத்துக்குத்தான்!''

''அங்கே என்ன வேலை?''

''வேலை என்ன வேலை! வயித்துப் பிழைப்புக்கு அங்கே ஏதாச்சும் வழி பிறக்கும்னுதான் போறேன்''

''இதற்குமுன்னால் நீ என்ன வேலை செய்து கொண்டிருந்தாய்?''

''மரம் ஏறிக்கிட்டு இருந்தேனுங்க!''

அப்படின்னா நீ 'மாஜி-கள் இறக்கும் தொழிலாளி' போல இருக்கு.

''ஆமாங்க''

''அதுதானே பார்த்தேன் - குடிக்கக் கள் இறக்கிக் கொடுத்து நீ எத்தனையோ குடிகளைக் கெடுத்தாயல்லவா? அந்தப் பாவமெல்லாம் சேர்த்து உன்னை இந்தக் கதிக்கு இப்போது கொண்டு வந்து விட்டிருக்கிறது!'' என்றார் புண்ணியம் செய்து வந்த முதலியார்.

நாச்சியப்பன், ''இந்த இடத்திலேதானுங்க உங்களுக்கும் எனக்கும் வித்தியாசப்படுது! நீங்க சொல்றாப் போல நான் செய்தது பாவமா இருந்திருந்தா, நானும் உங்களைப் போலவே இருந்திருப்பேனுங்களே!' என்றான்.

முதலியாரை இது தூக்கிவாரிப் போட்டது. ஒரு கணம் அவர் அயர்ந்து போனார். மறுகணம் தம்முடைய இயற்கையான சுபாவத்தால் அதைச் சமாளித்துக் கொண்டு, ''பேஷ், பேஷ்! உலகத்தில் பாவம் செய்கிறவர்கள் தான் நன்றாயிருக்கிறார்கள் என்று நீ சொல்கிறாய் போலிருக்கிறது! நல்ல ஆளப்பா நீ!'' என்று கூறிச்சிரித்தார். ஆனால் அந்தச் சிரிப்பு உள்ளத்தோடு ஒன்றவில்லை என்பதை அவருடைய பரந்த முகம் பளிச்சென்று எடுத்துக் காட்டியது.

இந்தச் சமயத்தில் தூங்கிக் கொண்டிருந்த முதலியாரின் குழந்தை விழித்துக் கொண்டு அழுதது. அதற்குள் பணக்காரத் தூக்கத்தில் சற்றே லயித்துவிட்டிருந்த அதன் தாயார், குழந்தை அழுததைக் கவனிக்கவில்லை. முதலியார் இதைக் கவனித்ததும் தம்முடைய மனைவியை மெல்லத் தொட்டு ''தங்கம், தங்கம்!'' என்றார்.

தங்கம் திடுக்கிட்டு எழுந்து, ''எந்தப் பட்டணம் பாழாய்ப் போச்சு?'' என்று எரிந்து விழுந்தாள்.

முதலியார் நெருப்பை மிதித்துவிட்டவர்போல் குதித்து அவள் பக்கம் திரும்பி ''இது கூட வீடா, என்ன? 'குழந்தை அழுகிறது' என்று சொல்ல வந்தால் இப்படி எரிந்து விழுகிறாயே!'' என்றார் பரிதாபத்துடன்.

தங்கம் போனாற் போகிறதென்று பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு குழந்தையைத் தூக்கிக் கொண்டாள்.

ஆனால் அந்தக் குழந்தையோ பொல்லாத குழந்தையாக இருந்தது. அது 'கண்ணே!' என்றாலும் கேட்கவில்லை; 'கற்கண்டே!' என்றாலும் கேட்கவில்லை; திறந்த வாயை மூடாமல் அழுத அந்தக் குழந்தையை எப்படி எப்படியெல்லாமோ தேற்றிப்பார்த்தாள் தங்கம். அது எதையும் லட்சியம் செய்யவில்லை; பால் கொடுத்தாலும் குடிக்க மறந்து வீரிட்டு அழுதது.

முதலியார் பெட்டியைத் திறந்து ஒரு 'கிளாக்ஸோ' பிஸ்கட்டை எடுத்துக் குழந்தையிடம் கொடுத்தார். அந்தப் பிஸ்கட்டை வாங்கி அது ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்தது. பிறகு, கீழே விட்டெறிந்துவிட்டு 'ஓ'வென்று அலறியது.

அடுத்தாற்போல் ஓர் ஆரஞ்சுப் பழத்தை எடுத்துக் கொடுத்தார்; அதையும் கீழே உருட்டி விட்டது.

முதலியார் சளைக்கவில்லை. ''இது வேணுமாடா, ராஜா!'' என்று சொல்லிக் கொண்டே மூன்றாவதாக ஒரு 'ஸெலுலாய்ட்' பொம்மையை எடுத்துக் கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்டதும் குழந்தை அழுகையை நிறுத்திவிட்டது. அதன் தாயார் மீண்டும் 'பணக்காரத் தூக்க'த்தில் ஆழ்ந்து விட்டாள்!

* * *

''அப்பாடி! மழை ஓய்ந்தது!'' என்று சொல்லிக் கொண்டே முதலியார் நாச்சியப்பன் பக்கம் திரும்பினார்.

''இது என்ன மழை? நம்ம குழந்தை அழறப்போ நீங்க பார்க்கணும்!'' என்றான் நாச்சியப்பன்.

அவ்வளவுதான்; 'அதற்காக நீங்கள் காத்திருக்க வேண்டாம்!' என்று சொல்வது போல், அவனுடைய குழந்தை திடீரென்று விழித்துக் கொண்டு கத்த ஆரம்பித்து விட்டது.

'கண்ணே, கற்கண்டே!' என்று கொஞ்சுவதற்குப் பதிலாக, 'சனியனே, பீடையே!' என்று திட்டிக் கொண்டே நாச்சியப்பன் குழந்தையை தூக்கினான். அது தன் அழுகையை நிறுத்தவில்லை. அதற்காக நாச்சியப்பன் பெட்டியைத் திறந்து, 'கிளாக்ஸோ' பிஸ்கட்டையோ, ஆரஞ்சுப் பழத்தையோ, 'ஸெலூலாய்ட்' பொம்மையையோ எடுத்து அதன் கையில் கொடுக்கவில்லை; அவற்றுக்குப் பதிலாக அந்தக் குழந்தையின் கன்னத்தில் அவன் 'பட்' என்று ஓர் அறை கொடுத்துவிட்டுத் தன்னுடைய கோட்டுப் பையில் கையை விட்டான். அவன் எடுக்கப் போகும் வஸ்துவைப் பார்ப்பதற்காக முதலியார் தம் கண்களை ஆவல் மிகுதியால் அகல விரித்துக் கொண்டார். நாச்சியப்பன் ஒரு சின்னஞ்சிறு தகர டப்பியைக் கையில் எடுத்தான். அதற்குள் பாலா இருந்தது என்கிறீர்கள்? - இல்லை, அபின்!

''இதென்ன, அபின்போலிருக்கிறதே!'' என்றார் முதலியார்.

''என்ன, அப்படிச் சொல்றீங்க? - இது அபினே தான்!'' என்று சொல்லி, நாச்சியப்பன் அவருடைய சந்தேகத்தைத் தீர்த்து வைத்தான்.

''இது என்னத்துக்கு?'' என்று முதலியார் ஒன்றும் தெரியாமல் கேட்டார்.

''நம்ம குழந்தைக்குத் தானுங்க!'' என்று நாச்சியப்பன் சாவதானமாகச் சொன்னான்.

''அட, பாவி! குழந்தைக்கு யாராவது அபினைக் கொடுப்பார்களா?'' என்று அலறினார் முதலியார்.

நாச்சியப்பன் சிரித்துக் கொண்டே அழுத குழந்தையின் வாயில் கொஞ்சம் அதிகமாகவே அபினைத் திணித்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் அது அபின் தின்ன மயக்கத்தில் அயர்ந்து தூங்க ஆரம்பித்துவிட்டது. இனிமே பொழுது விடியும்வரை

தொல்லையில்லீங்க!'' என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டே, அவன் அந்த டப்பியை எடுத்து மீண்டும் கோட்டுப் பையில் பத்திரமாக வைத்துத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

''இது அக்கிரமம்!'' என்றார் முதலியார்.

''சட்ட விரோதம்!'' என்றார் அவருக்கு அருகில் இருந்தவர்.

''அதுக்கு நாங்க என்னங்க, பண்றது? அந்த எழவெடுத்த சட்டம் எங்களுக்கு விரோதமாய் இருக்குதுங்களே!'' என்றான் நாச்சியப்பன்.

''ஏழைகளா யிருந்தால் என்ன? இந்த அபினுக்குப் பதிலாக பால் வாங்கி ஊற்றக் கூடாதா?''

''ஊத்தலாம்; இப்போகூட பால் ஊத்தித்தான் எடுத்துக்கிட்டு வந்தேன். ஆனா இது பசியை நெனைச்சுக்கிட்டு அழறப்போதெல்லாம் பால் வாங்கி ஊத்த என்னாலே முடியுங்களா?''

''உன்னாலே முடியாவிட்டால் என்ன? உன் மனைவி இலலையா?''

''அதை ஏன் கேக்கிறீங்க! உலக வழக்கத்தையொட்டிச் சொல்லப்போனா அவ 'செத்துப் போயிட்டா'ன்னு மறைச்சுச் சொல்லணும். ஆனா நான் நிசத்தையே சொல்லிப்பிடறேன் - அவளுக்கு இல்லாத மானமா எனக்கு...?''

''அது என்னப்பா, அப்படிப்பட்ட விஷயம்....''

''அதுவுங்களா? என் தரித்திரம் என் பெண்டாட்டியைக் கூட என்னோட வாழ விடலீங்க!... அவ அந்தப் பாவிப் பயலோட ஓடிப் போயிட்டா!''

''எந்தப் பாவி பயலோட....

''அவனை என்னமா உங்களுக்குத் தெரியும்? அவன் எங்க ஊர்ப் பையன்; இந்தச் சண்டையிலே பாவ புண்ணியத்துக்கு அஞ்சாம பேரம் பண்ணி நாலு காசு சம்பாதிச்சு வச்சிருந்தான். அவனோட அவ போயிட்டா! போன புண்ணியவதி சும்மா போவாம இந்தச் சனியனை வேறே என் காலிலே கட்டிட்டுப் போயிட்டா!...ம்....அவ என்ன பண்ணுவா? மனசு கேட்கா விட்டாலும் வயிறு கேட்குதா?''

''சரி, அவள் போனால் போகிறாள். நீ இருக்கிறாயோ இல்லையோ?''

''நான் இருந்து என்னத்தைப் பண்றதுங்க? பொழைப்பைத் தேடி போவேனா, இந்தப் புள்ளையைப் பார்த்துக்கிட்டு இருப்பேனா? - அதுக்குத்தான் இதுக்குத் தினம் கொஞ்சம் அபினைக் கொடுத்துப் படுக்க வச்சுடுவேன்; இது போதையிலே விறைச்சுக்கிட்டுக் கிடக்கும். என்பாட்டுக்கு என் வேலையை பார்க்க எங்கேயாச்சும் போயிடுவேன்...!''

''ஆமாம், இப்போதுதான் 'இந்த இழவு'களை யெல்லாம் சர்க்கார் ஒழித்து விட்டார்களே, இது உனக்கு ஏது?''

நாச்சியப்பன் சிரித்தான். ''உங்களைப் போலொத்த 'பெரிய மனுஷ'ருங்க இருக்கிறப்போ, லோகத்திலே எது தான் கிடைக்காதுங்க? ஒண்ணுக்கு நாலு விலை கொடுத்தா கிடைக்காததெல்லாம் கிடைக்குங்களே!'' என்றான்.

அவ்வளவுதான்; முதலியாருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. ''டேய்! ஜாக்கிரதையாப் பேசு! நீ நினைப்பது போல் நான் பெரிய மனுஷனுமில்லை; 'பிளாக் மார்க்கெட்'காரனுமில்லை!'' என்று ஒரு துள்ளுத் துள்ளினார்.

''போயும் போயும் அந்த அற்பப் பயலோடு நீங்கள் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தீர்களே? அப்போதே அவனைப் பேசாமல் போலீஸாரிடம் பிடித்துக் கொடுத்திருக்க வேண்டும்!'' என்றார் முதலியாருக்குப் பக்கத்தில் இருந்தவர்.

இதைச் சொன்னதும் நாச்சியப்பன் வெலவெலத்துப் போய்த் தன்னிடம் சரணாகதி யடைந்து விடுவான் என்று அவர் எதிர்பார்த்தார். ஆனால் அவனோ விழுந்து விழுந்து சிரித்தான்.

முதலியார் அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

''எதற்கும் ஒரு தகுதி வேண்டாமா? தகுதியில்லாதவனிடமெல்லாம் போய்த் தக்கவற்றைப் பேசிக் கொண்டா இருப்பது? போலீஸைக் கூப்பிடுங்கள், ஸார்!'' என்றார் முதலியாருக்கு எதிர்த்தாற்போல் இருந்தவர்.

''ரயிலோ ஓடிக் கொண்டிருக்கிறது; போலீஸும் இந்தப் பெட்டிக்குள் இல்லை!'' என்று வேடிக்கையாகக் கையை விரித்தார் புரொபஸர்.

''போனாற் போகிறது, புண்ணியமாய்ப் போகட்டும் என்று பார்த்தேன். இவன் இவ்வளவு அதிகப்பிரசங்கியாயிருப்பான் என்று

நான் கண்டேனா? அடுத்த ஸ்டேஷன் வந்ததும் இவனைக் கட்டாயம் போலீஸாரிடம் பிடித்துக் கொடுத்துவிட வேண்டியதுதான்!'' என்றார் முதலியார்.

நாச்சியப்பன் சிரித்துக் கொண்டே இருந்தான்.

''கொஞ்சம் பொறு; தம்பி! சும்மா சிரித்துக் கொண்டே இருக்கிறாயே!'' என்றார் முதலியார் பல்லைக் கடித்துக் கொண்டு. அதற்குள் அடுத்த ஸ்டேஷன் வந்து விட்டது. வண்டியும் நின்றது. வண்டி நின்றதோ இல்லையோ ''போலீஸ், போலீஸ்!'' என்று கத்தினார் முதலியார். அவரைப் பின்பற்றி அவருடைய ரயில் நண்பர்கள் எல்லோரும் ''போலீஸ், போலீஸ்!'' என்று கூக்குரலிட்டனர்.

''என்னமோ ஏதோ'' என்று இரண்டு போலீஸ் ஜவான்கள் அவர்கள் இருக்குமிடத்துக்கு விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தனர்.

நாச்சியப்பனை அவர்களுக்குச் சுட்டிக் காட்டி ''இவன் அபின் வைத்திருக்கிறான்; இவனைப் பிடித்துக் கொண்டு போங்கள்!'' என்று ஏக காலத்தில் எல்லோரும் காட்டுக் கத்தலாகக் கத்தினர்.

அப்பொழுதும் நாச்சியப்பன் அவர்கள் எதிர்பார்த்தபடி பதுங்கவுமில்லை; பயப்படவுமில்லை; தயங்கவுமில்லை, தாமதிக்கவுமில்லை. அமைதியுடன் எழுந்தான்; அலுப்புடன் குழந்தையைத் தூக்கினான்.

பாவம் அளவுக்கு மீறிய அபின் மயக்கத்தால் அந்தக் குழந்தை சில்லிட்டுப் போயிருந்தது; அதனுடைய கடைசி மூச்சும் நின்றுவிட்டிருந்தது.

''இனிக் கவலை யில்லை; கடவுள் இப்பொழுது தான் என்னிடம் கருணை காட்டி யிருக்கிறார்!'' என்றான் நாச்சியப்பன்.

போலீஸார் அவன் கையைப் பற்றினர்.

''மவராசர்கள்! நல்லா யிருக்கணும். என்ன இருந்தாலும் கொஞ்ச காலம் எனக்கு வயிற்றுக் கவலை இல்லாமல் செய்த புண்ணியம் அவர்களைச் சேர்ந்தது தானே!'' என்று அவன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

# மாறுதல் இல்லை

எங்கள் வீட்டுக்கு எதிரில்தான் அந்த மாரியம்மன் மைதானம் இருந்தது. ஒரு பெரிய மனிதருக்கு ஒரு பெரிய காரியத்தைச் சாதித்துக் கொடுத்ததன் பயனாக அந்த மைதானத்தை மாரியம்மன் 'சன்மான'மாகப் பெற்றிருந்தாள். சாதாரண மனிதர்களிடமிருந்து எந்தக் காரியத்தைச் சாதித்துக் கொண்டாலும் அந்தப் பெரிய மனிதர் ஏதாவது 'கூலி' கொடுத்துவிடுவது வழக்கம். பாவம் மனிதர்களுக்கு அப்பாற்பட்ட மாரியம்மனும் அந்த வழக்கத்துக்கு ஆளாக வேண்டியிருந்தது. ஒரு வேளை மன்னாதி மன்னர்களையெல்லாம் ஆட்கொண்டிருந்த மண்ணாசை, ஜகன் மாதாவாகிய மாரி யம்மனைக்கூட ஆட்கொண்டிருந்ததோ என்னமோ, யார் கண்டார்கள்!

'நடமாடாத தெய்வ'த்துக்குச் சொந்தமாயிருந்த அந்த மைதானத்தில் எத்தனை 'நடமாடும் தெய்வ'ங்கள் குடியிருந்தன. அவர்கள் ஒவ்வொருவரும் ஆள் ஒன்றுக்கு ரூபாய் இரண்டு, மூன்று என்று மாதந்தோறும் வாடகை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்த வாடகை நிலத்துக்கு மட்டுந்தான்; குடிசைகளெல்லாம் அவரவர்கள் சொந்தச் செலவில் போட்டுக் கொண்டவை. இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த அற்பர்களின் பிச்சைக்காசைக் கொண்டுதான் ஆனானப்பட்ட அந்த மாரியம்மன் தேர் என்றும், திருவிழா என்றும் தன்னைப் பற்றித் தானே தம்பட்டம் அடித்துக்கொள்ள வேண்டியிருந்தது!

அந்த மைதானத்தில் குடியிருந்தவர்களில் செங்கண்ணனும் ஒருவன். அவனும் அவன் மனைவி கண்ணாத்தாளும் கொத்தனார்களுக்கு உதவியாகச் சித்தாள் வேலை செய்பவர்கள். தினசரி பொழுது விடிந்ததும், அவர்கள் இருவரும் தங்கள் சின்னஞ்சிறு குழந்தைகளுடன் குறிப்பிட்ட ஓர் இடத்தை நோக்கிக் கிளம்பிவிடுவார்கள். அங்கே தான் அவர்களைப் போன்ற தொழிலாளிகள் பலர் தினந்தோறும் வந்து வேலைக்காகக் காத்துக் கொண்டிருப்பது வழக்கம். கட்டிட வேலைக்கு ஆட்களைத் தேடிக்கொண்டு வருபவர்களும் அங்கே வந்துதான் தங்களுக்குத் தேவையான ஆட்களைப் பொறுக்கி அழைத்துக் கொண்டு போவார்கள்.

இம்மாதிரி இடங்கள் அநேகமாக எல்லா ஊர்களிலும் கடைத் தெருவைச் சார்ந்துதான் இருக்கும். இப்படியிருப்பதில் ஒரு விசேஷப்

பொருத்தமும் இருக்கத்தான் செய்தது; காசு கொடுத்தால் நமக்கு வேண்டிய சாமான்கள் கடைத் தெருக்களில் கிடைக்கிறதல்லவா? அதேமாதிரி கட்டிடக் காண்ட்ராக்டர்களுக்கும் கூலி கொடுத்தால் அங்கே வேண்டிய ஆட்கள் கிடைப்பார்கள்.

அங்கே நிற்பவர்கள் அனைவருக்கும் தினசரி வேலை கிடைக்கும் என்பது நிச்சயமில்லை; ஒரு சிலருக்குத்தான் கிடைக்கும். மற்றவர்கள் சூரியன் உச்சி வானத்துக்கு வரும் வரை கால் கடுக்க நின்றுவிட்டு, ஏமாற்றத்துடன் வீடு திரும்புவார்கள். அவர்களில் சிலர் அன்று அநேகமாக அரைப்பட்டினி இருக்கவேண்டி யிருக்கும்; இன்னும் சிலர் முழுப் பட்டினி இருக்க வேண்டி யிருக்கும். இது ஒன்றும் அவர்களுக்குப் புதிதல்ல; தலைமுறை தலைமுறையாகவே அவர்களைத் தொடர்ந்து வரும் வழக்கம். இதில் வியப்புமில்லை; திகைப்புமில்லை!

செங்கண்ணனும் கண்ணாத்தாளும் தங்கள் இருவருக்கும் ஒரே இடத்தில் வேலை கிடைக்க வேண்டுமென்று எப்பொழுதுமே விரும்புவதில்லை. வெவ்வேறு இடங்களில் வேலை கிடைத்தாலும் அவர்கள் மனம் கோணாமல் செல்வார்கள். இரவு வீடு திரும்பியதும் மறுநாள் மத்தியானத்துக்கும் சேர்த்தாற்போல் சமையல் வேலை நடக்கும். பொழுது விடிந்ததும் கையில் கட்டுச் சாதத்துடன் அவர்களுடைய 'வயிற்றுப் பிரயாணம்' ஆரம்பமாகும். வீட்டைப் பற்றியோ அந்தத் தம்பதிகளுக்குக் கவலையில்லை. ஏனெனில் திருடன் பயம்தான் அவர்களுக்குக் கொஞ்சம் கூடக் கிடையவே கிடையாதே!

* * *

செங்கண்ணன் தம்பதிகளுடைய குடிசைக்கு அடுத்தாற்போல் நாங்கள் நாலுபேர் சேர்ந்து ஒரு வாசக சாலை ஆரம்பித்திருந்தோம். இந்த வாசகசாலை பொது ஜன சௌகரியத்துக்காக ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் நாங்கள் பொய் சொன்னவர்களாவோம். ஒண்டுக் குடித்தனம் இருந்த எங்களுக்குச் சிறிது நேரமாவது நிம்மதியுடன் காலம் கழிக்க ஏதாவது ஓர் இடம் வேண்டியிருந்தது. அதற்காக ஆரம்பிக்கப்பட்ட அந்த வாசகசாலையில் எங்களுக்கு இனாமாகப் பல பத்திரிகைகளை வாசிக்கும் வசதி கிடைத்தது. இதற்குக் காரணம் எங்களுடைய கஞ்சத்தனம் அல்ல; கண்கண்ட தெய்வமான காசில்லாத கஷ்டந்தான்.

சாயந்திர வேளைகளில் அநேகமாக என்னை அந்த வாசக சாலையில் பார்க்கலாம். ஏதாவது ஒரு தினசரிப் பத்திரிகையைப் பிரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பேன். என்னையும் என்னுடைய நண்பர்களையும் தவிர, வேறு யாரையாவது அந்த வாசக சாலையில் பார்ப்பது அபூர்வம். ஆமாம், உலகச் செய்திகளைத் தெரிந்து கொள்வதில் அங்கிருந்தவர்களுக்கு அவ்வளவு ஆர்வம் இருந்தது.

எந்தக் கவலை எப்படியிருந்தாலும் செங்கண்ணன் மட்டும் நான் பத்திரிக்கை படிக்கும்போதெல்லாம் என் பக்கத்தில் வந்து உட்கார்ந்து விடுவான். அவனுக்கு உலகச் செய்திகளைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் இல்லாவிட்டாலும், ஊர்ச் செய்திகளைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் உண்டு.

நான் பத்திரிக்கையைப் பிரித்ததும் பிரிக்காததுமாக யிருக்கும்போதே ''என்னங்க, இன்னிக்கு என்ன சேதிங்க?'' என்று கேட்டான் அவன் ஆவலுடன்.

''நமக்குத்தான் சுயராஜ்யம் வந்துடுத்துன்னு உனக்குத் தெரியுமே! இனிமேல் நம் தலைவர்கள் ஒன்று செய்யப் போகிறார்களாம். அதாவது, உன்னைப் போன்ற ஏழைத் தொழிலாளிகளுக்கு முதலாளிகள் தங்களுக்கு வர லாபத்திலே பங்கு கொடுக்க வேணுமென்று சட்டம் செய்யப் போகிறார்களாம்''

''ம்....விட்டுத் தள்ளுங்க! என்னை யொத்தவங்க பிழைப்புத்தான் தினம் ஒரு முதலாளியைத் தேடிக்கிட்டுப் போறதா யிருக்குதுங்களே? நாங்க எந்த முதலாளியைக் காணப்போறோம், எந்த லாபத்தைக் காணப்போறோம்?''

''அப்புறம் இன்னொரு சேதி; நம் இந்தியாவின் மதிப்பு ஐரோப்பாவிலே வர வர உயர்ந்து கொண்டே இருக்கிறதாம்....''

''சரி இங்கேதான் உயரலே; அங்கேயாவது உயரட்டும்!''

''என்ன செங்கு, இதெல்லாம் உன்னைப் போன்றவர்களுடைய நன்மைக்குத்தான் என்று உனக்குத் தெரியமாட்டேன் என்கிறதே! - சரி, இன்னும் ஒரே ஒரு சேதி கேளு; உனக்குப் பின்னால் உன் பெண்டாட்டி, பிள்ளை எப்படிப் பிழைக்குமென்று நீ கவலைப்படுகிறாயா இல்லையா?''

''ஆமாங்க!''

"அதற்கும் ஒரு வழி செய்யப் போகிறார்கள். அதாவது உங்களை யெல்லாம் கட்டாயமாக 'இன்ஷ்யூரன்ஸ்' செய்து கொள்ளச் சொல்லப் போகிறார்கள்!"

"அப்படின்னா...?"

"நீ திடீரென்று செத்தால் உன் பெண்டாட்டி பிள்ளைகள் பிழைத்துக் கொள்வதற்கு ஏதாவது பணம் கிடைக்கும்."

"உசிரா யிருக்கிறப்போ...?"

"ஒன்றும் கிடைக்காது!"

"சரி, அப்படின்னா அதையும் விட்டுத் தள்ளுங்க!"

"சரிசரி நீ இப்படியே பேசிக்கொண்டு போனால், நான் உன்னையே விட்டுத் தள்ள வேண்டியதாய்த்தான் இருக்கும்!" என்பேன் நான்.

செங்கண்ணன் சிரித்துக் கொண்டே அந்த இடத்தை விட்டு நகர்ந்து விடுவான்.

* * *

அன்று எதிர்பாராதவிதமாகச் செங்கண்ணன் தம்பதிகளுக்கு குறைந்த பட்சம் ஆறு மாதங்களுக்குக் குறைவில்லாத வேலை கிடைத்தது. அவர்களுக்கு மட்டும் என்ன? அங்கிருந்தவர்கள் எல்லோருக்குமே கிடைத்தது. பிரபல காண்ட்ராக்டரான கச்சாபகேசனின் ஆட்கள் வந்து அவர்கள் அனைவரையும் அழைத்துச் சென்றார்கள். செங்கண்ணன் சந்தோஷத்துக்குக் கேட்க வேண்டுமா? "அப்பாடா! ஆறு மாசத்துக்குக் கவலையில்லை!" என்று எண்ணி அவன் ஒரே ஆனந்தத்தில் மூழ்கி விட்டான்.

அந்த ஆனந்தம் அன்று மாலை அவன் என்னைச் சந்திக்க வந்தபோதும் இருந்தது. வந்ததும் வராததுமாக "இந்தாங்க, நாலணா!" என்று அவன் என்னிடம் ஒரு நாலணாக் காசை எடுத்துக் கொடுத்தான்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை; "இந்தக் காசு எதற்கு?" என்று கேட்டேன்.

"சும்மா வச்சி வையுங்கோ! இப்படித் தினந் தினம் ஒரோரு நாலணாவா உங்ககிட்ட கொடுத்துக்கிட்டு வரேன்; எல்லாத்தையும்

சேர்த்து நான் கேட்கிறப்போ மொத்தமாகக் கொடுங்க! எங்க குடிசை ரொம்ப நாளா வானத்தைப் பார்த்துக்கிட்டு நிற்குது; மழை பேஞ்சா உங்க வாசக சாலையைத் தேடி ஓடிவரவேண்டி யிருக்குது. அதைப் பிரிச்சுக் கட்டணுமில்லே; அதுக்குத்தான் இந்த நாலணாக்காசு! அதில்லாம எனக்கு ஒரு வேஷ்டி, என் பெண்டாட்டிக்கு ஒரு புடவை, குழந்தைக்கு ஒரு சட்டை எல்லாம் வாங்கணும். எத்தனையோ நாளுக்குப் பிறகு இன்னிக்குத்தான் எங்க ரெண்டுபேருக்கும் நல்ல வேலையா ஒரு ஆறு மாசத்துக்கு கிடைச்சிருக்குதுங்க! எனக்கு ஒரு ரூபா கூலி, கண்ணாத்தாவுக்கு முக்கா ரூவா கூலி. ஒண்ணரை ரூவாயிலே சாப்பிட்டுக்கிட்டு மிச்சம் நாலணாவை உங்ககிட்ட சேர்த்து வைக்கலாம்னு பார்க்கிறோம்!'' என்றான் அவன்.

''சரி!'' என்றேன் நான்.

ஆனால் அவனுடைய உறுதி ஒரு வாரம் கூட நீடிக்க வில்லை. ஐந்தாவது நாளே அவன் என் வீட்டைத் தேடி ஓடோடியும் வந்து, ''என் எண்ணத்திலே மண் விழுந்து போச்சுங்க! கல்லு வரலேன்னு எங்களுக்கு இன்னிக்கு வேலையில்லை; அந்த ஒரு ரூவாயைக் கொடுங்க; சாப்பாட்டுக்கு!'' என்றான். நானும் கொடுத்துவிட்டேன்.

இப்படியே அவன் நாலைந்து நாட்கள் என்னிடம் நாலணா கொடுப்பதும், ஐந்தாவது ஆறாவது நாள் வந்து சேர்த்ததை வாங்கிக்கொண்டு செல்வதுமாக இருந்தான். விதியை வெல்லப் பார்க்கும் அவனுடைய முயற்சிக்கு இவ்வளவு சோதனையா!'' என்று எண்ணி என் மனம் வருந்தும். ஆனால் அவனுக்கு ஏதாவது உதவி செய்வதன் மூலம் அந்த வருத்தத்தைப் போக்கிக் கொள்ளும் சக்தியை நான் பெற்றிருக்கவில்லை; ஆண்டவனும் எனக்குக் கொடுத்திருக்கவில்லை.

* * *

இந்த நிலையில் ஒரு மாசத்துக்குப் பிறகு ஒரு நாள் அவன் என்னிடம் வந்து, ''என்னங்க, உங்களாலே எனக்கு ஒரு உதவி செய்ய முடியுங்களா?'' என்றான்.

''என்ன உதவி....?'' என்றேன்.

''எனக்கு ஒரு குழந்தை இருக்குது பாருங்க. அதாலே ரொம்பத் தொந்தரவா யிருக்குதுங்க! நேத்து வேலை சமயத்திலே அது 'வாள், வாள்'னு கத்தித் தொலைச்சுது. பெத்தவளுக்கு மனசு கேட்குமா?

சித்த எடுத்துக் கொஞ்சம் பால் கொடுத்தா. அந்தச் சமயம் பார்த்து எசமான் வந்துட்டாரு. அப்புறம் என்ன? 'குழந்தைக்குப் பால் கொடுக்கிறதுன்னா நீ வீட்டிலேயே இருந்துக்க, இங்கே வரவேணாம்'னு சொல்லிப்பிட்டாரு!''

''அப்படியானால் அந்தச் சின்னஞ் சிறு சிசுவோடு வேலைக்கு வந்து வயிறு வளர்க்க வேண்டியிருக்கும் உங்களுடைய கதியைப் பற்றி அவர் கவலைப்படவில்லை; குழந்தைக்குப் பால் கொடுப்பதால் தன் வேலைக்குக் குந்தகமாய்ப் போய்விடுகிறதே என்றுதான் கவலைப்பட்டாரா!''

''ஆமாங்க!''

''அதற்கு நீ என்ன சொன்னாய்?''

''கோவிச்சுக்காதிங்க, எசமான்! நாளையிலேருந்து குழந்தையை வீட்டிலே விட்டுட்டு வந்துட்றோம்''னு சொன்னேன். எங்க வயிற்றிலே பாலை வார்த்தாற் போல 'சரி'ன்னாரு. ஆனா இப்படிச் சொல்லி அந்தச் சமயம் தப்பிச்சுட்டோமே ஒழிய, நாளைக்குக் குழந்தையை எங்கே விட்டுட்டுப் போறதுன்னு தெரியலே! - குழந்தையும் அப்படி ஒண்ணும் சின்னக் குழந்தையில்லே; பெரிய குழந்தைதான். யாராச்சும் வேளா வேளைக்குப் பால் வார்த்து வச்சிருந்தா பேசாம இருக்கும்....''

''அப்படியென்றால் உன்னுடைய குழந்தையை என் வீட்டிலே விட்டுவிட்டுப் போகிறேன் என்கிறாயா?''

''ஆமாங்க....!''

''அதற்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால்...?''

''அப்படி ஏதாச்சும் நேர்ந்தாத்தான் ரொம்ப நல்லதாப் போச்சுங்களே!''

இதைச் சொல்லும்போது அவன் குரல் கம்மியது; என்னுடைய நெஞ்சம் நெகிழ்ந்தது.

இருந்தாலும் ''எனக்கென்னமோ சம்மதந்தான்! ஆனால் என் வீட்டுக்காரி ஒப்புக் கொள்ள வேண்டுமே; கணவன் - மனைவியா யிருந்தாலும் நான் வேறு, அவள் வேறாகவல்லவா இருக்கிறோம்? - எதற்கும் நீ கொஞ்ச நேரம் இங்கேயே இரு; நான் அவளைக் கேட்டுக் கொண்டு வந்து சொல்கிறேன்!'' என்றேன் நான்.

''அப்படியே செய்யுங்க!'' என்றான் அவன்.

நான் உள்ளே சென்று என் சகதர்மினியிடம் நடுங்கும் குரலில் விஷயத்தைச் சொன்னேன். அத்துடன், ''இம்மாதிரி ஏழைகளுக்கு இரங்குவது ஏகாதசி விரதம் இருப்பதைக் காட்டிலும் சிறந்தது!'' என்றும் சொல்லி வைத்தேன்.

அவ்வளவுதான்; ஆண் சிங்கங்களெல்லாம் வெட்கித் தலை குனியும்படியாக அந்தப் பெண் சிங்கம் என்னை ஏறிட்டுப் பார்த்தாள். நான் தலை குனிந்து வெளியே வந்தேன். என் முகபாவத்திலிருந்தே செங்கண்ணன் விஷயத்தைத் தெரிந்து கொண்டு விட்டான். ''என்னாலே உங்களுக்கு ஏனுங்க வருத்தம்? நாளையிலேருந்து நான் அவளை வேறே எங்கேயாச்சும் வேலை பார்த்துக்கிடச் சொல்றேன்!'' என்று கூறிவிட்டு அவன் போயே போய் விட்டான்.

* * *

மறுநாள் முதற்கொண்டு கண்ணாத்தா பழைய இடத்துக்கே போய் நிற்க ஆரம்பித்தாள்; வேலை கிடைத்த போது செய்தாள்; கிடைக்காதபோது வீடு திரும்பினாள். செங்கண்ணன் மட்டும் காண்ட்ராக்டர் கச்சாபகேசனிடமே வேலை பார்த்து வந்தான். ஆனால், தினசரி நாலணா மிச்சப்படுத்த வேண்டுமென்ற அவன் மனோரதம் மட்டும் கடைசிவரை நிறைவேறவே யில்லை.

ஆறு மாதங்களுக்கு மேலேயே 'அந்தி பவனம்' என்று அந்த அழகான பங்களாவின் வேலை நடந்தது. 'பிளான்' வரைந்து கொடுத்தவர் 'பீஸை'ப் பெற்றுக் கொண்டு போய்விட்டான்; செங்கண்ணனைப் போன்றவர்கள் சேற்றிலும் சகதியிலும் உழன்றனர்; கண்ணாத்தாவை போன்றவர்கள் கல்லையும் காரையையும் சுமந்தனர். கொத்தனார்களோ பதை பதைக்கும் வெய்யிலில் கரண்டியும் கையுமாகக் கற்களைக் கணக்காக அடுக்கினர். தச்சர்களோ உளியும் கொட்டப்புளியுமாக உட்கார்ந்து, வியர்வை சொட்டச் சொட்ட மரத்தைப் 'போடு, போடு' என்று போட்டனர். இவர்களையெல்லாம் மேஸ்திரி என்னும் ஒரு கூலி, தானும் அவர்களைப் போல் ஒரு கூலி என்பதையே அடியோடு மறந்து, அடிக்கடி மிரட்டிக் கொண்டிருந்தான்.

அவ்வளவு எஜமான விசுவாசமுள்ளவன்போல் நடித்து அவன், ஆளுக்கு ஓரணா இரண்டனா 'தண்டக்காசு' அழும்போது மட்டும் அக்கம் பக்கம் பார்த்து வாங்கிப் பையில் போட்டுக் கொண்டான்!

அவன் 'பார்வை' போதாதென்று எண்ணியோ என்னமோ, அடிக்கடி வந்து தன் 'விலையுயர்ந்த பார்வை'யை 'அந்தி பவன'த்தின் மீது செலுத்தி வந்தார் கச்சாபகேசன். கட்டிட வேலை முடிந்தது; கடைசியில் கணக்குப் போட்டுப்பார்த்தார்; எல்லாம் போக ரூபாய் ஏழாயிரத்துச் சொச்சம் மிச்சமென்று தெரிந்தது.

அடுத்த சில நாட்களுக்கெல்லாம் அவர் தம்மிடமிருந்த பழைய 'போர்டு மாடல்' கார் ஒன்றை விற்றுத் தொலைத்தார். அத்துடன் 'அந்தி பவன'த்தின் வாயிலாகக் கிடைத்த ரூபாய் ஏழாயிரத்துச் சொச்சத்தையும் சேர்த்து ஒரு பேஷான 'ப்யூக்' கார் வாங்கி மகிழ்ந்தார்.

இது 'அந்தி பவன'த்தின் மூலம் கச்சாபகேசனின் வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு சிறு மாறுதல்.

ஆனால் அந்த 'அந்தி பவன'த்தின் சிருஷ்டி கர்த்தாக்களான செங்கண்ணன், கண்ணாத்தா முதலியவர்களின் வாழ்க்கையிலோ....?

எந்தவிதமான மாறுதலும் இல்லை!

## "அவன் யாரோ!"

"இந்தச் சின்னஞ் சிறு வார்த்தையை அந்தச் சின்னஞ் சிறு பாலகன் ஏன் அப்படி முணு முணுக்கிறான்? அதை முணு முணுக்கும் போதெல்லாம் அவன் ஏன் கண்ணீர் விடுகிறான்?

இந்த வார்த்தையை ஏழெட்டு மாதங்களுக்கு முன்னால் அவன் அப்பா சொல்லக் கேட்டிருக்கிறான். அப்போது அந்த வார்த்தை அவன் உள்ளத்தைச் சுடவில்லை; நெஞ்சை உருக்கி நிலைகுலையச் செய்யவில்லை-இப்போது மட்டும் ஏன் அப்படி?

ஆச்சரியந்தான்!............

ஐப்பசி மாதம்; சதா தூறிக் கொண்டே இருந்தது. "பள்ளிக் கூடம் விட்டதும் பையன் எப்படி வருவான், இந்த மழையில்?" என்ற கவலை அப்பாவைப் பீடித்தது.

குடையை எடுத்துக் கொண்டு கிளம்பினார்; தன் பையனை அழைத்துக் கொண்டுவர.

வழியில் ஒரு மூங்கில் பாலம். அதைக்கடந்தால் அவர்கள் வீடு.

எத்தனையோ முறை எந்த விதமான விக்கினமும் இன்றி அதைக் கடந்து அவர்கள் வந்திருக்கிறார்கள்.

ஆனால் இன்று...........

அவர்களுக்கு ஒன்றும் நேரவில்லைதான்; ஆனால் யாரோ ஒரு வழிப்போக்கன்-அவன் கால் வைத்ததும் அந்த மூங்கில் பாலம் முறிந்து விழுந்தது; அவனும் தொபுகடீரென்று கீழே விழுந்தான்.

"ஐயையோ!"

இப்படி ஓர் அலறல்!- அடுத்தாற் போல், "என்னைக் காப்பாற்றுங்கள்; என்னைக் காப்பாற்றுங்கள்!"என்ற கதறல்!

பையனுக்குத் தாங்கவில்லை. பாலத்தை நோக்கி ஓடினான்-அருமை அப்பா விடுவாரா?- "அவன் யாரோ, நீ வாடா!" என்று கையைப் பிடித்து கரகரவென்று இழுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து விட்டார். அதற்குப் பின் அந்த வழிப்போக்கனைப் பற்றி அவர்கள் கவலைப்படவேயில்லை!

ஆனால் இன்று..........

பொங்கற் புது நாள். கிராமத்தில் கரும்பு வெட்டும் போட்டி நடந்து கொண்டிருந்தது. அப்பாவுக்குத் தெரியாமல் பையனும் அதில் கலந்து கொண்டான்.

''ஐயையோ!''

அதே அலறல்-அலறியவன் பையன்தான்! அவன் கையில் சரியான கொடுவாள் வெட்டு; 'குபுகுபு' வென்று பாய்ந்தது ரத்தம்!

யார் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள்? அவனுடன் போட்டியிட்ட சிறுவர்கள் கூடப் பயந்து ஓடி விட்டார்கள். எல்லாம் தங்கள் அப்பாக்களிடம் அவர்கள் கற்றுக் கொண்ட ''அவன் யாரோ, அவன் யாரோ!'' என்ற பாடந்தான்!

கடைசியாக ஒரு சிறுவன் வந்தான்; வெட்டுப் பட்டவனை நோக்கி விரைந்தான்.

ஆனால்..........

அதற்குள் அவன் அப்பா வந்துவிட்டார்; வழக்கம் போல ''அவன் யாரோ, நீ வாடா!'' என்று அவனை அழைத்துக் கொண்டுபோய் விட்டார்!

இப்போதுதான் அந்த மூங்கில் பாலத்து சம்பவம் நினைவுக்கு வந்தது வெட்டுப் பட்ட சிறுவனுக்கு; தன் அப்பாவும் அவன் அப்பாவும் ஒரே மனோபாவத்தில் இருப்பது குறித்து அந்தச் சிறுவன் மனம் பொருமினான்.

''அவன் யாரோ!''

''அவன் யாரோ!''

இவ்வாறு முணுமுணுத்துக் கொண்டே, உதவி செய்வார் யாருமின்றி அழுத கண்ணீர் ஆறாய்ப் பெருக அவன் அப்படியே சாய்ந்தான்.

பையனைக் காணாமல் அப்பா தேடிக் கொண்டு வந்தார் தெருவோரத்தில் மூர்ச்சையாகிக் கிடக்கும் அவனைக் கண்டதும் ''ஆ!'' என்று அலறினார்.

''அவன் யாரோ?''

''அவன் யாரோ!''

தமக்கிருந்த ஒரே செல்வத்தின்வாய் அந்த ஒரே வார்த்தையைத் திருப்பி திருப்பி முணுமுணுப்பதை கேட்டதும் அவருக்கு திக்கென்றது. அத்துடன் அந்த மூங்கில் பாலத்துச் சம்பவமும் அவருடைய நினைவுக்கு வந்தது.

''அவன் யாரோ!''

''அவன் யாரோ!''

பையனைப் போலவே அப்பாவும் இப்போது அந்தச் சர்வ சாதாரணமான வார்த்தையை அடிக்கடி முணுமுணுத்தார்.

''இப்படித்தான் அப்பா எல்லோரும் சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள்- அவர்களில் நானும் ஒருவன் அல்லவா? அவர்களைப் போலவே நானும் மனிதன் அல்லவா?'' என்றான் பையன்.

''ஆம்; இனி நீ மட்டும் அல்ல. நானும் மனிதன், நாம் அனைவரும் மனிதர்கள்!'' என்றார் அப்பா.



# விந்தன் கதைகள்

போலியைச் சுட்டெரிக்கும் புதுமைகளை, வாழ்க்கையை அலசி அலசிப் பரிசீலிக்கும் 'ரஸாயன'ங்களை, சமுதாயத்தின் புற்று நோய்களுக்கு 'மின்சாரச் சிகிச்சை'யளிக்கும் புத்தம்புது முறைகளை, குரூர வசீகரங்களைப் படம் பிடித்துக் காட்டி, மனித உள்ளத்திலே எங்கோ ஒரு மூலையில் செய்வதறியாது ஏங்கிக் கிடக்கும் மனிதாபிமானத்தைத் தட்டியெழுப்பும் உணர்ச்சி மிக்க உயிரோவியங்களை, அந்த அபிமானத்துக்கு விரோதமாயிருந்த - இருந்து வருகிற 'மனித மிருக'ங்களின் மேல் வெறுப்பைக் கக்கி, உங்கள் நல்வாழ்வுக்கு வழி தேட முயலும் நவயுகக் கதைகளை இன்று போல் நீங்கள் என்றும் வரவேற்று வாழ்த்தித் தமிழை வளப்படுத்த வேண்டும்; தமிழ் நாட்டை மேம்படுத்த வேண்டும் - இதுவே என் எண்ணம்; இதுவே என் இருபது வருட கால எழுத்து.

15.5.56

**விந்தன்**